# ஒரே உலகம்

ஆசிரியர் :

வெண்டல் எல். வில்கி

தமிழாக்கம் :

தி. ஜ. ர.


பழனியப்பா பிரதர்ஸ்

சென்னை - 14 திருச்சி - 2 சேலம் - 1

முதற்பதிப்பு : 1945
நான்காம் பதிப்பு : 1966

விலை ரூபாய் ஐந்து

செந்தமிழ் அச்சகம்,
சென்னை-14.

# இவர் யார் ?

இது ஓர் அபூர்வமான புத்தகம். இதை எழுதியவர் ஓர் அபூர்வ புருஷர். புத்தகம் உலகெங்கும் புகழ்பெற்றது; ஆசிரியர், சுதந்தர ஆர்வம்கொண்ட உலக மக்களின் அன்பை யெல்லாம் கொள்ளை கொண்டவர்.

வெண்டல் வில்கீ சாதாரண ஆசிரியர் அல்லர். அமெரிக்க ரிடம் பெரும் செல்வாக்குப் பெற்றவர். 1940-ஆம் ஆண்டு அமெரிக்காவில் ஜனாதிபதி தேர்தல் நடைபெற்றபோது, ரூஸ்வெல்ட்டுடன் வெகு பலமாய்ப் போட்டியிட்டவர் வில்கீ. ஜனநாயகக் கட்சியின் சார்பில் ரூஸ்வெல்ட்டும், குடியரசுக் கட்சியின் சார்பில் வில்கீயும் அப்போது அபேட்சகர்கள். ரூஸ்வெல்ட், இரண்டே முக்கால் கோடி ஓட்டுகள் பெற்றார். வில்கீயும் சளைக்கவில்லை. அவர் இரண்டே கால் கோடி ஓட்டு கள் பெற்றார். இது என்ன சாமான்ய விஷயமா ?

வில்கீ, பரம்பரையால் ஜெர்மானியர். ஆனால், அவருக்கு ஹிட்லரின் ஆக்கிரமிப்பில் மகா வெறுப்பு. உலகத்து மக்க ளெல்லாம் சுதந்தரமா யிருக்கவேண்டும் என்ற உன்னத லட்சியம் அவருடையது. இந்தப் புத்தகமே அதற்கோர் அத்தாட்சி. அப்படியிருக்க, அவர் எவ்வாறு புதிய சாம்ராஜ்ய வெறிபிடித்த ஹிட்லரை விரும்ப முடியும்? வெறுக்கா திருக்க முடியும் ?

அமெரிக்காவில் இண்டியானா மாகாணத்தில் எல்வுட் என்னும் இடத்தில் 1892 - ஆம் ஆண்டு ஜனவரி மீ 18உ வில்கீ பிறந்தார். வில்கீயின் தந்தை ஒரு வக்கீல்; தாயும் ஒரு வக்கீல். பெற்றோர், இருவரையும் போலவே இவரும் படித்து, சன்னது பெற்று, தாமும் ஒரு வக்கீல் ஆகிவிட்டார். வக்கீல் என்றால் சாமான்ய வக்கீலா? புகழ் பெற்ற வக்கீல். வில்கீயின் வாதத் திறமை அபரிமிதமானது. ஒரு சமயம் ஏதோ ஒரு விவாதம் நடத்த ஓர் உயர்தரச் சர்க்கார் அதிகாரியைச் சிலர் அழைத்தார்கள். அவர் சொன்னார்: "வாதத்திலே எனக்குப் பதில் சொல்ல, வில்கீயைக் கூப்பிடக்கூடாது. அப்படியானால்தான் நான் வருவேன்." வில்கீயின் வாதம் என்றால், யாருக்கும் அவ்வளவு பயம்!

வில்கீ சிறந்த வக்கீல் என்பது மட்டு மன்று ; அருமை யான தொழில் நிபுணருமாவார். 27-வயதில் 'பயர்ஸ்டன் டயர் அண்ட் ரப்பர் கம்பெனி'யில் அவர் சேர்ந்தார். அவர் சேர்ந்த சில வருஷங்களில், அது மும்மடங்கு வளர்ச்சி பெற்றது. பின்னுல், 'காமன் வெல்த் அண்ட் ஸதெர்ன் மின்சாரக் கார்ப்பொரேஷன்' என்ற பிரம்மாண்டமான கம்பெனிக்கு அவரை வருந்தி யழைத்தார்கள். அவர் போய்ச் சேர்ந்தார். கொஞ்ச காலத்தில் அதன் தலைவரே யாகிவிட் டார். அந்தக் காலத்தில், ஜனுதிபதி ரூஸ்வெல்டின் புதிய பொருளாதாரத் திட்டத்தினுல், மின்சாரக் கம்பெனிகள் பாதகம் அடைந்தன. வில்கீ, கோர்ட்டுக்கு ஓடினுர். கேஸ் தோற்றுவிட்டது. ஆனுல், வில்கீ விடவில்லை; மேடையிலும் பத்திரிகையிலும் கேஸ் நடத்தத் தொடங்கிவிட்டார். தமது இணையற்ற வாதவன்மையால், பேராதரவு சம்பாதித்து விட்டார்.

வில்கீ ஒருபோதும் கைக் கடிகாரம் கட்டி யிருப்ப தில்லை. சொந்த மோட்டார்க் கார் வாங்குவது மில்லை. வாடகைக் காரில்தான் ஆபீசுக்குச் செல்வார். ஒரு காலத்தில் ஒரு காரைத் தாமே ஓட்டிக்கொண்டிருந்தார். ஆனுல், எப்போது பார்த்தாலும் பின் ஸீட்டில் இருப்பவர்களுடன் திரும்பித் தர்க்கம் செய்துகொண்டேதான் ஓட்டுவது வழக்கம். அதனுல், ஒரு சமயம் கார் குழியில் போய் விழுந்துவிட்டது, அன்று முதல் சொந்தக் காரையே விட்டுவிட்டார். வில்கீக்குப் பெரிய கோட்டுக்களில்தாம் பிரியம். ஆனுல், அதன் பொத்தான்களைப் போட்டுக்கொள்ள மாத்திரம் பிடிவாதமாய் மறுத்துவிடுவார். சுலபத்தில் மயிர் வெட்டிக் கொள்ளமாட்டார். மொத்தத்தில் 'கரடிக் கோலம்' தான். சரித்திரம், பொருளாதாரம் இவை பற்றிய புத்தகங்களைப் படிப்பதில் அவருக்கு அளவற்ற பிரியம்.

தம் மனத்துக்கு நியாயமென்று பட்டதை ஒளிக்காமல் பேசும் குணமுடையவர் வில்கீ. 1940-ஆம் ஆண்டு ஜனுதி பதித் தேர்தலில் போட்டியிட்டபோது, "உங்களுக்கு இஷ்ட மானுல் எனக்கு ஓட்டுச் செய்யுங்கள். இல்லையானுல் நாச

மாய்ப் போங்கள். ஆனால், நான் மட்டும் எப்போதும் உங்கள் நலத்துக்கே பாடுபடுவேன்" என்றுதான் ஜனங்களிடம் அவர் பிரசங்கம் செய்தார். தேர்தலின்போது, ரூஸ்வெல்ட்டைத் தூஷித்து ஒரு வார்த்தையும் அவர் பேசவில்லை. தேர்தலில் தோற்ற பின்பும், ரூஸ்வெல்ட்டுடன் மிக்க நேசமாகவே யிருந்தார். அது மாத்திர மன்று; தலைவர் ரூஸ்வெல்டின் தூதராகவே, பிரிட்டனுக்குச் சென்று சர்ச்சிலுடன் பேசி விட்டுத் திரும்பினார்.

மீண்டும் வில்கீ அமெரிக்கத் தூதராக, 1942-ஆம் ஆண்டு, விமானத்தில், நாற்பத்தொன்பதே நாளில், உலகத்தை ஒரு பிரதட்சிணம் செய்துவிட்டார். பதின்மூன்று நாடுகளுக்குச் சென்றார். பல தலைவர்களையும் பல மக்களையும் சந்தித்தார். பிரத்யட்ச யுத்த களங்களையும் பார்த்தார். அந்த விவரங்கள்தாம் இந்தப் புத்தகம். இந்த அருமையான புத்தகத்தை எழுதிய வில்கீ, 1944-ஆம் ஆண்டு அக்டோபர் மீ 8உ காலமாகி விட்டார். அதற்கு உலகமே துக்கப்பட்டது. அவர் காலமானாலும், இந்தப் புத்தகம் நெடுநாள் நிலைத்திருக்கும். ஏனென்றால், உலகத்தைச் சுற்றி வந்து வில்கீ எழுதிய புத்தகம் இந்த 'ஒரே உலகம்.' இது பிரசுரமானவுடனே, நாள் ஒன்றுக்கு 50 ஆயிரம் பிரதிகள் விகிதம் விற்றது. ஒரே வாரத்தில், 'எங்களால் புத்தகம் சப்ளைசெய்ய முடியவில்லை' என்று பிரசுரகர்த்தர்கள் விளம்பரம் செய்ய வேண்டிய தாயிற்று.

உலக நாடுகள் அனைத்தும் சுதந்தரம் பெற்று, ஐக்கியமாய் உலக சமாதானத்துக்குப் பாடுபட்டால்தான், உலகத்துக்கு விமோசனம் ஏற்படும் என்பது வில்கீ கண்ட உண்மை. 'இந்த வேலையை யுத்த காலத்திலேயே தொடங்க வேண்டும்; யுத்தத்துக்குப் பின்னே ஒத்திப் போடலாகாது' என்பது அவருடைய திட அபிப்பிராயம். இதைப் பல விதத்தில், பிரத்யட்சப் பிரமாண - அநுமானங்களோடு, இந்தப் புத்தகத்தில், அவர் வற்புறுத்தினார். 'ருசிகரமான பிரயாண நூல், வர்ணனை இலக்கியம், ராஜீய தத்துவம் இந்த மூன்றின் அம்சங்களும் இதிலே பொருந்தி யிருக்கின்றன' என்று

எல்லாரும் புகழ்ந்தது இந்த நூல். இது பல நாடுகளைப் படம் பிடித்துக் காட்டும் நூல், உலகத்தின் ஒருமையை நிருபிக்கும் நூல்; உன்னத ராஜீய சித்தாந்தத்தை வகுக்கும் நூல்.

யுத்த காலத்தில் தோன்றியது இந்த நூல். அதன் பின் யுத்தம் முடிந்து, உலகத்திலே பல மாறுதல்கள் நிகழ்ந்து விட்டன. பல நாடுகளிலும் புதிய தலைவர்கள் தோன்றிப் பதவிக்கு வந்திருக்கிறார்கள். முக்கியமாக, இந்தியா சுதந்தரம் அடைந்ததையும், சீனாவில் உள்நாட்டுப் போர் நிகழ்ந்து அதன் பலனாக மக்கள் அரசாங்கம் - கம்யூனிஸ்ட் சர்க்கார் - ஏற்பட்டதையும் குறிப்பிடவேண்டும். ஐ. நா. சபை ஏற்பட்டு, தத்தளித்துத் தத்தளித்துச் செயலாற்றி வருகிறது. சியாங்-கே-ஷேக் சீனாவின் சர்வாதிகாரியாய்-யுத்த காலப் பெருந் தலைவராய் இருந்ததுபோக, தோற்றோடிப் போய், சீனத் தீவான தைவான் என்ற பார்மோஸாவில் அமெரிக்கரின் பாதுகாப்பால் ராஜ்யபாரம் நடத்திக்கொண் டிருக்கிறார். ஸ்டாலின் இறந்தார். ருஷ்யாவும் அமெரிக்காவும் ஒன்றை ஒன்று சந்தேகக் கண்கொண்டு பார்க்கின்றன. இத்தனையெல்லாம் இருந்தும், இந்த நூலிலே வில்கீ பல நாட்டு மக்களைப் பற்றியும் வர்ணித்துள்ள முக்கிய விவரங் களும், உலக நலத்துக்காகச் சொல்லியுள்ள அடிப்படைக் கருத்துக்களும் இன்றைக்கும் பொருந்தும். அவர் குறித்த பல பிரச்னைகள் இன்றும் தீராமலே இருந்து வருகின்றன. தீர்க்க தரிசனத்தோடு அவர் பயந்த சில விஷயங்கள் இன்று உண்மையாகி வருகின்றன. அவர் வகுத்த லட்சியம் இன்றைக்கும் உலக மக்கள் போராடி அடைய வேண்டிய தாகவே இருக்கிறது. அந்த லட்சியந்தான் 'ஒரே உலகம்.'

தி. ஜ. ர.

## பதிப்புரிமை

இந்தப் புத்தகம் முழுவதையுமோ இதன் ஒரு பகுதியையோ இதன் மொழி பெயர்ப்பையோ பிரசுரிக்கும் சகல உரிமைகளும் ரிஸர்வ் செய்யப் பெற்றிருக்கின்றன. இதன் பதிப்புரிமைக்குச் சொந்தக்காரர்களான மெஸர்ஸ் காஸல் அண்ட் கம்பெனியாரின் அனுமதி பெற்று, இந்தத் தமிழ் மொழிபெயர்ப்பு வெளியிடப் பெற்றுள்ளது.

## COPYRIGHT

All rights of publication and translation in whole or in part are reserved. This Tamil edition is published by permission of MESSRS. CASELL & Co., LTD., owners of the copyright.

# உள்ளுறை


| எண் | | பக்கம் |
|---|---|---|
| | இவர் யார்? | iii |
| 1. | எல் ஆலமீன் ... | 1 |
| 2. | மத்தியக் கிழக்கு ... | 21 |
| 3. | நவீனத் துருக்கி ... | 48 |
| 4. | நம் கூட்டாளி ருஷ்யா ... | 64 |
| 5. | யாகுட்ஸ்க் குடியரசு ... | 115 |
| 6. | ஐந்து வருஷமாய்ப் போரிடும் சீனு ... | 135 |
| 7. | சீனுவின் மேற்குப் பிரதேச அபிவிருத்தி ... | 145 |
| 8. | சுதந்தரச் சீனு எதைக் கொண்டு போராடுகிறது? ... | 165 |
| 9. | சீனப் பணப்பெருக்கத்தைப்பற்றிச் சில குறிப்புகள் ... | 199 |
| 10. | நமது நல்லெண்ணக் களஞ்சியம் ... | 207 |
| 11. | நாம் எதற்காகப் போராடுகிறோம்? ... | 214 |
| 12. | இது ஒரு விடுதலைப் போர் ... | 236 |
| 13. | நமது உள்நாட்டு ஏகாதிபத்திய முறைகள் ... | 245 |
| 14. | ஒரே உலகம் ... | 257 |

# 1. எல் ஆலமீன்

நான்கு எஞ்சின் கொண்டதும், குண்டு வீசக் கூடியது மான ஒரு பெரிய ராணுவ விமானம். அதைப் போக்கு வரத்துச் சாதனமாக மாற்றி, ஐக்கிய அமெரிக்க ராணுவ அதிகாரிகள் ஓட்டி வந்தார்கள். அந்த விமானத்தில், நியூயார்க் நகரில், மிட்சல் பீல்டு என்னுமிடத்தில், 1942-ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 26-ஆம் தேதி நான் ஏறினேன். உலகத்தையும் போரையும் போர்முனைகளையும் தலைவர் களையும் உலக மக்களையும் பார்த்து வரலாமென்று, நான் புறப்பட்டேன். சரியாய் நாற்பத்தொன்பது நாள் கழித்து, அதாவது அக்டோபர் 14-ஆம் தேதி, மின்னஸோட்டாவில் மின்னியாப் போலிஸ் என்னுமிடத்தில், நான் வந்திறங் கினேன். உலகத்தை ஒரு சுற்றுச் சுற்றி யாயிற்று. பூமியின் வடபாகம் குறுகிய வட்டமா யிருக்கிற அந்த வழியிலே அல்ல; பூமத்திய ரேகையை இரு முறை குறுக்கிட்ட மார்க்க மாகவே சுற்றினேன்.

மொத்தம் 31,000 மைல் நான் பிரயாணம் செய்திருக் கிறேன். இவ்வளவு தூரமா பிரயாணம் செய்தோம் என்று இப்போது நினைத்தாலும், எனக்குப் பிரமிப்பா யிருக்கிறது; நான் ஆச்சரியத்தால் திகைத்துப் போகிறேன். ஏனெனில், என் பிரயாணத்தினால் மொத்தத்தில், என் மனத்தில் பட்டது ஒரே அபிப்பிராயம்தான்; பிற நாடுகளின் மக்களிட மிருந்து, தூரத்தால் நாம் பிரிந்திருப்பதாக எனக்குத் தோன்றவில்லை; நெருங்கி யிருப்பதாகவே எனக்குத் தோன்றியது. உலகம் சிறுத்துவிட்டது; நாடுகள் ஒன்றை ஒன்று சார்ந்திருக்கின்றன. இதில் எப்போதாவது எவ்விதச் சந்தேகமாவது எனக்கு ஏற்பட்டிருந்தால், அந்தச் சந்தேகத்தை யெல்லாம், இந்தப் பிரயாணம் அடியோடு நீக்கிவிட்டது.

ஓர் ஆச்சரியமான விஷயம் என்னவென்றால், இவ்வளவு பிரம்மாண்டமான தூரத்தையும் சுற்றிவர, நாங்கள் 160 மணி நேரம்தான் ஆகாயத்தில் பறந்தோம். பொதுவாக, நாள் ஒன்றுக்கு எட்டு முதல் பத்து மணி நேரமே நாங்கள் பறந்தோம். பிரயாணம் செய்த மொத்த நாள் நாற்பத் தொன்பது; அதில் சுமார் முப்பது நாள் தரையிலேயே இருந்து, நான் மேற்கொண்ட காரியங்களைக் கவனித்திருக் கிறேன். ஓர் அமெரிக்க வியாபாரி, தொழிலை நடத்துவதற் காகத் தினசரி வாழ்க்கையில் பிரயாணம் செய்யவில்லையா? அதே மாதிரிதான், நாட்டுக்கு நாடோ, கண்டத்துக்குக் கண்டமோ செய்யும் பிரயாணமும். அதைவிடக் கஷ்டமே யில்லை. உண்மையிலே, உலகத்தைச் சுற்றுவது மிகவும் எளிதாய் எனக்குத் தோன்றியது. அதனால், சைபீரியாவின் பெரிய குடியரசு ஒன்றின் ஜனாதிபதிக்கு, நான் ஒரு வாக் குறுதிகூட அளித்திருக்கிறேன்: 1945-ஆம் ஆண்டு ஏதாவது ஒரு வாரக் கடைசியில் ஒரே ஒரு நாள் அங்கே வேட்டையாடு வதற்குப் பறந்து வருவதாக வாக்குறுதி. இந்த வாக்குப்படி நடப்போமென்றே நான் நினைத்திருக்கிறேன்.

இனிமேல், உலகத்தில் தொலைவான இடம் என்பதே கிடையாது. மிக வேகமான ரயில் ஓடுவதால், நியூயார்க் நகருக்கு மிக அருகே லாஸ் ஏஞ்செல்ஸ் இருப்பதாக நமக்குத் தோன்றுகிறதல்லவா? இதே போல்தான், கீழ் நாட்டின் பல கோடி மக்களும் நமக்கு மிக அருகே இருக்கிறார்கள் என, இந்தப் பிரயாணத்தினால் நான் அறிந்தேன். வருங்காலத்தில், அவர்களுக்கு நேரும் கவலையெல்லாம் நம்முடைய கவலை யாகும்; கலிபோர்னியா மக்களின் பிரச்னைகளெல்லாம் நியூயார்க் மக்களையும் பாதிக்கின்றனவே, அதேபோல.

வருங்காலத்தில், நாம் செய்யும் சிந்தனை யெல்லாம் உலகம் முழுவதையும் பற்றியதாகவே இருக்க வேண்டும்.

கெய்ரோவுக்குப் போய்க்கொண் டிருக்கையில், வழி யிலே, ஆகஸ்டு மாதக் கடைசியில், கெட்ட சேதி, எங்கள் காதிலே விழுந்தது. ஜெர்மன் தளபதி ரோமலின் முன்னணிப் படைகள், அலெக்ஸாண்டிரியாவுக்குச் சில மைல் தூரத்தில்

வந்துவிட்டன. அதை அவர் எத்தனை நாளைக்குள்ளே கைப்பற்றிவிடப்போகிருர் என்று, நைகீரியாவில் உள்ள கனே என்னுமிடத்தில் பகிரங்கமாகவே எல்லாரும் ஹேஷ்யம் சொல்லத் தொடங்கினர்கள். கார்ட்டோவம் என்னுமிடத்துக்கு நாங்கள் போய்ச் சேர்ந்ததும், இந்த ஹேஷ்யம், பீதி கொண்ட செய்திகளாக உருமாறிவிட்டது. தெற்கிலும் கிழக்கிலும் ஓட்டம் பிடிப்பதற்காக, கெய்ரோவில் பல ஐரோப்பியர்கள், தங்கள் கார்களில் மூட்டை முடிச்சுகளை ஏற்றிக்கொண்டிருந்தார்கள். நான் வாஷிங்டனை விட்டுப் புறப்படச் சிறிது நேரத்துக்கு முன்பு, ஜனதிபதி செய்த ஓர் எச்சரிக்கை எனக்கு ஞாபகம் வந்தது. நான் கெய்ரோ போய்ச் சேரு முன்பே, அந்த நகரம் அநேகமாய் ஜெர்மானியர் கைக்குப் போய்ச் சேர்ந்திருக்கக்கூடும் என்றே அவர் எச்சரித்தார். நைல் பள்ளத்தாக்கில் மிச்சம் மீதி இருக்கக்கூடிய தற்காப்பு ஏற்பாடுகளை யெல்லாம் அழிப்பதற்கென்று நாஜி பாரசூட் விமானிகள் குதிப்பதாக, பல கதைகள் கேள்விப்பட்டோம். எகிப்தை விட்டு அடியோடு வெளியேறி, பாலஸ்தீனத்துக்குள் பின்வாங்கி, தென்புறமாய், சூடானிலும் கெனியாவிலும் புகுந்துகொள்வதற்காக, பிரிட்டனின் எட்டாவது சேனை தயாராகிக்கொண்டிருக்கிறது என்று மிகப் பெரும்பாலோர் நம்பினர்கள்.

இந்தச் செய்திகள் உண்மையா என்று விசாரித்தறிய, நான் விரும்பியது இயற்கை. எந்த விஷயத்தின் உண்மையையும் விசாரித்தறிய முடியாத மிக மோசமான இடம், உலகத்திலேயே கெய்ரோதான். நல்ல மனிதர்கள் சிலர் அங்கே இருந்தார்கள். எகிப்தில் ஐக்கிய அமெரிக்காவின் ஸ்தானிகரான அலெக்ஜாண்டர் கர்க் என்பவருக்கு, வருங் காலத்தைப் பற்றி நம்பிக்கையில்லை. ஆனல், அவருடன் நீண்ட சம்பாஷணைகள் செய்ததிலிருந்து, எனக்கு ஒரு விஷயம் புலனுயிற்று. நடக்கும் விஷயத்தை யெல்லாம் மிக விரிவாக அவர் அறிந்திருந்தார்; மிகவும் துல்லியமான நிலைமையை நயமாய்ச் சமாளிக்க, மிகுந்த சாமர்த்தியத்துடன் அவர் முயன்றுகொண்டிருந்தார். இந்த அறிவையும்

சாமர்த்தியத்தையும் மூடி மறைக்கும் வெளி வேஷமாகவே, நெஞ்சை யரிக்கும் அவநம்பிக்கையை அவர் போர்த்துக் கொண்டிருப்பதாய் எனக்குத் தோன்றியது. விஷயமறிந்த வேறு சில மனிதர்களும் கெய்ரோவில் இருந்தார்கள். கபடமற்ற சிரித்த முகமுள்ள பிரதம மந்திரி நாஹாஸ் பாஷா, அவர்களுள் முக்கியமானவர். அவருடைய உற்சாகத்தையும் சரளமான சுபாவத்தையும் கண்ட நான், "நீங்கள் ஐக்கிய அமெரிக்காவுக்கு வந்து, ஏதாவது பதவிக்குப் போட்டி போடுவீர்களானுல், யாரும் உங்களை ஜயிப்பது மிகக் கடினம்" என்று அவரிடம் சொன்னேன்.

ஆனுல், நகரிலே வதந்திகளும் பீதிகளும் மலிந்திருந்தன. தெருக்களிலே, அதிகாரிகளும் போர் வீரர்களும் ஏராளமாய் நடமாடிக்கொண் டிருந்தார்கள். செய்தித் தணிக்கை, மிக்க கடுமையாய் நடந்தது. அதனுல், போர் முனையிலிருந்து வரும் செய்திகளிலெல்லாம், கெய்ரோவிலிருந்த அமெரிக்க நிருபர் களுக்குச் சந்தேகம் மிகுந்தது. ஷெப்பேர்ட்ஸ் ஓட்டலில் போய் அரை மணி நேரம் தங்கியிருந்தால் போதும்; நூறே நூறு மைலுக்கப்பால் உள்ள வனுந்தரத்தில் என்ன நடக் கிறது என்பதைப்பற்றி, ஒன்றுக்கொன்று மாருன டஜன் கதைகளை நீங்கள் கேட்டுவிடலாம்.

ஆகையால், எல் ஆலமீனில் போர்முனையை நேரே வந்து காணும்படி, தளபதி மாண்ட்காமரி என்னை அழைத்தார். அழைப்பை நான் ஆவலோடு ஒப்புக்கொண்டேன். மைக் கௌலீஸ் என்பவரும், அப்போது எகிப்தில் அமெரிக்கப் படையின் தலைவரா யிருந்த மேஜர் ஜெனரல் ரஸ்ஸல் எல். மாக்ஸ்வெல் என்பவரும் துணைவர, கெய்ரோவிலிருந்து, பாலைவன ரஸ்தாவின் மார்க்கமாய், காரில் நாங்கள் போர் முனைக்குச் சென்றோம்.

கெய்ரோவில் பிரெஞ்சு அதிகாரிகளுக்காக நடக்கும் ஒரு கடையில், காக்கி ஷர்ட்டும் கால் சட்டையும் வாங்கிக் கொண்டேன். இரண்டும் என் உடம்புக்கு மிகச் சிறியவை. ஆனுல், அவர்களிடம் இருந்ததற்குள் இவையே மிகச் சிறந்தவை. பாலைவனப் போரில் ஈடுபடும் ஒவ்வொரு

ஜோல்ஜரும் தூக்கிச் செல்லும் மிக எளிய படுக்கையையே, நாங்கள் இரவல் வாங்கிக்கொண்டோம்.

தளபதி மாண்ட்காமரி, தமது தலைமை ஸ்தலத்தில் என்னைச் சந்தித்தார். மத்தியதரைக் கடலின் மணல் குவியல்களுக்குப் பின்னே, அது ஒளிந்திருந்தது. உண்மையிலே, கடற்கரை வெகு சமீபத்தில் இருந்தது; ஆகையால், அடுத்த நாள் காலையில், அவரும் தளபதி அலெக்ஜாந்தரும் நானும், அந்த அற்புதமான பசுநீல நீரிலேயே குளித்தோம். மோட்டார்க் கார்களுக்குப் பின்னால் கட்டி யிழுப்பார்களே அந்த மாதிரி, நாலு அமெரிக்கப் பிணவண்டிகள்தாம், தளபதியின் தலைமை ஸ்தலம். அவை பத்துப் பன்னிரண்டு கஜ தூரத்துக்கொன்றாக, மணல் முட்டுகளுக்குப் பின்னே மறைவாக நிறுத்தப்பெற்றிருந்தன. ஒரு வண்டியில் பூலோகப் படங்களையும் தம்முடைய போர்த் திட்டங்களடங்கிய படங்களையும், தளபதி வைத்துக்கொண்டிருந்தார். ஒரு வண்டியை நான் தூங்குவதற்கு அளித்தார். மற்றொரு வண்டியில், அவருடைய மெய்காப்பாளர் இருந்தார். நான்காவது வண்டியில், தாம் போர் முனையில் இல்லாத போதெல்லாம், தளபதியே வசித்தார்.

அங்கே அவர் வாசம் அடிக்கடி நேர்வதல்ல. தளபதி மாண்ட்காமரி ஒல்லியானவர்; நல்ல படிப்பாளி; தீவிரம் நிறைந்தவர்; அநேகமாய் வெறி பிடித்தவர் என்றே சொல்லலாம். எகிப்தில் நான் இருந்தபோது, அவர் என் மனத்தைக் கவர்ந்துவிட்டார். தம் வேலையிலே, மிக்க ஆர்வத்தோடு அவர் ஈடுபட்டார். அதுதான் அவருடைய மற்ற எல்லாக் குணங்களையும்விட மிக விசேஷமாகும். அவர் பெரும்பாலும், போர்முனையில், தம் சோல்ஜர்களோடு கூடவே யிருந்தார். பல வாரங்களுக்கு முன் மத்தியக் கிழக்குப் பிரதேசத்துக்கு வந்து, அமெரிக்கப் படைகளுக்குத் தலைமை தாங்கி வரும் தளபதி மாக்ஸ்வெல்லைக்கூட, தளபதி மாண்ட்காமரிக்குத் தெரியவில்லை; இதைக் கண்டு நான் ஆச்சரியமடைந்தேன். நாங்கள் காரிலே அவருடைய தலைமை ஸ்தலத்துக்குச் சென்றபோது, அவர் என்னை ஒரு பக்கமாய்

அழைத்துச் சென்று, "உங்களோடுகூட இருக்கிருரே, அந்த அதிகாரி யார்?" என்று என்னைக் கேட்டார். "தளபதி மாக்ஸ்வெல்" என்று நான் பதிலளித்தேன். "தளபதி மாக்ஸ்வெல் என்ருல், அவர் யார்?" என்று மீண்டும் கேட்டார். நான் விளக்கிச் சொல்லி முடித்த சமயத்தில், தளபதி மாக்ஸ்வெல்லே கிட்ட வந்து சேர்ந்தார். இருவரையும் நான் அறிமுகப்படுத்தி வைத்தேன்.

நாங்கள் காரை விட்டு இறங்கக்கூட இல்லே; அதற்குள்ளேயே, தளபதி மாண்ட்காமரி ஒரு சண்டையைப்பற்றி விஸ்தாரமாய் வர்ணித்துச் சொல்லத் தொடங்கிவிட்டார். அந்தச் சண்டை, முடியும் தறுவாயி லிருந்தது. அந்தச் சண்டைதான் பல மாதத்துக் கப்புறம், முதல் முதலாக ரோமலின் முன்னேற்றத்தை அடியோடு தடுத்து நிறுத்தி விட்டது. அந்தச் சண்டையைப்பற்றி உண்மையான செய்தி, கெய்ரோவுக்கு வந்து எட்டவே யில்லே; பத்திரிகைகளுக்கும் அந்தச் செய்தி கொடுபடவில்லே. தளபதி படிப்படியாய், அதன் விவரங்களேத் திரும்பவும் எங்களுக்குச் சொன்ஞர். நடந்த வரலாற்றை உள்ளது உள்ளபடி எங்களிடம் தெரிவித்தார். தம்முடைய படைகள் அப்படியொன்றும் பிரமாதமான தூரம் முன்னேறிவிடவில்லே யென்ருலும், இது மிக முக்கியமான ஒரு வெற்றியே என்று தாம் கருதுவதாகவும், அது ஏன் என்ற காரணத்தையும் சொன்ஞர். பிரம்மாண்டமான அளவில் பலாபலப் பரீட்சை இந்தச் சண்டையில் நடந்துவிட்டது. பிரிட்டிஷ்காரர் இதில் தோற்றிருந்தால், சில நாட்களிலே கெய்ரோ நகருக்குள் ரோமல் புகுந்திருப்பார்.

பாலேவனப் போரில், எத்தகைய போர்த் தந்திரங்கள் அநுஷ்டிக்கப்படுகின்றன என்பதுபற்றி, இதுவே எனக்கு முதல் பாடமாகும். பாலேவனப் போரில், தூரம் முக்கியமல்ல; நினேத்தபடி இயங்கக்கூடிய சக்தியும் பீரங்கி பலமுமே முற்றிலும் முக்கியமாகும். "எகிப்து காப்பாற்றப் பட்டுவிட்டது" என்று தளபதி திரும்பத் திரும்பச் சொன்ஞர். ஏன் இப்படி மிக்க அமைதியாக அவர் சொல்லுகிருர்

என்று முதலில் எனக்கு விளங்கவில்லை. பகைவன் எகிப்துக் குள்ளே வெகு தூரம் புகுந்திருக்கிறுன்; இன்னும் அவன் பின் னடையவில்லை. ஏற்கனவே பிரிட்டிஷார் பெருமை யடித்துக் கொண்ட செய்திகளின் பலனுகக் கெய்ரோவில் ஏற்பட் டிருந்த அவநம்பிக்கை, இங்கே எனக்கு நினைவு வந்தது. ஆனுல், தளபதி மாண்ட்காமரி தம்முடைய யுத்தப்பட அறையாய் ஜோடித்திருந்த பீரங்கி வண்டியை விட்டு நான் அகலுமுன்பாக, பாலைவனப் போரைப்பற்றிப் பல விஷயங் களைத் தெரிந்துகொண்டேன். பிரிட்டிஷ் அதிகாரிகளும் கனவான்களும் எந்த நிலைமையிலும் பரிபூர்ணமான தன் னம்பிக்கையோடுதான் இருப்பார்கள். எகிப்தின் அபாயம் நீங்கிவிட்டது என்று தளபதி சொன்னது, இந்த மாதிரி வறட்டுத் தன்னம்பிக்கை யல்ல; உண்மையே யாகும் என்று எனக்குத் திடநிச்சயம் உண்டாயிற்று.

அமெரிக்காவில் தயார் செய்த ஜென்ரல் ஷெர்மான் டாங்கிகளைப்பற்றி, தளபதி மாண்ட்காமரி மிக உற்சாகத் தோடு பேசினுர். அவை அப்போதுதான் அலெக்ஜாண் டிரியா, போர்ட் ஸெயிட் இரு துறைமுகங்களிலும் ஏராள மாய் வந்து இறங்கத் தொடங்கியிருந்தன. தானுக இயங்கும் அமெரிக்க டாங்கி எதிர்ப்பு 105 மில்லி மீட்டர் பீரங்கியை யையும், அவர் மிக்க உயர்வாகப் புகழ்ந்தார். டாங்கிகளை நிறுத்திவிட முடியும் என்பதை, இப்போதுதான் அவை நிருபிக்கத் தொடங்கின.

பாலைவனப் போர்முனையில் ஏற்கனவே பிரிட்டிஷாருக்கு விளைந்த தோல்விகள் எதனுல்? டாங்கிப் படைகள், பீரங்கிப் படைகள், விமானப் படைகள் இந்த மூன்றையும் போதிய அளவு ஒன்றுக்கொன்று இசைப்படுத்தி வேலை செய்யாத தனுல்தான் என்று மாண்ட்காமரி நம்பினுர். அவர் விவரித்துச் சொன்ன வரலாற்றின் முக்கியக் கருத்து இது தான். தம்முடைய விமானப் படையின் அதிகாரி, தமது தலைமை ஸ்தலத்தில் தம்மோடு கூடவே வசிப்பதாக, தளபதி என்னிடம் சொன்னுர். விமானங்கள், டாங்கிகள், பீரங்கிகள் இந்த மூன்றையும் பூர்ணமாய் ஒன்றுக்கொன்று இசைப்

படுத்தி வேலை செய்வதால்தான், சென்ற சில நாட்களில், ரோமலின் படைகள் அடியோடு தடுக்கப்பெற்றிருக்கின்றன என்றும் அவர் சொன்னார். சமீபத்தில் நடந்த சண்டையில், ஜெர்மானியர் 140 டாங்கிகளை இழந்துவிட்டதாக, அவர் மதிப்பிட் டிருக்கிறார். அவைகளில் பாதி, மிக உயர்ந்த ரகத்தைச் சேர்ந்தவை. பிரிட்டிஷாரோ 37 டாங்கிகளைத் தான் இழந்திருக்கிறார்கள்; ஆகாயத்தில் இப்போதே அவர் கைதான் எதிரி கையைவிட மேலோங்கி யிருக்கிறது. இதே போல, தரையிலும், தம் கை இனிமேலோங்கி விடப்போவ தாக, அவர் கூறினார்.

அன்று மாலை, தளபதி மாண்ட்காமரியின் கூடாரத்தில், நாங்கள் விருந்துண்டோம். மத்திய கிழக்குப் பிரதேசத்தில் பிரிட்டிஷ் படைகளுக்கெல்லாம் தளகர்த்தரான உயர்தர அதிகாரி தளபதி ஸர். ஹெரால்டு, ஆர். எல்-ஜி. அலெக்ஜாண்டர், தளபதி மாக்ஸ்வெல், அப்போது மத்தியக் கிழக்கில் அமெரிக்க விமானப் படைகளின் அதிபதியா யிருந்த மேஜர் ஜெனரல் லூயி எச். பிரெட்டன், அவரே போல் பிரிட்டிஷ் விமானப் படைகளின் அதிபதியான ஏர்மார்ஷல் ஸர் ஆர்த்தர் டெட்டர் ஆகியவரும் இதில் கலந்துகொண்டார்கள். ஏர்மார்ஷல் டெட்டரை ஏற்கெனவே கெய்ரோவிலும் பார்த்துப் பேசி யிருக்கிறேன். அவர் விசித்திரமான வசீகரம் வாய்ந்தவர். கம்பீரமான ஸோல்ஜர். சாந்தமான முகமுள்ளவர். அதே மாதிரி குரல். பாலைவனத்தில் எந்த இடத்தில் வேலை செய்யப் போனாலும் சரி; சித்திரம் தீட்டும் வர்ணங்களையும் கூடவே எடுத்துக்கொண்டு செல்கிறார். அவர் ஒரு விமான வீரர்; சிந்தனா சக்தி நிறைந்த மனிதர்.

எதிர்காலப் போர்த்திட்டங்களைப்பற்றி, பிரெட்டனும் டெட்டரும் அன்றிரவு பேசினார்கள். அந்தப் பேச்சு வெறும் துணிச்சலோ ஐம்பமோ அல்ல என்று பின் நிகழ்ச்சி கள் காட்டிவிட்டன. ஐக்கிய தேசங்களின் கப்பல் போக்கு வரத்துக்கு, மீண்டும் மத்தியதரைக் கடலைத் திறந்துவிட முடியும் என்று, அவர்கள் இருவரும் நிச்சயமாய்க் கூறினார் கள். முன்னே பிதுங்கி வந்திருக்கும் ரோமலின் படைகளை,

பென்காஜிக்கு மேற்கே பின்னே ஓடும்படி வெருட்டிவிட்டால் தான், மத்தியதரைக் கடலே அவ்விதம் திறப்பது சாத்திய மாகும் என்று, இருவரும் ஒற்றுமையாய்ச் சொன்னார்கள். எதிப்திலும் தூரக்கிழக்குப் பிரதேசத்திலும் ஆப்பிரிக்கக் கடற்கரையோரமா யுள்ள கப்பல் போக்குவரத்துச் சந்துகளி லெல்லாம் நம்முடைய படைகளைக் கொண்டுபோய்க் குவித்து விடலாம் என்று, அவர்கள் கூறினார்கள். ஜிப்ரால்டர், மால்டா, பென்காஜி, பாலஸ்தீனத்தில் ஐக்கிய அமெரிக்கா வுக்குச் சொந்தமாயுள்ள பிரம்மாண்டமான விமான நிலையங்கள் ஆகியவற்றை விமான தளங்களாக வைத்துக் கொண்டு, அவைகளிலிருந்து குடை பிடித்தாற்போல் விமானங்கள் பறந்துவர, மேற்கண்டவாறு படைகளைக் கொண்டுபோய்க் குவிக்க வேண்டும் என்று, அவர்கள் சொன்னார்கள். பென்காஜிப் பிரதேசத்தைத் தாங்கள் கைப் பற்றிவிட்டால், இதாலிமீது பெரிய அளவில் விமானக் குண்டுகளை வீசுவதும் உண்மையிலே சாத்தியமாகும் எனவும் அவர்கள் பேசிக்கொண்டார்கள்.

எங்கள் சம்பாஷணையில் பற்பல விதமான விஷயங்கள் அடிபட்டன. பிரிட்டிஷ் ராணுவத்தில், கக்கூசை மட்டும் மரியாதை யில்லாமல் 'லார்டு சபை' என்று கூறுகிறார்களாம். இந்த விஷயத்தைக்கூட எனக்கு ஓர் அதிகாரி விளக்கினார். ஆனால், தளபதி மாண்ட்காமரி, போர் முனையை யன்றி வேறு எதைப்பற்றியும் அதிகமாகப் பேச விரும்பவில்லை. மற்ற விஷயங்களைப்பற்றிய பேச்சை, கொஞ்ச நேரம் மரியாதை யாய் அவர் கேட்டுக் கொண்டிருப்பார். ஓரிரு நிமிஷத்தில், பேச்சை மீண்டும் பாலைவனப்போரில் திருப்பி விடுவார். என்றாலும், பின்னால், அவரும் நானுமாய் அவருடைய 'உணவறை'யை விட்டு, என் 'படுக்கையறை'க்கு நடந்தோம். என் 'படுக்கையறை' ஒழுங்கா யிருக்கிறதா என்று அவர் பார்வையிட்டார். பின்பு, பிணவண்டியின் படியில் நாங்கள் உட்கார்ந்துகொண்டோம். அங்கே யிருந்தபடி நிலவிலே கடல் அலை மோதுவதைப் பார்த்துக்கொண்டிருந்தோம். பின்வாங்கி ஓடும் ரோமலின் படைகள் மீது மாண்ட்காமரி

யின் பீரங்கிகள் குண்டு வீசும் சத்தமும் எங்கள் காதில் விழுந்தது. அவருக்குத் தம்முடைய பழைய ஞாபகங்கள் வந்து, சிந்தனையில் மூழ்கினார். டொனேகால் ஜில்லாவில் கழிந்த தம் பிள்ளைப்பருவ நாட்களையும், தாம் அநேக வருஷங்கள் பிரிட்டிஷ் ராணுவத்தில் இருந்துகொண்டு உலகின் பல் வேறு பகுதிகளில் சேவை செய்ததையும்பற்றி அவர் பேசினார். பிரிட்டிஷ் சர்க்கார் அதிகாரிகளும் ராணுவ அதிகாரிகளும், தற்காப்பு மனோபாவத்தை விட்டு, தாக்கும் மனோபாவத்தைப் பெறும்படி செய்வதற்காக, போர் ஆரம்பித்த காலத்திலிருந்தே, தாம் தொடர்ந்து போராடி வருவதைப்பற்றியும் அவர் கூறினார்.

"வில்கீ, உங்களுக்கு ஒரு விஷயம் சொல்லுகிறேன். அந்த ஒரு வழியால்தான், இந்தப் போஷ்களை நாம் முரியடிக்க முடியும். இவர்களுக்கு ஓய்வே கொடுக்கக் கூடாது; கூடவே கூடாது. இந்தப் போஷ்கள் நல்ல போர்வீரர்கள்" என்று அவர் கூறினார். ஜெர்மானியரை, 'போஷ்கள்' என்ற கேலிப் பெயராலேயே எப்போதும் அவர் குறிப்பிடுகிறார்.

ரோமலைப்பற்றி நான் கேட்டதற்கு, அவர் சொன்னார்: "ரோமல் பயிற்சியும் திறமையும் மிகுந்த ஒரு தளபதி. ஆனால், அவரிடம் ஒரு குறை இருக்கிறது. ஒரு முறை பிரயோகித்த யுத்த தந்திரத்தையே, அவர் திரும்பவும் பிரயோகிக்கிறார். அதனாலேயே அவரை நான் மடக்கிவிடப் போகிறேன்."

"சுகமாய்த் தூங்குங்கள். நான் எப்போதும் தூங்கச் செல்லுமுன் கொஞ்சம் படிப்பது வழக்கம்" என்று சொல்லி விட்டு, அவர் போக எழுந்தார். அதன்பின், தம்மிடம் மிகச் சில புத்தகங்களே யிருப்பதாக, கொஞ்சம் வருத்தத்தோடு கூறினார். உண்மையில் அவர் கூடவே யிருக்கும் பொருள்கள் தாம், உலகத்திலே அவருக்குள்ள சகல சொத்தும் ஆகும். அவர் இங்கிலாந்தைவிட்டுப் புறப்படச் சில நாளைக்குமுன், டோவரில் இருந்த ஒரு பண்டகசாலையில் தம்முடைய தட்டு முட்டுச் சாமான்களையும், தமது ஆயுள் காலம் முழுதும் சேகரித்த புத்தகங்களையும் சேர்த்து வைத்திருந்தாராம்.

"அந்தப் பண்டகசாலையை இந்தப் போஷ்கள் ஒரு விமானப் படையெடுப்பிலே நாசம் செய்துவிட்டார்கள்!" என்று அவர் கூறினர்.

அடுத்த நாள், நாங்கள் போர்முனையைச் சுற்றிப் பார்த்தோம். கூட்டங் கூட்டமான டாங்கிகள், பீரங்கிப் படைகள், அங்கொன்று இங்கொன்றாகச் சண்டை விமான தளங்கள், பிரம்மாண்டமான சப்ளைப் படைகள் ஆகியவற்றைக் கண்ணால் கண்டேன். நிலையற்ற சதுரங்கப் பலகைபோன்ற வனாந்தர யுத்தத்தில், இவைதாம் போர்முனையாக விளங்குகின்றன. கோர், டிவிஷன், பிரிகேட், ரெஜிமெண்ட் அல்லது பட்டாளம் ஆகிய எந்தவிதமான படை வகுப்பா யிருந்தாலும் சரி; அவற்றின் துருப்புகள் எந்த எந்த விதமாய்ப் பரவி யிருக்கிறார்கள், டாங்கிகள் எங்கெங்கே நிற்கின்றன என்ற விவரங்களை, அந்த அந்தப் படைத்தலைவர்களைவிட அதிக நுணுக்கமாக, தளபதி மாண்ட்காமரி அறிந்திருப்பது கண்டு, நான் ஆச்சரியமடைந்தேன். இது ஏதோ மிகைப் படுத்திக் கூறுவது போல் தோன்றும். ஆனால், உண்மை. நுணுக்கமாய் எல்லா விவரங்களையும் அறிந்துகொள்ள, அந்த மனிதருக்கு உள்ள ஆசை, அதிசயிக்கத் தக்கது.

பாலைவனத்தில் டஜன் கணக்காக அங்குமிங்கும் சிதறிக் கிடந்த ஜெர்மன் டாங்கிகளை, நாங்கள் பார்வையிட்டோம். அவை பிரிட்டிஷ் படைகளால் கைப்பற்றப்பெற்று, மாண்ட்காமரியின் உத்தரவுப்படி வெடிவைத்து உடைக்கப் பெற்றவை. நாங்கள் அவற்றின்மீது ஏறிப் பார்த்தபோது, அவற்றில் இருந்த உணவுப் பெட்டிகளை மாண்ட்காமரி திறந்து காட்டினர். டொப்ருக்கைப் பிடித்தபோது, ஜெர்மானியர் கைப்பற்றிய பிரிட்டிஷ் உணவுப்பண்டங்களின் மிச்சம் மீதிகள், சுட்டுக் கரியாக, அந்தப் பெட்டிகளில் கிடந்தன. அவற்றை அவர் என் கையில் கொடுத்து, "பாருங்கள், வில்கீ! இந்தப் பிசாசுகள் நம்மையே பறித்துத் தின்று தாம் ஜீவித்துக்கொண்டிருக்கின்றன. ஆனால், அவர்கள் மறுபடியும் இந்தமாதிரி செய்ய முடியாது. அதம பட்சம், இந்த டாங்கிகளை அவர்கள் இனிமேல் நமக்கு எதிராய் உபயோகிக்க முடியாது" என்றார்.

நாங்கள் போர்முனையைச் சுற்றிப் பார்த்துக்கொண்டிருந்த அத்தனை நேரமும், பிரிட்டிஷ் பீரங்கிகள் இடைவிடாது இடி முழக்கம் செய்துகொண்டிருந்தன; பின்வாங்கியோடும் ரோமலின் படைகளை, பிரிட்டிஷ். அமெரிக்க விமானங்கள் அலைக்கழித்துக்கொண்டிருந்தன. ஜெர்மானியரும் பழிக்குப் பழியாகப் பிரிட்டிஷ் பீரங்கிஸ் தலங்கள் மீது, வேகமாய், கூர்மையாய், குண்டு வீசுவதற்காக, ஸ்டட்கார்ட் விமானக் கூட்டங்களை அனுப்பிக்கொண்டிருந்தார்கள்.

பளிச்சென்றிருந்த ஆகாயத்தில், எங்கள் தலைக்குமேலே இங்கும் அங்கும் ஒவ்வொரு விமானம் சுடப்பெற்று, சுருள் சுருளாய்த் தீயும் புகையுமாய்ச் சுழன்று, பூமியை நோக்கி விழுந்துகொண்டிருந்ததை, நாங்கள் கண்டோம். அதிருஷ்டவசமாய் அந்த விமானங்கள் ஒன்றிரண்டிலிருந்து நல்ல தருணத்தில் தப்பிக் குதித்த சில விமானிகள், பாரசூட்டில் மிதந்துகொண்டிருந்தார்கள்; அவர்கள் அனைவரும், தெற்கேயிருந்து வீசும் இளங்காற்றினால் உந்தப்பெற்று, மத்திய தரைக் கடலுக்கு மேலே வானில் மிதந்து செல்வதுபோல், எனக்குத் தோன்றிற்று.

போர் முனையில் நாங்கள் பார்த்த ஸோல்ஜர்களில் இங்கிலீஷ்காரரர், ஆஸ்திரேலியர், நியூஜீலந்துக்காரரர், கானடாக்காரரர், தென் ஆப்பிரிக்கர் ஆகியவர்களோடு, சுமார் முப்பது அமெரிக்கரும் இருந்தார்கள். அந்த முப்பது அமெரிக்கரும் சிறிய டாங்கிப் படையைச் சேர்ந்தவர்கள். பிரத்யட்சமான போர்க்களத்தில் பயிற்சி பெறுவதற்காக, அந்த டாங்கிப் படையை, விமான மூலமாய், ஐக்கிய அமெரிக்காவிலிருந்து அனுப்பியிருந்தார்கள். அந்த அமெரிக்கர்களில் ஒவ்வொருவரோடும் நான் பேசினேன். அமெரிக்காவின் வெவ்வேறான பதினெட்டு மாகாணங்களின் பிரதிநிதிகளாக, இவர்கள் வந்திருக்கக் கண்டேன். இவர்கள் சௌக்கியமாயிருப்பதாகவே தோன்றினார்கள். ஐக்கிய அமெரிக்காவுக்குத் திரும்பிச்செல்லத் தங்களுக்கு உள்ள ஆவலை ஒளிக்காமல் சொன்னார்கள். கொடிப் பரிசைப் பெறுவதற்காக, ஒரு பந்தய விளையாட்டில் அப்போது இறுதிப்

போட்டி நடத்திக்கொண்டிருந்த டாட்ஜர்ஸ், கார்டினல்ஸ் என்ற இரு தரப்பாரையும்பற்றி, இவர்கள் ஆர்வத்தோடு என்னைக் கேள்விமேல் கேள்வி கேட்டுத் தொளைத்துவிட்டார்கள். இவர்கள் இப்போதுதான் சண்டை முகத்திலிருந்து வந்திருக்கிறார்கள். ஒரு மணி நேரத்தில், இவர்கள் திரும்பவும் சண்டைக்குப் போகவேண்டும். ஆயினும், இவர்கள் வீரியம் பேசவுமில்லை; ஜம்பமடித்துக்கொள்ளவுமில்லை. கட்டு மஸ்தான தேகமும் சுறுசுறுப்புமுள்ள ஒரு கோஷ்டி அமெரிக்கப் பையன்கள் இவர்கள். இனி எப்போது டெக்ஸாஸ், பிராட்வே, அயோவா ஆகிய இடங்களைக் காண்போம் என்று, இவர்கள் ஏங்கிக்கொண்டிருந்தார்கள்.

ஒரு டிவிஷன் அதிபதியின் தலைமை ஸ்தலத்தில் உச்சி வேளைச் சிற்றுண்டிக்காக நாங்கள் தங்கினோம். அதுவும், மோட்டார்ப் பிணைவண்டிகளின் ஒரு கும்பல்தான். ரொட்டித் துண்டுகள்தாம் சிற்றுண்டி—அவற்றோடு கொஞ்சம் ஈக்களும் சேர்ந்துகொண்டன. போர் முனையில், ஏறக்குறைய ஜெர்மானியரைப் போலவே, ஈக்களும் சோல்ஜர்களை உபத்திரவம் செய்தன. அந்த ஈக்கள் வாய், காது, மூக்கு எங்கும் நுழைந்து விடுகின்றன. பாலைவனப் போரின் ஒரு விசேஷ உபத்திரவம் ஈக்கள். ஆனால், பிரான்ஸின் அகழ் அரண்களில் உள்ள மண் எவ்வளவு உண்மையான உபத்திரவமா யிருக்கிறதோ அவ்வளவு உண்மையான உபத்திரவமா யிருக்கிறது இதுவும். சன்னமான பொடி மணல் ஓயாமல் தங்கள் கண்ணிலும் உடம்பிலும் தூற்றிக்கொண்டேயிருப்பதாக, அநேக அதிகாரிகள் புகார் சொன்னார்கள். சகல யந்திரக் கருவிகளுக்கும் இந்த மணல் வீச்சினால் பிரமாதமான தேய்மானம் ஏற்படுகிறது. சாதாரணமான விமானங்களின் எஞ்சின்கள், சகஜமாக உழைக்கக்கூடிய காலத்தில் கால்வாசிதான், பாலைவனத்தில் உழைக்கின்றன என்று, ஒரு விமானி எனக்குச் சொன்னார். எகிப்தில் நான் எங்கே சென்றாலும், பிரிட்டிஷ், அமெரிக்க விமான நிபுணர்களான எஞ்சினீயர்கள் சிக்கலான சல்லடை அமைப்புக்களைப் பற்றியே பேசிக்கொண்டிருந்தார்கள்.

தளபதி மாண்ட்காமரியின் தலைமை ஸ்தலத்துக்குத் திரும்பிச் சென்றபோது, அவர் எனக்கு, நான் கண்டதையும் கேட்டதையும் எல்லாம் சாராம்சமாய் விளக்கிச் சொன்னார். துளியும் பதறாமல், நிலைமை மிக நேர்த்தியா யிருப்பதாக, அவர் வர்ணித்தார். அப்போதுதான் முடிவாகியிருந்த சண்டை, நமக்கு முடிவான வெற்றியைத் தரக்கூடியது என்று அவர் கூறினார்.

"இந்தச் சண்டையின் பலனாக, டாங்கிகளிலும் விமானங் களிலும் நமது கையே மேலோங்கிவிட்டது. மத்தியதரைக் கடலின் கிழக்குப் பகுதி வழியாகத் தளவாடங்களை மேலும் மேலும் தருவித்துக்கொள்ள, ரோமலால் இயலாமல் போய்விட்டது. ஏனெனில், அவருடைய தளவாடக் கப்பல் கள் ஐந்து வந்தால், அவற்றுள் நான்கை நம் விமானப் படை அழித்துவிடுகிறது. ஆகையால், காலக்கிரமத்தில் ரோமலின் சேனையை, நான் அழிப்பது மிக நிச்சயம். இப்போது நடந்த சண்டைதான், அதை நிலை நாட்டிய சோதனை" என்று அவர் கூறினார்.

அவருக்கும் எதிரிக்கும் ஏற்பட்ட டாங்கி நஷ்டங்களையும், டாங்கி பின்பலங்களையும்பற்றி அவர் கணக்கிட்டிருந்த புள்ளி விவரங்களை நான் கண்டேன். எதிரியின் பல சேதாரங்களை, நேரே என் கண்ணாரக் கண்டேன். அலெக்ஜாண்டி ரியாவுக்குக் கிழக்கே, அமெரிக்கக் கப்பல்களில், அப்போது கூடச் சப்ளைகள் வந்து இறங்கிக்கொண் டிருக்கின்றன என்று ஏற்கனவே சிலர் எனக்குச் சொல்லியிருந்தார்கள். அந்தத் தகவலை அவரும் ஊர்ஜிதம் செய்தார்.

என்னை ஓர் உபகாரம் செய்யும்படி, அவர் கேட்டுக் கொண்டார். "எகிப்து, வட ஆப்பிரிக்கா, மத்தியக் கிழக்கு ஆகிய நாடுகளில், ஒருவிதமான தோல்வி மனப்பான்மை பரவியிருக்கிறது. தொடர்ந்து பிரிட்டிஷார் பல தோல்விகள் அடைந்ததால், எகிப்தை ஜெர்மானியர் பிடித்துக்கொண்டு விடப் போவதாகப் பலர் நம்புகிறார்கள். இதனால் பிரிட்டி ஷாரிடம் இருந்த மதிப்புக் குறைந்துவிட்டது. அது குறைந் ததால், என்னுடைய ஒற்றர்களின் வேலைக்கு இடையூறு

ஏற்பட்டிருக்கிறது; எதிரியின் ஒற்றர்களுக்கு உதவியும் கிடைக்கிறது; நான் ரோமலைத் தடுத்துவிட்டேன். ஆனால், போர்ட் ஸெய்தில் இப்போதுதான் அமெரிக்காவில் செய்த ஜெனரல் ஷெர்மான் டாங்கிகள் சுமார் முந்நூறு வந்து இறங்கியிருக்கின்றன. அவை வேலை செய்யத் தொடங்கு முன், பாலைவனத்துக்குள் ரோமல் பின் வாங்க ஆரம்பித்து விடக்கூடாதே என்பது என் கவலை. மூன்று வாரத்தில் அவை வேலை செய்யத் தொடங்கிவிடலாம் என்று, நான் மதிப்பிடுகிறேன். சண்டையின் பலனைப்பற்றி, நான் அதிகாரபூர்வமாய் ஒரு பகிரங்க அறிக்கை விடுவேனானல், ரோமலின் வாபஸ் துரிதப்பட்டுவிடும். அதிகார பூர்வமா யில்லாத ஓர் அறிக்கையை நீங்கள் விடுத்தீர்களானல், நான் கடுமையாய்த் தாக்கப் போகிற அடையாளமாக அதை அவர் நினைக்கமாட்டார். அதே சமயத்தில், எகிப்து, ஆப்பிரிக்கா, மத்தியக் கிழக்கு ஆகிய நாட்டு ஜனங்களின் மனோதிடம், அதிகாரபூர்வமான பிரிட்டிஷ் அறிக்கையால் ஏற்படுவதைவிட, உங்கள் அறிக்கையால் அதிகமாய் உறுதிப் படும்'' என்று அவர் சொன்னார்.

அவர் சாதித்திருக்கும் வெற்றியின் முக்கியத்தை அவர் மிகைப்படுத்திச் சொல்லவில்லை. எனக்கு நிச்சயமான நம்பிக்கை உண்டாயிற்று. நான் பார்த்ததும் கேட்டதுமான விஷயங்களே அதற்கு ருசுவாகும். ஆகையால், அவர் விரும்பியபடி செய்ய, நான் சந்தோஷமாய் இசைந்தேன்.

இதன்மேல் பத்திரிகைப் பிரதிநிதிகளை, அவர் தமது தலைமை ஸ்தலத்துக்கு அழைத்தார். ஏற்கனவே நானும் அவருமாய்த் தீர்மானித்திருந்த வார்த்தைகளில், சண்டை யின் பலன்களைப்பற்றி, அவர்களுக்கு நான் சொன்னேன். அது இதுதான்: "எகிப்து காப்பாற்றப் பெற்றுவிட்டது. ரோமலைத் தடுத்தாயிற்று. நாஜிகளை ஆப்பிரிக்காவிலிருந்து வெருட்டும் வேலை ஆரம்பமாகிவிட்டது.''

இந்தப் பத்திரிகை நிருபர்களுக்கு, பிரிட்டிஷ் தரப்பி லிருந்து வெகு காலத்துக்கப்புறம் முதல் முதலாகக் கிடைத்த நல்ல செய்தி இதுதான். அநேகம் தடவை, அவர்கள்

ஏமாந்துவிட்டார்கள். ஆகையால், அவர்கள் வெகு ஜாக்கிர தையாய் இருந்தார்கள். சண்டை முனை, அவர்களின் கண் களுக்கு, தளர்ந்ததாகத் தோன்றவில்லை. நைல் நதிக்குச் சில மைல் தூரத்திலேயே, ரோமல் இன்னும் இருந்துகொண்டிருக் கிறார். நாமோ அங்கிருந்து வெகு தூரத்தில் இருந்தபடி, கற்பனை செய்துகொண்டிருக்கிறோம். கெய்ரோவுக்கு மார்க்கம் வெகு கிட்ட இருக்கிறது.

அன்று மாலை, அநேகம் பத்திரிகை நிருபர்களின் முகத் திலே, அடக்கமான சந்தேகம் குடிகொண்டிருந்ததை, நான் கண்டேன். சோதிடம் சொல்லும் தளபதிகளுடன்தாம், அவர்கள் இதுவரையில் பழகியிருக்கிறார்கள். காரியம் சாதிக் கும் தளபதிகளிடம், அவர்களுக்கு அநுபவம் கிடையாது.

மாண்ட்காமரியின் தலைமை ஸ்தலத்திலிருந்து, ஒரு சிறிய ஜெர்மன் வேவு விமானத்தில், அமெரிக்க, பிரிட்டிஷ் விமான தளத்துக்கு, நான் பறந்து சென்றேன். அந்த விமானத்தின் உடம்பு, ஏறக்குறைய முழுவதுமே கண்ணாடி யாலேயே செய்யப்பெற்றிருந்தது. அதற்குள் இருக்கும் ஒருவர் நாலு திசையிலும் பார்க்கலாம். போர்க்களத்துக்கு மேல், நான் தாழப் பறந்து சென்றேன். விமான தளகர்த்தர் டெட்டர், விமானத்தை ஓட்டிச் சென்றார்.

விமான மூலதளத்தில், நூற்றுக்கணக்கான அமெரிக்க, பிரிட்டிஷ் விமானிகளை நாங்கள் பார்த்தோம். சிலர் சண்டை யிலிருந்து அப்போதுதான் வந்துகொண்டிருந்தார்கள்; சிலர் சண்டைக்குப் புறப்பட்டுக்கொண்டிருந்தார்கள். மற்றவர்கள், பரஸ்பரம் தங்கள் அநுபவங்களைச் சொல்லிக் கொண்டும், காற்றையும் கால நிலையையும்பற்றிப் பேசிக் கொண்டும் உட்கார்ந்திருந்தார்கள். எல்லோருமே, முற் றிலும் நிர்விசாரமாயிருந்தார்கள். அன்று காலையில், சில பையன்கள், மத்தியதரைக் கடலின் பக்கமாய், பாரசூட்டில் மிதந்து சென்றார்களே; அவர்களின் கதி என்ன ஆகியிருக் குமோ என்று, சிறிது கவலையோடு நான் கேட்டேன். அவர் கள் யாராயிருக்கும் என்று அடையாளம் கண்டுபிடிக்க முடிய வில்லை. ஆனால், விமான தளத்தின் அதிகாரி சொன்னார்:

"அவர்களில் எவ்வளவு பேர் திரும்பி வந்துவிடுகிறுர்கள் என்பதுதான் ஆச்சரியம். சிலர் பகைவனின் எல்லேக்குள் விழுந்துவிடுகிறுர்கள்; சிலர் கடலிலே விழுகிறுர்கள்; சிலர் பாலேவனத்தில் எங்கேயோ எட்டப்போய் விழுகிறுர்கள். ஆனுல், சாமர்த்தியத்தாலும் தன்னம்பிக்கையாலும் அவர் களில் மிக ஏராளமான பேர், தலேமை ஸ்தலத்துக்குத் திரும்பி வந்துவிடுகிறுர்கள்."

பற்பல அமெரிக்க விமானிகளுடன், நான் பேசினேன். பாலேவனத்தில் கண்ட அமெரிக்க ஸோல்ஜர்களேப் போலவே, இவர்களின் மனுேபாவமும் இருந்தது. அதன்பின், விமான தளபதியும் நானும் அலெக்ஜாண்டிரியாவுக்குத் திரும்பிப் பறந்தோம். இந்தப் பிரயாணத்தால், ஒன்று என் மனத்தில் பதிந்தது; நான் கண்ட மணலேயும் டாங்கிகளேயும் நீண்டு நிமிர்ந்த பீரங்கிகளேயும் போல, இந்தப் போர் அவ்வளவு நேர்முகமானதல்ல; கடுமையானதல்ல; அடிப்படையிலே எளியதுமல்ல.

அலெக்ஜாண்டிரியாவைப்பற்றி இரண்டு விஷயங்கள் தான் இன்று எனக்கு மிக நன்றுய் ஞாபகம் வருகின்றன. ஒன்று, ரீயர் அட்மிரல் ரெனி காப்ட்ராய் என்பவருடன் நிகழ்த்திய நீண்ட சம்பாஷணே. துறைமுகத்தில் நிர்க்கதி யாய் அகப்பட்டுக்கொண்ட பிரஞ்சுப் போர்க் கப்பலின் தளபதி அவர். நகரின் எந்தப் பக்கத்திலிருந்து பார்த்தாலும், அவருடைய கப்பல்கள் கண்ணுக்குத் தெரியும். அவற்றின் பீரங்கிக் குழாய்களின் அடி மூடிகள், கரையிலே கிடந்தன; அவற்றின் அடிப்பாகத்தில் சிப்பிகள் அப்பிக் கிடந்தன; அவற்றில் இருந்த எண்ணெய் சொற்ப தூரம் ஓடுவதற்கு மட்டுமே போதியதாய் இருந்தது. என்றுலும், யுத்தத்திலே உபயோகித்தால், பலமாக அடிக்கும் சக்தியுள்ள முக்கிய சாதனங்களாகவே, இன்னும் அவை காணப்பட்டன. பிரெஞ்சுக் குடியானவர்கள் தங்கள் சேமதனத்தையெல்லாம் கொட்ட, பிரெஞ்சு எஞ்சினீயர்களும் மாலுமிகளும் தங்கள் திறமையெல்லாம் செலுத்திக் கட்டிய அந்தப் பிரம்மாண்ட

மான நாச யந்திரங்கள், இதோ பயனற்று, நொண்டியாய், மானமிழந்து கிடக்கின்றன ; பிரான்ஸோ இன்னும் நாஜி களுக்கு அடிமையான வண்ணம் இருக்கிறது. இந்தக் காட்சி, ஒரு பரிதாபமான உண்மையை ஞாபகமூட்டிற்று. இந்தப் போர், இன்னமும் ஒரு குழப்பமான, கேவலமான வியாபார மாய்த்தான் இருக்கிறது ; இதிலே இன்னுங்கூட ஏராளமான மனிதர்களும் கோஷ்டிகளும், எந்தக் கட்சியில் சேர்வதென்று புரியாமலே விழிக்கிருர்கள் என்பதுதான் அந்த உண்மை.

அட்மிரல் காட்பிராய் நல்ல இங்கிலீஷ் பேசினுர். உயர் தரமான, தகுதிவாய்ந்த, ஒரு பிரெஞ்சு அதிகாரியாகவே, அவர் எனக்குத் தோன்றினுர். அவரை எனக்கு அறிமுகப் படுத்திவைத்த பிரிட்டிஷ் அதிகாரிகளும், எனக்கு இந்த அபிப்பிராயத்தை ஊர்ஜிதம் செய்தார்கள். பிரான்ஸில் நிகழ்ந்த நிகழ்ச்சிகளின் போக்கால், அவர் மனம் புண்ணுகி யிருந்தது. தமது அதிகார பதவியில் தாம் அடங்கி நடக்க வேண்டிய கட்டுப்பாடு ஒன்றுதான் அவருக்குத் தெரியும். வேறே இந்த யுத்தத்தின் அர்த்தத்தைப்பற்றியெல்லாம் அவர் ஒன்றும் படித்ததில்லே. 1940-ஆம் ஆண்டு ஜூன் மாதத்துக்குப் பிறகு, பிரெஞ்சுக் கப்பல்கள்மீது, பிரிட்டிஷ் யுத்தக் கப்பல்கள் எடுத்துக்கொண்ட நடவடிக்கையால், அவர் மனத்திலே ஆழமான கசப்பு ஏற்பட்டிருந்ததென்று தெளிவாய்த் தெரிந்தது. ஆனுல், ஐக்கிய அமெரிக்காவிடம் தாம் பெரிதும் நட்பாகவே யிருப்பதாக, அவர் தெரிவித்தார்; நாம் ஜயிக்கவேண்டும் என்றும் அவர் விரும்பினுர். "மார்ஷல் பீத்தான் உயிரோடிருக்கும் வரையில், அவர் இடும் கட்டளை களுக்குத்தான் நான் பணிவேன்" என்று அவர் சொன்னுர். என்ருலும், தம் சொந்த உணர்ச்சிகளேயும் தமக்குக் கீழுள்ள மாலுமிகளின் உணர்ச்சிகளேயும்பற்றி அவர் சொன்ன விவரங்களிலிருந்து, ஒன்று தெளிவாய்த் தெரிந்தது; அமெரிக்கப் படைகள் வரும் என்று அவர் நம்பினுராம். அவை வந்திருந்தால், தம்முடைய கப்பற் படைகள், பெயருக்கு மட்டுந்தான் எதிர்த்திருக்கும் என்று, அவர் குறிப்பாய்ச் சொன்னுர்.

டார்லானிடம் தொடர்புகொள்ளாமல், நாம் அமெரிக்கர் என்ற முறையில் நேரே சென்றிருந்தால், பிரெஞ்சுக்காரரால் அவ்வளவு நஷ்டம் வந்திருக்கும், என்று என்ன என்னவோ கதைகள் சொல்லுகிறார்கள். அட்மிரல் காட்பிராயுடனும், வேறு சில பிரெஞ்சு அதிகாரிகளோடும், வட ஆப்பிரிக்காவில் உள்ள ஸோல்ஜர்களிடமும் பேசிய பிறகு, இந்தக் கதைகளை யெல்லாம் அப்படியே முழுவதும், நான் ஒருபோதும் ஒப்புக்கொள்ளவில்லை. சில கதைகளை உண்மையென்று ருசுப்பிக்கவும் முடியாது ; தவறென்று நிரூபிக்கவும் முடியாது. ராஜீயக் கொள்கை ஒன்றை ஆதரிப்பதற்காகவே அந்தக் கதைகள் கிளம்புகின்றன. இப்பேர்ப்பட்ட கதைகளைக் கண்டால், எனக்கு எப்போதும் சந்தேகந்தான்.

அலெக்ஜாண்டிரியாவைப்பற்றிய என்னுடைய இரண்டாவது ஞாபகம் ஒரு விருந்து. அட்மிரல் ஹார்வுட் என்பவர் வீட்டில் அது நடந்தது. தென் அமெரிக்கக் கடலில் கிராப் ஷ்பா என்ற கப்பலோடு மகத்தான போர் நடத்திய எக்ஸெட்டர் என்ற கப்பலின் வீரர் அவர். இப்போது, மத்தியதரைக் கடலின் கீழ்ப்பாகத்திலுள்ள பிரிட்டிஷ் கடற்படைக்கு, அவர் அதிபதியா யிருக்கிறார். கடற்படையிலும் ஸ்தானிகர் காரியாலயத்திலும் அலெக்ஜாண்டிரியாவில் உத்தியோகம் பார்ப்பவர்களான தம் சகாக்கள் பத்துப் பேரை, எங்களோடு விருந்துண்ண அவர் அழைத்திருந்தார். விருப்பு வெறுப்பற்ற முறையில், நாங்கள் யுத்தத்தைப்பற்றிப் பேசிக்கொண்டிருந்தோம். சண்டையில் ஈடுபட்ட உத்தியோகஸ்தர்கள் எல்லாரும், உலகெங்குமே இப்படித்தான், யாரோ மூன்றும் மனிதர்களைப்போல, யுத்தத்தைப்பற்றிப் பேசுகிறார்கள். பின்னால், எங்கள் சம்பாஷணை, அரசியலில் திரும்பியது. அவர்கள் அனைவரும், பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் அநுபவம் முதிர்ந்த திறமை மிக்க நிர்வாகிகள். வருங்காலத்தைப்பற்றி அவர்கள் என்ன எண்ணியிருக்கிறார்கள் ? முக்கியமாய், வருங்காலத்தில் நம் காலனிகளின் நிர்வாகம் எப்படி யிருக்கும் ? கீழ்நாட்டின் பற்பல ஜனங்களுடனும், நம்முடைய கூட்டான உறவுகள்

எவ்விதமிருக்கும்? இதைப்பற்றி அவர்களின் மனத்தை அறிய, நான் விரும்பினேன்.

ரட்யார்ட் கிப்ளிங்கின் மனோபாவத்தைத்தான், அவர்களிடம் கண்டேன். அதில், ஸெஸில் ரோட்ஸ் அவர்களின் தாராளங்கூடக் கலக்கவில்லை. லண்டனிலும் பிரிட்டிஷ் சாம்ராஜ்யம் எங்கும் உள்ள பல இங்கிலீஷ்காரர்கள், இந்தப் பிரச்னைகளுக்குப் பரிகாரங் காணக் கஷ்டப்பட்டு உழைத்து வருவதை, நான் அறிவேன். உதாரணமாக, அவர்களில் பலர், பழைய 'தர்மகர்த்தா' சித்தாந்தத்தை விட்டு, அதிகமான 'சுய ஆட்சி' வழங்கக்கூடிய ஒரு வழியைக் காண முயன்றுகொண்டிருக்கிறார்கள். ஆனால், லண்டனில் உருவாகும் கொள்கைகளை நிர்வாகத்துக்குக் கொண்டுவரும் இந்த மனிதர்களோ, உலகம் மாறி வருகிறது என்பதைப் பற்றிய சிந்தனையே இல்லாதவர்களா யிருக்கிறார்கள்.

பிரிட்டிஷ் காலனிகளின் நிர்வாக முறை, குறைபாடுகளுடையதென்று அவர்களுக்கும் தெரிகிறது. அதை ஏதாவது மாறுதல் செய்யலாமே? அதைப்பற்றி மாத்திரம், அவர்களில் எவரும் நினைத்ததே யில்லை என்றுதான் எனக்குத் தோன்றியது. அவர்களில் பலரும் அட்லாண்டிக் சாசனத்தைப்பற்றிப் படித்திருக்கிறார்கள். என்றாலும், தங்கள் உத்தியோகங்களையும் சிந்தனையையும், அந்தச் சாசனம் பாதிக்கக்கூடும் என்ற யோசனை, அவர்களுக்கு உதிக்கவே யில்லை. அன்று மாலை என் மனத்திலே, ஒரு திட நம்பிக்கை ஏற்பட்டது. மத்தியக்கிழக்கில், அடுத்தாற்போல் நான் கழித்த நாட்களில், அந்த நம்பிக்கை, பின்னும் பலமடைந்தது. அது இதுதான் : உலகின் வெகு தொலைவான மூலைகளில் எல்லாம் நடக்கும் இந்த யுத்தத்திலே, போர்க்களத்தில் கிடைக்கும் அற்புதமான வெற்றிகளால் நமக்கு வெற்றி கிடைத்து விடாது ; கீழ்நாட்டு மக்களோடு நமக்கு உள்ள உறவுகளை நிர்வகிப்பதில் புதிய கருத்துக்களும் புதிய மனிதர்களும் வேண்டும் ; அவர்களால்தான் ஜயம் சம்பாதிக்க இயலும்; அந்த ஜயம் இல்லாதவரையில், எந்தச் சமா

தானமும், முன் மாதிரியே மற்ருெரு தாற்காலிக யுத்த நிறுத்தமாகவே முடியும்.

அடுத்த நாள், நாங்கள் காரில் கெய்ரோவுக்குத் திரும்பிச் சென்ருேம். பரூக் மன்னர், பிரதம மந்திரி, எகிப்தில் பிரிட்டிஷ் ஸ்தானிகரும் உண்மையில் எகிப்தை ஆள்பவரு மான மைல்ஸ் லாம்ப்ஸன் ஆகியவர்களுடன், நீண்ட சம்பாஷணைகள் நடத்துவதற்காகவே, கெய்ரோவுக்குச் சென்றேன். போகும் வழி முழுவதும், பழைமையும் புதுமை யும் கலந்த விசித்திரக் கலவையான காட்சிகளைக் கண்டோம். சாரி சாரியாக, வெகு நீளம் ஒட்டகங்கள் சென்றன. அவற்றிலே, நைல் பள்ளத்தாக்கின் விளைபொருள்களை ஏற்றிக்கொண்டு, சுதேசிகள் சவாரி செய்தார்கள். அந்த ஒட்டகங்களின் பக்கத்திலே, நவீன மோட்டார்கள், வரிசை வரிசையாகச் சென்றன. நவீனத் தொழிற்சாலைகளில் பழுது பார்ப்பதற்காக, சண்டை விமானங்களை, அந்த லாரிகள் கெய்ரோவுக்கு இழுத்துச் சென்றுகொண்டிருந்தன. தூரத் திலே, எகிப்தின் புராதனப் பெருமையை ஞாபகமூட்டும் சின்னங்களான ‘ஸ்பிங்ஸ்’ (பெண்ணின் தலையும் சிங்க உடலும் உள்ள பெருஞ் சிலை), ‘பிரமிட்கள்’ (பெரும் கோபுரங்கள்) ஆகியவை, எப்போதும் எங்களுக்குத் தென் பட்டுக்கொண்டே யிருந்தன.

---

## 2. மத்தியக் கிழக்கு

கெய்ரோவிலிருந்து டெஹ்ரானுக்கு, வியாபாரப் பாதைகள் வழியாக, நாங்கள் பறந்தோம்; நமது நாகரிகம் எவ்வளவு பழமையானதோ அவ்வளவு பழமையான நகரங் களின் மேலே பறந்தோம்; ஆயிரக்கணக்கான ஆண்டுகளிலே ஏற்பட்ட நானுவிதக் காட்சிகளும் எதிரிடைகளும்அவற்றிலே தென்பட்டன. நைல் பள்ளத்தாக்கில், கண்ணைக் கட்டிய நீர் எருமைகள், பாசனத் தண்ணீர்ப் பம்புகளைச் சுற்றிச் சுற்றி எல்லையற்ற வட்டங்கள் இட்டு நடந்துகொண்டிருந்தன.

எகிப்தில் நான் கண்ட பிரம்மாண்டமான அமெரிக்க ரிப்பேர் டெப்போக்களுக்கும் இவற்றுக்கும் எந்தச் சம்பந்தமும் இருப்பதாக, அப்போது எனக்குத் தோன்றவில்லை. அரை வயிறு உண்டு எலும்பும் தோலுமான குழந்தைகள், புராதனமான எருசலேம் நகரின் அசுத்தமான தெருக்களில் விளையாடிக் கொண்டிருந்தன. பீரட்டின் விமான தளத்தில், வாலிபப் பிரெஞ்சு வீரர்கள் கூடியிருந்தார்கள். பாக்தாத் நகரப் போர்வைத் தொழிற்சாலையில், பத்து வயதுக்குட்பட்ட சிறுவரும் சிறுமிகளும் வேலை செய்துகொண் டிருந்தார்கள். போலந்திலிருந்து ஓடி வந்த மக்கள், டெஹ்ரான் நகருக்கு வெளியே பிரம்மாண்டமான முகாம்களில் தங்கி யிருந்தார்கள். மத்தியக் கிழக்கு என்று நாம் அழைக்கும் இந்தப் பிரதேசத்தில் நான் கண்ட முதல் காட்சி, இவ்வாறு பல எதிரிடைகளுடன், வர்ணங்கள் நிறைந்து, ஒரு குழப்பமான சித்திரமாயிருந்தது.

நவீன காலப் பிரயாணி ஒருவன், விமானத்திலே ஆகாயத்தில் பறக்கும்போது, ஒரு தங்கலுக்கும் மறு தங்கலுக்குமிடையே, தான் பறந்து செல்லும் பூமியைத் தன் மனத்தில் படம் வரைந்துகொள்ளச் சாத்தியமாகிறது. பீரட்டிலிருந்து, விட்டா, பாக்தாத், டெஹ்ரான் ஆகிய இடங்களுக்கு, நீண்ட நீண்ட பிரயாணங்கள் செய்தோம். ஆகையால், அவற்றை ஒன்றுடன் ஒன்று ஒப்பிட்டு, மனத்தில் பதிந்த தோற்றங்களைத் தரப்படுத்திச் சொல்ல முடியும்.

மத்தியக் கிழக்கைப்பற்றித் தட்சணமே கவனிக்க வேண்டிய அவசரமான பல கேள்விகளை, என்னை நானே கேட்டுக்கொண் டிருந்தேன். ஈரானிலிருந்து ஸோவியத் யூனியனுக்கு நாங்கள் புறப்படுமுன், அந்தக் கேள்விகளில் சிலவற்றிக்கு என்ன பதில் என்பதை, எனக்குள்ளே தீர்மானித்துக் கொண்டுவிட்டேன்.

முதலாவதாக, இந்த ஜனங்கள் அனைவரும் நம்மிடம் காட்டும் எதிர்ப்பைவிட, நமக்கு அவர்கள் காட்டும் ஆதரவே அதிகமாகும் என்று, எனக்கு நிச்சயம் உண்டாகிவிட்டது. இதற்கு ஒரு காரணம், அமெரிக்கா அவர்களுக்குத் தொலைவி

விருப்பதும், அவர்கள்மீது எந்தவித ஆதிக்கமும் செலுத்தா மலிருப்பதுந்தான். இடையிலே ஒரு வார்த்தை. ஈரானில் இன்னுங்கூட ஜெர்மானியருக்கு ஆதரவு இருப்பதற்கு முக்கியமான காரணமும் இதுதான். நம்மிடம் அந்த ஜனங்கள் காட்டும் ஆதரவுக்கோ, இன்னுமொரு காரணம் உண்டு. யுத்தத்திலே அமெரிக்கா சேர்ந்துவிட்டதால் தாற்காலிகமாக என்ன தோல்விகள் ஏற்பட்டாலும், காலக்கிரமத்தில் ஐக்கிய நாடுகளே முடிவாக வெற்றியடையும் என்று, ஏராளமான ஜனங்களுக்கு நிச்சயம் ஏற்பட்டுவிட்டது. வேறு வார்த்தைகளில் சொன்னால், மத்தியக் கிழக்கு நாடுகளின் இந்த ஜனங்கள், மகா அலெக்ஜாந்தர் காலத்திலிருந்து தொடர்ச்சியாய்ப் பல வீரர்களால் படையெடுத்து ஜயிக்கப் பெற்று வந்திருப்பவர்கள். ஆகையால், அவர்களுடைய யோசனை, மிக்க அநுபவ சாத்தியமான வழியிலேயே பெரிதும் செல்லுகிறது. எப்படியாவது உயிர் வாழ வேண்டுமென்னும் உணர்ச்சி வேறே இருக்கிறது. ஆகவே, முடிவு எப்படி ஆகப் போகிறது என்று நிதர்சனமாய் விளங்கும் முன்பாகவே, ஜயிக்கப்போகிற கட்சியைத் தங்கள் கட்சியாக அவர்கள் தேர்ந்தெடுத்துக்கொண்டு விடுகிறார்கள்.

இரண்டாவதாக, அநேகமாய் நான் போய்ப் பார்த்த சகல இடங்களிலுமே ஏதோ ஒருவிதமான புரட்சி ஏற்பட்டு வருகிறது என்றும் எனக்கு நிச்சயமுண்டாயிற்று. எவ்வளவு கண்டிப்பான நடுநிலைமையை வேண்டுமானாலும் அவர்கள் வகிக்கலாம். என்றாலும், இந்தப் பிரதேசத்தில் வசிக்கும் சர்வ ஜனங்களிடமும் இந்த யுத்தத்தால் ஏற்பட்டுவரும் ஆழ்ந்த, பலமான மாறுதல்களை, அதனால் தடுக்க முடியாது. அவர்களுடைய வாழ்க்கை, சென்ற பத்து நூற்றாண்டுகளில் மாறியதைவிட மிக அதிகமான மாறுதலை, அடுத்த பத்து ஆண்டுகளில் அடைந்துவிடும்.

மூன்றாவதாக, அந்த மாறுதல்கள் தாமாகவே நமக்குச் சாதகமாய் நிகழும் என்பதற்கான எந்தவித உத்தரவாதத்தையும் நான் காணவில்லை. நம் மேல்நாட்டு ராஜீய சித்தாந்தங்களின் மந்திர சக்தியைப்பற்றி, அநேக முஸ்லீம்

கள், அநேகம் அரபியர், அநேகம் யூதர், அநேகம் ஈரானியர் ஆகியவர் மனத்திலெல்லாம் பலமான சந்தேகம் தோன்றி விட்டது. ஏறக்குறைய ஒரு தலைமுறையாக அவர்கள் நம்மை மிக நெருங்கிக் கவனித்து வந்திருக்கிறார்கள். நமக்குள் நாமே ஒருவரோடொருவர் சண்டையிட்டு வருவதை அவர்கள் கண்டு வருகிறார்கள். நம் சொந்த நம்பிக்கைகளின் மீது அமைந்துள்ள சமூக அமைப்பின் அஸ்திவாரத்தை, அவர்கள் சந்தேகிக்கிறார்கள். எங்கே பார்த்தாலும், மரியாதையான, ஆனால், சந்தேகம் நிரம்பிய, ஜனங்களை நான் கண்டேன். அவர்களுடைய பிரச்னைகளையும் சிரமங்களையும்பற்றி நான் கேட்ட கேள்விகளுக்குப் பதிலாக, நம்முடைய பிரச்னைகளையும் சிரமங்களையும் பற்றி, மரியாதையாக, ஆனால் கேலியாக, என்னை அவர்களும் கேள்விகள் கேட்கத் தொடங்கினார்கள். அமெரிக்காவில் இருக்கும் நிறவேற்றுமைக் கொடுமைகளைப் பற்றி அடிக்கடி கேட்டார்கள். நான் சந்தித்துப் பேசிய ஒவ்வொரு சர்க்கார் அதிகாரியும், விஷ்ஷி சர்க்காரிடம் நமது உறவைப்பற்றி ஆச்சரியப்பட்டார்கள். சுதந்தரத்தைப்பற்றி நாம் சொல்லும் கூற்றுகளுக்கு என்ன அர்த்தம்? புதிய, முன்னிலும் விஸ்தாரமான, மாண்ட்டேட் பிரதேசங்கள் சிருஷ்டியாகப் போகின்றன என்றுதான் அர்த்தமோ என்பதாக, அரபியரும் யூதரும் ஐயங்கொண்டிருக்கிறார்கள். மாண்டேட் பிரதேசம் என்றால், அந்நியரின் கொடுங்கோல் என்று தான், லெபனான், ஸிரியா, பாலஸ்தீன் ஆகிய நாடுகளில் உள்ளவர்—அது சரியோ பிழையோ—எண்ணுகிறார்கள்.

முடிவாக, மத்தியக் கிழக்குப் பிரதேசத்தில், நான் சென்ற இடமெல்லாம், நவீனத் தொழில் சூட்சுமங்களில் பிற்போக்கும் வறுமையும் அசுத்தமும் தாண்டவமாடக் கண்டேன். இந்த மாதிரி அபிப்பிராயம் சொல்லும் எந்த அமெரிக்கனும், ஸ்நானத் தொட்டியே ஞாபகமாய்ப் பேசுகிறான் என்ற குற்றச்சாட்டுக்கு உள்ளாவான் என்பதை நான் அறிவேன். ஆனால், எருசலேமில் இருக்கும்போதுதான் முதல் முதலாக ஒரு விஷயத்தை அறிந்தேன். பைபிள் காலத்துக்குத் திரும்பி வந்திருக்கிறோம் என்ற உண்மையான

உணர்ச்சியோடு, வேறு எத்தனை அமெரிக்கர்கள் அங்கே சென்றிருக்கிருர்கள் என்பதை அறிந்தேன். அதன் காரணம் என்ன என்ருல், உண்மையிலேயே பைபிள் காலத்துக்குத் தான் அவர்கள் திரும்பிச் சென்றிருக்கிருர்கள்; ஏனெனில், இரண்டாயிரம் வருஷங்களாக, அற்ப மாறுதலும் அடையாத இடம் அது. நவீனமான ஆகாய விமானங்கள், நீண்ட எண்ணெய்க் குழாய்கள், கப்பி ரஸ்தாக்கள், தண்ணீர்ப் பம்புகள் எல்லாந்தான் இருக்கின்றன. இவை அத்தனையும், மெல்லிய மேலுறைபோல், அவர்களது வாழ்க்கையின் மேல் மட்டத்திலேயே நின்றுவிட்டன. அடிப்படையில் அவர்களின் ஜீவியம், மேல்நாட்டார் வருமுன்பு எவ்விதம் இருந்ததோ அவ்விதமே, எளிமையும் கடினமுமாகத்தாள் இன்றும் இருந்து வருகிறது. பின்வரும் சில முக்கிய அம்சங்கள் மட்டுமே, இதற்கு விலக்கா யிருக்கின்றன. யூதர்கள் நடத்தும் உலக இயக்கத்தின் மேற்பார்வையில் நடைபெறும் கைத்தொழில்-விவசாய-கல்வி அபிவிருத்திகளும், பாக்தாதைப் போல் அரபியர் ஒரளவு சுய ஆட்சி பெற்றிருக்கும் இடங்களுமே அப்படி விலக்காகும்.

இந்த ஜனங்களுக்கு, வெவ்வேறு அளவில், வெவ்வேறு விதங்களில், நான்கு விஷயங்கள் தேவை என்று எனக்குத் தோன்றியது. அவர்களுக்கு அதிகமான கல்வி தேவை. அதிகமான சுகாதாரச் சேவை தேவை. அதிகமான நவீனக் கைத்தொழில் தேவை. சுதந்தரத்திஞலும் சுய ஆட்சியிஞலும் கிடைக்கத்தக்க அதிகமான சமூக கௌரவமும் சுய நம்பிக்கையும் தேவை.

யுத்தத்தைப் பார்க்கச் சென்றபோது இடையே நேரிட்ட பிரயாணமா யிருந்தாலும் சரிதான்; நைல் நதிக் கரையிலே பிரயாணம் செய்யும் எவனுக்கும் ஒரு விஷயம் விளங்காமல் போகாது: எகிப்திய ஜனங்கள் வீரமுள்ளவர்கள் என்று சரித்திரம் சொல்லுகிறது; அவர்களுக்குக் கல்வி புகட்டிஞல், அவர்கள் இழந்த தேசிய வீரத்தைத் திரும்பவும் அவர்கள் பெறுவதற்கு அது எத்தனை உதவியா யிருக்கும்! அந்த நாட்டிலே, பல கலாசாலைகள், ஆரம்பிக்கப்பெற்றிருக்

கின்றன. அதற்கு அமெரிக்கரும் இங்கிலீஷ்காரரும் உதவி யிருக்கிறார்கள். பரூக் மன்னர், பிரதம மந்திரி நாஹாஸ் பாஷா முதல், பல எஞ்சீனீர்கள், டாக்டர்கள் வரையில், உலகில் எங்கேயும் கல்விமான்கள் என்று அங்கீகரிக்கப் பெறக்கூடிய பல எகிப்தியர்களை நான் சந்தித்தேன். ஆயினும், எகிப்திலோ, துருக்கி நீங்கலாக மத்தியக் கிழக்கிலே உள்ள வேறெந்த நாட்டிலேதானோ ஒரே ஓர் இடத்தில்கூட, தேசீயப் பெருமையோடு சுதேசக் கலாசாலை ஒன்றையேனும் எனக்குக் காட்டுவாரைக் காணவில்லை. ஓர் அமெரிக்கப் பெண்மணியால் நடத்தப்படும், ஒரே ஒரு பெண் பள்ளிக்கூடத்தை மட்டும்தான் என்னைப் பார்க்கும்படி வற்புறுத்தினார்கள். எவ்வளவோ அதைரியப்படுத்தப் பெற்றும், முப்பது வருஷ காலமாக எகிப்திய அநாதைப் பெண்களுக்குக் கல்வி போதித்துவர, அந்தப் பெண்மணி முயற்சி செய்து வருகிறாள்.

நான் சென்ற ஒவ்வொரு வரவேற்பு உபசாரக் கூட்டத் திலும், பாஷாக்களைச் சந்தித்தேன். அவர்களில் பலர், அயல் நாட்டுப் பெண்களை மணந்திருந்தார்கள். பழகுவதற்கு, பாஷாக்கள் வசீகரமானவர்கள்; சரளமானவர்கள். பொது ஸ்தலமான சதுக்கங்களிலெல்லாம், அவர்களுடைய உருவச் சிலைகள் நிரம்பியிருக்கின்றன. 'பாஷா' என்பது ஆட்டொமான். சாம்ராஜ்ய காலத்திலேயிருந்து வந்திருக்கும் பட்ட மாகும். சாம்ராஜ்யத்துக்குச் சிறப்பான சேவை செய்த ராணுவத் தலைவர்களுக்கோ, மாகாண கவர்னர்களுக்கோ முன்காலத்தில் அந்தப் பட்டத்தை வழங்கிவந்தார்கள். இப்போதோ மன்னர் அளிக்கும் ஒரு கௌரவப் பட்டமாக அது வழங்கி வருகிறது. பாஷா எப்போது பிரசன்னமானாலும் சரிதான்; அவருக்கு எகிப்தியர்கள் உண்மையிலேயே ரத்தினக் கம்பளம் விரித்துப் போட்டுச் சகல பணிவிடை களும் புரிகிறார்கள். ஏனெனில், அப்படி வேலை வாங்கப் போதிய பணம், பாஷாக்களிடம் இருக்கிறது.

ஆனால், எனக்கு விருந்தளித்த ஓர் எகிப்திய வாலிபப் பத்திரிகைக்காரரை "ஏதாவது உயர்ந்த நூல் ஒன்றை

எழுதியவனுக்குப் பாஷா பட்டம் கிடைக்குமா?" என்று நான் கேட்டேன். "கிடைக்குமென்றே நினைக்கிறேன். என்றாலும், எகிப்தில் யாருமே புத்தகங்கள் எழுதுவதுதான் கிடையாது" என்று அவர் பதிலளித்தார்.

"சித்திரங்கள் தீட்டி, பாஷா பட்டம் பெறமுடியுமா?" என்று நான் வினவினேன். "ஏன் பெறக்கூடாது? பெறலாம். ஆனால், இங்கே யாருமே சித்திரங்கள் தீட்டுவதுதான் இல்லை" என்பது அவர் பதில்.

"பிரமாதமான புதிய விஷயங்களைக் கண்டுபிடிக்கும் யாராவது அறிஞன், என்றேனும் பாஷா பட்டம் பெற்ற துண்டா?" என்று கேட்டேன். "எனக்குத் தெரிந்தமட்டும். பரோவா மன்னர்களுக்குப் பிறகு, அப்படிப் பிரமாதமான புது விஷயங்களைக் கண்டுபிடித்தவன் யாருமே எங்களுக்குள் இல்லை" என்றுதான் மறுபடியும் பதில் வந்தது.

கலைகளில் ஏன் இங்கே இந்த மலட்டுத்தனம் நேர்ந்திருக்கிறது என்ற காரணங்கள் அனைத்தையும் அறிய, போதுமான அளவு நீண்ட காலம் எகிப்தில் நான் தங்கியிருக்கவில்லை. எகிப்துக்குள்ளேயே சகல நாட்டினரும் கலந்து வாழும் மிகப் பெரிய நகரம் கெய்ரோதான். அங்கே, கலைகளும் கல்வியும் அந்நியர் ஆதிக்கத்தில் இருக்கின்றன. இது, அந்த மலட்டுத்தனத்துக்கு ஒரு காரணமா யிருக்கலாம். அன்றியும், எகிப்தில் மிக்க வளமுள்ள நிலமெல்லாம், ஒரு சிறிய கோஷ்டியாரான பாஷாக்களுக்கே பெரும்பாலும் சொந்தமா யிருக்கிறது. அவர்களோ அநேகமாக அரசியல் சேவைகூடச் செய்யாமல், தங்கள் செல்வத்தைக்கொண்டே பட்டங்கள் பெற்றவர்களா யிருக்கிறார்கள். இதுவும், ஒரு காரணமா யிருக்கலாம்.

ஆனால், மற்றொன்று முக்கியமான காரணமாய்த் தோன்றுகிறது. நடுத்தர வகுப்பார்களே கொஞ்சங்கூட இல்லாதிருப்பதுதான் அந்தக் காரணம். மத்தியக் கிழக்கு நாடுகள் அனைத்திலுமே, தனவந்தர்களான மிராசுதார்கள், ஜனத்தொகையில் மிகச் சிறு சதவிகிதந்தான் இருக்கிறார்கள். அவர்களுடைய சொத்து பெரும்பாலும் பிதுரார்ஜிதமானது.

அவர்களில் பலரை நான் சந்தித்தேன். எந்தவித அரசியல் இயக்கத்திலும் அவர்களுக்கு அக்கறை இருப்பதாய்த் தெரியவில்லை. அவர்களுடைய அந்தஸ்தைப் பாதிக்கக் கூடியதா யிருந்தால் மட்டும் அக்கறை காட்டுகிறார்கள். நாடோடி ஜாதிகளைத் தவிர மிக ஏராளமான பாமர ஜனங்கள் ஏழைகளா யிருக்கிறார்கள். அவர்களுக்குச் சொத்தே கிடையாது. அருவருக்கத்தக்க புராதனமான புரோகிதச் சடங்குகளுக்கு, அவர்கள் அடிமைப்பட்டுக் கிடக்கிறார்கள். பொதுவாகவே, புதுமைகளைச் சிருஷ்டிக்க வேண்டுமென்ற ஊக்கமும் அதற்குத் தேவையான பலமும், மிதமிஞ்சிய சொத்துள்ளவர்களுக்கு வருவதில்லை; ஒன்றுமே யில்லாத தரித்திரர்களுக்கும் வருவதில்லை; இந்த இரண்டு வகுப்பார் களுக்கும் இடைப்பட்டவர் யாருமே, மத்தியக்கிழக்கு நாடு களில் இல்லை.

என்றாலும், இந்த நாடுகளிலே, ஒரு கிளர்ச்சி நிகழ்ந்து கொண்டிருப்பது எனக்குப் புலனாயிற்று. நீண்ட காலமாய் உறங்கிக் கிடந்த பாமர ஜனங்கள், இருளை விட்டு வெளிப்பட வழிதடவத் தொடங்கியிருக்கிறார்கள். சமயச் சடங்குகள், சம்பிரதாயங்கள் என்ற கட்டுப்பாடுகளை யெல்லாம் உதறித் தள்ளும் மனோபாவம், வரவர அதிகமாய் அவர்களிடம் வளர்ந்து வருகிறது. இது அதிசயமாய்த் தோன்றலாம். ஒவ்வொரு நகரத்திலும் அமைதியற்று, ஊக்கமாய் உழைக்கும், படித்த வகுப்பு வாலிப கோஷ்டிகளை நான் கண்டேன். பெரும்பாலும் சிறிய கோஷ்டிகள்தாம். ருஷ்யாவில் நடந்த சர்வஜன இயக்கத்தின் தந்திரங்களை யெல்லாம் அவர்கள் அறிந்திருக்கிறார்கள். அந்தத் தந்திரங் களைப்பற்றி அவர்கள் பேசவும் பேசுகிறார்கள். நமது சொந்த ஜனநாயக ஆட்சி முறை உருவான சரித்திரமும் அவர்களுக்குத் தெரிந்திருக்கிறது. அவர்களுடைய லட்சியங் கள் தீவிரமானவை; வெறி பிடித்தவை. அந்த லட்சியங்களை அடைய, என்ன வழியைக் கடைப்பிடிப்பது என்று அவர்கள் யோசித்துக்கொண் டிருக்கிறார்கள். அவர்களோடு நான்

செய்த சம்பாஷணையில், எனக்கு இவ்விதம்தான் தோன்றியது.

இன்னென்று: ருஷ்யாவிலும் சீனுவிலும் மற்றும் பல இடங்களிலும் கண்டதுபோலவே, தாபம் மிகுந்த தேசிய உணர்ச்சியொன்று இங்கேயும் வரவர அதிகமாய் வளர்ந்து வருவதைக் கண்டேன். இந்த உணர்ச்சிக்கு நேர் எதிரான உணர்ச்சியிலேதான் உலகத்துக்கு விமோசனம் உண்டு என்று நம்பும் ஒருவனுக்கு, இது கவலேதான் தருகிறது.

ஒரே விதமான அதிருப்தி, பசி, ஆத்திரங்களே இராக், லெபனுன், இரான் எல்லா இடங்களிலும் நான் கண்டேன். அந்த மக்களின் பிரச்னையை அங்கீகரிப்பதில், அதிகாரிகள் எங்கும் ஒரே விதமாகவே காலதாமதம் செய்வதையும் நான் கண்டேன். அந்த நாடுகளின் பிரதம மந்திரிகளும், அவற்றின் அயல் நாட்டு விவகாரங்களேக் கவனிக்கும் மந்திரிகளும் புத்திமான்கள்; திறமைசாலிகள். அப்படியிருந்தும் இந்தக் கால தாமதம் நிகழ்கிறது.

பீரட், டெஹ்ரான், கெய்ரோ ஆகிய நகரங்களில், எவர் வேண்டுமானுலும் வந்து படிக்கத் தக்க கலாசாலேகளே, அமெரிக்கர்கள் அமைத்து, நிர்வகித்து, உதவிபுரியத் தொடங்கி யிருக்கிருர்கள். பீரட்டில் உள்ள அமெரிக்கச் சர்வகலாசாலேயின் அக்கிராசனரான பேயார்ட் டாட்ஜ் என்பவருடைய தோட்டத்தில், நான் அவரோடு டீ குடித்தேன். போரிடும் பிரெஞ்சுக்காரர்களின் தலேவரான தளபதி டிகால், அவர்களின் பிரதிநிதித்துவத் தலேவரான தளபதி காட்ரூ, பிரிட்டிஷ் ஸ்தானிகரான மேஜர் ஜெனரல் லூயி ஸ்பீயர்ஸ் ஆகியவர்களேயும் அன்று தினமே நான் சந்தித்தேன். ஸிரியா, லெபனுன் இரண்டின் வருங்காலத்தைப் பற்றியும் அவர்கள் ஒவ்வொருவருடனும் நான் சம்பாஷித்தேன். ஆனுல், மற்ற எல்லாரையும்விட டாக்டர் டாட்ஜ் தான் அந்தப் பிரதேசங்களின் வருங்காலத்தைப்பற்றி எனக்கு அதிக நம்பிக்கை அளித்தவர் என்று சொன்னுல் மிகையாகாது.

என்றாலும், நான் தளபதி டிகாலைப் பார்க்கச் சென்ற சம்பவத்தை, ஒருகாலும் மறக்கமாட்டேன். வர்ண யூனிபாரம் உடுப்பணிந்த காவலர்களும், பாண்டு வாத்தியக் காரர்களும் பீரட் விமான நிலையத்துக்கு வந்து, என்னைச் சந்தித்து வரவேற்றார்கள். பாண்டு வாத்தியத்தை முழங்கிக் கொண்டே, பல மைல் தூரம் என்னை அழைத்துச் சென்றார்கள். அங்கேதான் தளபதி வசிக்கும் வீடு இருக்கிறது. வெண்மையான பெருங்கட்டடம். சுற்றிலும் விஸ்தாரமான பூந்தோட்டம். அந்தத் தோட்டத்திலே எந்தப் பக்கம் திரும்பினாலும், காவல் வீரர்கள் நின்றுகொண்டு ராணுவ சலாம் போட்டார்கள். தளபதியின் ஏகாந்த அறையில் நாங்கள் பல மணிநேரம் சம்பாஷித்தோம். அங்கே ஒவ்வொரு மூலையிலும் ஒவ்வொரு சுவரிலும், நெப்போலியனின் சிலைகளும் சித்திரங்களும் அலங்கரித்துக்கொண்டிருந்தன. நட்சத்திர ஒளி வீசும் அழகிய பசும்புல் வெளியில் அமர்ந்தவண்ணம், வைபவமான விருந்துச் சாப்பாட்டுக்கு நடுவே, இரவு வெகுநேரம் வரையில் நாங்கள் பேசிக்கொண்டிருந்தோம்.

ஸிரியா, லெபனான் இரண்டிலும் யார் ஆதிக்கம் செலுத்துவது? தாமா, பிரிட்டிஷாரா என்பதுபற்றித் தமக்கும் பிரிட்டிஷாருக்கும் அந்த நிமிஷத்தில் நடந்துவரும் போராட்டத்தைப்பற்றி, தளபதி விளக்கிச் சொன்னார். அப்போது, இடையிடையே அடிக்கொருதரம் அபிநயங்களோடு, "நான் என் கொள்கைகளைத் தியாகம் செய்யவோ, விட்டுக் கொடுக்கவோ முடியாது" என்று கூவினார். "ஜோன் அவ் ஆர்க் மாதிரி" என்று அதற்கு முத்தாய்ப்பு வைத்தார் தளபதியின் மெய்காப்பாளர். "போராடும் பிரெஞ்சுக் காரர் இயக்கம் இருக்கிறதே, அது" என்று நான் ஏதோ சொல்லத் தொடங்கினேன். "போராடும் பிரெஞ்சுக் காரர் நடத்துவது ஏதோ ஓர் இயக்கமல்ல. போராடும் பிரெஞ்சுக்காரர்தான் பிரான்ஸ் நாடு. அகில பிரான்ஸுக்கும் அதன் சகல சொத்துக்களுக்கும், நாங்களே அனந்தர வார்சுகளாவோம்" என்று, டிகால் என்னைக்

கூர்மையாய்த் திருத்தினுர். ஆனுல், ஸிரியா சர்வதேசச் சங்க அதிகாரத்துக்கு உட்பட்ட மாண்டேட் நாடு ஆயிற்றே என்று நான் அவருக்கு ஞாபகப்படுத்தினேன். "ஆம்; அது எனக்குத் தெரியும். ஸிரியாவைத் தர்ம சொத்தாகவே என் கையில் வைத்திருக்கிறேன். சர்வதேசச் சங்கம் அளித்துள்ள மாண்டேட் அதிகாரத்தை, நான் முடித்துவிட மாட்டேன்; யாரும் முடித்துவிட இடங்கொடுக்கவும் மாட்டேன். பிரான்ஸில் மீண்டும் ஒரு சர்க்கார் ஏற்பட்ட பிறகுதான், அந்த மாண்டேட் அதிகாரத்தை முடித்துவிட முடியும். இந்த உலகத்தின் எந்த இடத்திலும், பிரெஞ்சுக்காரரின் எந்த ஒரே ஓர் உரிமையையுங்கூட, நான் விட்டுக் கொடுக்க முடியாது. ஆனுல், பிரான்ஸில் ஆதிக்கம் செலுத்துவதிலிருந்து ஜெர்மானியரையும் அவர்களின் கூட்டாளிகளையும் வெருட்டிவிட வேண்டும். அதற்கு வசதியாகப் பிரெஞ்சு உரிமைகளையும் பிரெஞ்சு நிலங்களையும் தாற்காலிகமாக மட்டும் யாரும் உபயோகித்துக் கொள்ளலாம். அவற்றை அப்படி உபயோகிப்பதற்கு என்ன வழிகள், என்ன சாதனங்கள் என்பதை ஆலோசிப்பதற்கு வேண்டுமானுல், வின்ஸ்டன் சர்ச்சில், ரூஸ்வெல்ட் இருவரோடும் உட்கார்ந்து பேச நான் முற்றும் சம்மதிக்கிறேன்" என்று அவர் சொன்னுர்.

அவர் மேலும் கூறியதாவது: "மிஸ்டர் வில்கீ, நானும் என் தோழர்களும் பிரான்ஸின் பிரதிநிதிகள் என்பதையே சில ஜனங்கள் மறந்துவிடுகிறுர்களே! பிரான்ஸின் கீர்த்தி மிகுந்த சரித்திரத்தை, அவர்கள் நினைவில் வைக்கவில்லை என்றே தோன்றுகிறது. என்னவோ இன்றைக்கு நேர்ந்திருக்கும் கிரகணத்தையே மனத்தில் வைத்துக்கொண்டு அவர்கள் பேசுகிறுர்கள்."

பின்னுல், லெபனுனின் உயர்தர அதிகாரி ஒருவரோடு நான் பேசிக்கொண் டிருந்தேன். ஸிரியா, மத்தியக் கிழக்கு இரண்டிலும் ஆதிக்கத்தைக் கைக்கொள்ள, பிரிட்டிஷாருக்கும் பிரெஞ்சுக்காரருக்கும் இடையே அப்போது நடந்துகொண் டிருந்த போராட்டத்தைப்பற்றிச் சம்பாஷித்

தேன். "எந்தப் பக்கம் உங்கள் அனுதாபம் இருக்கிறது?" என்று, அவரை நான் கேட்டேன். "இரண்டு பேருமே நாச மாய்ப் போகவேண்டும்" என்றுதான் அவர் பதிலளித்தார். ஆதிக்கம் செலுத்தும் வல்லரசு எதுவா யிருந்தாலும் சரிதான்; மாண்டேட் ஆட்சியிலோ காலனி முறையிலோ, மத்தியக் கிழக்கிலுள்ள அறிவாளிகளுக் கெல்லாம் துளியும் நம்பிக்கை யில்லை.

பீரட்டிலிருந்து எருசலேமுக்குச் சென்றேன். புது மைக்கும் பழமைக்கும் உள்ள வேற்றுமைகள், இவ்வளவு பளிச்சென்று வேறெங்குமில்லை. ஜிலுஜிலு என்று அதி வேகமாய்ப் பறக்கும் நமது நவீன விமான ஜன்னலின் வழியாய், கீழே, தெளிந்த காற்றினூடே, வெகுதூரத்திலே நாம் பார்ப்போமானால், லெபனானில் ஒரு காலத்தில் தேவதாரு மரங்கள் அடர்ந்து நின்ற குன்றுகளையும், சாக் கடலையும் கலிலேயாக் கடலையும் யோர்தான் நதியையும் ஒலிவ மலையையும் கெத்ஸமேனே தோட்டத்தையும் காணலாம்.

நான் எருசலேமில், ஸர் ஹெரால்ட் மிக் மைக்கேல் என்பவரின் விருந்தாளியா யிருந்தேன். அவர் நல்ல பயில் வான் ; சுங்கானில் புகை குடிப்பார்; பாலஸ்தீன், டிரான்ஸ், ஜோர்தான் இரண்டுக்கும் பிரிட்டிஷ் ரெஸிடெண்ட் ஹை கமிஷனராக, மிகத் திறமையோடு பதவி வகிப்பவர். புராதனமான எருசலேம் நகரை, எனக்கு அவர் காண்பித் தார். ஒரு காலனிக்கும் ஒரு மாண்டேட் பிரதேசத்துக்கும் உள்ள வித்தியாசங்கள் என்ன என்பது, ஓர் அமெரிக்கனுக்குச் சுலபத்தில் புரிவதில்லை. அந்த வித்தியாசங்களை, எனக்கு அவர், அளவிறந்த பொறுமையோடும் மிக லேசாகவும் விளக்கினார்.

ஆனால், பாலஸ்தீன் பிரச்னைகளில் உள்ள உண்மையான சிக்கல்களை நான் நேரே தெரிந்துகொள்ளும்படி ஏற்பாடு செய்தவர் எருசலேமில் அமெரிக்காவின் கான்ஸல் ஜெனர லான லோவெல்லி பிங்கெர்ட்டன் என்பவர்தான். உபசரணை நிறைந்த அவர் வீட்டுக்கு, பரஸ்பரம் போராடும் யூதர்

அராபியர்களுடைய வெவ்வேறு கூட்டங்களின் பிரதிநிதிகளையும் ஒருவர் ஒருவராய் அவர் வரவழைத்தார். ஒருநாள் முழுதும், அந்தப் பிரதிநிதிகளையெல்லாம், ஜோ பார்னெஸ், மைக் கௌலீஸ், நான் ஆகிய மூவரும் பேட்டி கண்டு பேசினோம். அந்தப் பிரதேசத்தில் பிரிட்டிஷ் படைகளின் தளகர்த்தரான மேஜர் ஜெனரல் டி. எப். மிக்கானல்; ஸர் ஹெராால்டின் நிர்வாகத்திலே ஆக்டிங் பிரதம காரியதரிசியான ராபர்ட் ஸ்காட்; யூத ஏஜென்ஸியின் அரசியல் இலாகாத் தலைவரான திறமையும் அறிவும் மிக்க மோஷே ஷெர்ட்டாக்; ஸர் ஹெராால்டின் காரியதரிசிகளுக்குள்ளே அராபிய அங்கத்தினரான ரூபி பே அப்துல்ஹாதி; தேசம் முழுவதுமே யூதர்களைச் சேர வேண்டுமென்று உரிமை கொண்டாடும் யூத ரிவிஷனிஸ்ட் இயக்கத் தலைவரான டாக்டர் ஆரீ ஆல்ட்மான்; தேசம் முழுவதும் அராபியர்களுக்குத்தான் உரியதென்று வாதிக்கும் தேசீயத் தலைவரும் அராபிய லாயருமான ஆனிபே அப்துல் ஹாதி-இவர்களெல்லாரும் வந்தார்கள். எல்லாரும் தம் தம் கதைகளை எங்களுக்குச் சொன்னார்கள்.

அன்று தினம் அஸ்தமித்தபோது, எனக்கு ஒரு யோசனை தோன்றியது: 'இந்த மகா சிக்கலான பிரச்னையைத் தீர்ப்பதற்கு, சாலமன் மன்னனைப் போல் மிக்க கடுமையான முறையைக் கைக்கொள்வது ஒன்றே வழி' என்று தோன்றியது. ஆனால், அதன் பின்பு, ஹடாயா கல்வி ஸ்தாபன ஸ்தாபகியான மிஸ் ஹென்ரியெட்டா ஜோல்ட் என்ற மாதைப் பார்க்கச் சென்றேன். நாள் முழுவதும் நான் பேட்டி கண்டு பேசிய விவரங்களையும், ஸர் ஹெராால்ட் மிக் மைக்கேலுடன் செய்த சம்பாஷணையையும், என் மனத்தில் நேர்ந்த குழப்பத்தையும், விடை காண என் மனம் படும் தவிப்பையும் அவளிடம் சொன்னேன். "எவையோ சில அந்நிய அரசுகள் தான் யூதருக்கும் அராபியருக்கும் இடையே வேண்டுமென்றே கலகத்தைக் கிளப்பிவிட்டுக்கொண் டிருக்கின்றன, தங்கள் ஆதிக்கத்தை நிலைப்படுத்திக் கொள்ளவே அவை அப்படிச் செய்கின்றன என்று சொல்லுகிறார்களே? இதை நீங்கள் நம்புகிறீர்களா?' என்று அவளை நான் கேட்டேன்.

அவள் சொன்னாள்: "உள்ளத்திலே துக்கத்தோடு சொல்லுகிறேன்: ஆம்; அது உண்மைதான்." பிறகு, அவள் எனக்குக் கூறியதாவது: "மிஸ்டர் வில்கீ, இந்தப் பிரச்னையில் பல வருஷங்களாக நான் ஈடுபட்டிருக்கிறேன். இந்தப் பிரச்னை தீராவிட்டால், அமெரிக்காவிலே போய் நான் மனச் சமாதானத்தோடு வாழமுடியாது. ஐரோப்பாவில் ஹிம்சிக்கப்பெறும் யூதர்கள் வந்து குடியேற,இந்த நாட்டைத் தவிர உலகத்திலேயே வேறு இடம் கிடையாது. நாம் என்ன தான் ஆசைப்பட்டாலும், என் ஆயுள் அல்லது உங்கள் ஆயுள் காலத்தில் அந்த ஹிம்சை ஒழியப் போவதில்லை, யூதர்களுக்கு, ஒரு தேசீயத் தாய்நாடு வேண்டும், பாலஸ்தீனத்தில் யூதர் குடியேற வேண்டும் என்ற ஜியனிஸ்ட் இயக்கத்தில் பற்று மிகுந்தவள்தான் நான். என்றாலும், யூதரின் நம்பிக்கைகளுக்கும் அராபியரின் உரிமைகளுக்கும் விரோதம் இருந்தே தீரவேண்டும் என்று நான் நம்பவில்லை. ஜனங்களுக் கிடையேயுள்ள வெறுப்புகளையும் வேற்றுமை களையும் ஒழிக்கக்கூடிய மிக எளிய வழிகளைக் கடைப் பிடியுங்கள் என்று, இங்கே எருசலேமிலுள்ள என் யூத சகோதரர்களை நான் வற்புறுத்தி வருகிறேன். 'நாங்கள் இங்கே வந்தது வெற்றி வீரர்களாகவோ நாசகாரிகளாகவோ அல்ல; எங்கள் உணர்ச்சியிலும் சமயத்திலும் ஊறிப்போன தாயகமான இந்த நாட்டின் தேசீய வாழ்விலே ஒட்டிக் கொண்டு ஐக்கியமடையவே வந்திருக்கிறோம்' என்று யூதர்கள் நிரூபிக்க வேண்டும். இதற்காக, ஒவ்வொரு யூதனும் சில அராபியரையாவது சிநேகம் செய்துகொள்ள வேண்டும் என்று நான் வற்புறுத்துகிறேன்."

கல்வியின் மூலமாக எவ்வளவோ பலன்கள் சாத்திய மாகும் என்று தனக்கு நம்பிக்கை யிருப்பதாக, அவள் என்னிடம் சொன்னாள். அவள் ஒரு கிழவி; வயது எண்பது ஆகப் போகிறது. என்றாலும், அநேக யூதர் காலனிகளிலும் யூதர் கைத்தொழில் சாலைகளிலும் ஜியனிஸ்ட் இயக்கத்தின் தலைமையில் என்ன என்ன காரியங்கள் ஏற்கனவே சாதிக்கப்

பெற்றிருக்கின்றன என்பது பற்றி அவள் சொல்லிய கதைகளெல்லாம், இளமையும் ஜீவனும் நிரம்பித் ததும்பின.

அராபியர்-யூதர் பிரச்னையோ மிகச் சிக்கலானது; பழைய சரித்திரத்திலும் சமயத்திலுமே வேரூன்றியிருப்பது. சர்வ தேசக் கொள்கைகளும் அரசியலும் வேறு அதில் வந்து பின்னிக்கொண் டிருக்கின்றன. இப்படிப்பட்ட ஒரு பிரச்னையை, நல்லெண்ணத்தாலும் களங்கமற்ற நாணயத்தாலும் தீர்த்துவிடலாம் என்று நம்புவது, ஒருவேளை அநுபவ சாத்திய மில்லாத யோசனையா யிருக்கலாம். என்றாலும், அன்று மாலை நான் அங்கே உட்கார்ந்து, ஜன்னல் வழியே புகுந்த சூரிய ஒளியிலே, அறிவும் உணர்ச்சியும் ததும்பி ஜொலித்துக்கொண்டிருந்த அந்த முகத்தைப் பார்த்தபோது, ஒரு நிமிஷ நேரமாவது, 'புகழிலும் பதவியிலும் ஆசைபிடித்த சகல அரசியல் வாதிகளையும்விட, சுயநலமற்று முதிர்ந்த ஞானம் படைத்த இந்தப் பெண் மணியின் கருத்தே, ஒருகால் அதிக அறிவுடைமையா யிருக்குமோ?' என்றுதான் அதிசயித்துக்கொண் டிருந்தேன்.

மத்தியக் கிழக்கின் எல்லா இடங்களிலும், கல்விக்குறை மாத்திரமல்ல; வைத்தியக் குறையும் பொதுஜன சுகாதாரக் குறையும் சேர்ந்திருக்கின்றன. அந்த நாடுகளில் எங்கே போனாலும் சரிதான்; எந்தக் காலமும் வியாதிகளும் கொள்ளை நோய்களும் தென்பட்டு நம் மன நிம்மதியைக் குலைத்துக்கொண்டே யிருக்கின்றன. இந்த ஜனங்களின் தேக சௌக்கியத்தையும் ஜீவசக்தியையும் அபிவிருத்தி செய்யா விட்டால், வருங்காலத்தில் இவர்களுக்கு விமோசன முண்டென்றே தோன்றவில்லை.

கல்வி சம்பந்தப்பட்டமட்டும், எவரோ சில சுதேசிகளும், சில அந்நியரும்-முக்கியமாக அமெரிக்கரும்—என்ன சாதிக்க முடியும் என்பதை ஓரளவு ஏற்கனவே செய்து காட்டி விட்டார்கள். எகிப்திலும் பாலஸ்தீனத்திலும் ஈரானிலும், ஐக்கிய அமெரிக்கப் படைகள் மலேரியாக் காய்ச்சலால் படும் அவஸ்தைகளெல்லாம், போருக்குப் பின்னே வெளியாகும் போது, பெரும் பரபரப்பை உண்டாக்கப் போகின்றன.

ஜன்னல்களுக்கெல்லாம் திரையிட்டிருக்கிருர்கள்; இரட்டைக் கதவுகள் போட்டிருக்கிருர்கள்; வேலைக்காரர்களை யெல்லாம் ஜாக்கிரதையாய்ப் பரிசோதிக்கிருர்கள்; தேங்கிய நீரை இறைத்துவிடுகிருர்கள்; கொசுவிடம் கடிபடாதிருப்பதற் கான பூட்ஸ் அணிகிருர்கள்; கொசுவலை கட்டிக் கொள் கிருர்கள். இவற்றை யெல்லாம் கண்டு, மத்தியக் கிழக்கு மக்களின் மனத்திலே ஒரு கவர்ச்சி உண்டாகி யிருக்குமென நான் நம்புகிறேன். யாருக்குத்தான் மலேரியாவைக் கண்டால் பிடிக்கிறது !

இந்த நாடுகளிலே பொதுஜன சுகாதாரம் அபிவிருத்தி யடையும்போது, எந்த வைத்தியப் புத்தகத்திலும் காணக் கிடைக்காத சில அபூர்வ பலன்கள் நிகழப் போகின்றன. சுகாதார வசதிகள் பலன் அளிக்கவேண்டுமென்ருல், சகல ஜனங்களுக்குமே அவை கிட்டும்படி செய்ய வேண்டும். ஏனெனில், வியாதிகள் மனிதனுக்கு மனிதன் வித்தியாசம் பார்ப்பதில்லை. என் ஊகம் தவருகாதென்ருல், மரண விகிதம் குறைந்து அதிக ஆரோக்கியமாக வாழும் வசதிகளை மற்றவருக்குச் சமமாய்ச் சாமான்ய ஸ்திரீ புருஷர்களும் பங்கிட்டுக் கொள்ளும் போது, சொத்துச் சுகங்களையும் அவ்வாறே பங்கிட்டுக் கொள்ள வேண்டுமென்ற ஆசையும் அவர்களுக்கு உண்டாகுமென்றே நான் கருதுகிறேன்.

எங்களைப்போல் வரும் அந்நிய விருந்தாளிகளுக்கு அளிக்கும் படுக்கை வசதிகள் சிறப்பாக இருக்கவில்லை. எருசலேமில், ஸர் ஹெரால்டு மாக மைக்கேலின் விருந்தாளியா யிருந்தபோது, என் படுக்கைக்குக் கொசுவலை இல்லை. ஆனுல், பாம்புபோல் நீண்டு சுருள் சுருளாய் வளைந்திருந்த பச்சைத் திரி ஒன்று மேஜைமேல் கிடந்தது. என் திரியை, நான் ஒன்றுமே செய்யாமல் விட்டு விட்டேன். என் தோழரோ, தமது திரியைக் கொளுத்தி விட்டார். அது இரவு முழுதும் மெல்ல மெல்லச் சுகமாய்ப் புகைந்துகொண்டே யிருந்த தென்றும், அதனுல் தமக்கு மிகப் பத்திரமாய் இருப்பது போன்ற ஒரு திருப்தி தமக்கு ஏற்பட்டதென்றும் அவர் சொன்னுர். பாக்தாதில் சிறப்பான 'விருந்தாளி மாளிகை'

யான பிலாத் என்னும் கட்டடத்தில் நாங்கள் தங்கினேம். அங்கே மாடியிலிருந்து தொங்கிய மின்சார விசிறிகள் இரவு முழுவதும் சுழன்றுகொண்டே யிருந்தன. அந்த மாளிகை, சில வருஷங்களுக்கு முன்னே ஸ்வீடன் நாட்டு அரச குமாரரான பெர்ட்டில் என்பவர் வசிப்பதற்காகக் கட்டிய தாகும். பீரட்டில், தளபதி காட்ரூவின் மாளிகையில் நாங்கள் படுக்கப் போகுமுன் ஸிரிய நாட்டுப் பையன்கள் சிலர், கொசு வேட்டைக் கருவிகளுடன் வந்து வெகு ஜாக்கிரதையாக அறைகளை யெல்லாம் ஒரு பிரதட்சிணம் செய்துவிட்டுப் போனார்கள். வெகு காலமாய்ச் செல்வர்களுக்காக ஏற்பட்டு நடந்துவரும் இந்த முன் எச்சரிக்கைகளை யெல்லாம் கண்ணால் பார்க்கும்போதுகூட, இந்தப் பிரச்னையின் கடுமை உங்களுக்குப் புலனுகா திருக்கலாம். ஆனால், தங்களைப் பிடிப்பதற்காக வைத்த எல்லாப் பொறிகளையும் ஏமாற்றித் தப்பித்துக் கொண்டு, அதிகாலையிலே வந்து உங்கள் தோளில் உட்காரப் பார்க்கிறதே ஒரு ராட்சஸக் கொசு ; அதை உங்கள் கையால் கொல்லும்போது, இந்தப் பிரச்னை உங்களுக்கு நிச்சய மாய்ப் புலனுகத் தொடங்கிவிடும். நியூயார்க்கிலிருந்து பாக்தாதுக்கு வரும் வரையில், ஒவ்வொரு தங்கலிலும் பலர் செய்த உபந்நியாசங்களும் எச்சரிக்கைகளும் அப்போது உங்களுக்கு ஞாபகம் வந்து, பயமும் உண்டாகும்.

பொதுஜன சுகாதாரக் குறையின் முக்கியமான காரணம் வறுமைதான். பில்ஹார்ஜியாஸிஸ் என்ற ஒருவகை நோய், எகிப்தில் பயங்கரமாய் உயிர்களைக் கொள்ளை கொண்டு விடுகிறது. நைல் நதியில் உள்ள நண்டுகளால்தான் அந்த வியாதி பரவுகிறது. நைல் நதியிலும் அதன் உப நதிகளிலும் எகிப்தியர் ஸ்நானபானங்கள் செய்கிருர்கள். அந்த ஜலத்திலிருந்து இந்த வியாதி அவர்களைப்பற்றி, பயங்கரமாய் அவர்களின் உடம்பை உருக்கி, ஆண்மையழியச் செய்கிறது. நைல் நதியிலிருந்து நண்டுகளை ஒழித்துவிட வேண்டும் ; அது மட்டும் அல்லாமல், வடிகட்டிய குடி தண்ணீரும் எகிப்தியருக்குக் கிடைக்கச் செய்யவேண்டும். இதற்கெல்லாம் பணம் அல்லவா செலவழியும் ?

கண் வலி, சகல உஷ்ண நாடுகளிலுமே சின்னஞ்சிறு குழந்தைகளின் கண்களைக் குருடாக்கி விடுகிறது. கெய்ரோ, எருசலேம், பாக்தாது ஆகிய நகரங்களில் கண்வலியால் தவிக்கும் குழந்தைகளைத் தெருவெல்லாம் பார்த்தோம். ஈக்கள் மொய்க்காதபடி சுத்தமாய் வாழ ஜனங்கள் விரும்பாத வரையில், வைத்திய உதவியாலும் முன்னெச்சரிக்கையாலுங்கூட, கண் வலியை அடியோடு ஒழிக்க முடியாது. வீட்டு வசதிகள், குளிர்ச்சி யூட்டும் ஏற்பாடுகள், வெப்பத்தை மறைக்கும் திரைகள் முதலியவை யெல்லாம், அதற்கு வேண்டும்.

சுகாதாரச் சீர்கேட்டுக்கு மகா மோசமான உதாரணத்தை, ஈரான் நாட்டுத் தலைநகரான டெஹ்ரனில்தான் கண்டோம். நகரத்தின் ஜல சப்ளை வாய்க்கால்கள், அங்கே தெருக்களின் இருபுறமுமுள்ள சாக்கடைகளின் பக்கத்திலேயே, திறந்தபடி ஓடுகின்றன. அந்த வாய்க்கால் நீரிலே ஜனங்கள் குளிக்கிறார்கள் ;துணி துவைக்கிறார்கள்; அதிலேயே மாடிக்குப் பம்பு அடிக்கிறார்கள் ; குடிக்கிறார்கள் ; அதிலேயே சமைக்கிறார்கள். 'ஏழு சுழல் சுழன்ற தண்ணீர் தனக்குத் தானே பரிசுத்தமாகி விடுகிறது' என்று அவர்கள் ஒரு பழமொழி கூறுகிறார்கள். இந்தப் பழமொழியால் அவர்கள் திருப்தியடைந்திருக்கிறார்கள். ஆனால், வயிற்றுக் கடுப்பு, காலரா, மலேரியா, இன்னும் தண்ணீர் மூலம் பரவும் பல நோய்கள் இவையெல்லாம், அந்தப் பழமொழிக்குக் கட்டுப்படாமல் அவர்களுக்கு வந்துவிடுகின்றன ! டெஹ்ரானில் ஐந்து குழந்தைகள் பிறந்தால், ஒரே ஒரு குழந்தைதான் ஆறு வயதை உயிரோடு எட்டிப் பார்க்கிறது.

"இப்போது இருப்பதைத் தவிர, வேறு ஒன்றுமே வேண்டாம் என்று சுதேசிகள் சொல்லுகிறார்களே" என்று, எருசலேமிலும் கெய்ரோவிலும் சிலர் என்னிடம் கூறினார்கள். இப்படிச் சொல்லிவிடுவது சுலபம். தற்போதுள்ள நிலைமையிலேயே தாங்கள் சௌகரியமாக இருப்பவர்கள், சுகங்களற்ற ஏழைகளின் முன்னேற்றத்துக்கு விரோதமாய், உலகெங்குமே பல நூற்றாண்டுகளாய், இதே வாதத்தைத்

தான் சொல்லி வருகிறார்கள். ஆனால், அற்ப வசதிகள் உள்ளவர்களோ, அல்லது ஒரு வசதியுமே இல்லாதவர்களோ சுகப்படும்படி செய்வதற்கு உள்ள சுகங்களைப் பகுப்பதல்ல, பெருக்குவதுதான் சரியான வழி. அதற்கேற்ற பொருளாதார நிலைமைகளையே தோற்றுவிக்க வேண்டும். உலக நாகரிகத்தின் சரித்திரம் இப்படித்தான் நமக்குப் போதிக்கிறது. அதனால் சமூகம் முழுமைக்குமே நலம் உண்டாகும். மத்தியக் கிழக்கில் கல்வியும் பொதுஜன சுகாதாரமும் அபிவிருத்தியடைய வேண்டுமானால், ஜனங்களின் வாழ்க்கை அந்தஸ்தை உயர்த்தினால்தான் அது சாத்தியமாகும் என்று எனக்குத் தோன்றுகிறது. பண்டங்களின் உற்பத்திக்கும் பற்பல சேவைகளுக்கும் நவீன யந்திரக் கைத்தொழில் முறைகளைக் கைக்கொண்டால்தான், வாழ்க்கை அந்தஸ்து உயரும்.

இப்படி அந்த ஜனங்களின் வாழ்க்கை அந்தஸ்து உயர்ந்தால், அது சந்தேகமில்லாமல் உலக மார்க்கட்டுக்கே ஓர் அபிவிருத்தி நல்கும். ஏனென்றால், மத்தியக் கிழக்குப் பிரதேசம், காய்ந்து வறண்ட பிரம்மாண்டமான ஒரு கடற் பஞ்சு போன்றது; பற்பல விதமான பொருள்களையும் சேவைகளையும், அமோகமான அளவில், அது உறிஞ்சிக் கொள்ளக் கூடியது. ஆகையால், இந்த ஜனங்களின் வாழ்க்கை அந்தஸ்து உயர்வதற்கு நாம் உதவி செய்தால், அதனால் நமக்கே அநுபவ பூர்வமான அநுகூலம் ஏற்படும். இந்தப் பிரச்னையில் நாம் கவனம் செலுத்த வேண்டும் என்பதற்கு, இதையும்விட வலுவான, அவசரமான, மற்றொரு காரணமும் உண்டு. இந்த மத்தியக் கிழக்கு நாடுகளின் ஜனங்களுக்குள்ளேயே ஏற்றத்தாழ்வுகள் இருப்பதால், அவர்களுக்கிடையே சச்சரவு ஏற்படலாம். அது மற்றொரு யுத்தத்தைக் கிளப்பிவிடவும் கூடும்.

இவையெல்லாம், தெள்ளத் தெளிய விளங்கும் உண்மைகள். இந்தப் பிராந்தியத்திலுள்ள ஒலிவ மரத் தோட்டங்கள், பஞ்சு விளையும் பூமிகள், எண்ணெய்க் கிணறுகள் இவற்றையெல்லாம் நாம் கைவிட்டுவந்தோமானால், இவர்கள் அமைதியாயிருக்க வேண்டுமேயென்று

நாம் கவலைப்படாதிருக்கலாம். ஆனால், இதுவரையில் நாம் அப்படிச் செய்யவில்லை. மேலும், இதோடு நாம் அவர்களை விடவில்லை. நம் கருத்துக்களையும் லட்சியங்களையும், நம் சினிமாக்களையும் ரேடியோ நிகழ்ச்சிகளையும், நம் எஞ்சினீயர்களையும் வியாபாரிகளையும், நம் விமானிகளையும் சோல்ஜர்களையும் மத்தியக் கிழக்கு நாடுகளுக்குள்ளே அனுப்பியிருக்கிறோம். இதனால் எல்லாம் விளைந்திருக்கும் பலனுக்கு, நாம் இப்போது தப்பித்துக்கொள்ள முடியாது.

அந்தப் பலன் என்னவென்றால், அந்த ஜனங்களின் பழைய வாழ்க்கை முறைகளெல்லாம் நைந்து பலனற்றுப் போயின. ஆதியிலே கண்டுபிடித்த சக்கரம் மாதிரி மிகப் பழமையான பம்புகளை வைத்துக்கொண்டு, பத்து வயது கூட நிரம்பாத சில எகிப்தியச் சிறுவர்கள், கெய்ரோவுக்குச் சில மைல் தூரத்தில், விவசாயப் பாத்திகளுக்குத் தண்ணீர் இறைத்துக்கொண் டிருந்ததை, நான் கண்டேன். அந்தச் சிறுவர்கள் மிக்க அடக்கமாய்த்தான் இருந்தார்கள்; ஆனால், வெகுகாலம் இப்படி அடங்கிக் கிடக்கமாட்டார்கள். கிரேட் பிரிட்டனின் 'சண்டையில் கலவாத கூட்டாளி'யாக, எகிப்து இருந்து வருவது ஒரு விசித்திரமான நிலைமையாகும். அந்த எகிப்து முழுவதுமே, ஒரு தேசத்தினால் எவ்வளவு தெளிவாக முடியுமோ அவ்வளவு தெளிவாக, 'சண்டையில் எந்தக் கட்சி ஜயித்தால் என்ன? எது தோற்றாலென்ன? எனக்குக் கவலையில்லை' என்ற அசட்டையைக் காட்டிவிட்டது. இது முற்றும் பிரிட்டனின் குற்றமாகாது. ஆனால், பிரிட்டனும் நாமும் நம் கடமைகளை அலட்சியம் செய்தது தான், இதற்குப் பெரிதும் பொறுப்பென்று எனக்குத் தோன்றுகிறது.

மத்தியக் கிழக்கு நாடுகளின் ஜனங்களை, தொழில் நுணுக்கங்களிலும் யந்திரத் தொழில்களிலும் இருபதாம் நூற்றாண்டுக்கு வந்து சேரும்படி செய்வது எப்படி? அரசியலில் சுய ஆட்சி அடையச் செய்வதுதான் அதற்கு வழி என்று எனக்குத் தோன்றுகிறது. இந்த நாடுகளில் பற்பல மேல்நாட்டுக்காரர்களை நான் சந்தித்தேன். பெரும்

பாலான அராபிய மக்கள் மிகப் பிற்போக்காய் ஆதிகால நிலைமையிலேயே வாழ்வதற்கு, அந்த மேல்நாட்டுக்காரர்கள், தங்களுக்குத் தோன்றியவாறெல்லாம் பலவிதக் காரணங்கள் சொன்னார்கள். "அராபியர் உண்மையிலே அற்பாயுளில் சாக விரும்புகிறார்கள்'' என்ற காரணம் தொடங்கி, "தங்கள் வாழ்க்கையில் அபிவிருத்திகள் செய்துகொள்ள அவர்களுக்கு மூலதனம் வேண்டும். ஆனால், அந்த மூலதனம் திரட்டிக் கொள்வதை, அவர்களுடைய மதம் தடைசெய்கிறது'' என்ற காரணம் வரையில், என்னவெல்லாமோ சொன்னார்கள். இந்தக் காரணங்களெல்லாம் சுத்த அபத்தம். நான் பார்த்த எந்த அராபியரும் சரி; தங்கள் காரியங்களைத் தாங்களே நிர்வகிக்கும் சந்தர்ப்பம் கிடைத்ததாக அவர்களை எண்ணும் படி செய்தால், தாங்கள் வாழும் உலகத்தை அவர்கள் மாற்றிவிடுவார்கள்.

மத்தியக் கிழக்கு நாடுகள் சம்பந்தப்பட்ட மட்டும், சுதந்தரம், சுயஆட்சி என்று மிகவும் பொதுப்படையாகச் சொன்னால், அமெரிக்கருக்குப் புரியாது. இந்த ஜனங்களெல்லாம் திடீரென்று சுதந்தரமாய்த் தங்களைத் தாங்களே ஆளும்படி விட்டுவிட்டால், அதனால் குழப்பமும் கலவரமுமே உண்டாகும் என்று ஒரு பக்கத்தில் சிலர் எதிர்க்கிறார்கள். மறுபக்கத்தில், இவர்களின் சுதந்தரத்தை ஆதரிப்பவர்கள், மத்தியக் கிழக்கில் மேல்நாட்டார் பெற்றிருக்கும் செல்வாக்கை ஒரு கோர சித்திரமாக வர்ணிக்கிறார்கள்; அது கலப்பற்ற ஏகாதிபத்தியச் சுரண்டலே என்று அவர்கள் கூறுகிறார்கள்; அங்கே பிரெஞ்சு, பிரிட்டிஷ், அமெரிக்க வியாபார அதிகரிப்பினால் கிடைத்துள்ள மிக உண்மையான நன்மைகளை யெல்லாம், அவர்கள் மறந்துவிடுகிறார்கள்.

அநுபவ ரீதியான பிரத்யட்ச உண்மை, இந்த இரண்டுக்கும் மத்தியிலே இருக்கிறது. மேல்நாட்டார் உடனே மூட்டை முடிச்சுக்களை யெல்லாம் கட்டிக்கொண்டு கிளம்பிப் போய்விட வேண்டும் என்று சொல்லும் அராபியர், யூதர், எகிப்தியர், அல்லது ஈரானியர் மிகச் சிலரே என்று நான் கண்டேன். ஒழுங்காக, கால அட்டவணையோடு ஒரு

திட்டம் போட்டு, அதன் பிரகாரம், வரவர அதிகமாக, தங்கள் அரசாங்கப் பொறுப்பில் தங்களுக்கும் பங்கு அளிக்க வேண்டுமென்றுதான், அவர்களில் பெரும்பாலோரும் சொல்லுகிருர்கள்.

இது மிகவும் நியாயமான ஆசை என்றே எனக்குத் தோன்றுகிறது. ஈராக் போன்ற ஒரு நாட்டைத் திருப்தி செய்துவிட முடியும் என்று, அந்த நாட்டிலே நான் கண்டேன். உலகத்திலே காலனி அந்தஸ்திலிருந்து மாண்ட்டேட் பிரதேசமாகி, அதன் பின்பு சட்டரீதியில் சுதந்தர அரசாங்கமாக மாறிய மிகச் சில நாடுகளில் ஈராக்கும் ஒன்று. அதன் சுதந்தர அதிகாரம், பிரிட்டனின் சில தேவைகளுக்குக் கட்டுப்பட்டுத்தான் இருக்கிறது என நான் கண்டேன். ஆனாலும், பிரிட்டனின் அந்தத் தேவைகள், ராணுவத் தேவைகளே; யுத்தத்தில் ஜயிப்பதற்கு அவசியமான தேவைகளே.

ஈராக்கில் நான் சந்தித்த மனிதர்களே எனக்கு மிகவும் பிடித்தது. ரீஜெண்டான கோமகன் அப்துல் இலா, பாக்தாதில், நட்சத்திரங்கள் மின்னும் திறந்த வெளியிலே, எனக்கு ஒரு ராஜாங்க விருந்து அளித்தார். அதை நான் என் ஆயுள் முழுவதும் ஞாபகம் வைத்திருப்பேன். விசாலமான ஒரு பசும்புல் வெளியில் ஒரு ரத்தினக் கம்பளத்தின் மீது நின்றுகொண்டு, தம் விருந்தினரை அவர் வரவேற்ருர். பக்கத்திலே வேறு ரத்தினக் கம்பளங்களின் மீது அவரது அரசாங்கத்தின் தலைமை அதிகாரிகள் எல்லாரும் நின்றுகொண்டிருந்தார்கள். பொருளாதார மந்திரி உள்பட, அவர்களில் பலர், விசித்திரமாய் நீண்ட அங்கி யணிந்து தலைப்பாகை கட்டியிருந்தார்கள். செனேட் சபையின் தலைவரோ, அழகான பாலைவன உடுப்பணிந்து, நீண்ட தாடி வைத்திருந்தார். இதனுல் ஸ்தலத்தில் உள்ள மரியாதைக் குறைவான சில அந்நியர்கள் அவரைக் 'கடவுள்' என்று பரிகாசமாய்ச் சொல்லுகிருர்கள். மற்றவரெல்லாம் மேல் நாட்டு ரீதியில் உடுத்திருந்தார்கள். அநேகமாய் ஒவ்வொரு

மந்திரியுமே ஏதாவதொரு காலத்தில் சர்க்காரின் எந்த இலாக்காவையும் நிர்வகித்திருக்கிறார் என்று அறிந்தேன்.

"ஒரு சின்னச் சீட்டுக் கட்டை வைத்துக்கொண்டு என்ன செய்வது? அதையேதானே திரும்பத் திரும்பக் கலைத்துப் போடவேண்டும்?" என்று, ஈராக்கி நண்பர் ஒருவர் என்னிடம் சொன்னார்.

சில தினங்களுக்குப் பிறகும், ஒரு நாள் இரவு மற்றொரு விருந்து நடந்தது. ஈராக் பிரதம மந்திரி நூரி அஸ்ஸையது பாஷா, இந்தத் தடவை எனக்கு விருந்து அளித்தார். அவர் மிகவும் குள்ளமானவர். கூர்ந்த ஆராய்ச்சி மிக்க முகத் தோற்றம் உள்ளவர். நான் பார்த்த வரையில், மிக மதியூக முள்ளவர்களில் ஒருவர். 1941-ஆம் ஆண்டுதான், இவர் அதிகாரத்துக்கு வந்தார். இவருக்கு முந்திய பிரதம மந்திரியான ரஷீத் ஆலி அல்கைலானி என்பவரை ஜெர்மானியர், லஞ்சம் கொடுத்துத் தம் வசப்படுத்தி விட்டார்கள். அவரைப் பதவியிலிருந்து கவிழ்க்க, பிரிட்டிஷார் துருப்புகளை உபயோகிக்க வேண்டியதாயிற்று. அதன் பிறகே, நூரி பதவிக்கு வந்தார். பிரிட்டனின் 'சண்டை போடாத கூட்டாளி'யாக ஈராக் நாட்டை நூரி நிர்வகித்து வந்தார். ஆனால், சண்டையில் கலந்துவிட வேண்டுமென்று, அவருக்குத் தீவிர ஆவல். பின்னால் அப்படியே கலக்கவும் கலந்துவிட்டார்; பாக்தாதில் பிரிட்டிஷ் ஸ்தானிகராக ஸர் கினாஹன் கார்ன்வாலிஸ் இருந்து வந்தார். மத்தியக் கிழக்கு நாடுகள் முழுவதிலுமே பிரிட்டிஷ் கலோனியல் ஆபீசைச் சேர்ந்த ஏகாதிபத்திய நிர்மாணிகர்களைக் கண்டேன். அவர்கள் எல்லாருமே உயரமானவர்கள்; சுங்கான் புகைக் குடியர்கள்; திறமைசாலிகள்; அமைதியானவர்கள். அந்த வகையைச் சேர்ந்த மற்றுமொருவர் கார்ன்வாலிஸ். இவர் சொல்லுவதையெல்லாம் - கொஞ்சம் உபசாரமாகக் கூறுமிடத்து - நூரி மிக்க மரியாதையோடு கேட்டுக்கொள்வார் என்பதில் சந்தேகமில்லை. ஆனால், நூரி ஒரு பிரத்யட்சவாதி என்பது என் ஊகம். கொள்கையளவில் பிரிட்டிஷ் ஆதிக்கத்திலிருந்து தங்களுக்குப் பரிபூரண சுதந்தரம் உண்டு என்ற விஷயத்தில்

ஏதாவது விவகாரம் வருமானால், அதில் அவர் விட்டுக் கொடுப்பார் என்று தோன்றவில்லை. உண்மையிலே நவீன சுதந்தர அராபிய ராஜ்யமொன்றை முதல்முதலாக ஸ்தாபிக்கத் தாம் நடத்திவரும் போராட்டத்தில் காலம் தமக்கு அநுகூலமாய் வந்திருக்கிறது என்று அவர் நன்றாய் அறிவார்.

மத்தியக் கிழக்கு நாடுகளைப்பற்றி அராபிக் கதையில் வரும் ஒரு சித்திரம்போல் இருந்தது, நூரியின் விருந்து. அன்று பகல் முழுவதும் நாங்கள் பாக்தாதைச் சுற்றிப் பார்த்துவிட்டு வந்தோம். வானளாவிய தங்க ஸ்தூபிகள் நீட்டிக்கொண்டிருக்கும் விசித்திரமான ஷீயா மசூதியையும், புழுதியடைந்த பச்சைவெட்டுக் கற்சுவர் வீடுகளையும் கண்டோம். கடைவீதியிலே பித்தளை வெள்ளிக் கம்மியர்கள், கிண்ணங்களும் ஜாடிகளும் செய்துகொண் டிருந்தார்கள்; என்றாலும், நியூயார்க்கிலும் லிவர்பூலிலும் யந்திரங்களிலே தயாரான குஜிலி நகைகளையே, கடைகளில் விற்றுக்கொண் டிருந்தார்கள். உலகத்திலேயே மிக நேர்த்தியான மியூஸியங் களில் ஒன்று அங்கே இருக்கிறது; உர் - சால்டியில் தோண்டி யெடுத்த மிகப் பழமையான பொருள்களை அதில் வைத்திருக் கிறார்கள்; அந்தப் பொருள்கள், உலக சரித்திர ஆதி காலத்தைச் சேர்ந்த பழைமை வாய்ந்தவை. ஓர் அராபிய ஓட்டலில் நாங்கள் காபி குடித்தோம். அங்கே எங்களைச் சுற்றிலும் கூட்டம் கூட்டமாய் ஜனங்கள் பேசிக்கொண்டும், பத்திரிகை படித்துக்கொண்டும், சொக்கட்டான் ஆடிக் கொண்டும் இருந்தார்கள். இத்தனை விநோதங்களுக்குப் பின்பும், விருந்து ஓர் இந்திர ஜாலம்போல இருந்தது.

சம்பிரதாயமான சில பிரசங்கங்கள் நடந்தன. பிறகு விருந்து, ஒரு சங்கீதக் கச்சேரியாய் மாறியது. சங்கீதம், அப்படியே அராபியப் பெண்களின் ஒரு நடனக் காட்சியாகத் திரிந்தது. நடனமோ, மேல்நாட்டு வகையான ஓர் ஆட்ட மாக மாறிற்று. இங்கிலீஷ் நர்சுகளும் பர்ஷிய வளைகுடா விலுள்ள பாஸ்ராவிலிருந்து வந்த அமெரிக்க சோல்ஜர்களும், ஈராக்கி அதிகாரிகளும், அராபிய வானத்தின் கீழே சேர்ந்து

டான்ஸ் ஆடினார்கள். அன்றிரவு அங்கே உட்கார்ந்து பார்த்துக்கொண் டிருந்த எந்த மனிதனும் சரி; கிழக்கும் மேற்கும் ஒரு நாளும் சந்திக்காது என்றோ, அராபியர் என்றென்றும் வனாந்தர மக்களாகவே யிருக்கவும் கடல்களுக் கப்பாலிருந்து வந்த அந்நியர்களே அவர்களை ஆண்டு கொண்டு இருக்கவும் வேண்டுமென்பது அல்லாவின் சித்தம் என்றோ, எண்ணவேமாட்டான்.

அடுத்த நாள், பாக்தாதிலிருந்து டெஹ்ரானுக்குப் பறந்துகொண் டிருந்தபோது, முந்திய இரவின் நிகழ்ச்சிகளைப் பற்றி, நான் சிந்தித்துப் பார்த்தேன். இந்தக் கேளிக்கைகளுக் கெல்லாம் பின்னே, புத்தி தெளிந்த என்னவோ சில உள்ளக் கிளர்ச்சிகள் நிகழ்ந்துகொண்டிருக்கின்றன என்று நான் கண்டேன். மத்தியக் கிழக்கு முழுவதிலும் ஏற்கனவே நான் சந்தித்துப்பேசிய மாணவர்களிடமும் பத்திரிகைக்காரர் களிடமும் போர் வீரர்களிடமும் கண்ட அதே உள்ளக் கிளர்ச்சிகள் இதையெல்லாம் கண்டபோது, என் மனத்திலே பின்வரும் திடஅபிப்பிராயம்தான் உறுதிப்பட்டது: இந்த ஜனங்களுக்கு ஒரு புதிய பசி உண்டாகி யிருக்கிறது; பழைய மதத்தடைகள், சர்க்கார் நிர்ப்பந்தங்கள் ஆகியவைகளி லிருந்து விடுதலை பெற வேண்டுமென்ற பசி. தங்கள் சொந்த நிர்வாகிகளும் அவர்களுக்குமேல் உட்கார்ந்து கொண்டிருக்கும் அந்நிய மேலதிகாரிகளும் தங்களுடைய இந்தப் பசியைத் தீர்க்காவிட்டால், புதிய விழிப்படைந்த இந்த ஜனங்கள், இந்தத் தலைமுறையிலேயே, எவரோ ஓர் அமிதவாதத் தலைவரைத்தான் பின்பற்றிவிடப்போகிறார்கள். முகமூடி, பெஸ் குல்லா, நோய், அசுத்தம், கல்விக் குறைவு, நவீனக் கைத்தொழில் குறைவு, சர்க்காரின் எதேச்சாதிகாரம் இவையெல்லாம் ஒன்று சேர்ந்திருப்பதை, தங்கள் சமுதாயத் திலுள்ள சில சக்திகளும் அந்நிய ஆதிக்கத்தின் சுயநலமும் ஒன்றுகூடிய ஒரு கூட்டுறவாக அவர்கள் எண்ணுகிறார்கள். அந்தக் கூட்டுறவே, பழமையைத் தங்கள் தலையிலே சுமத்தி வைத்திருப்பதாக, அவர்கள் கருதுகிறார்கள். திரும்பத் திரும்ப அவர்கள் என்னை இவ்வாறு கேட்டார்கள்: "அந்நியர்

மிக மரியாதையாகவே எங்கள் அரசியலை ஆட்டி வைக்கிறார்கள். அந்நியர் மிக மறைமுகமாகவே எங்கள் வாழ்க்கை மீது ஆதிக்கம் செலுத்துகிறார்கள். என்றாலும், உலக ராணுவ ரஸ்தாக்களுக்கும் வியாபார மார்க்கங்களுக்கும் நடு மத்தியிலே கேந்திரமான இடங்களிலே நாங்கள் இருக்கிறோம் என்பதற்காக, இத்தகையதொரு முறையை அமெரிக்கர் ஆதரிக்கப் போகிறார்களா? அல்லது, உங்கள் வார்த்தையில் சொன்னால், உலகத்தின் ராணுவ மூலப் பாதைகளையும் வியாபாரப் பாதைகளையும், அச்சு நாடுகளோ அல்லது ஜனநாயகத்துக்கு விரோதமான நாடுகளோ அல்லது வேறு எந்த நாடுகளோ ஆதிக்கம் கொள்ளாதபடி கேந்திர ஸ்தானங்களா யிருக்கும் எங்கள் நாடுகளை வசப்படுத்தி வைத்திருக்க வேண்டும் என்ற காரணத்துக்காக, இத்தகைய முறையை அமெரிக்கர் ஆதரிக்கப் போகிறார்களா? மத்திய தரைக் கடலின் கிழக்குப் பகுதியைக் கண்காணித்துக் கொள்ள அவசியமாகவும் ஆசியாவுக்குச் செல்லும் மார்க்கமாகவும், எங்கள் கால்வாய்களும் கடல்களும் நாடுகளும் அமைந்திருக்கும் காரணத்தால், இத்தகைய முறையை அமெரிக்கர் ஆதரிக்கப் போகிறார்களா?"

இந்தப் பிரச்னையை வெகு சுலபமாகச் சொல்லி விடலாம்; ஆனால், பதில் சொல்லுவது எளிதல்ல. இது எனக்குத் தெரியும். விரோதிகளின் அபாயத்துக்கு உள்ளாகாமல் நமது மேல்நாட்டு ஜனநாயகத்தைப் பாதுகாக்க வேண்டுமானால், சூயஸ், கீழ் மத்தியதரைக் கடல், ஆசியா மைனர் மூலமாகக் கீழ்நாட்டுக்குச் செல்லும் பாதைகள் ஆகியவற்றை, நம்மிடம் நட்பான, நிலைகொண்ட அரசாங்கங்கள் ஆண்டு வருவது அவசியம். இது எனக்குத் தெரியும். இப்போது நடைபெற்றுவரும் 'பாதுகாப்பு' ஆட்சியான காலனி முறைக்கு, சரித்திர ரீதியாகவும் தற்கால நிலையிலும் கூட மிக்க நியாயமுண்டு. இதுவும் எனக்குத் தெரியும். என்றாலும், அநுபவ ரீதியாகப் பார்க்குமிடத்து, இந்த நாடுகளில் நிகழ்ந்துகொண்டிருக்கும் உள்ளக் கிளர்ச்சியை மீறி, இந்த ஆதிக்கத்தை இனியும் நாம் நடத்திவர முடியுமா

என்பதுதான் கேள்வி. லட்சிய ரீதியாகப் பார்க்குமிடத்து, எந்தக் கொள்கைகளைக் காப்பாற்றுவதற்காக இந்தப் போரிலே நாம் சண்டையிடுவதாகச் சொல்லுகிறுமோ அந்தக் கொள்கைகள் அனைத்துக்கும், இந்த ஆதிக்க முறை அடியோடு விரோதமானது என்ற உண்மைக்குச் சமாதானம் காணவேண்டும். மேலும், அந்தக் கொள்கைகளை எத்தனைக்கு எத்தனை அதிகமாக நாம் உபதேசம் செய்கிறுமோ அத்தனைக்கு அத்தனை அதிகமாக, இந்த ஆதிக்க முறைக்கு ஆபத்தான உள்ளக் கிளர்ச்சி அந்த மக்களிடம் உண்டாகி விடுகிறது.

இதெல்லாம் எனக்குத் தெரியும். ஆனுல், பிரதம மந்திரிகள், அயல்நாட்டு உறவுகளைக் கவனிக்கும் மந்திரிகள், மத்தியக் கிழக்கு நகரங்கள் ஒவ்வொன்றிலும் காணப்படும் விழிப்படைந்த படித்த வகுப்பார் கோஷ்டிகள் ஆகியவர்கள் தங்கள் உள்ளங்களில் என்ன எண்ணுகிருர்கள் என்பதையும், படியாத வகுப்புப் பாமர மக்களின் உள்ளங்களிலேகூட ஏதோ தெளிவில்லாத ஓர் உணர்ச்சி உண்டாகியிருப்பதையுமே, நான் இங்கே எழுதுகிறேன். ஒரு புதிய மனோபாவத்தோடும், பொறுமையாகப் புதிய ஞானத்தோடும், எப்படியாவது இந்தப் பிரச்னையை, நாம் சமாளித்தாக வேண்டும். இல்லையானுல், மூர்க்க வெறி பிடித்த ஒரு புதிய தலைவன் தோன்றி விடுவான்; அவன் இந்த அதிருப்திக் காரர்கள் அனைவரையும் ஒன்று சேர்த்துவிடுவான். அதன் பலன் என்ன ஆகும்? ஒன்று, அந்நிய அரசுகள் அடியோடு அங்கிருந்து வாபஸ் ஆகிவிடவேண்டும்; அதனுல், அங்கே ஜனநாயகத்தின் செல்வாக்கு அடியோடு அற்றுப்போய் விடும். அல்லது, இந்த நாடுகளை, அந்த அந்நிய அரசுகள் முற்றும் ராணுவ பலத்தால் ஆண்டு நிர்வகித்துவர வேண்டும்.

நாம் பறைசாற்றும் லட்சியங்களிலே நமக்கு நம்பிக்கை இருக்குமானுல், மத்தியக் கிழக்கிலே கிளர்ந்து எழுந்திருக்கும் புதிய சக்திகள் நமக்குத் துணை நின்று அந்தக் கொள்கைகளுக்காக உழைக்க வேண்டுமென்று நாம் விரும்பினுே

மானல், நாம் ஒரு சூழ்ச்சியை நிறுத்திவிட வேண்டும்; சுதேச சக்திகளையே, ஒன்றுக்கொன்று விரோதமாய்க் கிளப்பி விட்டு நமது ஆதிக்கத்தை நிரந்தரமாக்கிக்கொண்டு நம் சொந்த நன்மைகளைத் தேடிக்கொள்ளும் சூழ்ச்சியை நிறுத்தி விட வேண்டும்.

---

## 3. நவீனத் துருக்கி

வட ஆப்பிரிக்காவில் தொடங்கி, உலகத்தின் மிகப் புராதனமான கடலின் கீழ்க்கோடியைச் சுற்றிக்கொண்டு சீன மார்க்கத்தில் பாக்தாது வரையில் நீண்டுள்ள, பிரம் மாண்டமும் பழைமையுமான நிலப் பரப்புகளில் தான், நமது போரின் வெற்றியும் தோல்வியும் தீர்மானமாகப் போகிறது. அந்தப் பகுதிதான், பலமான போர்க்களம் ஆகப்போகிறது. பிரிட்டிஷ், போரிடும் பிரெஞ்சு, பிற ஐக்கிய தேசங்கள் இவற்றோடுகூட, அமெரிக்க டாங்கிகளும் விமானங்களும் அங்கே குவிந்திருக்கின்றன. ஆனல், அது போர்க்களத்துக்கும் மேலான ஒரு ஸ்தலமாக இருக்கிறது; மகத்தான சமுதாய சாஸ்திர ஆராய்ச்சிக் கூடமாகவும் விளங்குகிறது. அங்கே கோடிக்கணக்கான மக்கள், மிக மெதுவான, ஆனல் உறுதியான முறையில், கருத்துக்களையும் கொள்கைகளையுமே சோதனை செய்துகொண் டிருக்கிறார்கள். அந்தக் கருத்துக்களையும் கொள்கைகளையும் கொண்டேதான் போர் நடக்கிறது; அவற்றைக் கொண்டேதான், யுத்தத்தின் வெற்றியும் தோல்வியும், மனித உள்ளங்களிலே, தீர்மானம் ஆகப்போகிறது.

மத்தியக் கிழக்கு மக்களிடம் ஓர் உள்ளக் கிளர்ச்சி உண்டாகியிருக்கிறது என்ற அபிப்பிராயம், துருக்கியைப் பார்க்கும்போது, நமக்கு உறுதிப்படுகிறது. ஏனெனில், ஒரு காலத்தில் பெரிய ஆட்டொமான் ஏகாதிபத்தியமா யிருந்த பிரம்மாண்டமான பிரதேசம் முழுவதிலும் இன்று என்ன நிகழ்ந்துகொண் டிருக்கிறது என்பதற்கு, ஒரே தலைமுறையில் ஸ்தாபிதமாகி யிருக்கும் துருக்கிக் குடியரசு

ஓர் உதாரணமாக விளங்குகிறது. துருக்கியினுல் ஓர் அமெரிக்கனின் மனத்தில் பதியும் எண்ணங்கள், ருஷ்யா-சீஞ-இந்தியா இந்த எல்லேகள் மட்டும் வழி நெடுகிலும் இன்று அவன் காணும் ஒவ்வொரு பொருளாலும் ஏதோ ஒரு விதத்தில் அவன் மனத்தில் மீண்டும் மீண்டும் வலியுறுத்தப் பெறுகின்றன.

துருக்கி, ஒரு புதிய குடியரசு. சென்ற ஆண்டு பனிக் காலத்தில்தான், தனது பத்தொன்பதாவது ஜன்ம தினத்தை அது கொண்டாடியது. தன் ஐரோப்பிய அண்டை நாடுகள் சிலவற்றைவிட, அது பலவீனமாயிருக்கிறது. நான் அங்கே இருக்கையில், என்னிடம் சம்பாஷித்த ஒவ்வொரு துருக்கி யனும், தங்கள் நாட்டை எந்த நிமிஷமும் பிறர் வந்து தாக்கக்கூடும் என்று தீவிரமாய் உணர்ந்திருந்தான். கடைசி யாக, தான் ஒரு காலத்தில் இருந்ததைவிட, இன்று அது மிகச் சிறியதாயிருக்கிறது. உயிரற்று அசந்து கிடந்த ஓர் ஏகாதிபத்தியம், கச்சிதமும் ஒற்றுமையும் கொண்ட ஒரு நாடு ஆகியிருக்கிறது.

இளமையாய், ஓரளவு பலங் குறைந்தும் சிறுத்தும் இருந்தாலும், துருக்கி நல்ல நாடாகவே எனக்குத் தோன்றியது. தனது நடுநிலேமையை, தன்னிடமுள்ள சகல சாதனங்களேக் கொண்டும் காப்பாற்ற, மிகத் தெளிவாய் நிர்ணயம் கொண்டிருப்பதால், துருக்கி நல்ல நாடாகும். நவீன உலகத்தின்மீது உறுதியாய்க் கவனம் செலுத்தி, வெகு கடுமையாய் உழைத்துத் தன்னேப் புனர் நிர்மாணம் செய்து கொண்டு வருவதால், அது நல்ல நாடாகும். ராணுவ உடை தரித்தவரும் தரியாதவருமாய், ‘தங்களுக்கு ஒரு நல்ல காலம் வரப்போகிறதென்று’ போராடும் பல மக்களின் முகத்திலே திட உறுதியையும் நாணயத்தையும் நான் கண்டேனுதலால், அது நல்ல நாடாகும். கடைசியாக, பெருகி வரும் செல்வமும் கல்வியும் சுதந்தரமும் ஜனநாயகமும் பற்றிய கருத்துக்கள், உலகின் மிகப் புதிய நாடுகளுக்கு எவ்வளவு பொருந்துமோ அவ்வளவும் அதன் மிகப் பழைய நாடுகளுக்கும் பொருந்தும்

என்பதற்கொரு சின்னமாய்த் துருக்கி, தன்னைத் தானே அறிந்து கொண்டுவிட்டது என்பதை நான் கண்டேனாதலால், அது நல்ல நாடாகும்.

அங்காரா, உலகின் மிகப் பெரிய தலைநகரங்களுள் ஒன்றல்ல. அது ஒரு நவீன நகரமாயிருக்கிறது. ஆனால், அதன் ஒரு பகுதி மட்டும், ஏற்கனவே துருக்கியர் எவ்வளவு தூரம் முன்னேறியிருக்கிறார்கள் என்பதை ஞாபகப்படுத்தும் ஓர் அடையாளம் போல, ஒரு மலைக்குன்றின்மீது புராதனக் கிராமமாக இருந்துவருகிறது. மற்றொரு மலைக் குன்றின்மீது தான், புதிய துருக்கிக் குடியரசின் தந்தையான அட்டாடர்க், தமது சொந்த வீட்டைக் கட்டிக்கொண்டார். அங்கிருந்து புறப்பட்டு, மரநிழல் படிந்து அகன்ற ஐந்தடியோடு கூடிய தெருக்கள் வழியே கீழே வந்தால், நகரின் நடு மையத்துக்கு நாம் வரலாம். வீதிகளெல்லாம் மோட்டார்க் கார்கள் நிறைந்திருக்கின்றன; ஜனங்களெல்லாம் நல்லுடையணிந்து, சுறுசுறுப்பா யிருக்கிறார்கள்; கட்டடங்களெல்லாம் புதிதாய், அழகா யிருக்கின்றன.

ஒரு நாள், நான் அங்காராவை விட்டுப் புறப்பட்டுக் கிழக்கே நாற்பது மைல் தூரத்தில் உள்ள நாட்டுப்புறத் துக்குச் சென்றேன். நகர எல்லைக்கு அடுத்தாற்போல் சென்றால், புராதனமான அனடோலியாப் பிரதேசத்துக்குள் நாம் வந்து சேருகிறோம். இந்த நாட்டுப்புறப் பிரதேசத்திலே, ஓர் உரமும் உறுதியும் இருக்கின்றன. பழமையான ஆட்டொமான் தலைநகரும் இப்போது இஸ்டான்புல் என்று அழைக்கப்படுவதுமான கான்ஸ்டாண்டிநோப்பிளை விட்டு, அனடோலியச் சமவெளிக்கு நடுவிலே யுள்ள இந்த நகரை, அட்டாடாக் தமது தலைநகராகச் செய்துகொண்ட காரணத்தை, இதிலிருந்து நாம் புரிந்துகொள்ளலாம்.

ஒரு விஷயம்; இந்தப் பிரதேசத்தைப் படையெடுத்துத் துத் தாக்குவது கடினம். இத்தகைய ஒரு நாட்டுப்புறப் பிரதேசத்தின்மீது யந்திர சாதனங்களோடு படையெடுத்து வரும் படைகளை, நல்ல பயிற்சியும் தளவாடங்களும்

கொண்ட ஒரு சிறிய சேனையை வைத்துக்கொண்டே எதிர்த்து, நீண்டகாலம் சமாளிப்பது சாத்தியம்.

குன்றுகளிலே ஆட்டிடையர்கள், தங்கள் மந்தைகளை மேய்க்கிறார்கள். ஆனால், துருக்கி, ஒரு குடியரசு ஆனதிலிருந்து பதினைந்து ஆண்டுகளாகக் கஷ்டப்பட்டு இயற்றி வரும் புனர் நிர்மாண வேலையின் அடையாளம், நாட்டுப் புறத்திலே கூடக் காணப்படுகிறது. கிழக்குத் திசைக்கு ஒரு பெரிய சாலையைப் போட, பல மனிதர்கள் வேலை செய்கிறார்கள். இந்தச் சாலையிலே, நாங்கள் மோட்டாரில் செல்லுகையில், ஸ்டீம் ரோலர்களும், கல் உடைக்கும் யந்திரங்களும் வேலைசெய்யக் கண்டோம். ஏராளமான நவீனப் பாய்ச்சல் ஆதாரங்கள் தென்பட்டன. அந்தப் பாய்ச்சலாதாரங்கள், பின்னால் ஒரு காலத்தில், அனடோலியாவின் மிகப் பெரும் பகுதிகளை, செழிப்பு மிகுந்த விவசாயப் பிரதேசமாக மாற்றிவிடத் தக்கவை. பொது ஜனக் கல்வி, பாய்ச்சலாதாரம், ஆலைத்தொழில் வளர்ச்சி ஆகியவற்றில் தாங்கள் முன்னேறியுள்ளது குறித்து, துருக்கியர் பெருமை கொள்ளுகிறார்கள். தாங்கள் செய்து வரும் வேலையை நாம் பார்க்க வேண்டுமென்பதில், அவர்கள் மிகுந்த ஆவலா யிருக்கிறார்கள்.

நாங்கள் ஒரு கிராமத்துக்குச் சென்றோம். முக்கியமாக உபாத்திமைப் பயிற்சிப் பள்ளிக்கூடம் ஒன்றைப் பார்ப்பதற்காகவே சென்றோம். அங்கே கிராமத்தின் ஊற்றைச் சுற்றி, அவர்கள் ஒரு வீடு கட்டியிருக்கிறார்கள். அந்த வீடு, சாந்தும் கண்ணாடியும் கொண்டு கட்டப்பெற்றிருக்கிறது. கிராமத்தின் நடுவிலே, அது நிற்கிறது; அதன் ஒரு பக்கத்தில், குடி தண்ணீர் இருக்கிறது; மறுபக்கத்தில், துணி துவைக்கும் துறை அமைந்திருக்கிறது; கிராமத்துக் குழந்தைகள் விளையாட ஒரு நீரோடையும் இருக்கிறது. மனோகரமான இந்த முன்னேற்றத்தை நான் பார்த்துக்கொண்டு நின்ற போது, ஒரு வீட்டின் மாடியிலே, முகமூடியணிந்த சில பெண்கள், தங்கள் பழமையான முறையில் அசைவற்ற சித்திரம் போல் உட்கார்ந்திருக்கக் கண்டேன். ஆனால்,

என்னைப் போலவே பல சிறுவரும் சிறுமிகளும், அந்தத் தெளிந்தநீர் ஊற்றை-புதுமையும் நேர்த்தியும் உற்சாகமு மான அந்த ஊற்றை - பார்த்துக்கொண் டிருப்பதையும், நான் கண்டேன்.

நான் தங்கிய சொற்ப காலத்துக்குள்ளே எவ்வளவு அதிகமாக முடியுமோ அவ்வளவு அதிகமாக, துருக்கியின் ஆலைத் தொழில்களைப் பார்த்தேன். துருக்கியை ஒருவேளை வந்து தாக்கக்கூடிய நாடான ஜெர்மனியின் ஆலைத் தொழில்களைப்போல் துருக்கியின் ஆலைத் தொழில்கள் அவ்வளவு சிறப்பாக இல்லை. ஆனால், அவற்றின் நயமும், வருங்கால வளர்ச்சிக்கு அவை தரும் நம்பிக்கையும், நம் மனத்தைக் கவர்கின்றன. விமான நிலையங்களையும் யந்திர சாதனங்கள் நிறைந்த ராணுவ தளவாடங்களையும் ரெயில் பாதைகளையும் மிக முற்போக்கான கட்டடங்களையும், நான் பார்த்தேன். இவை அனைத்தையும், இவற்றுக்கு மேலும், நான் கண்டேன். அதன்மேல், ஆலைத்தொழில் புரட்சி என்பது எந்த ஒரு தேசத்துக்கும் ஜாதிக்கும் ஏகபோக உரிமை அல்ல என்ற நிச்சயம் எனக்கு மீண்டும் உறுதிப் பட்டது. நவீன யந்திரங்கள், மத்தியக் கிழக்கின் கோடிக் கணக்கான மக்களை விழிப்பூட்டி விட்டன - விழிப்பூட்டி, கலக்கியும்விட்டன. இந்தத் துருக்கியருக்கோ, அவை ஏற்கனவேயே புதிய திறமைகளையும் புதிய பசிகளையும் அளித்துவிட்டன. இப்போது, அவர்கள் புதிய உலகத்தை விரும்புகிறார்கள்; அதன் கருவிகளைக் கையாளக் கற்று வருகிறார்கள். அவர்களை இனி நிறுத்தி விடுவதென்பது முடியாத காரியம்.

இந்த யுத்தத்துக்கு நடுவிலே, துருக்கியின் தொழில், பொருளாதாரம் ஆகிய இரண்டின் புனர் நிர்மாணத்தையும் விட, இன்னும் அதிகமாகப் பிரமிப்பூட்டுவது மற்றொன்று. சமூக வாழ்க்கையிலும் கல்வியிலுமே ஒரு பெரிய புரட்சி துருக்கியில் நிகழ்ந்துகொண் டிருக்கிறது. மக்களின் உடை தான் எந்த நாட்டிலும் பார்க்க வந்த யாத்திரிகர் கண்ணுக்கு மாறுதல் மனப்பான்மையைக் காட்டும் புறக்குறியாகத்

தென்படுவது. பாக்தாத்தில் நான் பார்த்த சர்க்கார் அதிகாரிகளில் சிலர்தான் மேல்நாட்டு முறையில் உடுப்பணிந்திருந்தார்கள்; மற்றவர்களோ ஐதீகமான முஸ்லிம் அங்கிகளையே தரித்திருந்தார்கள். சீனுவில், குடியரசுத் தலைவர் புராதன சம்பிரதாயங்களையும் உடைகளையும் அநுசரிப்பதற்காக, அவருக்கு மிகுந்த மரியாதை செலுத்துகிருர்கள். சியாங்கின் மனைவியும் சீனமுறையிலேதான் உடுத்துகிருள். என்ருலும், நாகரிக முறையின் சாயையைக் கொஞ்சமாவது காட்டி விடுகிருள். துருக்கியிலோ ஒவ்வோர் அதிகாரியும், முற்றும் மேல்நாட்டு உடுப்பையே பெருமையோடு அணிகிருர். மாறுதலுக்கு அறிகுறியாக, பெஸ்குல்லாய் அடியோடு சட்ட ரீதியாய் ஒழிந்துவிட்டது. ஏதோ அபூர்வமாகச் சில பெண்கள் முகமூடி தரிக்கிருர்கள். ஆனுல், இவர்கள் பழம்பசலியாய்த் தோன்றுகிருர்கள். புராதனக் கீழ்நாட்டின் முகத்திரைகளை, அட்டாடர்க்கின் தலைமையிலும் அவருக்குப் பின்வந்த, திறமையும் தீர்மானமும் கொண்ட மனிதர்களின் தலைமையிலும், துருக்கியர் அடியோடு விலக்கி விட்டார்கள். தங்கள் ஜனங்களின் முகங்களிலிருந்து, அந்தத் திரைகளை அவர்கள் நீக்கிவிட்டார்கள். அந்த முகங்களிலே இன்று ஒளி வீசுகிறது; அந்த ஒளி நிரந்தரமாக நிலைத்து நிற்கும் என்றே நமக்குத் தோன்றுகிறது.

கட்சி விருதுகளோ, தொண்டர் உடுப்புக்களோ, பாமர மக்களின் வெறியாட்டமோ இல்லாமலே புராதன வழக்கத்திலே இந்தப் புரட்சி ஏற்பட்டுவிட்டது. வேறு எந்த நாட்டையும் தாக்காமலே, இந்தப் புரட்சியை அவர்கள் சாதித்துவிட்டார்கள்.

இந்த விஷயத்தில், அமெரிக்கா கொஞ்சம் விசேஷப் பெருமை கொள்ளலாம். இஸ்டான்புல் நகருக்கு வெளியே ராபர்ட் கல்லூரி இருக்கிறது. துரதிருஷ்டவசமாக, அதை நான் பார்க்க முடியவில்லை. பல வருஷங்களாகவே, சர்வ தேச சமரசமான கல்வித்துறையில், தன்னலமற்ற ஒரு பரீட்சையை, அந்தக் கல்லூரி இன்றைக்கும் செய்து வருகிறது. அதில் உயர்தரப் பட்டம் பெற்ற பட்டதாரிகள்,

துருக்கியின் மிக முக்கியமான உத்தியோகங்களிலே அமர்ந்திருக்கிறார்கள். அமெரிக்க உபாத்தியாயர்கள் தங்களுக்கு அளித்த ஞானத்தையும் கருத்துக்களையும், அந்தப் பட்டதாரிகள் நல்ல காரியங்களுக்குப் பயன் படுத்துகிறார்கள். அந்த உபாத்தியாயர்கள் மூட நம்பிக்கையையும் அறியாமையையும் உலகின் ஒரு பகுதியிலே போராடி ஒழிப்பதன்மூலம், முழு உலகத்தையுமே செல்வச் செழிப்படையச் செய்யவேண்டும் என்ற ஒன்றைத் தவிர, வேறெந்த நோக்கமும் இல்லாதவர்கள்.

ஆசியா எங்குமே இந்தக் கல்விப் பிரச்னை எவ்வளவு கடினமாக இருந்துவருகிறது என்பதை, அமெரிக்கர்கள் கூட நன்றாய் அறிந்துகொள்வது கடினம். கலாசாலைகளும் புத்தகங்களும் நமக்குச் சகஜமாய்த் தோன்றிவிடுகின்றன. நம் குழந்தைகள், மாணவர்கள் ஆகிவிடுகிறார்களே, அது ஏன் என்றோ, எப்படி என்றோ நாம் ஆச்சரியப்படுவதில்லை.

துருக்கியின் நாட்டுபுறப் பிரதேசத்திலே கல்வி, ஜனங்களுக்குச் சகஜமாய்த் தோன்றுவதில்லை. அங்கேதான் கல்வியின் பெருமையை நீங்கள் காண்கிறீர்கள். நான் சாமானியமான ஒரு சிறு பள்ளிக்கூடத்தில் நின்றேன். குழந்தைகளும் உபாத்தியாயர்களும் சேர்ந்தே அந்தப் பள்ளிக்கூடத்தைக் கட்டியிருக்கிறார்கள். அங்கே துருக்கிய வாலிபர்கள், தங்கள் தேசீயப் பாடலைப் பாடக் கேட்டேன். அவர்கள் தங்கள் சொந்த தேசீய கிராமிய நாட்டியங்களைக் கற்பதைப் பார்த்துக்கொண் டிருந்தேன். அனடோலியாவில் ஒரு காலத்தில் செழிப்புற்றிருந்த புராதன வித்தைகளைக் குறிக்கும் அபிநயங்கள், அந்த நாட்டியங்களிலே நிறைந்திருந்தன. ஆனால், நவீனக் கல்வி முறைகளைப் பின்பற்றியே அவர்களுக்குப் போதனை நடந்தது. சாஸ்திரீயமான பயிர்த்தொழிலை அவர்கள் கற்று வந்தார்கள். இந்த விதமாக ஜனங்களுக்கு நூலறிவுக் கண்ணைத் திறந்துவைப்பது, சரித்திரத்திலேயே மிக முக்கியமான சம்பவம் என்று நான் திடமாய் நம்புகிறேன். இது ஒரு புதிய மார்க்கத்திலே திரும்பிச் செல்வது போல் ஆகும். இதிலிருந்து பின்வாங்கமுடியாது.

நவீனத் துருக்கி, வாலிபப் பருவத்தில் உள்ளது; அதன் மக்களுக்கு, சுதந்தரத்திலும் சுய ஆட்சியிலும் ஏற்பட்டிருக்கும் அநுபவம் சொற்பமேயாகும். என்றாலும், அதைக் காப்பாற்றுவதற்காக எத்தகைய போராட்டமும் நடத்தலாம் என்று ஜனங்கள் நினைக்கக்கூடிய ஒரு யோக்கியதை, அதற்கு உண்டாகிவிட்டது. நாம் பேசும் ஜனங்களின் முகத்திலெல்லாம் இந்த உணர்ச்சி பிரதிபலிப்பதைக் காணலாம்; அவர்களின் பேச்சிலெல்லாம் இந்த உணர்ச்சி தொனிப்பதை நாம் கேட்கலாம். அங்காரா போன்ற அவர்களின் புதிய நகரங்களிலும் சரி; துருக்கி நாட்டுப்புறப் பிரதேசங்களிலே நான் கண்டது போன்ற அவர்களின் பழமையான கிராமங்களிலும் சரி, இந்த யோக்கியதை பளிச்சென்று பிரகாசிக்கிறது.

ஆனால், துருக்கியர் போரிட விரும்பவில்லை; அது இயற்கை. ஜெர்மன் படைகள், தங்கள் நாட்டைப் படையெடுத்து வந்தால் தாங்கள் புதிதாகச் சாதித்திருக்கும் சாதனைகளெல்லாம் எவ்வளவு அநியாயமாய் நாசமாகிவிடும் என்பதை, துருக்கியர் நன்கு அறிவார்கள். துருக்கி ஒரு சிறிய நாடு; ஒரு கோடியே அறுபது லட்சம் ஜனங்களைக் கொண்டது. தங்கள் சொந்த எல்லைகளுக்கு அப்பால் நாடு பிடிக்கும் ஆசை, துருக்கியருக்குக் கிடையாது. இந்த உலக மகா யுத்தத்தில் தாங்கள் தலையிடுவதால், இதைப் பிரமாதமாய் ஆட்டிவைத்து விடலாம் என்ற மயக்கம் எதுவும் அவர்களுக்கில்லை. ஆகையால், ஆயுத பாணிகளாய் நடுநிலைமை வகிக்கும் கொள்கையை அவர்கள் கடைப் பிடித்திருக்கிறார்கள். சென்ற ஆகஸ்டு, செப்டம்பர் மாதங்களில், துருக்கிச் சேனையில் பத்து லட்சம் வீரர்களுக்குமேல் இருந்தார்கள். சில வகை நவீன ராணுவ ஆயுதங்களில் அவர்களுக்குக் குறையுண்டு. ஆனாலும், அந்தக் குறையை, அவர்களுடைய சேனையின் உறுதியான அமைப்பும், பயிற்சிச் சிறப்பும் ஈடு செய்யக் கூடியவையா யிருக்கின்றன. துருக்கி ராணுவத்தின் உதவித் தலைவரோடு நான் சம்பாஷித்தேன். நாட்டிலே நான் சென்ற இடமெல்லாம் அவருடைய சேனா வீரர்களை,

காவலிலும் யுத்தப் பயிற்சியிலும் ராணுவக் கலாசாலை களிலும் கண்டேன். கீழ்நாட்டை வெல்லுவதற்கான மார்க்க மாகத் துருக்கியை ஆக்கிரமிக்க விரும்பும் எந்த நாட்டுக்கும், இந்த வீரர்கள் பேரிடைஞ்சலா யிருப்பார்கள் என்று எனக்கு மகிழ்ச்சி உண்டாயிற்று.

துருக்கியின் போர்வீரர்களைப் பார்த்தது மாத்திரம் அல்லாமல், அந்த நாட்டுச் சர்க்காரின் தலைவர்களோடும் நெடுநேரம் நான் சம்பாஷித்தேன். தங்கள் நாட்டைக் காப் பாற்றுவதற்காக, தாங்களும் ஒருவேளை யுத்தத்திலே இறங்க வேண்டி நேருமோ, நேருமானால் அது எந்தச் சமயத்தில் நிகழுமோ என்றறியாமல், பயமும் கவலையும் சூழ்ந்தவர் களாய், ஐரோப்பாவையே அந்தத் தலைவர்கள் கூர்ந்து கவனித்துக்கொண் டிருக்கிறார்கள்.

இந்தக் கவலையோடு வாழ்வது சகிக்க முடியாத சங்கட மாகும். ஆனால், எவனாவது வந்து அவர்களின் அமைதிக்கும் உறுதியான பத்திரத்துக்கும் பங்கம் விளைவித்தானானால், மகா கடுமையான, மூர்க்கமான எதிர்ப்பைத்தான் அவன் காண் பான். இதில் துளிச் சந்தேகத்துக்குக்கூட, துருக்கியில் உள்ள ஒரே ஒரு மனிதனும் இடம் கொடுக்கவில்லை.

அந்நிய யாத்திரிகன் ஒருவனைப் பிரமிக்கச் செய்வதற் காகக் கட்டிய கதை என்று, பின்வருவதை நான் நினைக்க வில்லை. நான் ஸரகோக்களு என்பவரோடு பேசினேன்; திறமையும் வசீகரமும் படைத்த அவர், இன்று துருக்கியின் பிரதம மந்திரியா யிருப்பவர். நௌமென்பே என்பவருடன் பேசினேன்; மதி நுட்பமும் கீர்த்தியும் பெற்ற ராஜதந்திரி யான அவர், ஸரகோக்களுக்குப் பின் அயல்நாட்டு உறவு களைக் கவனிக்கும் மந்திரி ஆகியிருக்கிறார். சர்க்காரின் வேறு பல அங்கத்தினர்கள், துருக்கிப் பத்திரிகைக்காரர்கள், போர் வீரர்கள், குடியானவர்கள், தொழிலாளர்கள் ஆகிய எல்லா ரிடமும் நான் பேசினேன். அத்தனை பேர் சொன்னதும் ஒரே கதைதான்: "எங்களுக்கு யுத்தம் வேண்டாம்; அதில் எவ்விதமாகவும் பங்கெடுத்துக்கொள்ள நாங்கள் விரும்ப வில்லை. ஆனால், எங்கள் எல்லையைத் தாண்டும் முதல் சோல்

ஜரை அங்கேயே சுட்டுக் கொல்வோம். நாங்கள் சுடுவதை நிறுத்துவதற்கு முன்னே, எங்கள் குன்றுகளின் மீதும் சாலை கள் மீதும் காடுகளுக்குள்ளும் எண்ணற்ற அந்நியர்களின் பிணங்கள் குவிந்துவிடும்.''

'அந்நியர்கள்' என்ற வார்த்தையையே, துருக்கியர் அனைவரும் உபயோகித்தார்கள். எந்தத் திசையிலிருந்தோ எந்த நாட்டினரோ, எவர் வந்து தாக்கினாலும் சரிதான்; அவர்களுடன் சண்டையிட்டே தீருவோம் என்று துருக்கியர் அனைவரும் உறுதியாய்க் கூறினார்கள். என்றாலும், அவர் களுக்குத் தற்சமயம் உள்ள பயமெல்லாம் ஒரே ஒரு திசையில் தான் பதிந்திருக்கிறது. இதை அவர்கள் சொல்லாமலே மிகத் தெளிவாய்த் தெரிகிறது. இன்று அவர்கள் நம்மிடம் பயப்படவில்லை. பிரிட்டனின் தோழர்களிடமும் அவர்கள் பயப்படவில்லை; ஏனெனில், பிரிட்டனின் தோழர்கள் துருக் கிக்கும் தோழர்கள்தான். ருஷ்யர்களின் இறுதி நோக்கங் களில் அவர்களுக்குக் கொஞ்சம் கவலையே; என்றாலும், அவதிப்படும் அந்த ருஷ்யர்களிடமும் அவர்கள் பயப்பட வில்லை. தற்போது அவர்களின் கவலையெல்லாம், மேற்குத் திசையிலேதான் இருக்கிறது; சென்ற சில ஆண்டுகளிலே ஐரோப்பாவில் நிர்மாணமாகி யிருக்கும் தலைக்கனம் கொண்ட ஒரு வல்லரசின்மீதுதான் - தங்கள் நாட்டின் வழி யாக ஆசியாவுக்குள்ளே புகுந்துவிடுவதாய்ப் பயமுறுத்திக் கொண்டிருக்கும் ஒரு ராஜ்யத்தின் மேல்தான் - அவர்கள் கவலையும் அச்சமும் கொண்டிருக்கிறார்கள். ஏனெனில், அவர் கள் சண்டையை விரும்ப வில்லை. ஆனால், அவர்கள் பீதி யடையவில்லை; வாய்க்கட்டை போட்டுச் சமாதானம் செய் வதிலும் அவர்களுக்குத் துளியும் இஷ்டமில்லை. அவர் களுடைய தலைநகரிலே, ஜெர்மனி இரண்டு முறை பெரிய 'சமாதானப் படையெடுப்பு' நடத்திப் பார்த்தது. இரண்டு முறையும் அதற்குத் தோல்விதான்!

நம்முடன் வியாபாரம் செய்ய அவர்கள் விரும்பு கிறார்கள்; சாமான்களை விற்க அவர்கள் தயாரா யிருக் கிறார்கள். உலகம் முழுவதும் விளையும் குரோமில் கால்

பங்கைத் துருக்கியில்தான் உற்பத்தி செய்கிருர்கள். அவர்களின் புகையிலையும், அவர்களின் பஞ்சும், மற்ற நாடுகளுக்கு மிகவும் தேவையா யிருக்கின்றன. இந்தச் செல்வங்களை வைத்துக்கொண்டு, தங்கள் நடு நிலைமையை, குறைந்த பட்சம் கொஞ்ச காலத்துக்காவது அவர்கள் காப்பாற்றி வர முடியும். அவர்களுக்கு உணவுப் பொருள் - முக்கியமாகக் கோதுமை - தேவையா யிருக்கிறது. அவர்களுக்குத் தொழிற் சாலைகளும் யந்திரங்களும் தேவை; சிரமப்பட்டு இதை நான் கண்டு பிடித்தேன். நான் திரும்பி வந்தது முதல், மிக அதிக மான உணவுப்பொருள்களையும் பிற தளவாடங்களையும், நாம் அவர்களுக்கு ஏராளமாய் அனுப்பி வருகிறோம். இது எனக்குப் பெரிதும் மகிழ்ச்சி தருகிறது. ஏனெனில், அவர்களுக்குப் போதிய அளவு பொருள்களைச் சப்ளை செய்யக் கூடிய ஒரே நாடு, நம் நாடுதான். துருக்கியின் இயற்கை வசதிகளெல்லாம் நம் எதிரிகளுக்குப் போய்ச் சேராதபடி, நாம் தடுக்கவேண்டும்; நம்மோடு நட்பாயிருக்க விரும்பும் அந்த நாட்டின் நடு நிலைமையை, நாம் பாதுகாக்கவேண்டும். இப்படிச் செய்வது நமக்கே நன்மையாகும் என்று நான் நம்புகிறேன்.

அதிலே எவ்விதச் சந்தேகமும் இல்லை. ஏறக்குறையப் பத்து வருஷ காலமாய், டாக்டர் கெப்பல்ஸும் அவருடைய நாஜிப் பிரசார யந்திரமும் பலமாய் இடித்துக்கொண்டே வந்தும், துருக்கி ஜனங்களின் போக்கு மாறவில்லை. அவர்கள் விழிப்படைந்து வருகிருர்கள்; உலகின் மகத்தான ஜனநாயக நாடுகளுடன்கூட மெல்ல மெல்ல - ஆனல் ஆழ்ந்த முறையில்- நெருக்கமான உறவுகளை அவர்கள் வளர்த்துக்கொண்டு வருகிருர்கள். துருக்கியர் நம் நண்பர்கள்; அவர்களுக்கு நம்மிடம் பிரியமும் வியப்பும் இருக்கின்றன; அவர்கள் நம்மைக் கண்டு அஞ்சவில்லை; பொருமைப்படவும் இல்லை. என்ருலும், தங்கள் நடுநிலைமையை, மிக்க நாணயமாகவே அவர்கள் கடைப்பிடிக்கிருர்கள். ஓர் உதாரணம் கூறுகிறேன். நான் உலகத்தை எந்த விமானத்தில் சுற்றி வந்தேனே அந்த ஐக்கிய அமெரிக்க ராணுவ விமானத்தில், தங்கள் நாட்டுக்குள்

என்னை வரவிட அவர்கள் மறுத்துவிட்டார்கள். கெய்ரோவில் அகில அமெரிக்கப் பிரயாணிகள் விமானத்துக்கு, நான் மாற வேண்டியதாயிற்று. அதில்தான், மத்தியதரைக் கடலின் கீழ்க்கரை மீதும், குளிரும் மேடு பள்ளமும் நிறைந்த டாரஸ் மலைகளின் மேலும் பறந்து, நான் அங்காராவுக்குச் செல்ல வேண்டிய தாயிற்று. நாங்கள் இறங்கிய விமான நிலையத்தில், லிபரேட்டர் வகையைச் சேர்ந்த மூன்று அமெரிக்கக் குண்டு விமானங்கள் சிறைப்படுத்தப் பெற்று வெகு ஜாக்கிரதை யாகக் காவல் செய்யப்பட்டு வந்ததை, நாங்கள் கண்டோம். ருமேனியாவில் ப்ளீஸ்டீ எண்ணெய்க் கிணறுகளைப் படை யெடுத்துவிட்டு வந்த அமெரிக்க விமானங்களைத்தான், பலவந்தமாக இறங்கச் செய்து, இவ்வாறு சிறைப்படுத்தி யிருந்தார்கள்.

ஆனால், நடுநிலைமையை இவ்வளவு கண்டிப்பாய் அவர்கள் கைக்கொண்டாலும், அவர்களின் அன்பைப் பற்றி யாரும் சந்தேகிக்க முடியாது. நான் துருக்கியில் இருந்த போது, என் வரவைப்பற்றி, அச்சு நாடுகளின் ரேடியோ புகார் செய்தது. இதற்கு வெகு சுலபமாய்ப் பதில் சொல்ல லாம் என்று, பத்திரிகை நிருபர்களிடம் நான் கூறினேன். அதாவது: "எனக்குப் போட்டி அபேட்சகராக ஜெர்மன் பிரதிநிதி ஒருவரை இங்கே அனுப்பும்படி, ஹிட்லருக்கு அழைப்பு விடுங்கள்" என்றேன். இவ்வாறு நான் சொன்னது, துருக்கி சர்க்கார் அதிகாரிகளுக்கெல்லாம் வேடிக்கையாக இருந்தது என்று பின்னால் அறிந்தேன்.

ஒரு விஷயம் ரசமாயிருந்தது. தேசீயத்தைப் பல்லவி யாகக் கொண்டுதான், துருக்கியில் அநேக விஷயங்கள் சாதிக்கப்பெற்றிருந்தன. என்றாலும், தன்னுடைய உடனடி யான தேவைகளுக்கு மேலேயும், புறம்பாகவும், சர்வதேச ஒத்துழைப்பு அவசியம் என்பதை, நான் சென்ற வேறெந்த நாட்டையும்விட அதிகமாக, துருக்கியும் அதன் அதிகாரி களும் ஒப்புக் கொண்டார்கள். பிரதம மந்திரியோடும், அயல் விவகாரங்களைக் கவனிக்கும் மந்திரியுடனும், பொதுஜன சேவை புரியும் பிரபல தலைவர்களோடும் நான் நடத்தி

நீண்ட மனம் விட்ட சம்பாஷணைகளிலெல்லாம், இந்த விஷயத்தை எனக்கு அவர்கள் அழுத்தமாய்த் தெரிவித்தார்கள்.

எல்லாத் தலைநகரங்களிலும் போலவேதான், இங்கேயும் ஒரு சர்வதேசச் சபையின் விசித்திரமான நடவடிக்கைகள் காணப்பட்டன. ஒரு நாள் இரவு அந்நிய இலாகா மந்திரி நௌமென்பே, அங்காராவுக்கு வெளியே ஒரு விருந்து அளித்தார். அட்டாடர்க்கின் நாட்டுப்புற விடுதி அது. நகர எல்லைகளுக்கு அப்பால் அவர் தொடங்கிய ஒருமாதிரிப் பண்ணையும் பால்பண்ணையும் அங்கே இருந்தன. மாதிரிப் பண்ணை என்றுதான் அதை அவர்கள் என்னிடம் சொன்ஞர்கள். ஆனுல், நான் பார்த்ததெல்லாம் நவீனமான ஓர் அழகிய அரண்மனையேயாகும். அந்த அரண்மனை ஒரு குன்றின் மீது இருந்தது. தூரத்திலே மின்னிக்கொண்டிருந்த அங்காரா தீபங்களை நோக்கிச் சரிந்த பாதைகளுடன் கூடிய பூந்தோட்டங்கள் சூழ்ந்திருந்தன.

இந்த மாளிகையை, சர்க்கார் விருந்துகள் நடத்தும் இடமாக, அந்நிய இலாகா மந்திரி இப்போது உபயோகிக்கிருர். இதன் ஓர் அறையில், அட்டாடர்க் உபயோகித்த ஒரு டெலிபோன் இருக்கிறது. அது கெட்டித் தங்கத்தால் செய்யப்பெற்றிருக்கிறது. மற்ருேர் அறையில், பழமையான துருக்கிச் சமையல் யந்திரம் ஒன்று இருந்தது. ஒரு சமையற்காரன், பிரம்மாண்டமான மாமிச உருளை ஒன்றை, திறந்த கரித்தணல்மீது மெல்ல மெல்லத் திருப்பித் திருப்பி வாட்டிக் கொண்டும், வெந்த பகுதியைச் சிறு சிறு துண்டுகளாக நறுக்கிச் சோற்றுக் கப்பறைகளிலே தள்ளிக்கொண்டும் இருந்தான்.

எங்களுக்கு விருந்தளித்த நௌமென்பே, பிரதம நாட்டிய மண்டபத்தில் நின்றுகொண்டிருந்தார். அந்நிய நாட்டு உறவுகளைக் கவனிப்பதில் இந்தத் தலைமுறையிலே மிகச் சிறந்த யோக்கியதையுள்ள ராஜதந்திரிகளில் அவரும் ஒருவர். அவர் சாதித்துள்ள காரியங்கள் அதைக் காட்டுகின்றன. அவரைப் பார்த்தாலும், அவ்விதமே தோன்றுகிருர்.

அவருடைய உடல்நிலை நன்றாயில்லை. தேகம் வெளுத்து, நோஞ்சலா யிருக்கிறார். இதுவே, அவர் ஐரோப்பாவையும் உலகத்தையும் எவ்வளவு ராஜதந்திரத் திறமையோடு கவனித்து வருகிறார் என்பதை, அழுத்தமாய்க் காட்டுகிறது. அவர் தோற்றத்தைப் போலவே அவர் மனமும், சிறிது துக்கமும் சிறிது அவநம்பிக்கையும் சூழ்ந்து, மிக்க உரமும் மிக்க நுண்மையும் கொண்டதாய் விளங்கக் கண்டேன்.

நமது பக்கத்தைச் சேர்ந்த சகல நாட்டு ராஜதந்திரிகளும் அவரைச் சுற்றிலும் நாட்டியமாடுவதும் குடிப்பதும் பேசுவதுமா யிருந்தார்கள். அங்காராவில், பத்திரிகை நிருபர்களை யெல்லாம் கூட்டி, ஒரு பேட்டி அளித்தேன். அச்சு நாடுகளின் தூண்டுதல் பெற்ற பத்திரிகை நிருபர்களும் அதற்கு வந்தார்கள். ஆனால், விருந்துக் கூட்டங்களில், துருக்கியிலுள்ள ஐக்கிய நாடுகளின் ராஜதந்திரிகளோடு அச்சு நாடுகளின் ராஜதந்திரிகள் கலந்து கொள்வதில்லை. அவர்கள் இல்லாவிட்டாலும், அங்கே விதம் விதமான மனிதர்களுக்குக் குறைவில்லை. ஸோவியத் ஸ்தானிகர் ஏதோ காரியமாக மாஸ்கோவுக்குச் சென்றிருந்தார். ஆயினும், அவருடைய உதவி ஸ்தானிகர் இந்த விருந்துக்கு வந்திருந்தார். அவர் கொஞ்சமும் பிழையில்லாத மாலை உடுப்பு அணிந்துகொண் டிருந்தார். (என்னிடந்தான் மாலை உடுப்பு இல்லை.) ஆனால், அவரது முகம் கடுமையா யிருந்தது. அதில் சிரிப்பே கிடையாது. இதற்கு நேர் விரோதமாக, நெட்டையான ஓர் ஆங்கிலச் சீமாட்டி இருந்தாள். அவள் நாரைச் சிறகுகளால் தன்னை அலங்கரித்துக்கொண் டிருந்தாள். அவளுடைய புருஷன் கிரீட்டில் சண்டையிட்டார் என்று, பின்னால் தெரிந்து கொண்டேன். கிரீஸ், யுகோஸ்லாவியா இரண்டு நாட்டுப் பிரதிநிதிகளும் ஒருவர் தோளில் ஒருவர் கைபோட்டுக் கொண்டு, ஐரோப்பிய சமஷ்டிக்குத் தங்கள் திட்டங்களை எனக்குத் தெரிவிப்பதற்காக, என்னிடம் வந்தார்கள். இன்னொரு ராஜதந்திரியின் பெயர் எனக்குத் தெரியவேயில்லை. அவர் வெகு பரபரப்பாகவும், திகைக்கச் செய்யும் பிழையோடும், "கான் என்ற

அமெரிக்கப் பயில்வான் ஜோ லூயி என்ற பயில்வானை வீழ்த்திவிட்டான் என நான் கேள்விப்படுகிறேனே'' என்று என்னிடம் சொன்னார். ஆப்கானிஸ்தானின் ஸ்தானிகர் வெகு கம்பீரமான தோற்றமுடையவர்.

''வேட்டை யாடுவதற்காகவே, முக்கியமாக அங்காரா வில் நான் ஸ்தானிகர் பதவியை ஏற்றுக்கொண்டேன். துருக்கியின் முன்னெச்சரிக்கையான நடவடிக்கைகளால், என் ஆசை விளையாட்டான வேட்டைக்குத் தடையா யிருப் பதை இப்போது காண்கிறேன்'' என்று அவர் குறைப்பட்டுக் கொண்டார்.

நாம் வாழும் உலகத்தையே பிரதிபலிப்பது போன்ற இத்தனை குழப்பங்களுக்கும் நடுவிலே, எங்கள் விருந்தின் கர்த்தாவான நௌமென்பே, மதிப்பு ஓங்கியவராய்க் காணப் பட்டார். தமக்கு முந்திய அந்நிய இலாகா மந்திரி ஸரகோக் களுவைப் போலவே, அவரும் பிரபு வம்சத்திலே பிறந்தோ, உபதேசங்கள் கேட்டோ, தமது பலத்தைப் பெறவில்லை. அவர் நெடுங்காலமாக வாழ்க்கையிலே கடுமையாகப் போராடியவர். முதலிலே அட்டாடர்க், துருக்கி ஜனங்கள், இருவர் பக்கத்திலும் இருந்து போராடினார்; இப்போது துருக்கி மக்களின் பக்கத்தில் மட்டுமே இருந்து போராடு கிறார். அன்றிரவு அவர் அளித்த விருந்திலே நாங்கள் ஸ்காட்ச் விஸ்கி குடித்தோம்; ருஷ்ய மீன் கறி தின்றோம்; அமெரிக்க சங்கீதத்துக் கிசைய நடனமாடினோம். அப்போது, அவரை நான் கவனித்துக்கொண் டிருந்தேன். இந்த யுத்தத் திலிருந்து எழுந்து வரும் புதியதோர் உலகத்தின் மீதுதான் துருக்கி மக்கள் பிரியம் வைத்திருக்கிறார்கள் என்ற அபிப்பிரா யம், முன்னெப்பொழுதையும் விடப் பலமாய் அப்போது எனக்கு உறுதிப்பட்டது.

சிவந்த தலையும் நீலக் கண்களும் உடைய குழந்தைகளைத் துருக்கியிலே நான் காணும்போதெல்லாம், எனக்கு ஆச்சரிய முண்டாயிற்று; கடினமாய் இரும்பையொத்த முகம் படைத்த போர்வீரர்களைத் தெருக்களிலே கண்டேன். ராபர்ட் கல்லூரியில் மேன்மையான இனிய ஆங்கிலம் கற்ற

பள்ளிக்கூட உபாத்தியாயர்களையும் கண்டேன். இவர்களை யெல்லாம் போலவே, நெளமென்பேயும், பிரம்மாண்டமான ஓர் உள்ளக் கிளர்ச்சியின் உருவாகத்தான் எனக்குத் தோன்றி ஞர். மனித வர்க்கத்தில் பாதிக்கு மேற்பட்டவரின் வாழ்க்கையை இப்போது ஆழமாகக் கிளறிக்கொண் டிருப் பது அந்த உள்ளக் கிளர்ச்சிதான். அவர் புராதனமான ஒரு ஜனசமூகத்தின் பரம்பரையிலே, பெருமையான ஐதிகங் களோடு வந்தவர். ஆயினும் தம் சொந்தத் தலைமுறை யிலேயே, எந்த ஜனங்களும் ஒருபோதும் அநுபவித்திராத ஆழ்ந்த மாறுதல்களினிடையே அவர் வாழ்ந்து வருகிருர்.

கடந்த யுத்தத்தில், துருக்கி ஜெர்மனியின் பக்கத்தில் இருந்தது. அப்போதிருந்த ஆட்டொமான் ஏகாதிபத்தியம் அழிந்த பாழிலிருந்துதான், இந்தப் புதிய துருக்கிக் குடியரசு வளர்ந்தது. அந்த ஏகாதிபத்தியம் உலகத்தின் எந்த இடத் திலும் வெறுக்கப்பெற்றது. 'துருக்கியர்' என்ற வார்த்தையே கூட, பொல்லாத வார்த்தையாக மதிக்கப்பட்டது.

இந்த மாறுதல் வெகு விரைவாக நடந்துவிட்டது; அதனுல் நம்மிலே பலருக்கு இந்த மாறுதல் நடந்ததே தெரியவில்லை. சுமார் இருபது ஆண்டுகளாக அட்டாடர்க்கும். நெளமென்பே, ஸரகோக்ளு போன்ற அவர் நண்பர்களும் போராடி, தங்கள் ஜனங்களின் சக்திகளையும் ஆசைகளையும் புதுமையான வாழ்க்கை நெறிகளில் கால் கோலித் திருப்பி விட்டிருக்கிருர்கள்.

மத்தியக் கிழக்கு அராபியரையும், சீனத்து எல்லைகளைச் சுற்றி வாழும் மக்களையும், தென் மேற்குப் பசிபிக் தீவுகளின் மக்களையும், இந்தியர்களையும் போலவே, துருக்கியரும் ஒரு தலைமுறைக்கு முன்வரையில்,சுய ஆட்சியிலே அநுபவ மில்லா தவர்களாகத்தான் இருந்தார்கள். அவர்களுக்கு அநேகமாய்க் கல்வியே கிடையாது. வைத்தியமும் பொதுஜன சுகாதாரமும் மகாமோசமா யிருந்தன. நீண்ட காலமாய்ச் சுரண்டப் பெற்று வறுமையிலும் துன்பத்திலும் அவர்கள் உழன்று கொண்டிருந்தார்கள். மிகச் சில ஆண்டுகளிலே, தங்கள் வாழ்க்கைப் பழக்கங்களையும், புராதன வழக்கங்களையும்,

சிந்தனை நெறிகளையும், அவர்கள் அடியோடு மாற்றிக் கொண்டுவிட்டார்கள்.

துருக்கியிலே நான் அறிந்த ஒரு பெண்மணி, இந்த மாறுதல்களையெல்லாம் மிக ஆச்சரியமாக, பிரத்யட்சமாக, எனக்கு ஞாபகப்படுத்தினாள். அவள் கலப்பற்ற துருக்கிய மாது; வசீகரமானவள்; நடுத்தர வயதினள்; நன்றாய் ஆங்கிலம் பேசினாள். இந்தக் காலத்திலே எந்தப் புத்திசாலிப் பெண் பேசக்கூடியதற்கும் இணையாகவே, அவள் சம்பாஷித்தாள். அவள் இஸ்தான்புல் நகரில் வசித்தாள். ஆனால், அங்காராவுக்கு வந்து, துருக்கி சுப்ரீம் கோர்ட்டில் தொடர்ச்சியாகப் பற்பல வழக்குகளை, அவள் வாதித்துக்கொண் டிருந்தாள். ஏனெனில், அவள் ஒரு லாயர். துருக்கியிலேயே மிகப் பிரபலமான லாயர்களில் ஒருத்தி; நிறைந்த வருமானம் உடையவள். அவள் பெண்ணாயிருந்தும் ஒரு லாயராயிருப்பது பற்றி யாரும் பரபரப்புற்று ஏதும் சொல்லக் காணோம். உண்மையைச் சொன்னால், லாயர் படிப்புப் படித்துக்கொண் டிருந்த வேறு பற்பல இளம் பெண்களையும் நான் சந்தித்தேன். சர்க்கார் உத்தியோகஸ்தர்களின் பெண்களும் அவர்களிலே இருந்தார்கள்.

இத்தனையும் துருக்கியிலே. இங்கே, என் பாலியப்பருவ நாட்களை, நான் நினைக்காமலிருக்க முடியவில்லை. அது நாற்பது வருஷங்களுக்கு முன்தான் நிகழ்ந்தது. என் தாய் தீவிரமாக லாயர் தொழில் நடத்தினாள். பொது விவகாரங்களில் கருத்து எடுத்துக்கொண்டாள். அதென்னவோ, அமெரிக்காவைச் சேர்ந்த மத்திய ஆசியாவிலேயே, வழக்க விரோதமான, மகா விசித்திரமான செயலாக அவளது செயலை மக்கள் மதித்தார்கள்.

---

## 4. நம் கூட்டாளி ருஷ்யா

செப்டம்பர் 18-ஆம் தேதி வியாழக்கிழமை ஸோவியத் யூனியனுக்குள் புகுந்தேன். கஸ்பியன் கடலுக்கு மேலே, யூரல் நதியின் டெல்டாவிலுள்ள உப்புப் பூத்த செம்மண் குடிசை

களைக் கடந்து, குபிஷேவில் உள்ள வோல்கா நதிவரையில் பறந்து சென்றேன். போய்ச் சேர்ந்த பத்து நாளைக் கெல்லாம் ருஷ்யாவை விட்டுப் புறப்பட்டு விட்டேன். இலி நதியின் பக்கமாக, மத்திய ஆசியாவில் உள்ள டாஷ்கெண்டிலிருந்து சீனுவுக்குச் செல்லும் பழமையான பட்டு ரஸ்தா போகும் வழியே பறந்து சென்றேன். பின்னுல், சீனுவிலிருந்து ஊருக்குத் திரும்புங்காலையில், எங்கள் விமானம் ருஷ்யாவின் சைபீரியாவில் மீண்டும் மூன்று இடங்களில் இறங்கியது.

ருஷ்யாவில் நான் தங்கிய மொத்த நாட்கள் இரண்டே வாரம்தான். இதற்கு முன் ஒருபோதும் நான் அங்கே சென்றதே யில்லை. எனக்கு ருஷ்ய பாஷையில் ஒரு வார்த்தைகூடப் பேசத் தெரியாது. ஆனுல், எனக்குத் துபாஷ் வேலை செய்ய என்னேடு சில அமெரிக்கர்கள் இருந்தார்கள். ஸோவியத் யூனியனைப்பற்றி, நான் ஏராளமாய்ப் படித்திருந்தேன். ஆனுலும், அந்தப் பிரம்மாண்டமான தேசத்தில் நிகழ்ந்துகொண்டிருக்கும் மாறுதலைப்பற்றி, நான் படித்த எதுவும் எனக்கு மிகத் தெளிவான சித்திரம் தீட்டித் தரவில்லை. இறுதியாக, நான் ருஷ்யாவுக்குச் செல்லுமுன்னே, எனக்கு ஒரு சந்தேகம் உதித்தது. ருஷ்யா மிகப் பெரிய நாடு. அதில் நிகழ்ந்திருக்கும் மாறுதல், மிகமிகச் சிக்கலானதாகவேயிருக்கும். எனவே, ஒருவன் ஆயுள் முழுவதும் ஆராய்ச்சி செய்து, ஓர் அலமாரி நிறைய உள்ள புத்தகங்களைப் படித்த பிறகுதான், ஸோவியத் யூனியனைப்பற்றிய முழு உண்மையும் ஏதோ சிறிது புரியத் தொடங்கும் என்பது என் கருத்து. இந்தக் கருத்து, அங்கே நான் தங்கியிருந்த காலத்தில், வரவர அதிகமாக எனக்கு உறுதிப்பட்டது.

நான் காண விரும்பியதை யெல்லாம் காண்பதற்கு ஸோவியத் சர்க்கார் எனக்குச் சகல வசதியும் செய்து தந்தது. இது உண்மை. இதை நான் இங்கே குறிப்பிடுவது முறையாகும். அதன் கைத்தொழில் - யுத்த எந்திர சாலைகளையும் கூட்டுப் பண்ணைகளையும், கலாசாலைகளையும் புத்தக நிலையங்களையும் வைத்தியசாலைகளையும் போர்முனையையும்

என் இஷ்டப்படி பரிசீலனை செய்ய ஸோவியத் சர்க்கார் எனக்கு இடமளித்தது. ஐக்கிய அமெரிக்க மாகாணங்களில் எப்படி உலவுவேனோ அப்படியே சுதந்தரமாய் அந்த இடங்களுக்கெல்லாம் நான் போய் வந்தேன். பல கேள்விகள் கேட்டேன்; எதிர்பாராத கேள்விகளை, எதிர்பாராத மனிதர்களிடமெல்லாம், எவ்விதக் கட்டுத் திட்டமோ, இடையூறோ இல்லாமல் கேட்டேன். அத்தனை கேள்விகளையும், ருஷ்ய பாஷையை அறிந்து அதைப் பேசிய ஓர் அமெரிக்கனின் முன்னிலையிலே கேட்டேன்.

முதல் முதலாக ருஷ்யாவுக்குச் செல்லும் ஓர் அந்நியனுக்கு, சில சமயம், சென்ற காலத்தைப்பற்றிக் கட்டாயம் நினைக்கத்தான் தோன்றும். குபிஷேவில் இருக்கும் போது ஒருநாள் மாலை, புரட்சிக்கு முந்திய நாட்களைப் பற்றி நான் சிந்தித்தேன். வோல்கா நதியின் செங்குத்தான மேல் கரையின் ஓரமாக, தன்னந்தனியே நடந்து சென்றேன். கீழே ஓடுகிற நதியை நோக்கி யிருந்த நந்தவனப் பெஞ்சு ஒன்றில் போய் உட்கார்ந்தேன். செஞ்சேனையினர் தங்கி இளைப்பாறுவதற்காக, நதியோரத்திலே இருந்த ஒரு விடுதியை, சர்க்கார் எங்களுக்கு அளித்திருந்தது. அப்போது கடுங்குளிரா யிருந்தது. ஆனால், மரங்களில் இலைகள் அசைவற்றிருந்தன. கரைநெடுகிலும், ருஷ்யர்களுக்கு மிகவும் பிரியமான 'தாச்சாஸ்' என்ற நாட்டுப்புறப் பங்களாக்களும் பைன் மரங்களும் வரிசையாக நின்றன. கீழே ஓடும் மகாநதியைப் போலவே, அந்தச் சூழலிலும் ஓர் ஆழ்ந்த அமைதியும் வலிமையும் பொதிந்திருந்தன. அந்தப் பைன் மரங்களுக்கு அப்பால், நதியை ஒட்டி, ஸ்டாலின்கிராட் நகரம் வரையிலும் கோதுமை வயல் பரந்து கிடந்தது. அங்கே நாஜி டாங்கிகளையும் விமானங்களையும் எதிர்த்து நின்று, ஒரே கருங்கல் குவியலா யிருந்த பிரதேசத்தை ருஷ்யர்கள் பாதுகாத்துக் கொண்டிருந்தார்கள்.

என் காலடியிலே, நதிக்கரை யோரத்தில், அப்போது தான் ஒரு படகு, ஒரு சுமை பர்ச் மரக்கட்டைகளை இறக்கி முடித்தது. மரக்கட்டைகளைப் பல ஏக்கர் விஸ்தீர்ணத்துக்கு

ஒரே போர் போல் அடுக்கியிருந்தார்கள். டான் நதிமூலப் பிரதேசத்தை இழந்ததாலும், அகப்படும் நிலக்கரி முழுவதும் யுத்தக் கைத்தொழில்களுக்குப் போய்விடுவதாலும், வரப் போகும் மாரிக் காலக் குளிரில் ருஷ்ய நகரங்கள் இந்த விறகைத்தான் எரித்தாக வேண்டும். நதியின் நடுமத்தியில், எண்ணெய் நிரம்பிய டாங்கியைச் சுமந்துகொண்டு, ஒரு கப்பல் மெல்ல மெல்ல ஆற்று நீரை எதிர்த்துச் சென்று கொண்டிருந்தது. ஓர் இடைச் சிறுவன், ஆட்டு மந்தை யொன்றைக் கரையோடு ஓட்டிச் சென்றுகொண் டிருந்தான். அந்த ஆட்டுமந்தைக்குப் பின்னே இருந்த பாதையில், வாலிப ருஷ்ய ஸோல்ஜர் ஒருவன், சிறுசிறு கூழாங் கற்களைக் காலால் ஆற்றிலே எற்றிய வண்ணம், நடந்துகொண் டிருந்தான். அவன் தன் தொப்பியை எடுத்தபோது அவன் தலைமயிரைக் காற்று விசிறியது. அந்தச் சமயம் அவன் பின்னும் இளமையாய்த் தோன்றினன். அப்போதுதான், என். கே. வி. டி. யின் அதாவது ரகஸ்யப் போலீஸின் சின்னத்தை, அவன் தொப்பியிலே நான் கண்டேன்.

எனக்குப் பின்னே இருந்த விடுதியை, 1917-ஆம் வருஷத்துக்கு முன்னே கட்டிய கப்பல் சிற்பி, கோடை விடுதியாகவே கட்டி யிருப்பான் என்று நான் எண்ணி னேன். அவன் நாட்டிலே பெருஞ் செல்வாக்கு வாய்ந் திருந்தவனும்; கருமித்தனம் நிறைந்த கப்பல் முதலாளியாம்; தானிய வர்த்தகமும் செய்தவனும். நகரத்துக்கு ஸமாரா என்ற பெயர் இருந்த காலத்தில், வோல்கா நதிக் கப்பல் வியாபாரத்தின் மூலம் அவன் செல்வச் செழிப்பு அடைந் திருந்தானும்; முதல் ஐந்து வருஷத் திட்டத்தை வகுத்த ஸமாராப் புரட்சிக்காரனின் ஞாபகார்த்தமாகக் குபிஷேவ் என்ற பெயரை நகரத்துக்குச் சூட்டியபோது, சிற்பி ஏழைமை அடைந்துவிட்டானும். பக்கத்து வீடுகளைப் போல் அவ்வளவு அலங்கோலமடையாமல், இந்த விடுதி மாத்திரம் எஞ்சி நின்றது. செஞ்சேனைக்கு இது உபயோகமாக இருந்த தால்தான், இதைச் சீர்குலைக்காது விட்டிருக்கிறார்கள்! புரட்சியின் பெயரால் ஆண் பெண் அடங்கலும் அழிந்து

போன ஒரு சந்ததியை, சிதறிப்போன பல குடும்பங்களை, முறிந்து போன பல உறவுகளை, போரிலும் கொலையிலும் பசியிலும் மாண்ட பல்லாயிரம் மக்களை யெல்லாம் கண்ணால் காண்பது போல, இதைப் பார்த்தபோது, எனக்குத் தோன்றிற்று.

அந்தக் காலத்தின் உண்மையான கதை, அநேகமாய் ஒரு காலத்திலும் விவரமாய் வெளிவரப் போவதில்லை. ஏனென்றால், வெளி நாடுகளுக்குத் தப்பியோடிய மிகச் சிலர் போக, எஞ்சிய மேல் வகுப்பாரும் மத்திய வகுப்பாரும் ருஷ்யாவில் பூண்டற அடியோடு அழிக்கப் பெற்று விட்டார்கள். அந்தக் கதையை, இன்று ருஷ்யர்கள், ஒரு வீரச் சாதனையாகவே மதிக்கிறார்கள்.

இது எவ்வளவு தூரம் உண்மை என்பதை, ருஷ்யாவுக்கு வருவதற்குமுன்பு நான் அறிந்து கொள்ளவில்லை. ஏனென்றால், நவீன ருஷ்யாவைப்பற்றி மதிப்பிடும்போது ஒரு விஷயத்தைப் போதுமான அளவு நான் கணக்கிடவில்லை. அதாவது, சொத் தில்லாமல், கல்வியில்லாமல், நாட்டுப் பழக்க வழக்கங்களே சொத்தும் சுதந்தரமுமாய் வாழ்ந்துவந்த ஜனங்களின் மக்கள்தாம் இன்று ருஷ்யாவை ஆள்கிறார்கள்; அநேகமாய் ருஷ்ய ஜனங்கள் முழுவதும், அவர்களாகவே இருக்கிறார்கள். புரட்சிக்கு முன்பு தன் பெற்றோர் இருந்த நிலைமைக்கு இணையாகவோ அதை விட மேம்பட்டதாகவோ உள்ள நிலைமையில் வாழாத ஒரே ஒரு மனிதன்கூட இன்று ருஷ்யாவில் இல்லை. தன் நிலைமையை உயர்த்திய ஓர் ஏற்பாட்டை, எந்த மனிதனுமே நல்லதென்றுதான் நினைப் பான்; அதை உறுதி செய்யக் கைக்கொண்ட கொடூர நெறிகளை யெல்லாம் மறந்துபோகவும் அவன் முயல்வான். ருஷ்யனும் இப்படித்தான் செய்கிறான். இது இயற்கை. இதை அமெரிக்கனால் நம்ப இயலாதிருக்கலாம்; இது அமெரிக் கனுக்குப் பிடிக்காமலும் போகலாம். ஆனால், எல்லா இடத்திலும், எல்லாவிதமான ஜனங்களும் இதே மாதிரி தான் செய்கிறார்கள் என்பது மிகத் தெளிவாகும். மாஸ் கோவில் ஒரு நாள் மாலையை, அறிவைக் கிளறும் முறையில்

கழித்தேன். தங்கள் சமூக ஏற்பாட்டை அந்த இடத்திலேயே நியாயம் என்று காட்டும்படி, நவீன ருஷ்ய அறிஞர் குழு ஒன்றிடம் நான் கேள்விகள் கேட்டேன். அப்போது மேலே கண்ட உண்மைதான், தெள்ளத் தெளியப் புலனாயிற்று.

ஆனால், சென்ற காலத்தைப்பற்றி ஞாபகம் செய்து கொள்வதற்காக, நான் ருஷ்யாவுக்குச் செல்லவில்லை. ஜனாதிபதியிடம் ஒப்புக்கொண்ட திட்டமான வேலைகளைத் தவிர, பிரத்யட்சமான சில பிரச்னைகளுக்கு நானே விடை காண்பதற்காகவுமே சென்றேன். நமக்குப் பிடித்தாலும் சரி, பிடிக்காவிட்டாலும் சரி, ஸோவியத் யூனியன் நிலைத்து விட்டது. ஸோவியத் யூனியன் என்ற ஒன்று இருப்பதனாலேயே, அமெரிக்கரின் இந்தத் தலைமுறைக்குச் சில பிரச்னைகள் கண்கூடாகக் கிளம்புகின்றன.

இந்தப் பிரச்னைகளுக்குச் சில பதில்களை, குறைந்த பட்சம் எனக்குத் திருப்தியாகவாவது, நான் கண்டு கொண்டதாகவே நம்புகிறேன்.

முதலாவதாக ருஷ்யா, திறமை மிக்க ஒரு சமுதாயமாக இருக்கிறது. அது வேலை செய்கிறது. வாழும் யோக்கியதை அதற்கு இருக்கிறது. ஹிட்லரை எதிர்த்து ஸோவியத் யூனியன் நடத்தும் போராட்டமே, நம்மில் பலருக்கு இதை நிரூபித்துவிட்டது. ஆனால், ஆண்களும் பெண்களும் அடங்கி, நேர்த்தியாக வேலை செய்யும் ஒரு ஸ்தாபனம் என்ற முறையில், ஸோவியத் யூனியனுக்குள்ள பலத்தை இப்போதுதான் அறிந்தேன். ஸோவியத் யூனியனுக்கு இவ்வளவு பலம் இருக்கும் என்று நம்ப, ருஷ்யாவுக்குச் செல்லுமுன், நான் தயாராயில்லை. ஒளிக்காமல் சொல்லுவதானால் இதை நான் ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும்.

இரண்டாவதாக, இந்த யுத்தத்தில் ருஷ்யா நமது கூட்டாளியாக இருக்கிறது. ஹிட்லரின் பலத்தினால், பிரிட்டிஷாரையும் விட மகா கடுமையாய்ச் சோதனைக்கு ஆளானவர்கள் ருஷ்யர்கள்தாம். இந்தச் சோதனையிலே, அவர்கள் அற்புதமாய்த் தேறியிருக்கிறார்கள். பாஸிஸத்தின்மீதும், நாஜி முறையிலும், அவர்களுக்கு உள்ள விரோதம் உண்மை

யானது; ஆழமானது; கடுமையானது. ஹிட்லரை ஒழிக்க வும், நாஜிகளின் கேட்டை ஐரோப்பாவிலிருந்தும் உலகத்தி லிருந்துமே கல்லியெறியவும், இந்த விரோதமே அவர்களைத் திடசங்கல்பம் கொள்ளச் செய்திருக்கிறது.

மூன்றாவதாக, யுத்தத்துக்குப் பிறகு, நாம் ருஷ்யாவோடு சேர்ந்தே உழைக்க வேண்டும். அப்படி உழைக்க நாம் கற்றுக்கொள்ளாவிட்டால், குறைந்த பட்சம் உலகத்தில் சமாதானம் நீடித்திராது என்றுதான் எனக்குத் தோன்று கிறது.

ஸோவியத் யூனியனின் பல்வேறு பகுதிகளிலும் நான் கண்ட காட்சிகளும் கேட்ட விஷயங்களும், இந்த முடிவுகளை என் மனத்தில் பலப்படுத்திவிட்டன. ருஷ்யப் போர் முனையின் ஒரு பகுதியை நான் மிக நெருங்கிப் பார்வை யிட்டதால், செஞ்சேனை எத்தகைய காரியத்தைச் சாதித் திருக்கிறது என்பதைச் சிறிதளவு நேரிலே அறிந்துகொள்ள முடிந்தது. போர்முனைக்குப் பின்னே உள்ள பற்பல தொழிற் சாலைகளை நான் பார்த்தேன். போராடும் வீரர்களுக்கு அந்தத் தொழிற்சாலைகளிலிருந்து சாமான்களை இடையறாமல் அவர்கள் சப்ளை செய்கிறார்கள். இது, நம்முடைய ஏராள மான நிபுணர்களையெல்லாம் தோற்கடிப்பதா யிருக்கிறது. கூட்டு விவசாயப் பண்ணைகளையும் நான் கண்டேன். தொழிற் சாலைகளுக்கும் பண்ணைகளுக்கும் பின்னே, சோவியத் பத்திரி கைக்காரர்களையும் எழுத்தாளர்களையும் நான் கண்டு பேசி னேன். ருஷ்யர்கள் ஏதோ மத சம்பந்தமான ஒரு தர்ம யுத்தத்தில் கலந்திருப்பது போன்ற விந்தையான பரவச உணர்ச்சியை, இவர்கள் அவர்களுக்கு மூட்டி யிருக்கிறார்கள். பத்திரிகைக்காரர்களுக்குப் பின்னே கிரெம்ளின் அரண்மனை யில் ஸ்டாலினை இருமுறை கண்டு, நெடுநேரம் பேசினேன். பாட்டாளி மக்களுடைய சர்வாதிகாரத்தின் கீழே, அதிகாரம் உண்மையிலே எவ்விதம் செலுத்தப்படுகிறது என்பதைச் சிறிது அறிந்துகொண்டேன். கடைசியாக, இவர்களுக் கெல்லாம் பின்னே, ஒரு கோடியி லிருந்து மறு கோடி வரைக்குமுள்ள ருஷ்ய மக்களையும் நான் கண்டேன்.

இருபது கோடி மக்களில் சிலரை மாதிரி பார்த்தது பைத்தியக்காரத்தனமாய்த் தோன்றக் கூடிய அளவு சொற்பந்தான். என்றாலும், அத்தனை பேரையும் தற்செயலாகவே சந்தித்தேன்; அந்த நயம் அதில் உண்டு. ரிஷேவில் சண்டை நடக்கும் போர்முனைக்கு ஒரு தடவை பிரயாணம் செய்து வந்தேன். அது பெரிதும் அறிவு புகட்டக்கூடிய மிகச் சிறந்த அநுபவங்களில் ஒன்றாகும். மாஸ்கோவிலிருந்து ரிஷேவுக்குச் செல்ல, லெனின்கிராடுக்குப் போகும் பிரதான சாலையில், ஏற்கனவே ட்வெர் என்று வழங்கிய காலினின் வரைக்கும் செல்ல வேண்டும்; அங்கிருந்து மேல் புறமாக, கிளின் என்னும் இடத்தைத் தாண்டிச் சற்று அப்பால் உள்ள ஸ்டாரிட்ஸா என்ற நகரத்துக்குப் போகவேண்டும். நாங்கள் மிக்க வசதியான கார்களில் புறப்பட்டு, இரவில் பிரயாணம் செய்தோம். கருக்கல் வெளுக்கும் நேரத்தில், ஸ்டாபட்ஸாவில், அமெரிக்க உற்பத்தியான ஜீப் என்ற ராணுவக் கார்களுக்கு, நாங்கள் மாறினோம். ஜெனரல் பிலிப் பெமான்வில்லி, மேஜர் ஜெனரல் பாலெட் பிராட்லீ, கர்னல் ஜோஸப் எ. மிச்சேலா ஆகியவர்களும், என் கோஷ்டியைச் சேர்ந்த நான்கு பேர்களும், எங்களுடைய ருஷ்ய வழிகாட்டிகளும் என்னோடு இருந்தார்கள்.

ஜீப் என்ற கார், மகத்தான ஒரு புதுமையாகும். அது கண்டுபிடிக்கப்பெற்றதற்காக, ஓர் அமெரிக்கன் என்ற முறையில் நான் பெருமை அடைகிறேன். என்றாலும் ஒரு ஜீப்பில் பதினான்கு மணி நேரம் சவாரி செய்ததிலிருந்து, அதன் அமைப்புக்கள், கோணங்கள், மூலைகளெல்லாம் எனக்கு நெருங்கிய பரிசயம் ஏற்பட்டுவிட்டது. அது துள்ளித் துள்ளிச் சென்றதைக் கண்டபோது, எனக்கு அதன் அமெரிக்கப் படைப்பில் இருந்த பெருமை கொஞ்சம் மங்கி விட்டது. தொலையாத பல மணி நேரம், தொலையாத பல மைல் தூரம் போல் தோன்றிய மார்க்கத்தில், கடமுடா என்று தாவிக்கொண்டும் துள்ளிக் குதித்துக்கொண்டும் சென்றோம். வழியெல்லாம் கரடு முரடாய், சேறும் சகதியுமாய், சுவடுகள் விழுந்திருந்தன, நடுநடுவே சகதியைக்

கடக்க, மரக்கட்டைகளை வெட்டிப் போட்டிருந்தார்கள். அப்போதுதான், இந்தியாவின் ஆதிகாலப் பெரும் வழிகளின் நிலைமைகளைப்பற்றி என் தந்தை சொன்ன கதைகளின் அர்த்தமெல்லாம், எனக்கு முதல் முதலாகப் புரிய ஆரம்பித்தது.

கடைசியாக, ரிஷேவுக்கு வடக்கே, லெப்டினன்ட் ஜெனரல் டிமிட்ரி டி. வெலியுஷென்கோ என்பவரின் தலைமை ஸ்தலத்துக்கு, நாங்கள் போய்ச் சேர்ந்தோம். அவர் மிகப் பகட்டும் வசீகரமும் நிறைந்த மனிதர். எனவே, நான் சந்தித்த பிரமுகர்களிலெல்லாம், அவர் மிகத் தெளிவாக என் மனத்தில் நிற்கிறார். அவருக்கு வயது முப்பத்தெட்டுத்தான். ஆயினும், அவர் ஒரு லெப்டினென்ட் ஜெனரல் பதவி பெற்று, உலகத்திலேயே மகா முக்கியமான போர் முனைகளுள் ஒன்றிலே போராடும் வீரர்களைக் கொண்ட பதினாறு டிவிஷன்களுக்கு அதிபதியாயிருந்து நிர்வகிக்கிறார்!

நடுத்தர உயரம்; வலிமையான தேகக் கட்டு உள்ளவர்; பிறவிலேயே குதிரைச் சவாரி வீரர். கால்கள் வில் போல் வளைந்திருந்தன. இது அவர் கோஸாக் ஜாதியில் பிறந்தவர் என்பதைக் காட்டியது. சிவந்த மேனி. ஜீவ களை நிரம்பியவர்; சுறுசுறுப்பும், குறுகுறுப்பும் நிறைந்தவர். பூமிக் கடியிலே உள்ள தமது தலைமை ஸ்தலத்துக்கு, எங்களை அவர் கூட்டிச் சென்றார். தம்முடைய யுத்தப் படங்களையும், தம் துருப்புக்கள் எங்கெங்கே எப்படி நிறுத்தப்பெற்றிருக்கின்றன என்பதையும் எதிரியைத் தாக்குவதற்குத் தாம் கைக்கொண்டுள்ள திட்டத்தையும், அந்தக் கணத்திலே எங்கள் தலைக்கு மேலும் எங்களைச் சூழவும் நடந்துகொண்டிருக்கும் சண்டையில் நிகழும் மாறுதல்களையும் எல்லாம், அவர் எங்களுக்கு விளக்கிச் சொன்னார்,

அப்போது அவர், ரிஷேவ் நகரை வளைத்துக் கடந்து, வயாஸ்மாவுக்குச் செல்லும் ரெயில் பாதையைத் துண்டிக்கும் முயற்சியைத் தொடங்கி யிருந்தார். நாங்கள் ஐக்கிய அமெரிக்காவுக்குத் திரும்பி வந்து சேர்ந்த சில வாரத்துக்கெல்லாம், இந்தக் காரியத்தை, அவர் சாதித்துவிட்டார்.

லெனின்கிராட் முற்றுகையை நிவர்த்தி செய்த பிரமாதமான சண்டைக்கு, இது பூர்வாங்க வேலையாகும். ஒரு குன்றின் மீது தேவதாரு மரங்கள் அடர்ந்த ஒரு தோட்டத்தில் அமைந்த அவரது தலைமை ஸ்தலத்தில் இருந்த வண்ணம், நாங்கள் எங்களுக்கு எட்டு மைல் தூரத்திலிருந்த நகருக்கப்பால் குண்டு வீசிய பீரங்கிகளைப் பார்க்கவும், அவற்றின் சத்தத்தைக் கேட்கவும் முடிந்தது.

அவருடைய காரியாலய ஊழியர்களின் ஆர்வத்தைக் கண்டு நான் ஆச்சரியம் அடைந்தேன். தளபதி ஒரே ஒரு வாக்கியத்தைச் சொல்ல ஆரம்பித்தால் போதும்; உடனே, இரண்டு மூன்று துணை அதிகாரிகள் பரபரப்பாக வந்து, அவரது கட்டளைக்குக் காத்து நிற்கிறார்கள். பல இளம் பெண்களும் ஸ்திரீகளும் ராணுவ உடை தரித்துக்கொண்டிருப்பதைக் கண்டு நான் பிரமிப்புற்றேன். தந்தி, தபால், சுகாதாரம், போக்குவரத்து முதலிய துறைகளில் எல்லாம் அவர்கள் வேலை செய்தார்கள். இவற்றைத் தவிர தளபதியின் தலைமை ஸ்தலத்தைச் சுற்றியுள்ள மரங்களிலும், அதிகாரிகள் வேலை செய்யும் பூமிக்கடியில் வெட்டிய சுரங்கங்களிலும் எதிரி வருகிறானா என்று கவனித்துக் காவல் புரியும் பரண்களை நாங்கள் கண்டோம். அவற்றிலும் இந்தப் பெண்கள் வேலை செய்கிறார்கள்.

தலைமை ஸ்தலத்திலிருந்து, சண்டை நடக்கும் இடத்துக் கருகே, நாங்கள் காரில் சென்றோம். ஜெர்மனியின் பலமான ஸ்தானமாயிருந்து, ருஷ்யர்களால் சமீபத்தில் கைப்பற்றப் பட்ட ஓர் இடத்தை, நாங்கள் பார்வையிட்டோம். ஒரு குன்றின் ஓரத்தில் ஒரு காலத்தில் சின்னஞ்சிறு கிராமமாக இருந்த ஓர் இடம், மண்ணும் குட்டிச் சுவரும் இன்னும் புதைபடாமல் கிடந்த பிணங்களுமாய், ஒரே பாழாகக் கிடந்தது. ஓர் அகழ் அரணின் அடியில், பாதி திறந்தும் பாதி புதைந்தும் கிடந்த ஒரு தகர டப்பாவை நான் கண்டேன். சிற்றுண்டி இறைச்சி என்று, அதன் மீது ஆங்கிலத்தில் குறித்திருந்தது. இந்த உலக யுத்தத்தில் வேறெந்தப் போர் முனையில் ஜெர்மானியர் இதைப் பொறுக்கிக் கொண்டார்களோ என்று, நான் அதிசயித்தேன்,

தம் துருப்புக்கள் இப்போதுதான் சில ஜெர்மானியரைக் கைது செய்திருக்கிறார்கள் என்றும், அவர்களைப் பார்க்க எனக்கு விருப்பமா என்றும், தளபதி என்னைக் கேட்டார். "பார்க்க விருப்பந்தான்; அவர்களுடன் பேசக்கூட விருப்பமே" என்று நான் தெரிவித்தேன். தளபதி சொன்னார்: "உங்களுக்கு இஷ்டமானதை யெல்லாம் செய்ய இடமளிக்கும்படி எனக்குக் கட்டளை."

அவரிடம் புதிதாகப் பிடிபட்ட கைதிகளை, ஒரு முறை நான் கண்ணோட்டம் விட்டேன். அவர்களில் பதினாறு பேர் கதியின்றி ஒரே வரிசையில் நின்றுகொண் டிருந்தார்கள். மறுபடியும் ஒருமுறை இன்னும் கொஞ்சம் கூர்ந்து நோக்கினேன். பின்பு, எனக்கு நானே சொல்லிக் கொண்டேன்: 'அற்ப உடை உடுத்து, உடல் வெளுத்து, மெலிந்து, காசம் பிடித்தவர்கள் போல் தோன்றும் இவர்களா, அந்தப் பயங்கர ஹன்கள்? நான் பல கதைகள் படித்திருக்கிறேனே, அந்த ஜயிக்க முடியாத வீரர்கள் இவர்களா?'

துபாஷிகளின் மூலம், நான் அவர்களோடு சம்பாஷிக்கத் தொடங்கினேன். ஜெர்மனியில் அவர்கள் எங்கே வசிக்கிறார்கள்? அவர்களின் வயது என்ன? வீட்டிலிருந்து அவர்களுக்குக் கடிதங்கள் கிடைக்கின்றனவா? அவர்கள் இல்லாமல் அவர்களுடைய குடும்பங்கள் எப்படி நடக்கின்றன? இப்படி இன்னும் எத்தனையோ எளிய அன்பான கேள்விகளைக் கேட்டேன். அவர்கள் அளித்த பதிலிலிருந்து, ஜெர்மன் ராணுவ முனையின் கடைசி மிச்சமும் மாய்ந்து தொலைந்ததாக எனக்குத் தோன்றியது இந்தச் சோல்ஜர்கள், தாங்காத் துயரம் அடைந்திருக்கிறார்கள். வீட்டை என்று காண்போம் என்று இந்த வாலிபரும் மனிதர்களும் ஏக்கம் கொண்டுவிட்டார்கள். இவர்களில் சிலருக்கு வயது நாற்பது; மற்றும் சிலருக்குப் பதினேழே வயது.

தளபதியை நோக்கித் திரும்பினேன். என் மனத்தில் தோன்றிய எண்ணத்தைச் சொன்னேன்.

"அது சரிதான், மிஸ்டர் வில்கீ! ஆனால், ஏமாந்து விடாதீர்கள். ஜெர்மன் போர்க்கருவிகள், இன்னமும் மிக்க உன்ன

தமாகவே யிருக்கின்றன. ஜெர்மன் ராணுவ அதிகாரிகள், நல்ல தேர்ச்சி உள்ளவர்கள்; போரையே தொழிலாகக் கொண்டவர்கள். ஜெர்மன் சேனை அமைப்பு இணையற்ற தாகும். இதோ இங்கே காண்கிறீர்களே, இந்த மாதிரி மனிதர்களை வைத்துக்கொண்டே, ஜெர்மன் சேனை, போரிடு வதில் உலகத்திலேயே தலைசிறந்த ராணுவமாக இன்னமும் இருந்து வருகிறது. ஆனால், உங்கள் தேசம் எங்களுக்குத் தேவைப்படும் போர்க் கருவிகளை அனுப்பினால், காக்கஸி லிருந்து வடதுருவம் வரைக்குமுள்ள ஒவ்வொரு போர் முனையிலும், அவர்களைச் சண்டையிலே செஞ்சேனை புறமுதுகு காட்டச் செய்யும். ஏனென்றால், எங்கள் மனிதர்கள், அவர் களைவிடச் சிறந்தவர்கள்; தங்கள் தாய்நாட்டுக்காகப் போராடுகிறவர்கள்" என்று தளபதி பதில் அளித்தார்.

இவருடைய மனிதர்கள், அவர்களைவிடச் சிறந்தவர் கள் என்றே எண்ணுகிறேன். அன்று முழுவதும் மறு நாளும் இவர்கள் போட்ட சண்டையிலிருந்து, தாய்நாட்டுக்காகவே இவர்கள் போராடுகிறார்கள் என்று தெளிவாகத் தெரிந்தது. போர் முனைக்குச் சில மைல் தூரத்துக்குப் பின்னால் ருஷ்யக் குடியானவர் சிலரைக் கண்டோம். அவர்கள் தங்கள் குடித் தனச் சாமான்களையெல்லாம் பண்ணை வண்டி ஒன்றில் குவித்துப் போட்டுக்கொண்டு, சாலையிலே மெல்ல மெல்ல நடந்து வந்தார்கள். ஒவ்வொரு வண்டிக்கும் பின்னால் ஒவ் வொரு பசுவும் கட்டியிருந்தது. இதில் ஒரு விசேஷம் என்ன வென்றால், அவர்கள் போர்முனையைவிட்டு எட்டிச் செல்லவில்லை; போர்முனையை நோக்கியே சென்றுகொண் டிருந்தார்கள். விரோதியிடமிருந்து செஞ்சேனை திருப் பிப் பிடித்த நிலத்துக்கு, ஒருவித மூல பலத்தோடு பொங்கி வரும் கடல் அலைபோல் அவர்கள் திரும்பிச்சென்றார்கள்; அவர்கள் கண்ட கிராமங்கள், மெலிந்து நலிந்திருந்தன. அவற்றில் வெறும் புகைபோக்கிக்குழாய்களே வானை நோக்கி எஞ்சி நின்றன. ஆனால், உழவு செய்ய வேண்டிய பனிக்காலம் வந்துவிட்டது. அதனால்தான், அவர்கள் திரும்பிச் சென்று கொண்டிருந்தார்கள்.

பிசு பிசு என்று குளிர்ந்த தூற்றல் போட்டுக்கொண் டிருந்தது. ஒன்றிரண்டு மாதங்களுக்கெல்லாம் ஜெர்மானியர் படப்போகிற அவஸ்தையின் முற்குறி போன்ற தூற்றல்! அது எங்கள் புறப்பாட்டைச் சற்றுத் தாமதிக்கச் செய்து விட்டது. தளபதி எங்களைத் தம்முடன் உண்ண அழைத்தார். ஸோவியத் அதிகாரிகளும், வீரர்களும், அவர்களுடைய விருந் தினருமாய், நாங்கள் சுமார் நாற்பது பேர் ஒரு கூடாரத்துக் குள் நெருக்கிக்கொண்டு உட்கார்ந்தோம். சமைத்துக் குளிர்ந்த இறைச்சி வற்றல், கோதுமை ரொட்டி, தக்காளி, கக்கரி, ஊறுகாய் ஆகிய உண்டிகளை நாங்கள் தின்றோம். ஒரு வரையொருவர் வாழ்த்திக்கொண்டு வோட்கா என்ற சாராயத்தைக் குடித்தோம்.

விருந்துண்ணும் போது, கொஞ்சம் யோசனைக் குறை வாக, "போர்முனை இரண்டாயிரம் மைல் நீளம் இருக்கிறதே, இதில் எவ்வளவு பெரிய பகுதியை இவர் தற்காப்புச் செய் கிறார்?" என்று தளபதியைக் கேட்கும்படி, துபாஷியிடம் சொல்லிவிட்டேன். தளபதிக்கு இது வருத்தமூட்டியதுபோல் தோன்றியது, அவர் என்னைப் பார்த்த பார்வை. தளபதி சொல்லிய பதிலை, அவரைப் போலவே மெல்ல மெல்ல, துபாஷி என்னிடம் சொன்னார்: "ஐயா, நான் தற்காப்புச் செய்துகொண் டிருக்கவில்லை. எதிரியைத் தாக்கிக்கொண் டிருக்கிறேன்."

'இது ஜனங்களின் யுத்தம்' என்ற பதத் தொடருக்கு ருஷ்யாவில்தான் உண்மையான அர்த்தம் உண்டு. நான் ரிஷேவ் போர்முனையைப் போய்ப் பார்த்த பிறகே, முன்னைப் பொழுதையும்விட மிகத் தெளிவாக இந்த உண்மை எனக்குப் புலனாயிற்று. ஹிட்லரிஸத்தை ஒழிக்க அதன் முழு அர்த்தத் திலே கங்கணம் பூண்டிருக்கிறவர்கள் யார் என்றால், ருஷ்ய மக்கள்தாம். அவர்கள் பட்டிருக்கும் பாடும், இன்னும் பல மாதங்கள் அவர்கள் படப்போகிற சிரமமும், எந்த அமெரிக் கனுடைய மனத்தையும் கிளறாமல் போகாது. ருஷ்யாவின் மகத்தான தியாகங்களையும் திக்கற்ற தேவைகளையும் பற்றிய சில விஷயங்களை, என்னிடம் ஸ்டாலின், நான் போர்முனைக்

குச் செல்லுமுன் கூறியிருந்தார். அந்த இரண்டையும் விளக்கும் சான்றுகளை, போதுமான அளவு, என் கண்களால் நேரே கண்டுகொண்டேன்.

ஏற்கனவே, பத்து லட்சம் ருஷ்யர்கள் கொலையுண்டும் காயமடைந்தும் காணுமல் போயுமிருக்கிருர்கள். ருஷ்யாவின் தென்மேற்குப் பிரதேசத்தில் உள்ள மகா வளம் படைத்த நிலங்களில் பெரும் பகுதியும், நாஜிகளின் கையில் இருக்கிறது. அவற்றின் விளைச்சல்கள், விரோதியைப் போஷித்துக் கொண்டிருக்கின்றன; அவற்றி லிருக்கும் ருஷ்ய ஸ்திரீகளும் புருஷர்களும் விரோதிக்குத் தொழும்பு புரியும்படி நிர்ப்பந்திக்கப்படுகிருர்கள். ஆயிரக் கணக்கான ருஷ்யக் கிராமங்கள் நாசமாகிவிட்டன. அவற்றின் ஜனங்களெல்லாம் வீடுவாசல் இல்லாமல் தவிக்கிருர்கள். ருஷ்யாவின் போக்குவரத்துச் சாதனங்களெல்லாம், மிதமிஞ்சி நெருக்கமாயிருக்கின்றன. ருஷ்யத் தொழிற்சாலைகள், தங்கள் முழுச் சக்தியோடும் உற்பத்தி செய்வதால், ருஷ்யாவில் எஞ்சியுள்ள எண்ணெய்க் கிணறுகள், நிலக்கரிச் சுரங்கங்கள் இவற்றின் முழு விளைவும் அவற்றுக்கே தேவையாக இருக்கின்றன.

ருஷ்யாவில், உணவு அரிதா யிருக்கிறது; அரிதினும் அரிதா யிருக்கிறது என்றே சொல்லலாம். மழைக்காலம் நெருங்கி வந்துகொண் டிருக்கிறது. அப்போது, ருஷ்யரின் வீடுகளில், விறகே இராது. வரும் மழைக் காலத்தில் ஏதோ கொஞ்சம் தீ மூட்டிக்கொள்வதற்காகப் பல பெண்களும் குழந்தைகளும், சுற்றிலும் ஐம்பது மைல் வரையில் சென்று, விறகுக் கட்டைகள் திரட்டிக்கொண்டு வந்ததை, நான் மாஸ்கோவில் இருக்கும்போதே கண்டேன். ராணுவத்திலும் யுத்தத்துக்கு அவசியமான கைத் தொழில்களிலும் உள்ளவர்களைத் தவிர, மற்றவர்களுக்கு உடையே அநேகமாகக் கிடையாது. ஜீவாதாரமான பல மருந்துகள் அகப்படவேயில்லை.

யுத்தகால ருஷ்யாவைப்பற்றி, நான் கண்ட சித்திரம் இதுதான். என்றாலும் யுத்தத்தை விட்டுவிடுவோம் என்று எந்த ருஷ்யனும் சொல்லவில்லை. நாஜிகள் ஆக்கிரமித்த நாடு

களில் என்ன நிகழ்ந்திருக்கிறது என்பதை அவர்கள் அனைவரும் அறிவார்கள். ருஷ்ய ஜனங்கள்—அவர்களின் தலைவர்கள் மாத்திரமல்ல; ருஷ்ய ஜனங்களே—வெற்றி அல்லது சாவு இந்த இரண்டில் ஒன்றுதான் என்று முடிவு செய்திருக்கிறார்கள் என்பது எனக்கு நிச்சயமாயிற்று. வெற்றியைப் பற்றியே அவர்கள் பேசினார்கள்.

ஸோவியத் விமானத் தொழிற்சாலை ஒன்றைப் பார்ப்பதிலே, நான் ஒரு நாள் முழுவதும் கழித்தேன். கற்கண்டு ஆலை, வெடி மருந்துச்சாலை, வார்ப்புச்சாலை, பாண்ட உற்பத்திச்சாலை, மின்சார உற்பத்திச்சாலை முதலிய வேறு பல ருஷ்யத் தொழிற்சாலைகளையுந்தாம் நான் கண்டேன். ஆனால், இப்போது மாஸ்கோவுக்கு வெளியே நிறுவப் பெற்றிருக்கும் இந்த விமானத் தொழிற்சாலை மட்டும், என் கண்களைவிட்டு அகலவேயில்லை.

இது மிகப் பெரிய இடம். சுமார் முப்பதினாயிரம் தொழிலாளர்கள், மூன்று நேரமாக முறை வைத்துக் கொண்டு வேலை செய்வதாகவும், ஒவ்வொரு நாளும் மிகக் கணிசமான எண்ணிக்கையுள்ள விமானங்களை அவர்கள் உற்பத்தி செய்கிறார்கள் என்றும் என் தோற்றம். இப்போது மிகப் பிரசித்தியடைந்திருக்கிறதே, அந்த ஸ்டார்மாவிக் என்ற விமானம் இங்கேதான் உற்பத்தியாகிறது. அது ஒரே எஞ்சின் கொண்டது; பலமான கவசம் பூண்டது; சண்டை விமான வகையைச் சேர்ந்தது. உண்மையிலேயே நவீனமான யுத்த ஆயுதங்களில் ஒன்றான அதை ருஷ்யர்கள் அபூர்வமாய்க் கண்டுபிடித்திருக்கிறார்கள். அது மிகவும் தாழப் பறக்கக் கூடியது. மெல்ல மெல்லத்தான் எழும்புகிறது. இதனால், உண்மையாகவே அதற்கு ஒரு சண்டை விமானம் துணை செல்ல வேண்டியிருக்கிறது. மிகத் தாழ்வாகவும் வேகமாகவும் அது பறப்பதால், டாங்கிகளைத் தாக்குவதற்கு உபயோகப்படுகிறது. செஞ்சேனையின் மகா வலிமையுள்ள ஆயுதங்களில் அதுவும் ஒன்றாகும்.

இந்தத் தொழிற்சாலையை நான் பார்வையிட்டபோது, அமெரிக்க விமான நிபுணர்கள் சிலரும் என்னோடு இருந்

தார்கள். பல பாகங்களையும் ஒன்று கூட்டும் இடத்தில் வரிசைக் கோடியி லிருந்த விமானங்களை, தொழிற்சாலைக்கு அடுத்தாற்போலிருந்த விமான மைதானத்தில் ஓட்டிப் பரீட்சித்தார்கள். அவை நல்ல விமானங்கள் என்றே எனக்குத் தோன்றின. என் அபிப்பிராயத்தை, என்னோடு இருந்த அமெரிக்க நிபுணர்களும் உறுதி செய்தார்கள். அதில் இன்னு மொரு விசேஷம்: அந்த விமானங்களில் விமானி களுக்குப் பாதுகாப்புக்காக அமைந்திருக்கும் கவசம், உலகத்திலேயே தாங்களறிந்த வேறெந்த விமானத்தில் அமைந்திருப்பதையும்விட மிகச் சிறந்தது என்றும் அவர்கள் தீர்மானமாய்ச் சொன்னார்கள். நான் விமான நிபுணன் அல்ல. ஆனால், என் ஆயுளில் அநேகம் விமானத் தொழிற் சாலைகளைப் பார்த்திருக்கிறேன்; கண்களை அகலத் திறந்து அவற்றை நான் கவனித்திருக்கிறேன். ஆகவே, நான் சொல்லும் அபிப்பிராயம் சரியானதென்றே எண்ணுகிறேன்.

உற்பத்தி வேலையின் சில பகுதிகளுக்கு, கரடுமுரடாகவே ஏற்பாடு செய்திருக்கிறார்கள். பிளைவுட் பலகையை நீராவி விசையால் இறுக்கிக் கெட்டியாக்கி, அதற்கு மேலே கான்வாஸ் உறை போட்டு, அதைக் கொண்டுதான் ஸ்டார் மாவிக்கின் இறக்கைகளைச் செய்கிறார்கள். மரவேலைச் சாலைகளில் பெரும்பாலும் கையாலேயே வேலை நடப்பதாய்த் தோன்றியது. அவற்றில் செய்த பொருள்களே இதைக் காட்டின. மேலும், மின்சாரச் சாலைகள், பூச்சுப் பூசும் சாலைகள் இவற்றிலும் சில, மிகப் பழமையான தினுசா யிருக்கின்றன.

இந்த விஷயங்கள் நீங்கலாக, உற்பத்தியிலும் சரி, திறமையிலும் சரி, இந்த விமானத் தொழிற்சாலை, நான் கண்ட வேறெதனோடு ஒப்பிட்டுப் பார்த்தாலும், மேலாக இருந்தது. ஒன்றுக்குப் பின் ஒன்றாய்ப் பல கடைசல் பட்டடைகள், தொளையிடும் பட்டடைகள் ஆகியவற்றை பார்த்துக்கொண்டே நடந்தேன். உலகத்தின் பல மூலைகளி லிருந்தும் வந்து குவிந்திருக்கும் யந்திரக் கருவிகளை நான் கண்டேன். செம்னிட்ஸ், ஸ்கோடா, ஷெப்பீல்ட், ஸின்ஸினாட்டி,

ஸ்வகெட் லாவ்ஸ்க், ஆண்ட் வெர்ப் முதலிய இடங்களி லிருந்தெல்லாம் அவை வந்திருக்கின்றன என்பதை, அவற்றின் பெயர்களே காட்டின. அந்தக் கருவிகளை, வெகு திறமை யாக, இந்தத் தொழிற்சாலையில் உபயோகிக்கிறார்கள்.

தொழிற்சாலையின் வேலையில் முப்பத்தைந்து சத விகிதத்துக்கு மேல், பெண்களே செய்துவிடுகிறார்கள். தொழிலாளரில், பத்து வயதுக்கு மேற்படாத சிறுவர்களும் இருந்தார்கள். அவர்கள் எல்லோரும் நீலச் சட்டை அணிந்து, பயிற்சிபெறும் மாணவர்களைப்போல் தோன்றினார்கள். குழந்தைகளையும் வேலைக்கு ஏற்றுக்கொள்ள, அதிகாரிகள் தயங்கவில்லை. வயதுவந்த தொழிலாளர்கள், அநேகம் பட்டடைகளில், வாரத்துக்கு அறுபத்தாறு மணி நேரம் வேலை செய்கிறார்கள். பையன்களில் அநேகர், யந்திரப் பயிற்சி உள்ளவர்களே செய்யக் கூடிய, கடைசல் வேலையை யெல்லாம் செய்கிறார்கள். மிக்க அருமையாய்ச் செய்வ தாகவும் தெரிந்தது.

மொத்தத்தில், இந்தத் தொழிற்சாலையில், அளவுக்கு மிஞ்சிய ஆட்கள் இருப்பதாக, அமெரிக்கர்களான எங்க ளுக்குத் தோன்றியது. இதே மாதிரியான ஓர் அமெரிக்கத் தொழிற்சாலையில் காணக்கூடிய தொழிலாளர்களை விட அதிகமான பேர், இங்கே இருந்தார்கள். ஆனால், மூன்று, நான்கு மெஷின்களைக்கூடச் சிலர் கவனித்துக் கொண் டார்கள். 'ஸ்டாக்கனோவைட்' என்று குறிக்கும் தொழிலாளர் களுக்கு இது அடையாளமாகும். அவர்கள் தாங்கள் செய்ய வேண்டிய பங்கை விட அதிக வேலை செய்ய வாக்களித் திருப்பவர்கள். ஸ்டாக்கனோவைட் என்பவர்கள், அற்றைக் கூலி வேலை செய்பவர்கள் என்றறிய, நமக்கு ஆச்சரியமா யிருக்கும். அவர்கள் எத்தனைக் கெத்தனை வேகமாய் அதிக வேலை செய்கிறார்களோ அத்தனைக் கத்தனை, மேலே மேலே கூலி விகிதமும் அதிகரிக்கும். ருஷ்யாவின் ஆலைத் தொழில் முறை, அமெரிக்கருக்கு ஓர் அதிசய விடுகதை போல் இருக்கும். தொழிலாளரை வேலைக்கு அமர்த்திக் கொள்ளவும், அவர்களுக்குக் கூலி கொடுக்கவும் ருஷ்யாவில் அநுஷ்டிக்கும்

முறை, துளிக்கூட அபேத வாதத்தில் பற்றில்லாத நம் நாட்டு ஆலை முதலாளி ஒருவருக்குக்கூடத் திருப்தி அளிக்கத் தக்கது. மூலதனத்தை நிர்வகிக்கும் விதம், நம் அபேதவாதத் தலைவரான நார்மன் தாமஸுக்குப் பூர்ண திருப்தி தரக் கூடியது என்று நான் நம்புகிறேன். அதிகமாகவும் சிறப் பாகவும் உற்பத்தி செய்ய வேண்டுமென்று, கடைகளுக் குள்ளும் தொழிலாளர்களுக் குள்ளும் ஓயாத போட்டி நடக்கிறது. இந்தப் போட்டியிலே முன்னணியில் நிற்பவர் களின் பெயர்கள், புதிது புதிதான கௌரவப் பட்டியல்களில் ஏறிவிடுகின்றன. அத்தகைய ஜாபிதாக்கள், தொழிற் சாலையின் சுவர்களை அலங்கரித்துக்கொண்டிருக்கின்றன. திறமைக் குறைவை ஈடு செய்வதற்கு, இந்த விசேஷத் தூண்டுதல், பூர்ண உதவியா யிராவிட்டாலும், பெரிதும் உதவியா யிருக்கிறது என்றே முடிவு கட்ட வேண்டும். ஏனென்றால், நாங்கள் எந்தத் தொழிலாளியிடம் நின்று பேசியபோதும், இந்த விஷயம் நன்றாய்ப் புலனாயிற்று.

ஒவ்வொரு தொழிலாளியின் தனித்தனி உற்பத்திச் சக்தியையும் எடுத்துக்கொண்டால், அது ஐக்கிய அமெரிக்கத் தொழிலாளியின் உற்பத்திச் சக்தியைவிடக் குறைவே. ருஷ்ய அதிகாரிகள் இதை என்னிடம் தாராளமாய் ஒப்புக் கொண்டார்கள். கல்வி, பயிற்சி இரண்டின் மூலமும், தாங்கள் இதை மாற்ற முயன்றுகொண் டிருப்பதாக அவர்கள் சொன்னார்கள். அப்படி மாற்றி முடிக்கும் வரையில், தேசபக்தியைப் பலமாய்த் தூண்டியே உற்பத் தியை அதிகரிக்க வேண்டி யிருக்கிறது; தவிர, தங்களுக்குக் கிடைக்கக்கூடிய சகல தொழில் சக்தியையும் - அதாவது குழந்தைகளையும் கிழவிகளையும் கூட - அவர்கள் வேலைக்குச் சேர்த்துக்கொள்ள வேண்டியிருக்கிறது. இவ்விதம்தான் அந்தக் குறையைத் தாங்கள் ஈடுசெய்ய வேண்டியிருக்கிறது என்று அவர்கள் எனக்கு விளக்கினார்கள். இதற்கிடையிலே, பல பாகங்களையும் ஒன்று சேர்த்து விமானங்களைக் கட்டும் கடைசி அறையின் பிரம்மாண்டமான நுழைவாயிலி

லிருந்து, விமானங்கள் வெளியே புறப்படுவதை நாங்கள் கண்டோம். அவற்றில் உள்ள மெஷின் கன்களையும் பெரிய பீரங்கிகளையும் கொண்டு தூரத்திலுள்ள ஒரு குறியை நோக்கிச் சுட்டுப் பரீட்சித்தார்கள். பின்பு, அவை எங்கள் தலைக்கு மேலே வானத்தில் பறக்கத் தொடங்கின.

இந்தத் தொழிற்சாலையின் தலைவருக்கு ட்ரெட்யகாவ் என்று பெயர். கவலை பாய்ந்த முகம்; வயது முப்பத்தைந்துக்கு மேல் இருக்கும். அவர் எங்களைத் தமது காரியாலயத்தில் சிற்றுண்டி கொள்ளக் கூப்பிட்டார். நீண்ட நடைகளின் வழியாய் நாங்கள் நடந்தோம். மங்கலான நீல மின்சார விளக்குகள் மட்டுமே அவற்றை ஒளிசெய்துகொண் டிருந்தன. ஓர் எளிமையான அறைக்குள் நாங்கள் போய்ச் சேர்ந்தோம். அது அடியோடு இருட்டடிப்புச் செய்யப்பெற்றிருந்தது. இந்த அறையில்தான் அவர் வேலை செய்துகொண் டிருந்தார். நீண்ட மேஜை ஒன்றில் சாண்ட்விச்சுகள், சூடான தேநீர் வழக்கமான மீன் வற்றல், சர்வ வியாபியான வோட்கா பாட்டில்கள் முதலியவை இருந்தன. ஒரு மூலையில் இரண்டு கொடிகள் மாட்டியிருந்தன. இந்தத் தொழிற்சாலை, தன் திட்டத்தை வெற்றிகரமாய்ப் பூர்த்தி செய்ததற்காக, அந்தக் கொடிகள் இரண்டும் ஸ்டாலினால் பரிசளிக்கப் பெற்றவை.

நான் விரும்பும் கேள்விகளைக் கேட்டால், பதில் சொல்லுவதாக, ட்ரெட்யகாவ் வாக்களித்தார். மேஜையின் தலைமை ஸ்தானத்தில் அவர் உட்கார்ந்துகொண்டார். தம் தொழிலுக்குரிய கறுத்த உடுப்பை அவர் அணிந்திருந்தார். மெல்லிய சிறு வெள்ளி நட்சத்திரம் ஒன்றுதான் அதில் செருகியிருந்த பதக்கம். இது 'ஸோவியத் யூனியனின் வீரன்' என்ற பட்டத்தைக் காட்டும் பதக்கமாகும். ஏழே ஏழு பேருக்குத்தான் இந்தப் பதக்கம் கிடைத்திருக்கிறதாம். அந்த ஏழு பேரில் ட்ரெட்யகாவும் ஒருவர்.

அவரை நான் ஒருமணி நேரம் விரிவாகக் குறுக்கு விசாரணை செய்தேன். நான் கண்ட எந்தச் சமுதாயத்திலும் தலைசிறந்த ஒரு தலைவராக அவர் விளங்குவார் என்பது,

அதிலிருந்து எனக்குத் தெளிவாய்ப் புலனாயிற்று. அமைதியாகவும், கண்ணியத்தோடும், தேசத்துக்கும் உலகத்துக்குமே தம் வேலை எவ்வளவு தேவை என்பதைப் பூர்ணமாய் உணர்ந்தவராகவும், தமது பிரம்மாண்டமான தொழிற்சாலையின் ஒவ்வொரு மூலையிலும் என்ன வேலை நடக்கிறது என்ற விரிவான ஞானத்துடனும் அவர் பேசினார். தினசரி எத்தனை விமானங்கள் தயாராகின்றன, கணக்காய் எத்தனை தொழிலாளர்கள் வேலை செய்கிறார்கள், ஸ்டார்மாவிக் விமானத்தின் மிக அதிகமான வேகம் எவ்வளவு என்ற மாதிரி சில கேள்விகள் கேட்டேன். இவற்றுக்குப் பதில் சொல்ல, மரியாதையோடு, ஆனால் மிகவும் கண்டிப்பாய், அவர் மறுத்துவிட்டார். இந்தத் தகவல்களையே தனுக்கான வேறு கேள்விகளின் மூலம் அறிந்துகொள்ள நான் முயன்றபோது, அவர் கண்களைச் சிமிட்டிக்கொண்டார். இங்கிலாந்திலோ அமெரிக்காவிலோ உள்ள ஒரு தொழிற்சாலையின் பொறுப்புள்ள நிர்வாகி எப்படி ராணுவ ரகசியங்களைச் சொல்லி ஏமாந்துவிடமாட்டாரோ, அப்படித்தான் அவரும் நடந்து கொண்டார்.

இந்தத் தொழிற்சாலை, முன்னே மாஸ்கோவில் இருந்ததாம். 1941-ஆம் வருஷம் அக்டோபர் மாதத்தில், அந்த ஸோவியத் தலைநகரில், நாஜிகளின் பீரங்கிச் சத்தம் கேட்டுக் கொண்டிருந்த காலத்தில், இதை இதன் அஸ்திவாரத்தோடு அப்படியே பெயர்த்து எடுத்து இங்கே கொண்டுவந்துவிட்டார்களாம். ஆயுதம் தாங்கிப் போரிட்டுக்கொண்டிருக்கும் தேசமாகையால், ஏற்கனவே அதன் போக்குவரத்துச் சாதனங்கள், தாங்காத பளுவைச் சுமந்துகொண்டிருந்தன. இந்த நிலைமையிலே, இந்தத் தொழிற்சாலையை, ஆயிரம் மைலுக்கு அப்பால் தூக்கி வந்துவிட்டார்கள்! அப்படித் தூக்கிவரும் வழியில் இதன் அசல் தொழிலாளர்களில் பலரும் தம் தம் சொந்த யந்திரங்களைத் தாமே பாதுகாத்து வந்திருக்கிறார்கள். தொழிற்சாலை மீண்டும் இங்கே ஸ்தாபிதமாகி விட்டது. டிசம்பரில், அதாவது இரண்டே மாதத்தில், தனது இந்தப் புதிய இடத்தில், இது விமானங்களை உற்பத்தி செய்யத் தொடங்கிவிட்டது.

முதல் ஆண்டான் 1941-42-ஆம் வருஷம் மாரிக்காலத்தில், தொழிற்சாலையில் உஷ்ண வசதியே கிடையாது என்று அவர் எனக்குச் சொன்னார். தம் தம் யந்திரங்கள் குளிர்ந்து விடாமல் பாதுகாக்க, தொழிலாளர்களே தங்கள் கடைகளுக்குள் சொக்கப்பனை மூட்டிக் கொண்டார்களாம். தொழிலாளர்கள் வசிக்க வீடுகளே தயாராகவில்லையாம். அவர்களில் பலரும், தம் தம் கருவிகளுக்குப் பக்கத்திலேயே தூங்கினார்களாம். 1942-ஆம் வருஷம் பனிக் காலத்திலே, வசதிகளெல்லாம் தயாராகிவிட்டனவாம். உதாரணமாக, நான் கண்ட தொழிற்சாலை ஓட்டல்களில் தொழிலாளர்களுக்கு அளிக்கப்பெற்ற உண்டிகள், எளியவையாயிருந்தாலும், போதிய அளவும் புஷ்டியுள்ளவை யாகவும் இருந்தன. ஆனால், இதே நகரில், கடைத்தெருவில் விற்ற உணவு, கறுப்பு ரொட்டியும் உருளைக் கிழங்குந்தான். விலையோ மகா கிராக்கி. இது எனக்கே தெரியும்.

சிற்றுண்டி முடிந்ததும், குட்டையும் ஒல்லியுமான ஒரு மனிதரை, நான் கேள்விகள் கேட்கத் தொடங்கினேன். அவர்தான் உற்பத்தி வேலையை மேற்பார்வை செய்யும் சூப்பரிண்டண்டு என்று, தொழிற்சாலைத் தலைவர் எனக்கு அறிமுகம் செய்து வைத்தார். அவர் புத்திசாலித்தனம் நிறைந்த ஒரு வாலிபர். தொழிலாளர்களின் உடுப்பையே அணிந்திருந்தார். மெக்கானிக்குகளுக்கு உரிய ஒரு குல்லாய் தரித்திருந்தார். ருஷ்யாவில் ஒருவன் ஆலைத் தொழிலாளி என்பதற்கு அடையாளம் அநேகமாய் அதுதான். அவர் பயிற்சிபெற்ற ஓர் எஞ்சினீர்; சுறுசுறுப்பும் உற்சாகமும் உழைப்பும் மதியூகமும் தம் தொழிலிலே பரிபூர்ண ஞானமும் உள்ளவர். அவர் மாதிரி ஒரு வாலிபர் அமெரிக்க ஆலைத் தொழில்களில் அமர்ந்தால், மிக வேகமாய் முன்னேறி, பெருஞ் செல்வம் சம்பாதித்து, தம் சகோதரத் தொழிலாளர்களுக்கு ஒரு தலைவரும் ஆகிவிடுவார். அவரைப் பார்த்ததும், அத்தகைய அதிருஷ்டமுள்ள அமெரிக்க வாலிபர்களை உண்மையிலேயே நினைத்துக் கொண்டேன். எனவே, ஒரு விஷயத்தை அவரிடமிருந்து

அறிய நான் தீர்மானித்தேன். அவர் தம் சகோதரப் பிரஜைகளைவிட அதிகமாய்ப் படித்திருக்கிருர்; முப்பதினுயிரம் மனிதர்களைக் கண்காணிக்கும் சூப்பரிண்டண்டாயிருப்பதற்காக, பல மணி நேரம் வேலைசெய்கிருர்; விசேஷ ஞானத்தைச் சம்பாதித்துக்கொண்டு தலைமையான பதவிக்கு வந்துகொண்டிருக்கிருர். இப்படியெல்லாம் அவர் செய்வதற்கு, கம்யூனிஸ்ட் முறையில் அப்படி என்னதான் தூண்டுதல் இருக்கிறது என்று நான் அறிய முயன்றேன்.

என் கேள்விகளுக்குப் பதில் அளிக்க, அவர் சந்தோஷமாய் ஒப்புக்கொண்டார். தமக்கு முப்பத்திரண்டு வயது என்றும் கல்யாணம் ஆகி இரண்டு குழந்தைகள் இருக்கின்றன என்றும், எனக்குச் சொன்னுர். பொதுவான வீடுகளைவிட மிகவும் மேலான ஒரு வீட்டில், அவர் சௌகரியமாய் வசிக்கிருர். சமாதான காலத்தில் அவருக்கு ஒரு மோட்டார்க் காரும் உண்டு.

"இந்தத் தொழிற்சாலையில் வேலை செய்யும் யந்திரத் தொழில் திறமையுள்ள சுமாரான தொழிலாளி ஒருவருடைய சம்பளத்துக்கும் உங்களுடைய சம்பளத்துக்கும் எவ்வளவு வித்தியாசம்?" என்று நான் கேட்டேன்.

அவர் ஒரு நிமிஷம் யோசித்துவிட்டு, "அவனைப் போல் பத்து மடங்கு சம்பளம் நான் வாங்குகிறேன்" என்றுர்.

அமெரிக்காவில் ஒருவர் வருஷம் ஒன்றுக்கு இருபத்தையாயிரம் அல்லது முப்பதினுயிரம் டாலர் சம்பளம் வாங்கினுல் என்ன தாரதம்யம் இருக்குமோ அதே தாரதம்யந்தான் இதுவும். அவர் மாதிரி பொறுப்புள்ள ஒருவர் உண்மையில் அங்கே இவ்வளவு சம்பளந்தான் வாங்குகிருர். ஆகவே, நான் அவரிடம், "கம்யூனிஸம் என்ருல், எல்லாருக்கும் சமமான சம்மானம் அளிப்பார்கள் என்றல்லவா எண்ணினேன்!" என்று சொன்னேன்.

"இப்போது சோஷலிஸத்தைப்பற்றி, ஸோவியத்தில் கைக்கொண்டிருக்கும் கருத்து, அத்தகைய சமத்துவம் அல்ல. அவரவர் சக்திக்கேற்ற ஊழியம்; அவரவர் வேலைக்கேற்ற ஊதியம்-இதுதான் ஸ்டாலின் சோஷலிஸத்தின் சூத்திரம்.

நாங்கள் இன்னும் வளர்ச்சியடைந்து கம்யூனிஸ்ட் கட்டத்தை அடைவோம். அப்போதுதான் எங்கள் சூத்திரம் 'அவரவர் சக்திக்கேற்ற ஊழியம்; அவரவர் தேவைக்கேற்ற ஊதியம்' என்பதாக மாறும். அப்போதுங்கூட, பரிபூர்ண சமத்துவம் அவசியமா யிராது; விரும்பத்தக்கதும் அல்ல'' என்று அவர் பதிலளித்தார்.

''உங்களுக்கு இவ்வளவு வருமானம் வருகிறதே; இதில் கொஞ்சம் சேமித்து ஒதுக்கிவைக்க உங்களால் முடியுமே? அப்படி ஒதுக்கி வைக்கிறீர்கள் அல்லவா?'' என்று நான் கேட்டேன்.

அவர் சிரித்துக்கொண்டே சொன்னார்: ''ஆம்; ஒதுக்கி வைக்கிறேன், என் மனைவி அதிகமாய்ச் செலவழிக்கா திருந்தால்.''

''அப்படிச் சேமித்த பணத்தை, நீங்கள் என்ன செய்கிறீர்கள்? எந்த இனத்தில் போடுகிறீர்கள்?''

''நான் முதலில் சேமித்த பணத்தைக் கொண்டு நேர்த்தியான ஒரு வீட்டை எங்களுக்கு வாங்கிக் கொண்டோம்'' என்று அவர் சொன்னார்.

''பிற்பாடு?''

''பிற்பாடு, கிராமத்தில் ஓர் இடம் வாங்கினோம். விடுமுறைக் காலத்தில் என் குடும்பம் அங்கே செல்லலாம். ரஜா நாட்களில் நானும் அங்கே போய், ஓய்வெடுத்துக் கொள்ளலாம்; மீன் பிடிக்கலாம்; அல்லது வேட்டை யாடலாம்.''

''உங்களுக்கு இந்தச் செலவெல்லாந்தான் முடிந்து விட்டதே; இப்போது உங்கள் அதிகப்படிப் பணத்தை என்ன செய்கிறீர்கள்?''

''ஓ! அதை நான்: ரொக்கமாக வைத்துக்கொள்ளுகிறேன்; அல்லது சர்க்கார்க் கடன் பத்திரங்களில் போடுகிறேன்.''

ஸோவியத் சர்க்காரின் கடன் பத்திரங்களுக்கு வட்டி கிடையாது. முதல் முதலாக என்னிடம் பணம் சேர்ந்த போது, அதைக் கொண்டு எவ்வளவு அதிகமாக முடியுமோ அவ்வளவு அதிகமான வருமானத்தைச் சம்பாதிப்பதெப்படி

என்று நான் பிரமாதமாய் யோசித்தேன். அது எனக்கு ஞாபகம் வந்தது. இவருடைய பதில் எப்படி யிருக்கும் என்று பார்ப்பதற்காக, நான் கேட்டேன்: "நல்ல வருமானம் வரக் கூடிய ஏதாவது ஓர் இனத்தில் நீங்கள் ஏன் அதைப் போடக் கூடாது?"

அவர் என்னை ஆச்சரியத்துடன் நோக்கினார். அந்தப் பார்வையிலே கொஞ்சம் செருக்கும் தென்பட்டது. "முதலுக்கு ஒரு வருமானம் பெறுவ தென்று சொல்லுகிறீர்கள், மிஸ்டர் வில்கி! அது ருஷ்யாவில் சாத்தியமில்லை. எப்படி யானாலும் சரி; அதில் எனக்குப் பிடித்தமில்லை" என்றார்.

ஏன் என்ற காரணத்தை அவர் வாய்ப் பிறப்பாய்க் கேட்க, நான் முயன்றேன். பத்து நிமிஷ நேரம், மார்க்ஸ்-லெனின் சித்தாந்தங்களை யெல்லாம் அவர் பொழிந்து தள்ளி விட்டார்.

கடைசியாய், நான் இடை மறித்து, "சரிதான் இவ்வளவு கஷ்டப்பட்டு நீங்கள் ஏன் உழைக்கிறீர்கள்?" என்று கேட்டேன்.

அவர் தமது கையைச்சுழற்றி வீசிக்கொண்டே, "நான் இந்தத் தொழிற்சாலையை நடத்தி வருகிறேன். ஒரு நாள் இதற்கு நான் தலைவனே ஆகிவிடலாம். இந்தப் பதக்கங்களைப் பார்த்தீர்களா?" என்று சொல்லித் தமது சட்டையில் சரமாய்த் தொங்கிக்கொண்டிருந்த கௌரவச் சின்னங்களைச் சுட்டிக் காட்டினார். "நான் நல்ல சேவை செய்ததற்காக, ஸோவியத் கட்சியினரும் சர்க்காரும் இந்தப் பதக்கங்களை எனக்குத் தந்திருக்கிறார்கள். நான் இன்னும் நல்ல சேவை செய்து வந்தால், சர்க்காரை நடத்தும் பொறுப்பிலேயே ஏதாவதொரு பதவியை, ஒரு நாள் ஸோவியத் கட்சியார் எனக்குத் தருவார்கள்" என்றார்.

"ஆனால், நீங்கள் கிழவனாய்ப் போய்விட்டால் அப்போது உங்களை யார் பராமரிப்பார்கள்?"

"நானே கொஞ்சம் பணம் ஒதுக்கி வைத்திருப்பேன். அது போதாவிட்டால், சர்க்கார் எனக்கு உதவி செய்யும்."

"உங்களுக்கே சொந்தமாக ஒரு தொழிற்சாலை இருக்க வேண்டும் என்று ஒரு போதும் உங்களுக்கு ஆசை ஏற்பட்டதில்லையா?" என்று நான் கேட்டேன்.

இதற்குப் பதிலாக, அவர் மார்க்ஸின் பொருளாதார சமுதாய தத்துவங்களை விளக்கும் மற்றொரு பிரசங்க வெள்ளத்தைச் சொரியத் தொடங்கிவிட்டார். தமது தொழிற்சாலை வேலையில் எவ்வளவு நல்ல பரிசயம் அவருக்கு இருக்கிறதோ அவ்வளவு பரிசயம், இந்தத் தத்துவங்களிலும் இருக்கிறது.

"நல்லது, உங்கள் குடும்பத்தின் கதி என்ன? உங்கள் வாழ்க்கை ஆரம்பித்ததை விட மேலான முறையில், உங்கள் குழந்தைகளின் வாழ்க்கை ஆரம்பிக்க வேண்டும் என்று நீங்கள் விரும்பவில்லையா? உங்கள் மனைவிக்கு முன் நீங்கள் இறந்துவிட்டால், அவளுக்குப் பாதுகாப்பு வேண்டும் என்று நீங்கள் ஆசைப்படவில்லையா?" என்று நான் மீண்டும் வினவினேன்.

அவர் பொறுமை யிழந்தவராய், "இது சுத்த முதலாளித்துவப் பேச்சு, மிஸ்டர் வில்கீ! நான் ஒரு தொழிலாளியாகவே வாழ்க்கையை ஆரம்பித்தேன். அதே நல்ல ஆரம்பம் என் குழந்தைகளுக்கும் கிடைக்கும். என் மனைவி இப்போது வேலை செய்துகொண் டிருக்கிறாள். எதுவரையில் அவள் தேக சௌக்கியத்தோ டிருக்கிறாளோ அதுவரையில் அவள் வேலை செய்துகொண்டே யிருப்பாள். எப்போது அவளால் வேலை செய்ய முடியவில்லையோ அப்போது ராஜாங்கமே அவளைக் காப்பாற்றும்" என்றார்.

"இதெல்லாம் சரி; இந்த வேலையை நீங்கள் சரிவரச் செய்யத் தவறினால், உங்கள் கதி என்ன ஆகும்?" என்று கேட்டேன்.

பயங்கரமான ஒரு புன்சிரிப்போடு அவர் சொன்னார்: "என்னைக் காலி செய்துவிடுவார்கள்" என்றார். பதவியை விட்டுக் கீழே தள்ளுவதிலிருந்து சாவு வரையில், எது வேண்டுமானாலும் நடக்கலாம் என்றே இதற்கு அர்த்தம். அது எனக்குத் தெரியும். ஆனால் தாம் தவறு செய்யும்

அபாயம் நேராதென்றே அவர் எண்ணினர் என விளங்கிற்று.

பின்பு, மற்றொரு கோணத்திலிருந்து அவரை நான் அலச முயன்றேன்.

"யுத்த காலத்தில் அல்ல; சாதாரண காலத்தில் இங்கேயுள்ள இந்தத் தொழிற்சாலைத் தலைவரை உங்களுக்குப் பிடிக்கவில்லை என்று வைத்துக் கொள்வோம். நீங்கள் இதை விட்டு விலகி, வேறு ஏதாவதொரு தொழிற்சாலையில் வேலைக்கு அமரலாமா?"

"பெரும்பாலான தொழிலாளிகள் அப்படிச் செய்யலாம். ஆனால், கட்சியில் ஓர் அங்கத்தினனாகிய நான் எங்கேயிருந்தால் மிக நல்ல சேவை செய்ய முடியும் என்று கட்சி நினைக்கிறதோ அங்கேதான் இருக்க வேண்டும்."

"ஆனால், இதைவிட வேறு விதமான வேலையில் உங்களுக்கு அதிக விருப்பமிருக்கிறது என்று வைத்துக் கொள்ளுவோம். நீங்கள் அதற்கு மாற முடியுமா?"

"அதிகாரிகள்தாம் அதை முடிவுசெய்ய வேண்டும்."

"உங்கள் ராஜாங்கத்தின் பொருளாதார ராஜீய சித்தாந்தங்களில் உங்களுக்குப் பரிபூர்ணமான அபிப்பிராய ஒற்றுமை இருக்கிறது. இப்படி இல்லாமல் உங்களுக்கு வேறு வகையான அபிப்பிராயங்கள் இருக்குமானல், நீங்கள் அவற்றை வெளியிட முடியுமா? அவற்றுக்காகப் போராட இயலுமா?"

இந்த மாதிரி ஒரு நிலைமையை உத்தேசம் செய்யக்கூட அவர் சம்மதிக்கவில்லை. பத்து நிமிஷ நேரம் நான் கடுமையாய் வாதித்த பிறகுதான், அவரைச் சம்மதிக்கும்படி செய்ய முடிந்தது. அதன் பின்பும், அவர் பதில் சொல்லவில்லை; தோளைத்தான் குலுக்கினர். இப்போது நான் பொறுமை யிழந்துவிட்டேன். கொஞ்சம் ஆத்திரத்தோடு, "அப்படியானல், உண்மையிலே உங்களுக்குச் சுதந்தரம் கிடையாது!" என்றேன்.

அவர் சண்டைக்கு வருபவர்போல நிமிர்ந்துஉட்கார்ந்து, "மிஸ்டர் வில்கீ, உங்களுக்கு இது புரியவில்லை. என் தகப்பனுக்

கும் பாட்டனுக்கும் இருந்த சுதந்தரத்தைவிட, அதிகச் சுதந்தரம் எனக்கு இருக்கிறது. அவர்கள் குடியானவர்களா யிருந்தார்கள்; நிலத்தின் அடிமைகளா யிருந்தார்கள். வியாதி வந்தபோது, டாக்டர்களோ ஆஸ்பத்திரிகளோ அவர்களுக்குக் கிடைக்க வில்லே. என் நீண்ட வம்ச பரம்பரையில், முதல் முதலாகக் கல்வி கற்று முன்னேற்ற மடைந்து, என்ன பதவி வேண்டுமானுலும் பெறும் சந்தர்ப்பம், எனக்குத்தான் கிடைத்தது. இதுவே எனக்குச் சுதந்தரம். உங்களுக்கு இது சுதந்தரமாய்த் தோன்ருதிருக்கலாம்; ஆனுல், வளர்ச்சிக்கு முயற்சி புரியும் நிலேயிலேயே நாங்கள் இன்னும் இருந்து கொண்டிருக்கிருேம் என்பதை நீங்கள் ஞாபகத்தில் வைக்க வேண்டும். ஒரு நாள், நாங்கள் ராஜீய சுதந்தரத்தையும் அடைந்து விடுவோம்'' என்ருர்.

“சகல சொத்தும் ராஜாங்கத்துக்குச் சொந்தமாய் இருக்கும் ஓர் இடத்தில், உங்களுக்கு ராஜீய, பொருளாதாரச் சுதந்தரமெல்லாம் எந்தக் காலத்திலாவது கிடைக்குமா?'' என்று நான் மேலும் நெருக்கிக் கேட்டேன்.

முடிவே யில்லேயோ என்று தோன்றும்படி, தம் சித்தாந்தங்களேக் கடகட என்று அவர் மறுபடியும் பொழியத் தொடங்கிவிட்டார். ஆனுல், மார்க்ஸ் தத்துவங்களுக்குப் புறம்பாக வேறு விடை ஒன்றும் அவரிடம் கிடையாது. அந்தத் தத்துவங்களிலே அவர் ஊறிப் போயிருந்தார். மார்க்ஸ் தத்துவங்களிலோ, இந்த அடிப்படையான கேள்விகளுக்குப் பதிலே இல்லே.

நான் போகத் திரும்பிய சமயத்தில், ஜோ பார்னஸ் என்பவரிடம் மேஜர் கைட் ஏதோ சொல்வது என் காதில் விழுந்தது. எங்கள் விமானியான மேஜர் கைட், அற்புதமான திறமையும் மதி நுட்பமும் வாய்ந்தவர். அவர் “இதைக் கேளுங்கள். ஒரு விஷயத்தை இந்த ஆசாமிக்கு விளக்கிச் சொல்லிவிட்டுத்தான் நாம் போக வேண்டும். இவன் என்ன சொல்லுகிருன் என்று பார்க்கவே, வில்கி இப்படி விசாரித்தார் என்று இவனுக்கு விளக்க வேண்டும். பணத்தைக் கொண்டு வாங்கக்கூடிய சுகங்களேப் பெறவும், பிறருக்கு

மேலே ஏறவும், அமெரிக்காவில் நாம் ஆசைப்படுவது உண்மைதான். ஆனல், பணம் ஒன்றுக்காக மாத்திரமே நாம் உழைக்கவில்லை. என் தோள்பட்டையில் உள்ள இந்த உத்தியோகச் சின்னத்தை நான் பெற்றபோது, இது எனக்குப் பெரிய சம்பள உயர்வைத் தந்தது. ஆயினும், அதே சமயத்தில் இதோ இந்த ரிப்பனையும் நான் பெற்றேன்'' என்று சொல்லி, விசேஷ கௌரவச் சிலுவை கட்டிய ஒரு ரிப்பனைச் சுட்டிக் காட்டினர். மேலும் தொடர்ந்து, “இந்த ரிப்பன் எனக்கு ஒரு செப்புக் காசுகூடக் கொடுக்கவில்லை. என் பதவி அந்தஸ்தையும் சம்பள உயர்வையும் வேண்டாம் என்று உதறித் தள்ள நான் தயார். ஆனல், பத்து லட்சம் டாலர் கொடுத்தாலும், இந்த ரிப்பனை நான் கைவிடமாட்டேன். இதை நீங்கள் இவனுக்குச் ;சொல்லுங்கள்'' என்று முடித்தார்.

ருஷ்யத் தொழிற்சாலைகளைப் போலவே, ருஷ்ய விவசாயப் பண்ணைகளையும், இந்தப் பரிபூர்ண யுத்தத்துக்காக, பயன்படுத்தி வருகிறார்கள். போரிடும் அந்தத் தேசத்துக்கு உதவிசெய்ய அவற்றுக்குள்ள சக்தி அபரிமிதமாகும். அந்தச் சக்தியைக் கணக்கிடுவதில் ஹிட்லர் பெரும் பிசகு செய்துவிட்டார். அது உலக அதிசயங்களிலே ஒன்று ஆகும்.

போர்முனையான ரிஷேவ் என்னும் இடத்திலிருந்து வெகு தூரத்துக்கப்பால் மத்திய ஸைபீரியா வரையிலும் வழி நெடுகிலும் உள்ள இந்த விவசாயப் பண்ணைகளை, ஒவ்வொரு நாளும் பார்த்துக்கொண்டே, நாங்கள் பறந்து சென்றோம். ருஷ்யாவின் விவசாய நிலங்கள், போர் முனைக்குப் பின்னே ஆறுயிரம் மைல் தூரம் பரந்து கிடக்கின்றன. இந்த நிலப்பரப்பு எவ்வளவு பிரம்மாண்டமானது! எத்தனை எண்ணற்ற வகைகள் அடங்கியது; விமானத்திலிருந்து பார்க்கும் ஒருவருக்குத்தான் இதெல்லாம் சிறிது புலனாகும். இதில் ஒரு பகுதியான நெல் வயல்கள் அடி வானம் வரையில் பரவியிருந்ததைப் பார்த்தபோது, எங்கள் விமானியான மேஜர் கைட் அவர்களுக்கு, தம்சொந்த மாகாணமான டெக்ஸாஸ் ஞாபகம் வந்துவிட்டது. டாஷ் கெண்டுக்குப் பக்கத்தில் உள்ள நீர்ப்

பாசனம் மிகுந்த பள்ளத்தாக்கைப் போன்ற பிற பகுதிகள் தென் கலிபோர்னியாவைப் போல் தோன்றின.

குபிஷேவுக்கு அருகே வோல்கா நதிக்கரையில் சில பண்ணைகளை, நான் நெருங்கிப் பார்க்கச் சந்தர்ப்பம் கிடைத்தது. அந்த நதியிலே, கச்சிதமான நவீனப் படகு ஒன்றில் நாங்கள் சென்ருேம். கரைகளில் வரிசை வரிசையாய் நின்ற மரங்களினூடே பார்த்தால், கம்பீரமான பல மாளிகைகளின் உச்சி தெரிந்தது. மாஸ்கோ, லெனின்கிராட் போன்ற வெகு தூரத்து நகரங்களிலிருந்த பணக்காரர்களெல்லாம், ஒரு காலத்தில் கிராமங்களில் கட்டிக்கொண்டிருந்த பங்களாக்கள்தாம் இந்த மாளிகைகள். இப்போது இவை, தொழிலாளிகளின் ஒய்வு இடங்களாகவும் ஆரோக்கிய வாசஸ்தலங்களாகவும் இருக்கின்றன. ஹட்ஸன் நதிப் படகிலிருந்து பார்க்கும்போது தென்படும் பிரம்மாண்டமான மாளிகைகளை, இவை எனக்கு ஞாபகப்படுத்தின. ஆனால், ஹட்ஸன் நதியை விட, ஒல்கா நதி, மிகச் சூதுள்ளதாயிருக்கிறது. நானே சுக்கானைப் பிடித்து ஓட்டிப் பார்க்கும்படி, ஒரு முறை எங்கள் மாலுமி அதை என் கையில் கொடுத்தார். அப்போது, ஒல்கா நதியின் சூதை நான் சொந்தத்திலே கண்டுகொண்டேன். திடீரென்று ஒரு சுழல் வந்து, எங்களை வெகு வேகமாய்க் கரைப் பக்கம் தள்ளியது. ஒல்காப் படகோட்டி, ஆனந்தமாய்ச் சிரிக்கத் தொடங்கி விட்டார். ஆற்றிலே பல தெப்பக் கட்டைகள், மர ஆலைகளை நோக்கி, மிதந்துகொண்டிருந்தன. அவற்றின் மீது சிறு சிறு குடிசைகளும் கால் நடைகளும் கோழிக் குஞ்சுகளும் இருந்தன. இவையெல்லாம், அவற்றில் பிரயாணம் செய்யும் குடும்பங்களைச் சேர்ந்தவை. அந்தக் குடும்பங்கள், கோடைக்காலம் முழுவதும், இந்தத் தெப்பங்களிலேயே, வட ருஷ்யக் காடுகளிலிருந்து தெற்கேயுள்ள நகரங்களுக்கு, மெல்ல மெல்லப் பிரயாணம் செய்துகொண்டிருக்கின்றன.

குபிஷேவில் இருக்கையில், சில திட்டங்களைப் பற்றி நான் கேள்விப்பட்டேன். ஒல்கா நதியில் உள்ள ஒரு பெரிய வளைவில், மின்சார உற்பத்திக்காக அணைக்கட்டுக் கட்ட, ருஷ்ய

சர்க்கார் சில திட்டங்கள் போட்டிருக்கிறதாம். சர்க்காருக்குச் சொந்தமாய், பிரம்மாண்டமான மின்சார உற்பத்திச் சாலைகள் ஏற்படுவதைப் பற்றி எனக்கு அதிசயமில்லை. ஆனால், இந்த மின்சார உற்பத்தித் திட்டம் பூர்த்தியாகுமானால், நம்முடைய டி. வி. எ., கிராண்ட் கௌலீ, பான்வில்லி ஆகிய மூன்று மின்சார உற்பத்திச் சாலைகளும் ஒன்றுசேர்ந்து எவ்வளவு மின்சாரசக்தியை உற்பத்தி செய்யக்கூடுமோ அதைப்போல் இரண்டுமடங்கு மின்சார சக்தியை, இந்த ஒரே மின்சாரச் சாலை உற்பத்தி செய்துவிடும். இது எனக்குத் தெளிவாய்ப் புலனாயிற்று. ருஷ்யர்களுக்குப் பிரம்மாண்டமான காடுகளும் சமவெளிகளும் இருக்கின்றன. அவற்றுக்குப் பொருத்தமான ஒரு பெரிய மின்சாரத் திட்டத்தை வகுக்க, அவர்கள் யோசித்துக்கொண் டிருக்கிறார்கள் என்று நான் உணர்ந்துகொள்ளத் தொடங்கினேன்.

நாங்கள் ஒல்கா வளைவை விட்டுப் புறப்பட்டு, உள்நாட்டில் ஒரு கூட்டுப் பண்ணைக்கு, காரில் சென்றோம். அது ஏற்கனவே கொஞ்சம் நடுத்தரமான சில பிரபுக்களின் வேட்டைக் களனா யிருந்ததாம். 8000 ஏக்கர் அதன் விஸ்தீர்ணம். அதில் ஐம்பத்தைந்து குடும்பங்கள் வசிக்கின்றன. ஒரு குடும்பத்துக்கு 140 ஏக்கர் விகிதம் வருகிறது. இந்தியானாவில் ரஷ்கண்டிலும் ஏறக்குறைய இதே விகிதந்தான் விழுகிறது.

நல்ல மண்; கறுத்து உரம் நிறைந்த பசலை மண். ஆனால், மழை குறைவு; வருஷம் ஒன்றுக்குப் பதின்மூன்று அங்குலந்தான் மழை பெய்கிறது. இந்தியானாவிலோ, நாற்பது அங்குலம் மழை பெய்கிறது. எருப் போடாமலே,ருஷ்யப் பண்ணையில் பயிர் செய்கிறார்கள். ஆனால் முழுவதும் யந்திரங்களைக் கொண்டே விவசாயம் நடக்கிறது. பெரும்பாலும் கோதுமை, கம்பு, மற்றும் சில தானியம் இவற்றையே பயிர் செய்கிறார்கள். ஒரு பருவத்தின் விளைச்சல், ஏக்கர் ஒன்றுக்குக் கோதுமை பதினைந்தரைப் புஷல்; கம்பு கொஞ்சம் குறைவு. அவர்களுடைய நிலைமையில், இது நல்ல விளைச்சல் என்றே நான் நினைத்தேன். ருஷ்யாவின் நில விஸ்தீர்ண அளவான ஹெக்டேர்களை ஏக்கர்களாகவும், தானிய அளவான பூட்களைப்

புஷல்களாகவும் கணக்கிடுவதற்கு, நானும் மைக் கௌலீயும் வெகு சிரமப்பட்டோம். ஒரு புஷலுக்கு அமெரிக்க நாணயத்தில் என்ன விலை கிடைக்கும் என்று கணக்கிடும் முயற்சியை நாங்கள் கைவிட்டு விட்டோம். ஏனென்றால், விலைகளை யெல்லாம் ரூபிள் கணக்கிலேயே ருஷ்யர்கள் சொன்னார்கள். ரூபிள் நாணயத்தின் மதிப்போ வெகு வேகமாய் ஏறி இறங்குகிறது; வெவ்வேறு மார்க்கட்டில் வெவ்வேறு பரிவர்த்தனை விகிதமுடையது. என்றாலும், தானியம் நல்ல ரகம்தான் என்று மட்டும் நாங்கள் தீர்மானிக்க முடிந்தது.

பண்ணையில் உள்ள ஐம்பது குடும்பங்களும் தனித்தனியே ஒவ்வொரு பசுமாடு வைத்துக்கொள்ள அநுமதித்திருக்கிறார்கள். மாடுகள் பல ஜாதிகள்; எல்லாம் மெலிந்திருந்தன. அந்தக் குடும்பங்கள் வசித்த சின்னஞ் சிறு வீடுகளின் கூட்டத்துக்கு அருகே யிருந்த ஒரு மேய்ச்சல் தரையில், இந்த மாடுகள் ஒரு மந்தையாய் மேய்ந்துகொண் டிருந்தன. ஆனால், கூட்டுப் பண்ணைக்கே சொந்தமாய் எண்ணூறு கால்நடைகள் இருந்தன. இவற்றில் இருநூற்றைம்பது பசுக்கள். இவை நல்ல ஜாதிப் பசுக்கள்; நன்றாய்ப் பராமரிக்கப் பெற்றவை. கால்நடைகளின் கொட்டகை, பெரிய செங்கல் கட்டடம். தரையைச் சாந்தால் தளவரிசை செய்திருக்கிறார்கள். கால்கள் நவீனமானவை. கன்றுகளை மிக அன்போடு கவனித்து வளர்க்கிறார்கள். அவற்றின் கொட்டில்கள் சுத்தமா யிருக்கின்றன. பெண்கள்தாம், கொட்டகையைக் கவனித்துக் கொள்ளுகிறார்கள். நல்ல ஜாதி மாடுகளை அபிவிருத்தி செய்வதற்காக, ஜாக்கிரதையாய்த் தாங்கள் கைக்கொள்ளும் முறைகளைப் பற்றி அந்தப் பெண்கள் எனக்கு விளக்கிச் சொன்னார்கள். அந்த முறைகள் சாஸ்திரீயமாகவும் நவீனமாகவும் இருக்கின்றன.

நல்ல தேகக்கட்டுள்ள ஒரே ஒரு புருஷரைத்தான், பண்ணையில் நான் பார்த்தேன். அவர்தான் பண்ணையின் மானேஜர். பண்ணை ஊழியர்களில் பெரும்பாலோரும் பெண்கள் அல்லது குழந்தைகள்; சில கிழவர்களும் இருந்தார்கள். செஞ்சேனைக்கு ஏராளமான ஆட்களைக் கொடுத்த

பிரம்மாண்டமான களஞ்சியம், ருஷ்யாவின் விவசாயப் பண்ணைகள் தாம். எனவே, செஞ்சேனையில் உள்ள சோல்ஜர்களின் மனைவிகளும் மக்களுந்தாம், இன்று ருஷ்யாவுக்குச் சாப்பாடு போட்டுக்கொண்டிருக்கிறார்கள்.

மானேஜர், பண்ணையின் ஜாராக (அதாவது சர்வாதிகாரியாக) இருக்கிறார். அவர் சாஸ்திரீயமான விவசாயப் பயிற்சி பெற்றவர்; சுறுசுறுப்பு நிறைந்தவர்; உறுதி உள்ளவர். என்ன பயிர் செய்வது என்று தாமே திட்டம் போட்டு, நடைமுறையிலும் அதை நடத்தி வைக்கிறார். பண்ணையில் உள்ள சகல ஆணும் பெண்ணும் குழந்தையும், அவருடைய அதிகாரத்துக்கு உட்பட்டிருக்கிறார்கள்.

அவரோ யுத்தப் பொருளாதாரத் திட்டத்தில் இந்தப் பண்ணை செலுத்தவேண்டிய பங்கை வெற்றிகரமாய்த் திட்டமிட்டு உற்பத்தி செய்யவேண்டிய பொறுப்பை மேற்கொண்டிருக்கிறார். இதில் அவர் வெற்றி பெற்றால், அவருடைய அதிகாரமும் அந்தஸ்தும் உயரும்; தோற்றால், அவருக்குக் கிடைக்கும் தண்டனை மிகக் கடுமையாயிருக்கும்.

இந்தப் பண்ணைகளில் ஒன்றின் பொருளாதாரத்தைப் பற்றி அறிய நான் ஆவல்கொண்டு அநேக கேள்விகள் கேட்டேன். ஒவ்வோர் ஊழியரும் எவ்வளவு வேலை செய்கிறார் என்று காட்டும் ஒரு கணக்கை வெகு ஜாக்கிரதையாய்த் தயாரித்து, பண்ணையின் காரியாலயத்தில் வைத்திருக்கிறார்கள். 'ஒருநாள் வேலை' என்பது இவ்வளவு என்று ஒரு கணிதம் செய்து வைத்திருக்கிறார்கள். ஆனால், விசேஷத் திறமைகளுக்குச் சிறப்பான அங்கீகாரம் உண்டு. உதாரணமாக, ஒரு யந்திரக் கலப்பையை ஓட்டுகிறவன், குறிப்பிட்ட ஏக்கர்கள் விஸ்தீர்ணத்தை ஒரே நாளில் உழுதாலும், அதை 'இரண்டு நாள் வேலை'யாக மதிக்கிறார்கள். குறிப்பிட்ட எண்ணிக்கை அரிக்கட்டுகளைக் கட்டுவதையும், குறிப்பிட்ட எண்ணிக்கைப் பசுக்களைப் பராமரிப்பதையும், இதே மாதிரி, ஒரு வேலை நாள் அதிகப்படியாகக் கணக்கிடுகிறார்கள்.

ருஷ்யாவில் உள்ள பெரும்பாலான கூட்டுப்பண்ணைகளுக்கு, ஸோவியத் சர்க்காருக்குச் சொந்தமான யந்திர

ஸ்தலங்களி லிருந்து, யந்திரக் கலப்பைகளை வாடகைக்குக் கொடுத்திருக்கிறார்கள். இந்தப் பண்ணையும் அதே மாதிரி தான், யந்திரக் கலப்பைகளை வாடகைக்கு வாங்கியிருக் கிறது. பண்ணையின் அறுவடையிலிருந்து, இந்தக் கலப்பை களுக்கு வாடகை செலுத்துகிறார்கள். ரூபிள் நாணயமாக அல்ல; தானியங்களாகவே செலுத்துகிறார்கள். இதல்லாமல், பண்ணையிலிருந்து, சர்க்காருக்கு வரியும் செலுத்த வேண்டும். அதுவும் தானியமாகவே செலுத்தும் வாரந்தான். இவை போக ஒவ்வோர் அறுவடையிலும் மிஞ்சும் விளைவை, பண்ணையின் அங்கத்தினர்களுக்கு, அவரவர் கணக்குக்கு வரும் வேலை நாட்களின் விகிதாசாரப்படி ஈவித்துக் கொடுத்து விடுகிறார்கள்.

இப்படி அறுவடையில் இறுதியாகத் தமக்குக் கிடைக்கும் தானியங்களை, ஒவ்வோர் அங்கத்தினரும் பண்ணைக்கே சொந்தமான ஒரு சிறிய கடையில் வைத்துக்கொண்டு வியாபாரம் செய்யலாம்; அல்லது மொத்தமாக விற்று விடலாம். அதாவது, பண்ணைக் குடியானவர்கள், தாங்கள் உபயோகித்த கருவிகளின் வாடகையையும் வரியையும் தானியமாகச் சர்க்காருக்குச் செலுத்திய பின்பு மிஞ்சிய விளைவைத் தங்களுக்கு இஷ்டப்பட்ட இடத்தில் விற்க, அவர்களுக்குக் கொள்கை யளவிலே சுதந்தரம் உண்டு. என்றாலும், கூட்டுப் பண்ணைக் குடியானவர்களின் விளைவு களை, தன்னிடம் நேரே விற்றுவிடும்படிதான், வரவர அதிக மாய், அவர்களைச் சர்க்கார் நிர்ப்பந்தித்து வருகிறது. நான் கண்டு பேசிய குடியானவர்களில் பெரும்பாலோரிடமும் ஏராளமான காசு இருப்பதாகவும், அதைச் செலவழிக்க வழி தெரியாமல் அவர்கள் விழிக்கிறார்கள் என்றும் எனக்குத் தோன்றியது. ஏனென்றால், கடைகளில் எல்லாம் சரக்குகள் அரிதாயிருக்கின்றன; வரவரக் குறைந்தே வருகின்றன. யுத்தத்துக்கும் செஞ்சேனைக்கும் உபயோகமாவதற்காக, சகல தொழிற்சாலைகளின் பண்டங்களையும் சர்க்காரே வாங்கி விடுவதுதான் இதன் காரணம்.

பண்ணை மானேஜரின் வீட்டுக்கு நாங்கள் சிற்றுண்டி அருந்தச் சென்ருேம். அவருக்கு வயது முப்பத்தேழு. கலியாணம் ஆனவர். இரண்டு குழந்தைகள் இருக்கின்றன. ஒரு சிறிய கல் கட்டடத்தில் அவர் வசித்தார். எளிமையான வீடு. ஐக்கிய அமெரிக்காவில் மிகச் செழிப்பான ஒரு பண்ணை வீட்டின் சூழ்நிலை எப்படியிருக்குமோ அப்படியேதான் இதன் சூழ்நிலையும் இருந்தது. அவர் மனப்பூர்வமாக உபசரித்தார். நல்ல நகைச்சுவையோடு சிரித்துக்கொண்டே விருந்துண்டோம். நிறைந்த உணவு. எளிமையா யிருந்தாலும், நன்ருயிருந்தது. உண்டியைச் சமைத்தவள், மானேஜரின் மனைவியே. இந்தியாளுவில் உள்ள பண்ணைகளில் பல தடவை நான் விருந்துண் டிருக்கிறேன். அங்கே எப்படி வற்புறுத்திஞர்களோ அதேபோல்தான் இவளும் என்னை, உண்ணும்படி வற்புறுத்திஞள். "மிஸ்டர் வில்கீ, இன்னும் கொஞ்சம் வாங்கிக்கொள்ளுங்கள். நீங்கள் என்ன ஒன்றுமே சாப்பிடவில்லையே?" என்ருள். அதன் பின்பு, சர்வ வியாபியான வோட்கா வந்து சேர்ந்தது. தண்ணீரைக் கண்ணிலேயே காணவில்லை.

இது வரையில் எனக்குத் தெரிந்த ஒவ்வொரு குடியானவனும், தனக்கே சொந்தமாய் ஒரு துண்டு நிலமாவது இருக்க வேண்டும் என்பதில் அளவு கடந்த ஆசை வைத்திருக்கிருனே! அந்த ஆசை இவர்களுக்கு மட்டும் ஏன் இல்லை? இதை அறிவதற்காக மானேஜரையும் அவர் மனைவியையும் நெருக்கி விசாரித்தேன்; பண்ணை ஊழியர்கள் பலரிடமும் சம்பாஷித்தேன். அவர்களில் சிலருக்கு நான் இந்த மாதிரி விசாரித்ததே அதிசயமா யிருந்தது. ஆனுல் மானேஜர் அதை எனக்கு விளக்கிச் சொன்ஞர். சற்றேறக் குறைய நூறு வருஷங்களாக, அவர்கள் அடிமைகளாகவே இருந்து வருகிருர்கள். அவர்களோ அவர்களுடைய மூதாதைகளோ, தாங்கள் உழைத்த நிலத்திலே தங்களுக்குச் சொந்தமில்லாமலே வாழ்ந்து வந்திருக்கிருர்கள். எனவே இப்போதுள்ள ஏற்பாடு அவர்களுக்கு நல்லதாகவே தோன்றுகிறது.

மற்றப் பண்ணைகளைவிட, சராசரி தளவாடங்களை அதிகமாகப் பெற்றிருப்பது இந்தப் பண்ணை என்று, பின்னால் கேள்விப்பட்டேன். என்றாலும், ஸோவியத் யூனியனின் 2,50,000 பிற கூட்டுப் பண்ணைகளைப் போலவேதான் இதையும் நடத்துகிறார்கள். ருஷ்யாவின் உறுதியான எதிர்ப்புக்கு முதுகெலும்பு போன்றிருப்பவை இந்தக் கூட்டுப் பண்ணைகள்தாம் என்று அறிந்து கொள்ளத் தொடங்கினேன்.

ருஷ்யப் போர்முனைக்குப் பின்னே, பரிபூர்ணமாய் யுத்தஸேவையில் ஈடுபட்டு நிற்கின்றன ருஷ்யத் தொழிற்சாலைகளும் விவசாயப்பண்ணைகளும். ஜெர்மனியைத் தவிர உலகத்தில் வேறெங்கும் அவை இவ்வளவு பரிபூர்ணமாய் யுத்தஸேவையில் ஈடுபடவில்லை. இந்தத் தொழிற்சாலைகளுக்கும் பண்ணைகளுக்கும் பின்னே, யந்திரம் போன்ற ஒரு சமூக அமைப்பு இருக்கிறது. அதுதான், இந்தப் பரிபூர்ண ஈடுபாட்டுக்குக் காரணம்.

அந்தச் சமூக யந்திரத்தின் மிக்க ருசிகரமான முக்கியமான பகுதிகளில் ஒன்று, சமாசாரப் பத்திரிகைகளே என்று எனக்குத் தோன்றியது. மற்ற ஒவ்வொரு பகுதியையும் போலவே, இந்தப் பகுதியும் சர்க்காரின் கண்காணிப்பிலேயே நடக்கிறது.

என் வாழ்க்கையிலும் சரி, என்னோடு கூட இருந்த அமெரிக்கப் பிரசுரகர்த்தர் கார்டினர் கௌலிஸ் என்பவரின் வாழ்க்கையிலும் சரி, முதல் முதலாக ஒரு விஷயத்தை மாஸ்கோவில்தான் கண்டோம். சமாசாரப் பத்திரிகைகளை வாங்குவதற்காக, மிக நீண்ட தூரம் வரிசைக் கிரமமாய் ஆண்களும் பெண்களும் அங்கே நிற்கக் கண்டோம். தினசரிப் பத்திரிகைகள் ஒவ்வொன்றும் பத்து லட்சம் பிரதிகளுக்கு மேல் அச்சாகின்றன. என்றாலும், ஜனங்களின் தேவையை அவை பூர்த்திசெய்ய முடியவில்லை.

சின்னஞ் சிறு நகரங்களில், தெருக்களில் சில கண்ணாடிப் பெட்டிகளைச் சுற்றி, ஜனங்கள் சிறுசிறு கூட்டங்களாய்த் திரண்டு நிற்பதை நான் கண்டேன். அந்தக் கண்ணாடிப்

பெட்டிக்குள்ளே, ருஷ்யாவின் தலைமைப் பத்திரிகைகளான பிராவ்டா, இஸ்வெஸ்டியா இரண்டையும் விரித்துக் குண்டூசி குத்தி வைத்திருந்தார்கள். நடுக்கும் குளிரிலே, ஒருவர் தோளிடுக்கிலே ஒருவராய்ப் பார்த்துக் கொண்டு, வெகு ஆவலோடு ஜனங்கள் படித்தார்கள்.

நாங்கள் டாஷ்கெண்டுக்குப் பறந்து செல்லுகையில், ஸோவியத்தின் வழக்கமான பிரயாணி விமானம் எதையும் விட வேகமாக, எங்கள் விமானம் பறந்தது. அநேக வருஷங்களுக்குப் பின் முதல் முதலாக அந்த மத்திய ஆசிய நகரில் தோன்றிய அமெரிக்கர் நாங்கள்தாம். ஆகவே, எங்களை மிக்க ஆவலோடு அந்த ஜனங்கள் கவனித்தார்கள். இது இயற்கைதான். ஆனால், டாஷ்கெண்டில் உள்ளவர்கள் பார்த்திராத மிகச் சமீபத்துச் சமாசாரப் பத்திரிகைகள் சிலவற்றை நாங்கள் மாஸ்கோவிலிருந்து கொண்டு வந்திருக்கிறோம் என்று அறியும் வரையில்தான் இந்த ஆவலெல்லாம். அதை அறிந்தார்களோ இல்லையோ; உடனே எல்லாரும் - எங்களை வரவேற்று உபசரித்த அதிகாரிகள் கூட - எங்களைக் கைவிட்டுவிட்டு, செய்திகளைப் படிக்கத் தொடங்கிவிட்டார்கள்!

எனக்கு இது அதிசயமா யிருந்தது. சென்ற இடமெல்லாம் இதைப்பற்றி நான் கேள்விகள் கேட்டேன். ருஷ்யாவில் சர்க்காரின் நீண்ட கால நோக்கங்களை நிறைவேற்றும் கருவியாகக் கலாசாலைகள் இருக்கின்றன; அதேபோல, சமீப கால நோக்கங்களை நிறைவேற்றும் மிக்க பலமான ஒரே கருவி பத்திரிகைதான். இது என் நம்பிக்கை. பத்திரிகைகளையும் கலாசாலைகளையும் இருபது வருஷ காலமாக, இப்போதைய ருஷ்ய சர்க்கார், தன் கண்காணிப்பில் வைத்துக்கொண்டு வந்திருக்கிறது. இந்தச் சர்க்கார், ருஷ்ய மக்களின் பேராதரவையும் தியாகத்தையும் பெறக்கூடியதா யிருக்கிறது. இப்பேர்ப்பட்ட சர்க்காரின் பலத்தை, இன்னுங்கூடச் சிலர் அலட்சியம் செய்தும் குறைத்தும் பேசுகிறார்கள். அந்தப் பேச்சு, சுத்தப் பிதற்றலாகும்.

ஒரு நாள் இரவு, மாஸ்கோவில் ஸோவியத் பத்திரிகை களில் எத்தகைய சிந்தனையும் உணர்ச்சிகளும் இடம் பெறு கின்றன என்பதைக் கவனிக்கும் சந்தர்ப்பம் எனக்குக் கிடைத்தது. எனக்குத் தெரிந்த நிருபர்களிலேயே மிகச் சிறந்த கோஷ்டியார், மாஸ்கோவில் உள்ள அமெரிக்கப் பத்திரிகை நிருபர்கள்தாம். நியூ யார்க் ஹெரால்ட் ட்ரிப்யூனின் வால்டெர் கொ, சிக்காக்கோ டெய்லி நியூஸின் லெலாண்ட் ஸ்டவ், நியூ யார்க் ஹெரால்ட் ட்ரிப்யூனின் மாரிஸ் ஹிண்ட்ஸ், நியூ யார்க் டைம்ஸின் ரால்ப் பார்க்கர், யுனைட்டட் பிரஸ்ஸின் ஹென்ரி ஷெப்பைரோ, அஸோஸியேட்டட் பிரஸ்ஸின் எட்டி கில்மூர், ஹென்ரி காஸ்ஸிடி, நேஷனல் பிராட் காஸ்டிங் கம்பெனியின் ராபர்ட் மகிடாப், கொலம்பியா பிராட்காஸ்டிங் ஸிஸ்டத்தின் லார்ரி லெஸ்ஸுர், டைம், லைப் இரண்டையும் சேர்ந்த வாலி கிராப்னர் ஆகியவர்கள் மாஸ்கோவில் இருக்கிறார்கள். இவ்வளவு சுறுசுறுப்பும் நாணயமும் கடின உழைப்புமுள்ள அயல்நாட்டுப் பத்திரிகை நிருபர்கள், லண்டனைத் தவிர உலகின் வேறெந்த நகரத்திலும் இருப்ப தாக எனக்குத் தெரியவில்லை. இவர்களில் சிலர், ஒரு நாள் இரவு ஸோவியத் பத்திரிகைக்காரரர் கோஷ்டி ஒன்றைத் திரட்டினார்கள். ஒரு பெரிய அறையில் எங்களைச் சுதந்திர மாய் விட்டு விட்டார்கள். அங்கே உண்டியும் பானமும் இருந்தன. துபாஷிகளும் இருந்தார்கள். ஆனால், அதி காரிகள் எவரும் இல்லை. எந்த விஷயம்பற்றியும் தடை யில்லாமல், எனக்கு இஷ்டமான என்ன கேள்வி வேண்டு மானாலும் அவர்களைக் கேட்கும்படி சொன்னார்கள்.

அவர்கள் மிகவும் சுவாரஸ்யமான ஒரு கோஷ்டியார். ஸோவியத் நிருபரும் நாவலாசிரியருமான இலியா எஹ்ரென் பர்க் அங்கே இருந்தார். அவர் தமது ஆயுளில் பெரும் பகுதியும் பிரான்ஸில் வசித்திருக்கிறார். வேறெந்த அயல் நாட்டு நிருபருக்கும் மேற்கு ஐரோப்பாவைப் பற்றித் தெரிந்திருக்கக்கூடிய அளவு விஷயம் இவருக்கும் தெரியும். வாலிப நிருபரும் நாடகாசிரியருமான போரிஸ் வயடெக்காவ் அங்கே இருந்தார். ஸெவாஸ்டபோல் வீழ்ச்சி யடைந்த

கடைசி நிமிஷம் வரையில் அங்கே நடைபெற்ற தற்காப்புப் போரின் கதையை அவர் எழுதியிருக்கிறார். அந்தக் கடைசி நிமிஷத்திலேதான், ஒரு சப்மரீன் மூலம் அவர் தப்பியோடி வந்தார். ஸோவியத் வாலிபப் பெண் நிருபரான வாலண்டினா கென்னி அங்கே இருந்தார். கடுகடுத்த முகமுடைய ஸிமனுவ் அங்கே இருந்தார். அவர் ருபாஷ்கா என்ற ருஷ்ய உடுப் பணிந்து, தோல் பாதரட்சை தரித்திருந்தார். அவர் அன்று ஸ்டாலின்கிராடிலிருந்து இங்கே வந்திருந்தார். 'ருஷ்ய மக்கள்' என்ற நாடகத்தின் ஆசிரியர் அவர். ருஷ்யாவில் ஜனங்கள் மிக விரும்பும் பத்திரிகை எழுத்தாளர் இன்று அவர்தான் என்று சொல்லலாம். தளபதி அலொக்ஸீ இகனட்டீவ் அங்கே இருந்தார். அவருக்கு அறுபது வயதா கிறது. சுதந்தர புருஷன். 1917-ஆம் வருஷப் புரட்சிக்கு முன்பு, ருஷ்ய ஸ்தானிகரின் ராணுவத் துணைவராக வெளி நாட்டுக்குச் சென்றவர். இப்போது, செஞ்சேனையின் சமாசாரப் பத்திரிகையான ரெட் ஸ்டாரில் அபிப்பிராயங்கள் எழுதும் தலைமை எழுத்தாளர்களில் ஒருவர்.

ஆவியில் வெந்த மீன் வற்றலைத் தின்று, சூடான தேநீர் பருகி, இரவு முழுவதும் நாங்கள் பேசிக்கொண் டிருந்தோம். சம்பாஷணையில் அவர்கள் கேள்விகளுக்கு நான் பதில் சொன்னேன்; என் கேள்விகளுக்கு அவர்கள் பதில் சொன்னார்கள். ஐரோப்பாவில் இரண்டாவது போர்முனை எப்படி நடக்கிறது, ருடால்ப் ஹெஸ்ஸின் கதி என்ன என்ற விஷயங்கள் பற்றியும், அமெரிக்கப் பண்டங்களும் யுத்தக் கருவிகளும் இன்னும் அதிகமாக ருஷ்யாவுக்கு ஸப்ளை ஆக வேண்டிய தேவை பற்றியும், அவர்கள் என்னை நெரித்து விட்டார்கள். அவர்களுக்கு நல்ல விஷய ஞானமும் ஆவலும் ஊக்கமும் ஆராய்ச்சியும் இருந்தன. ஆனால், நம்மிடம் அவர்களுக்கு விரோதபாவம் இல்லை; அயல் நாட்டிலிருந்து வந்த ஒரு பிரயாணியோடு, ஸோவியத் பத்திரிகைக்காரர்கள், அதிகாரிகளின் சம்பந்தமின்றி, மனம் விட்டுப் பேசிய முதல் முதல் சம்பாஷணை, சென்ற பத்து வருஷங்களில் இதுதான் என்று பின்னால் எனக்குச் சொன்னார்கள்.

அன்று மாலை நாங்கள் பரஸ்பரம் அந்தரங்கமாய் அபிப்பிராயங்களைப் பரிமாறிக்கொண்டோம். அப்போது அங்கே பிரசன்னமா யிருந்தவர்களும் எழுத்து வேலையையே தொழிலாய்க் கொண்டவர்களுமான அந்தப் பத்திரிகைக் காரர்களில் எவரும் இந்த அந்தரங்கத்துக்குப் பங்கம் செய்ய வில்லை. நானும் அதற்குப் பங்கம் செய்யவே மாட்டேன். ஆயினும், அந்தப் பத்திரிகை நிருபர்கள் என்னிடம் சொன்ன சில விஷயங்களை மட்டும், என் வாழ்க்கையிலே ஒரே ஒரு தடவை வெளியிடுவேனுனல் இதற்காக அவர்கள் என்னைப் பற்றித் தப்பர்த்தம் செய்துகொள்ள மாட்டார்கள் என்று நான் நிச்சயமாய் நம்புகிறேன்.

இரண்டு விஷயங்கள், இங்கே குறிப்பிடத் தக்கவை: (1) வணங்காமுடித்தனம் என்றுதான் நான் சொல்வேன். அந்த ஆசாமிகள், தங்கள் அபிப்பிராயங்களைத் துளிக்கூட விட்டுக் கொடுக்கமாட்டோம் என்றுர்கள். (2) குழந்தைப் பருவத்தி லிருந்து ஒரு மனிதனை, சர்வாதிகாரத் தத்துவத் திலேயே பயிற்சி செய்து வந்தால், அவன் கருத்துக்க ளெல்லாம் வர்ணம் பூசாத வெள்ளைச் சித்திரங்களாகவே யிருக்கின்றன.

உதாரணமாக, ஸிமனுவை நான் ஒரு கேள்வி கேட் டேன். அவர் அப்போதுதான் ஸ்டாலின்கிராடிலிருந்து வந்திருக்கிருர். சில தினங்களுக்கு முன் ரிஷேவ் போர் முனையில் நான் கண்டு பேசிய ஜெர்மன் கைதிகள், பரிதாப மாயும் கோரமாயும் எனக்குத் தென்பட்டார்கள். ஸ்டாலின் கிராட் போர்முனையில் கைதான ஜெர்மானியரும் இதே மாதிரிதான் தென்பட்டார்களா என்று, ஸிமனுவைக் கேட்டேன். என் கேள்வி, ருஷ்ய பாஷையில் மொழிபெயர்ப் பாயிற்று. ஆனல், ஒரு பதிலும் கிடைக்கவில்லை. வேறு யாரோ பேச்சைப் பிடித்துக் கொண்டு சம்பாஷணையை எங்கேயோ திருப்பி விட்டார்கள்.

சில வார காலமாகத் துபாஷிகளோடேயே வசித்து வந்த பின்பு, இதற்கெல்லாம் நான் ஆச்சரியப்பட முடியாது. ஆகவே, அந்தக் கேள்வியை நான் மீண்டும் கேட்டேன். மீண்டும் பதில் கிடையாது. இந்தத் தடவை, சம்பாஷணை

பூர்ணமாய் ஒரு சுற்றுச் சுற்றி விட்டு, தானுவே வந்து நிற்கும் வரைக்கும் நான் காத்திருந்தேன். மூன்ருவது தடவையும் அந்தக் கேள்வியைக் கேட்டேன். தளபதி இகனுட்டீவ் எனக்குப் பதில் சொன்ஞர். அவர் மரியாதை தெரிந்தவர்; பல தேசத்தாரோடு பழகியவர். அங்கே பிரசன்னமாயிருந்தவர்களில், அவர் ஒருவர்தான் ஏதோ கொஞ்சம் இங்கிலீஷ் பேசக் கூடியவர். அவர் சொன்ஞர் :

“மிஸ்டர் வில்கீ, உங்களுக்குப் புரியவில்லே. அது இயற்கைதான். இந்த யுத்தம் ஆரம்பித்தபோது, நாங்கள் அனேவருமே ஜெர்மன் கைதிகளேத் தேடிக் கண்டோம்; அவர்களேக் கேள்வியெல்லாம் கேட்டோம். ஏன் அவர்கள் எங்கள் நாட்டைப் படையெடுக்க வந்தார்கள் என்று கண்டு பிடிக்க விரும்பினேம். ஜெர்மானியரைப் பற்றியும், அவர்களுக்கு நாஜிகள் செய்திருக்கும் தீமைகளேப் பற்றியும், பல ரசமான விஷயங்களே, நாங்கள் அறிந்துகொண்டோம்.

“ஆனுல் இப்போது நிலேமை மாறிவிட்டது. போன மாரிக்காலத்தில், நாங்கள் தாக்க ஆரம்பித்தோம். ஜெர்மானியரைப் பின்வாங்கி ஓடும்படி விரட்டினேம். அவர்கள் பிடித்திருந்த அநேகம் நகரங்களேயும் கிராமங்களேயும் திரும்பவும் கைப்பற்றினேம். அதிலிருந்து, எங்கள் உணர்ச்சி வேருகிவிட்டது. எங்கள் ஜனங்களுக்கும் எங்கள் வீடுகளுக்கும் ஜெர்மானியர் என்ன கொடுமைகள் இழைத்திருக்கிருர்கள் என்பதை, எங்கள் கண்ணுரக் கண்டோம். இன்று, கௌரவமுள்ள ஸோவியத் நிருபர் எவரும் ஒரு ஜெர்மானியனேடு பேசவே மாட்டார்; ஒரு சிறை முகாமில்கூடப் பேச மாட்டார்.”

மற்ருேர் உதாரணத்தை எடுத்துக் கொள்ளுங்கள். நான் கொஞ்ச நாட்களாய், என்னுல் முடிந்த மட்டும் கெட்டிக்காரத்தனமாய் ஒரு யோசனேயை ருஷ்யர்களுக்குச் சொல்லி வந்தேன். ஸோவியத்தின் உன்னத சாஹித்ய கர்த்தாவான டிமிட்ரி ஷாஸ்டகோவிச் என்பவரை, ஐக்கிய அமெரிக்காவுக்கு விஜயம் செய்யும்படி ஒரு முறை அவர்கள் அனுப்பினுல், நன்மை தரும் என்பது என் யோசனே.

மாஸ்கோவின் மிக உன்னதமான சங்கீத மண்டபம் சைகாவ்ஸ்கி ஹால் என்பது. அந்த மண்டபத்தில் அன்றைக்கு முந்திய நாள் இரவு, அவருடைய ஒரு பாட்டைக் கேட்டேன். அது கொஞ்சம் கரடுமுரடான சங்கீதம். அதை ரசிப்பது எனக்குக் கஷ்டமாயிருந்தது. ஆயினும் அதன் ஆரம்ப கதி நான் இதுவரைக்கும் கேட்டவற்றுக்குள்ளே மிகக் கவர்ச்சியான சங்கீதங்களில் ஒன்று யிருந்தது.

நான் சொன்னேன்: "நாம் ஒருவரை ஒருவர் புரிந்து கொள்ள வேண்டும்; ஒருவரை ஒருவர் அறிந்துகொள்ளக் கற்க வேண்டும். இந்த யுத்தத்தில் நாம் கூட்டாளிகள். ஹிட்லர் தோல்வி யடையும் வரையில் அமெரிக்க மக்கள் உங்களைக் கைவிடமாட்டார்கள். ஆனால், சமாதான காலத் திலும் அதன் பிற்பாடும் நாம் ஒற்றுமையாய் வேலை செய்ய வேண்டும் என்பது என் ஆசை. அதற்கு, மகத்தான பொறு மையும், மகத்தான சகிப்புத் தன்மையும், மகத்தான பழக்க மும் இரு தரப்பிலும் வேண்டும். ஷாஸ்டகோவிச்சை நீங்கள் ஏன் ஐக்கிய அமெரிக்காவுக்கு அனுப்பக்கூடாது? அங்கே இவரை வியப்பவர்கள் ஏற்கனவே ஏராளமா யிருக்கிறார்கள். இவர் அங்கே வந்தால், நாம் பரஸ்பரம் புரிந்து கொள் வதற்குப் பேருதவியா யிருக்குமே?"

இந்தத் தடவை பதில் சொன்னவர் ஸியனாவ்:

மிஸ்டர் வில்கீ, இரு தரப்பினரும் முயன்றால்தான், பரஸ்பரம் புரிந்துகொள்ள முடியும். அமெரிக்காவைப் பற்றி அறிந்துகொள்ள, நாங்கள் எப்போதுமே முயன்று வந்திருக்கி றோம். அநேக விஷயங்களை உங்களிடமிருந்து நாங்கள் இரவல் வாங்கிக்கொண் டிருக்கிறோம். எங்களில் சிறந்த மனி தர்களை, அமெரிக்காவில் படிக்க அனுப்பி யிருக்கிறோம். உங்கள் நாட்டைப்பற்றி, எங்களுக்கு ஏதோ கொஞ்சம் தெரி யும். எங்களுக்கு ஆசையுள்ள அளவு உங்களைப்பற்றித் தெரியாவிட்டாலும், ஷாஸ்டகோவிச்சை ஏன் அழைக் கிறீர்கள் என்பதைப் புரிந்து கொள்வதற்குப் போதிய அளவு தெரியும்.

"எங்களைப்பற்றி அறிந்துகொள்ள, உங்கள் நல்ல மனிதர்கள் சிலரை, எங்களிடம் நீங்கள் அனுப்ப வேண்டும். உங்கள் அழைப்பை நாங்கள் ஏன் உற்சாகமாய் ஏற்றுக் கொள்ளவில்லை என்ற காரணம், ஒருவேளை அப்போது உங்களுக்குப் புரியக்கூடும். எங்கள் உயிர்-ஏன், ஒரு தலைமுறையாக எங்கள் வாழ்க்கையை உருப்படுத்திய ஒரு தத்துவமே-இன்று இரவு ஸ்டாலின்கிராடில் ஒரு மயிர்க் காம்பில் தொங்கிக்கொண்டிருக்கிறது. ஐக்கிய அமெரிக்காவுந்தான் இந்த யுத்தத்தில் சிக்கி யிருக்கிறது; அங்கேயுள்ள மனிதர்களின் உயிருந்தான் மயிரிழையில் தொங்கிக்கொண் டிருக்கிறது. இந்த நிலைமையில், எங்கள் சங்கீத வித்வானை அமெரிக்காவுக்கு அனுப்ப வேண்டும் என்ற யோசனை, விசித்திரமாய்-எங்களை அவமானப் படுத்துவதுபோல்- இருக்கிறது. பட்டப் பகல்போல் விளங்கும் ஒரு விஷயத்தை, எங்கள் சங்கீதத்தைக் கொண்டா உங்களுக்கு விளக்கவேண்டும்? தயவு செய்து என்னைத் தப்பர்த்தம் செய்து கொள்ளாதீர்கள்."

அவரை நான் தப்பர்த்தம் செய்து கொள்ளவில்லை.

அன்று மாலையில் கண்ட இரண்டாவது விசேஷம் என்னவென்றால், சாந்தமும் அமைதியும் நம்பிக்கையும் நிறைந்த பெருமையும் தேசபக்தியுந்தான். இதுவும் குறிப்பிடத்தக்கது. அமெரிக்கர்களான நாம், அநேக வருஷங்களாக, வேறெதையும் விட அதிகமாய் ருஷ்யாவைப்பற்றிக் குரூரக் கதைகளையே படித்துவந் திருக்கிறோம். ஆகவே, இன்று சோவியத் யூனியனை, தன் சொந்த பலத்தையறிந்த ஒரு சந்ததியே ஆண்டு வருகிறது என்பதை, நம்மால் புரிந்துகொள்ளக் கடினமா யிருக்கிறது. ருஷ்யர்களின் இந்தக் குணத்தை, பின்னால் மத்திய ஆசியாவிலும் ஸைபீரியாவிலும் அபரிமிதமாய், நான் கண்டேன். அமெரிக்காவில், முக்கியமாய் மேற்குப் பகுதியில், நான் அடிக்கடி கண்டுள்ள குணமும் இது தான்.

மாஸ்கோவில், ஸ்டாலினுடன் இரண்டு முறை, நான் நீண்ட சம்பாஷணைகள் செய்தேன். பேசிய விஷயங்களில் பெரும் பகுதியையும் வெளியிட, எனக்கு உரிமை இல்லை.

ஆனுல் அந்த மனிதரைப் பற்றி நாம் ஜாக்கிரதையாய் நடந்துகொள்ளத் தேவையில்லே. இந்தத் தலேமுறையில் தோன்றியுள்ள அபூர்வமான மனிதர்களில் அவரும் ஒருவர்.

அவருடைய அழைப்புக் கிணங்கி, ஒரு நாள் மாலே ஏழரை மணிக்கு, நான் அவரைப் போய்க் கண்டேன். அவருடைய மந்திராலோசனே யெல்லாம் பெரும்பாலும் இரவிலேயே நடப்பதாய்த் தோன்றுகிறது. அவரது காரியாலயம், சற்றுப் பெரிதாகவே இருந்தது. அது பதினெட்டடி அகலமும் முப்பத்தைந்து அடி நீளமும் உள்ள ஓர் அறை. அதன் சுவர்களில், மார்க்ஸ், எஞ்கெல்ஸ், லெனின் ஆகியவர்களின் படங்களும், லெனினும் ஸ்டாலினும் சேர்ந்து இருக்கும் படங்களும் தொங்கின. இதே படங்கள், ருஷ்யாவின் சகல பள்ளிக்கூடங்கள், பொதுக் கட்டடங்கள், தொழிற்சாலேகள், ஓட்டல்கள், ஆஸ்பத்திரிகள், வீடுகள் ஆகியவற்றிலும் அநேகமாய்த் தொங்குகின்றன. பல இடங்களில், இவற்ருேடுகூட மாலடாவின் படமும் தென்படுகிறது. ஸ்டாலினின் காரியாலயத்திலிருந்து பார்த்தால் தெரியும் பக்கத்து அறை ஒன்றில், பத்தடி குறுக்களவுள்ள பிரம்மாண்டமான குளோப் (பூகோள உருண்டை) ஒன்று வைத்திருக்கிறது.

ஓக் மரத்தால் செய்த நீண்ட மேஜை ஒன்றின் முனேயில் நின்றுகொண்டு, ஸ்டாலினும் மாலடாவும் என்னே வரவேற்ருர்கள். இயல்பான முறையில் என்னே க்ஷேமம் விசாரித்தார்கள். பின்பு, நாங்கள் மூன்று மணி நேரம் பேசிக்கொண்டிருந்தோம். யுத்தத்தைப் பற்றியும், யுத்தத்துக்குப் பின் என்ன நடக்கும் என்பது குறித்தும், ஸ்டாலின்கிராட் போர் முனே பற்றியும், அமெரிக்க நிலேமை குறித்தும், பிரிட்டன், அமெரிக்கா, ருஷ்யா மூன்றின் உறவு பற்றியும், இன்னும் முக்கியமும் முக்கியமில்லாதவையுமான பல விஷயங்கள் குறித்தும் பேசினேம்.

சில தினங்களுக்குப் பிறகு, ஸ்டாலின் எனக்கு ராஜாங்க விருந்து ஒன்று அளித்தார். அநேகவிதமான உண்டிகள் வழங்கிஞர்கள். பின்னுல், வேருேர் அறையில் சிறுசிறு மேஜைகளுக்கு முன்பு உட்கார்ந்து காபி குடித்தோம்.

கடைசியாக, மாஸ்கோ முற்றுகையையும் தற்காப்பையும் பற்றிய சினிமாப் படம் ஒன்றைப் போட்டுக் காட்டினார்கள். இவற்றில் எல்லாம், நான் ஸ்டாலினுக்கு அருகிலேயே உட்கார்ந்து, ஐந்து மணி நேரத்தைக் கழித்தேன்.

இந்த விருந்துக்கு இடையிலேதான், நாங்கள் பானம் பருகுகையில், துபாஷிகளுக்கு 'டோஸ்ட்' என்ற வாழ்த்துக் கூறினோம். முதலில், எங்கள் பரஸ்பர நாடுகளுக்கும் தலைவர்களுக்கும் வாழ்த்துக் கூறினோம். ருஷ்ய மக்களுக்கும் அமெரிக்க மக்களுக்கும் எங்கள் வருங்கால ஒத்துழைப்பு நம்பிக்கைகளுக்கும் வாழ்த்துக் கூறினோம். நாங்கள் ஒருவருக்கொருவரும் வாழ்த்துக் கூறிக்கொண்டோம். கடைசியிலே, எனக்கு ஒன்று தோன்றியது. அந்த விருந்தில் உண்மையிலே வேலை செய்தவர்கள் துபாஷிகள்தாம் என்று தோன்றியது. எங்களை ஒருவருக்கொருவர் மொழிபெயர்த்துச் சொல்வதற்காக, அவர்கள் அங்கு மிங்கும் அலைந்துகொண்டே இருந்தார்கள். ஆகையால், அவர்களுக்கும் வாழ்த்துக் கூறவேண்டுமென்று நான் எண்ணினேன். பின்பு, ஸ்டாலினிடம் சொன்னேன். "துபாஷிகளுக்கும் வாழ்த்துக் கூறவேண்டும் என்பது என் யோசனை. இது வரம்பு மீறிய காரியம் ஆகாதென்றே நான் நம்புகிறேன்" என்றேன். "இல்லவே யில்லை, மிஸ்டர் வில்கீ! எங்கள் நாடு ஜனநாயக நாடுதானே!" என்று அவர் பதிலளித்தார்.

ஸ்டாலின் சுமார் நாலடி ஐந்தங்குல உயரம் என்பது என் மதிப்பு. சற்றுப் பருமனாகக் காணப்படுகிறார். அவர், இவ்வளவு குள்ளமா யிருப்பது கண்டு நான் ஆச்சரியப்பட்டேன். ஆனால், அவர் தலையும் மீசையும் கண்களும் பெரியவையா யிருந்தன. அவர் முகம் அமைந்திருக்கும்போது, கடினமான முகமா யிருக்கிறது. செப்டம்பரில், அவர் களைத்தவராய்த் தோன்றினார். பத்திரிகைச் செய்திகள் அடிக்கடி கூறியதுபோல் நோய் அல்ல; கடுங் களைப்பு! அவர் களைத்திருக்க நியாயமுண்டு. அமைதியாயும், சட்டென்றும், சில சமயம் எளிய உணர்ச்சிமிக்க வாக்குச் சாதுர்யத்துடனும், அவர் சம்பாஷித்தார். பிறகு, போக்குவரத்து, ராணுவ தள

வாடம், ஆள்பலம் ஆகிய விஷயங்களில் ருஷ்யாவின் திக்கற்ற நிலைமைக்கு எனக்கு அவர் வர்ணித்துச் சொன்னபோது, உண்மையான ஆவேசத்தோடு அவர் பேசினுர்.

அவர் மனம் கடின உழைப்புள்ளது, பிடிவாதம் நிறைந் தது, பிறரை ஆட்டிவைக்கக்கூடியது என்று நான் சொல் வேன். எதிரியை அலசிவிடக்கூடிய கேள்விகளை அவர் கேட் டார். ஒவ்வொரு கேள்வியும் தோட்டா நுழைத்த ரிவால்வர் மாதிரி இருந்தது. அவருக்குச் சுவாரஸ்யம் தந்த விஷயத்தின் இருதயத்தைப் போய் அறுத்துவிடக் கூடியவையா யிருந்தன அந்தக் கேள்விகள். தமாஷ்களையும் முகமன்களையும் அவர் ஒதுக்கித் தள்ளிவிடுகிருர். எதையும் பொதுப்படையாய்ப் பேசினுல், அவருக்குப் பிடிக்கவில்லை.

பல தொழிற்சாலைகளுக்கும் நான் போய் வந்த வர லாற்றை அவர் விசாரித்தபோது, விவரமான தாக்கல் வேண் டும் என்ருர். ஒவ்வோர் இலாக்காவைப் பற்றியும் தனித்தனி சொல்லும்படி கேட்டார். அவை வேலை செய்யும் முறைகளை யும் திறமைகளையும் பற்றிப் பொதுப்படத் தீர்ப்புச் சொல் வது போதாதென்ருர். ஸ்டாலின்கிராடைப்பற்றி நான் அவரைக் கேட்டபோது, நியாயப்படி அவரும் அதன் பூகோள ரீதியும் ராணுவ ரீதியுமான முக்கியத்துவத்தைப் பற்றி மட் டும் சொல்லி நிறுத்திவிடாமல், அதைத் தற்காப்பதில் நேரும் வெற்றியும் தோல்வியும் ருஷ்யா, ஜெர்மனி, முக்கிய மாய் மத்தியக் கிழக்கு இந்த மூன்று இடத்து மக்களின் மனேபாவத்தையுமே எப்படிப் பாதிக்கும் என்பதையும் எனக்கு விவரித்தார். அதை ருஷ்யா கைவிடாமல் காப் பாற்றுமா என்பதுபற்றி அவர் ஒன்றும் சோதிடம் சொல்ல வில்லை. தாய்நாட்டு அன்போ, வெறும் வீரமோ அதைக் காப்பாற்றிவிடாது என்று அவர் திட்டமாய்ச் சொன்னுர். முக்கியமாய் ஆள்பலம், திறமை, தளவாடம் ஆகியவற்றைக் கொண்டுதான், சண்டைகளிலே வெற்றியும் தோல்வியும் ஏற் படுகின்றன என்று அவர் கூறினுர்.

தம் ஜனங்கள், நாஜியிடம் பெருங் குரோதம் கொள்ளத் தக்க முறையில், வேண்டுமென்றே தமது பிரசாரம் அமைந்

திருப்பதாக, திரும்பத் திரும்ப அவர் என்னிடம் சொன்னுர். ஆயினும், ஹிட்லரின் திறமையில்,மனத்திலே கசப்பு நிறைந்த ஒரு வியப்பும் அவருக்கு இருக்கிறது. நாஜிகள் கைப்பற்றிய ருஷ்யப் பிரதேசங்கள் சிலவற்றிலிருந்து நூற்றுக்குத் தொண்ணூற்றுநான்கு தொழிலாளரை ஜெர்மனியில் ஹிட்லர் கொண்டு போய்ச் சேர்த்துவிட்டாராம்! ஜெர்மன் சேனையின் - முக்கியமாய் அதன் அதிகாரிகளின் - பூர்த்தியான தொழில் பயிற்சியையும், அவர் மிகவும் மதிக்கிருர். தம்மை விடத் திறமைசாலிகளின் கைக்கருவியாக இருப்பவர் ஹிட்லர் என்ற தப்பபிப்பிராயத்தை இரண்டு வருஷங்களுக்கு முன்னே, இங்கிலாந்தில் என்னிடம் சர்ச்சில் மறுத்துவிட்டார். அதுபோலவே, அதை இவரும் மறுத்துவிட்டார். ஜெர்மனியில் சீக்கிரமாய் உள்நாட்டுக் குழப்பம் ஏற்படும் என்று நம்பிக்கொண் டிருப்பது சரியல்ல என்று ஸ்டாலின் நினைக்கிருர். ஜெர்மனியின் சேனையை அழிப்பதுதான் அதைத் தோற்கடிக்கும் வழி என்று அவர் சொன்னுர். ஹிட்லரை ஜயிக்கவே முடியாது என்ற நம்பிக்கையை ஐரோப்பாவிலிருந்து ஒழிக்க வேண்டுமானுல், ஜெர்மன் நகரங்களையும், ஜெர்மன் வசமிருக்கும் துறைமுகங்களையும், ஹிட்லர் வென்ற நாடுகளின் தொழிற்சாலைகளையும் தொடர்ந்து விமானக் குண்டுகளால் தாக்குவதுதான் சிறந்த வழி என்று அவர் நம்புகிருர்.

யுத்தத்தின் காரணங்களையும், யுத்தம் தீர்ந்ததும் உலகத்தில் நிகழக்கூடிய ராஜீய, பொருளாதார நிலைமைகளையும் பற்றி நாங்கள் பேசினேம். அப்போது, பரந்த அறிவும், விரிந்த விஷயஞானமும், பிரத்யட்ச ரீதியான சிந்தனையும் அவரிடம் விளங்கின. ஸ்டாலின் ஒரு கடின புருஷர்; ஒரு வேளை குரூர புருஷராயும் இருக்கலாம். ஆனுல், மிகவும் திறமையுள்ள ஒருவர் அவர். அவருக்கு எவ்வித மதிமயக்கங்களும் இல்லை.

அமெரிக்கரின் உற்பத்தித் திறமையை அவர் வெகுவாக வியக்கிருர். அவரது வியப்பு, நம் தேசீய உற்பத்தி முதலாளிகள் சங்கத்தினருக்குப் பெருந் திருப்தி தரும். ஆனுல்,

நமது ஜனநாயக முறையில் போர் நடத்தும் நெறிகளில், சில கோணல் பாதைகளும் முட்டுக்கட்டைகளும் காணப்படுவது ஏன் என்று அவருக்கு விளங்கவேயில்லை. உதாரணமாக, ஒரு விஷயம் பற்றி, அவர் ஆச்சரியப்பட்டார். சில இடங்களை யுத்த தளங்களாக உபயோகித்தால், ஜனநாயக நாடுகளுக்கு நல்ல உதவியா யிருக்கும். முக்கியமாய், அந்த இடங்களுக்குச் சொந்தமான நாடுகள், தங்களுடன் ஒத்துழைக்காமலோ அல்லது அந்த இடங்களைப் பாதுகாக்கச் சக்தியற்றோ போகுமானால், அவற்றைத் தங்கள் தளங்களாக உபயோகித்துத்தான் தீருவோம் என்று ஜனநாயக நாடுகள் ஏன் வற்புறுத்த மாட்டோம் என்கின்றன என்று அவர் அதிசயித்தார்.

பொதுவாக வெளிவரும் செய்திகளுக்கு நேர்விரோதமாக, சர்ச்சிலிடம் ஸ்டாலினுக்குப் பெரும் மதிப்பு இருக்கிறது. அது ஒரு பெரிய பிரத்யட்சவாதிக்கு மற்றொரு பெரிய பிரத்யட்சவாதியிடம் உள்ள மதிப்பு என்று அவரே சொன்னார்.

சொந்தக் குணாதிசயங்கள் சம்பந்தப்பட்ட மட்டும், ஸ்டாலின் ஒரு பெரிய மனிதர்; பேடிசங்கள் இல்லாதவர்; பாசாங்குகள் செய்யாதவர். செயற்கையான வேஷங்கள் போடுவதன் மூலம் பிறரை மயக்க அவர் முயலவில்லை. அவருடைய நகைச்சுவை மிக்க உரமானது. ஸ்தூலமான விகடங்களையும் நையாண்டிகளையும் கேட்டால், கலகல என்று அவர் சிரித்துவிடுகிறார். நான் பார்த்த ஸோவியத் கலாசாலைகளையும் புத்தகசாலைகளையும் பற்றி, ஒரு தடவை நான் அவரிடம் சொல்லிக்கொண்டிருந்தேன். அவை மிக நன்றாயிருப்பதாக எனக்குத் தோன்றின என்பதைக் கூறினேன். மேலும் சொன்னேன். "ஆனால், மிஸ்டர் ஸ்டாலின், நீங்கள் இப்படியே ருஷ்ய மக்களுக்குத் தொடர்ந்து கல்வி புகட்டிக்கொண்டிருப்பீர்களானால், நிகழும் முதல் சங்கதி என்ன தெரியுமோ? உங்கள் உத்தியோகந்தான் போய்விடும்."

அவர் தலையைப் பின்னே இழுத்துக்கொண்டு, இடியிடி என்று ஓயாமல் சிரித்தார். இரண்டு நாட்கள் மாலையிலே

நெடுநேரம் வரையில் நான் சொல்லிய அல்லது பிறர் சொல்லக் கேட்ட வேறெந்த வார்த்தைகளும் அவருக்கு இவ்வளவு அதிகமாய்ச் சிரிப்பு மூட்டவில்லை.

சாக்-கட்டி போன்ற லேசான சாயம் தோய்த்த உடுப்புகளையே ஸ்டாலின் அணிகிறார்; இதைக் கேட்க அதிசயமாயிருக்கலாம். அவரது உள் சட்டை மிக மெல்லிய நூலிழையால் நெய்த மங்கல் பச்சை அல்லது நயமான ரோஜா நிறமாயிருக்கும்; அவரது கால்சட்டை லேசான மஞ்சள் அல்லது நீல வர்ணமா யிருக்கும். அவருடைய பூட்ஸுகள் நல்ல கறுப்பு; பளபளப்பாய்ப் பாலிஷ் செய்யப்பெற் றிருக்கின்றன. சம்பிரதாயமான மரியாதைகளைப் பற்றி அவர் சிறிதும் தொல்லைப்படவில்லை. முதல் தடவை அவருடன் பேசிவிட்டு நான் விடை பெறும்போது, வந்தனம் கூறினேன். அவர் அளித்த நேரத்துக்கும் மனம் விட்டுப் பேசி என்னை அவர் கௌரவித்ததற்கும் நன்றி பாராட்டினேன். அவருக்கு இது சிரமமா யிருந்தது. அவர் சொன்னார்.

"மிஸ்டர் வில்கீ, நான் ஜார்ஜியாவின் ஒரு குடியானவனாக வளர்ந்தவன். அழகாகப் பேசப் படித்தவன் அல்ல. நான் சொல்லக்கூடியதெல்லாம் ஒன்றுதான். உங்களை எனக்கு மிகவும் பிடித்திருக்கிறது."

ஸ்டாலின் இப்படி எளிமையாய் நடந்து கொள்வதைப் பார்த்து, பிற ஸோவியத் தலைவர்களும் அவரைப் பின்பற்றுவது இயற்கை. முக்கியமாய் மாஸ்கோவிலும் குபிஷேவிலும் உள்ள ருஷ்யத் தலைவர்களிடம் துளியும் ஆடம்பரம் இல்லாதிருப்பது ஒரு விசேஷம். அவர்கள் அனைவரும் எளிய உடுப்பையே அணிகிறார்கள். பேசுவது சொற்பம்; கேட்பது அதிகம். அவர்களில் மிகப் பலர் வாலிபரா யிருப்பது ஓர் அதிசயம். பெரும்பாலும் முப்பது அல்லது முப்பத்திரண்டு வயது தான். கிரெம்லின் மாளிகையில் தமக்குக் கீழே வேலைசெய்ய, வாலிபர்களையே மிக அதிகமாய் ஸ்டாலின் சேர்த்துக் கொள்ளுகிறார் என்று நான் ஊகிக்கிறேன். இதற்கு ருசுவோ ஆதாரமோ என்னிடம் கிடையாது. இதுதான் தம் செல்வாக்கு நிலைத்திருக்க அவர் கைக்கொண் டிருக்கும் வழி என்று நான் எண்ணுகிறேன்.

நான் வேறு சில தலைவர்களையும் கண்டு வெகுநேரம் பேசிக்கொண் டிருந்தேன். அவர்களில் முக்கியமான சிலர் இவர்கள்: அயல்நாட்டு மந்திரி வயா செஸ்லாவ் மாலடாவ், அவருடைய உதவி அதிகாரிகளான ஆண்ட்ரி விஷின்ஸ்கி: சாலமன் லாஸாவ்ஸ்கி; மாஜி ராணுவ மந்திரி மார்ஷல் வாரஷிலாவ்; சப்ளை மந்திரியும் அயல்நாட்டு வர்த்தக இலாக்காவின் தலைவருமான அனுஸ்டேஸியா மிக்கோயான். இவர்களில் ஒவ்வொருவரும் கல்விமான்; வெளியுலகத்தில் சிரத்தை கொண்டவர்; பாவனை, தோற்றம், பேச்சு ஆகியவற்றில் முற்றிலும் வெவ்வேறு விதமானவர். நம் கேலிச் சித்திரங்களில் அவலட்சணமான முரட்டுப் போல்ஷ்விக்கர்களை வரைகிறோமே, அந்த மாதிரி இருக்கிறார்கள்.

குபிஷேவில் எனக்கு விஷின்ஸ்கி ஒரு விருந்து வைத்தார். நாலைந்து வருஷங்களுக்கு முன்னே நடந்த பயங்கரமான தேசத் துரோக விசாரணைகள் பலவற்றிலும், அவர்தான் ஸோவியத் சர்க்காரின் பிரதம பிராஸிக்யூட்டராக இருந்து வழக்கு நடத்தினார். அவருடைய வெண்மையான தலைமயிர், புரொபஸர்களுக்குரிய முகத்தோற்றம், அமைதியும் ஊக்கமுமுள்ள நடை ஆகியவற்றை, இந்த விருந்தில் நான் கவனித்தேன். ருஷ்யப் புரட்சியின் பழமையான வீரர்கள் சிலரை, அவர்கள் கொலையும் தேசத் துரோகமும் செய்தார்கள் என்று குற்றம் சாட்டி ஒழித்தவர், இந்த மனிதர்தானா என்று நான் ஆச்சரியப்பட்டேன்.

சமாதானத்தைப் பற்றியும், யுத்தத்துக்குப் பின் உலகம் என்ன காரியங்களுக்குத் தயாரா யிருக்கவேண்டும் என்பது பற்றியும் இவர்கள் எப்போது பேச நேர்ந்தாலும், ராஜதந்திரத்தோடும் உண்மையான ஞானத்தோடும் பேசினார்கள்.

நான் ஐக்கிய அமெரிக்காவுக்குத் திரும்பிய பிறகு, ஸ்டாலின் தமக்குத் தோன்றிய ஒரு திட்டத்தை விவரித்திருக்கிறார். ஐரோப்பிய யுத்தத்தில், ஆங்கிலோ-ஸோவியத் கூட்டுறவு எப்படி இருக்கவேண்டும் என்பது பற்றியது அந்தத் திட்டம். அவர் விரும்பும் லட்சியங்கள் இவைதாம்;

'நிற வேற்றுமையை ஒழிக்க வேண்டும். தேசங்களுக்குள் சமத்துவம் வேண்டும். அவற்றின் எல்லைகளைப் பாதுகாக்க வேண்டும். அடிமைப்பட்ட நாடுகளை விடுவிக்க வேண்டும். அவற்றின் சுதந்தர ஆட்சி உரிமைகளை மீட்டுக் கொடுக்க வேண்டும். தன் தன் தேச காரியங்களைத் தன் தன் விருப்பப் படியே நடத்திக்கொள்ள ஒவ்வொரு நாட்டுக்கும் உரிமை இருக்க வேண்டும். துன்பப்பட்ட தேசங்களுக்குப் பொருளா தார உதவி புரிய வேண்டும். அவை தங்கள் செல்வ க்ஷேமத்தை அடைய ஒத்தாசை செய்ய வேண்டும். ஜன நாயக உரிமைகளை மீட்க வேண்டும். ஹிட்லர் ஆட்சியை அழிக்கவேண்டும்.'

"ஸ்டாலின் சொல்வதெல்லாம் அவருடைய உண்மை மைக் கருத்துத்தானா?" என்று நாம் கேட்கலாம். இரண்டு வருஷங்களுக்கு முன்புதானே, அந்தச் சமயத்துக்குத் தக்க படி, ஜெர்மனியோடு ருஷ்யா கூட்டுச் சேர்ந்து கொண்டது என்றும் ஒருவர் குத்திக் காட்டலாம். ராணுவ அவசியத்தி னாலோ ராஜீய அவசியத்தினாலோ, தற்காலிகமாகவோ நிரந் தரமாகவோ, சமயத்துக்குத் தக்கபடி நடந்துகொள்வது நியாயமென்று நான் வாதிக்கவில்லை. சமயத்துக்குத் தக்க படி நடப்பதன் மூலம் காப்பாற்றும் ஒவ்வொரு சொட்டு ரத் தத்துக்கும், உருவிய கத்தியினால் சிந்தும் இருபது சொட்டு ரத்தத்தை விலை கொடுக்க வேண்டி வரும் என்றே நான் நம்புகிறேன். ஆனால், 'ஜெர்மனியுடன் கூட்டுச் சேர்ந்ததன் மூலம், ருஷ்யா ஜாக்கிரதையடையக் கொஞ்சம் சாவகாசம் கிடைத்தது' என்று நம்பும் ஒரு ருஷ்யனும், ஜனநாயக நாடு களுக்கு ஒரு பதில் சொல்ல முடியும். மியூனிக் ஒப்பந்தத்தை அவன் ஞாபகப்படுத்தலாம்; 1937 முதல் 1940-ஆம் ஆண்டு வரையில், மிக உயர்ந்த ரகமான இரும்பை எழுபது லட்சம் டன்கள் ஜப்பானுக்கு ஐக்கிய அமெரிக்கா ஏற்றுமதி செய்திருப்பதையும், அவன் ஞாபகப்படுத்தலாம்.

ஸ்டாலினின் அறிக்கையை, பின்கண்ட நிகழ்ச்சிகளைக் கொண்டு நாம் மதிப்பிடுவதுதான் முறையாகும். தங்கள் தாய்நாட்டைத் தற்காக்கும் வேலையிலே, ஏற்கனவே ஆறு

கோடி ருஷ்யர்கள் உயிர் துறந்துவிட்டார்கள்; வேறு அநேக லட்சக்கணக்கான ருஷ்ய ஸ்திரீகளும் புருஷர்களும் அசுர வேகத்தோடு வாரத்துக்கு அறுப்த்தாறு மணி நேரம் தொழிற் சாலைகளிலும் சுரங்கங்களிலும் உழைத்து, போர்முனை வீரர் களுக்குத் தேவையான யுத்தக் கருவிகளைத் தயாரித்து வருகி ருர்கள்; பிரம்மாண்டமான தொழிற்சாலைகளைப் பெயர்த்து நூற்றுக்கணக்கான மைல்களுக்கு அப்பால் கொண்டுபோய், வைக்கும் அற்புதத்தைப் புரிந்து, அவை நாஜிகளின் கைக்கு எட்டாத தூரத்தில், தட்டுத் தடங்கல் எதுவுமின்றி வேலை செய்யுமாறு அவர்கள் செய்திருக்கிருர்கள். மக்களின் மனோ பாவத்தைக் கொண்டுதான் ஸ்டாலினின் நோக்கத்துக்குச் சிறந்த வியாக்யானத்தை நாம் கண்டுகொள்ள முடியும்.

ஜனநாயக நாடுகளில் உள்ள அநேகர், ஸோவியத் ருஷ்யாவுடன் பயமும் அவநம்பிக்கையும் கொண்டிருக் கிருர்கள். ஸோவியத் பொருளாதார முறை எங்கே தங்கள் நாட்டுக்குள்ளே நுழைந்து, தங்கள் சொந்தப் பொருளாதார முறையை அழித்துவிடுமோ என்று அவர்கள் நடுங்குகிருர்கள். ருஷ்யா நம்மை விழுங்கிவிடப் போவதில்லை; கெடுத்துவிடப் போவதுமில்லை. நம் ஜனநாயக ஸ்தாபனங்களும் சுதந்தரப் பொருளாதார முறையும் துஷ்பிரயோசனமாகி, அநுபவத் திலே தோல்வியுற்று, பலவீனமாகி, அடிபட்டால் விழக்கூடிய நிலைமையை அடையாத வரையில், இந்தப் பயம் நமக்கு வேண்டியதில்லை. இதை நாம் சற்றுச் சிந்திக்கவேண்டும். கம்யூனிஸத்துக்குச் சரியான பதில் கொடுக்க வேண்டுமானல் ஜீவனுள்ள, துடிப்பு மிக்க, அச்சமற்ற ஜனநாயகம் வேண்டும். பொருளாதாரம், சமூகம், அரசியல் மூன்றிலும் அது வேண் டும். நாம் செய்யவேண்டியதெல்லாம் கூடி, நாம் பறை யடிக்கும் லட்சியங்களின்படி நிமிர்ந்து நின்று காரியம் செய் வதேயாகும். அப்போதுதான் அந்த லட்சியங்களெல்லாம் பத்திரமா யிருக்கும்.

இல்லை; ருஷ்யாவுக்கு நாம் பயப்படத் தேவையே யில்லை. நம் பரஸ்பர சத்ருவான ஹிட்லரை ஒழிப்பதற்கு, ருஷ்யா வுடன் ஒத்துழைக்க நாம் கற்கவேண்டும். யுத்தத்துக்குப்

பிந்திய உலகத்திலே ருஷ்யாவுடன் ஒத்துழைக்கவும் நாம் கற்கவேண்டும். ஏனென்ருல், ருஷ்யா சக்திமிகுந்த ஒரு நாடு; ஜீவன் ததும்பும் ஒரு நவ சமுதாயம்; வருங்கால உலகம். எத்தகையதா யிருந்தாலும், தன்னைப் பிறர் புறக்கணித்துச் செல்லமுடியாதபடி நிற்கும் ஒரு சக்தி.

## 5. யாகுட்ஸ்க் குடியரசு

ஸோவியத் யூனியன், பரந்த நிலப்பரப்பைக் கொண்டது; ஐக்கிய அமெரிக்கா, கானடா, மத்திய அமெரிக்க இந்த மூன்றும் சேர்ந்தால் வரும் விஸ்தீர்ணத்தையும் விடப் பெரியது. ஜனங்கள் பல நிறத்தினர்; பல தேசத்தினர்; பல பாஷைகள் பேசுவோர்.

ஸைபீரியாவில் உள்ள ஒரு குடியரசுக்கு, யாகுட்ஸ்க் என்று பெயர். ருஷ்யாவைப்பற்றி அமெரிக்கர் கேட்கும் கேள்விகளுக்கு அங்கே நான் பதில் கண்டேன். எல்லைப்புறம்; குளிர்ந்த பிரதேசம்; வாய் திறந்து கேட்டால் போதும், எல்லையற்ற புது நிலம் இலவசமாய்க் கிடைக்கும்; முன்னேடியாய் வேலை செய்வதில் உற்சாகமுள்ள மக்கள்-இந்த நிலைமைகள், ஸோவியத் யூனியன் எங்கும் காணக்கூடியவை அல்ல. ஆயினும், இத்தனை வித்தியாசங்கள் இருந்தும், யாகுட்ஸ்க் பிரதேசத்தின் பழங் கதையும், இப்போது அதில் நான் கண்ட விஷயங்களும், ருஷ்யப் புரட்சியைப் பற்றிய பல புதிய உண்மைகளை எனக்குப் போதித்தன.

யாகுட்ஸ்க் ஒரு பெரிய நாடு. அலாஸ்காவைப்போல் இரண்டு மடங்கு பெரியது. அதில் ஜனங்கள் அதிகமில்லை. இப்போது நாலு லட்சம் பேர்தான் இருக்கிருர்கள். ஆனல், இன்னும் ஏராளமான ஜனங்களைப் போஷிக்கக்கூடிய மூலப் பொருள்கள் அதில் இருக்கின்றன. இந்த நாட்டை அபிவிருத்தி செய்ய ஸோவியத்துகள் முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிருர்கள். அந்த முயற்சியில் நான் கண்ட அம்சங்கள் தாம், உலகத்துக்கும் அமெரிக்காவுக்கும் மிக முக்கியம் என எனக்குத் தோன்றியது: மாஸ்கோவிலும் சரி, நியூயார்க்கி

லும் சரி, பல வருஷங்களாக நடந்துகொண்டிருக்கிறதே ஒரு விவாதம், அதைவிட முக்கியம் இந்த அம்சங்கள்தாம்.

முதலில், யாகுட்ஸ்கின் பழைய சரித்திரத்தைக் கவனிப்போம். யாகுட்ஸ்க் மக்கள், மங்கோலியர்; செங்கிஸ்கான் மேற்குப் புறமாகச் சென்றபோது, இவர்கள் வடக்கே பரவினார்கள். மங்கோலியர்களுக்கு விசேஷமான உயர்ந்த கன்ன எலும்புகளும், சரிந்த கண்களும், கறுத்த தலைமயிரும் இன்னும் அவர்களுக்கு இருக்கின்றன. அவர்களில் பெரும்பாலோரும் ரோமம் சேகரிப்பதற்காக விலங்கினங்களை வேட்டையாடியும், தங்கம் எடுப்பதற்காகத் தரையைக் கல்லியும் வாழ்ந்தார்கள். அவர்கள் வசித்த குடிசைகளின் கூரை தாழ்ந்திருந்தது; மண்ணால் தளம் செய்திருந்தது; திறந்த தீயால் புகை சூழ்ந்திருந்தது. மனிதர்களும் ஆடு மாடுகளும் ஒரே கூரைக்குக் கீழே வாழ்ந்து வந்தார்கள். க்ஷய ரோக உற்பத்திக் களனாக இருந்தது அவர்களின் வாசஸ்தலம். மழைக் காலத்தில் அவர்கள் அழுகிய மீனையும் கிழங்குகளையும் புசித்தார்கள். ஒரு காலத்தில் வலிமையாயிருந்த அந்த ஜனங்களை, நோயும் அடுத்தடுத்த பஞ்சங்களும் நலிவித்து வந்தன. ஜார்களின் காலத்தில் கிரந்தி, க்ஷயம், ரோமம் மூன்றுக்கும் பெயர் போனது யாகுட்ஸ்க்.

ருஷ்யர்கள் மெல்ல மெல்ல இந்தநாட்டுக்குள் வந்து சேர்ந்தார்கள். சிறிது காலத்துக்கு முன் வரையில் மிகச் சிலரே தாம் புகுந்திருந்தார்கள். பீட்டர்ஸ்பர்க் (இப்போது லெனின்கிராட்) சர்க்கார், அநேகம் குற்றவாளிகளையும் அரசியல் கைதிகளையும் யாகுட்ஸ்க் பிரதேசத்துக்கு அனுப்பியது. இதன் கஷ்ட ஜீவனத்தை அநுபவித்த அநேகம் நூலாசிரியர்கள், தாங்கள் விடுதலை யடைந்ததும், அதை வர்ணித்து எழுதியிருக்கிறார்கள். எனவே, 'ஜனங்களின் சிறை' என்றே யாகுட்ஸ்க் நாட்டுக்கு ஒரு பெயர் வழங்குகிறது.

இடையே ஒரு விஷயம்: நாங்கள் அங்கே இருந்தபோது, சில பெண்கள் எங்களுக்குப் பரிமாறினார்கள். அவர்கள் ஸோவியத் யூனியனால் நாடு கடத்தப்பெற்ற இப்போதைய தேசப் பிரஷ்டர்களில் சிலர் என்று கண்டேன். முக்கியமாய்

ஒரு போலந்துப் பெண், ஸோவியத் முறை பற்றிய ஒரு வரலாற்றை என் காதில் போட்டாள். அது ஸோவியத் சர்க்கார் செய்யும் பிரசாரத்துக்குத் துளியும் பொருத்தமில்லா திருந்தது.

எங்கள் லிபரேட்டர் விமானம், இந்தக் குடியரசின் தலைநகரான யாகுட்ஸ்கில் போய் இறங்கியது. விமான நிலையத்தை, செப்டம்பர் மாதத்தின் முன்பனி ஏற்கனவே வந்து மூடியிருந்தது. ஸைபீரியாவின் வட பகுதியில் ஆர்க்டிக் வட்டம் வரையில் பரவியிருந்த காட்டுப் பிரதேசத்துக்கு மேல், நாங்கள் பல மணி நேரம் பறந்து வந்தோம். அந்தப் பிரதேசம் பெரிதாய், குளிர்ந்து, வானத்திலிருந்து பார்க்கையில் சூன்யமாய்த் தோன்றியது. மிகச் சில ரஸ்தாக்கள்தாம் தென்பட்டன. மைல் கணக்காகப் பனிப்படலமும் மரங்களுமே காணப்பட்டன.

எங்கள் விமானம் போய் இறங்கிய நிலையத்தின் ஓரத்தில், ஒரு சிறு கோஷ்டியார் நின்றுகொண் டிருந்தார்கள். அவர்களில் ஒருவர் முன்னே வந்தார்.

அவர் சொன்னார்: "என் பெயர் முரட்டாவ். நான் யாகுட்ஸ்க் சுயஆட்சி ஸோவியத் அபேதவாதக் குடியரசின் ஜனங்கள் கமிஸார் கவுன்ஸில் அக்கிராசனாதிபதி. நீங்கள் இங்கிருக்கும் வரையில் உங்களை உபசரிக்கும்படியும், நீங்கள் விரும்புவதை யெல்லாம் உங்களுக்குக் காட்டும்படியும், நீங்கள் கேட்கும் எந்தக் கேள்விக்கும் பதிலளிக்கும்படியும் எனக்கு மாஸ்கோவிலிருந்து, தோழர் ஸ்டாலினின் கட்டளை வந்திருக்கிறது. வாருங்கள்."

அது சுருக்கமான பேச்சு. ஆனால், தமக்கியன்ற சகல கம்பீரத்தோடும் அதை அவர் பேசி முடித்தார். விமான நிலையத்தில் நின்றவரின் தொகை ஒரு டஜனுக்கு மேல் இராது. என்றாலும், பாண்டு வாத்தியங்களும் காவல்வீரரும் புடைசூழ, ஓர் அந்நிய விருந்தாளியை வரவேற்கும் ஒருவரைப் போலவே, அவர் நடந்து கொண்டார்.

நான் அவருக்கு வந்தனமளித்துவிட்டு, நாங்கள் சிறிது நேரமே அங்கே தங்கப்போவதாகச் சொன்னேன். ஏனென்

றால், எங்கள் பிரயாணத்தின் அடுத்த ஆயிரம் மைலையும் அன்றே பறந்து கடக்க, இன்னும் எங்களுக்குச் சாவகாசம் இருந்தது.

"மிஸ்டர் வில்கீ, இன்று நீங்கள் போகப் போவதில்லை; நாளைக்கும் அநேகமாய்ப் போக முடியாது. காலநிலை அறிக்கைகள் நன்றாயில்லை. அடுத்த தங்கலுக்கு நீங்கள் பத்திரமாய்ப் போய்ச் சேரும்படி, நான் பார்த்துக்கொள்ள வேண்டும். எனக்கு வந்துள்ள கட்டளையில் அதுவும் ஓர் அம்சம். இதில் நான் தவறினால், என்னைக் காலி செய்துவிடுவார்கள்" என்று அவர் பதிலளித்தார்.

நாங்கள் யாகுட்ஸ்க் நகருக்குள் செல்ல, கனத்துக் கறுத்த ஸோவியத் லிமுஸீன் கார் ஒன்றில், ஐந்து மைல் தூரத்துக்கு மேல் சவாரி செய்தோம். போகும்போதே முரட்டாவ், தம் குடியரசின் பெருமையைப்பற்றி ஜம்பமாய்ப் பேசத் தொடங்கிவிட்டார். அவரோடு நான் இருந்த அத்தனை மணி நேரமும், அந்த ஜம்பப் பேச்சை விடவேயில்லை. அவருக்கிருந்த உற்சாகத்தில், தணுக்காய்ப் பேசவே அவருக்குத் தெரியவில்லை.

நாங்கள் நகரை நெருங்கியபோது, "யாகுட்ஸ்கில் நீங்கள் என்ன பார்க்க விரும்புகிறீர்கள், மிஸ்டர் வில்கீ?" என்று அவர் கேட்டார்.

"உங்களுக்குப் புத்தக நிலையம் இருக்கிறதா?"

"ஆஹா! நன்றாய் இருக்கிறது ஒரு புத்தக நிலையம்."

நாங்கள் நேரே அதற்குச் சென்றோம். சட்டை தொப்பிகளைக் கழற்றக்கூட நிற்காமல், கிடுகிடு என்று முரட்டாவ் எங்களை, படிப்பறைக்கு அழைத்துச் சென்றுவிட்டார். என்றாலும், கதவடியில் எங்களை ஒரு பெண் மரியாதையாக நிறுத்திவிட்டாள். அவள் ஒல்லியாயிருந்தாள். படிப்பாளியாய்த் தோன்றினாள். முரட்டாவின் அதிகார தோரணையைக் கண்டு அவள் கூசவில்லை. மரியாதையாக, ஆனால் மிக்க உறுதியாக, அவள் சொன்னாள்: "இங்கே நாங்கள் ஜனங்களுக்குப் படிக்கும் வழக்கத்தை மாத்திரமல்ல, மரியாதைப் பழக்கங்களையுந்தாம் கற்றுக்கொடுக்க முயன்று

கொண்டிருக்கிறோம். நீங்கள் தயவு செய்து கீழே போய், உங்கள் தொப்பிகளையும் சட்டைகளையும், சட்டை மாட்டும் அறையில் கொண்டுபோய் வைத்துவிட்டு வாருங்கள்.'' முரட்டாவ் திடுக்கிட்டுவிட்டார். வாதம் செய்து பார்த்தார். ஒரே ஒரு சலுகைதான் அவரால் பெற முடிந்தது. எங்களுடைய தொப்பிகளையும் சட்டைகளையும் தன் அறையில் வேண்டுமானால் வைத்துவிட்டுப் போகலாம் என்று அவள் சொன்னாள். எனக்குக் கலீர் என்று சிரிப்பு வந்துவிட்டது. முக்கியமான ஒரு ருஷ்ய அதிகாரி நடந்துகொண்டேயிருக்கையில் அவரை ஒருவர் வந்து தடுத்ததை நான் பார்த்தது, ருஷ்யாவிலேயே இதுதான் முதல் தடவை; அதுவும் இந்த ஒரே தடவைதான்.

பழமையான கட்டடம். ஆனால், நல்ல வெளிச்ச வசதி இருக்கிறது. சுத்தமா யிருக்கிறது. திறமையான ஊழியர்கள் இருக்கிறார்கள். ஐம்பதாயிரம் மக்களைக் கொண்ட யாகுட்ஸ்க் நகரப் புத்தக நிலையத்தில், ஐந்து லட்சத்து ஐம்பதினாயிரம் புத்தகங்கள் சேகரித்து வைத்திருக்கிறார்கள். புத்தகப் பெட்டிகள் மரத்தினால் செய்தவை. புத்தகங்களை வாசக அறையில் கொடுக்கும் யந்திரம், கிராமாந்தர ராட்டினக் கிணறு மாதிரி வேலை செய்கிறது. துண்டுச் சீட்டுகளாகவே புத்தக ஜாபிதாக்களை நவீன முறையில் பூர்த்தியாய்த் தயாரித்திருக்கிறார்கள். சென்ற ஒன்பது மாதத்தில் லட்சம் பேருக்குமேல் இங்கே வந்து புத்தகங்களை உபயோகித்திருக்கிறார்கள் என்று, கணக்குகள் காட்டுகின்றன. அவர்களில் அநேகர், நாட்டுப்புறங்களிலிருந்து வந்தவர். விசேஷப் பிரசுரங்களை, சுவர்களிலே காட்சியாய்த் தொங்கவிட் டிருக்கிறார்கள். ஸோவியத் பத்திரிகைகளையும் அகராதிகளையும், திறந்த அலமாரிகளில் வைத்திருக்கிறார்கள். பார்க்கும் போதே, இந்த இடத்தை வெகு திறமையாக நிர்வகிக்கிறார்கள் என்ற உணர்ச்சி நமக்கு உண்டாகிறது. இதைப் போன்ற அளவுள்ள எந்த நகரமும், இத்தகைய ஒரு வாசக சாலையைப் பெற்றிருக்குமானால், அது ஆட்சேபமின்றிப் பெருமை கொள்ளலாம்.

எங்கள் ஓட்டல்-யாகுட்ஸ்கிலேயே ஒரே ஓட்டல்தான் உண்டு - புதிய கட்டடம். மரக்கட்டைகளாலேயே அதைக் கட்டியிருக்கிறார்கள். அதன் ஒவ்வோர் அறையிலும் ஒரு ருஷ்ய அடுப்பு இருக்கிறது. முரட்டுத் தோற்றமுடைய மனிதர்கள் அந்த ஓட்டலிலே நிறைந்திருந்தார்கள். அவர்கள் தோல் சட்டையும் கலைமான் ரோம பூட்ஸும் அணிந்திருந்தார்கள். பெண்களின் கன்னங்கள் சிவந்திருந்தன. அவர்கள், தங்கள் தலைகளைச் சுற்றிக் கைக்குட்டைகளைக் கட்டியிருந்தார்கள். எங்களை அவர்கள் ஏதோ விநோதமாய் உற்றுப் பார்த்து, தலைகால் புரியாமல் சிரித்தார்கள். நாங்கள் அந்நியர்களாம், அதற்காக!

ஒரு தலைமுறைக்கு முன்பு அமெரிக்காவில் இருந்திருக்குமே, அந்த மாதிரியான ஒரு மேல்நாட்டு நகரம்போல்தான் இருந்தது இந்த நகரமும் பல அம்சங்களில். பூர்வ காலத்தில்-நாம் விஸ்தரித்துக்கொண்டே வந்தோமே அந்தக் காலத்தில்-நம் சொந்த வாழ்க்கை எப்படி இருந்ததோ அதைத்தான், இந்த நகர வாழ்வின் அநேக அம்சங்கள் எனக்கு ஞாபகமூட்டின. முக்கியமாக, உள்ளங் கனிந்த எளிய சுவைகளையும் வெள்ளை மனத்தையும், அபரிமிதமான ஜீவசக்தியையும் இவை எனக்கு ஞாபகமூட்டின. பெரிய தெருக்களின் நடைபாதைகளில் மரப்பலகை பாவியிருந்தன. நான் சிறு பையனாய் இருக்கையில், எல்வுட் நகரிலும் இதேமாதிரிதான் இருந்தது. எனக்கு ஞாபகம் இருக்கிறது. வீடுகள், அமெரிக்காவின் வடக்குப் பகுதியிலுள்ள எந்த நகரத்து வீடுகளையும் போல் சுத்தமாயும் கச்சிதமாயும் தோன்றின. ஜன்னல்களிலிருந்து வெளிச்சம் வீசியது; புகைபோக்கிக் குழாய்களிலிருந்து லேசான புகை வந்துகொண்டிருந்தது.

என்றாலும், இது மின்னஸோட்டா மாகாணமோ அல்லது விஸ்கான்ஸின் மாகாணமோ அல்ல; இது ஸைபீரியா தான் என்று நமக்கு ஞாபகப்படுத்தக்கூடிய பல அம்சங்களும் இங்கே இருந்தன. பெரும்பாலான வீடுகளை, மரக்கட்டைகளாலே கட்டியிருந்தார்கள். அந்தக் கட்டைகளுக்கிடையிலே, கம்பளித் துணிப் பட்டைகளைத் திணித்திருந்தார்கள்.

வீட்டு முகப்புகளில், சிக்கலான சித்திர வேலைப்பாடுகள் செய்திருந்தார்கள். ஸைபீரியாவின் சகல வீடுகளின் முகப்பிலும் அந்த மாதிரிதான் சித்திர வேலைப்பாடுகள் செய்திருக்கிறார்கள்.

சாப்பாடு ஸைபீரியச் சாப்பாடு. பொரித்த ஒரு முழுப் பன்றியையே, காலைப் போஜனத்துக்கு, மேஜை மீது கொணர்ந்து வைத்துவிட்டார்கள். குழம்புகள், முட்டைகள், பாலடைக் கட்டி, சூப்பு, கோழிக்குஞ்சு, குஞ்சுமீன், தக்காளி, ஊறுகாய்கள் முதலியவையும் வட்டித்தார்கள். ஒயினும் வோட்காவும் மகா காரமாய் இருந்தன. ருஷ்யர்களே அவற்றில் தண்ணீர் ஊற்றிக் கொண்டார்கள். எங்களுக்குப் பரிமாறிய ஒவ்வொரு சுற்று உண்டியும், அதற்கு முந்திப் பரிமாறிய உண்டியின் அளவைப்போலவே நிறைய நிறைய இருந்தது. காலைப் போஜனத்தின்போது வோட்கா கொடுத்தார்கள். நாள் முழுவதும் சூடான தேநீர் வந்து கொண்டே யிருந்தது. எங்கள் ஒட்டலுக்கு வெளியே உண்ணும் யாகுட்ஸக் மக்கள் என்ன தின்றாலும் சரிதான்; ஏராளமாய்த் தின்கிறார்கள் என்பதுமட்டும் நிச்சயம்.

அவர்களுக்குப் பொழுதுபோக்கு என்னவாயிருக்கும் என்று நான் அதிசயித்தேன்.

"உங்களுக்கு நாடகக் கொட்டகை இருக்கிறதா?" என்று, முரட்டாவை விசாரித்தேன்.

"இருக்கிறது" என்று அவர் சொன்னார். பின்னால் மாலையில் அந்தக் கொட்டகைக்கு நாங்கள் சென்றோம். காட்சி ஒன்பது மணிக்கு ஆரம்பமாகும் என்று அவர் கூறினார். சாப்பாடு முடிந்ததும் வோட்காவைக் குடித்துவிட்டுப் பேசிக்கொண்டே யிருக்கையில், திடீரென்று எனக்கு, மணி ஒன்பதாகிவிட்டது ஞாபகம் வந்தது.

"காட்சி எத்தனை மணிக்கு ஆரம்பிக்கிறது என்று நீங்கள் சொன்னீர்கள்?" என்று அவரை நான் கேட்டேன்.

"மிஸ்டர் வில்கீ, நான் அங்கே எப்போது போய்ச் சேர்கிறேனோ, அப்போது ஆரம்பிக்கிறது" என்று அவர் பதில் அளித்தார்.

காட்சி அதே மாதிரிதான் ஆரம்பித்தது. இந்தத்தடவை யாரும் அவரைத் தடுத்து நிறுத்தவில்லை. ஒரு மணி நேரத் துக்குப் பின்னுல், நாங்கள் எங்கள் ஸோபாவில் போய் உட் கார்ந்துகொண்டோம். உடனே, திரையைத் தூக்கி விட்டார்கள். நரிக்குறத்தி நாட்டிய நாடகம் ஒன்றை நாங்கள் பார்த்தோம். நாடு சுற்றும் லெனின் கிராட் கோஷ்டி ஒன்றுதான் நடித்தது. நாட்டியம் முதல் தரம்; நடிப்பு நன்ருயிருந்தது; சங்கீதம் பரவாயில்லை. சபை சந் தோஷ ஆரவாரம் செய்தது. என்ருலும், கொட்டகை நிரம்பியிருக்க வில்லை. ஏனென்ருல், இந்த நாடகம், அதே நகரத்தில் தொடர்ந்து ஆடிவந்து இன்று ஒன்பதாவது நாளாகும்.

இந்தச் சபையில் நிறைந்திருந்த வாலிபர்களின் மனத்தி லிருந்து, யுத்தத்தைப் பற்றிய ஞாபகம் அன்றிரவு அடியோடு மறைந்திருந்தது; கம்யூனிஸ தத்துவமும் அப்படித்தான் மறைந்திருந்தது. காதலும் பொருமையும் குறத்தி நடனங் களும், நாடக மேடையிலே நிரம்பி யிருந்தன. காட்சிகளின் இடைநேரத்தில், வாலிபர்கள் தம் தம் காதலிகளுடன் தோளோடு தோள் பொருந்தக் கைகோத்துக்கொண்டு கொட்டகையைச் சுற்றிச் சுற்றி உலாவிக்கொண் டிருந் தார்கள். ருஷ்யச் சபையோர்கள் எப்போதுமே இப்படித் தான் உலாவுவது வழக்கம்.

ஆனுல், இதற்கு முன்னே, அந்திமயங்கும் வேளையில் புதிதாய்ப் படிந்த பனி எங்கள் காலடியிலே சர் சர் என்று ஒலிசெய்ய, நாங்கள் ஜில்லா மியூஸியத்தைப் பார்க்கச் சென் றிருந்தோம். பளிச்சென்று யுத்தத்தை ஞாபக மூட்டத் தக்க சான்றுகள் அங்கே தென்பட்டன. கலாசாலைகள், ஆஸ்பத்திரிகள், கால்நடைகள், சில்லறை வர்த்தகம் ஆகியவை அதிகரித்துவரும் கணக்கைக் கோடு போட்டுக் காட்டும் படங்கள், சுவர்களிலே தொங்கின. அவையனைத் தும், 1941-ஆம் வருஷம் ஜூன் மாதத்தோடு நின்றுவிட்டன! நாட்டின் வாழ்வே அன்ருேடு நின்று விட்டதைக் காட்டுபவை போல் தான், அவை தோன்றின. இயல்பாய் நடந்துகொண்

டிருந்த சகல முன்னேற்றங்களும், ஜெர்மானியரால் தாற்காலிகமாய்த் தடைப்பட்டு விட்டன. இப்படித் தடைப்பட்டிராவிட்டால், இன்னும் எவ்வளவோ அபிவிருத்தி ஏற்பட்டிருக்கும். நான் கேட்ட ஒவ்வொரு கேள்விக்கும் பதில் சொன்னவர்கள், இந்தச் சமாதானத்தையே கூறி முடித்தார்கள்.

யாகுட்ஸ்க் பிரதேசத்தின் பெரும் செல்வமான உண்மைத் தங்கத்துக்கும், 'மிருதுவான தங்கம்' என்னும் ரோமங்களுக்கும், மியூஸியத்தில் முரட்டாவ் எனக்கு 'ஸாம்பிள்கள்' காட்டினுர். ரோமங்கள், யாகுட்ஸ்கில் கிடைக்கும் மதிப்பரிய பொருள்களில் இரண்டாவது ஸ்தானம் வகிக்கின்றன. கீரி, நரி, கரடி இவற்றின் தோல்களைத் தவிர, ஆர்க்டிக் முயல்கள், வெள்ளை அணிகள் ஆகியவற்றின் மிருதுவான சிறு தோல்களும் இருந்தன. இந்தச் சிறிய விலங்குகளின் கண்களைப் பார்த்துச் சுட்டால்தான், தோல் கெடாமல் இருக்கும் என்று அவர் எனக்கு விளக்கினுர். அணில்களைக் கண்ணையே குறிபார்த்து ஒவ்வொரு சமயமும் தவருமல் சுட வேண்டும் என்ருல், அத்தகைய தொழிலால் என்ன பணம் கிடைத்துவிடப் போகிறது? இது என் சந்தேகம். இதை மரியாதையாக முரட்டாவிடம் நான் தெரிவித்த போது, அதில் லாபந்தான் என்று அவர் உறுதியாகவே சொன்னுர். யாகுட்ஸ்க் வேட்டையாடிகளைச் செஞ்சேனைக்குச் சேர்த்துக் கொள்ளும் போதே, அவர்கள் அனைவரையும் முதல்தரக் குறிகாரர்கள் என்ற வகுப்பிலே வைத்து விடுகிருர்களாம். அவர்கள் அவ்வளவு தேர்ந்தவர்களாம். இதை அவர் எனக்குக் கூறினுர்.

பகலிலேகூட, யுத்தத்தைப் பற்றி எங்களுக்கு ஞாபகம் வந்துகொண்டே யிருந்தது. போர்முனைக்கு மூவாயிரம் மைல்களுக்கு அப்பால் இருக்கிறது யாகுட்ஸ்க் என்ருலும், 'தாய்நாட்டுக்காக நடக்கும் போர்' பற்றி எளிய ஜனங்களெல்லாம் மிக ஊக்கமாய்ப் பேசிக்கொண்டிருக்கக் கண்டோம். அவர்களில் பெரும்பாலோர் தங்கள் வாழ்நாளிலே

ஒரே ஒரு ஜெர்மானியனைக் கூடப் பார்த்திரார்கள்; யூரல் மலைகளுக்கு மேற்கே போயுமிரார்கள்.

ஜனங்களுக்குக் கல்விபுகட்டத் தாம் என்ன செய்கிறார் என்று, முரட்டாவை நான் கேட்டேன்.

“மிஸ்டர் வில்கீ, பதில் மிகச் சுலபமானது. 1917-ஆம் வருஷத்துக்கு முன்னே யாகுட்ஸ்க் ஜனங்கள் அத்தனை பேரிலும், இரண்டு சதவிகிதம்தான் படித்தவர்களா யிருந்தார்கள். தொண்ணூற்றெட்டுச் சதவிகிதம் பேருக்கு எழுதவோ படிக்கவோ தெரியாது. இப்போது அந்த விகிதாசாரங்கள் தலைகீழாய் மாறியிருக்கின்றன” என்று அவர் சொன்னார்.

மேலும் அவர் என்னைப் பார்த்து உற்சாகமாய்ச் சிரித்துக் கொண்டே தொடர்ந்து கூறினார்: “தவிர, படியாதவரின் மீதி இரண்டு சதவிகிதத்தையும், அடுத்த வருஷ முடிவுக்குள் நான் காலி செய்தாகவேண்டும். அப்படி எனக்கு ஓர் உத்தரவு இப்போது மாஸ்கோவிலிருந்து வந்திருக்கிறது.”

மறுபடியும் அதே வார்த்தை—‘காலி செய்தல்’ (லிக்விடேட்)! ருஷ்யாவில் அதை அடிக்கடி உபயோகிக்கிறார்கள். திட்டம்போட்ட ஒரு காரியத்தை முடிப்பதும் ‘காலி செய்தல்’ தான் (வேலை ஆகிவிட்டது என்று அர்த்தம்); திறமை யின்மை, தவறுதல், வேண்டுமென்றே இடைஞ்சல் புரிவது ஆகிய குற்றங்களுக்காகச் சிறைவாசம், தேசப் பிரஷ்டம், மரணம் ஆகிய தண்டனைகள் விதிப்பதும், ‘காலி செய்தல்’தான். பிராவ்டா பத்திரிகையிலிருந்து, ஜோ பார்னெஸ் என்னிடம் ஒரு செய்தியைப் படித்துக்காட்டியது எனக்கு நினைவிருக்கிறது. அது ஒரு கூட்டுப் பண்ணை மானேஜரின் கதியைப் பற்றியது. அவருடைய பண்ணையில், நூறு பசு மாடுகள் செத்துவிட்டனவாம். இதற்காக அவருக்கு இருபது வருஷச் சிறைவாசத் தண்டனை விதித்து விட்டார்கள். மாடுகள் சாக நேர்ந்த காரணங்களைக் ‘காலி செய்ய’ அவர் தவறிவிட்டார்; ஆகவே, அவரையே ‘காலி செய்து’ விட்டார்கள்! பிற மானேஜர்கள் அதை அறிய வேண்டும் என்பது சர்க்காரின் விருப்பம்.

யாகுட்ஸ்க் நகரின் மிக நவீனமான ஸினிமாக் கொட்டகையை, பெருமையோடு முரட்டாவ் எங்களுக்குக் காட்டினூர். செங்கல்லும் சுண்ணும்பும் கொண்டு அவர் கட்டிய கற்கட்டடங்களில் ஒன்று அது. எந்தக் காலமும் பனி படிந்த மண்ணில், மரக் கட்டடங்களைத்தாம் கட்டமுடியும் என்பது ஒரு பழைய நம்பிக்கை. அந்த நம்பிக்கை தவறு என்று, இந்தக் கட்டடங்களைக் கொண்டு, முரட்டாவ் நிருபித்துவிட்டார்.

என்றாலும், நகரிலேயே மிகவும் வசீகரமான கட்டடம், கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமைக் காரியாலயந்தான். ருஷ்யா முழுவதும் கம்யூனிஸ்ட் கட்சிக்கு முப்பது லட்சம் அங்கத்தினர்கள் இருக்கிறார்கள். ஜனத்தொகையில் இது ஒன்றரைச் சதவிகிதந்தான் வருகிறது. இவ்வளவு சொற்பமான பேர் இருபது கோடி மக்களின் மீது தங்கள் கருத்துக்களையெல்லாம் சுமத்தி அதிகாரமும் புரிவது அநுபவத்திலே எப்படிச் சாத்தியமாகிறது என்று அடிக்கடி நான் ஆச்சரியப்பட்டு வந்தேன். அதை இங்கே யாகுட்ஸ்க் நகரில் நான் புரிந்துகொள்ளத் தொடங்கினேன்.

கட்டுப்பாடு கொண்ட வேறெந்த ஸ்தாபனமும், நகரிலே கிடையாது; சர்ச் கிடையாது; சங்கம் கிடையாது; வேறு கட்சி எதுவும் கிடையாது. சுமார் 750 ஜனங்கள் தாம். அதாவது யாகுட்ஸ்கின் ஜனத்தொகையான 50 ஆயிரம் பேரில் ஒன்றரைச் சத விகிதம் மட்டுமே-கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர்கள்; அவர்களே நகரச் சங்கத்தின் அங்கத்தினர்களாயும் இருக்கிறார்கள். ஆனால், சகல தொழிற்சாலை நிர்வாகிகளும், சர்க்கார் உத்தியோகஸ்தர்களும், பெரும்பாலான டாக்டர்களும், பள்ளிக்கூட சூப்பரின்டண்டண்டுகளும், அறிஞர்களும், எழுத்தாளர்களும், புத்தக அதிகாரிகளும்,உபாத்தியாயர்களும் இந்த 750 பேருக்குள்ளே அடங்கிவிடுகிறார்கள். வேறு வார்த்தைகளில் சொன்னால், யாகுட்ஸ்கிலேயே மிகச் சிறந்த படிப்பாளிகளும், ஊக்கமுடைய உழைப்பாளிகளும், ஞானமும் திறமையும் மிகுந்த மனிதர்களும், கம்யூனிஸ்ட் கட்சியின் அங்கத்தினர்களா

யிருக்கிருர்கள். ருஷ்யாவிலுள்ள பெரும்பாலான சமூகங்களிலும் இதே நிலைமைதான். இந்தக் கம்யூனிஸ்ட் சங்கங்கள், ருஷ்யா எங்கும் பரவி யிருக்கின்றன; தேசம் எங்கும் நன்ருய்ப் பின்னிப் பிணைந்து கட்டுப்பாடு கொண்ட ஒரு தேசீய ஸ்தாபனத்தின் ஓர் அம்சமாக இருக்கின்றன. அந்தத் தேசீய ஸ்தாபனத்துக்கு, ஸ்டாலின்தான் இன்னமும் தலைமைக் காரியதரிசியாக இருந்து வருகிருர். மற்ற எந்தப் பட்டத்தையும் விட, அந்தப் பட்டத்தில்தான் இன்னமும் அவருக்கு மிகுந்த பிரியம். அதன் காரணத்தை நாம் ஊகித்துக்கொள்வது சுலபம். கம்யூனிஸ்ட் கட்சியாரின் இந்தத் தேசீய ஸ்தாபனமே, அவர்களை அதிகாரத்தில் வைத்திருக்கிறது. இதன் அங்கத்தினர்களெல்லாம், விசேஷ உரிமைகள் படைத்த கோஷ்டியைச் சேர்ந்தவர்களாவர். இதுதான் விஷயம்.

அந்த மாதிரி ஒரே கட்சி ஆட்சி முறை, அமெரிக்கர்களுக்குப் பிடிக்கா திருக்கலாம். ஆனல், ஸோவியத் யூனியன் சாதித்திருக்கும் மகத்தான காரியங்களில் ஒன்றுக்கு, யாகுட்ஸ்கில் நான் சான்று கண்டேன். அதை மிகச் சிறந்த மிக முற்போக்கான அமெரிக்கர் அனைவரும் கண்டிப்பாய்ப் பாராட்டத்தான் வேண்டும். தேசீய, ஜாதீயச் சிறுபான்மை வகுப்புக்களைப் பற்றிய மகா கடுமையான பிரச்னையை, அவர்கள் சமாளித்திருப்பதுதான் அந்தக் காரியம்.

இந்த நகரில் இன்னமும் பெரும்பான்மையாய் வசிக்கும் மக்கள் யாகுட்ஸ்களே. குடியரசின் மொத்த ஜனத்தொகையில் எண்பத்திரண்டு சதவிகிதம், அவர்கள் இருக்கிருர்கள். நான் பார்த்தமட்டும், அவர்கள் ருஷ்யர்கள் மாதிரியே வாழ்கிருர்கள்; உயர்ந்த பதவிகள் வகிக்கிருர்கள்; தங்களுக்குச் சொந்தமான கவிதைகளைப் புனைந்து கொள்கிருர்கள்; தங்களுக்குச் சொந்தமாய் நாடகக் கொட்டகைகளும் பெற்றிருக்கிருர்கள். மாஸ்கோவிலிருந்து நியமன உத்தரவு வரவேண்டிய பதவிகள், பெரும்பாலும் ருஷ்யர்களிடமே இருக்கின்றன. முரட்டாவின் பதவியும் அத்தகைய ஒன்றுதான். தேர்தல்மூலம் பூர்த்தியாக வேண்டிய பதவி

களோ, பெரும்பாலும் யாகுட்ஸ்க்களிடந்தாம் இருக்கின்றனவாம். இவ்விதம் எனக்குச் சொன்னார்கள். கலாசாலைகளில், இரண்டு பாஷைகளும் போதிக்கிறார்கள். யுத்தச் சுவரொட்டிச் சித்திரங்களுக்கு ருஷ்ய பாஷை, யாகுட்ஸ்க் பாஷை இரண்டிலும் தலைப்புக்கள் கொடுத்திருக்கிறார்கள்.

இந்தப் பரிகாரம் எவ்வளவு தூரம் நிரந்தரமாக இருக்கும் என்பதைப் பற்றிச் சோதிடம் சொல்ல முடியாது. குடியரசில் இன்னமும் நில அளவு செய்யாமலே விசாலமான திறந்த வெளிகள் பல இருப்பதுதான் இந்தப் பரிகாரத்துக்கு ஓரளவு பலம் என்பதில் ஐயமில்லை. அந்தப் பரந்த வெளிகளிலே, ஒரு லட்சம் ஏரிகளையும் சிற்றாறுகளையும் சென்ற சில வருஷங்களில்தாம் கண்டுபிடித்து, பெயரும் இட்டார்களாம். முரட்டாவ் இதை எனக்குச் சொன்னார். யாகுட்ஸ்க் குடியரசுக்கு மேலே, இரண்டு நாள் முழுவதும் நாங்கள் பறந்தபோது, ஏராளமான சூன்ய வெளியைக் கண்டோம். ஐரோப்பாவில் பொறாமையையும் ஹிம்சையையும் வளர்த்து விட்ட சச்சரவுகளுக் கெல்லாம் ஆறுதலளிக்கக்கூடிய மெத்தை போன்றது, இந்தச் சூன்ய வெளிதான் என்று எனக்குப் புலனாயிற்று.

சைபீரியாவின் எல்லைப்புறமான இந்தப் பிரதேசத்திலே, வேறெதையும்விட எனக்கு மிக்க சுவாரஸ்யமாயிருந்தவர் முரட்டாவ்தான். என்னுடைய பல கேள்விகளுக்கு, யாகுட்ஸ்க் நகரம் பதில் தந்ததென்றால், மற்றும் பல கேள்விகளுக்கு முரட்டாவே திறவுகோலா யிருந்தார். ஏனென்றால், ருஷ்யாவை நிர்வகிக்கும் நவீன மனிதர்களுக்கு அவர் ஓர் சிறந்த உதாரணமாக இருந்தார். அவருடைய பற்பல குணாதிசயங்களும், பெரும்பகுதி வாழ்க்கை வரலாறும், நான் அறிந்த பல அமெரிக்கர்களுடையவை போலவே இருந்தன. இது ஒரு விசித்திரம்.

கட்டை குட்டையான உடம்பு; புன்சிரிப்பு அரும்பிய வட்டமான முகம்; வழ வழ என்று க்ஷவரம் செய்துகொண்டிருந்தார். வோல்கா நதி தீரத்தில் ஸாரட்டாவ் என்னுமிடத்தில், பயிர்த் தொழில் செய்யும் ஒரு குடியானவர்

வீட்டில் பிறந்தவர். அவர் ஸ்டாலின் கிராட் இயந்திரசாலை ஒன்றில், வேலை செய்துகொண்டிருக்கையில், அவருடைய புத்திசாலித்தனத்தைக் கண்டு, விசேஷப் படிப்புப் புகட்ட, அவரைப் பொறுக்கி யெடுத்தார்கள். வேலை செய்து கொண்டே கலாசாலை, கல்லூரி, பொது உடைமைப் பேராசிரியர்களின் போதனுசாலை ஆகிய எல்லாப் படிப்புக்களையும் அவர் படித்து முடித்தார். அந்தப் போதனுசாலை தான், மாஸ்கோவின் சமூக சாஸ்திரக் கல்லூரிகளிலேயே தலை சிறந்தது. யாகுட்ஸ்க் குடியரசின் ஜனங்கள் கமிஸார் கவுன்ஸிலுக்கு அக்கிராசன பதவி வகிப்பதற்காக, இரண்டு வருஷங்களுக்கு முன்புதான், அவரை ஆர்க்டிக் பிரதேசத்துக்கு அருகிலுள்ள இந்த இடத்துக்கு அனுப்பி யிருக்கிறார்கள்.

அவருக்கு வயது முப்பத்தைந்து. படிப்பு முழுவதும் 1917-ஆம் வருஷ புரட்சிக்குப் பின்னே பெற்ற படிப்பு. ஸோவியத் ருஷ்யாவில் உள்ள வேறெந்தக் குடியரசையும் விடப் பெரியதும், பிரான்ஸைப் போல் ஐந்து மடங்கு விரிந்ததுமான ஒரு குடியரசை அவர் இங்கே நிர்வகித்து வருகிறார். சில தினங்கள் வரையில் நான் அவரோடு இருந்ததால், அவரை வேண்டிய அளவு நான் அறிந்துகொண்டேன். அவர் அமெரிக்காவில் இருந்தாலே, நல்ல வேலை செய்வார். தம் சொந்த நாட்டிலோ, அதையும்விட அருமையான வேலை செய்கிறார்.

அவர் வேலை செய்யும் முறை, முரட்டுத்தனமாகவும் கடுமையாகவும் இருக்கிறது; பல சமயம் குரூரமா யிருக்கிறது; சில சமயம் தப்பாகவும் இருக்கிறது. ஸைபீரியா எங்குமே, ஸோவியத் வேலை இப்படித்தான் நடக்கிறது. “ஆனல் பலன் என்னவோ கிடைத்துவிடுகிறது” என்று அவர் சமாதானம் சொல்லக் கூடும். யாகுட்ஸ்க் பொருளாதார அபிவிருத்தியின் விவரங்களைச் சொல்லும்படி, அவரை நான் வற்புறுத்தினேன். கலிபோர்னியாவில் உள்ள ஒரு பெரிய எஸ்டேட்டை விலை பேசும் தரகனைப் போல், அவர் பேச ஆரம்பித்துவிட்டார். மீண்டும் எனக்கு, அமெரிக்காவின் பழைய நாட்கள் நினைவு வந்தன: காரியம் சாதிப்பதிலேயே

நம் தலைவர்கள் கண்ணும் கருத்துமா யிருந்து, பிரமாதமான அபிவிருத்திகளைச் செய்தார்களே இந்த நூற்றுண்டின் ஆரம்ப காலத்தில்; இதுதான், அந்தச் சிறந்த நாட்கள்!

"மிஸ்டர் வில்கி, இதைத்தான் யோசித்துப் பாருங்களேன். 1922-ஆம் வருஷம் உள்நாட்டுப் போர்களில் இறுதியான ஜயம் கிடைத்தவுடனே, யாகுட்ஸ்க் சுயஆட்சி ஸோவியத் அபேதவாதக் குடியரசை, நாங்கள் ஸ்தாபித்தோம். பாலியப் பருவத்தி லிருந்த குடியரசுகளைப் பரிபாலிக்கும் இலாக்காவுக்குத் தலைவராக, ஸ்டாலினே பதவி வகித்தார். அதிலிருந்து இப்போது எட்டு மடங்காக, இந்தக் குடியரசின் வரவு செலவுத் திட்டங்களை நாங்கள் பெருக்கி யிருக்கிறோம். அதை இங்கேயுள்ள ஒவ்வொருவருடைய உள்ளமும் வயிறும் அறியும்.

"சொல்லப் போனால், சகல பூகோளப் படங்களிலும் யாகுட்ஸ்க் பிரதேசம், ஒன்றுமில்லாத ஒரு சிறு வெள்ளைப் பொட்டாகவே முன்னே இருந்து வந்தது. இப்போது, இந்த மாதத்தில், ருஷ்யாவின் இரும்புச் சுரங்கங்களல்லாத பிற சுரங்கங்கள் அனைத்துடனும் போட்டியிட்டு, எங்கள் தங்கச் சுரங்கம், மூன்றுவது ஸ்தானத்தைப் பெற்றுவிட்டது. முதலில் போட்ட திட்டத்தையும்விட, அவை மிக முன்னேறி விட்டன." இதற்கு ஆதாரமான புள்ளி விவரங்களையும் அவர் என்னிடம் சொரிந்துவிட்டார்.

அவருடைய மின்சார உற்பத்திச்சாலை, ஸோவியத் யூனியனின் சகல நகர சபைகளின் மின்சார உற்பத்திச் சாலைகளுடனும் போட்டியிட்டு, முதல் ஸ்தானம் பெற்று விட்டது. ஒரு கிலோவாட் மணி நேர மின்சார சக்தியை உற்பத்தி செய்ய 6·27 காபெக்குகளே செலவாகும்படி செலவைக் குறைத்துவிட்டதற்காக, ஸோவியத் கட்சியார், இந்த நகருக்கு ஒரு சிவப்புக் கொடியும் பரிசளித்திருக்கிறார்கள்.

"சென்ற இருபது வருஷ காலத்தில், லட்சம் கோடி ரூபிள்களுக்கு மேல், யாகுட்ஸ்க் குடியரசில் நாங்கள் முதல்

போட்டிருக்கிறோம். சுமார் நாற்பது லட்சம் கனமீட்டர் மரக் கட்டைகளை, இந்த வருஷம் நாங்கள் வெட்டுவோம். 1911-ஆம் வருஷத்திலோ, முப்பத்தையாயிரம் கன மீட்டர் தான் வெட்டினார்கள். ஆனால், வருஷத்துக்கு எட்டுக் கோடியே எண்பது லட்சம் கன மீட்டர் மரக் கட்டையை விளைவிக்க வேண்டும் என்பதே எங்கள் திட்டம். அந்த நிலையை எட்டுவதற்கு நாங்கள் இன்னும் வெகு காலம் உழைக்கவேண்டி யிருக்கிறது'' என்று அவர் சொன்னார்.

சர்வதேச வியாபாரத்தை மனத்தில் வைத்துக் கொண்டே, அவர் திட்டம் போடுகிறார் என்று தெளிவாய் விளங்கியது.

''இந்த யுத்தம் முடிந்ததும், அமெரிக்காவில் உள்ள உங்களுக்கு மரமும், காகிதம் செய்யும் மரக் கூழும் தேவைப் படும். எங்களுக்கோ மெஷின்கள் - சகலவிதமான மெஷின் களும் - தேவைப்படும். ஆர்க்டிக் கடல் மார்க்கம் திறந்து விடுமானால், உங்களுக்கும் எங்களுக்கும் அப்படி ஒன்றும் வெகு தூரம் இராது. வந்து அவற்றை வாங்கிக்கொள் ளுங்கள். பண்டமாற்றுச் செய்துகொள்வதில் எங்களுக்குச் சந்தோஷந்தான்'' என்று முரட்டாவ் கூறினார்.

அவர் சொன்ன கதைகளெல்லாம் வெறும் வியாபாரத் தந்திரம் அல்ல என்பதற்குரிய சான்றுகளை, என் சொந்தக் கண்களால் கண்டேன். ரெயில் பாதையிலிருந்து, யாகுட்ஸ்க் ஆயிரம் மைல் தூரத்தில் இருக்கிறது. கெட்டியான மேல் தளம் செய்ததும், சகல பருவ காலங்களிலும் தாங்கி நிற்கக் கூடியதுமான ஒரு பெரிய ரஸ்தாவை, இந்த வருஷந்தான் அவர்கள் போட்டு முடிக்கிறார்கள். ஸைபீரியாவுக்குக் குறுக்கே செல்லும் ரெயில் பாதையையும் மாஸ்கோவையும் யாகுட்ஸ்க் வாசிகள் சார்ந்திருக்க வேண்டியிருந்தது. கோடைக் காலங்களில் பெரிய ஆர்க்டிக் நீராவிக் கப்பல்கள், டிக்ஷி விரிகுடாவில் வந்து, தங்கள் சரக்குகளை இறக்கும். அங்கிருந்து அவற்றைப் பல சிறிய நீராவிக் கப்பல்களும் படகுகளும் ஏற்றிக்கொண்டு, லெனா நதியின் வழியாக யாகுட்ஸ்க் குடியரசுக்குக் கொண்டு செல்லுகின்றன. மாரிக்

காலத்திலோ, நதியின் தண்ணீர் உறைந்து பனிக்கட்டி யாகி விடுகிறது. அந்தப் பனிக்கட்டியின் மேல்புறமே யாகுட்ஸ்க் வாசிகளின் ரஸ்தாவாக இருக்கிறது. இந்தக் கடினமான ஒரே ரஸ்தாவைத் தவிர, வேறு ரஸ்தா எதையுமே யாகுட்ஸ்க் வாசிகள் கண்டதில்லை.

தங்கமும் ரோமங்களும் மதிப்பரிய சரக்குகள். அவை ஆதிகாலத்தி லிருந்து ரஸ்தாவே இல்லாமல், வெளியிடங் களுக்குச் சென்றுகொண்டு இருந்தன. ஆனால், ஸோவி யத்தின் பிரயாண ஆராய்ச்சிக்காரர்கள் முயன்று, யாகுட் ஸ்கில் வெள்ளி, நிக்கல், செம்பு, ஈயம் முதலிய வேறு பல பெருஞ் செல்வங்களும் இருக்கின்றன என்று இப்போது கண்டுபிடித்திருக்கிறார்கள். எண்ணெயும் கண்டுபிடித்திருக் கிறார்கள். ஆனால், எண்ணெய்க் கிணறுகளின் விவரங்கள், ராணுவ ரகசியமாகும். "1943-ஆம் வருஷ முடிவுக்குள், வியாபாரம் செய்யத்தக்க அளவுக்கு நாங்கள் எண்ணெய் உற்பத்தி செய்யத் தொடங்கிவிடுவோம்" என்று, முரட்டாவ் என்னிடம் சொன்னார். மீன், கொழுப்பு, உப்பு இவைகளோ, சேகரிப்போர் இன்றியே ஏராளமாய்க் கிடைக்கின்றன. பெரிய தந்தத் தொழிற்சாலை ஒன்றை அமைத்திருக் கிறார்கள். சரித்திர காலத்துக்கு முற்பட்ட பிரம்மாண்ட மான யானைத் தந்தங்களின் மீது அந்தக் கட்டடத்தைக் கட்டி இருப்பது ஒரு விசித்திரமாகும். இந்தப் பிரம்மாண்ட மான யானைகள், ஒரு காலத்தில் இந்தப் பிரதேசத்திலே உலவியிருந் திருக்கின்றன. இவற்றின் உடலங்களை, ஆர்க்டிக் பனித்திரள் சூழ்ந்து, அப்படியே அன்றிருந்து பாதுகாத்து வைத்திருந் திருக்கிறது.

விவசாயத்தில்கூட, யாகுட்ஸ்கில் எத்தனையோ அபி விருத்திகள் சாத்தியம். மியூஸியத்தில், ஒட்டுக் கோதுமையின் சில மாதிரிகளை எனக்குக் காட்டினார்கள். அந்தக் கோதுமை யைக் கொண்டு, வடக்கே வெகுதூரம் வரையில், ருஷ்யர்கள் தங்கள் கோதுமைப் புலங்களை விஸ்தரித்துக்கொண்டு போகிறார்கள். இந்த ஒட்டுக் கோதுமை வெகு சீக்கிரம் பயிராகிவிடுகிறது. நிலத்திலே எப்போதும் தண்ணீர் தேங்கி

நிற்கிறது. சூரியனே பகல் முழுதும் காய்கிறது. கோடைக் காலத்திலே இரவு முழுவதுங்கூட வெயில் எரிகிறது!

பெரும்பாலான பண்ணைகளை - செப்டம்பர் மாதக் கணக்குப்படி எழுபத்தேழு சதவிகிதத்தை - கூட்டுப் பண்ணை களாய்ச் சேர்த்திருக்கிறார்கள். ஏர் இழுப்பதற்கு, இன்னமும் மான்களைத்தாம் இந்தக் குடியரசில் முக்கியமாய் உபயோகிக் கிறார்கள். ஆயினும், இப்போது சில நூறு யந்திரக் கலப்பைகள் வந்திருக்கின்றன. இவைகளை யந்திரக் கலப்பை நிலையத்தார், இந்தப் பண்ணை விவசாயிகளுக்கு வாடகைக்கு விடுகிறார்கள். இந்தக் குடியரசுக்கு அறுவடை யந்திரங்கள் கூட நூற்றறுபது இருக்கின்றன. "மிஸ்டர் வில்கீ, இதை நினைத்துப் பாருங்கள். ஆர்க்டிக் பிரதேசத்திலே நூற்றறுபது அறுவடை யந்திரங்கள் இருப்பது ஆச்சரியம் அல்லவா!" என்று கூறினார் முரட்டாவ். இவை போதா என்று, வடக்கே பனி கவிந்து மரங்களற்றிருக்கும் சூன்ய பூமியை, மலர்ந்து பயிர்கொழிக்கச் செய்தே தீருவது என்ற திட சங்கல்பத் துடன், பல நிபுணர்கள் வர வர அதிகமாய் ஆராய்ச்சி செய்து வருகிறார்கள். யாகுட்ஸ்க் மக்கள், அபரிமிதமான உற்சாகத்தையும் தன்னம்பிக்கையையும் வளர்த்துக்கொண் டிருககிறார்கள். மேற்கே நாம் அடைந்த வளர்ச்சியின் அதிசயக கதையை, இது எனக்கு அடிக்கடி ஞாபக மூட்டிகொண்டே யிருந்தது. யாகுட்ஸ்க் குடியரசு, இன்னும் பதது வருஷத்திலே எப்படி இருககுமோ என்ற பேராச்சரி யததுடனேயே, நான் அதை விட்டுப் புறப்பட்டு வந்தேன்.

நான் ஊர் திரும்பியதும், ருஷ்யா முழுவதும் சம்பந்தப் பட்ட மட்டும, ஜனஙகளின மனத்தில் இதே மாதிரி பேராச்சரியம் இருககக் கண்டேன். ருஷ்யாவைப்பற்றி நம் மக்களின் மனோபாவம், வியப்பும் அச்சமும் கலந்த ஒரு கதம்பமாகவே இருக்கிறது.

ருஷ்யா என்ன செய்யப்போகிறது? அது சமாதானத் தைக் குலைக்க வந்த ஒரு புதிய சக்தியாக இருக்கப் போகிறதா? யுத்தம் முடிந்தபின், ஐரோப்பாவைக் கணிய மான சமாதான மார்க்கத்தில் மீண்டும் ஸ்தாபிதம்

செய்வதை அசாத்தியமாக்கும் நிபந்தனைகளை ருஷ்யா கோரப் போகிறதா? தன்னுடைய பொருளாதார, சமுதாய தத்துவங்களைக் கொண்டு பிற நாடுகளுக்குள்ளே மெள்ள மெள்ள நுழைந்துவிட, அது முயற்சி செய்யப் போகிறதா?

ஒளிக்காமல் சொன்னால், இந்தக் கேள்விகளுக்குப் பதில்களை யாருமே அறியார் என்றுதான் நான் நினைக்கிறேன்; சகல பதில்களையும் ஸ்டாலினாவது அறிந்திருப்பாரோ என்றே நான் சந்தேகிக்கிறேன்.

ருஷ்யா என்ன செய்யப்போகிறது என்று சொல்ல நான் முயல்வது, பரிகாசத்துக் கிடமாகும் என்பது வெள்ளிடை. என்றாலும், இது மாத்திரம் உண்மை என்று நான் நன்றாய் அறிவேன்: ஸோவியத் யூனியனில் இருபது கோடி மக்கள் இருக்கிறார்கள். உலகத்திலேயே மிகப் பெரிய ஒரே தொடர்ச்சியான நிலப்பரப்பு, ஒரே சர்க்காரின் கீழ் அவர்களின் ஆதிக்கத்தில் இருக்கிறது. மரம், இரும்பு, நிலக்கரி, எண்ணெய் ஆகிய செல்வங்கள் இன்னமும் மண்ணிலிருந்து எடுபடாமலே, வற்றாத பொக்கிஷம் என்று சொல்லக்கூடிய அளவு, அவர்களுக்கு இருக்கின்றன; ஆண்மையும் ஊக்கமும் ஊட்டத்தக்க சீதோஷ்ணமுள்ள ஒரு பூமியிலே ருஷ்ய மக்கள் வாழ்கிறார்கள்; ஆஸ்பத்திரிகளும் பொதுஜன சுகாதார ஸ்தாபனங்களும் அவர்களிடையே நிறைந்திருப்பதால், உலகத்திலேயே மிக ஆரோக்கியமான மக்களாக அவர்கள் வாழ்கிறார்கள்; சென்ற இருபத்தைந்து வருஷ காலத்திலே, பலவந்தமாய் எங்கும் பரவிய ஒரு கல்வி முறையால், மக்களில் மிகப் பெரும்பாலோர் எழுதப் படிக்கவும், பதினாயிரக் கணக்கானவர் தொழிற் கல்வியும் கற்று விட்டார்கள்; உச்சியிலுள்ள அதிகாரி முதல், மிகச் சாதாரண மான பண்ணை விவசாயி, தொழிற்சாலைத் தொழிலாளி வரையில், ருஷ்யர் அத்தனை பேரும் ருஷ்யாவிடத்திலே வெறி பிடித்தது போன்ற பக்தி செலுத்துவதுடன், அதன் வருங் கால வளர்ச்சியைப்பற்றிப் பிரமாதமான கனவும் கொண்டிருக்கிறார்கள்.

ருஷ்யாவைப்பற்றி ஒருவர் கேட்கக்கூடிய சகல கேள்வி களுக்கும், நான் பதில் அறியேன்; ஆனால், ஒன்று மட்டும் எனக்குத் தெரியும்: இத்தகைய ஒரு சக்தியை, இத்தகைய ஒரு பலத்தை, இத்தகைய ஒரு மக்களை, ஜம்பமாகவோ மிரட்டியோ, அலட்சியம் செய்ய முடியாது; ஒதுக்கித் தள்ளி விடவும் முடியாது. மளிகைக் கடைக்குப் போகும் ஒரு குடித்தனக்காரி, அங்கே காட்சியாக வைத்திருக்கும் பண்டங் களில், இதை எடுத்துக்கொண்டும் அதைத் தள்ளியும், தனக்கு இஷ்டமானவற்றை மட்டும் பார்த்துப் பொறுக்கிக் கொள்ளுவதைப் போல, நாம் நடக்க முடியாது. தெளிந்த உண்மை இதுதான்: இந்த விஷயத்தில் நம் இஷ்டப்படி நடக்க முடியாது. ருஷ்யாவுக்கு நாம் பதில் சொல்லியே தீர வேண்டும். இந்தக் காரணத்தினால்தான், என் சகோதர அமெரிக்கர்களுக்கு, இதை நான் ஓயாமல் சொல்லி வருகி றேன்: பொதுப் பகைவனைத் தோற்கடிக்கும் பொது நோக்கத்திலே ஈடுபட்டு ருஷ்யரும் நாமும் சேர்ந்து உழைத்து வரும் இந்தக் காலத்திலேயே, வரவர அதிகமாய் அவர் களுடன் நெருங்கி ஒத்துழைத்து வாருங்கள்; அவர்களைப் பற்றி நாம் கற்கக்கூடியதையெல்லாம் கற்றுக்கொள் ளுங்கள்; நம்மைப்பற்றி அவர்களும் கற்க இடங் கொடுங்கள்.

இன்னொரு விஷயம் நான் அறிவேன்: பூகோள அமைப்பு ரீதியில், வியாபார நோக்கில், பற்பல பிரச்னைகளுக்கும் நம்மைப் போலவே அவர்களும் பரிகாரம் காண முயலும் முயற்சி ஒற்றுமையில், அவர்களும் நாமும் சேர்ந்து உழைக்க முடியும். ருஷ்யாவைத் தொழிற்சாலை மயமாக்க, அளவிறந்த அமெரிக்க உற்பத்திப் பொருள்கள் ருஷ்யாவுக்கு வேண்டும்; நமக்குத் தேவையான எல்லையற்ற இயற்கை வளப் பொருள்கள் ருஷ்யாவிலே இருக்கின்றன. ருஷ்யர்களும், நம்மைப் போலவே, கடின உழைப்பாளிகள்; நேர்மை யானவர்கள். அமெரிக்காவின் முதலாளித்துவ முறையைத் தவிர மற்றப்படி அதன் பிற அம்சங்கள் யாவற்றையும் அவர்கள் வியக்கிறார்கள். ஒளிக்காமல் கூறினால், ருஷ்யாவி னிடமும் நாம் வியக்க வேண்டிய அம்சங்கள் பல இருக்

கின்றன. அதன் ஆண்மையும், கனவுகளும், பரந்த செயல் திறனும், தன் நோக்கத்தை நிறைவேற்ற அதற்குள்ள விடா உழைப்பும்-நம் வியப்புக் குரியவை. கம்யூனிஸ்ட் கொள் கையை என்னை விட அதிகமாய் எதிர்ப்பவர் எவரும் இரார். ஏனென்றால், சர்வாதிகார ஆதிக்கத்துக்கு இட்டுச் செல்லும் எந்த ஆட்சி முறையையும் நான் அடியோடு எதிர்க்கிறேன். ஆனால், கம்யூனிஸமும் ஜனநாயகமும் நட்புக்கொண்டால், ஜனநாயகம் அமிழ்ந்து போய்விடும் என்று நாம் ஏன் அஞ்ச வேண்டும்? அதுதான் எனக்கு விளங்கவே யில்லை.

ஆகவே, மீண்டும் ஒரு முறை நான் சொல்லுகிறேன்: அநேகமாய் உலகத்திலேயே இன்று மிகச் சக்தி வாய்ந்த நாடுகள் ருஷ்யாவும் அமெரிக்காவுந்தாம். உலகத்தில் பொருளாதார க்ஷேமமும் சமாதானமும் ஏற்படுவதற்காக, இந்த இரண்டு நாடுகளும் சேர்ந்து உழைப்பது சாத்தியம் என்றே நான் நம்புகிறேன். இவை அப்படிச் சேர்ந்து உழைக்காவிட்டால், அதமபட்சம், உலகத்திலே நீடித்த சமாதானமோ நிலைத்த பொருளாதாரமோ நிலவ மாட்டா என்று நான் அறிவேன்; இதனால், மேலே கண்டவாறு நம்புவதைத் தவிர எனக்கு வேறு வழியே இல்லை. அமெரிக் காவின் சுதந்தரமான பொருளாதார, ராஜீய ஸ்தாபனங் களின் அடிப்படை மிகச் சரியானது என்ற ஆழ்ந்த நம்பிக்கை எனக்கு உண்டு. ஆகவே, இந்த இரண்டு நாடுகளும் சேர்ந்து உழைப்பதனால், அந்த ஸ்தாபனங்கள் நலிந்து விடாமல் உயிரோடேயே இருந்து வரும் என்ற திடநம்பிக்கையும் எனக்கு இருக்கிறது.

---

## 6. ஐந்து வருஷமாய்ப் போரிடும் சீனு

இப்போது நாம் ஈடுபட்டிருக்கும் இந்த உலக யுத் தத்தில உண்மையான வெற்றியை அடைய வேண்டும் என்றால், தூரக்கிழக்கு நாடுகளின் மக்களுடனே நாம் தெளி வான நேசம் கொள்ள வேண்டும். யுத்தத்தில் நாம் நேரே கலந்த முதல் வருஷத்திலேயே, அநேக அமெரிக்கர்களுக்கு

ஒரு விஷயம் புரிந்துவிட்டது. ஆசியாவில் நடக்கும் யுத்தம், ஐரோப்பிய யுத்தத்தின் பக்கமேளம் அல்ல என்று அவர்கள் உணர்ந்தார்கள். ஆனால் வருங்காலத்தில் யுத்தம் வராமல் தடுக்க நாம் ஆசை கொண்டால், இந்தப் பிரம்மாண்டமான கீழ்த்திசைப் பிரதேசத்தில் போரிடும் சக்திகள் எவை என்பதை நாம் அறிந்துகொள்ள வேண்டும். நமக்கு நேச மான சக்திகள் எவை என்று நாம் தெரிந்துகொள்வது அவசியம்; உலகத்தைப் பற்றி நாம் கொண்டிருக்கும் சம்பிரதாயமான பல தப்பபிப்பிராயங்களுக் கெல்லாம், இதனால் பாதகம் நேரிடக் கூடும். நேரிட்டால் குற்றமில்லை.

தூரக்கிழக்கில் நமக்குப் புதிதாய் ஏற்பட்டிருக்கும் பந்தத்தைப்பற்றி, நான் ஆழ்ந்த உணர்ச்சி கொண்டேன். அதனால்தான், சீனாவுக்குச் செல்லத் தீர்மானித்தேன். என் பிரயாணத்தைப்பற்றி முதல் முதலாகப் பேச்செடுத்த பிறகு, கொஞ்ச நாள் வரையில், போக்குவரத்துச் சம்பந்தமான சில சிரமங்கள் இருந்தன. நான் இந்தியாவுக்குச் செல்லக் கூடாதென்று தாம் விரும்புவதாக, ஜனாதிபதி என்னிடம் சொல்லிவிட்டார். இதனால்தான் அந்தச் சிரமங்கள். ஆனால், நியூயார்க் நகரை விட்டு நாங்கள் புறப்படுவதற்கு முன்பாக, அந்தச் சிரமங்கள் நிவர்த்தியாகிவிட்டன.

நான் புறப்படச் சில நாளைக்கு முன்பு, வாஷிங்டனில் உள்ள சீன ஸ்தானிகரான டி. வி. ஸூங் அவர்களுடன் விருந்துண்டேன். ஒன்றையும் ஒளிக்காமல் மனம்விட்டு, தம் நாட்டின் சிரமங்களை, அவர் எனக்குச் சொன்னார். பொருளாதாரம், ராணுவம் ஆகிய இரண்டு துறையிலுமே இருக்கும் சிரமங்கள் அவை. ஐக்கிய நாடுகள் உண்மை யிலே கூட்டுறவு கொண்ட யுத்த தந்திரத்தை அநுஷ்டிக்க வேண்டும் என்று அவர் சொன்னார். அத்தகைய ஒரு யுத்த தந்திரத்தை அவை அநுஷ்டித்தால் மாத்திரமே சீனாவுக்குச் சௌகரியமா யிருக்கும் என்று அவர் கருதுகிறார். ஹிட்லரும் டோஜோவும் எவ்வளவு விரிவாகத் தங்கள் திட்டங்களைத் தயாரிக்கிறார்களோ அந்த அளவுக்கு, ஜனநாயக நாடுகளின்

அபரிமிதமான பூர்ண பலமும் அப்போதுதான் திறமையாய்ச் செயல்படும் என்றும் அவர் அபிப்பிராயப்பட்டார்.

அவர் கருத்தை நான் ஒப்புக்கொண்டேன். பிறகு, நான் சீனுவுக்குப் போய் வந்துவிட்டேன். அதற்குப் பிற்பாடு, சீனுவையும் ருஷ்யாவையும் பூர்ணமாய், சந்தேகமற, பிரிட்டனேடும் அமெரிக்காவோடும் கூட்டாளிகளாய்ச் சேரும்படி செய்யத்தக்க உண்மையான ஐக்கிய யுத்த தந்திரம் ஒன்றை வகுப்பதற்காக, சில முயற்சிகளும் நடந்தன. என் பிரயாணமோ இந்த முயற்சிகளோ, இந்த விஷயத்தில் எனக்கு நம்பிக்கை யூட்டவில்லை. யுத்தத்தை முதல்தர யுத்தம் என்றும் இரண்டாந்தர யுத்தம் என்றும் இரண்டு பிரிவுகளாகப் பகுக்கும் மனப்பான்மை, நம் தலைவர்களில் பலருக்கு இருக்கிறது. இந்த மனப்பான்மை, இன்னமும் எனக்குப் பயம் அளித்துக்கொண்டே யிருக்கிறது. நான் தூரக் கிழக்குக்குப் போய் வந்ததிலிருந்து இது எனக்குச் சந்தேகமில்லாது விளங்கிவிட்டது. ஐரோப்பாவிலே நாம் பிரிட்டனேடும் அமெரிக்காவுடனும் நாஜிகள் ஆக்கிரமித்த பிற நாடுகளோடும் கூட்டுச் சேர்ந்தே யுத்தத்தில் வெற்றியடைய வேண்டும்; இதேமாதிரிதான், ஆசியாவிலும் நாம் சீனுவுடன் பூர்ணப் பங்காளியாகச் சேர்ந்துகொண்டே, யுத்தத்தில் ஜயிக்க வேண்டும். இல்லையானல், நமது வெற்றி உண்மையானதாக இராது.

வருங்காலத்தைக் கண்காணிக்க வேண்டுமென்றால், அது பெரும்பாலும் ஆங்கிலோ - அமெரிக்க ஆதிக்கத்தினல்தான் முடியும் என்று அநேகர் நம்புவது எனக்குத் தெரியும். காலக்கிரமத்தில், ஜெர்மனி போதிய அளவு அடங்கிவிடும்; அப்போது, ஐரோப்பாவின் மேற்குப் புறத்தில், பிரிட்டனும் அமெரிக்காவும் படையெடுத்துப் புக வேண்டும்; மத்தியக் கிழக்கை, அவை இரண்டும் தங்கள் கூட்டு ராணுவ பலத்தால் ஆக்கிரமித்துக்கொள்ள வேண்டும் - இப்படியெல்லாம் அவர்கள் எதிர்பார்க்கிறார்கள். இந்த மாதிரி மேற்கு ஐரோப்பாவை நாம் ஆக்கிரமித்துவிட்டால், ருஷ்யாவின் முன்னேற்றங்களும் அதன் வருங்கால ஆதிக்கமும் தடைப்

பட்டுவிடும் என்றும், நாம் ஜயித்த நாடுகளின் ஜனங் களெல்லாம் நம் கொடிகளின் கீழ் வந்து சேர்ந்துவிடுவார்கள் என்றும், அவர்கள் கற்பனை செய்துகொண் டிருக்கிறார்கள். மேலும், ஹிட்லரைத் தொலைத்த பின்பு, ஐக்கிய அமெரிக்காவும் பிரிட்டனும் கூட்டாகச் சேர்ந்து சீனாவிடமும் சொற்ப உதவி பெற்று, ஜப்பானை அழித்துவிடலாம் என்று அவர்கள் மனோராஜ்யம் செய்கிறார்கள். யுத்தத்துக்குப் பின்பு, சீனா முழுமையாகவே யிருக்கும்; ஆனால் பலவீனமா யிருக்கும். அதை நாம் அன்பாய் நடத்துவோம்; ஆசியாவில் உள்ள சக்திகளை யெல்லாம், கீழ் நாட்டின் நன்மைக்காக, மகனைக் காக்கும் ஒரு தந்தையைப்போல், மேல் நாட்டு வல்லரசுகள் நடத்தி வைக்கும்; அது உலகத்தின் வருங்காலச் சமாதானத்துக்கும் பத்திரத்துக்கும் மிகுந்த நன்மையா யிருக்கும் - இவ்விதம் அவர்கள் எண்ணுகிறார்கள். ஆங்கிலேயரும் அமெரிக்கரும் கீழ் நாடுகள் மேல்நாடுகள் இரண்டுக்குமே தர்மகர்த்தர்களாக ஒன்று சேர்ந்து, ராணுவ ரீதியிலும் வியாபார ரீதியிலும் உலகத்தின் கேந்திர ஸ்தானங்களாக உள்ள இடங்களையெல்லாம் தங்கள் ஆதிக்கத்தில் வைத்துக்கொண்டு, ஆங்கிலோ - அமெரிக்க ராணுவ பலத்தால் அவற்றைப் பாதுகாக்க வேண்டும் என்று அவர்கள் நினைக்கிறார்கள். இப்படியெல்லாம் செய்தால்தான், மேல் நாட்டுக் கலாசார, ராஜீய மதிப்பைக் காப்பாற்றலாம்; சமாதானம் நிலைபெறும்; பொருளாதாரப் பத்திரம் ஏற்படும்; ஜனநாயகம் பற்றியும் நல் வாழ்வு பற்றியும் ஞானம் செறிந்த நம் தத்துவங்களை அகில உலகத்திலும் நிலை நிறுத்திவிடலாம் - இது அவர்களின் கருத்து.

வாதம் என்னவோ மிகவும் கவர்ச்சியானதுதான். வெகு சரி என்றே தோன்றுகிறது. ஆனால், இந்த வாதம் சரி என்றால், ரூஸ்வெல்ட் சொன்னாரே - சர்ச்சில் அல்ல, ரூஸ்வெல்ட் - பஸிபிக் மக்களுக்கும் ஒரு சாசனம் பிரயோகமாகும் என்று, அந்த அட்லாண்டிச் சாசனத்தின் உன்னதமான வாசகங்களை யெல்லாம் நீங்கள் மறந்துவிட வேண்டும்; உலகம் முழுவதற்கும் உபதேசிக்க நாம் முயன்று

கொண்டிருக்கிறோமே, அந்த நான்கு சுதந்தர உபதேசங் களையும் நீங்கள் மறந்துவிட வேண்டும்; சுமார் இரண்டு லட்சங் கோடி தொகை யிருக்கும் ஒரு பகுதி மக்களைப் பற்றிய சிந்தனையை நீங்கள் மறந்துவிட வேண்டும்.

பல வருஷங்களாகவே, ஜப்பானின் உண்மையான ஆசைகளையும் சக்திகளையும் அறியாத அறியாமையிலே, நாம் வாழ்ந்து வருகிறோம். தங்களுக்கும் இந்த மண் ணுலகத்திலே ஒரு ஸ்தானம் வேண்டுமென்றே ஆதர்சம் கீழ் நாடுகளுக்கு வரவர வளர்ந்து வருகிறது; அந்த ஆதர்சத்தை ஜப்பான் தூண்டி வருவதை அறியாமலே, நாம் வாழ்ந்து வருகிறோம். இந்த அறியாமையின் பலனாக, ஜப்பானியரை நாம் குறைவாக மதிப்பிட்டுவிட்டோம்; கீழ் நாடுகளிலே வளர்ந்து வரும் சக்திகளை அலட்சியமும் செய்துவிட்டோம். ஜப்பானியர் ஓர் ஏகாதிபத்தியத்தை நிர்மாணிக்க முயன்று கொண்டிருக்கிறார்களோ என்று மட்டும் மங்கலாக ஒரு சந்தேகம் நமக்கிருந்தது. அந்த ஏகாதிபத்தியம் நிர்மாணம் ஆகுமானால் எவ்வளவு மகத்தானதா யிருக்கும் என்பதை, இப்போதுதான் நாம் உணர ஆரம்பித்திருக்கிறோம்.

ஜப்பானியரின் கனவுகளெல்லாம், கடைசியாக நம் கண்களிலே உண்மையாகி வருவதை, நாம் காணத் தொடங்கிவிட்டோம். ஏனென்றால், தாங்கள் திட்டமிட்ட ஏகாதிபத்தியத்தின் பெரும் பகுதியையும் ஜப்பானியர் ஜயித்துவிட்டதை நாம் கண்டுகொண்டோம். கொரியா, மஞ்சூரியா இரண்டையும் அல்லாமல், சீனுவின் கடற்கரை அனைத்தையும், அவர்கள் கைப்பற்றிவிட்டார்கள். பிலிப் பைன் தீவுகளில் பெரும் பகுதியையும் அவர்கள் பிடித்துக் கொண்டிருக்கிறார்கள். கிழக்கிந்தியத் தீவுகள் அனைத்துமே அவர்கள் கைக்குப் போய்விட்டன. பர்மாவில் பாதியைக் கைப்பற்றிக்கொண்டு, பர்மா ரஸ்தாவையும் அவர்கள் வெட்டிவிட்டார்கள். குறைந்த பட்சம் இந்து மகா சமுத் திரத்தின் கீழ்ப் பாதி, அவர்களின் கண்காணிப்புக்குள் போய்விட்டது. அவர்கள் கல்கத்தாவின் வாயிற்படியிலே, வந்து, அதன் கதவைத் தட்டிக்கொண்டு நிற்கிறார்கள்.

அவர்கள் வெகுதூரம் முந்திவிட்டார்கள். எனவே, அவர்களுக்கு வெற்றி கிடைத்தால் உலகம் எப்படியிருக்கும் என்பதை, இப்போது நாம் நன்ருய்ச் சித்திரம் செய்து கொள்ள முடியும். உதாரணமாக, இந்தியாவே விழுந்து விடுவதாக வைத்துக்கொள்ளுங்கள்; சீனுவுக்கு வெளி உதவி எதுவும் கிடைக்காமல் வெட்டிவிட்டு, அதன் கழுத்தை நெரித்து, அதை ஜயித்துவிடுகிருர்கள் என்று வைத்துக்கொள்ளுங்கள். இந்தச் சம்பவங்கள் நிகழுமென்று நான் நம்பவில்லே. ஆனல், இவை சாத்தியமில்லே என்று மறுப்போமானல், சென்ற காலத்தில் நாம் செய்த கடுந்தவறுகளேயே மீண்டும் செய்துவிடுவோம்.

இவையெல்லாம் நிகழுமானல், புதியதோர் ஏகாதிபத்தியம் சிருஷ்டியாவதை நாம் காண்போம். அது ஒரு மகத்தான ஏகாதிபத்தியமாக மட்டுமல்ல; உலக சரித்திரத்திலேயே மிகப் பெரிய ஏகாதிபத்தியமாகவும் இருக்கும்; சற்றேறக்குறைய ஒரு கோடியே ஐம்பது லட்சம் சதுர மைல் நிலப்பரப்பைக் கொண்டதும், சுமார் லட்சங் கோடி மக்கள் வசிப்பதுமான ஓர் ஏகாதிபத்தியமாக இருக்கும்; பூவுலகின் மூன்றில் ஒரு பகுதி விஸ்தீர்ணத்தையும், அதன் ஜனத் தொகையில் பாதியையும் தன் வசப்படுத்திக்கொண்ட ஓர் ஏகாதிபத்தியமாயிருக்கும். இதுதான் ஜப்பானியர் காணும் கனவு.

மேலும், அந்த ஏகாதிபத்தியம், நம் கற்பனேக்கு எட்டக் கூடிய சகல விதமான வசதிகளேயும் தனக்குள்ளேயே பெற்றிருக்கும். சமாதான காலத்துக் கைத்தொழில்களிலும் சரி, யுத்தத்துக்குத் தேவையான கைத்தொழில்களிலும் சரி, அது தன் தேவைகளே யெல்லாம் தானே பூர்த்தி செய்து கொள்ளக்கூடியதாகவும் இருக்கும். ஜப்பானுக்கு, பிலிப்பைனிலிருந்து இரும்பு கிடைக்கும்; பிலிப்பைன், பர்மா இரண்டிலுமிருந்து செம்பு கிடைக்கும்; மலேயாவிலிருந்து தகரம் கிடைக்கும்; பல நாடுகளிலிருந்து மண்ணெண்ணெய் கிடைக்கும்; குரோம், மாங்கனீஸ், நீலாஞ்சனம், அலுமினியத்தின் மூலப்பொருளான பாக்ஸைட், தன் உபயோகத்

துக்கும் கண்டு மிஞ்சக்கூடிய ரப்பர் ஆகிய பொருள்களெல்லாம் அதற்குக் கிடைக்கும். அப்போது, சகல செல்வமும் நிறைந்த தேசம், அமெரிக்காவாக இராது; மகத்தான கீழாசியக் கூட்டுறவு க்ஷேம சாம்ராஜ்யம் என்று சொல்லிக் கொள்ளும் ஜப்பானிய ஏகாதிபத்தியந்தான், சகல செல்வமும் நிறைந்ததா யிருக்கும்.

அமெரிக்க மக்களின் தீரம், உழைப்பு, வருங்கால க்ஷேமம் ஆகியவற்றிலே, எனக்கு அளவிறந்த நம்பிக்கை இருக்கிறது. ஆனுல், மேலே கண்ட பிரம்மாண்டமான ஓர் ஏகாதிபத்தியத்துக்கு எதிரே அமெரிக்கர் வாழ வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுமாளுல், நம் வாழ்க்கை ஏதோ ஒரு ராணுவ முகாம் மாதிரிதான் இருக்கும் என்றும், நாம் பெருமையடித்துக் கொள்ளும் தந்திர மெல்லாம் வெறும் ஆசைக் கனவாகப் போய்விடும் என்றும் நான் கருதுகிறேன். ஓயாத பீதியிலும், ஒழியாத யுத்தத்திலும், நம்மால் தாங்கமுடியாச் சுமையான ஆயுதங்களை இடைவிடாமல் அதிகரித்துக்கொண்டும், நாம் வாழவேண்டிவரும். உயிர் வாழ்வதற்காக இப்படிப் போராடும் நிலைமையிலே, சமாதானமும், செல்வச் செழிப்பும், சுதந்தரமும், தர்ம நீதியும் நிலைத்திருக்கமாட்டா. பஸிபிக் மகாசமுத்திரம் எத்தனை அகன்றிருந்தால் என்ன? எத்தனை குறுகி யிருந்தால் என்ன? அதனுல், துளிக்கூடப் பயனில்லாது போகும்.

இத்தகையதோர் ஆபத்தை நாம் தடுத்துவிடத்தான் போகிறோம் என்ற நம்பிக்கை எனக்கிருக்கிறது. காலங்கடக்கு முன்பாகவே, மகா கடுமையாய்த் தாக்கி, அடிமேல் அடியடித்து, அதை நாம் தடுத்துவிடப் போகிறோம் என்றே நான் நம்புகிறேன். ஆனுல், நாம் தன்னந்தனியே அடித்துப் பயனில்லை. கீழ் நாட்டிலே என்ன நிகழ்ந்துகொண்டிருக்கிறது? அங்கே உள்ள மக்களின் அபிப்பிராயங்கள் யாவை? அவர்களின் சிந்தனைப் போக்கிலே எத்தகைய மாறுதல்கள் நிகழ்ந்துகொண் டிருக்கின்றன? இவற்றை யெல்லாம் நாம் நன்ருய் அறிந்துகொள்ள வேண்டும். மேல்நாட்டு ஏகாதிபத்திய முறையில், அவர்களுக்கு நம்பிக்கை போய்விட்டது;

வெள்ளையன் உயர்ந்தவன் என்ற எண்ணம் அவர்களிட மிருந்து அகன்றுவிட்டது; தங்களுக்குச் சொந்தமான வாழ்க்கை மதிப்புக்களுடனும் லட்சியங்களுடனும் சுதந் தரமாய் வாழ, அவர்களுக்கு ஆவல் மூண்டிருக்கிறது. இவற்றை, நாம் நன்றாய்த் தெரிந்துகொள்ள வேண்டும். 'எண்ணச் சுதந்தரத்துக்காகவே இந்த யுத்தம்' என்றும் 'ராஜீய யுத்தம்' என்றும் இதை நாம் எல்லாரும் கூறுகிறோம். ஆனால், பழைய முறையிலே, ஆதிக்கம் பெறும் சூழ்ச்சி களையும், வெறும் ராணுவ நடவடிக்கைகளையும், சமயத்துக் கேற்றபடியும் அநுபவ ரீதியிலுமே, நாம் கைக்கொண்டு வருகிறோம். வட ஆப்பிரிக்காவிலும் கீழ்நாட்டிலும், இப்படித் தான் நாம் பெரும்பாலும் செய்திருக்கிறோம். இந்த யுத்தம் எதற்காக நடக்கிறது என்பதை, நாம் அடிக்கடி மறந்து விடுகிறோம்; நம் லட்சியங்களை வெகு சுலபமாய், நாம் கைவிட்டு விடுகிறோம். சீன மக்கள் மட்டும் நீண்ட காலமாக-மனமொடிக்கும் ஐந்து வருஷங்களாக - திக்கற்ற ஆவேசத் துடன் எதிர்த்து நின்றிராவிட்டால், ஜப்பானின் பிரமாத மான ஏகாதிபத்தியம் இதற்குள்ளேயே நிர்மாணமாகி யிருக்கும்; அதை ராணுவத்தினாலோ, ராஜீயத்தினாலோ தோற்கடிக்கக்கூடிய காலமும் ஏற்சனவே கடந்து போயிருக் கும்-இதைப் போதிய அளவு, நாம் நினைவில் வைப்பதேயில்லை.

சீன மக்கள் புரிந்துவரும் எதிர்ப்பு, நம் நாகரிகம் முழுவதற்குமே மிக முக்கியமானது. அந்த முக்கியத்தை, சென்ற ஐந்து வருஷ காலத்தில், நம்மில் சிலர்கூட அறிந்து கொள்ள வில்லை. கடந்துபோன அந்த ஐந்து வருஷ காலத்தைப் பற்றி யோசித்துப் பார்த்தால், அமெரிக்கர்கள் சற்றும் சந்தோஷப்பட முடியாது. அந்த எதிர்ப்பைச் சீனாவிலே தலைமை தாங்கி நடத்திவரும் மனிதர்களோடு நான் சம்பாஷித்துக்கொண் டிருந்தபோது, இந்த ஐந்து வருஷ காலத்தைப்பற்றி நினைத்தேன்; எனக்கு அது சந்தோஷமா யில்லை. நமக்குள்ளே மனக் கசப்போடு சச்சரவுகள் செய்வதிலும், உலக விவகாரங்களிலிருந்து நாம் ஒதுங்கியிருக்க வேண்டுமென்ற கொள்கை மயக்கத்திலுமே,

நாம் மூழ்கி யிருந்துவிட்டோம். சீனுவுக்கு நாம் உதவிதான் அனுப்பவில்லை யென்றாலும், அதன் வீரப் போராட்டத்தைப் பற்றி அறிந்துகொள்ளக்கூட ஒருபோதும் முயலாதிருந்து விட்டோம். அந்தப் பிசகிலிருந்து மீள்வதற்காக, இப்போது ஒரு பெரிய யுத்தத்திலே நாம் மாட்டிக்கொண் டிருக்கிறோம். அந்தப் பிசகிலிருந்து நாம் மீளத்தான் வேண்டும்.

வருங்காலத்தைப் பற்றிச் சீனர்கள் கொண்டிருக்கும் நோக்கம், ஜப்பானியரின் நோக்கத்துக்கு நேர் எதிரிடை யானது. சீனர்கள் ஓர் ஏகாதிபத்தியத்தைத் தேடவில்லை. விசாலமான, மனோகரமான தங்கள் சொந்த நாட்டைக் காப்பாற்றிக்கொள்ளவும் அபிவிருத்தி செய்யவுமே, அவர்கள் முயல்கிறார்கள். கீழ் நாட்டிலே கிளர்ந்தெழுந்து வரும் புதிய சக்திகளை, தங்கள் சொந்தச் சுதந்தரத்துக்கும் பிற மக்களின் சுதந்தரத்துக்கும் பயன்படுத்த வேண்டும் என்பதே அவர் களின் ஆசை. இதே சமயத்தில், அதே சக்திகளை, தங்கள் ஏகாதிபத்திய நிர்மாணச் சூழ்ச்சிகளுக்குப் பயன்படுத்திக் கொள்ள, ஜப்பானியரும் முயல்கிறார்கள்.

நிலப்பரப்பிலும் சரி, ஜனத் தொகையிலும் சரி ஐக்கிய அமெரிக்காவை விட மிகப் பெரியது சீனு. அதன் எல்லை களுக்குள்ளே, வளம் மிக்க பல வசதிகள் இருக்கின்றன. என்றாலும், தன் தேவைகளை யெல்லாம் தானே பூர்த்தி செய்துகொள்ளத் தக்க நிலையில் அது இல்லை-நாமுந்தான் அப்படி யில்லை. இந்த விஷயத்தைப்பற்றிச் சீனர் கவலைப்பட வில்லை; உலகத்தை ஜயிக்க வேண்டுமென்று அவர்கள் ஆசைப்படவில்லை - நம்மைப் போல்தான் அவர்களு மிருக் கிறார்கள். ஒரு நாடு தன் தேவைகளை யெல்லாம் தானே பூர்த்தி செய்துகொள்ள வேண்டியதா யிருக்க வேண்டும் என்ற மயக்கம், சர்வாதிகாரிகளுக்கே உரியது. பென்ஸில் வேனியாவின் சார்பே யில்லாமல் சுதந்தரமா யிருக்கவேண்டு மென்று, நியூயார்க் முயல்கிறதா? இல்லையே. இதே மாதிரி தான், உண்மையான ஜனநாயக உலகத்திலும், எந்த நாடும் தன் தேவைகள் அனைத்தையும் தானே பூர்த்திசெய்து கொள்ள வேண்டிய அவசியம் இராது.

தனி நபர் சுதந்தரம், ஜனநாயக அரசாங்கம் இரண்டையும் பற்றி நாம் கொண்டுள்ள லட்சியங்களையே சீனர்களின் லட்சியங்களும் முற்றிலும் ஒத்திருக்க வேண்டும் என்று நாம் எதிர்பார்க்கலாகாது. நமக்கு அவர்களின் சில கருத்துக்கள் அளவுக்கு மிஞ்சிய தீவிரமாய்த் தோன்றலாம்; மற்றும் சில கருத்துக்கள் பரிகசிக்கத்தக்க அளவு பழம்பசலியாய்த் தோன்றலாம்; அவர்களின் கண்களிலே நம்முடைய சில பழக்கங்கள், பரிகசிக்கத் தக்கவையாய் - அருவருப்பாய்க் கூட - இருக்கின்றன என்பதையும் நாம் நினைவு கூர வேண்டும். சீனர்கள் சுதந்தரத்தை விரும்புகிறார்கள்-இது தான் அடிப்படையான உண்மை. இந்த உண்மையையே, நம் மனத்தில் நாம் உறுதியாய்ப் பதிய வைக்க வேண்டும். தங்கள் சொந்த மக்கள் நன்மையும் களிப்பும் அடைவதற்காக, தங்கள் சொந்த வாழ்க்கையை, தங்கள் சொந்த வழியிலே ஆண்டு கொள்ளும் சுதந்தரத்தை, சீனர்கள் விரும்புகிறார்கள்; ஆசியாவுக்கே சுதந்தரம் வேண்டுமென்று அவர்கள் விரும்புகிறார்கள்.

ஒரு புறம் ஐக்கிய அமெரிக்காவுக்கும் சீனாவுக்கும், மறு புறம் பிரிட்டனுக்கும் சீனாவுக்கும், சமீபத்தில் உடன்படிக்கைகள் நடந்திருக்கின்றன. சீனாவில் சில இடங்களில் நாம் இதுவரையில் பெற்றிருந்த பிரதேசாதிகார விலக்கு உரிமைகளையெல்லாம், இந்த உடன்படிக்கைகளினால் நாம் விட்டுக் கொடுத்துவிட்டோம். சீனா சுதந்தரமடையச் சங்கல்பம் கொண்டிருப்பதை, நாம் அங்கீகாரம் செய்வதில் இது ஒரு படியே. ஐக்கிய அமெரிக்காவில் சீனர்கள் எப்படி அமெரிக்கச் சட்டங்களுக்கும் நியாய ஸ்தலங்களின் அதிகாரங்களுக்கும் கட்டுப்பட்டவர்களோ அதே மாதிரிதான், இனிச் சீனாவில் அமெரிக்கர்களும் ஆங்கிலேயரும் சீன நீதி ஸ்தல நடவடிக்கைகளுக்குக் கட்டுப்பட்டிருப்பார்கள்; அவர்களுக்கு விலக்கு எதுவும் இராது. ஆனால் சீன சுதந்தரப் பிரச்னையை, இந்த உடன்படிக்கைகளே பரிகாரம் செய்துவிட்டதாக, நாம் நினைத்துவிட முடியாது. உதாரணமாக, ஹாங்காங் துறைமுகத்தைத் தங்களுடையதென்றே இன்னமும் பிரிட்டிஷார்

பாத்தியம் கொண்டாடுகிறார்கள். அது ஒரு பெரிய துறை முகம். சீனர்கள் அதன் மூலமே உலகத்தோடு வியாபாரம் செய்யவேண்டும். ஷாங்காய் சர்வதேச ஸெட்டில்மெண்டில், அமெரிக்கரும் பிற தேசத்தார்களும், இப்படியே அது தங்களுடைய தென்று உரிமை கொண்டாடுகிறார்கள். தங்கள் உண்மையான சுதந்தரத்தை இன்னமும் தடைசெய்து கொண்டு அந்நியர் பெற்றிருக்கும் உரிமைகளுக்கும் சலுகை களுக்கும் சின்னங்களாக விளங்குபவை ஹாங்காங்கும் ஷாங்காயும் என்றே சீனர்கள் கருதுகிறார்கள்.

சீனா என்றால், அங்கிருப்பவர்களும் மக்கள்தாம் என்று நினையாமல், வெறும் ஜடங்களின் கும்பல் என்றே இன்னமும் அமெரிக்கர் நினைக்கிறார்கள்; மேல்நாட்டினரில் ஐம்பது லட்சம் பேர் செத்தால் அது பெரும் விஷயம் என்றும், சீனர் களில் ஐம்பது லட்சம் பேர் செத்தால் அது ஒன்றும் அவ்வளவு நஷ்டமில்லை என்றும் அவர்கள் இன்னமும் நினைக் கிறார்கள். அமெரிக்கர்கள் இப்படி நினைப்பது ஒரு துரதிருஷ் டந்தான். சொல்லப்போனால், உலகத்திலேயே இன்று நிகழ்ந்திருக்கும் மிக விசேஷமான ஒரு சம்பவம், கீழ் நாட்டிலே ஏற்பட்டுவரும் விழிப்பே. ராணுவ பலத்தைக் கொண்டு யுத்தத்தை நாம் வென்றுவிட்டாலுங்கூட, அந்த விழிப்பை நாம் சமாளித்தே யாகவேண்டும். நாம் புத்திசாலி களா யிருந்தால், உலக சமாதானமும் பத்திரமும் ஏற்படு வதற்காக ஒத்துழைக்கும்படி, இந்தக் கீழ் நாடெங்கும் தோன்றியிருக்கும் விழிப்பைப் பயன்படுத்துவோம். இதே விழிப்பை நாம் அலட்சியம் செய்தோமானாலும் மறந்தோ மானாலும், உலகத்துக்கு இது உபத்திரவம் தந்துகொண்டே தான் இருக்கும்.

---

## 7. சீனாவின் மேற்குப் பிரதேச அபிவிருத்தி

நான் முதல் முதலாகச் சீனாவுக்குச் சென்ற இந்தச் சமயத்திலே, 'உடன்படிக்கை'த் துறைமுகம் என்று சொல் கிறார்களே அதன் மூலமாய் அந்த நாட்டுக்குள் பிரவேசிக்க்

வில்லை; கொல்லைப்புற வழியாகவே - சீனாவின் வடமேற்கிலே கடலுக்கு அப்பால் வெகு தூரத்தில் உள்ள பிரம்மாண்டமான பிரதேசத்தின் வழியாகவே-பிரவேசித்தேன். இதற்கு நான் எந்தக் காலத்திலும் மகிழ வேண்டும். பசிபிக்கில் உள்ள 'உடன்படிக்கைத் துறைமுகங்கள்' அனைத்தும், இப்போது ஜப்பானியரின் கையில் இருக்கின்றன. சீனா ஒரு பெரிய நாடு; ஆனால், அது பழம்பசலியா யிருக்கிறது; தாங்கள் அதைத் திருத்தலாம், சுரண்டலாம், கேலி செய்யலாம் - இப்படியெல்லாம் மேல் நாட்டினர் மதிக்கிறார்கள். இப்படித் தாங்கள் மதிக்கும் அடையாளங்களாக இருப்பவை 'உடன்படிக்கைத் துறைமுகங்கள்' என்றே, பல தலைமுறைகளாகச் சீனர்கள் நினைக்கிறார்கள். ஷாங்காய், ஹாங்காங், காண்டன் ஆகியவை மிக அழகான நகரங்களா யிருக்கலாம். ஆயினும், அவற்றின் பெயரைக் கேட்டாலே, சீனர்களுக்குப் பழைய நாட்கள் ஞாபகம் வருகின்றன. சீனக் குடியரசின் ஸ்தாபகரான சன்-யாட்-சென், அந்த நாட்களைப்பற்றி இப்படி வர்ணித்திருக்கிறார்: 'மீதி உலகத்தவர், அரியும் கத்தியும் உண்ணும் கலமுமா யிருக்கிறார்கள்; நாமோ, அவற்றில் அகப்பட்ட மீனும் புலாலுமா யிருக்கிறோம்.'

நான் முதல் முதலில் சீனாவில் போய் இறங்கிய இடம் டிஹ்வா என்பது. அதை ருஷ்யர்கள் உரும்சி என்று அழைக்கிறார்கள். சீனாவின் கிழக்குத் துருக்கிஸ்தானம் என்று சொல்லக்கூடிய சிங்கியாங் மாகாணத்தின் தலைநகரம் அது. ஸைபீரியாவில் உள்ள டாஷ்கெண்டிலிருந்து எங்கள் லிபரேட்டர் விமானம் ஒரே நாளில் இந்த இடத்துக்குப் பறந்து வந்துவிட்டது. இல்லி நதிப் பள்ளத்தாக்கின் வழியாகவே, நாங்கள் பெரும்பாலும் பறந்தோம். டீன்ஷான் அல்டாய் மலைகள் என்பவை, உலகத்தின் மிக உயரமான மலைத் தொடர்களைச் சேர்ந்தவை. இந்த மலைத் தொடர்களுக்குக் குறுக்கே செல்கிறது இல்லிநதிப் பள்ளத்தாக்கு. நாங்கள் பல மணி நேரம், வெறும் சூன்யமான வனாந்தரத்தின் மீதே பறந்தோம். ஆனால், அதன் இயற்கைக் காட்சி மாத்திரம் மகா அதிசயமாய், அழகாய் இருந்தது. அது

போல் இதுவரையில் நான் பார்த்ததே யில்லை. கடைசியில், திராட்சைக் கனிகளும், முலாம் பழங்களும் நிறைந்து செழித்த பிரதேசத்துக்கு வந்து சேர்ந்தோம். இதைச் சீனர் சிங்கியாங் அல்லது 'புது ராஜ்யம்' என்று அழைக்கிறார்கள்.

சிங்கியாங் மாகாணம் பிரான்ஸைப்போல் இரண் மடங்கு இருக்கிறது. இதன் ஜனத்தொகை ஐம்பது லட்சத்துக்குக் கொஞ்சம் குறைவு. சீனுவிலேயே இதுதான் மிகப் பெரிய மாகாணம். எனவே, மிகச் செல்வ வளமுள்ளதும் இதுதான் என்று மதிக்கலாம். இது, ஆசியாவின் பூகோள ரீதியான மையத்துக்கு மிகவும் சமீபத்தில் இருப்பது மட்டுமல்ல; ராஜீய ரீதியான மையத்துக்கும் மிக அருகே இருக்கிறது. இந்த அதிசயமான பிரதேசத்துக்கு என்ன கதி நேர்கிறதோ, அது, நீண்ட காலத்தில் நம்முடைய சரித்திரத்தை நிச்சயம் பாதித்தே தீரும். இந்தப் பிரதேசத்தைப்பற்றி அமெரிக்கர் கேள்ப்வி பட்டது கூட இல்லை.

போன தலைமுறையில் இங்கே போய்வந்த அந்நியர்கள் மிக அபூர்வம். சீனுவுக்கும் மாஸ்கோவுக்கும் இடையே சீன - ருஷ்யப் பிரயாணிகள் விமானம் ஒன்று போய் வருகிறது. அந்த விமானத்தில் சிங்கியாங் வழியாகப் பிரயாணம் செய்த அமெரிக்கரோ ஆங்கிலேயரோ போன வருஷம் வரையில் சில டஜன் பேர்தான் இருப்பார்களாம். எங்களை விருந்தினராக ஏற்று உபசரித்த சீனர்களின் மதிப்பு இது. அந்தச் சில டஜன் பிரயாணிகளும், தலைநகரமான டிஹ்வாவை அதிகம் பார்த்த தில்லை; அதை விடச் சிறியதும், சிறந்த விமான நிலையமுடையதுமான ஹாமி என்னும் நகரத்தைத்தான் அதிகம் பார்த்திருக்கிறார்கள்.

டிஹ்வா நகரத்திலேயும் பெருமை பாராட்டத்தக்க எந்த அம்சமுமில்லை. சிறிய நகரம்; தூங்கி வழிகிறது. நம்பமுடியாத அளவுக்குச் சேறும் சகதியுமா யிருக்கிறது. தெருப் பெயர்களை ருஷ்ய பாஷையில் எழுதியிருக்கிறார்கள். அரசாங்கத்தைச் சீனர் நடத்துகிறார்கள்; ஜனங்கள்

துருக்கியர். சீன எல்லைக்குள்ளே வாழும் இரண்டு கோடி முஸ்லிம்களில் இவர்களும் ஒரு பகுதியினர். ஆசியாவுக் குள்ளேயே மிக நேர்த்தியான முலாம் பழங்களும், மிக ருசியான விதை யில்லாச் சிறு திராட்சைப் பழங்கள் சிலவும், இங்கே அகப்படுகின்றன. நகரத்தைச் சுற்றியுள்ள மலைகளில் உலோகங்கள் நிறைந்திருக்கின்றன. நீர்ப்பாசனமே, இந்த மாகாணத்துக்கு உணவளிக்கிறது. தற்போது மிகமுக்கிய மாய் இது ஏற்றுமதி செய்யும் பொருள் கம்பளி நூல்தான். அந்தக் கம்பளி நூல், இப்போது கணிசமான அளவு ஏற்றுமதியாகி, செஞ்சேனைக்கு உடுப்புத் தயாரிக்க உதவு கிறது.

உலகத்தில் சில இடங்கள் இருக்கின்றன. அவற்றில் ராஜீயமும் பூகோளமும் கூட்டுச் சேர்ந்துகொண்டு, ஒருவித வெடி மருந்துக் கதம்பம் ஆகிவிடுகின்றன. உலகத்துக்கு என்னதான் நேரிடப் போகிறது என்று அறிய ஆவல் கொள்கிறவர்கள், இவற்றைப் பற்றிக் கவலை கொண்டே யாகவேண்டும். இத்தகைய இடங்களிலே ஒன்று சிங்கியாங். பூகோளம் சிங்கியாங்கை ருஷ்யாவின் பக்கம் சாய்க்கிறது. ஸோவியத்தின் துருக்கி-ஸைபீரிய ரெயில்பாதை, சிங்கி யாங்கின் எல்லைக்குச் சில மைல் தூரத்தில் ஓடுகிறது. டிஹ்வாவில் ஜனங்களிடம் அழிபடும் பண்டமெல்லாம் ருஷ்யாவிலிருந்து வந்தவை. நாங்கள் சவாரி செய்த கார் ருஷ்யாவில் செய்தது. நாங்கள் பார்த்த ராணுவம் ருஷ்ய டாங்கிகளையே ஓட்டிக்கொண்டிருந்தது. ஆனால் ராஜீயமோ, சிங்கியாங்கைச் சீனாவின் பக்கமே சாய்க்கிறது. ஹான் ராஜ வம்ச காலத்திலிருந்து, சிங்கியாங்கைச் சீனர்களே ஆண்டு வந்திருக்கிறார்கள். சிங்கியாங்கின் இப்போதைய கவர்னர் ஒரு சீனர். சீனாவின் உள்நாட்டுப் பிரதேசங்களை அபிவிருத்தி செய்யும் வேலை மிக மும்முரமாய், நம்பிக்கையோடு, இப்போது நடைபெறுகிறது. இந்த முயற்சி, புதிதாய் வீசும் பெருங்காற்றைப்போல், மாகாண மெங்கும் பரவியிருக் கிறது. இந்த யுத்தத்துக்குப் பின்னே, ஸோவியத் - சீன உறவுகள் உலகம் அனைத்துக்குமே முக்கியமாயிருக்கும். அந்த

உறவுகள் இந்தப் பிரதேசத்திலேதான் அநேகமாய் நிர்ணயமாகப் போகின்றன.

சிங்கியாங்கின் மீது சீனுவின் ராஜ்யாதிகாரத்தை, ஸோவியத் சர்க்கார் எப்போதுமே அங்கீகரித்து வந்திருக்கிறது. இரண்டு நாடுகளுக்கும் எந்தவித எல்லைச் சண்டையும் ஒருபோதும் நடந்ததில்லை. ஆயினும், ரெயில் பாதைகள், மார்க்கட்டுகள், வர்த்தகக் கடன்கள், பொதுஉடைமைக் கருத்துக்கள் ஆகிய அம்சங்கள், சென்ற பத்து வருஷங்களாக, தொடர்ந்து, இந்த மாகாணத்தை ஸோவியத்தின் செல்வாக்குக்குள் இழுத்து வருகின்றன. இதற்கு மாற்றாக, சீனர்கள் சிங்கியாங் உள்படத் தங்கள் வடமேற்கு மாகாணங்களை யெல்லாம் தொழிற்சாலை மயமாக்கி அபிவிருத்தி செய்யக்கூடும். அப்போது இந்த இரு நாடுகளிலும் யாருடைய செல்வாக்குப் பெரியது என்பதுபற்றி ஓர் உண்மையான பலாபலப் பரீட்சை நடைபெறலாம்.

சிங்கியாங்கின் ராஜீயச் சங்கடங்களைப்பற்றி, மாஸ்கோவிலும் சரி, சுங்கிங்கிலும் சரி, சில கதைகளை நான் கேள்விப்பட்டேன். அவை ஏதோ கட்டுக் கதைகளைப் போலவே யிருந்தன. ஒரு சதி நடக்கப்போகிறதாம்; அதில் முக்கிய நடிகன் ஒரு சீன முஸ்லிம் தலைவனும். அவன் ராபின் ஹுட் (தர்மக் கள்ளன்) மாதிரி கீர்த்தி பெற்றவனும். 1932-ஆம் வருஷம் கன்ஸு என்ற பக்கத்து மாகாணம் ஒன்றிலிருந்து, அவன் சிங்கியாங்கைப் படையெடுத்தானும். 1934-ஆம் வருஷம் எல்லை வழியாக வெளியேறி விட்டானும். இப்போது அவன் மாஸ்கோவில் இருந்து கொண்டு, மீண்டும் எப்போது படை யெடுக்கலாம் என்று சமயம் பார்த்துக் கொண்டிருக்கிறுனும். மற்றொரு முக்கியத் தலைவர் ஷெங்-ஷி-ட்ஸாய் என்ற சீனர். அவர் இப்போது சிங்கியாங்கின் கவர்னரா யிருக்கிறுர். சீனுவின் வட கிழக்கு மாகாணங்களான மஞ்சூரியாதான் அவரது பூர்விகம். அந்த மஞ்சூரியாவை 1931-ஆம் வருஷம் முதல் ஜப்பானியர் ஆக்கிரமித்துக்கொண் டிருப்பதால், அவர் ஜப்பானியரிடம் விரோதம் கொண்டிருக்கிறுர். சென்ற ஜூன் மாதத்தில்

கவர்னர் மாளிகையின் பள்ளியறையிலே அவருடைய சகோதரர் செத்துக் கிடந்தார். இந்தக் கொலையில் யாரோ ருஷ்யர்கள்தாம் சம்பந்தப்பட் டிருக்கிறுர்கள் என்று கதைகள் கிளம்பி யிருக்கின்றன. ஆசியாவிலோ கதைகளே செய்திகளாக வழங்கி விடுகின்றன!

இந்தக் கதைகளில் எவ்வளவு உண்மை இருக்கிறது என்று என்ஞல் அறிய முடியவில்லே. அநேகமாய்த் துளியும் உண்மை இராதுபோகலாம். டிஹ்வா கவர்னரான ஷெங் அவர்களுடன் நான் விருந்துண்டேன். ஸோவியத் தலேமை ஸ்தானிகரும் எங்களோடு விருந்துண்டார். ருஷ்ய மதுவான வோட்காவையும், சீன அரிசியில் காய்ச்சும் ஒயினேயும் பருகி நாங்கள் ஒருவருக்கொருவரும் எங்கள் மூன்று நாடுகளுக்கும் வாழ்த்துக் கூறிக்கொண்டோம். ருஷ்யாவுக்கும் சீஞவுக்கும் மனப்பூர்வமான நேசம் இருப்பதாகவே தோன்றியது; மனஸ்தாபம் இருப்பதாகத் துளி அடையாளமும் காண வில்லே. சீனக் கவர்னர் விரும்பியபடி அடுத்த நாள் காலே, தனியாக அவருடன் நான் விருந்துண்டேன். அவர் ஒரு காலத்தில் கம்யூனிஸ்டுகளிடம் அநுதாபம் கொண்டிருந் தவர்; சமீபத்தில் அதை விட்டு, தளபதி சியாங்-கே-ஷேக்குக் குத் தமது பக்தியை மாற்றிக் கொண்டுவிட்டார். கொலே, சூழ்ச்சி, உளவுக்கு உளவு முதலியவை பற்றி அவர் என்னிடம் பல கதைகள் சொன்ஞர். அவை ஏதோ திடுக்கிடும் சம்பவங்கள் அடங்கிய நாவல் மாதிரி இருந்தன. சுற்றிலும் சூழ்ந்த சந்தேகமும் ரகசியமும் மட்டும் தென்படாவிட்டால், ஓர் அமெரிக்கஞல் அந்தக் கதைகளே நம்பவே முடியாது. ஆசியாவிலே உயர்ந்த மலேக்கருகே யிருக்கும் துருக்கி ஸ்தானத்தில் சீஞவுக்கும் ருஷ்யாவுக்கும் பொதுவான பிரச்னேகள் இருக்கின்றன. இந்தப் பிரச்னேகளேச் சமாளிக்க, அவை இரண்டுமே ஒத்துழைக்க வேண்டும். அவை இப்படி ஒத்துழைப்பதற்கு, நாம் உதவி புரிய வேண்டும். யுத்தம் முடிந்ததும் இது நம்முடைய பிரச்னேகளில் ஒன்ருக இருக்கப் போகிறது என்றே தோன்றுகிறது. சீஞவும் ருஷ்யாவும், ஐக்கிய அமெரிக்காவும், பிரிட்டனும் இன்று தாங்கள்

யுத்தத்தில் ஈடுபட்டுப் போரிடும் காலத்திலேயே, ஒரே மகா நாட்டில் கூடி ஆலோசித்து, ஒருவரோ டொருவர் சேர்ந்து உழைக்கக் கற்க வேண்டும் என்று நான் சொல்வதற்கு இதுவே மற்றொரு காரணம். அவை இப்படிச் செய்யா விட்டால், இந்தப் போர் முடிந்த பின் மீண்டும் உலகத்தையே வெடித்து நிலை குலையச் செய்வதற்குப் போதிய 'வெடி மருந்து' மத்திய ஆசியாவில் இருக்கிறது.

விருந்தினரை உபசரிப்பதில் உலகத்திலேயே தலைசிறந்தவர்கள் சீனர்கள்தாம். அவர்கள் எனக்குப் பல விருந்துகள் தொடர்ந்து அளித்தார்கள். அந்த வரிசையில் முதலாவது, கவர்னர் ஷெங் அளித்த விருந்துதான். இது மாத்திரமல்ல; அது மகா சுவாரஸ்யமான ஒரு விருந்துமாகும். நீண்ட மண்டபம் போன்ற ஒரு கூடத்தில் நாங்கள் உட்கார்ந்தோம். மண்டபத்தில் பல குறுகிய மேஜைகளை நீளமாய்ப் போட்டிருந்தார்கள். அந்த மேஜைகளின் இரு பக்கத்திலும் எதிர் எதிரே நீண்ட இரண்டு வரிசைகளாக நாங்கள் அமர்ந்து கொண்டோம். ஓர் அமெரிக்கனுக்கு வரவேற்பு, நம் பொது எதிரிகளுக்குச் சவால், நம் வெற்றியில் நம்பிக்கை ஆகியவை அடங்கிய வாக்கியங்களைச் சுவர்களிலே பதினேழு விதமான பாஷைகளில் எழுதியிருந்தார்கள். அது ஆசியாவின் பற்பல பாதைகளும் வந்து சந்திக்கும் இடம்; உலகத்திலேயே மிகப் புராதனமான ஒரு யாத்திரை மார்க்கம்; இன்னமும் ஐரோப்பாவையும் ஆசியாவையும் இணைத்து வரும் ஓர் இடம். அந்த நகரிலே, மேலே கண்ட பதினேழு வித பாஷைகளும் வழங்கி வருகின்றன.

கவர்னர் நல்ல உயரம்; அழகான கரிய மீசை உள்ளவர்; சீன வம்சத்தைச் சேர்ந்த மஞ்சூரியாக்காரர்; ஜப்பானில் படித்தவர். பத்து வருஷங்களுக்கு மேலாக சிங்கியாங்கின் கவர்னரா யிருந்து வருகிறார். அந்த நாட்டைப் பற்றியும், அதன் சூழ்ச்சிகளையும் சச்சரவுகளையு மெல்லாம், அவர் நன்றாய் அறிவார். மாலையில் அவருடைய காரியாலயத்தில் அவரோடு நான் சம்பாஷித்தேன். தம் தேசத்தின் தலைநகரிலிருந்து நாற்பத்தாறு நாள் பிரயாணம் செய்து வரவேண்டி

யிருக்கிற இந்த நாட்டை நிர்வகிப்பதில் உள்ள பிரச்னைகளை யெல்லாம் எனக்குச் சொன்னார்.

உலகெங்குமே அமெரிக்கர்களிடம் நல்லெண்ணம் இருந்து வருகிறது. அதற்கு உண்மையிலேயே மிக உருக்கமான சாட்சியத்தை, டிஹ்வாவில் நான் கண்டேன்; நான் சென்ற பிற சீன நகர் எல்லாவற்றிலுமே அதைக் கண்டேன். செப்டம்பர் மாதம் அன்றிரவு விருந்து நடந்த மண்டபத்தை விட நமக்கு அதிக தூரமான இடம் வேறொன்றும் இருக்க முடியாது. எங்கள் சகோதர விருந்தினர்களான உத்தியோகஸ்தர்களும் ராணுவ அதிகாரிகளுங் கூட, பெரும்பாலும் ஏதோ விநோதமாகவே என்னைப் பார்த்தார்கள். தங்கள் வாழ்க்கையிலேயே இப்போதுதான் முதல் முதலாக ஓர் அமெரிக்கனை அவர்கள் கண்டதுபோல் தோன்றியது அந்தப் பார்வை. என்றாலும், அவர்கள் எனக்கு அளித்த வரவேற்பிலே ஒரு கனிவும் நட்பும் இருந்தன. இன்னும் பல வருஷ காலம் சீனாவின் நண்பனாகவே அமெரிக்கா இருந்துவரும் என்ற நம்பிக்கை அவர்களுக்கு இருக்கிறது. இதை அவர்கள் வாய் திறந்து சொல்லாவிட்டாலும், என்னிடம் அவர்கள் காட்டிய அந்தக் கனிவும் நட்பும் இதைப் பலமாய் வெளியிட்டுவிட்டன.

டிஹ்வாவில் நான் கண்ட ஒவ்வொரு விஷயமும், ஆசியாவின் உண்மையான ஜீவசக்தியையும் வலிமையையும் எங்களுக்கு ஞாபக மூட்டியது. டாஷ்கெண்ட், டெஹ்ரான், பாக்தாது ஆகிய எந்த இடத்தையும் விட மிகவும் ஸ்பஷ்டமாய், டிஹ்வாதான் அவற்றை ஞாபகமூட்டியது. அடுத்த நாள் எங்களுக்காக ராணுவ அணிவகுப்பு ஒன்றை நடத்தும்படி கவர்னர் ஏற்பாடு செய்தார். பெரிய மைதானம் ஒன்றில் சிங்கியாங்கின் சேனை-அல்லது அதன் மிகப் பெரும் பகுதி - உடை யலங்காரத்தோடு அணிவகுத்து நடந்து சென்றதை. நாங்கள் பார்த்துக்கொண் டிருந்தோம்.

அது மிகவும் கவர்ச்சியான ஒரு காட்சி. ஸோல்ஜர்கள் சுத்தமாய், நல்ல பயிற்சி பெற்றவர்களாய், ஆரோக்கியமாய் இருந்தார்கள். அவர்களுடைய தளவாடங்கள் சொற்ப

மாய்த்தான் இருந்தன. ஆனால் ருஷ்யாவில் செய்தவை; நேர்த்தியானவை. எங்கும் கொண்டு செல்லக்கூடிய பீரங்கிகள், மோட்டார் சைக்கிள்களில் ஏற்றிய மெஷின் கன்கள், கவசம் தரித்த சாதாரண மோட்டார்க்கார்கள், லேசான - ஆனல், வேகமான - சில டாங்கிகள் இவை யெல்லாம் அவர்களிடம் இருந்தன. காலாள் வீரரை ஏற்றிச் செல்லும் பல மோட்டார் லாரிகளும் இருந்தன. ஒரு பீரங்கிப் படை கச்சன்காஸ் என்ற வண்டிகளுடன் எங்களைக் கடந்து சென்றபோது, இந்தத் தளவாடங்கள் எல்லாம் ருஷ்யாவில் செய்தவையே என்பது மிகத் தெளிவாய் விளங்கியது. ஸோவியத் உள்நாட்டுக் கலகங்களின்போது, முதல் முதலாக ருஷ்ய விவசாயப் பண்ணைகளின் வண்டி களிலே மெஷின்கன்களை ஏற்றி, ஸோவியத் கொரில்லாக்கள் உபயோகித்தார்கள். அந்த வண்டிகளுக்குத்தான் கச்சன்காஸ் என்று பெயர். இதே வண்டிகள் இப்போது உக்ரேனில் நாஜிகளை எதிர்த்து நிற்க, இரண்டாம் முறையாகப் பெருஞ் சேவை புரிந்திருக்கின்றன.

ஆனல், காட்சியின் சிகரமா யிருந்தது, அந்த ஸ்தலத் துக்கே உரிய ஒரு நிகழ்ச்சிதான். துவண்டு ஒல்லியான மங்கோலியரும் காஜக்குகளுமான பல டஜன் குதிரை வீரர்கள், தங்கள் குதிரையோடு குதிரையாய் ஒட்டியவர் களைப் போல ஜேணத்திலே உட்கார்ந்து, ஒருவர் பின் ஒருவராய்த் தொடர்ந்து, வரிசையா யிருந்த பல இடை யூறுகளை - சுமார் பதினைந்து இருக்கும் - விர் என்று தாண்டிச் சென்ருர்கள். அந்த இடையூறுகளில் ஒன்றே ஒன்று போதும் நம்மை மூச்சு முட்டச் செய்ய! அவர்களோ இரு புறமும் கூர்செய்த உடைவாளால் மரங்களை வெட்டி வீசினுர்கள்; பொம்மைத் தலை யொன்றைச் சீவி யெறிந் தார்கள்; தரையில் கிடந்த பொருள்களைப் பொறுக்கினுர்கள். அதிவேகமாய்ப் பாய்ந்தோடிய வண்ணமே இத்தனையும் செய்தார்கள். செங்கிஸ்கான் என்ருல் எதிரிகள் ஏன் குலைநடுங்கினுர்கள் என்ற காரணம், இவர்களைப் பார்த்த பின்பு நமக்கு எளிதில் புலனுகிறது.

தளபதி சியாங்-கே-ஷேக், தமக்கு மிக நெருங்கிய நண்பர்களிலும் மெய்காப்பாளரிலும் இருவர் மூலம், சம்பிரதாயப்படி ஒரு வரவேற்புச் செய்தியை டிஹ்வாவில் எனக்கு அனுப்பி யிருந்தார். அந்த இருவரும் சீனுவில் நான் இருந்த மீதிக் காலம் முழுவதும் என்னேடு கூடவே துணை வந்தார்கள். அவர்களில் ஒருவர் டாக்டர் ஹாலிங்டன் கே. டாங் என்பவர். இவர் உதவிப் பிரசார மந்திரி. மற்றவர் தளபதி சூஷாவோ-லியாங் என்பவர். இவர் வடமேற்கு யுத்த மண்டலத்தின் சேனுதிபதி. நான் சீனுவை விட்டு வெளி வருவதற்கு முன்பாக, அந்த இருவரிடமும் எனக்கு ஆழ்ந்த அன்பு ஏற்பட்டு விட்டது.

நான் சீனுவுக்குச் செல்லும் வழியிலேயே 'ஹாலி' டாங் அவர்களைப் பற்றி ஓர் அந்நியர் எனக்குச் சொல்லியிருந்தார். அந்த அந்நியருக்குச் சீனுவைப்பற்றி யிருந்த அறிவும் அன்பும் அபாரமானவை என்று தோன்றின. "ஹாலிடாங், தளபதி சியாங்கின் கூரான அம்புகளில் ஒன்று போன்றவர்; நாய் போல் விசுவாசமும் நாயின் பல்போல் சுத்தமும் உள்ளவர்" என்று அவர் வர்ணித்தார். மிஸௌரியில் உள்ள பார்க் காலேஜில் படித்துப் பட்டம் பெற்றவர் ஹாலிடாங். நியூ யார்க்கில் இருக்கும் கொலம்பியா பத்திரிகைத் தொழிற் கலாசாலையிலும் பயின்றிருக்கிருர். ஒரு சீனப் பத்திரிகையைச் சிறப்பாகப் பிரசுரித்து வந்திருக்கிருர். பின்பு தளபதியின் ஆப்தமான ஆலோசனையாளர்களில் ஒருவரானுர். மிக முக்கியமான ஒரு மந்திரி பதவியை நிர்வகித்தது மாத்திர மல்ல; தம் தலைவருக்குத் துபாஷியாகவும், காரியதரிசியாக வும், ஆலோசனை சொல்பவராகவும் சேவை புரிந்தார். அவரை நான் நன்ருய் அறிந்து கொண்டேன். எந்தப் பெரிய தலைவரும் தங்களுக்கு 'இவரைப் போன்ற மெய் காப்பாளர் அல்லவா வேண்டும்' என்று விரும்பத்தக்கவர் என்றே அவர் எனக்குத் தோன்றினுர்.

'ஹாலி' டாங், அற்புத வன்மையோடும், சுத்தமாகவும் ஆங்கிலம் பேசினுர். தளபதி சூ அப்படியில்லை; அவர் பேசிய ஒரு வார்த்தைகூட எனக்குப் புரியவில்லை. ஆனுல், இந்தக்

குறை அவரது வசீகரத்திலே மறைந்து விட்டது. அவர் மாதிரி வசீகர புருஷரை நான் அபூர்வமாய்த்தான் கண்டிருக்கிறேன். சீனுவில் நான் எந்த விருந்துக்கு உட்கார்ந் தாலும் சரி, எந்தப் பிரசங்கத்தைச் செய்து முடித்தாலும் சரி, எந்த மகாநாட்டிலிருந்து வெளியே புறப்பட்டாலும் சரி, நட்புக் கனிந்த வண்ணம் என்னைப் பார்த்துப் புன்முறுவல் செய்யும் அவர் முகத்தை, நான் காணத் தவறியதில்லை. அவர் மிகவும் சொற்பமாகவே பேசினுர். சீனுவை ஒன்றுபடுத்த, பூர்வ காலத்தில் தளபதி சியாங் மிகக் கடுமையாய்ப் போராடிய நாட்களிலே, அவருக்குத் துணை நின்று போரிட்ட வீரர் அவர். ஒரு சிறந்த வீரர் எவ்வளவு கண்ணியமாக நடந்து கொள்ளவேண்டும் என்று நாம் எதிர் பார்ப்போமோ அந்தக் கண்ணியத்துடனேயே அவர் நடந்து கொண்டார். ஆயினும், 'சீனு ஓர் அந்நிய நாடு; அதிசயமான பழக்க வழக்கங்கள் நிறைந்தது' என்று எனக்குத் தோன்ருமல், 'அது அன்பும் உபசரணையும் ததும்பும் நாடு; அமெரிக்காவுக்கு ஏராளமான நண்பர்கள் உள்ள நாடு' என்றே தோன்றும்படி செய்ய என்ன என்ன வேண்டுமோ அத்தனை வசதிகளையும் தம்மால் முடிந்தமட்டும் அவர் செய்து கொடுத்தார்.

இன்னொரு சீனரின் அன்பு நிரம்பிய நட்பையும் நான் மறக்க முடியாது. அவர் மாஸ்கோவிலிருந்தே எங்களோடு கூடப் பிரயாணம் செய்தார். மேஜர் ஹ்ஸு ஹுவான்-ஷெங் என்று அவர் பெயர். அவர் குபிஷேவில் உள்ள சீன ஸ்தானிகர் காரியாலயத்தில் ஓர் உதவி ராணுவ அதிகாரி. சீனுவுக்குள் நாங்கள் பறந்த சில விமானப் பிரயாணங்களில், எங்கள் விமானத்தை அவரே ஓட்டினுர். ஐக்கிய அமெரிக்கா, யுத்தத்தில் இறங்குவதற்கு முன்னே, 1938-ஆம் வருஷத் திலேய, இந்த வாலிபர் - இன்றும் பதினேழு வயது வாலிப ராகவே இவர் தோன்றுகிருர் - ஜப்பானுக்கு மேலே முதல் முதலாக விமானப் படையெடுப்பு நடத்தி, துண்டுப் பிரசுரங்களைச் சொரிந்து கீர்த்தி பெற்றுவிட்டார். இவர் எங்களோடு சீனுவுக்கு வந்ததால், நாங்கள் சியானுக்கு

அருகே போர்முனைக்குச் செல்லும் வழியில், தம் மனைவி மக்களை இவரால் சந்திக்க முடிந்தது. அதற்கு நான் களிப் படைகிறேன். ஆனால், நாங்கள் ஊருக்குத் திரும்பிய போது, தம் உத்தியோகத்தை மீண்டும் போய் ஏற்பதற்காக இவர் எங்களை ஸைபீரியாவில் பிரிந்து சென்றுவிட்டார். அப்போது எனக்கு வருத்தமாயிருந்தது.

அடுத்த நாள், செப்டம்பர் 29-ஆம் தேதி, காலையில் நாங்கள் லாஞ்சோவுக்குப் புறப்பட்டபோது, இந்த மனிதர்கள் எங்கள் விமானத்தில் இருந்தார்கள். லாஞ்சோ என்பது கன்ஸு மாகாணத்தின் தலைநகரம். ஐந்து மணி நேரம் நாங்கள் பறந்தோம். எங்கள் உலகச் சுற்றுப் பிரயாணத்திலேயே இந்தப் பிரயாணம் ஒரு விதத்தில் மிகச் சிறப்பு வாய்ந்தது. யுத்தத்தில் ஈடுபட்டிருக்கும் உலகத்திலே பறந்து செல்லும்போது, ஒவ்வொரு தங்கலுக்கும் பிறகு அடுத்த தங்கலைப்பற்றி அறிந்து கொள்ளச் சித்தமாவதிலும், கொஞ்சம் கண்ணுறங்குவதிலுந்தான் நாம் ஈடுபடுவோம்; இயற்கைக் காட்சிகளைக் கவனிப்பது இரண்டாம் பட்சமாய்த் தான் இருக்கும். ஆனால், டிஹ்வாவுக்கும் லாஞ்சோவுக்கும் இடையிலே காணும் இயற்கைக் காட்சி, என் ஆயுளிலேயே மகா அற்புதமான காட்சியாய்த் தோன்றியது. அந்தக் காட்சி, பாய் விரிவது போல் எங்களுக்குக் கீழே விரிந்த போது, நாங்கள் அடியோடு மனம் சொக்கியவர்களாக அதைப் பார்த்துக்கொண் டிருந்தோம்.

அது மகா அழகு; அழகிலே அதை வெல்ல வேறு எதனாலும் முடியாது. எங்கள் மார்க்கத்தில் கொஞ்ச தூரம் வனாந்தரம்; மற்றும் கொஞ்ச தூரம் விவசாயம் செய்த பசும் வெளி. எங்கும் ஒரே மலைகள். ஆனால், பனித் திரை மூடிய டீன் ஷான் மலைத்தொடர்களை நாங்கள் கடந்து சென்றபின் தென்பட்ட மலைகள், மிகவும் தாழ்ந்து, ஆச்சரியமாய்ச் செழித்திருந்தன. சில இடங்களில், மலை உச்சி வரையில் சீனர்கள் கட்டடங்கள் கட்டியிருந்தார்கள். கீழே தரை பிரம்மாண்டமான பில்லியர்ட்ஸ் மேஜை

மாதிரியும், அதன் மேலே ஒழுங்கிறந்த, விதம் விதமான, பச்சை ரத்தினக் கம்பளங்கள் விரித்தது போலும் இருந்தது.

நாங்கள் லாஞ்சோவைச் சமீபித்ததும், எங்களுக்குச் செம்மண் குன்றுகள் தென்பட்டன. பல நூற்றாண்டுகளாய், அந்தக் குன்றுகளிலே வீசும் காற்றும் ஓடும் நதிகளும், அதன் வண்டலை வாரிக்கொண்டு வருகின்றன. அந்த வண்டல், இப்போது வட சீனா எங்கும் பரவி யிருக்கிறது. வானத்திலிருந்து பார்க்கும்போது, இந்தக் குன்றுகள், நம்பவே முடியாத அவ்வளவு அழகாக இருக்கின்றன. 'தங்கள் நாட்டின் மேற்குப் பகுதியை அபிவிருத்தி செய்ய வேண்டுமென்று திட உறுதிகொண்டிருக்கும் ஒரு மக்களுக்கு, இந்தக் குன்றுகள் எவ்வளவு பெரும் செல்வமாகும்' என்ற எண்ணந்தான், இவற்றைக் கண்டதும் எனக்கு உண்டா யிற்று. பாய்ச்சலாதாரங்கள், மின்சார உற்பத்தி யந்திரங் கள், வளங்கொழிக்கும் நிலங்கள், மேய்ச்சல் தரைகள், அழகு ஒழுகும் நகரங்கள் ஆகிய எல்லாவற்றையுமே இந்தப் பிரதேசத்திலே படைத்துவிட முடியும். ஆனால், அவற்றை யெல்லாம் படைப்பதற்கு ஒன்றே ஒன்றுதான் இந்த நாட்டுக்குக் குறையா யிருப்பதாய்த் தோன்றியது. அது ஜனங்கள் இல்லாத குறைதான்.

நான் சில வார காலம் சீனாவில் இருந்தேன். அத்தனை காலமும், இந்த விமானப் பிரயாணத்தைப் பற்றி எவ்வளவு தடவை அடிக்கடி நினைத்தேன் என்பது எனக்கே தெரியாது. முதலாவதாக, இந்த வடமேற்குப் பிரதேசம், மனித சஞ்சாரமே இல்லாதிருந்தது. இதற்கும் ஜனநெருக்கம் மிகுந்து கொந்தளித்த தென் சீனாவுக்கும் எவ்வளவு பெரிய வேற்றுமை! இரண்டாவதாக, நான் சந்தித்த ஒவ்வொரு சீனத் தலைவரும் இந்த வடமேற்குப் பிரதேசத்தைப்பற்றிப் பேசினார்கள்; போக்குவரத்து, கூட்டுறவு, நவீன விஞ்ஞானம் ஆகிய சாதனங்களின் மூலம், இந்தப் பிரதேசத்தின் அளவிறந்த செல்வத்தை வெளிப்படுத்த இப்போது சீனா புரிந்துவரும் மகத்தான முயற்சியைப்பற்றியும் அவர்கள் கூறினார்கள். ஜப்பானை எதிர்த்துப் போரிடவும், சமாதானம்

ஏற்பட்டபின், வலிமையும் நவீனமும் கொண்டதாகத் தங்கள் ராஜ்யத்தை நிர்மாணம் செய்யவும், இந்தச் செல்வத்தைத்தான் மிக முக்கியமாய்ச் சீனர்கள் நம்பி யிருக்கிறார்கள்.

கடைசியாக - இதுதான் மிக முக்கியமானதுமாகும். டிஹ்வாவிலும் சரி, லாஞ்சோவிலும் சரி, இந்த இரண்டு நகரங்களுக்கும் இடையிலுள்ள கிராமாந்தரங்களிலும், சரி, நம் சொந்த மேற்கு அமெரிக்காவைப் பண்படுத்திய அந்த நாட்களில் அது எந்தவிதம் இருந்ததோ அந்த மாதிரி ஒரு சாயல் இருப்பதை நான் கண்டேன். ஜனங்களெல்லாம் நல்ல உயரம்; சாமர்த்தியசாலிகள். கும்பல் கும்பலாக ஜனங்கள் நடமாடும் செங்டு அல்லது சுங்கிங் தெருக்களில் நாங்கள் பார்த்த மக்களைவிட, இந்த ஜனங்கள் மிகவும் கட்டுமஸ்தா யிருந்தார்கள். சீனாவின் கடற்கரையில் பாதியும், பெரிய பெரிய கைத்தொழில் நகரங்கள் துறைமுகங்கள் அனைத்தும், செழிப்பும் வளமும் உள்ள பயிர் நிலங்களில் பெரும் பகுதியும், ஜப்பானியரின் கைக்குப் போய்விட்டன; ஆகவே, இப்போது தங்கள் மேற்குப் பிரதேசத்தை அபிவிருத்தி செய்து கொள்வதல்லாமல், சீனர்களுக்கு வேறு வழியில்லை. என்றாலும், இந்தப் பிரதேசத்தில் முன்னோடி களாக வேலை செய்யும் சீனர்களிடம், 'சீச்சீ இந்தப் பழம் புளிக்கும்' என்ற மனோபாவத்தைக் காணவில்லை. அது எனக்குச் சந்தோஷம் அளித்தது. இது மாத்திரமல்ல; அவர்கள் பரம உற்சாகமாக, கொஞ்சம் ஜம்பமாகக்கூட, பேசுகிறார்கள்; பெரிதும் என் தந்தை காலத்து அமெரிக்கர் களைப் போலவே யிருக்கிறார்கள்.

லாஞ்சோவில், சீனாவின் கூட்டுறவுத் தொழிற்சாலைகளைப் போய்ப் பார்த்தேன். அமைதியும் அந்தரங்க சுத்தியும் உள்ள ரெவி ஆலி என்பவரை, நான் அங்கே கண்டேன். அவர் நியூஜீலந்துக்காரர். 'இண்டஸ்-கோ' (தொழில் கூட்டுறவு) என்ற வார்த்தையை, சர்வ தேசங்களிலும் பரவச் செய் தவர். தங்கள் முயற்சியாலேயே உயர்ந்தெழத் தீர்மானங் கொண்ட ஒரு தேசத்து மக்கள் என்ன சாதிக்க முடியும்

என்பதற்கு ஒரு சின்னமாக, அந்த வார்த்தை விளங்கும் படியும் செய்து விட்டவர். ஆலியை நான் பார்த்தபோது, அவருக்குப் பல சிரமங்கள் இருந்தன. இன்றும் அந்தச் சிரமங்கள் அவருக்கு இருந்து கொண்டுதான் இருக்கின்றன என்றே நான் ஊகிக்கிறேன். ஆயினும், அவரும், வடமேற்குச் சீன மாகாணங்களில் நான் கண்ட தொழிற் கூட்டுறவு இயக்கத்தினரும், ஆசியாவின் ஹ்ருதய ஸ்தானத்தையே அபிவிருத்தி செய்துவருகிறார்கள்; இதன் மூலம் அவர்கள், உலகத்தின் பொருளாதார ரீதியான பூகோள அமைப்பிலேயே பிரமாதமான மாறுதலை உண்டாக்கி வருகிறார்கள் என்பதில் மட்டும் எனக்குச் சந்தேகமில்லை.

படையெடுத்திருக்கும் ஜப்பானியரை எதிர்த்துச் சீன ராணுவம் புரியும் போரைப்பற்றி, அமெரிக்காவில் சொற்பமாகவே எழுதுகிறார்கள். சீனுக்காரர்கள் இப்போது தலையிட்டிருக்கும் இந்தப் பொருளாதாரப் போராட்டத்தைப் பற்றியோ, அமெரிக்காவில் அதைவிடச் சொற்பமாக எழுதுகிறார்கள். ஆனால், இந்தப் பொருளாதாரப் போராட்டம், வீரத்திலே ராணுவப் போராட்டத்துக்கு எந்த விதத்திலும் இளைத்ததல்ல. நான் பார்த்த ஒவ்வொரு விஷயமும், இதை எனக்கு வலியுறுத்தியது. எதிரியின் படைகள் நமது அமெரிக்காவுக்கு வந்து, கடற்கரை நகரங்களைக் குண்டு சொரிந்து தகர்த்து விடுமானால், அமெரிக்கர்களாகிய நாம், பிரம்மாண்டமான நம் உள் நாட்டுக்குப் பின்வாங்கிச் சென்று, அங்குள்ள யந்திரங்களையும் யந்திரத் தொழிலில் வல்ல தொழிலாளரையும் கொண்டு, பின்னும் போரிட்டு வரலாம். ஆனால், சீனுவின் விசாலமான உள் நாட்டிலே, அத்தகைய வசதி எதுவும் கிடையாது. சீனர்கள் தங்கள் தொழிற்சாலைகளையும் தங்களோடு கூடவே உள்நாட்டுக்குத் தூக்கிச் செல்லவேண்டி யிருக்கிறது. சுமை தாங்கும் கார்களிலோ, லாரிகளிலோ, வெறும் வண்டிகளிலோகூட அல்ல; மனிதர்கள் தங்கள் முதுகிலேதான் துண்டு துண்டாக ஒவ்வொரு பாரத்தையும், அவ்விதம் தூக்கிச்செல்ல வேண்டும். மகத்தான நதிகளின் பள்ளத்தாக்குகள்

வழியேயும், மலைத் தொடர்களுக்குக் குறுக்கேயும், அவற்றை அவர்கள் இவ்விதம் தூக்கிச் சென்றிருக்கிறார்கள்.

வெகு தூரத்துக்கப்பால் உள்ள திடல் வெளிகளிலே அவர்கள் அவற்றைக் கொண்டுபோய் வைத்துப் பூட்டுகிறார்கள். யந்திரங்கள் கிறுகிறுக்கும் சத்தத்தை, ஒரு நாளும் கேட்டேயிராத இடங்கள் அவை. இப்படி இடத்துக்கு இடம் மாற்றக்கூடிய தொழிற்சாலைகள் மிகவும் சிலதாம் இருக்கின்றன. இவற்றிலிருந்து, ஆயிரத்துக்கு மேற்பட்ட தொழில் ஸ்தாபனங்கள் இப்போது மலர்ந்திருக்கின்றன. அவற்றில் பெரும்பாலானவையும் சிறு சிறு ஸ்தாபனங்களே. அவற்றின் உற்பத்தியும் ஒரு வரம்புக்குட்பட்டே யிருக்கிறது. ஆயினும், புதிய சீனாவின் அமைப்புக்கு, தன்னால் இயன்ற சிறிது பங்கை, அவற்றில் ஒவ்வொன்றும் செலுத்தி வருகிறது.

ஸ்பஷ்டமாய் விளங்கும் ஓர் அபாய அறிகுறியை, அமெரிக்கர்களாகிய நாம் நன்றாய்ப் புரிந்துகொள்ள முடியும். புதிய சீனாவின் இந்த அபிவிருத்திக்கு, நவீனகால சரிதத்திலேயே ஒப்புமை சொல்லக்கூடிய சம்பவம், நமது மேற்குப் பிரதேசத்தை நாம் அபிவிருத்தி செய்த வரலாறுதான். இந்த ஜனங்கள் என்ன பாடு படுகிறார்கள் என்பது நமக்குத் தெரியும். அவர்கள் என்ன நம்பிக்கை கொண்டிருக்கிறார்கள் என்பது நமக்குத் தெரியும். அந்த நம்பிக்கையின் பூர்த்தி என்னவா யிருக்கும் என்பதும் ஓரளவு நமக்குத் தெரியும். நாம் நம் நாட்டை எவ்விதம் அபிவிருத்தி செய்தோமோ அவ்விதந்தான், புதிய சீனாவின் தலைவர்களும் தங்கள் நாட்டின் பொருளாதார அபிவிருத்தியைச் செய்ய நோக்கங் கொண்டிருக்கிறார்கள். ஒரு கைத்தொழில் அஸ்திவாரத்தை சிருஷ்டித்து, அதன் மூலம் தங்கள் மக்களின் வாழ்க்கை அந்தஸ்தை உயர்த்த, அவர்கள் விரும்புகிறார்கள். சீனாவைக் கைத்தொழில் மயமாக்கும் முயற்சியை ஒரு தடவை ஆரம்பம் மாத்திரம் செய்து வைத்துவிட்டால், பிறகு அது நம் நாட்டை விட வேகமாய் நடைபெறும் என்றே பல நிபுணர்கள் கருதுகிறார்கள். யந்திர நுட்பங்கள் மிகவும்

முற்போக்கடைந்திருக்கும் காலத்திலே, புதிய சீனு தன் வேலையைத் தொடங்குகிறது. ரெயில் எஞ்சின் கொஞ்சம் கொஞ்சமாய் அபிவிருத்தி யடைந்து வருவதற்காக, நாம் காத்திருக்க வேண்டியிருந்தது. சீன மக்களோ, மணிக்கு முந்நூறு மைல் வேகத்தில் பறக்கும் விமான காலத்தில் வேலே தொடங்குகிறுர்கள்.

ஆயினும், இது வரையில், அவர்களிடம் விமானங்களும் இல்லை; ரெயில் எஞ்சின்களும் இல்லை. புதிய சீனுவுக்கு, தரை மார்க்கமாக ஒரே ஒரு பாதைதான் உண்டு. அது ருஷ்யாவி லிருந்து வரும் ஒரு பெரிய ரஸ்தா. அந்த ரஸ்தா, லாஞ் சோவில் வந்து முடிவதை, நான் பார்த்தேன். ஜப்பானுடன் போர் தொடங்கி ஐந்து வருஷங்கள் ஆகின்றன. இன்னமும் சீன மக்கள் மிகுந்த வீரதீரத்தோடு சண்டையிட்டு வருகிறுர் கள். இதுபற்றிச் சீனு சென்றவர்கள் வந்து சொல்லும் மிகச் சில கதைகளும் வெறும் விளம்பரத் தந்திரங்களா யிருக் குமோ என்று பல அமெரிக்கர் சந்தேகிக்கிறுர்கள். அந்த அமெரிக்கர் ஒவ்வொருவரும் சீனுவை நேரில் போய்ப் பார்த்து வர வேண்டும் என்று, நான் ஆசைப்படுகிறேன்.

நாங்கள் அல்மா-ஆட்டாவுக்குக் கிழக்கே ஸோவியத் எல்லையைக் கடந்தது முதல், இந்த ருஷ்ய ரஸ்தாவுக்கு மேலே பல இடங்களில் பறந்து சென்றேம். அல்மா-ஆட்டா பெரிய நகரம். ஸைபீரியா, ஸோவியத் மத்திய ஆசியா, ருஷ்யா இந்த மூன்றேடும் ரெயில் பாதைகள் மூலமும் விமான மார்க் கங்கள் மூலமும் அல்மா-ஆட்டா இணைந்திருக்கிறது. அவற் றின் கைத்தொழில் பண்டங்களும் மூலப் பொருள்களும் இதற்குக் கிடைக்கின்றன. அல்மா-ஆட்டாவிலிருந்து, பார மான லாரிகள் புறப்பட்டு, கிழக்கு நோக்கி, கரடு முரடான ஒரு ரஸ்தாவில், டிஹ்வா, ஹாமி முதலியவற்றின் வழியாக, கன்ஸு மாகாணத்தின் மேற்குக் கோடி வரைக்கும் செல்லு கின்றன. அந்த லாரிகளுக்கு மேலே நாங்கள் பறந்தோம். அவை இந்த புராதனமான பாதையில், ஓடுவது மிகவும் முர ணுகத் தோன்றியது; ஆயினும், மிகவும் சரியான வண்டிகள்

என்றும் தோன்றியது. இந்த மிருதுவான பாதை, ஒரு வேளை சரித்திரத்திலேயே மிகப் பழமையானதாக இருக்கலாம். புராதன காதே என்னும் இடத்துக்கு மார்கோ போலோ சென்றதும் இந்த மார்க்கமாகவே யிருக்கலாம்.

இந்த ரஸ்தாவின் சீனப் பகுதியில், ரஸ்தாவுக்கு அஸ்தி வாரமே கிடையாது; பெட்ரோல் கிடையாது; லாரிகளும் இல்லை. இந்தப் பாதையின் சரித்திர ஐதிகங்களுக்கு மிகவும் பொருத்தமானது, ரஸ்தாவின் சீனப் பகுதிதான். அங்கே லாரிகளுக்குப் பதிலாக, வண்டிகளையும் ஒட்டகங்களையும் கூலிகளையும் சீனர்கள் உபயோகிக்கிறார்கள். ஸோவியத்தில் ஏறும் சுமைகள், நான்கே நாளில் கன்ஸு எல்லைக்கு வந்து சேர்ந்துவிடுகின்றன. ஆனால், அங்கிருந்து அவை லாஞ்சோ போய்ச் சேர, மேலும் எழுபது நாள் ஆகிறது. அங்கும் அவை ஒரு ரெயில் பாதையைப் போய் அடையவில்லை. மேலும் பல நாட்கள் கற்பனையிலும் நினைக்க முடியாத பழம் பசலியான போக்குவரத்துச் சாதனங்களின் மூலம், காடு மலைகளை யெல்லாம் கடந்து சென்று, சீனாவின் ஜன நெருக்கம் மிகுந்த பிர தேசங்களில் போய்ச் சேருகின்றன. அங்கே உள்ள ஜனங் களுக்குத்தாம் அவை அத்தியாவசியத் தேவை,

லாஞ்சோவுக்குப் புறம்பே, விமான நிலையத்துக்கும் நக ருக்கும் இடையிலே, சாரி சாரியாகப் பல வண்டிகள், ருஷ்யா இருக்கும் திசையை நோக்கித் திரும்பி நின்றுகொண் டிருப் பதை நாங்கள் கண்டோம். கோவேறு கழுதை பூட்டிய சிறிய இரண்டு சக்கர வண்டிகள், பல நின்றன. சக்கரங்களுக்கு ரப்பர் டயர் போடப்பட்டிருந்தது. ரப்பர் ஞாபகம் நிறைந்த என் கண்ணுக்குக் கூட, அது ஆச்சரியமாகவே யிருந்தது. அந்த வண்டிகள் நிறைய, கம்பளமும் உப்பும் தேயிலையும் குவிந்திருந்தன. கோவேறு கழுதைகளெல்லாம் ஒரே வரிசை யாக மிக்க பொறுமையோடு நின்றுகொண் டிருந்தன. அது பல மைல் தூர மிருக்கும். அந்தக் கழுதைகளுக்குப் பக்கத் திலே, புறப்படும் உத்தரவை எதிர்பார்த்துக்கொண்டு, கூலி கள் நின்றார்கள். தங்கள் சுமையைக் கொண்டுபோய்க் கொடுத்துவிட்டு, அதற்குப் பதிலாக ஸோவியத் யூனியனின்

பெட்ரோல், விமான பார்ட்டுகள், எஞ்சின்கள், வெடி மருந்து ஆகிய சரக்குகளை மாற்றிக்கொள்ளு முன்பாக, இவர்கள் இரண்டு மாத காலம் மெல்ல மெல்ல மேற்கே பிரயாணம் செய்ய வேண்டும் என்று, நான் கேள்விப்பட்டேன். இந்தச் சரக்குகளை யெல்லாம், சீனுவுக்கு இன்னமும் ஸோவியத் யூனியன் அனுப்பிக்கொண்டே வருகிறது; இதில் பெரும் பகுதி கடனுகத்தான். அந்தக் கடன் தொகை இப்போது திடுக்கிடத் தக்க பெரும் அளவை எட்டிவிட்டது.

குருவியின் தலையில் பனம் பழத்தை வைப்பதுபோல், மித மிஞ்சிய பாரம் அந்த ரஸ்தாவிலே செல்கிறது. குருவி யின் தலை முறிந்தால், நம் அத்தனை பேருக்குமே நஷ்டமாகும். அந்த ரஸ்தாவில் பிரயாணம் செய்யும் போக்குவரத்தின் புள்ளி விவரம், உத்தியோக ரீதியில் எனக்குக் கிடைக்க வில்லை. ஆனல், இந்த ஆயிரத்துத் தொளாயிரம் மைல் பாதை வழியாக, ஒவ்வொரு மாதமும் இரண்டாயிரம் டன் களுக்கு மேல் நிறையுள்ள பண்டங்கள் சீனுவுக்கு வந்து சேரு கின்றனவாம். இது லாஞ்சோவிலுள்ள அமெரிக்கர்கள் போடும் மதிப்பு. பர்மா ரஸ்தாவின் சக்திக்கு இது மிகவும் குறைவு. அந்த ரஸ்தாவையோ, ஜப்பானியர் துண்டித்து விட்டார்கள். ஆனல், இந்தியாவிலிருந்து, சில அமெரிக்க விமானங்கள் மட்டும் ஹிமாலய மலைக்கு மேலே பறந்து, ஜப்பானியரின் போர்முனை முழுவதையும் ஏமாற்றிச் சில பண்டங்களைச் சீனுவுக்குள் கொண்டுபோய்ச் சேர்க்கின்றன. இந்த விமானங்களை அல்லாமல், அந்த ருஷ்ய ரஸ்தா ஒன்று தான், சீனுவை வெளி உலகத்தோடு இணைக்கும் ஒரே மார்க்கம்.

லாஞ்சோ, மஞ்சள் நதிக் கரையிலே இருக்கிறது. துங்கு வானைவிட, அதன் உற்பத்தி ஸ்தானத்துக்கு மிக அருகே யிருப்பது லாஞ்சோ. ஒன்று அல்லது இரண்டு வாரத்துக்குப் பிறகு, துங்குவானில் இந்த நதிக்கு மறு கரையில் ஜப்பானி யர் கூடாரம் அடித்திருப்பதை நாங்கள் பார்த்தோம். லாஞ் சோவின் ஜனத்தொகை சுமார் ஐந்துலட்ச மிருக்கும். அதற்கு ரெயில் பாதை கிடையாது; ஆறு வருஷத்துக்கு முந்

திய முக்கியமான தொழிற்சாலை எதுவும் கிடையாது. ஆனால், வருங்காலத்தில் மகத்தான நம்பிக்கைக்கு இடமிருக்கிறது. இது எதன் தலைநகரமோ அந்தக் கன்ஸூ மாகாணம், இயற்கைச் செல்வம் நிறைந்தது. பிரமாதமான அபிவிருத்திகளுக்கு அதில் இட மிருக்கிறது.

லாஞ்சோவில்தான் தம்முடைய மனைவியைப் பார்க்க, தளபதி என்னைத் தமது வீட்டுக்கு அழைத்துச் சென்றார். நகரையும் அதற்கப்பாலுள்ள ஆற்றையும் குனிந்து பார்ப்பது போல் நகருக்கு வெளியே நின்றுகொண்டிருக்கும் ஒரு குன்றின் மேல், நாங்கள் ஏறினோம். குன்றின் உச்சிக்கருகே ஒரு சீனக் கோயில் இருக்கிறது. சீனாவின் வடமேற்கு மாகாணங்களான ஷென்ஸி, கன்ஸூ, நிங்ஸியா, சிங்கே, சிங்கியாங் ஆகிய ஐந்தின் சேனைகளுக்கும் தலைவரான சேனாதிபதியின் தலைமைக் காரியாலயம் இந்தக் கோயிலிலேதான் இருக்கிறது. இங்கே நாங்கள் அமர்ந்து, தளபதி சூ தம்பதிகளோடு தேநீர் குடித்து, பிரம்மாண்டமான ஒரு பணியாரமும் தின்றோம். தளபதியின் காரியாலயப் பால்கனியிலிருந்து வெளியே பார்த்தால் கோயில் கட்டடங்களின் கூரைகளும், நகரமும், இரண்டாயிரம் வருஷங்களாய்க் கன்ஸூ நிலத்தைச் செழிப்பாக்கி வரும் ஆறும், அதன் பாய்ச்சலாதாரங்களும் தெரியும்.

அன்றிரவு, எங்களுக்கு மற்றொரு விருந்து நடந்தது. கன்ஸூ கவர்னர் கு செங்-லுங், அதை அளித்தார். உத்தியோகஸ்தர்களின் தர்ம சாதனச் சங்க விடுதியில், அது நடைபெற்றது. அங்கேதான் அன்றிரவு நாங்கள் தங்கி யிருந்தோம். எங்கள் விருந்தின் கர்த்தாவைத் தவிர வேறு பல பிரமுகர்களும் விருந்தில் பிரசன்னமாயிருந்தார்கள். போக்குவரத்து-ஸப்ளை மந்திரியான தளபதி யூ பீ. பெங், விவசாய மந்திரி அட்மிரல் ஷென் ஹுங்-லீ ஆகியவரும் வந்திருந்தார்கள். மாகாணத்தின் வன பரிபாலனம், விவசாயம், நீர் நிலைகளின் பாதுகாப்பு ஆகிய பிரச்னைகளையும் இளம் பருவத்திலிருக்கும் அதன் ஆலைத் தொழில்களையும் பற்றி அவர்கள் பேசினார்கள். அந்த ஆலைத் தொழில்களில் சிலவற்றை

அடுத்த நாள் காலையில் நான் பார்த்தேன். அவற்றில், கம்பளித் தொழிற்சாலை ஒன்றும் இருந்தது. சீனுவின் யுத்தகாலத் தலைநகரான சுங்கிங்குக்கு இன்னும் சில நாள் கழித்துத்தான் நான் போய்ச் சேர்ந்தேன். என்றாலும், ஜப்பானியரை எதிர்த்துப் பேராட, இந்த அற்புதமான நாடு எங்கிருந்து தன் சக்தியைப் பெறுகிறதோ அந்த மூல பலத்தை நான் இப்போதே அறிந்துகொள்ளத் தொடங்கிவிட்டேன்.

---

# 8. சுதந்தரச் சீனு எதைக் கொண்டு போராடுகிறது?

லாஞ்சோவிலிருந்து தெற்கே செங்டுவுக்கும், பின்பு மலைகளுக்கு மேலே பாய்ந்து சீனத் தலைநகரான சுங்கிங்குக்கும், நாங்கள் பறந்து சென்றோம். சீனுவிலிருந்து ஊருக்குத் திரும்பும் வழியில், சியானுக்கு வடக்கே பறந்து சென்று, மீண்டும் செங்டுவுக்குப் பின்வாங்கி, வட சீனுவிலிருந்தும் கோபியிலிருந்தும் ஸைபீரியாவுக்கு நீண்ட பிரயாணம் செய்தோம். ஷெச்வான், யுன்னன் இரண்டிலும் அமெரிக்க ராணுவத் தலைமை ஸ்தலங்களுக்கும் ராணுவ முகாம்களுக்கும் சிறு சிறு விமானப் பிரயாணங்கள் செய்ததன் மூலம், சுதந்தரச் சீனுவில் பல இடங்களை நாங்கள் பார்த்தோம். அவையெல்லாம் ஜப்பானியரின் சில விமான குண்டுகளுக்கு ஆளானதைத் தவிர, மற்றபடி அவர்களின் கைபடாமலே இன்னமும் இருந்து வருகின்றன.

இவை மொத்தம் பத்து மாகாணங்கள். வடமேற்கே ஐந்து, தென் மேற்கே ஐந்து. வடமேற்கிலே, நாங்கள் சீனுவின் வருங்காலத்தைக் கண்டோம். தென் மேற்கிலே, முக்கியமாக ஷெச்வான் மாகாணத்தில்-செங்டுவிலும் சுங்கிங்கிலும் - சீனுவின் நிகழ்காலத்துச் சிறப்பைக் கண்டோம்.

இங்கே நமது மனத்தைப்பலமாகக்கவர்வது மண் அல்ல; மனிதர்கள் தாம். இங்கே மனித சக்தி வற்றாத பொக்கிஷமா யிருக்கிறது. அதைப் பூர்ணமாய் அளவிட்டறிய, எவராலும் இயலாது. சீனாவை அறிந்த பலர் இருக்கிறார்கள். ஆனால், 1937-ஆம் வருஷத்துக்குப் பின் அங்கே அவர்கள் சென்ற தில்லை. சீனாவை ஜயிக்க முயன்று ஜப்பான் இப்போது நடத்தி வரும் யுத்தம், அந்த வருஷத்தில்தான் ஆரம்பித் தது. இதில் சீனர்கள் காட்டும் ஜீவத் துடிப்பு, சாமர்த்தியம், தீரம், சுதந்தர பக்தி ஆகிய குணங்களெல்லாம் தங்களுக்குப் பரம ஆச்சரியமா யிருப்பதாக, அவர்கள் என்னிடம் சொல் கிறார்கள்.

சீனாவின் பஞ்சாலைகளையும் வெடி மருந்துத் தொழிற் சாலைகளையும் மண் பாண்டச் சாலைகளையும் சிமிண்ட் ஆலை களையும், நான் போய்ப் பார்த்தேன். அவற்றின் நிர்வாகி களோடும் நூற்றுக் கணக்கான தொழிலாளரோடும், பல மணி நேரம் பேசினேன். இதன் பிறகுதான், நவீன ஆலைத் தொழில் முறைகளில் சீனரின் திறமை எவ்வளவு சாமர்த் தியமாகவும் சுலபமாகவும் ஈடுபடுகிறது என்பதை, நான் உண்மையிலே பாராட்டத் தொடங்கினேன். சில சீனக் கல் லூரிப் பேராசிரியர்களுடனும் கலாசாலை உபாத்தியாயர் களுடனும், நான் சம்பாஷித்தேன். அப்போதுதான், சீனர் களின் விழிப்பு என்று பொதுப்படையாகச் சொல்லு கிறார்களே அதை, நான் பிரத்யட்சமாய் அறிந்துகொண் டேன். பழமையை உதறித் தள்ள வேண்டுமென்ற ஓர் ஆத் திரம், இந்தப் பேராசிரியர்களிடமும் உபாத்தியாயர்களிட மும் இருக்கிறது. அந்த ஆத்திரத்தின் பயனாகத்தான், புதிய சீனா சில வருஷங்களுக்குள்ளேயே, முன்பு சிலருக்கு மட்டும் உரிமையா யிருந்த கல்வியைச் சகல மக்களுக்கும் உரிய பொது உடைமை ஆக்கிவிட்டது. ஏறக்குறையப் பத்துக் கோடி சீனர்களுக்கு இப்போது எழுதப் படிக்கத் தெரியும். கல்லூரிப் படிப்பு இப்போது வெறும் புலமையை மட்டும் அளவுகோலாகக் கொள்ளவில்லை. சீனாவின் புராதன ஞானச் செல்வத்தை யெல்லாம், இன்றைய சீனப் பண்டிதர்கள்,

நவீன நாகரிக வாழ்வுபற்றிய பிரச்னைகளுக்குப் பிரயோகம் செய்கிறார்கள். அவர்கள் துறவு ஆசிரமத்தை இப்போது தேடவில்லை. தாங்கள் வாழும் சமூகத்தையும் ராஜ்யத்தையும் எப்படி மேன்மைப் படுத்துவது என்ற சேவையிலே தான் இன்று அவர்கள் கடுமையாய்ப் போட்டியிடுகிறார்கள்.

செங்டுவில் இருக்கும் எட்டுச் சர்வகலாசாலைகளின் தலைவர்களைச் சந்தித்து, அவர்களைக் கேள்விகளும் கேட்டேன். அவற்றில் ஆறு சர்வகலாசாலைகளின் இலாக்காக்கள், ஜப்பானியர் பிடித்த பிரதேசங்களிலிருந்து தப்பியோடி வந்தவை. இங்கே மாணவர்களுக்கு வாச வசதியுள்ளவையாக இருக்கும் இரண்டே சர்வகலாசாலைகளின் கட்டடங்கள், புத்தகசாலைகள், விஞ்ஞான ஆராய்ச்சிக் கூடங்கள் ஆகிய வசதிகளையே, அந்த ஆறும் முறை போட்டுக்கொண்டு உபயோகித்துக் கொள்கின்றன. இந்தக் கட்டடம், புத்தகசாலை, ஆராய்ச்சிக்கூடம் ஆகியவற்றுக்கெல்லாம், இப்போது ஒரு நாளில் இருபத்து நான்கு மணி நேரமும் ஓய்ச்சல் ஒழிவு கிடையாது.

இந்தச் சர்வகலாசாலைகளைச் சேர்ந்த பதினாயிரம் மாணவர்களுக்கு, ஒரு நாள் காலையில் நான் பிரசங்கம் செய்தேன். மனங்கவரும் அந்தக் காட்சியை, நான் ஒருகாலும் மறக்க மாட்டேன். சுதந்தரத்தைப் பற்றி நான் குறிப்பிட்ட ஒவ்வொரு தடவையும், தொண்டையெட்டிய மட்டில் உரத்த குரலோடு அவர்கள் சந்தோஷ ஆரவாரம் செய்தார்கள். சீன விவசாயிகள், கூலிகள் ஆகியவர்களின் குழந்தைகளுக்கு, சீன சரித்திரத்திலேயே இப்போதுதான் முதல் முதலாகக் கல்வி கற்கும் வாய்ப்புக் கிடைத்திருக்கிறது. அந்தக் குழந்தைகளுக்காகச் சிறு சிறு கலாசாலைகளை ஏற்படுத்தியுள்ள பற்பல மனிதர்களை, சீனாவெங்கும் நான் கண்டு பேசினேன்.

இன்று சுதந்தரச் சீனாவாக இருக்கும் பிரதேசத்தில், பத்து வருஷங்களுக்கு முன்னே நூறு பத்திரிகைகள்தாம் இருந்தன. இப்போதோ, ஆயிரம் பத்திரிகைகள் இருக்கின்றன. அவற்றின் தலையங்கங்களை எனக்கு மொழிபெயர்த்துச் சொன்னார்கள். அவை மிக விறுவிறுப்பாகவும் வேகம் நிறைந்

தும் இருந்தன. செய்திகளைத் திரட்டி வழங்குவதற்காக, சீன ஸெண்ட்ரல் நியூஸ் ஏஜென்ஸி என்ற ஒரு செய்தி ஸ்தாபனம் இருக்கிறது. அது செய்திகளைச் சேகரித்து வழங்கும் தொழில் முறைகள், நம் அமெரிக்கச் செய்தி ஸ்தாபனங்களுக்கும் ராய்ட்டருக்கும் ஒப்பாகவே யிருக்கின்றன.

மாலையில் சிறிது நேரங் கழித்தே, நான் சுங்கிங் போய்ச் சேர்ந்தேன். நகருக்குச் சில மைல் தூரத்தில் உள்ள ஒரு விமான நிலையத்தில் போய் இறங்கினேன். எங்கள் மோட்டார்க் கார்கள், நகருக்குள் போய்ச் சேர வெகு தூரத்திலேயே, பெரும் வழிகளின் இரண்டு பக்கங்களிலும் அணி யணியாய் ஜனங்கள் நின்று கொண்டிருந்தார்கள். நகரின் நடு மத்திக்கு நாங்கள் போய்ச் சேரு முன்பாக, ஐந்தடியிலும் கடை வாசலுக்குக் கடை வாசலிலும் ஏராளமான ஜனங்கள் நெருக்கி இடித்துக்கொண்டு நின்றூர்கள். ஆண்கள், பெண்கள், இளைஞர்கள், யுவதிகள், தாடி வளர்ந்த கிழவர்கள், மிருதுவான கம்பளித் தொப்பி தரித்தவர்கள், பட்டுக் குல்லாய் அணிந்தவர்கள், கூலிகள், போர்ட்டர்கள், மாணவர்கள், குழந்தைக்குப் பாலூட்டும் தாய்மார்கள், நன்றாய் உடுத்தவர்கள், எளிய உடுப்பணிந்தவர்கள் - இப்படிப் பல வகைப்பட்டவரும், எங்கள் கார்கள் சென்ற பதினொரு மைல் தூரமும் வழியெங்கும் நிறைந்திருந்தார்கள். நாங்கள் தங்க வேண்டிய விருந்தினர் விடுதிக்கு, இந்த வழியிலே எங்கள் கார்கள் மெல்ல மெல்ல ஊர்ந்து செல்ல வேண்டியதாயிற்று. யாங்ட்ஸி நதியின் மறு கரையிலும் அவர்கள் நின்று காத்துக் கொண்டிருந்தார்கள்; உலகிலேயே மிக அதிகமான குன்றுகள் உள்ள நகரம் சுங்கிங்தான். அந்தக் குன்றுகள் மீதும் அவர்கள் நின்றுகொண்டு புன்சிரிப்புப் பூத்துச் சந்தோஷ ஆரவாரம் செய்து, காகிதத்தால் செய்த சின்னஞ் சிறு அமெரிக்கக் கொடிகளையும் சீனக் கொடிகளையும் அசைத்துக் கொண்டிருந்தார்கள்.

அமெரிக்க ஜனாதிபதி பதவிக்குப் போட்டியிட்ட எந்த மனிதனுக்கும், ஜனக்கூட்டங்களைக் கண்டு பழக்கம் இருக்கும். ஆயினும், இந்த மாதிரி கூட்டத்தை அவன் கண்டிருக்க

முடியாது. இதைக் குறைத்து மதிப்பிட, என் மனத்துக்குள் நானும் எவ்வளவோ முயன்று பார்த்தேன்; முடியவில்லை. ஜனங்கள் அசைத்துக்கொண்டிருந்த அத்தனை காகிதக் கொடிகளும் ஒரே அளவாக இருந்தன. அதிலிருந்து, உபசரணையும் கற்பனையும் மிகுந்த சுங்கிங் மேயர் டாக்டர் கே. ஸி. வு அவர்கள்தாம் இந்த வரவேற்புக் கூட்டத்துக்குக் காரணமோ என்று தோன்றியது. இந்த ஜனங்களில் அநேகர் வெறுங் காலோடும் கந்தல் உடுத்தும் நின்றுகொண்டிருந் தார்கள். ஆகவே, இவர்கள் அனைவருக்கும் நான் யார் என்றோ அங்கே ஏன் வந்திருக்கிறேன் என்றோ தெளிவாய்த் தெரியாதென்பது வெள்ளிடை. ஒவ்வொரு தெருக் கோடி யிலும் பட்டாசுகள் சுட்டுக்கொண் டிருந்தார்கள். இது சீனர்களின் புராதனப் பழக்கம் போலிருக்கிறது என்று எனக்குள் நானே சொல்லிக்கொண்டேன்.

இப்படி யெல்லாம் நான் அந்த ஜனக்கூட்டத்தைக் குறைத்து மதிப்பிட்டாலும், அந்தக் காட்சி என் மனத்தை ஆழமாய் உருக்கிவிட்டது. நான் கண்ட முகங்களிலே வெளி வேஷமோ பாசாங்கோ சிறிதும் காணவில்லை. அமெரிக் காவின் ஒரு பிரதிநிதி என்றே-நட்புக்கும் வரப்போகிற உதவிக்கும் திட்டமான ஓர் அடையாளமாகவே-என்னை அவர்கள் கண்டார்கள். மக்களெல்லாம் கூடித் தங்கள் நல்லெண்ணத்தைக் காட்டிய ஒரு வரவேற்பு அந்தக் கூட்டம். ஜனங்களின் எண்ணிக்கையும் உணர்ச்சியுமே சினுவின் மகத்தான தேசியச் செல்வம் ஆகும். அந்த எளிய பலத்தை, மனங் கவரும் விதமாக, அந்தக் காட்சி நிரூபித்துக் காட்டிவிட்டது.

வடமேற்கே வெகு தூரத்தில் உள்ள லாஞ்சோவுக்குப் போய்ச் சேர்ந்தபோதும், இதே மாதிரி ஒரு ஜனக் கூட்டத்தை, இதற்கு முன் நான் கண்டேன். ஆனால், அது இதை விடச் சற்றுச் சிறியது. பின்னல், ஷென்ஸியின் தலைநகரான சியானிலும், மற்றொரு கூட்டத்தைக் கண்டேன். அதுவும் வேறெதையும் போலவே மிக அதிகமாய் என் மனத்தைக் கவர்ந்தது. அங்கே ஜனங்கள், கொட்டும்

மழையிலே பல மணி நேரம் எனக்காகக் காத்துக்கொண்டு நின்ருர்கள். ஏனென்ருல், அங்கே எங்கள் விமானம் சிறிது தாமதமாய்ப் போய்ச் சேர்ந்தது. இந்த ஜனக் கூட்டங்கள், என் மனத்தைப் பெரிதும் உருக்கிவிட்டன. ஓர் அந்நிய நாட்டு மக்களின் உணர்ச்சிகளையும் கருத்துக்களையும் அறிந்து கொள்ள வேண்டுமென்ருல், அந்த ஜனங்களில் பலரோடு நேரே நெருங்கிப் பழகி நட்புக்கொள்ள வேண்டும். அதில் எனக்கு ஆசைதான். ஆயினும், சீனுவைப் போன்ற ஒரு பெரிய நாட்டில், சுருக்கமாய்ச் செய்த ஒரு பிரயாணத்தில், அந்த மாதிரி அநேகம் பேரிடம் நட்புக் கொள்வது சாத்தியப் படவில்லை. ஆனுல், இந்தச் சீன மக்களின் கூட்டங்கள், என் மனத்திலே நிச்சயமான நிரந்தரமான ஓர் உணர்ச்சியை உண்டாக்கி விட்டன. சீனுவைப் பற்றிய என் அபிப்பிரா யங்கள் எல்லாம் மேலெழுந்தவாருகத் திரண்டவைதாம்; என்ருலும், இந்த ஆயிரக் கணக்கான மக்களின் முகத்திலும் கண்ட குதூகலம், அவற்றுக்குப் பின்பலம் ஆகும்; அந்தக் குதூகலத்தை யாராலும் தப்பர்த்தம் செய்துகொள்ள முடியாது.

நான் நன்ருய் அறிய வந்த சீனர்கள் அனைவரும் ஏதோ ஒரு துறையில் தலைவர்களா யிருப்பவர்களே. இது தவிர்க்க முடியாத சங்கதி. அவர்களில் சிலரைப் பற்றி, பின்னுல் வர்ணிக்கிறேன்; மிக உயர்வாகவேதான். ஆனுல், ஊர் பேர் தெரியாத சீன மகா ஜனங்களை எவ்வளவு உயர்வாகப் புகழ்ந்தாலும் தகும் என்றே நான் மதிக்கிறேன்.

அவர்களில் ஒருவர், நான் சீனுவில் இருக்கையிலேயே எனக்கு ஒரு கடிதம் எழுதினுர். அவரை நான் ஒருபோதும் சந்தித்ததேயில்லை. அவர் ஒரு மாணவர். தம் கடிதத்தின் இறுதியில், அவர் தமது படம் ஒன்றை ஒட்டியு மிருந்தார். தம்மிடமும் தம் பாஷா ஞானத்திலும் அபாரமான நம்பிக்கையுள்ள ஒரு மாணவர் எந்த மாதிரி ஆங்கிலத்தில் எழுதுவாரோ அந்த மாதிரி ஆங்கிலம் அவருடையது.

அவர் எழுதியிருந்தது இதுதான்: "அன்பார்ந்த மிஸ்டர் வெண்டல் வில்கீ, உங்களுக்கு நான் ஓர் உறுதி

கூறுகிறேன்: நேச தேசங்களுக்குள்ளேயே மகா தீரமும், நம்பிக்கையும் வாய்ந்த ஒரு நாடு சீனு. அதற்குச் சகல விதமான கஷ்டங்களும் நேரிட்டுவிட்டன; என்றுலும் அது அஞ்சவில்லை; மனம் மாறவு மில்லை. ஏனென்றுல், சுதந்தரம், தர்மம் என்ற புனிதமான லட்சியங்களுக்காகவே நாம் போராடுகிறேம் என்பது எங்களுக்கு மிக நன்றுய்த் தெரியும். பிரகாசமான வருங்காலம் எங்களுக்கு வரக் காத்திருக்கிறது என்றும், எந்த ஜயத்தை அடைய வேண்டு மென்று நாங்கள் ஏங்கிக்கொண் டிருக்கிறேமோ அந்த ஜயத்தை எங்களுக்குக் கடவுள் அருள்வார் என்றும் நாங்கள் உறுதியாய் நம்புகிறேம்.''

யுத்தத்துக்குப் பின் உலக சமாதானம் ஏற்படுவதற்கு ஒரு நகல் திட்டத்தையும் தயாரித்து, அவர் அந்தக் கடிதத் தோடு வைத்து அனுப்பி யிருந்தார். அது ஒரு ரசமான திட்டம். ஆனுல், சீனுவில் நான் எங்கே சென்றுலும் வந்த கூட்டங்களின் உணர்ச்சியே என் மனத்தைக் கவர்ந்தது; அப்படியே, இந்தத் திட்டத்திலும் இதன் உணர்ச்சிதான் என் மனத்தை மிகவும் கவர்ந்தது. ஜனங்கள் யுத்தத்தைப் புகழும்படி ஞாபகார்த்த மண்டபங்கள் கட்டுவதற்குப் பதிலாக, அதை அவர்கள் வெறுக்கும்படியே ஞாபகார்த்த மண்டபங்கள் கட்ட வேண்டும் என்பது அவர் கருத்து. இந்த யுத்தத்தின் கடைசி நாளில், உலகெங்கும் பகிரங்க மாய்த் தெய்வ பலிகள் கொடுக்க வேண்டும் என்றும், அந்த நாளுக்குச் 'சமாதான, சுதந்தர, ஆனந்த நாள்' என்று பெயரிட வேண்டும் என்றும் அவர் யோசனை கூறினுர்.

இந்தத் திட்டத்தில் கண்ட பல யோசனைகளில் ஒன்றுக்கு, 'மனிதர்களுக்குள்ளே பரஸ்பரம் அன்பை அதிகரிக்கும் வழிகள்' என்று தலைப்புக் கொடுத்திருந்தார். 'ஒவ்வொரு தேசமும் சமாதான நிதிகள் சேர்க்க வேண்டும்; விஞ்ஞானம் கற்கும் மாணவர்களுக்கு அந்த நிதிகளிலிருந்து உபகாரச் சம்பளம் கொடுக்க வேண்டும்' என்று அவர் யோசனை சொன்னுர். மேலும், அவர் எனக்கு எழுதியது இது :

"விஞ்ஞானந்தான், மனித குலத்தின் துன்பத்தைப் பரிகரிக்கும்; இயற்கையின் குறைகளுக்கு ஈடு செய்யும்; மனிதர்களின் வாழ்க்கை அந்தஸ்தை உயர்த்தும்; மனிதர்களுக்குள்ளேயே போராடிக் கொண்டிராமல், மனித வர்க்கம் முழுவதும், இயற்கையோடு போராடச் செய்யும்."

இந்த யுத்தத்தில், நமது பக்கத்தில் சீனுவைப் போல், ஒரே மனிதரின் ஆதிக்கத்துக்கு முற்றும் உட்பட்டிருக்கும் நாடு, வேறொன்றில்லை. அவர் பெயர் சியாங்-கே-ஷேக் என்றாலும், 'ஜெனரலிஸ்ஸிமோ' (தளபதி) என்றே அனைவரும் அவரை அழைக்கிறார்கள். சில சமயம் 'ஜிஸ்ஸிமோ' என்று சுருக்கமான செல்லப் பெயராலும் குறிப்பிடுகிறார்கள்.

நான் சியாங் அவர்களுடன், நீண்ட சம்பாஷணைகள் பல செய்தேன்; அவருடனும் அவர் மனைவியுடனும் தனியே அவர் வீட்டில் பல முறை உணவு கொண்டேன்.

ஒரு நாள் மாலை, சியாங்கின் நாட்டுப்புற வாசஸ்தலத்துக்கு, நாங்கள் காரில் சென்றோம். அது யாங்ட்ஸி நதிக் கரையில் இருக்கிறது. 'ஹாலி' டாங்கும் எங்களோடு வந்தார். அது ஓர் எளிமையான வீடு. அதன் முன்புற வாயிலில் உள்ள பெரிய மண்டபத்தில், சுங்கிங் குன்றுகளைப் பார்த்தவண்ணம், நாங்கள் உட்கார்ந்துகொண்டோம். கீழே வெகு வேகமாய் ஓடும் நதியில், சீனக் குடியானவர்களையும் அவர்கள் உற்பத்தி செய்த பண்டங்களையும் சுமந்துகொண்டு, பல சின்னஞ் சிறு படகுகள், சந்தையை நோக்கிச் சென்று கொண்டிருந்தன. அன்று சுங்கிங்கில் மிக வெப்பமாயிருந்தது. ஆனால், இன்று இங்கே இனிய மந்தமாருதம் வீசியது. ஸ்ரீமதி சியாங், எங்களுக்குத் தேநீர் பரிமாறினாள். தளபதியும் நானும் பேசத் தொடங்கினோம். ஸ்ரீமதி சியாங்கும் 'ஹாலி'டாங்கும், மாறி மாறி எங்களுக்குத் துபாஷி வேலை செய்து உதவினார்கள்.

சென்ற காலத்தைப் பற்றியும் அவருடைய நிர்வாக நோக்கத்தைப் பற்றியும் நாங்கள் பேசினோம். அநேகமாய்ச் சீனு முற்றும் விவசாய சமுதாயமாகவே இருக்கிறது.

இதை மாற்றிச், சீனுவை நவீனக் கைத்தொழில் சமுதாயம் ஆக்கிவிட வேண்டும் என்பதே, அவரது நிர்வாக நோக்கம். இந்த மாறுதலைச் செய்யும்போது, பழமையி லுள்ள சிறந்த ஐதிகங்களை யெல்லாம் பாதுகாத்துக் கொள்ளவே அவர் விரும்புகிறுர். மேல் நாடுகளைப் போல் பெரிய பெரிய ஆலைத் தொழில்களை ஸ்தாபிப்பதால் சமுதாய வாழ்க்கையில் பல சீர் குலைவுகள் நிகழக்கூடும். அவை நேராமல் தடுப்பதற்காக, விஸ்தாரமாகப் பல இடங்களில் ஏராளமான சிறு சிறு ஆலைத் தொழிற்சாலைகளை அமைக்க அவர் விரும்புகிறுர். விவசாயம், கைத்தொழில் இரண்டும் கூடிய ஒரு சமுதாயத்தைப் படைக்க வேண்டும் என்றே, சீனக் குடியரசின் தந்தையான டாக்டர் சன்யட் சென் உபதேசித்திருக்கிறுர். அந்த உபதேசப்படி நடந்தால் சரியான வழி பிறக்கும் என்று, சியாங் நிச்சயமாய் நம்புகிறுர். ஆயினும், மேல் நாட்டி லிருந்து வந்த யாருடனுவது இந்த விஷயத்தைப் பற்றிச் சர்ச்சை செய்ய வேண்டு மென்று அவர் ஆவலா யிருந்தார். எனவே, என்னைப் பல கேள்விகள் கேட்டார். ஒரே மொத்த மாய்ப் பண்டங்களை உற்பத்தி செய்வதாலும், பெரிய பெரிய ஆலைத் தொழில்கள் கூட்டுச் சேர்வதாலும் அமெரிக்காவில் சில பிரச்னைகள் எழுந்திருக்கின்றன. இவற்றைத் தடுக்க வேண்டும் என்பதே அவர் விருப்பம். அதிகார ஆசையும், தனிப்பட்டவர் ஏராளமாய்ச் செல்வம் சேர்க்க வேண்டும் என்று கொள்ளும் ஆசையும் மாத்திரமே, இந்தப் பிரச்னைகள் எழுந்ததற்குக் காரணம் என்று அவர் நினைப்பதாய்த் தோன்றியது. இந்த அம்சங்கள், அந்தப் பிரச்னைகள் எழுவதற்குப் பெரிதும் உதவி யிருக்கின்றன என்பது உண்மைதான்; ஆனுல், இவை மட்டுமே, அவற்றின் காரணம் அல்ல. அதமபட்சம் அந்தப் பிரச்னைகளில் ஒரு பகுதிக்காவது, பொருளாதாரத் தேவைகளும் காரண மாகும். ஒரே மொத்தமாய்ப் பண்டங்களை உற்பத்தி செய்வ தால், உற்பத்திச் செலவு பெரிதும் குறைந்து விடுகிறது. இந்த விஷயங்களை அவருக்கு நான் விளக்கிச் சொன்னேன்.

மோட்டார்க் கார் உற்பத்தித் தொழிலே, நான் அவருக்கு உதாரணமாய்க் கூறினேன். குறைந்த செலவில் மோட்டார்க் கார்களை உற்பத்தி செய்து, சீன ரஸ்தாக்கள் எங்கும் ஓடவிட வேண்டும் என்று அவர் விரும்புகிறார். பெரிய தொழிற்சாலை ஒன்றில், சாஸ்திரீயமான நிர்வாகத்தின் கீழ், பல பகுதிகளையும் தனித்தனி செய்து ஒன்று சேர்த்துப் பிணைத்தால், ஒரு காரின் உற்பத்திச் செலவு என்ன ஆகுமோ அதைப் போல ஐந்து மடங்கு செலவு, அதை ஒரு சிறிய தொழிற்சாலையில் செய்யும் போது ஏற்படும் என்று நான் குறிப்பிட்டேன். உயர்தரமான வாழ்க்கை அந்தஸ்துக்குச் சில பொருள்கள் தேவையா யிருக்கின்றன. ஏராளமான பொது மக்களுக்குக் கிட்டக் கூடிய விலைகளில் அவற்றை உற்பத்தி செய்யவேண்டும். முற்றும் சிறு தொழிற்சாலைகளிலேயே அவற்றைச் செய்வதென்றால், முடியாது. அமெரிக்கர் சிருஷ்டித்துக்கொண்டிருக்கும் பெரிய பெரிய ஆலைத் தொழில் கூட்டுறவுகளில் அநேகம், அநாவசியமானவைதாம். சிந்தனையுள்ள ஒவ்வோர் அமெரிக்கனும் இதை அறிவான். அமெரிக்கரின் சமூக நன்மையையும் பொருளாதார நன்மையையும் கருதி, சிறு சிறு கைத் தொழில்களுக்குப் பேராதரவும் சலுகையும் அளிக்க வேண்டுமென்பதையும் அவன் அறிவான். ஆனாலும், அமெரிக்கரின் வாழ்க்கை அந்தஸ்தைக் காப்பாற்றிக் கொள்வதற்காக, சில குறிப்பிட்ட தொழில்களில் ஒரே மொத்தமாய்ப் பொருள் உற்பத்தி செய்வது அவசியமாயிருக்கிறது. ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் ஒரே ஒரு தொழிற்சாலைக் குள்ளே திரண்டு வேலை செய்வதால், சமுதாய வாழ்விலும், பொருளாதார வாழ்விலும், ஜனநாயகத்துக்குப் பங்கமாகவும், பல கேடுகள் நேரத்தான் நேருகின்றன. அதனால், பல பெரிய வகுப்புகள் முற்றுமே ஏக காலத்தில் வேலையில்லாத் திண்டாட்டத்துக்கும் ஆளாகி விடுகின்றன. இது அமெரிக்கருக்குத் தெரியும் என்று அவரிடம் நான் சொன்னேன். இந்தச் சமுதாய முறையால், சில பெரிய கோஷ்டியார்களே நிரந்தர முதலாளி வகுப்பினராய் நிலைபெற்று

விடுகிறார்கள்; தங்கள் தங்கள் சொந்தத் தொழிலுக்குத் தாங்களே சொந்தக்காரர் ஆகும் சந்தர்ப்பம், தனி மனிதர்களுக்குக் கிடைப்பது துர்லபமாகி விடுகிறது. இதற்கு அமெரிக்கர் வருந்துகிறார்கள் என்றும், அவருக்குத் தெரிவித்தேன். இந்தப் பிரச்னைகளுக்கெல்லாம் சரியான பதில்களை இன்னும் அமெரிக்கர் கண்டுபிடிக்க வில்லை என்றும், தளபதி சியாங்குக்கு நான் சொன்னேன். ஆனால், அதற்காக, அவசியமான பெரிய ஆலைத் தொழில்களை யெல்லாம் உடைத்து, திறமை குன்றிய பல சிறிய தொழிற்சாலைகளை அமைத்து விட்டால், பரிகாரம் கிடைத்துவிடாது என்றும் கூறினேன்.

மேற்கு உலகத்தில் நடக்கும் எந்தப் பரீட்சையையும் விட அவருக்கு மிகவும் அருகிலேயே ஒரு பரீட்சை நடைபெறுவதை சியாங்குக்கு நான் ஞாபகப் படுத்தினேன். அது ருஷ்யாவில் நடக்கும் கம்யூனிஸப் பரீட்சைதான். குறிப்பிட்ட ஒரே வேலையைச் சாதித்து முடிக்க, ஏராளமான கோஷ்டி மக்களை, ஒரே மொத்தமான உற்பத்தி முறையில் தான், கம்யூனிஸ்டுகள் ஈடுபடுத்துகிறார்கள். இதுவே அவர்களின் வெற்றிக்கு ஓரளவு காரணம்.

பெரிய பெரிய தொழிற்சாலைகளை ஒரு பங்கு சர்க்காருக்கும் ஒரு பங்கு தனிப்பட்ட முதலாளிகளுக்கும் சொந்தமாகச் செய்துவிட்டால், ஒரு வேளை பரிகாரம் கிடைக்கலாம் என்று, அவர் ஒரு யோசனை சொன்னார்.

இந்த விவாதம் பல மணி நேரம் நடந்தது. எங்களுக்குத் துபாஷியாக உதவி செய்துகொண் டிருந்த ஸ்ரீமதி சியாங், அப்போது, இனிமையான, ஆனால் உறுதியான அதிகாரப் பெண் குரலில், "மணி பத்தாகி விட்டது. நீங்களோ ஒன்றும் சாப்பிடவில்லை. எழுந்திருங்கள். நாம் நகரத்துக்குப் போய், ஏதாவது கொஞ்சம் தின்னலாம். இந்த விவாதத்தை மற்றொரு சமயம் முடித்துக் கொள்ளலாம்" என்றாள்.

பிற சமயங்களிலும், இதைப் பற்றியே அதிகமாய்ப் பேசினோம்; வேறு பல விஷயங்களைக் குறித்தும் பேசினோம். இந்தியாவைப் பற்றியும், கீழ் நாடுகளைப் பற்றியும், அவற்றின் ஆதர்சங்கள், நோக்கங்கள் ஆகியவை பற்றியும், உலகெங்கும்

ஏற்பட வேண்டிய ஓர் ஒழுங்கு முறையில் அவை எப்படிப் பொருந்தியிருக்க வேண்டும் என்பது பற்றியும், ராணுவ தந்திரம் பற்றியும், ஜப்பானையும் அதன் வசதிகளையும் பற்றியும், பெர்ல் துறைமுகம் பற்றியும், சிங்கப்பூர் வீழ்ச்சி பற்றியும், இவை காரணமாக மேல் நாடுகளிடம் கீழ் நாடுகளின் மனோபாவத்தில் ஏற்பட்டிருக்கும் ஆழ்ந்த மாறுதல் பற்றியும், நாங்கள் பேசினோம். மத்தியக் கிழக்கிலும் ருஷ்யா விலும் இப்போது சீனாவிலும் நான் கண்ட தீவிரமான, அநேகமாய் வெறி பிடித்தது போன்ற, தேசிய உணர்ச்சி வளர்ந்து வருவதுபற்றியும், உலக ஒத்துழைப்பை இது எவ்வாறு கவிழ்த்துவிடக் கூடும் என்பது பற்றியும், நாங்கள் பேசினோம். ருஷ்யாவைப்பற்றியும், சீனாவுக்குள் உள்ள கம்யூனிஸ்டுகளிடம் சியாங்கின் உறவு எப்படி யிருக்கிறது என்பது பற்றியும், பிரிட்டன் பற்றியும், கீழ் நாட்டில் அது அநுஷ்டிக்கும் கொள்கைபற்றியும், பிராங்கிளின் ரூஸ்வெல்ட், வின்ஸ்டன் சர்ச்சில், ஜோஸப் ஸ்டாலின் இவர்களைப் பற்றியும் நாங்கள் பேசினோம்.

உண்மையைச் சொன்னால், நான் சியாங்குடன் தங்கிய ஆறு நாளும் சம்பாஷணை நிறைந்திருந்தது.

தளபதி சியாங்கைப் பற்றி என் சொந்த முடிவு ஒன்றைக் கூறாமல், சீனாவைப் பற்றி நான் எந்த வரலாற்றை யும் எழுத முடியாது. ஒரு மனிதர் என்ற முறையிலும் ஒரு தலைவர் என்ற முறையிலும், அவருடைய பராபரிக் கீர்த்தி யெல்லாம் ஒருபுறம் இருக்க, அவர் மிக அதிசயமான அமைதி யும், மிருதுவான பேச்சும் உடைய மனிதர். ராணுவ உடை தரிக்காத நேரமெல்லாம், சீன உடையையே அவர் அணிந்து கொள்கிறார். அவருடைய புலமையை, இது அதிகப்படுத்திக் காட்டுகிறது. ஓர் அரசியல் தலைவர் என்பதைவிட, ஒரு புலவராகவே-அநேகமாய், சமயப் புலவராக-அவர் தோன்று கிறார். அவர் பயிற்சி மிக்க கேள்விச் செல்வர். பிறர் அறிவை யெல்லாம் கிரகித்துக்கொள்ளும் பழக்கம் மிகுந்தவர். நீங்கள் சொல்லுவதை அவர் ஒப்புக்கொள்ளும் போதெல் லாம், தொடர்ந்து, 'யா-யா' என்று :மென்மையான குரலில்

கூவியவண்ணம், தலையை அசைக்கிருர். இது சூட்சுமமான முகஸ்துதியாகும். பேசும் மனிதர், இதனுல் வேகம் குன்றி, ஓரளவு சியாங்கின் கட்சியிலே சேர்ந்து விடுகிருர்.

தளபதி சியாங், ஒவ்வொரு நாளும் சிறிது நேரத்தைப் பிரார்த்தனை செய்வதிலும் பைபிள் படிப்பதிலும் செலவிடுகிருர் என்று சொல்லுகிருர்கள். இதிலிருந்தோ, அல்லது சிறு வயதுப் பழக்கத்தாலோ, ஒரு சிந்தனு சக்தியையும், சாந்தத்தையும், சில சமயம் தம் உள்ளத்தில் எண்ணுவதை உரக்கக் கூறிவிடும் பழக்கத்தையும் அவர் சம்பாதித்துக்கொண்டிருக்கிருர். அவர் அந்தரங்க சுத்தியுள்ளவர் என்பதில் சந்தேகமே இல்லை. அவருடைய கம்பீரமும், சலியாத மன உறுதியும், ஏதோ ஒருவிதக் கடுமை பொருந்தி இருக்கின்றன.

மிகுந்த கஷ்டப்பட்டுத்தான், தளபதி சியாங் அதிகாரத்துக்கு வந்திருக்கிருர். இதைப் பற்றி அவர் பெருமை கொள்கிருர். ஒரு தேசம் ஜனனமாவதிலே எதிர்ப்படும் மிகக் கடினமான பிரச்னைகளையெல்லாம், இருபத்தைந்து வருஷங்களுக்கு மேலாக, அவர் அறிந்து வந்திருக்கிருர். இதன் பலனுகத் தானே என்னவோ, தாம் மணந்துகொண்ட அபூர்வமான குடும்பத்தினிடமும், போராட்டம் நிறைந்த ஆரம்ப வருஷங்களில் தமக்குத் துணையா யிருந்த நண்பர்களிடமும், அவருடைய விசுவாசம் சிதையா திருந்து வருகிறது. சில சமயம், அந்த விசுவாசம், குருட்டுத்தனமாகக்கூட போய் விடுகிறது என்று நான் ஊகிக்கிறேன். சீனக் குடியரசு வாலிபமாய்த்தான் இருக்கிறது. அப்படியிருந்தும், மனிதர்களுக்குள்ளே 'பழைய பள்ளிக்கூடத் தளை' மாதிரி ஒரு வித நட்பு வளர்ந்திருக்கிறது. இந்தச் சிநேக பலத்தினுலேயே, சில மனிதர்கள் உயர்ந்த பதவிகளிலே இருந்து வருகிருர்கள். இதற்கு நான் தஸ்தாவேஜு மூலமான ஆதாரம் காட்டமுடியாது. ஆனுல், சுங்கிங்கில் ஒருவர் சொற்ப காலம் போய்த் தங்கியிருந்தால் கூடப் போதும்; இதை நிச்சயம் கண்டு கொள்ளலாம். இந்தப் 'பழைய பள்ளிக்கூடத் தளை'யினுல் பயனடைந்த முக்கியஸ்தர்கள் தளபதி சியாங்கின் பழைய

தோழர்கள்தாம். முன்னே உள்நாட்டுக் கலகக்காரர்களை எதிர்த்துத் தளபதி போரிட்டபோது, இவர்கள் அவருக்குத் துணை நின்று சண்டை யிட்டவர்கள். இவர்களில் எவரும் இதுவரையில் கிழத்தனம் அடையாதது சீனுவின் பாக்கியம்.

நான் சுங்கிங்கில் சந்தித்த தலைவர்கள், உயர்ந்த அந்தஸ்துள்ளவர்கள் அல்ல என்று சொல்லமாட்டேன்; அவர்கள் உயர்ந்த அந்தஸ்துள்ளவர்கள்தாம். ஆனால், மேல் நாட்டில் வழங்கும் அர்த்தத்தில், அவர்க ளெல்லாம் ஜனப் பிரதிநிதிகள் அல்ல. ஜனநாயகத்தைப் பற்றி, சீனர்களின் கருத்து, நமது கருத்தினின்றும் சில அம்சங்களில் எப்படி மாறியிருக்கிறதோ அதே போல, அவர்களின் வாழ்க்கைப் போக்கினால் அவர்களுடைய தலைவர்களின் தன்மையும் ஒருவிதமாய் நிர்ணயமாகி விடுகிறது. சீனுவை ஆள்வது, கொமிண்டாங் கட்சி. சீனுவில் சுயஆட்சி முறை வளர்வதற்காக, இந்தக் கட்சியார் ஒரு திட்டம் வகுத்திருக்கிறார்கள். சிறிது காலம் வரையில் ஜனங்களுக்குச் சுய ஆட்சியில் பயிற்சி அளிக்க வேண்டும் என்பது அதில் ஓர் அம்சம். இந்தப் பயிற்சிக் காலத்தில், வாழ்க்கையிலும் சிந்தனையிலும் புதிய நெறிகளில் அவர்களுக்குப் பழக்க முண்டாகும்படி போதிக்கிறார்கள். அதன் மூலம் அவர்கள் பரிபூரண ஜனநாயகத்துக்குத் தகுந்த நல்ல பிரஜைகள் ஆகி, பின்னால் ஒரு காலத்தில் தேர்தல் உரிமைகளை யெல்லாம் பெற்று விடுவார்கள்,

இந்தப் பயிற்சிக் காலத்தில், நிறைந்த அநுபவம் பெற்றவர்களே சீனுவின் தலைவர்களாக இருக்க வேண்டியது அவசியமாகிறது. அந்தத் தலைவர்கள் அயல்நாட்டுச் சர்வகலா சாலைகளிலோ, யுத்தத்திலோ, அரசியலிலோ அநுபவம் பெற்றிருக்க வேண்டும். அவர்கள் ஜனங்களால் தேர்ந்தெடுக்கப் பெற்ற பிரதிநிதிகளா யிருக்க வேண்டும் என்ற அவசியம் இல்லை. சீனுவின் தலைவர்கள் உள்ள நிலை இதுதான். சீன வாழ்க்கை, சுங்கிங்கில் இருந்துகொண்டு மத்திய சர்க்கார் புரியும் அதிகாரத்தால் கண்காணிக்கப் பெறுகிறது. சீனுவின் மீது அநுதாபமே உள்ள பல அந்நிய நாட்டினர்கள் கூட இப்படி மத்திய சர்க்காரிடம் அதிகாரம் குவிந்திருப்பது

கண்டு, கொஞ்சம் அதிருப்தி காட்டுகிறார்கள். இதற்கு ஒரு காரணம்-முக்கியமான காரணம்-தலைவர்கள் மேலே கண்டவாறு இருப்பதுதான் என்று நான் எண்ணுகிறேன்.

சீனுவின் சிறந்த மனிதர்கள் சிலர் என் கேள்விகளுக்குப் பதில் அளிக்கவும், சீன யுத்த முயற்சியை எனக்குக் காட்டவும் முன் வந்தார்கள். என் மனத்திலே ஆழமாய்ப் பதிந்த அனைவருடைய பெயர்களுக்கும் ஒரு ஜாபிதாக் கொடுப்பது அசாத்தியம்.

யுத்த மந்திரியான தளபதி ஹோ யிங்-சின் எனக்குத் தம் வீட்டில் ஒரு விருந்தளித்தார். கீழே ஓடும் நதியைப் பார்த்துக்கொண்டு, சுங்கிங் குன்று ஒன்றின் மீது நிற்கிறது அந்த வீடு. இந்த விருந்தின்போது, அவருடனும், லெப்டினென்ட் ஜெனரல் ஜோஸப் டபிள்யூ. ஸ்டில்வெல், அட்மிரல் சென் ஷாவோ-க்வான், சீன ராணுவத்தின் மற்றும் சில அதிகாரிகள் ஆகியவர்களோடும் நான் சம்பாஷித்தேன். பின்னுல், கியாங்ஸியின் 'மும்மூர்த்தி'களில் ஒருவரான தளபதி பாய் சுங்-ஹ்ஸி அவர்களுடன் வெகு நேரம் பேசிக்கொண் டிருந்தேன்.

மந்திரி சபைத் தலைவரான லின் ஸென், தம் காரியாலயத்தில் சம்பிரதாய முறையில் ஒரு விருந்தளித்தார். உதவித்தலைவர் டாக்டர் எச். எச். குங், தம் வீட்டைச் சுற்றியுள்ள பசும் புல்வெளியில்-சுங்கிங்கிலேயே மிக நேர்த்தியான பசும் புல்வெளி இதுதான் - ஒரு சிற்றுண்டி விருந்தளித்தார். கல்வி மந்திரி சென் லி-பூ, பொருளாதார மந்திரி டாக்டர் வாங் வென்-ஹாவோ, அப்போது பிரசார மந்திரியா யிருந்த டாக்டர் வாங்-ஷீ-சீ இவர்கள் அனைவரும் எனக்காகத் தங்கள் நேரத்தைச் செலவழித்தும், சிரமத்தைப் பொருட்படுத்தாமலும், 'சீனு எப்படி இந்த நெருக்கடியைச் சமாளித்து வருகிறது' என்பதை எனக்கு விளக்கினுர்கள்.

தேசீய ராணுவக் கவுன்சில் கட்டடத்தில் நடந்த ஒரு விருந்துக்கு, தளபதி சியாங்கே தலைமை வகித்தார். இது சுங்கிங் நகரின் நடு மத்தியில் உள்ள ஒரு பெரிய மண்டபம். ஒரு வருஷத்துக்கு முன், ஜப்பானியர் இதன்மீது குண்டு

போட்டுவிட்டார்கள். என்றாலும், இதை மீண்டும் சீனர் புதுப்பித்துக் கட்டிவிட்டார்கள். உலகமெங்கும் நான் சென்ற சகல விருந்துகளிலும், இதுவே மகா கவர்ச்சிகரமான பொது விருந்தாகும். தியாகம் அவசியமா யிருக்கும் இந்த நாட்களிலே பெரிய இடங்களில் எல்லாம் ஏதோ எளிமை நிலவுவதாக நாமெல்லாம் நம்பிக்கொண் டிருக்கிறோமே அந்த எளிமை, உண்மையிலேயே இந்த விருந்தில் காணப் பட்டது. புராதனச் சீனாவின் சங்கீத வாத்தியங்களில் வித் வான்கள் வாசித்தார்கள். அவற்றில் பெரும்பாலானவையும் ஒரே தந்தியுள்ளவை. அனைத்தும், பார்வையிலும் அமைப் பிலும் கரடு முரடா யிருந்தன. ஆனால், பாட்டுக்க ளெல்லாம் சீனாவின் புராதன நாட்டுப்பாடல்கள்; இசைகள் மிக மிருதுவா யிருந்தன.

இந்த விருந்திலே, சிறு சம்பவம் ஒன்று நிகழ்ந்தது. அதை எங்கள் பிரயாணக் கோஷ்டியார் எப்போதும் ஆனந்தத் தோடு நினைவில் வைத்திருக்கிறார்கள். அதற்கு முந்திய நாள் தான், மைக் கௌலீஸ், கிரீம் போட்ட சுறா மீன் நாக்கைப் பரீட்சைக்காகத் தின்றுவிட்டு அவதிப்பட்டார். ஆகவே, இந்த விருந்திலே பழமையான நல்ல வனில்லா ஐஸ்கிரீமைக் கண்டபோது, பெரிதும் சந்தோஷ மடைந்தார். தமது சந்தோஷத்தைச் சுங்கிங் மேயரிடம் அவர் தெரிவித்தபோது, மேயர் சொன்னார்: "ஏப்பிரல் மாதத்தில், சீனா முழுவதும் காலரா நோய் பரவி விடுமோ என்று, வைத்திய அதிகாரிகள் பயந்தார்கள். காலராவைத் தடுக்கும் இன்னாக்குலேஷன் மருந்து அவர்களிடம் இல்லை. பாலின் மூலமாகத்தானே காலரா பரவுகிறது? எனவே, நகரங்களிலெல்லாம் ஐஸ்கிரீம் பரிமாறுவது குற்றம் என்று ஓர் அவசரச் சட்டத்தை அவர் கள் பிறப்பித்து விட்டார்கள்!"

இப்படிச் சொல்லிய அவர் மேலும் கூறினார்: "ஆனால், நேற்று நான் ஒரு தீர்மானம் செய்தேன். ஐஸ்கிரீமோ அருமை யான தின்பண்டம்; மிஸ்டர் வில்கீ சுங்கிங்குக்கு வந்தது எங்களுக்கு அளவற்ற சந்தோஷம். ஆகவே, இன்றிரவு உங்களுக்கு ஐஸ்-கிரீம் பரிமாறுவதற்காக, அந்த அவசரச்

சட்டத்தை ஒரே ஒரு நாளைக்கு மட்டும் நான் ரத்துச் செய்து விட்டேன்.''

காலராவுக்கு முன்னெச்சரிக்கையாக நாங்கள் குத்திக் கொண்ட இன்னுக்குலேஷன் மருந்து நல்ல மருந்துதானு என்பதைப் பற்றி, அடுத்த சில நாள் வரையில் நாங்கள் கவலைப் பட்டுக்கொண்டேயிருந்தோம்.

எனக்கு விருந்து உபசரணை செய்தவர்கள், நான் ஓய் வெடுத்துக் கொள்வதற்காக என்னை விட்டுவைத்த இடை நேரங்களில், ஏராளமான வேறு அநேகம் சீனர்களை நான் கண்டேன். அவர்களை யெல்லாம் சந்திப்பதற்கு, டாக்டர் ஸுங் அவர்களின் வீடுதான் மிகவும் சௌகரியமான இடமா யிருந்தது. எனக்கோ சீனர்களைச் சந்திப்பதில் கட்டுக்கடங் காத ஆவல். என்னை வந்து பேட்டி காண்பதில் அவர்கள் காட்டிய களிப்புக்கோர் எல்லையே கிடையாது.

உதாரணமாக, சீனக் கம்யூனிஸ்ட் தலைவர்களில் ஒரு வரான சௌ என்-லாய் என்பவரை, அங்கேதான் நான் சந்தித்துப் பேசினேன். சாவகாசமாக, தனிமையில், இடை யூறு எதுவு மில்லாது, அவரோடு பேசிக்கொண்டிருந்தேன். அவர் நேர்த்தியான மனிதர்; நிதானமும் அந்தரங்கசுத்தியும் உள்ளவர். நல்ல திறமைசாலி என்பதற்காக, அவரிடம் எனக்கு மதிப்பு ஏற்பட்டது. சுங்கிங்கில் அவர் வசிக்கிருர். அங்கே ஹ்ஸின் ஹுவா ஜிஹபாவோ என்ற கம்யூனிஸ்ட் பத்திரிகையைப் பதிப்பிப்பதற்கு, அவர் உதவி செய்துகொண் டிருக்கிருர். ஜனங்களின் அரசியல் கவுன்ஸில் கூட்டங்களிலும் அவர் பூர்ணமாய்ப் பங்கெடுத்துக் கொள்ளுகிருர். இப்போது அந்தக் கவுன்ஸில்தான், சீனுவில் சற்றேறக்குறைய ஜனப் பிரதிநிதித்துவம் வாய்ந்த ஒரு சட்ட சபை மாதிரி இருந்து வருகிறது. அந்தக் கவுன்ஸிலில், அவர், அவருடைய மனைவி ஆகிய இருவருமே அங்கத்தினர்களாயிருக்கிருர்கள்.

டாக்டர் குங் அளித்த விருந்துக் கூட்டத்தில், தளபதி சௌ அவர்களை நான் மீண்டும் சந்தித்தேன். உள்நாட்டுப் போர்களில் கம்யூனிஸ்டுகளின் பக்கம் சேர்ந்து கொண்டு, தளபதி சியாங்குக்கு விரோதமாக அவர் சண்டை யிட்ட

போது தான், அவருக்குத் தளபதிப் பட்டம் கிடைத்தது. டாக்டர் குங், தம் விருந்துக்கு என் யோசனையின் பேரில், சௌவுடன் அவர் மனைவியையும் அழைத்திருந்தார். சீன உத்தியோகஸ்தர் ஒருவரது குடும்பத்தில் நடக்கும் விருந்துக்கு சௌவை அழைத்தது, இதுவே முதல் தடவையாம். பின்னால் இதை நான் கேள்விப்பட்டேன். சௌ யாரோடு சண்டையிட்டாரோ அந்த மனிதர்கள் இனிமையாகவே-என்றாலும் கொஞ்சம் ஜாக்கிரதையாகவே-அவரை வரவேற்றார்கள்; தளபதி ஸ்டில்வெல் அவர்களோ, அவரை மிக்க மரியாதையோடு வரவேற்றார். இதையெல்லாம் பார்க்க ரசமாயிருந்தது. தளபதி ஸ்டில்வெல்லுக்கு, தளபதி சௌ அவர்களிடம் பத்து வருஷங்களுக்கு முன்பே, ஹாங்கோவில் பரிசயமுண்டாம்.

கம்பளியும் பஞ்சும் கலந்த நீல வர்ணச் சட்டையும் சராயும், தளபதி சௌ அணிகிறார். சீனர்களின் ஐதிகமான உடையின் சாயை அதில் இருக்கிறது. அதே சமயத்தில் யந்திரத் தொழில் பயிற்சி பெற்ற தொழிலாளர்களின் உடை மாதிரியும் அது தோன்றுகிறது. அகன்ற முகம்; விசாலமாய் விலகி நிற்கும் தீவிரமான கண்கள். அவர் மிக மெதுவாய் ஆங்கிலம் பேசுகிறார். இரண்டு கட்சியார்களும் என்ன என்ன சமரசங்களைச் செய்துகொண்டதன் மேல், 'சீனாவின் யுத்த கால ஐக்கிய முன்னணி அமைந்திருக்கிறது' என்ற விவரத்தை அவர் எனக்கு விளக்கிச் சொன்னார். சீனாவில் உள்நாட்டுச் சீர்திருத்த வேலை, மிக மெதுவாய் நடப்பதாக அவர் எண்ணுகிறார். இதில் தமக்கு அதிருப்தியே என்று அவர் ஒப்புக்கொண்டார். என்றாலும், ஜப்பானைத் தோற்கடிக்கும் வரையில் ஐக்கிய முன்னணி குலையாதிருந்துவரும் என்று, அவர் எனக்கு உறுதி கூறினார். "கொமிண்டாங் கட்சிக்கும் கம்யூனிஸ்ட் கட்சிக்கும் இடையிலே பழைய மனஸ்தாபம் உண்டல்லவா? அதனால் இந்த ஐக்கியம், யுத்தத்துக்குப் பிற்பாடு குலையாதிருந்து வருமா?" என்று அவரை நான் கேட்டேன். "உண்மையாய்ச் சொல்லுகிறேன்: சோதிடங் கூற எனக்கு இஷ்டமில்லை" என்று அவர் பதிலளித்து விட்டார்.

என்றாலும் தளபதி சியாங்குக்குச் சீனுவிடம் தன்னலமற்ற தேசபக்தி இருக்கிறது என்பதில், அவருக்குச் சந்தேகமற்ற மதிப்பும் நம்பிக்கையும் இருக்கின்றன. ஆனால், சீனுவின் வேறு சில தலைவர்களிடம், அவருக்கு இந்த நம்பிக்கை கிடையாது. சீனுவின் சகல கம்யூனிஸ்டுகளும் இவர் மாதிரியே இருப்பார்களானால், அவர்களுடைய இயக்கம், தேசீய விழிப்பும் குடியானவர் விழிப்பும் உண்டாக்கும் ஓர் இயக்கமாய்த் தான், இருக்க வேண்டும்-இந்த அபிப்பிராயந்தான் அவரிடம் பேசியதிலிருந்து எனக்கு உண்டாயிற்று.

என் மனத்திலே ஆழமாய்ப் பதிந்த மற்றொருவர், டாக்டர் சாங் போ-லீங். அவர் பூதாகாரமான மனிதர். ஒரு பண்டிதருக்குள்ள கம்பீரமும் தீர்மானமும் உடையவர். என்றாலும், நேர்த்தியான, உற்சாகம் நிறைந்த நகைச் சுவையுள்ளவர். சீனுவின் தலைசிறந்த பள்ளிக்கூடங்களில் ஒன்றான 'நான்காம் கலாசாலைக்கு' அவர் தலைவர். அதனோடு, ஜனங்களின் அரசியல் கவுன்ஸிலில் ஓர் அங்கத்தினராகவும் இருக்கிறார். நாம் இந்தியாவைப் பற்றிப் பேசினாலும் சரி, யுத்தத்தைப் பற்றிப் பேசினாலும் சரி, அமெரிக்கச் சர்வகலா சாலைகளைப் பற்றிப் பேசினாலும் சரி, போதிய ஆதாரமும் தீர்மானமும் உடையவராகவே அவர் பேசினார். அவருக் கிணையாக ஆதாரமும் தீர்மானமும் உடையவர்களை, அமெரிக்காவில் காண்பது அரிது.

சுங்கிங்கில் வேறு இரண்டு மனிதர்கள் இருந்தார்கள். சீனர்களின் ஐதிக வாழ்க்கையைப்பற்றி நான் படித்த எந்தப் புத்தகத்திலும் காணக்கிடைக்காத புதிய சீனுவுக்குஉதாரணமாக அவர்கள் விளங்கினார்கள். ஒருவர், லி வொய்-குவோ. இவர் தளபதி சியாங்கின் அந்தரங்கக் காரியதரிசி; வாலிபர்; வயதுக்கு மிஞ்சிய ஞான முடையவர்; திறமை வாய்ந்தவர்- ஒரு பெருந் தலைவரின் காரியதரிசிக்கு இருக்க வேண்டுமே, அந்தத்திறமை; மற்றவர், தளபதி ஜே. எல். ஹுவாங். அவர் உத்தியோகஸ்தர்களின் தர்ம சாதனச் சங்கத்தின் தலைமைக் காரியதரிசி. கனமும் உரமுமான உடம்பு; அது போலவே சிரிப்பு-மிக உரத்த சிரிப்பு. உபசரணையிலும் நிர்வாகத்திலும் விசேஷத் திறமை வாய்ந்தவர் என்று சுலபமாய் அவரை

வர்ணித்து விடலாம். சீனுவில் அமெரிக்க விமானிகள் வசிப்பதற்கான போஜன விடுதிகளை ஏற்பாடு செய்வது அவருடைய வேலைகளில் ஒன்று. அதை அவர் மிக நேர்த்தியாய்ச் செய்கிறார். ஆனால், அவருடைய நகைச் சுவைக்கும், உபசரணைத் திறமைகளுக்கும் பின்னே, அவரது மற்றொரு தன்மையையும் நான்கண்டேன். யோசனையும் பொறுமையும் சலியா உறுதியும் வாய்ந்து, சீனு வெற்றி பெறவும் உலகம் மேன்மையடையவும் போராடும் ஒரு வீரர் அவர், என்று கண்டேன்.

சுங்கிங்கில் தலைமையாக உள்ள பதவிகளை வகிக்க, சீனுவில் மனிதர்களுக்குக் குறைவில்லை. அவர்கள் எவ்வளவோ திறமை வாய்ந்தவர்க ளாகவும் இருக்கலாம்; என்றாலும், சீன வாழ்க்கையிலே, ஸுங் குடும்பத்தார், தனியான ஓர் அந்தஸ்து வகிக்கிறார்கள். அவர்கள் மூன்று சகோதரர்களும் மூன்று சகோதரிகளும் ஆவர். அனைவரும் மெதாடிஸ்ட் கிருஸ்தவ மிஷனிலும் அமெரிக்கக் கல்லூரிகளிலும் பயின்றவர்கள். திறமையும், அரசியல் சாமர்த்தியமும், மகத்தான செல்வமும்,இளங்குடியரசினிடம் மாருத பக்தியும் கொண்ட ஒரு பிரபு குலத்தை, இந்தக் குடும்பத்தாரின் மூலமாக, சீனு அடைந்திருக்கிறது. உலகத்திலே உள்ள அபூர்வமான குடும்பங்களில் ஒன்ருக, இந்தக் குடும்பத்தார் அமைந்திருக்கிருர்கள்.

வாஷிங்டனிலேயே, நான் டி. வி. ஸுங்கை அறிந்திருந்தேன். அவர் சீனுவின் அயல் நாட்டு மந்திரி; ஐக்கிய தேசங்களின் மகத்தான ராஜ தந்திரிகளில் ஒருவர். அவருடைய மூன்று சகோதரிகளையும் நான் சீனுவில் சந்தித்தேன். ஒருத்தி, தளபதி சியாங்கின் மனைவி. மற்றொருத்தி, சீன நிதி மந்திரி எச். எச். குங் அவர்களின் மனைவி. மூன்றுமவள், சீனக் குடியரசின் ஸ்தாபகரான டாக்டர் ஸன் யட்-சென் அவர்களின் மனைவி.

பசும் புல் வெளியில் டாக்டர் குங் எனக்களித்த விருந்தின் போது ஸ்ரீமதி ஸன், ஸ்ரீமதி சியாங் இருவருக்கும் நடுவிலே, தலைமை மேஜையில் என்னை உட்கார்த்தி வைத்

தார்கள். சம்பாஷணை வெகு உற்சாகமா யிருந்தது. நேரம் அருமையாய்க் கழிந்தது. இரண்டு பெண்மணிகளும் நேர்த்தியாய் ஆங்கிலம் பேசுகிறுர்கள்; விஷய ஞானமும் நகைச் சுவையும் நிறைய உடையவர்களாயிருக்கிறுர்கள்.

விருந்து முடிந்ததும் ஸ்ரீமதி சியாங், என்னைக் கை கொடுத்து அழைத்துச் சென்ருள். "என் சகோதரியை நீங்கள் சந்திக்க வேண்டும். அவள் நரம்பு வாதத்தால் கஷ்டப்படுகிருள். வீட்டுக்கு வெளியே விருந்துக்கு அவளால் வர முடியவில்லை" என்று அவள் சொன்னுள். வீட்டுக்குள்ளே ஸ்ரீமதி குங்கை நாங்கள் கண்டோம். அவளது புஜம், கவண் வைத்துக் கட்டியிருந்தது. தான் ஒரு காலத்தில் வசித்த அமெரிக்காவைப்பற்றிக் கேட்க அவள் மிக்க ஆவலா யிருந்தாள். நாங்கள் மூவரும் சம்பாஷித்தோம். நேரம் வெகு சுகமாகக் கழிந்தது. நேரத்தையும் வெளியி லுள்ளவர்களையும் நாங்கள் மறந்தே போய்விட்டோம்!

பதினெரு மணிக்கு டாக்டர் குங் உள்ளே வந்தார். கூட்டத்துக்கு நாங்கள் திரும்பிவரத் தவறியதற்காக எங்களை அவர் நயமாகக் கோபித்துக் கொண்டார். இப்போது கூட்டம் கலைந்து விட்டதாம். ஆகவே, அவரும் உட்கார்ந்து கொண்டார். நாங்கள் நான்கு பேருமாக, பூலோகத்தின் பிரச்னைகளுக் கெல்லாம் பரிகாரம் காண முயன்ருேம்.

கீழ் நாட்டில் ஒரேயடியாய்ப் பரவிவரும் புரட்சிகரமான கருத்துக்களைப்பற்றி நாங்கள் பேசினேம். நான் எங்கே சென்ருலும், இந்த விஷயம் எழுந்தது. இந்தியாவையும் நேருவையும் பற்றியும், சீனுவையும் சியாங்கையும் பற்றியும் நாங்கள் பேசினேம். ஆசியாவின் கோடிக்கணக்கான மக்கள், சுதந்திர ஆர்வங்கொண்டு கொந்தளித் தெழுந்திருப்பது பற்றியும், கல்வியும் மேலான வாழ்வும் யாவற்றுக்கும் மேலாக மேல்நாட்டின் சார்பற்றுச் சுதந்தரமாகத் தங்கள் சொந்த அரசாங்கத்தை அமைத்துக் கொள்ளும் உரிமையும் தங்களுக்கு வேண்டும் என்று கேட்கும் அவர்களுடைய கோரிக்கைகள் பற்றியும் நாங்கள் பேசினேம்.

இந்தச் சம்பாஷணையிலே நான் லயித்துப் போனேன். அந்த மூவரும் மிக விஷயமறிந்தவர்களா யிருந்தார்கள். மூவருக்கும் திடமான அபிப்பிராயங்கள் இருந்தன. ஒவ்வொருவரும் - முக்கியமாய் ஸ்ரீமதி சியாங் - சம்பாஷணையில் நன்றாய்ப் பங்கெடுத்துக்கொண்டாள். கடைசியில் நாங்கள் புறப்படப்போகும் சமயத்தில் குங் தம்பதிகளிடம், ஸ்ரீமதி சியாங், "நம் நல்லெண்ணத்தைக் காட்டுவதற்காக, நான் அமெரிக்காவிலே ஒரு சுற்றுப் பிரயாணம் செய்ய வேண்டுமாம். நேற்றிரவு விருந்தின்போது வில்கீ எனக்கு இந்த யோசனையைச் சொன்னார்" என்றாள். 'இது உண்மையா?' என்று கேட்பதுபோல, குங் தம்பதிகள் என்னை நோக்கினார்கள். "உண்மையே. அந்த யோசனையை நான் சொன்னது மிகவும் சரி என்பதை நான் அறிவேன்" என்று சொன்னேன்.

டாக்டர் குங் மிக்க ஊக்கத்துடன், "மிஸ்டர் வில்கீ, உண்மையிலேயே இது உங்கள் விருப்பமா? அப்படியானால் என்ன காரணம்?" என்று கேட்டார்.

நான் சொன்னேன்: "டாக்டர் குங், ஆசியாவின் பிரச்னைகளையும் ஆசிய மக்களின் அபிப்பிராயங்களையும், என் நாட்டுச் சகோதரர்கள் அறிந்து கொள்வது அத்தியாவசியம் என்று நான் பலமாக நம்புகிறேன். யுத்தத்துக்குப் பின்னே கீழ்நாட்டின் பிரச்னைகளுக்கு நியாயமான பரிகாரம் கண்டால்தான் வருங்காலத்தில் உலக சமாதானம் நிலவும் என்று நான் உறுதியாய் நம்புகிறேன். இதை நீங்கள் நமது சம்பாஷணையிலிருந்து அறிந்துகொண் டிருப்பீர்கள்.

"இந்தப் பகுதியி லிருந்து, அறிவுத் திறமையும் வாக்குவன்மையும் தார்மிக பலமும் உள்ள யாராவது ஒருவர் எங்களிடம் வந்து, சீனாவையும் இந்தியாவையும் பற்றியும் அவற்றின் ஜனங்களைப் பற்றியும் எங்களுக்கு அறிவு புகட்டி உதவ வேண்டும். ஸ்ரீமதி சியாங், அருமையான தூதர் ஆவார்; அவர் அபாரமான திறமை வாய்ந்தவர். அவரை இப்படி நேரே புகழ்வதற்கு, அவர் என்னை மன்னிக்க வேண்டும். சீனாவிடம் அவருக்கு அபாரமான பக்தி இருக்கிறது. இது ஐக்கிய அமெரிக்காவில் உள்ளவர்களுக்கெல்லாம் மிக

நன்ருய்த் தெரியும். தம்மிடம் அவர்கள் அன்பு செலுத்துவதை மாத்திரமல்ல; தம் சொல்லுக்கு அளவிறந்த பலன் கிடைப்பதையும் அவர் காண்பார். வேறு யாருக்கும் செவி கொடுப்பதை விட அதிகமாய், அவருக்கு நாங்கள் செவி கொடுப்போம். நகைச்சுவையும் வசீகரமும், அநுதாபம் நிறைந்த தாராள உள்ளமும், அருளும் அழகும் பொதிந்த நடையும் தோற்றமும், திட நிச்சயம் கொண்ட கொள்கையும் படைத்தவராக இருக்கும் அவர் விஜயம் செய்வது, எங்கள் நாட்டுக்குப் பெரிதும் தேவை.''

இப்போது அவள் அமெரிக்காவுக்கு வந்திருக்கிருள். காங்கிரஸுக்கு அவள் உருக்கமான ஒரு பிரசங்கம் செய்தாள்; தங்களுக்குத் தாங்களே உதவிக் கொள்கிறவர்களுக்குத்தான் ஆண்டவன் உதவிபுரிவான் என்று, ஜனுதிபதிக்கு அவள் சுட்டிக் காட்டினுள். என்று அவள் அந்தப் பிரசங்கம் செய்தாளோ அன்று முதல், அவளுடைய தீரத்தையும் இயக்கத்தையும் அமெரிக்கா புகழ்ந்து பாராட்டி வருகிறது.

ஐக்கிய அமெரிக்க விமானப் படையின் சீன விமான சேவைப் படைக்குத் தலைவரா யிருப்பவர் பிரிகடீர்-ஜெனரல் கிளேர் எல். சென்னுல்ட் என்பவர். ஒரு முறை அவருடன் பேசிவிட்டால், பிறகு அவரை நீங்கள் மறப்பது கடினம். நல்ல உயரம்; மங்கல் நிறம்; ஒல்லி உடம்பு; அகன்ற மார்பு. லூயிஸானு வாசிகளுக்கு இயற்கையான முறையில் இழுத்து இழுத்துப் பேசுகிருர். ஆனுல், அவருடைய தாடையும் கண்களும் அதற்கு நேர்மாருக இருப்பது விசித்திரம். ஒரு போர் வீரனுகவும் விமான யுத்த தந்திரியாகவும்சீனவிமானப் படைகளுக்குப் பயிற்சி அளிக்க, சொந்த முறையில்தான், முதலில் அவர் சீனுவுக்குச் சென்ருர். பின்னுல், அமெரிக்க வாலண்டியர் படை யொன்றை, அவர் திரட்டினுர். அது சீனுவிலும் பர்மாவிலும் கீர்த்தி சம்பாதித்துவிட்டது. இன்று அவர் சீனுவின் சேனையிலே பதவி வகிக்கிருர். அவரைப் பெற்றது சேனையின் அதிருஷ்டம்.

அவரும் அவருடைய மனிதர்களும் என்ன வேலை செய்திருக்கிருர்கள் என்ற வரலாறு, இப்போது மிகவும் பிர

சித்தம். ஐப்பானிய விமானங்களை, அவர்கள் சுட்டு வீழ்த்தி யிருக்கிறார்கள். அந்தச் சண்டைகளில் இவர்களின் விமானம் ஒன்று நஷ்டமானால், எதிரிகளின் விமானங்கள் பன்னிரண்டு முதல் இருபது வரையில் நஷ்டமாயின. நான் சுங்கிங்கில் இருந்தபோது, இவர்கள் ஐப்பானியருடன் தொடர்ந்து நடத்திய எழுபது விமானச் சண்டைகளின் கணக்கைப் பார்த்தேன். அத்தனை சண்டைகளிலும், இவர்களுடைய விமானங்களைவிட எதிரி விமானங்களே எண்ணிக்கையில் அதிகமா யிருந்திருக்கின்றன. அப்படி யிருந்தும், அவற்றில் ஒரே ஒரு விமானங்கூட இவர்களுக்கு நஷ்டமில்லை. அவருடைய ராணுவத்தின் நிர்வாகத் தலைவர் கர்னல் மெரியம் ஸி. கூப்பர் என்பவர், ஒரு நாள் சுங்கிங்கில் என்னோடு சிற்றுண்டி உண்ண வந்தார். அவர் சொன்ன கதைகளைக் கேட்டால்,அவருடைய படைத் தலைவர் சென்னால்ட் நாணத்தால் கூச்சமுறக் கூடும்.பழையபோர்த்தந்திரங்களோடு மகா விசித்திரமான நூதன தந்திரங்களையும் சென்னால்ட் கலந்து விடுகிறாராம். இதை ஐப்பானியர் கொஞ்சங்கூட ரசிக்க வில்லை என்று தெளிவாய்ப் புலனாயிற்று. கால நிலை எப்படி யிருக்கிறது, விமான நடவடிக்கைகள் எடுக்க அநுகுணமான நிலைமைகள் எவ்வாறிருக்கின்றன, பிரதேச பூமியின் அமைப்பு எவ்விதமிருக்கிறது என்ற தகவல்களை அறிவதற்குத் தமக்குள்ளேயே வசதிகள் சொற்பமா யிருந்தும், இவற்றைச் சேகரிக்கத் தளபதி சென்னால்ட் கைக்கொண்டுள்ள முறை மகா ஆச்சரியமாயிருக்கிறது என்று, எங்கள் விமானி மேஜர் கைட் சொன்னார். ஏனென்றால், சீனாவில் விமானிகளுக்குத் தகவல் அளிப்பதற்கு, கால நிலை ஆராய்ச்சிக் காரியாலயங்கள் நல்லவையாக இல்லை. பெரும் பிரதேசங்களில் சீனத் தூதர்கள் அஞ்சல் வைத்துக்கொண்டு வரும் செய்திகளையும் திராட்சை மது வருகிற மார்க்கத்தால் கிடைக்கும் தகவல்களையுமே, தளபதி சென்னால்டின் ஆட்கள் பெரிதும் சார்ந்திருக்க வேண்டி யிருக்கிறது.

சீனர்களிடம் செல்வாக்குப் பெற்றிருப்பதில், தளபதி சென்னால்டுக்குப் போட்டியாக யாருமே கிடையாது என்

பதை, நான் நேரே அறிந்து கொண்டேன். செங்டுவில் ஒரு கலாசாலை உபாத்தியாயினியை, "உங்கள் மாணவர்கள் மிக நன்ருய்த் தெரிந்துகொண்டு, மிகவும் பிரியம் வைக்கும் அமெரிக்கர் யார்?" என்று விசாரித்தேன். அவள் ஒரு கண மும் தயங்காமல், "தளபதி சென்னுல்ட்" என்று பதிலளித் தாள். மிக முக்கியமான சீனத் தலைவர்கள், அவரைப் பற்றி மிக்க விரிவாகவும், அளவு கடந்த மதிப்போடும் அன்போடும் பேசிக்கொண்டதையும், நான் கேட்டேன். தளபதி சென்னுல் டைச் சந்தித்துப் பேச, பல தடவை ஏற்பாடு செய்தேன். ஆனுல், ஒவ்வொரு தடவையும், சந்திப்பு நடைபெருமல் போயிற்று. கடைசியாக், அவரைப் பார்ப்பதற்காக, சுங்கிங் குக்கு அருகேயுள்ள அவருடைய தலைமை ஸ்தலத்துக்கு நானே விமானத்தில் பறந்து சென்றேன். அவருடைய சொந்த விமான நிலையத்தில், அவரை நான் கண்டேன். அப்போது அவருடைய 40 சண்டை விமானங்கள், ஒரு வரிசையாய் அணிவகுத்து நின்றன. அவற்றுக்கு எதிரே அவர் நின்று கொண்டிருந்தார். அந்த விமானங்களில் ஒவ்வொன்றுக்கும், ராட்சசச் சுரு மீன் போல் வர்ணம் பூசி யிருந்தது. இந்தக் காட்சியைக் கண்டபோதுதான், தம் வாக்குப்படி ஒரு தடவை கூட அவர் ஏன் என்னை வந்து சந்திக்க இயலவில்லை என்பது எனக்குப் புரிந்தது.

நான் கண்ட மட்டும் மகா மும்முரமாகவும் பரபரப் போடும் வேலை நடந்துகொண் டிருக்கும் ஒரு விமான தளத்தை, அவர் நேரே யிருந்து நிர்வகித்து, கண்காணித்து வருகிருர். சுங்கிங், யுன்னுன் மாகாணத்தின் தலைநகரான குன்மிங்கு இரண்டின் மேலேயும் எதிரி விமானம் வராமல் தற்காப்பது அவர் வேலை. இது மட்டுமல்லாமல், இந்தியாவி லிருந்து பர்மாவுக்கு வரும் விமானப் பாதையைப் பாதுகாப் பதும் அவர் வேலை. இவற்றைத் தவிர, ஜப்பானியர் கையில் உள்ள காண்டன், ஹாங்காய், வடக்கே வட சைனுவில் உள்ள சீனத்துப் பெருஞ் சுவருக்கு அருகேயுள்ள கைலான் சுரங்கங்கள் ஆகியவற்றுக்குச் சென்று குண்டு போடும் உபரி வேலையையும் அவர் மேற்கொண்டிருக்கிருர். அவருடைய

ஆட்களெல்லாம், அநேகமாய் ஐக்கிய அமெரிக்காவின் தென் பகுதியி லிருந்து வந்தவர்கள். அதிலும் மிகப் பெரும் பாலோர் டெக்ஸாஸ் மகாகாணத்தைச் சேர்ந்தவர்கள். அவர்கள் அனைவரும் அவரிடம் அளவற்ற நம்பிக்கை வைத் திருக்கிறார்கள்; அவருக்காக, அற்புதங்கள் நிகழ்த்துகிறார்கள்.

நான் கண்ட ஒரு விஷயந்தான் என்னைத் திடுக்கிடச் செய்தது. அவரிடம் உள்ள தளவாடங்கள் மிகவும் குறை வானவை. அவருடைய கையில் உள்ள படை மிகச் சொற்ப மாயிருப்பதைப் பார்க்கும்போது, அவர் சாதித்திருக்கும் காரி யத்தை நம்மால் நம்பவே முடியவில்லை. அமெரிக்காவின் மகத்தான போர்வீரர்களின் ஐதிகத்தை,தளபதி சென்னால்ட் காப்பாற்றி வருகிறார். அவருக்குக் கீழே சேவை செய்யும் விமான வீரர்கள், நம்மிடம் சிறந்த உதவிபெற உரியவர் கள்; நம்மால் எவ்வளவு அதிகமாக முடியுமோ அவ்வளவு அதிகமாக அவர்களுக்கு நாம் உதவ வேண்டும்.

சென்னால்ட் நம்மிடம் கேட்கும் உதவி, நாம் ஆச்சரியப் படத் தக்கவாறு மிக அற்பமா யிருக்கிறது; அந்த அற்ப அளவுக்குங்கூட மிகவும் குறைவாகவே, நாம் உதவுகிறோம். சீனாவில் உள்ள ஜப்பானியருக்குத் தொல்லை உண்டாக்கவும், சீனக் கடல்வழியாக அவர்களுக்கு வரும் சப்ளையைத் தடுக்க வும், மகத்தான சீனப் படைகளுக்கு உதவி புரியவும் என்ன செய்யவேண்டும் என்பதைப் பற்றி, தளபதி சென்னால்ட் சொன்னார். மிகவும் அமைதியாக, ஆனால் மகா திடநம்பிக்கை யோடு, அவர் பேசினார். ஏதாவதொரு வகையான விமானக் குடையை, மகத்தான சீனப்படைகளுக்கு அளித்தால், அவை கிழக்குச் சீனாவின் சமவெளிப் பிரதேசத்தின் வழியாக முன் னேறிவிடும் என்று அவர் கூறினார். சீனாவி லிருந்து எதிரிமீது ஏதோ சொற்ப விமானத் தாக்குதல்தான் நடைபெறுகிறது. இதையாவது நலியாமல் நடத்தி வரவேண்டுமென்றால், பெட்ரோல், எண்ணெய், ஸ்பேர் பார்ட்டுகள், இழந்த வற்றை ஈடு செய்யும் பதில் விமானங்கள் ஆகிய பொருள் களை, ஹிமாலயத்துக்கு மேலேயுள்ள இப்போதைய விமான

மார்க்கமாகச் சீனுவுக்கு அனுப்பியாக வேண்டும் என்று, அவர் என்னிடம் சொன்னுர்.

தமக்கு இவ்வளவு தெளிவாய்ப் புரியும் விஷயம், அமெரிக்காவி லுள்ள அதிகாரிகளுக்குப் புரிய வில்லேயே, அது ஏன் என்று தளபதி சென்ளுல்ட் ஆச்சரியப்படுகிருர்!

ஏனென்ருல், இங்கே யிருந்து நடத்தும் தாக்குதலால், ராணுவப் பலன்கள் மட்டும் அல்ல; அதைவிட மேலான பலன்களும் கிட்டும். அது சீனச் சேனேகளுக்குப் புதிய நம்பிக்கை ஊட்டும்; சீன மக்களுக்குப் புதிய உற்சாகம் பிறப்பிக்கும். இன்னும் ஒரு வருஷ காலம் நாம் சீனர்களே அலட்சியம் செய்துவிட்டு, பிற யுத்த அரங்கங்களிலேயே நம் பலத்தைக் குவிக்கப் போகிருேம் என்ற அபிப்பிராயம் சீனர்களுக்கு உண்டாகாமல், நாம் தடுக்கவேண்டும். நான் சீனுவிலிருந்து ஊர் திரும்பியபோது, இதுதான் என் மனத்தில் தீர்மானமாகப் பட்டது. மேலே கண்ட அபிப்பிராயம் சீனர்களுக்கு உண்டாகும்படி விட்டால், சீன எதிர்ப்புக்கு என்ன பாதகம் நேருமோ அதைப் பற்றிக் கூட அக்கறை யில்லே; சீனர்களின் மனேபாவம் பழுதுற்றுச் சிக்கலாகிவிடும். பணப் பெருக்கத்தால், ஏற்கனவே அது அபாய நிலேயை அடைந்திருக்கிறது. மேலும், சமாதானத்தையும் யுத்தத்துக்குப் பிந்திய உலக ஒழுங்கையும் உறுதியான அஸ்திவாரத்தின் மீது அமைக்க வேண்டுமென்ருல், அதற்கு நாம் சீனர்களுடன் நல்ல நட்புக் கொள்ளவேண்டும். மேலே கண்ட அபிப்பிராயம் தோன்ற இடங்கொடுத்தால், இந்த நட்புக்குரிய வாய்ப்பை எல்லாம் நாம் இழந்துவிடுவோம்.

ஜப்பானுடன் சீனு, நீண்ட ஐந்து வருஷ காலத்துக்கு மேலாகச் சண்டையிட்டு வருகிறது என்ற விஷயம், நான் சீனுவில் இருந்த ஒவ்வொரு நாளும் எனக்கு ஞாபகம் வந்துகொண்டே யிருந்தது. சுங்கிங் நகருக்கு மேலே ஜப்பானிய விமானங்கள் பறந்துவரும்; சுங்கிங் குன்றுகளில் தோண்டிய, நம்ப முடியாத குகைகளில், நகரின் சகல ஜனங்களும் போய் அடைக்கலம் புகுவார்கள். அந்தக் குகைகள் சீனரின் யுத்தத்தை எனக்கு ஞாபக மூட்டின. ஜப்பானிய விமானப்

படையெடுப்புகள் முடிந்ததும், திரும்பத் திரும்ப, சீனர்கள் வெளியே வருவார்கள்; நாசமான நகரத்தைப் புதுப்பிக்கவும், தொடர்ந்து சண்டை யிடவும், திறமையோடும் பொறுமை யோடும் அவர்கள் வேலை செய்வார்கள். இந்த வேலைகளும், எனக்குச் சீனரின் யுத்தத்தை ஞாபகமூட்டின.

சீனுவில் ஜப்பானியரின் படையணிகளுக்குப் பின்னுல் சீனப் பொதுமக்கள் வீரமாய் எதிர்க்கிருர்கள். அதை நான் நேரே பார்க்க வில்லை. ஆனுல், அதைப்பற்றிய அற்புதக் கதைகளைக் கேள்விப்பட்டேன். அவற்றைப் பலமாய்த் தணிக்கை செய்து பார்க்கலாம். சுங்கிங்கில், அவற்றின் அசைக்க முடியாத ருசுக்களைக் காணலாம். நான் சுங்கிங்கில் இருக்கையிலே, ஷாங்காய், ஹாங்காங், பீகிங் முதலிய-ஜப்பானியர் கைப்பற்றிய-நகரங்களி லிருந்து ஆங்கிலேயரும் அமெரிக்கரும் இன்னும் வந்துகொண்டே யிருந்தார்கள். அவர்கள் கால் நொந்து போயிருந்தார்கள்; ஆயினும், சந்தோஷமாகவே யிருந்தார்கள். கூட்டங் கூட்டமாகச் சீனக் கொரில்லாச் சண்டை வீரர்கள், ஜப்பானியர் ஆக்கிரமித்த பிரதேசங்களின் உட்புறத்திலே ஒரு சங்கிலித்தொடர் போல், பரவி யிருக்கிருர்கள். அந்த ஒவ்வொரு கூட்டத் தாரும் மாற்றி மாற்றி மறு கூட்டத்தாரிடம் இந்த ஆங்கிலே யரையும் அமெரிக்கரையும் ஒப்படைத்து, நாட்டின் ஒரு பாதியைக் கடந்து இங்கே வரும்படி அனுப்பியிருக்கிருர்கள். சீனுவி லுள்ள சகல குடியானவர்களும், தினசரி தாங்கள் புரியும் வீரச் செயல்களின் மூலம், சுதந்தரத்துக்காகச் சர்வ தியாகமும் செய்யவும் போராடவும் தங்களுக்குள்ள ஆர் வத்தைக் காட்டி வருகிருர்கள்.

நீண்ட காலமாகச் சீனு போராடி வருவதன் சாட்சி யத்தை, அதன் ராணுவ அமைப்பிலிருந்து, நான் கண்டு கொண்டேன். சீன ராணுவ அமைப்பு, எனக்கு ஒரு புதுமை யான செய்தியாய் இருந்தது. அநேகம் சீனர்களுக்கும் அது புதுமையாய்த்தான் இருக்கிறது என்பதைப் பின்னுல் கண்டு கொண்டேன். சீன ராணுவம் என்பது வழக்கமான துஷ்டர் களின் கூட்டம் என்றும், அவற்றின் தளகர்த்தர்க ளெல்லாம்

எதிரியோடு அற்பப் பேரங்கள் நடத்துவதில் நிபுணர்கள் என்றும், இன்னுங்கூடப் பல அமெரிக்கர்கள் சித்திரம் செய்து கொண்டிருக்கிருர்கள். ஒற்றுமை குலைந்தும் யந்திர சூட்சுமங் களில் பிற்போக்காகவும் இருந்த ஒரு நாட்டின் ராணுவ விவகாரங்களைப் பற்றி, இது ஒரு கேலிச் சித்திரமே யல்லா மல் வேறல்ல. இன்று, அந்தக் கேலிச் சித்திரத்துக்குக் கூட இடமில்லை. சீன ராணுவம், மிக்க ஒற்றுமையா.யிருக்கிறது. அதன் தலைவர்கள் தேர்ச்சியும் திறமையும் உடையவர்கள். அதன் புதிய சேனைகள், உரம் கொண்டவையா யிருக் கின்றன. தாங்கள் எதற்காகச் சண்டையிடுகிரும் என்பதை யும், அதற்கு எப்படிச் சண்டையிடுவது என்பதையும் நன்ருக அறிந்த மனிதரே, சேனைகளில் அடங்கி யிருக்கிருர்கள். நவீன யுத்தக் கருவிகள்தாம் அவர்களிடம் சிறிதும் இல்லை. ருஷ்யாவில் எப்படியோ அப்படியே சீனுவிலும். இதுஉண்மை யிலே ஜனங்களின் யுத்தமாகும். உயர்ந்த சொத்துக்காரர் களின் பிள்ளைகள் கூட, ராணுவத்தில் சாமான்யச் சிப்பாய் களாய்ச் சேருகிருர்கள். இது ஒரு தலைமுறைக்கு முன்பு, நினைக்கவும் முடியாத ஒரு காரியம். அறியாத கூலிக்காரர் கள் மட்டுமே அந்தக் காலத்தில் ராணுவத்தில் சேர்ந்து வந் தார்கள்.

ஒரு நாள் பிற்பகலில், செங்டுவுக்கு வெளியே, சேறும் சகதியுமா யிருந்தாலும், வேகமாய் ஓடும் ஓர் ஆற்றின் குறுக்கே கட்டியிருந்த குறுகலான ஒரு பாலத்தின்மீது, நான் நின்றுகொண் டிருந்தேன். என் முன்பு பக்கத்திலே ஆற்றங் கரை நெடுகச் சுவர் வைத்தாற்போல், கனமான ஒரு புகை எழுந்து கண்ணை மறைத்தது. அந்தப் புகைச் சுவரினூடே, மெஷின்-கன் வேட்டு வெளிச்சம் பளீர் பளீர் என்று வீசியது. எனக்குப் பின்னே யிருந்த புலங்களில், சிறிய பீரங்கிகள் படீர், படீர் என்று வெடித்துக்கொண் டிருந்தன. ஆறு நிறை யச் சீன வாலிபர்கள், வேகமான நீரோட்டத்தை எதிர்த்து நீந்திக்கொண் டிருந்தார்கள். அவர்களில் சிலர் தங்கள் தலைக்கு மேலே, ரைபிள்களைப் பிடித்துக்கொண்டிருந்தார்

கள். மற்றவர்கள், படகுப்பாலம் ஒன்றில் கட்டிய கயிறு களைச் சுமந்துகொண்டு வந்தார்கள்.

பாலம் ஒரு சமயம் நீர்ச் சுழலிலே, வசமாய் அகப்பட்டுக் கொண்டது. அப்போது, அதை அவர்களால் ஆற்றின் குறுக்கே அக்கரை சேர்க்க முடியாது என்று, நான் எவ்வளவு வேண்டுமானாலும் பந்தயம் வைத்திருப்பேன். என்றாலும், அவர்கள், அதை அக்கரை சேர்த்து விட்டார்கள். உடனே, என் பின்னே இருந்த வயல்களிலிருந்து, திடீரென்று நூற்றுக் கணக்கான வேறு பல போர்வீரர்கள் கிளம்பினார்கள். அவர் களின் இரும்புத் தொப்பிகளும் உடுப்புகளும், கண்ணுக்குத் தெரியாதபடி அவ்வளவு ஜாக்கிரதையாய் வர்ணம் பூசி யிருந்தன. அவர்கள் படகுப் பாலத்தின் வழியே ஓடி, பரபர என்று, ஆற்றின் மறு கரைக்குப் போய்ச் சேர்ந்தார்கள். பிறகு ஒருவர் பின் ஒருவராய் அணிவகுத்துக்கொண்டு, சுமார் ஓரு மைல் தூரத்துக் கப்பால் உள்ள ஒரு கிராமத்தைத் தாக்குவதற்காகச் சென்றார்கள்.

கிராமத்தை அவர்கள் கைப்பற்றி விட்டார்கள். ஆனால், அதற்கு முன்னே, அவர்கள் இரும்பு முள்வேலிகளை வெட்டி யெறிந்து வழி செய்துகொள்ள வேண்டியதாயிற்று; தவறித் தொட்டுவிட்டால் பிரமாதமாய் வெடித்துப் புகை யெழுப் பிய நிலக்கண்ணிகளுக்கு அகப்படாமல் நடக்கவேண்டியதா யிற்று; கடைசியாக, திறந்த வெளியாயிருந்த ஒரு புலத்தில், மேலே உறை யொன்றுமில்லாமல், மார்பினால் ஊர்ந்து செல்லவேண்டியதாயிற்று. பூரண ஆயுதங்களோடு, உஷ்ண மும் களைப்பும் அழுக்குமாய், அவர்கள் அந்தக் கிராமத்துக் குள்ளே பிரவேசித்தார்கள். போர்க்களத்திலே, சிக்கலான முறையில் ஒரு சண்டையை நடத்துவதற்கு, தாங்கள் புதி தாய்ச் சம்பாதித்துக்கொண்ட ஞானத்தைப் பற்றிய பெருமை அவர்களுக்கு இருந்தது.

ஏனென்றால், இது ஒரு ராணுவப் பயிற்சியே. சீனாவிலே மிகப் பெரியதான செங்டு ராணுவ 'அக்காடமி'யில் நடந்தது இந்தப் பயிற்சி. அமெரிக்க ராணுவ அக்காடமியான வெஸ்ட் பாயிண்டில் பட்டம் பெற்ற ஒருவர்தான், இந்த ராணுவக்

கல்லூரியை ஏற்பாடு செய்திருக்கிறுர். அவர் என் அருகே நின்றுகொண்டு, இந்தப் பயிற்சி நடந்துகொண்டேயிருக்கை யில் இதைப் பற்றி எனக்கு விளக்கிச் சொன்னுர். புதிய சீன ராணுவத்தில் அதிகாரிகளாகப் பதவி ஏற்க, பதினுயிரம் மாணவர்கள் இங்கே முறையாய்ப் பயிற்சி பெறுகிறுர்கள். அவர்களில் பெரும் பகுதியினர், இந்த ராணுவ அப்பியாசத் தில் கலந்துகொண்டார்கள். இது ஒரு பரபரப்பூட்டும் காட்சியா யிருந்தது; உலகத்தில் வேறு எந்த இடத்திலும் நடக்கக்கூடிய இந்த மாதிரி பயிற்சிக்கு இணையாகவே, தொழில் முறையில் இதுவும் இருந்தது. அன்று பிற்பகலில் நான் கண்டது போன்ற காட்சிகளை மீண்டும் மீண்டும் பார்க்க நேர்ந்தது. என் சம்பந்தப்பட்ட மட்டும் இந்தக் காட்சி, ஒரு பழைய சகாப்தத்தின் முடிவையே சுட்டிக் காட் டியது-நான்கு கோடி சீனர்களை, ஜப்பானியரோ, பிரிட்டி ஷாரோ, அமெரிக்கரோ புரட்டிப்புரட்டி உதைக்கலாம் என்று தோன்றிய சகாப்தம் முடிந்து விட்டது.

ஐந்து வருஷங்களாகச் சீனு போராடி வருகிறது என்ற சாட்சியத்தை, செங்டுவில் உள்ள விமானப் படைப் பயிற்சிக் கலாசாலையில், அடுத்த நாளும் நான் கண்டேன். இங்கே நூற்றுக் கணக்கான மாணவர்கள் ராணுவப் பயிற்சி பெற் றுர்கள். சில வருஷங்களுக்கு முன் வரையில் இதே சீனர் களைத்தாம், போரிடும் ஜாதியார் அல்ல என்று நாம் சொல் லிக்கொண் டிருந்தோம். இந்தச் சீன மாணவர்கள், பெருந் தடிகளை வைத்துக்கொண்டு, ஒருவரை ஒருவர், ஜப்பானிய முறையில் தாக்கியடித்துக்கொண் டிருந்தார்கள். இந்த மாதிரி மகா கடுமையாக ஒருவரோடு ஒருவர் புரியும் மல் யுத்தப் பசியிற்சியை, நான் இதுவரையில் கண்டதே யில்லை. இங்கேயும்கூட, சீன வாலிபச் சாரணர்கள், போர் வீரர் களாய் வாழ்க்கையில் புகத் தயாராகிக்கொண் டிருந்ததை நான் கண்டேன். அவர்களில் சிலருக்கு எட்டே வயதுதான் இருக்கும். ராணுவ வாழ்க்கையின் பூரணக் கட்டுப்பாட்டுக் கும் பயிற்சிக்கும் அவர்கள் உட்பட்டிருந்தார்கள்.

சீனப் போர் முனையின் ஏதாவது ஒரு மண்டலத்தைப் போய்ப் பார்க்க விரும்புகிறேன் என்று 'ஹாலி' டாங் அவர்களிடம் நான் சொன்னேன். முதலிலே அது அசாத்தியமாய்த் தோன்றியது. சீனாவில் இருக்கும் வரையில் நான் பத்திரமாயிருக்கும்படி பார்த்துக்கொள்ளத் தளபதி சியாங் கவலை கொண்டிருந்தார் என்றும், அவரைச் சரிக்கட்ட 'ஹாலி' டாங்குக்குச் சிறிது காலம் பிடித்தது என்றும் பின்னால்தான் அறிய வந்தேன். கடைசியில், ஒரு முறை போர்முனைக்குச் சென்று வர ஏற்பாடாயிற்று. நாங்கள் எதிர்பார்த்த அளவு அபாயம் எங்களுக்கு நேரவில்லை. ஆனால், சீனர்கள் சர்வ பரித்தியாகம் செய்து ஐந்து வருஷங்களாக நடத்தும் யுத்தத்தினால், அவர்கள் எவ்வளவு விஷயங்களைக் கற்றுக்கொண்டிருக்கிறார்கள் என்பது குறித்து, எங்களுக்கு மற்றுமொரு படிப்பினை கிடைத்தது.

நாங்கள் சியானுக்குப் பறந்து சென்றோம். அது சீனாவின் புராதனத் தலைநகரங்களில் ஒன்று. மஞ்சள் நதி கிழக்கு முகமாய்க் கடலை நோக்கித் திரும்பும் பெரிய திருப்பத்துக்கு அருகிலே, அந்த நகரம் இருக்கிறது. நகரத்துக்கு வெளியிலே, பல மைல் தூரம், நாங்கள் காரில் சென்றோம். சீன லாந்தர்க் கம்பங்கள் வரிசையாய் நட்டு ஒளி செய்துகொண்டிருந்த மலைப்பாதை வழியிலே ஏறினோம். அங்கே மற்றொரு ராணுவக் கல்லூரிக்குப் போய்ச் சேர்ந்தோம். 1936-ஆம் வருஷம் தளபதி சியாங்கை நரசோரம் செய்தார்களே, அந்தப் பிரசித்தமான சம்பவத்துக்கு முன்னே அவர் இங்கேதான் வசித்தார். ஏதோ எஞ்சியிருந்த சில சீன ரெயில் பாதைகளில் ஒன்றின் வழியே, தூங்கும் வசதியுள்ள சுகமான ரெயில் வண்டிகளில் அன்று மாலை நாங்கள் போர் முனைக்குப் புறப்பட்டோம். இது பொருத்தமில்லைதான்.

அடுத்த நாள் உதயத்தில், ரயிலை விட்டு இறங்கி, கை வண்டிகளில் இன்னொரு பதினைந்து மைல் தூரம் பிரயாணம் செய்தோம். இந்த மண்டலத்தில், ஆற்றுக்குச் சில மைல் தூரத்தில்தான் போர்முனை இருக்கிறது. அங்கே சென்றதும், எங்களோடு இருந்த ஒரு தளகர்த்தர், நாங்கள் காலில்லா

முடங்கள் போல், ஆற்றின் அக்கரையி லுள்ள ஜப்பானியருக் குத் தோன்றக்கூடா தென்று அபிப்பிராயப் பட்டார். பிறகு நாங்கள் நடக்கத் தொடங்கினோம். கடைசிச் சில மைல் தூரம், அகழ் போல் வெட்டி யிருந்த ஒரு ரஸ்தாவில் நடந்து சென்றோம். மத்திய சீனுவின் செம்மண்ணில், அந்த ரஸ் தாவை ஆழமாக வெட்டி யிருந்தார்கள்.

ஒரு கிராமந்தான் போர்முனையா யிருந்தது. கிராமத் தைச் சுற்றிலும் வலைப் பின்னல்போல் குறுக்கும் நெடுக்கு மாய்ப் பல அகழ்கள் வெட்டி யிருந்தார்கள். இந்த இடத்தில் ஆற்றின் அகலம் ஆயிரத்து இரு நூறு கஜம் இருந்தது. ஆனுல், முன் புறத்தில் உள்ள காவல் பரண்களி லிருந்து, பீரங்கிப் படையின் தூரதிருஷ்டிக் கண்ணுடி மூலம் பார்த்த போது, எங்களை நோக்கி நின்ற ஜப்பானியப் பீரங்கிப் வாய் களையும், தங்கள் சொந்த முகாம்களில் இருந்த ஜப்பானிய ஸோல்ஜர்களையும் நாங்கள் காண முடிந்தது. நாங்கள் அங்கே யிருந்த வரையில் அந்த இடம் அமைதியாகவே இருந் தது. ஆனுல், எப்போதும் அப்படி இல்லை. உண்மையைச் சொல்லப் போனுல், நாங்கள் போய்ச் சேரச் சிறிது நேரத் துக்கு முன்புதான், அங்கே பீரங்கிக் குண்டுகள் விழுந்து கொண் டிருந்திருக்கின்றன.

தளபதி சியாங்குக்கு, அவருடைய மூத்த மனைவியிடம் பிறந்த மகனுன காப்டன் சியாங் வெய்-காவோ என்பவரை நான் சந்தித்தது, இந்தப் போர் முனையில்தான். காப்டன் சியாங் அருமையாய் ஆங்கிலம் பேசுகிறுர். இங்கே மலை களுக்கு நடுவிலே ஓர் இடைவெளி இருக்கிறது. தென் சீனு வில் படை யெடுப்பதற்கு இதுதான் வழக்கமான மார்க்கம். ஜப்பானியர் ஏன் ஆற்றைக் கடந்து வர முடியவில்லை என்ப தன் காரணங்களை, காப்டன் சியாங் ஒரு நாள் முழுவதும் எங்களுக்கு விளக்கிச் சொன்னுர்.

பீரங்கிப் படைகளையும், காலாட் படைகளையும், கவச மோட்டார்களையும், குன்றுகளுக்குள்ளே கட்டியிருந்த கோட் டைகளையும் நாங்கள் கண்டோம். அந்தக் குன்றுகளையே குண்டு போட்டுத் தகர்த்தா லொழிய, கோட்டைகளை ஜப்

பானியர் ஒன்றும் செய்யமுடியாது. இரு நூற்று எட்டாவது டிவிஷனின் அணிவகுப்பை நாங்கள் பார்வை யிட்டோம். அது சியாங்கின் கீர்த்தி பெற்ற சேனைகளில் ஒன்ருகும். அதில் உள்ள வீரர்கள் நல்ல பயிற்சி பெற்றவர்கள்; நல்ல உடுப்பணிந்தவர்கள்; நவீனமான நல்ல தளவாடங்களைப் பெற்றவர்கள். அவர்கள் சுமார் ஒன்பதிணுயிரம் பேர், எரிக்கும் வெயிலிலே நின்றுகொண் டிருந்தார்கள். அவர்களுக்கு நான் ஒரு பிரசங்கம் செய்தேன்.

நான் நிற்பதற்கு, மரத்திஞல் கட்டிய ஒரு பிரசங்க மேடையைத் தயாரித் திருந்தார்கள். அந்தச் சிறு மேடையையே, அவர்கள் அண்ணுந்து பார்த்துக்கொண் டிருந்தார்கள். நான் ஆங்கிலத்திலேயே பேசினேன். அப்படியிருந்தும், என் பிரசங்கத்தை முடிக்கும் வரையில் அவர்களில் ஒருவர்கூடத் தங்கள் கவனத்தைச் சலிக்க விடவில்லை என்றே எனக்குத் தோன்றியது. என் சொற்களைத் துபாஷி மொழி பெயர்த்துச் சொன்னபோது, அவர்கள் பிரமாத இரைச்சல் போட்டுச் சந்தோஷ ஆரவாரம் செய்தார்கள். இந்த ஆரவாரம், ஜப்பானியருக்குக் கூடக் கேட்டிருக்கும்; எதற்காக இந்த உற்சாகம் என்று, அவர்கள் ஆச்சரியப்பட் டிருப்பார்கள்.

எங்கள் ரெயில் வண்டிக்குத் திரும்பி வந்து சேர்ந்ததும், உணவுகொள்ள உட்கார்ந்தோம். நான் இப்போது பார்த்து வந்த போர்முனை வெறுங் காட்சி ஸ்தலம் அல்ல என்பதை, காப்டன் சியாங், அசைக்க முடியாமல் நிரூபணம் செய்தார். ஜப்பானியக் குதிரை வீரரின் வாள்களை எங்களுக்குப் பரிசாகக் கைநிறைய எடுத்துக்கொண்டு, உணவு வண்டிக்குள் அவர் வந்தார். நேர்த்தியான பிரெஞ்சு ஒயினும் கொண்டு வந்தார். இரண்டும் ஜப்பானிய ரிடமிருந்து கைப்பற்றியவை. இரவிலே ஆற்றைக் கடந்து, ஜப்பானிய அணிவகுப்புகளுக்குப் பின்னே வேகமாய்ப் புகுந்து தாக்கும் சீனப்படைகள், இவற்றையும், இவற்றை விட முக்கியமான வேறு பல வெற்றிச் சின்னங்களையும், கைதிகளையும், ராணுவ தந்திரத் திட்டங்களையும் கைப்பற்றி வந்திருக்கின்றன. சில சமயம்

அந்தப் படைகள், பல வார காலம் சத்துருவின் அணிவகுப்புகளுக்குப் பின்னேயே இருந்து கொண்டு, போக்கு வரத்து வசதிகளை வெட்டிவிடுமாம்; நாசவேலைகளுக்கு ஏற்பாடு செய்யுமாம்; பிறகு ஆற்றின் மேல்கரையில் உள்ள தங்கள் தலைமை ஸ்தலத்துக்குத் திரும்பி; விடுமாம். இதெல்லாம் காப்டன் சியாங் சொன்னது.

## 9. சீனப் பணப் பெருக்கத்தைப் பற்றிச் சில குறிப்புகள்

சீனாவின் இப்போதைய பொருளாதாரப் பிரச்னைகளையும் பணப் பெருக்கப் பிரச்னைகளையும் கண்டு பெரிதும் மலைப்படைந்தவனாகத்தான், நான் சீனாவை விட்டு வெளிவந்தேன். நாணய ரீதியான பொருளாதார நோக்கிலே பார்த்தால், தன் பணப் பெருக்கத்தினால் சீனா வெகு நாளைக்கு முன்பே நிலைகுலைந் திருக்கவேண்டும். என்றாலும், நிதி சம்பந்தமான நெருக்கடி சீனாவுக்கு ஒருபோதும் வரவில்லை. ஆனால், எந்த நிமிஷத்தில் அது வந்துவிடுமோ என்ற அச்சம் மாத்திரம் நமக்கு இருந்துகொண்டே யிருக்கிறது.

பணப்பெருக்க நிலைமையைப் பற்றித் தீர்மானம் செய்வதற்கு, விலைவாசிப் புள்ளி விவரங்களை அமெரிக்கப் பாங்கர்கள் கணக்கிடுவார்கள். ஆனால், சீனாவில் அந்தக் கணக்கு மட்டும் போதாது. அங்கே நாங்கள் சென்ற பல நகரங்களிலும், விலைவாசிகள் பெரிதும் வித்தியாசப்பட்டன. ஆனால் மிக ஏராளமான சீனர்கள், தங்கள் நாட்டு நாணயங்களைப் புழங்காமலே வாழ்கிறார்கள்; விலைகளைப் பற்றி அவர்களுக்குக் கவலையில்லை. சொற்ப உடைக்கும் முக்கியமான மிகச் சில கைத்தொழில் பண்டங்களுக்கும் தவிர, வேறெதற்கும் அவர்கள் விலை கொடுப்பதில்லை. இது எனக்கு ஒவ்வொரு நாளும் மிகத் தெளிவாய்ப் புலனாயிற்று. இவ்வா றிருந்தாலும் எங்களைச் சுற்றிலும் தென்பட்ட பணப்பெருக்கக் குறிகள், அமெரிக்கரான எங்களுக்கு அளவு கடந்த கவலை தந்தது.

சுங்கிங்கில், மொத்த விலைகள் யுத்தத்துக்கு முன்பு இருந்ததைவிட ஐம்பது மடங்குக்கு மேல் ஏறியிருக்கின்றன என்று சொன்னார்கள். சில்லறை விலைகளோ, அறுபது மடங்கு வரையில் ஏறியிருக்கின்றனவாம்; நான் அக்டோபர் மாதம் அங்கே போய்ச் சேரும் வரையில், மாதம் ஒன்றுக்குப் பத்துச் சதவிகிதம் அளவில் விலைகள் ஏறிக்கொண்டே வந்தனவாம். இந்த விலை ஏற்றத்தினால், பல வகுப்பு ஜனங்களின் பாடு - முக்கியமாக, ஒரு நிர்ணயமான வருமானம் உடையவர்களின் பாடு - கஷ்டமா யிருக்கிறது. முன்பு அவர்கள் உபயோகித்து வந்த அநேகம் சாமான்கள் இப்போது அவர்களுக்குக் கிட்டவில்லை.

செங்டுவில், உபாத்திமை வேலை பார்க்கும் இரண்டு வாலிபப் பெண்கள், ஒரு நாள் முழுவதும் எனக்கு விலைவாசி நிலைமையை விளக்கிச் சொன்னார்கள். இருவரும் படித்த பெண்கள். நன்றாய் ஆங்கிலம் பேசினார்கள். பயிற்சி மிகுந்த ஆண்களே இன்னமும் குறைவாகவே யிருக்கும் வாலிபக் குடியரசு சீனா. அதில், இவர்கள் சிறந்த வகையான பிரஜைகள் என்பது நிச்சயம். வாழ்க்கைச் செலவுகள், மிகக் கடுமையாய் ஏறிவிட்டன என்று இவர்கள் எனக்குச் சொன்னார்கள். என்றாலும், சுமை தாங்கும் மிக எளிய கூலியாட்களைப் போல் கூட, தாங்கள் உணவு உண்ண முடியவில்லை என்று கூறினார்கள். ஏனென்றால், கூலியாட்கள் நிர்ணயமான சம்பளம் வாங்குபவர்கள் அல்ல. கூலி விகிதமும் பணப் பெருக்கத்துக்கு ஏற்றபடி ஏறியிருக்கிறது.

அதே நகரில், சீனாவின் மகத்தான சர்வகலாசாலைகளின் தலைவர்களோடு, சீனக் கல்விப் பிரச்னைகளைப் பற்றி நான் பேசிக்கொண் டிருந்தேன். சர்வகலாசாலைகளின் வருமானம் நிதானமாகவோ வேகமாகவோ அதிகரித்துத்தான் வந்திருக்கிறது. 'ஐக்கிய சீனக் கஷ்ட நிவாரண நிதி'யாரின் உதவியால், சர்வகலாசாலைகளின் வரவு செலவுத் திட்டங்களை, யுத்தத்துக்கு முந்திய நிலையிலேயே இருக்கும்படி சரிக்கட்டுகிறார்கள். ஆனால், விலைவாசிகள் ஐம்பது மடங்கு உயர்ந்திருந்தும், அமெரிக்க நாணயங்களுக்கு, சீன நாணயங்களின்

பரிவர்த்தனை மதிப்பு மூன்று மடங்குதான் உயர்ந்திருக்கிறது. அதனால், உபாத்தியாயர்களும் மாணவர்களும் எந்த நெருக் கடிக்கு ஆளாகி யிருக்கிறார்களோ அதே நெருக்கடிக்குச் சர்வ கலாசாலைகளும் ஆளாகி யிருக்கின்றன.

இந்தப் பணப்பெருக்கத்துக்குப் பல காரணங்கள் இருப் பதை நான் கண்டேன். சீனா, காகித நாணயங்களை வெளி யிட்டு அதைக் கொண்டு யுத்தச் செலவு செய்கிறது. இது முதல் காரணம். 1942-ஆம் வருஷம் சர்க்காரின் நிர்வாகச் செலவில் நாலில் ஒரு பங்குதான் வரிகளின் வருமானத்தைக் கொண்டு செய்யப்பெற்றிருக்கிறது. உப்பு, சர்க்கரை, தீப் பெட்டி, புகையிலை, தேயிலை, சாராயம் முதலிய பல சரக்கு களைச் சர்க்காரின் புதிய ஏகபோக வியாபாரமாய்ச் செய்து கொண் டிருப்பதால், வருமானம் அதிகரித்திருக்கிறது. என்றா லும், அது போதவில்லை. பொது ஜனங்கள் பணம் சேமித்து, சர்க்காரின் கடன் பத்திரங்களை வாங்கிக்கொள்ளவும் இல்லை. ஆகவே யுத்தத்தை விடாமல் நடத்துவதற்காக, அச்சுக் கூடங்களையே உபயோகித்து வரவேண்டிய (நோட்டு நாண யங்களை வெளியிட்டுக்கொண்டே யிருக்க வேண்டிய) நிர்ப் பந்தம் சர்க்காருக்கு ஏற்பட்டிருக்கிறது. ஹிமாலயத்துக்கு மேலே பறந்து செல்லும் விமானங்களின் சுமையில் பெரும் பகுதியும் காகித நாணயங்கள்தாமாம். வர வர அதிகரித்துக் கொண்டே வரும் யுத்தச் செலவைச் சமாளிப்பதற்காகத் தான், இந்தக் காகித நாணயங்கள் செல்லுகின்றனவாம். இதை அந்த விமானிகளிடமிருந்தே நான் கேட்டறிந்தேன்.

சர்க்கார் சரியான நிதிக் கொள்கையை அநுஷ்டிக்கத் தவறியது, இதற்கு ஓரளவு காரணம். நாணயத்தையும் விலையையும் கட்டுப்பாடு செய்யவில்லை; போதுமான வருமா னம் அடையவும், பணப் பெருக்கம் காரணமாக அதிக லாபம் கிடைக்கும் சில வியாபாரங்களில், அப்படிக் கிடைக் கும் லாபத்தை யெல்லாம் இழுத்துக்கொள்ளக் கூடிய முறை யில் வரி விதிக்கவும், சர்க்கார் முயலவில்லை. மூலாதாரமான பண்டங்களின் விஷயத்தில் மார்க்கட் சூதாட்டம் நடத்து வோரைத் தடுப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுக்க

வும் சர்க்கார் தவறிவிட்டது. சர்க்கார் அதிகாரிகளே இந்தச் சூதாட்டம் நடத்துகிறார்களாம். சீனாவில் உள்ள சுயேச்சையான சில பத்திராசிரியர்கள், இதை என்னிடம் வலியுறுத்திச் சொன்னார்கள். சீர்கேடுகளையெல்லாம் ஒழிக்கவும், பொருளாதாரத்தில் ஓர் ஒழுங்கை நிறுவவும், லஞ்சம் வாங்குவோரைத் தொலைக்கவும் தளபதி சியாங் முயன்றுகொண்டிருப்பதாக, ஒவ்வொருவரும் என்னிடம் சொன்னார்கள். ஆனால், நீதி விஷயங்களிலோ, வரி விதிப்புக் கலையிலோ, தளபதிக்குப் பரிசயம் கிடையாது. அவருக்குப் பயிற்சியும் மனோபாவமும் வேறு துறைகளில்தாம் உண்டு.

இந்தப் பணப் பெருக்கத்துக்கு மற்றொரு காரணம், சுதந்தரச் சீனாவில் சரக்குக்கு பஞ்சம் மிகக் கடுமையாய் ஏற்பட்டிருப்பதுதான். சீனாவுக்கு நாம் சாமான்கள் அனுப்பத் தவறியது இந்தப் பஞ்சத்துக்கு ஓரளவு காரணம். சீனாவில் ஏற்கனவே கைத்தொழில் வளர்ந்திருந்த பகுதிகளை ஜப்பான் பெரும்பாலும் கைப்பற்றிவிட்டது; ருஷ்யாவிலிருந்தும் ஹிமாலயத்துக்கு மேற்புறமாகவும் வரக்கூடிய வழிகள் தவிர வேறு எந்தப் பக்கத்திலும் சீனாவுக்கு உலக சம்பந்தமில்லாமல் ஜப்பான் வளைத்துக்கொண்டிருக்கிறது. பண்டங்களின் பஞ்சத்துக்கு இது இன்னுமொரு காரணம். சுதந்தரச் சீனாவின் உட்புற எல்லைகளுக்குள்ளாகவே பெரிய அளவில் கைத்தொழில்கள் புரிவதற்கு, மூலப் பொருள்களும் சில முக்கியமான மெஷின்களும் தேவை. இவை இரண்டையும் பெறுவது இப்போது மகா கஷ்டமாயிருக்கிறது.

நான் பார்த்தமட்டும் இந்தப் பிரச்னையைச் சமாளிக்க, சீனர்கள் புரிந்திருக்கும் காரியங்கள் அற்புதமாகும். ஆனால் அற்புதங்கள் மட்டும் போதமாட்டா. டாக்டர் வாங் வென்-ஹவோ என்பவர்தான் பொருளாதார மந்திரி. ஒரு நாள் முழுவதும் மிக உற்சாகமாக அவருடன் கழித்தேன். சுங்கிங்கில் ஒரு பஞ்சாலையை அவர் எனக்குக் காட்டினார். ஹொனான் மாகாணத்திலிருந்து இங்கே அந்த ஆலையை அவர்கள் கொண்டு வந்திருக்கிறார்கள். ஒரு காகித ஆலையையும் அவர் காட்டினார். அதை ஷாங்கேயிலிருந்து 1938-ஆம்

வருஷம் இங்கே கொண்டு வந்தார்களாம். மொத்தம் ஒரு லட்சத்து ஆறுபதினாயிரம் டன் நிறையுள்ள யந்திரங்களை, நாட்டின் உட்பிரதேசங்களுக்கு, சர்க்கார் கொண்டு வந்திருப்பதாக, அவர் சொன்னார். அந்த யந்திரங்களில் பெரும் பகுதியும் இரும்பு, எஃகு, நூல், நெசவு முதலிய தொழில்களில் ஈடுபட்டிருக்கின்றனவாம்.

மேலே குறித்த இரண்டு ஆலைகளும் போதிய அளவு பெரியவையாகவே இருந்தன; நன்றாய் வேலை செய்யக் கூடியவையாயும் தோன்றின. பாங்கி நோட்டுகள் அச்சடிப்பதற்குத் தேவையான காகிதம் செய்யும் வேலையை இந்தக் காகித ஆலையில் தொடங்கப் போகிறார்களாம். நாள் ஒன்றுக்கு ஐந்து முதல் ஒன்பது டன் வரையில் அத்தகைய காகிதம் தயாரிக்கும் சக்தி, இப்போது இதற்கிருக்கிறதாம். பத்துக்கோடி மக்களின் தேவையைப் பூர்த்தி செய்ய, இந்த உற்பத்தி எம்மாத்திரம்! இதை நோக்கும் போது, யுத்தத்துக்கு நடுவிலே புதியதொரு பொருளாதார அஸ்திவாரத்தை அமைக்க முயலுவதில், சீனாவின் பிரச்னை எவ்வளவு கடுமையானது என்பது புலனாகும்.

சீனாவின் கைத்தொழில் கூட்டுறவு ஸ்தாபனங்கள், இந்தப் பிரச்னையைச் சமாளிக்க உதவி யிருக்கின்றன. லாஞ்சோவில், அந்தக் கூட்டுறவு ஸ்தாபனங்களை நான் பார்த்தேன். ஆனால், அந்த ஸ்தாபனங்களுக்குச் சில சங்கடங்கள் நேரிட்டிருக்கின்றன. யார் அவற்றின் மீது ஆதிக்கம் செலுத்துவது என்ற விஷயத்தில் பிணக்கு ஏற்பட்டிருப்பது தான் அந்தச் சங்கடங்களின் காரணம். அவற்றை நடத்தி வருபவர்களுக்கு ஒரு நினைப்பு இருக்கிறது. சீனாவில் உள்ள ஏதோ சில பொருளாதார சக்திகளும் கைத்தொழில் சக்திகளும் அவற்றை அழித்துவிட முயல்வதாக அவர்களின் நினைப்பு. ஆனால், அவர்களுக்கு உறுதியான உற்ற நண்பர் தளபதி சியாங். அவர்களுடைய பிரச்னைகளைப் பற்றி, நான் தளபதியுடன் விரிவாகப் பேசிக்கொண் டிருந்தேன். எது எப்படி யானாலும் சரி, அவர்களுக்குப் பலமான கைத்தொழில் யந்திரங்கள் வேண்டும்; போதிய போக்குவரத்துச்

சாதானங்களும் வேண்டும். இல்லையானால் யுத்தத்துக்கு உடனே தேவைப்படும் பண்டங்களை உற்பத்தி செய்து சமாளிக்க, அவர்களால் முடியாது. சுதந்தரச் சீனாவில், மிஞ்சியிருக்கும் ரெயில் பாதை ஆயிரம் மைலுக்கும் குறைவு. நான் ஏற்கனவே குறிப்பிட்டபடி, தரை வழியாய் ஏற்றுமதி இறக்குமதிப் பொருள்கள் நடமாடுவதற்குள்ள ஒரே மார்க்கம், ருஷ்யாவி லிருந்து வரும் சாலைதான். ஹிமாலய விமான மார்க்கத்திலும், ஜப்பானிய அணிவகுப்புகளுக்கு இடுக்கிலே திருட்டுத்தனமாய் வரும் பாதைகளிலும் சொற்பச் சரக்குகள் தான் வர முடியும்.

இந்தப் பிரச்னைக்குத்தான் பரிகாரம் வேண்டும். அதைக் காண்பதிலே, சீனாவில் நான் கண்ட சீனரும் அந்நியருமான சிறந்த புத்திமான்கள் ஈடுபட்டிருக்கிறார்கள். அந்தப் பரிகாரம் எப்படிப்பட்டதா யிருக்கும் என்று என்னால் சொல்ல முடியாது. இன்னும் மிக விரிவாக இந்தப் பிரச்னையை நான் ஆராய்ந்தால்தான், அதைச் சொல்ல முடியும். ஆனால், அதன் முக்கியமான அம்சங்களில் ஒன்றை மாத்திரம் நான் நிச்சயமாய்ச் சொல்ல முடியும். அதாவது சீனாவின் பொருளாதார வாழ்விலும், வாரிசுக் கிரமச் சொத்துரிமையிலும் உள்ள கண்டிப்பான கட்டுப்பாடுகள் தளர்ந்துவிடும்; அந்த நாட்டின் ஏராளமான மக்கள், பொருள் உற்பத்தியிலும் சமூக ஊழியங்களிலும், இப்போதைவிட மிக அபரிமிதமாக, ஈடுபடுவார்கள்.

நான் சந்தித்த அமெரிக்கர்கள், பணப் பெருக்கத்தைப் பற்றி அதிகக் கவலையாய்ப் பேசினார்கள். சர்க்கார் அங்கத்தினர்கள், அதுபற்றி அவ்வளவு கவலையான அபிப்பிராயம் கொள்ளவில்லை என்று எனக்குத் தோன்றிற்று. சீன மத்திய வகுப்பார்தான் நிர்ணயமான வருமானம் உள்ளவர்கள்; அவர்களைத்தானே, பணப்பெருக்கம் பாதிக்கும்? அவர்களின் எண்ணிக்கை மிகவும் குறைவு. இதைச் சர்க்கார் அங்கத்தினர்கள், எனக்குச் சுட்டிக் காட்டினார்கள். கூலிகளும், தேக சிரமப் பட்டு உழைக்கும் சகல தொழிலாளரும், நிர்ணயமான வருமான மில்லாமல் தங்கள் விவசாயப் பண்டங்

களுக்கு உயர்ந்த விலை வாங்கும் குடியானவர்களும், உண்மையில் பணப் பெருக்கத்தால் லாபமே அடைந்திருக்கிறார்களாம். இது சர்க்கார் அங்கத்தினர்களின் அபிப்பிராயம்.

இந்த அபிப்பிராயத்துக்குச் சாதகமாக, ஒரு விஷயத்தைச் சொல்லவேண்டும்; பணப்பெருக்கத்தால் நம் நாட்டின் பொருளாதார வாழ்வில் ஏற்படக்கூடிய பிரச்னைகளை வழி காட்டியாக வைத்துக்கொண்டு, சீனாவின் பணப் பெருக்கப் பிரச்னைகளை அளவிட முடியாது. அப்படிச் செய்தால் நம்முடைய முடிவுகளில் திடுக்கிடக் கூடிய பிழைகள்தாம் நேரிட்டுவிடும். சீனாவின் பொருளாதாரத்தைப் பற்றி மிகச் சிறப்பாய் ஆராய்ந்த ஒரு நிபுணரை நான் சந்தித்தேன். சீனாவில் எண்பது சதவிகிதம் மக்கள் தங்கள் உணவுப் பொருள்களைத் தாங்களே உற்பத்தி செய்துகொள்ளுகிறார்கள் என்று அவர் மதிப்பிட்டார். அந்த எண்பது சதவிகித மக்களுக்கும், பணம் மிக அற்பமாகவே தேவைப்படுகிறது. அவர்கள் பணம் கொடுத்துப் பண்டங்களை வாங்குவது, அநேகமாய் இல்லையென்றே சொல்லலாம்.

ஆனால், இந்த வாதத்தை அளவுக்கு மிஞ்சி நீட்டி விடக் கூடாது. இப்போதைய நிலைமையில் அபாயத்தை இது மட்டுப்படுத்தி யிருக்கிறது. என்றாலும், வருங்காலத்துக்கு இது நம்பிக்கை யளிப்பதாக இல்லை. ஷெச்வான் மாகாணத்தின் கவர்னர் சாங் சுன் என்பவர். சீனாவில் நான் சந்தித்த நிர்வாகிகளுக் குள்ளேயே மிகுந்த திறமையும் சிந்தனையும் உள்ள ஒருவர் அவர். தமது மாகாணத்தில் பயிர்த் தொழில் செய்யும் ஜனங்களில் நூற்றுக்கு எழுபது பேர், தாங்கள் பயிரிடும் நிலத்துக்கு, முழுவதுமோ ஒரு பகுதியோ வாரம் செலுத்தும் குடிகளாகவே இருக்கிறார்கள் என்று அவர் சொன்னார். இந்த மனிதர்கள், தங்கள் வாரத்தை ரொக்கமாகச் செலுத்துவ தில்லை; பண்டமாகவே செலுத்துகிறார்கள். ஆகவே, உணவுப் பொருள்கள் விலையேறினால் இவர்களுக்குக் கிடைக்கக் கூடிய லாபம் மிகவும் சொற்பமே. ஆனால், இவர்கள் வாங்கியாக வேண்டிய சில அவசியமான பொருள்களுங் கூட, அதே போல் விலை யேறிவிடும். இதனால், சீனக்குடியான

வர்களின் ஜீவனத்துக்குக் கிடைக்கும் அற்ப ஊதியமும் கரைந்துபோய் விடுகிறது.

முறைப்படி பார்த்தால் சீனாவுக்கு எவ்வளவு சக்தி உண்டோ அந்த அளவுக்கு, பண்டங்களையும் சேவைகளையும் இன்னும் அதிகமாக அந்த நாட்டுக்கு நாம் அளிக்கவேண்டும். சீனாவின் பணப் பெருக்க நெருக்கடியைத் தீர்க்க, இதுவே சிறந்த பரிகாரமாயிருக்கும் என்று எனக்குத் தோன்றியது. பண்டங்களும் சேவைகளும் அதிகமாக வெளியிலிருந்து கிடைப்பதற்கும், அவற்றைத் தாங்களே உற்பத்தி செய்து கொள்ளுவதற்கும், எத்தகைய ஏற்பாடுகளைச் செய்து கொள்ளுவது என்று சீனர்களே முடிவு செய்யவேண்டும். அவற்றுக்கு எவ்வாறு நிதி கண்டுபிடிப்பது என்பதையும் அவர்களே முடிவு செய்யவேண்டும். நான் கண்டதை விட மிக அதிகமாக, நிலங்களில் ஜனங்களுக்குச் சொத்துரிமை ஏற்பட்டால் நன்மை விளையும். நிதிக் கட்டுப்பாட்டு அதிகாரத்தை மத்திய சர்க்கார் கையில் வைத்துக்கொள்ளாமல், ஸ்தலத்தில் உள்ளவர்களுக்கு அளித்துவிடுவது நன்மை. சியான், லாஞ்சோ இரண்டிடங்களிலுமுள்ள வாலிப பாங்கர்களிடமும் தொழிற்சாலை மானேஜர்களிடமும் பேசியதிலிருந்து, இந்த அபிப்பிராயம் எனக்கு உண்டாயிற்று. இந்த வேலையில் சர்க்காரின் கடமைதான் முக்கியம். ஆயினும் ஜனங்களை அதிகமாக இதில் பங்கெடுத்துக் கொள்ளும்படி அநுமதிப்பது புத்திசாலித்தனம். ஆனால், இவையெல்லாம் சீனர்களே முடிவு செய்யவேண்டிய விஷயங்கள்.

அது ஒருபுறமிருக்க, அமெரிக்கா உதவி செய்யக்கூடிய துறைகளும் ஏராளமாய் இருக்கின்றன. முதலாவதாக, சீனர்களிடம் நமக்குள்ள நட்பை இன்னும் உண்மையானதாகச் செய்து, காரியத்தில் காட்டவேண்டும். சீனர்கள் நம் கட்சியிலே சேர்ந்துகொண்டு போராடுகிறார்கள்; ருஷ்யா வழியாகவோ, ஹிமாலயத்துக்கு மேலேயோ, பர்மாவைத் திரும்பப் பிடித்தோ, அல்லது இந்த மூன்று மார்க்கங்களின் மூலமுமோ, அவர்களுக்குத் தேவையான மெஷின்களையும் விமானங்களையும் ஆயுதங்களையும் மூலப் பொருள்களையும் நாம் அவர்களுக்கு அனுப்பவேண்டும்.

சீனர்களுடன் நாம் கொள்ளக்கூடிய இந்தக்கூட்டுறவைப் பற்றி, நமக்குள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். இதனுல் உண்மையிலேயே நாம் அடையக்கூடிய லாபத்தைத் தீர் மானித்துக்கொள்ள வேண்டியவர்கள் நாம்தாம். கிழக்கு ஆசியாவில் சீனர்களைவிட மேலான கூட்டாளிகள் நமக்குக் கிடைப்பார்களா என்ற கேள்விக்கு, நாமே விடை காண வேண்டும். கிடைக்க மாட்டார்கள் என்ற விடைதான் வரும் என்று நான் சோதிடம் கூறுகிறேன். கிடைக்கமாட்டார்கள் என்ருல், நம் கூட்டாளிகளுக்கு நாம் புரிய வேண்டிய கடமை களை நாம் புரிந்தாக வேண்டும். அந்தக் கடமையிலே பொரு ளாதார ஒத்துழைப்பும், உடனடியான ராணுவ உதவியும் அடங்கும். அல்லாமலும், சீனர்களையும் அவர்களுடைய பிரச்னைகளையும் நாம் புரிந்துகொள்ளவேண்டியதும் அந்தக் கடமையில் அடங்கும். நாம்சொல்லும் உன்னதமான வசனங் களிலும் தத்துவங்களிலும் சீனர்களுக் கிருந்த நம்பிக்கை வரவரத் தேய்ந்து வருகிறது.

---

## 10. நமது நல்லெண்ணக் களஞ்சியம்

**நா**ங்கள் அக்டோபர் மாதம் 9-ஆம் தேதி செங்டுவை விட்டுப் புறப்பட்டோம். சீனுவில் ஏறக்குறைய ஆயிரம்மைல் பிரயாணம் செய்தோம். கோபி, மங்கோலியா இரண்டு குடியரசுகளின் விசாலமான நிலப் பரப்பையும் கடந்தோம். ஸைபீரியாவில் பல்லாயிரம் மைல்களைக் கடந்தோம். பெஹ் ரிங் கடலேத் தாண்டினேம். அலாஸ்காவின் நீளம் முழுவதை யும், கானடாவின் அகலம் முழுவதையும் கடந்தோம். அக்டோபர் மாதம் 15-ஆம் தேதி ஐக்கிய அமெரிக்காவுக்கு வந்து சேர்ந்தோம். சர்வதேசத் தேதி எல்லையைக் கடந்த தால், ஒரு நாள் நேரம் எங்களுக்கு லாபமாயிற்று.

நாற்பத்தொன்பது நாளில் நீங்கள் உலகத்தைச் சுற்றி வந்து விடும்போது, 'படத்தில் மாத்திரம் உலகம் சிறுத் திருக்க வில்லை; மனிதனின் மனத்திலும் சிறுத்து விடுகிறது'

என்பதைக் காண்பீர்கள். உலகத்தைச் சுற்றிலும் சில எண்ணங்கள் உலவி வருகின்றன. அந்த எண்ணங்களைக் கோடி கோடிக் கணக்கான ஜனங்கள், தாங்கள் ஒரே நகரில் வசித்தால் எப்படியோ அப்படியே, அத்தனை பேரும் பொதுவாய் மனத்தில் கொண்டிருக்கிறார்கள். அந்த எண்ணங்களில் ஒன்றை, நான் தயங்காது குறிப்பிட முடியும். அது அமெரிக்காவி லுள்ள நமக்குப் பெரிதும் அர்த்த புஷ்டியுள்ளது. அதாவது, உலகம் முழுவதுமே, மதிப்பாகவும் நம்பிக்கையோடும் இந்த நாட்டையே எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறது.

பிரேஜில் நாட்டில் உள்ள பீலெம் மக்களுடனும் நேட்டால் வாசிகளுடனும் பேசினேன்; நைகீரியாவில் சுமைதாங்கிச்செல்லும் தொழிலாளிகளுடன் பேசினேன்; எகிப்தியப் பிரதம மந்திரியுடனும் மன்னருடனும் பேசினேன்; புராதனமான பாக்தாதில் முகமூடியணிந்த பெண்களுடன் பேசினேன்; மந்திரஜாலக் கதைகள் நிறைந்த ஈரான் என்னும் பாரஸீகத்தின் ஷாக்களுடனும் நெசவர்களுடனும் பேசினேன்; மத்திய மேல் நாட்டு நகரங்களின் தெருக்களுக்கிணையாய் விளங்கும் அங்காரா நகரத் தெருக்களில் அட்டாடர்க்கின் பக்தர்களுடன் பேசினேன்; ருஷ்யத் தொழிற்சாலைகளில் உடலுறுதியும் நெஞ்சுரமும் கொண்டு உழைக்கும் தொழிலாளிகளுடன் பேசினேன்; ஸ்டாலினிடம் பேசினேன்; உன்னதமான சீனத் தளபதி சியாங்கின் வசீகர மனைவியுடன் பேசினேன்; போர்முனையில் நிற்கும் சீன வீரர்களுடன்பேசினேன்; பாதைகள் அற்ற ஸைபீரியக் காடுகளின் எல்லையில் ரோமக் குல்லாய்கள் அணிந்து வேட்டையாடும் வேடர்களுடன் பேசினேன்-இந்த எவருடன் பேசினாலும், இவர்களல்லாமல் வேறு யாருடன் பேசினாலும், அந்த அனைவரிடமும் பொதுவாக ஒரு விஷயத்தை நான் கண்டேன்; அதாவது, ஐக்கிய அமெரிக்கா மீது இவர்கள் அனைவருமே ஆழ்ந்த நட்புக்கொண்டிருக்கிறார்கள்.

இவர்கள் ஒவ்வொருவருமே அமெரிக்காவிடம் கொண்டிருக்கும் நட்பு, உள்ளன்பு நிறைந்ததாக இருக்கிறது. உலகத்

திலே இன்று நம்மீது-அமெரிக்க மக்கள் மீது-பரவியுள்ள நல்லெண்ணம், பிரம்மாண்டமான ஒரு களஞ்சியம்போல் இருக்கிறது. இந்த உண்மை எனக்கு மிகத் தெளிவாய் விளங்கியது. இந்த நிச்சயத்துடனேயே நான் ஊருக்குத் திரும்பி வந்திருக்கிறேன்.

அநேக காரணங்களால் இந்த நல்லெண்ணக் களஞ்சியம் சிருஷ்டியாகி யிருக்கிறது. உலகின் மூலை முடுக்கிலெல்லாம் அமெரிக்கப் பாதிரிகளும் உபாத்தியாயர்களும் டாக்டர்களும், ஆஸ்பத்திரிகளையும் கலாசாலைகளையும் கல்லூரிகளையும் ஸ்தாபித்திருக்கிறார்கள். இதுவே அந்தக் காரணங்களின் ஜாபிதாவில் தலைமையாய் நிற்பது. பழமையான நாடுகளின் புதிய தலைவர்களில் பலர்-ஈராக், சீனா, துருக்கி ஆகிய நாடுகளை இன்று நிர்வகித்துவரும் மனிதர்கள்-அமெரிக்க ஆசிரியர்களிடம் பாடம் கற்றவர்கள். கல்வியைப் பரப்பும் ஒரே நோக்கத்தைக் கொண்ட ஆசிரியர்கள் அந்த அமெரிக்கர். நமக்கு நண்பர்களை ஏற்படுத்திக் கொடுத்திருக்கும் அந்த அமெரிக்க ஸ்திரீ புருஷர்களுக்கெல்லாம், நெருக்கடி உண்டாகி யிருக்கும் இந்த வேளையிலே, நாம் பெரிதும் கடமைப்பட்டிருக்கிறோம்.

புதிய ரஸ்தாக்கள், புதிய விமானப்போக்குவரத்துக்கள், புதிய கப்பல் போக்குவரத்துக்கள் ஆகியவற்றை முதல் முதலில் அமைத்த அமெரிக்கர்களுக்கும், பாங்கியில் போட்ட பணத்தைப்போல, நம்மீது உலக மக்களின் நல்லெண்ணத்தைக் குவித்து வைத்திருக்கிறார்கள். அவர்கள் செய்துள்ள சேவையின் பயனாக உலக ஜனங்கள் நம்மைப் பற்றி என்ன எண்ணுகிறார்கள் தெரியுமா? நாம் பண்டங்களையும் கருத்துக்களையும் அங்குமிங்கும் கொண்டு செல்பவர்கள் என்று,அவர்கள் எண்ணுகிறார்கள். இதனால் அவர்களுக்கு நம்மிடம் பிரியமும் மரியாதையும் ஏற்பட்டிருக்கின்றன.

இந்த நட்புக் களஞ்சியத்தைப் படைக்கும் காரியத்தில், நம் சினிமாப் படங்கள் மிக முக்கியமான பங்கெடுத்துக் கொண்டிருக்கின்றன. உலகமெங்கும் நம் சினிமாப் படங்களைக் காட்டுகிறார்கள். பார்வைக்கு நாம் எப்படித் தோன்று

கிறேம் என்று ஒவ்வொரு நாட்டு மக்களும் தம் சொந்தக் கண்களால் காணலாம்; நம் குரல்களையும் அவர்கள் கேட்கலாம். அமெரிக்கச் சினிமா நட்சத்திரங்களைப் பற்றி, நேட்டாலிலிருந்து சுங்கிங்வரையில் வழிநெடுகிலும் உள்ளவர்கள் என்னைக் கேள்விகள் கேட்டுத் தொளைத்து விட்டார்கள். கடைக்காரப் பெண்களும், காபி ஓட்டல் சிப்பந்திகளும் வெகு ஆவலாக அந்தக் கேள்விகளைக் கேட்டார்கள். அதே மாதிரி ஆவலாகவே, பிரதம மந்திரிகளின் மனைவிகளும் மன்னர்களின் மனைவிகளும் அந்தக் கேள்விகளைக் கேட்டார்கள்.

வெளி நாடுகளிலே நம்மீது குவிந்திருக்கும் நல்லெண்ணக் களஞ்சியத்துக்கு இன்னும் பல காரணங்களும் உண்டு. ஆலைத் தொழில் வளர்ச்சி அடைந்த நாடாயிருந்தாலும் சரி, அடையாத நாடாயிருந்தாலும் சரி, ஒவ்வொரு நாட்டினருமே நம் தொழிலாளர்களின் ஆதர்சங்களையும் சாதனைகளையும் வியந்து போற்றுகிறார்கள்; அவற்றைப் பற்றிக் கேள்விப்பட்டு, தாங்களும் அவற்றைக் கைக்கொள்ள வேட்கை கொண்டிருக்கிறார்கள். விவசாயம், வியாபாரம், கைத் தொழில் ஆகிய துறைகளில் அமெரிக்கர் கைக்கொண்டுள்ள நெறிகளும், சகல நாட்டு ஜனங்களின் மனத்தையும் கவர்ந்திருக்கின்றன. அநேகமாய் நான் சென்ற எந்த நாட்டிலுமே அமெரிக்கர்கள் சென்று கட்டிய ஏதாவதொரு மகத்தான அணைக்கட்டோ, பாய்ச்சலாதாரமோ, துறைமுகமோ, தொழிற்சாலையோ இருந்தது. ஜனங்கள் நம்மிடம் பிரியம் கொண்டிருக்கிறார்கள். ஏன்? தங்கள் வாழ்க்கை சுகப்படவும் செல்வம் கொழிக்கவும் நாம் உதவியிருக்கிறோம் என்பதற்காக மட்டும் அல்ல; ராஜீய ஆதிக்கம் பெறுவதற்காக, நம் வியாபார முயற்சிகளைச் செய்யவில்லை என்று நாம் அவர்களுக்கு நிரூபித்து விட்டதும் அதற்குக் காரணமாகும்.

அந்நிய ஆதிக்க பயத்தை, நான் உலகமெங்கும் கண்டேன். அந்தப் பயத்திலே, ஜனங்களின் மனம் நம்மைச் சம்பந்தப் படுத்தவில்லை. இதனால், அவர்கள் நம்மைப் பாராட்டுகிறார்கள் - நான் எண்ணியிருந்ததை விட மிக அதிகமாய்ப்

பாராட்டுகிறூர்கள். உலகத்தில் எங்கேயும் எந்தப் பிரதேசத்திலும் நாம் பிறர் மீது ஆட்சி புரியவோ, பிறருடைய உரிமைகளைப் பறிக்கவோ முயலவில்லை. இந்த உண்மையை உலகம் மிகக் கூர்மையாய் அறிந்திருக்கிறது. இதைக் கண்டு கொண்ட போது, நான் பேராச்சரிய மடைந்தேன்.

உலக மக்கள்மீது எவ்விதத் தீய சூழ்ச்சிகள் புரியவும், நாம் நோக்கங் கொள்ளவில்லை. நமக்கு வேண்டியதெல்லாம் நம்மிடமே இருக்கிறது என்று அசட்டு உணர்ச்சி கொண்டோம். அதனுல் சென்ற காலத்திலே நாம் சர்வதேச விவகாரங்களில் தலையிடாமல் ஒதுங்கி நின்றேம். அதில்கூட எவ்விதத் தீய நோக்கமுமில்லை. இதைப் பூலோகத்து ஜனங்கள் அனைவரும் அறிவார்கள். இப்போது நாம் இந்தப் போரிலே ஈடுபட்டுச் சண்டையிடுகிறேம். லாபம் சம்பாதிக்கவோ, கொள்ளை யடிக்கவோ, பிற ஜனங்கள் மீது மாண்டேட் ஆட்சி புரியவோ, அவர்களின் பிரதேசங்களைக் கைப் பற்றவோ, நாம் இந்தப் போரிலே ஈடுபடவில்லை. இதைப் பூலோக ஜனங்கள் அனைவரும் அறிவார்கள். உலகமெங்கும் நம் மீது ஏற்பட்டிருக்கும் நல்லெண்ணக் களஞ்சியத்துக்கு, இந்த ஒன்றே மிக முக்கியமான காரணமாகும் என்று நான் கருதுகிறேன்.

உலகத்தைச் சுற்றிலும் நான் சென்ற இடமெல்லாம் - உண்மையிலே சலக இடங்களிலுமே - ஐக்கிய அமெரிக்காவின் ராணுவ உத்தியோகஸ்தர்களையும் ஸோல்ஜர்களையும் நான் கண்டேன். சில இடங்களில் அவர்கள் மிகச் சிறு படைகளா யிருக்கிறூர்கள். மற்றும் சில இடங்களிலோ அவர்கள் பிரம்மாண்டமான ராணுவ முகாம்கள் போட்டிருக்கிறூர்கள்; அந்நிய நாடுகளின் அநேக ஏக்கர் விஸ்தீர்ணமுள்ள நிலங்களில் அவர்களின் முகாம்கள் நிறைந்திருக்கின்றன. அவர்களை நான் பல நிலைமைகளில் கண்டேன். அந்த ஒவ்வொரு நிலைமையிலும், அமெரிக்கா மீது அந்நிய மக்களின் நல்லெண்ணத்தை அவர்கள் அதிகரிக்கச் செய்து கொண்டே வருகிறூர்கள்.

எங்கள் ராணுவ விமான கோஷ்டி, இதற்கு ஓர் உதாரணமாகும். அதன் உத்தியோகஸ்தர்களும் மற்ற வீரர்களும் இதற்கு முன் சண்டையில் கலப்பதற்கு மாத்திரந்தான் வெளிநாடுகளுக்குப் போயிருக்கிறார்கள்; மற்றபடி அவர்கள் வேறெதற்கும் வெளி நாடுகளுக்குப் போனதேயில்லை. அவர்கள் பயிற்சி மிக்க ராஜதந்திரிகள் அல்ல. அவர்களில் பலருக்கு அந்நிய பாஷை எதுவுமே தெரியாது. ஆயினும், நாங்கள் போய் இறங்கிய ஒவ்வோர் இடத்திலும், அவர்கள் அமெரிக்காவுக்குச் சிநேகிதர்கள் பிடித்து விட்டார்கள். ஈரான் மன்னருக்கு அவருடைய வாழ்க்கையிலேயே முதல் முதலாக விமானச் சவாரி, எங்கள் விமானத்தில் அளித்தோம். சவாரி முடிந்தவுடனே, எங்கள் விமான ஓட்டியான ரிச்சர்டு கைட் அவர்களுடன், ஷா கை குலுக்கினார். அப்போது ஷா இவரைப் பார்த்த பார்வையிலே ஓர் ஆச்சரியமும் பொறாமையும் கலந்திருந்தன என்றுதான் நான் வர்ணிக்க வேண்டும். அந்தக் காட்சியை நான் வெகு நாள் வரையில் ஞாபகம் வைத்திருப்பேன்.

நான் அமெரிக்க சோல்ஜர்களைக் கண்ட சகல இடங்களிலும், அவர்களைப் பற்றிப் பெருமையே அடைந்தேன். நம் நாட்டு ராணுவம், மக்களின் சேனையாகும். அதில் உள்ள போர் வீரர்கள், ராணுவச் சேவையையே தங்கள் தொழிலாக ஸ்தாபிதம் செய்து கொள்ளுவதில் ஆசை யற்றவர்கள். ஆகவே, நமது இந்தத் தலைமுறைக்கு உலகத்தில் கிடைத்திருக்கும் நல்லெண்ணக் களஞ்சியத்தைக் காப்பாற்றிக் கொள்ள, அவர்கள் தம்மிச்சையாகவே உதவுவார்கள். அதே சமயத்தில் நேரில் அவர்களுக்கு அநுபவமும் ஏற்படும். இந்த யுத்தம் ஏன் அமெரிக்காவின் யுத்தமா யிருக்கிறது என்ற காரணத்தை, அந்த அநுபவத்தால் அவர்கள் கண்டு கொள்ளுவார்கள். இந்த நம்பிக்கைகள் எனக்கு உண்டாயின.

ஏனென்றால், இந்த நல்லெண்ணக் களஞ்சியம், நம் காலத்திலே தோன்றியுள்ள அரசியல் சக்திகளுக்குள்ளே மிகப் பெரிது. இவ்வாறுதான் நான் காண்கிறேன். வேறெந்த

மேல்நாட்டு வல்லரசுக்கும், இந்தமாதிரி நல்லெண்ணக் களஞ்சியம் ஏற்படவில்லை. மனித குலம் சுதந்திரமும் நீதியுமாய் வாழ வழி தேடிக்கொண் டிருக்கிறது. அந்த முயற்சியிலே, உலக மக்களை யெல்லாம் ஒற்றுமைப் படுத்த வேண்டும். அந்தக் காரியத்துக்கு, நமது நல்லெண்ணக் களஞ்சியத்தை உபயோகிக்க் வேண்டும். நாம் எந்தக் கொள்கைகளைக் கடைப்பிடித் திருக்கிறோமோ உலக மக்கள் எந்தக் கொள்கைகளை நம்பிக்கொண்டிருக்கிறார்களோ, அவற்றை யெல்லாம் அழித்துவிட, பிரம்மாண்டமான சில அரக்க சக்திகள் முயன்றுகொண் டிருக்கின்றன. நம்மோடு சேர்ந்து அவற்றை எதிர்த்துப் போரிடவும் உழைக்கவும் உலக மக்களுக்கு நம்பிக்கை யிருந்துவரும்படி, அந்த நல்லெண்ணக் களஞ்சியத்தை நாம் பாதுகாத்து வரவேண்டும். இவ்வாறு அதை நாம் பாதுகாத்து வருவது, ஒரு தெய்விகமான கடமை. இது, ஆதர்சம் மிக்க உலக மக்களுக்கெல்லாம் புரிய வேண்டிய கடமை. அது மட்டுமல்ல; ஒவ்வொரு கண்டத்திலும் இந்த யுத்தத்திலே சண்டையிட்டுக்கொண்டிருக்கும் நம் சொந்தப் புதல்வர்களுக்கே புரியவேண்டிய கடமை. ஏனென்றால், இந்தக் களஞ்சியத்திலே நிறைந்திருக்கும் பானம், ஜீவனூட்டும் சுத்தமான சுதந்தர பானமாகும்.

ஹிட்லர், முஸோலினி, ஹிரோஹிட்டோ இந்த மூவரில் எவரும், தங்கள் பிரசாரத்தாலோ ஆயுத பலத்தாலோ, நமது இந்த நல்லெண்ணக் களஞ்சியத்தை-உலக மக்களை ஒற்றுமைப் படுத்தக்கூடிய இந்தச் சக்தியை - நம்மிடமிருந்து அபகரிக்க முடியாது. இப்படி ஒற்றுமைப்படுத்தும் சக்தி வேறெதுவும் உலகில் இன்று இல்லை. நாம் எந்த லட்சியங்களுக்காகப் போராடுவதாய்க் கோஷித்தோமோ அந்த லட்சியங்கள் வெறும் கேலிக்கூத் தாகிவிடாமல் எதுவரையில் நாம் நடந்து வருகிறோமோ அதுவரையில், நம்மை நம் கூட்டாளி நாடுகளிடமிருந்து, அவர்கள் பிரித்து விடவும் முடியாது. சமயத்துக்குத் தக்கபடி நாம் நடந்து கொள்ள முயன்றால், கேடே விளையும். ஏனென்றால், மதிப்பரிய ஆத்மிகமான அநுபவத்துக் கிசைந்த மூலதனங்களை நாம்

இழந்து விடுவோம். நம் லட்சியங்களிலும் முறைகளிலும் உலக மக்களுக்கு உண்டாகியிருக்கும் நம்பிக்கையினுல், அந்த மூலதனங்களை நாம் பெற்றிருக்கிரேும்.

பழைய உலகத்தின் (ஐரோப்பா முதலியவை) சூழ்ச்சிகளிலும், மதம், தேசீயம், நிற பேதம் முதலியவை ரீதியான கட்சிகளிலும், நாம் சிக்கிக் கொள்ளலாகாது. சிக்கிக்கொண்டால், நாம் வெறும் கற்றுக் குட்டிகளாகி விடுவோம். நம் அஸ்திவாரக் கொள்கைகளிலே நாம் உறுதியாக நின்ருேமாஞல், ஒரு புதிய உலகத்தின் நிபுணர்களாக நாம் விளங்குவதைக் காண்போம்-உலகத்தின் எல்லாப் பகுதிகளிலும் உள்ள மனிதர்களெல்லாம் ஆதர்சம் கொண்டுள்ள ஒரு புதிய உலக நிபுணர்களாகவே விளங்குவோம்.

## 11. நாம் எதற்காகப் போராடுகிருேம்?

உலகெங்கும் மனிதர்களின் நினைப்பிலும், அவர்களின் வாழ்க்கை முறையிலும், இந்த யுத்தம் ஒரு புரட்சியை உண்டாக்கி வருகிறது என்று சொல்வது சர்வசகஜமாகிவிட்டது. ஆனுல், அந்தப் புரட்சி நடப்பதைப் பார்க்கும்போது, அவ்வளவு சகஜமாய்த் தோன்றவில்லை. அதில் ஒரு பரவசமும் சிறிது பயமும் கலந்திருக்கின்றன. பரவசம் ஏன் என்ருல், மனித ஜீவன்களுக்குள்ளே இருக்கும் அபரிமிதமான ஒரு சக்திக்கு அது ஒரு புதிய ருசுவாயிருப்பதே. மனிதர்கள் தங்கள் சூழ்நிலைகளை மாற்றிக்கொள்ளவும், தாங்கள் சுதந்தரமடைந்தால் எதையும் சாதிக்க முடியும் என்ற உணர்ச்சியோடும், விழிப்படைந்த ஒரு நம்பிக்கையோடும் சுதந்தரத்துக்காகப் போராட இயலச் செய்வது, அந்த அபரிமிதமான சக்திதான். பயம் ஏன் என்ருல், ஐக்கியநாடுகளின் தலைவர்கள் போகட்டும்; அவற்றின் ஜனங்களுக்குள்ளேயே ஓர் ஒற்றுமை ஏற்படாததே. எதற்காகப் போராடுகிருர்கள்? எந்தக் கருத்துக்களை, நம் போர் வீரர்களுக்கு ஆயுதங்களாக அளிக்

வேண்டும்? இந்த விஷயத்திலே, ஐக்கிய நாடுகளின் ஜனங்களுக்கிடையே பொதுவான ஓர் ஒற்றுமை ஏற்படவில்லை.

ஏனென்றால், மனிதகுல வளர்ச்சியிலே, ஈட்டியும், துப்பாக்கியும் எவ்வளவுதான் முக்கியமாய் இருந்தாலும், கருத்துக்களே மகா முக்கியமாய் இருக்கின்றன-காலக்கிரமத்தில், முடிவான தீர்மானம் செய்பவையும் கருத்துக்கள்தாம். அது எவ்வாறாயினும் சரி; சரித்திரப் பிரசித்தமான காலங்களிலே, கேவலம் ஒருவரை ஒருவர் கொல்லும் ஆனந்தத்துக்காக மனிதர்கள் சண்டையிட வில்லை. ஒரு நோக்கத்துக்காகவே அவர்கள் சண்டை யிட்டிருக்கிறார்கள். அந்த நோக்கம், சில சமயம் உற்சாக மளிப்பதா யில்லை; சில சமயம், முற்றும் சுய நலமா யிருந்திருக்கிறது. என்றாலும், ஒரு நோக்கமுமில்லாமல் வென்ற யுத்தம், ஒரு ஜயமு மில்லாமலே வென்ற யுத்தமே.

ஒரு நோக்கத்தோடு போராடிய யுத்தத்துக்கு மிகச் சிறந்த உதாரணமாக, நம் சொந்த அமெரிக்கப் புரட்சியைச் சொல்லலாம். ஆங்கிலேயரிடம் குரோதம் கொண்டு அவர்களைக் கொல்ல ஆசை கொண்டதால், நமது புரட்சியில் நாம் சண்டை யிடவில்லை; நாம் சுதந்தரத்தில் காதல் கொண்டதாலும், அதை ஸ்தாபிக்க விரும்பியதாலுமே சண்டையிட்டோம். நம் சுதந்தரத்தால் உலகத்துக்கு எத்தகைய பயன் உண்டாகியிருக்கிறது! இதைப் பார்க்கும்போது, ஆயுத பலங் கொண்டு ஜயித்த வெற்றிகளிலேயே மிகவும் மகத்தானது யார்க் டவுனில் ஜயித்த வெற்றிதான் என்று சொல்வது நியாயம் என்றே நான் நினைக்கிறேன். ஆனால், நமது சேனை பெரியதாய், பயங்கரமாய் இருந்ததால், அந்த வெற்றி கிடைத்து விடவில்லை. நமது நோக்கம் தெளிவா யிருந்தது; உன்னதமா யிருந்தது; திட்டமா யிருந்தது. அதனாலேயே அந்த வெற்றி கிடைத்தது.

துர்ப்பாக்கிய வசமாக, 1914-18ஆம் வருஷம் யுத்தத்தைப் பற்றி இவ்வாறு சொல்ல முடியாது. அந்த யுத்தம் வெற்றியற்ற யுத்தம் என்பது, சரித்திரப் பிரசித்தமான உண்மையாகி விட்டது. அந்த யுத்தத்திலே ஈடுபட்டிருந்த

போது, ஓர் உயர்ந்த நோக்கத்துக்காகச் சண்டையிடுவதாகத் தான் நாம் நினைத்துக்கொண் டிருந்தோம்; அல்லது சொல் லிக்கொண் டிருந்தோம். நம்முடைய பிரதம சேனுதிபதியா யிருந்த உட்ரா வில்ஸன், நம் நோக்கங்களை, வாக்கு வன்மை யான சொற்களில் சொல்லி விட்டார். ஜனநாயகத்துக்கு யோக்கியமாக உலகத்தைப் பத்திரப்படுத்தவே நாம்போரிட் டோம். ஒரே ஒரு சுலோகத்தின் மூலம் அல்ல; பதினுன்கு நிபந்தனைகள் என்று பிரசித்தமான ஒரு தொகுதி தத்துவங் களை ஒப்புக்கொண்டு சர்வதேசச் சங்கம் என்று பிரசித்தமான ஒரு பரிபூர்ண ஸ்தாபனத்தை நிறுவுவதன் மூலமே, உலகத்தை அவ்வாறு பத்திரப்படுத்த முயன்ருேம். அது ஓர் உன்னதமான நோக்கந்தான்; சந்தேகமில்லை. ஆனுல், சமாதான உடன்படிக்கையை நிறைவேற்ற வேண்டிய நேரம் வந்தபோது அதிலே, மகத்தான ஒரு குறை யிருந்ததைக் கண்டோம். அந்த நோக்கத்திலே, நாமும் நம் கூட்டாளி களும் உண்மையிலே ஒற்றுமையாய் இல்லை எனக்கண்டோம். ஒரு பக்கத்தில் நம் கூட்டாளிகள் சிலர், ரகசிய உடன்படிக் கைகளிலே சிக்கிக்கொண் டிருந்தார்கள். அவற்றை நிறை வேற்றுவதிலே அவர்கள் அதிக ஊக்கம்கொண் டிருந்தார்கள்; தன் தன் செல்வாக்கே மேலோங்க வேண்டு மென்ற வழக்க மான ராஜதந்திரச் சூழ்ச்சிகளிலும் அதிக ஊக்கம் கொண் டிருந்தார்கள். உட்ரா வில்ஸன் வர்ணிக்க முயன்ற நவ உலக வாயிலைத் திறப்பதிலே, அவர்களுக்கு அவ்வளவு ஊக்கமில்லை. மற்ருெரு பக்கத்தில், உலகம் நம்பும்படி மொழிந்த அந்த நோக்கங்களிலே, நாமே அவ்வளவு ஆழமாக ஈடுபட வில்லை. மொத்தத்தில் நிகழ்ந்த பலன் என்ன? எந்த நோக்கங்களுக் காக யுத்தத்தில் சண்டையிடுவதாக நினைத்துக்கொண் டிருந் தோமோ, அவற்றில் பெரும்பாலானவற்றையும் கைவிட்டு விட்டோம். அந்த நோக்கங்களைக் கைவிட்டதனுல், அந்த யுத்தத்தையே நம் தலைமுறை மக்கள், பிரம்மாண்டமான வீண் படுகொலை என்று கண்டித்தார்கள். கோடிக் கணக் கானவர் உயிரிழந்தார்கள். என்ருலும், அவர்களுடைய சாம்பலிலிருந்து, ஒரு புதிய கருத்தும் எழவில்லை; ஒரு புதிய லட்சியமும் முளைக்கவில்லை.

இந்த விஷயங்களை யெல்லாம் யோசிக்கும்போது, மறுக்க முடியாத ஒரே ஒரு முடிவுக்குத்தான் நான் வரவேண்டி யிருக்கிறது. ஏற்கனவே யுத்தம் நடக்கும் போதே நிர்ணயமாகாத எந்த முக்கிய விஷயமும்' சமாதானத்தின்போது நிர்ணயமாகி விடும் என்பது நடவாத காரியம். பொதுவாய்ச் சொன்னால், இவ்விதந்தான் நாம் முடிவு கட்ட வேண்டி யிருக்கிறது. 'எந்த முக்கிய விஷயமும்' என்றே நான் சொல்லுகிறேன். ஏனென்றால், யுத்த நிர்ப்பந்தத்தின் கீழே, சிறு விவரங்களை யெல்லாம், புத்திசாலித்தனமாய் வரையறுத்து வைக்க முடியாது. பற்பல சிறு விவரங்களையும், சமாதான மேஜையிலும், அதன் பின்பு நிகழும் பல மகாநாடுகளிலுந்தான் வரையறுக்க வேண்டும். இது முற்றும் உண்மையே. உதாரணமாக, நாம்-நாமும் நம் கூட்டாளிகளுந்தான்-யுத்தத்தில் ஜயித்த பின்பு, பர்மாவுக்கு என்ன செய்ய உத்தேசம் என்பது பற்றி விரிவான ஒரு திட்டம் தயாரிப்பதற்காக, ஜப்பானியப் போரை நிறுத்தி வைக்க முடியாது. போலந்தின் வருங்காலத்தைப் பற்றி விரிவாக இப்போதே ஆராய்வதற்காக, ஹிட்லரிடம் நமது போரைத் தளர்த்த முடியாது.

யுத்தம் நடக்கும்போதே நாம் நிர்ணயிக்க வேண்டிய விஷயங்கள் எவை என்றால், முக்கியமான கொள்கைகள் தாம். நமது பரிகாரத்தின் தன்மை எப்படிப் பட்டதா யிருக்கும் என்பதை, நாம் அறிய வேண்டும். மறுபடியும், அமெரிக்கப் புரட்சியையே உதாரணமாய் உபயோகிக்கிறேன். அந்த யுத்தத்தை நாம் நடத்திக்கொண் டிருந்தபோது, உண்மையில் ஐக்கிய அமெரிக்காவின் அமைப்பு எப்படி யிருக்கும் என்று நமக்குத் துளியும் தெரியாது. அரசியல் அமைப்புச் சட்டத்தைப் பற்றிய பேச்சே அப்போது எழவில்லை. சமஷ்டி முறை, முக்கிளைகள் உள்ள அரசாங்கம், சிறிய ராஜ்யங்களை யெல்லாம் யூனியனுக்குள் இழுத்த அற்புதமான இரு சபைச் சமரசம், இந்த நூதன ஏற்பாடுகள் அனைத்தும், பிற்காலத்தின் மடியிலே மறைந்து கிடந்தன. எவரோ சில உன்னத ராஜீயச் சிந்தனையாளர்கள் மட்டும், இவற்றைப் பற்றி மனத்துக்குள்ளே ஆராய்ந்து வந்தார்கள். ஆனால், அவர்களின்

மனத்திலும், இவை முற்றிலும் தெளிவுபட் டிருக்கவில்லே. என்ருலும், ஐக்கிய அமெரிக்க ராஜ்யம் என்ற மகத்தான அரசியல் அமைப்பை உருவாக்கிய அஸ்திவாரக் கொள்கைகள் மட்டும், நமது சுதந்தரப் பிரகடனத்திலும் அந்தக் காலத்துப் பாடல்களிலும் பிரசங்கங்களிலும் விருந்துப் பேச்சுகளிலும் போர் வீரர் முகாம்களிலும் அட்லாண்டிக் கடற்கரையில் உள்ள எல்லா இடங்களிலும் நிகழ்ந்த தனிப்பட்ட விவாதங்களிலும் நிச்சயமாய் அடங்கியிருந்தன. மஸாசுசெட்ஸ், வர்ஜினியா என்ற மகத்தான இரு ராஜ்யங்களும், தெளிவற்ற அறிக்கைகளேயும் காண்டினெண்டல் காங்கிரஸ் என்ற நொய்மையான விசித்திர அரசியல் ஸ்தாபனத்தையும் கொண்டுதான் இணங்கி யிருந்தன. ஆயினும், அவற்றின் பிரஜைகள், தாங்கள் போரிடும் காரணம் யாது என்பதிலும் தாங்கள் அடைய விரும்பும் லட்சியம் என்ன என்பதிலும், பெரிதும் ஒற்றுமைகொண் டிருந்தார்கள்.

மஸாசுசெட்ஸ், வர்ஜினியா இந்த இரண்டும் யுத்தம் நடக்கும்போதே ஒற்றுமைப்பட் டிராவிட்டால், சமாதானக் கொள்கைகளில் ஒற்றுமை கொள்ளவும் அவை தவறித்தான் போயிருக்கும். யுத்தத்திலே சம்பாதித்த நன்மையையெல்லாம், சமாதானத்திலும், அவை சம்பாதித்து விட்டன; துளியும் கூடவோ குறையவோ இல்லே. இந்த உண்மை, தன்னில் தானே விளங்கக்கூடியது. அப்படி விளங்காதவருக்கு, ஒரு தூய சம்பவத்தை உதாரணங் காட்டி, இதை நிரூபணம் செய்யலாம். நீக்ரோ மக்களுக்குச் சுதந்தரம் அளிப்பதா, அவர்களே அடிமைத் தனத்திலேயே வைத்திருப்பதா என்ற விஷயத்தில் இந்த ராஜ்யங்களின் ஜனங்கள் ஒற்றுமை கொள்ளத் தவறி விட்டார்கள். அதன் பலன் என்ன? அடிமைப்பட்ட நீக்ரோக்களேச் சுற்றி, வடக்கே ஒருவிதப் பொருளாதார முறை ஏற்பட்டது; அதற்கு அடியோடு மாறுபட்ட மற்ருெருவிதப் பொருளாதார முறை தெற்கே ஏற்பட்டது. இதன் விளேவாக, மற்ருெரு யுத்தம்-முன்னே விட மகா கோரமான ஒரு யுத்தம்-மூண்டது.

இந்த எளிய பாடத்திலிருந்து-சரித்திரத்தில் காணும் இதுபோன்ற இன்னும் பல பாடங்களி லிருந்து-இன்று நம் கடமை என்ன என்பதை நாம் கற்றுக்கொள்ள முடியாதா? நாம் கற்றுத்தான் ஆகவேண்டும். இப்போது இந்த யுத்தத் திலே நாம் சம்பாதிக்கும் நன்மைகளைத்தான் வருங்காலச் சமாதானத்திலும் நாம் சம்பாதிப்போம்; துளியும் கூடவோ குறையவோ அல்ல. இதை நாம் அறிந்தாக வேண்டும்.

முதலாவதாக, நாம் வென்று சம்பாதிக்க விரும்புவது என்ன என்பதை நிர்ணயித்துக்கொள்ள வேண்டும். அதை நிர்ணயிப்பதற்கு, நம் கூட்டாளிகளோடு கணிசமான ஒற் றுமை கொள்ளுவது அவசியம் என்பது தெளிவு. நமது புரட்சி யில் போலவே, இங்கேயும் விரிவான விவரங்களில் ஒற்றுமை அவசியமில்லை; அது விரும்பத் தக்கதும் அல்ல. ஆனால், சென்ற யுத்தத்தின் துரதிருஷ்ட சரித்திரம் மீண்டும் நிகழா திருக்க வேண்டுமானால், நாம் கொள்கையிலே ஒற்றுமையைச் சம்பாதித்தாக வேண்டும். மேலும், அந்த ஒற்றுமை, கூட் டாளி நாடுகளின் தலைவர்களுக்குள்ளே மட்டும் ஏற்பட்டால் போதாது. நாம் மனத்தில் கொண்டுள்ள மூலாதார ஒற்று மையை, கூட்டாளி நாடுகளின் ஜனங்களுக் கிடையிலேயே செய்தாக வேண்டும். நாம் அனைவருமே ஒரு விஷயத்துக் காகத்தான் சண்டை யிட்டுக்கொண் டிருக்கிறோம் என்பதை நிச்சயப் படுத்திக்கொள்ள வேண்டும்.

இதற்குப் பொருள் என்ன? நாம் ஒவ்வொருவரும் தாராளமாய் மனம்விட்டுப் பேசி, கருத்துக்களைப் பரஸ்பரம் பரிமாறிக் கொள்ளவேண்டும்; பஸிபிக்கைக் கடந்தும், அட் லாண்டிக்கைத் தாண்டியும், இங்கே நம் தாய் நாட்டிலும் அப்படிப் பரிமாறிக் கொள்ள வேண்டும். அமெரிக்காவில் நாம் என்ன நினைக்கிறோம் என்பதை உணர்ந்து அதைப் பிரிட் டன் தன் இருதயத்திலே பதிந்துகொள்ள வில்லை யானால், அதேபோலப் பிரிட்டனிலும் அதன் சாம்ராஜ்யத்திலும் உள்ள மக்கள் என்ன நினைக்கிறார்கள் என்று நாம் அறிந்து கொள்ள வில்லையானால், ஒற்றுமை ஏற்படும் என்ற நம்பிக் கைக்கு இடமேயில்லை. ருஷ்ய மக்களும் சீன மக்களும் என்ன

நோக்கம் கொண்டிருக்கிறுர்கள் என்பதை நாம் அறியவேண்டும்; நம் நோக்கங்களே அவர்கள் அறியும்படியும் செய்ய வேண்டும்.

எந்த நாட்டு ஜனங்களாக இருந்தாலும் சரிதான்; அவர்கள் தங்கள் தலைவர்களின் உடனடியான கொள்கைகளுக்கு...அவை சில சமயம் கோணல்வழிக் கொள்கைகளாகத்தான் இருக்கின்றன! அந்தக் கொள்கைகளுக்குச் சங்கடம் விளைக்காம லிருக்கவேண்டுமே என்ற பயத்தால், நாவை அடக்கிக்கொண் டிருக்க வேண்டும் என்பது மகா முட்டாள் தனம்; அது தற்கொலைக்கே சமம்.

உதாரணமாக, ஒன்று சொல்லுகிறுர்கள். ராணுவ விவகாரங்களில் நிபுணத்துவமோ, சர்க்காரிடம் சம்பந்தமோ இல்லாத தனிப்பட்ட பிரஜைகள் இருக்கிறுர்கள் அல்லவா? அவர்கள், யுத்தம் நடத்தும் முறை பற்றி ராணுவம், கைத்தொழில், பொருளாதாரம், அரசியல் இந்த எந்த ரீதியிலும் எவ்வித யோசனைகளும் கூறக் கூடாது என்கிறுர்கள். நாம் மௌனியாய்ச் சும்மா இருக்க வேண்டுமாம்; பிரச்னைகளையெல்லாம் நிர்விக்கினமாய் நம் தலைவர்களும் நிபுணர்களுமே தீர்த்து வைக்கும்படி விட்டுவிட வேண்டுமாம்!

இந்த நிலைமையால், ஓர் அபாயம் ஏற்படும் என்றே நான் நினைக்கிறேன். காற்றுப் புகாத ஒரு சுவரை எழுப்பி, உண்மையை வெளியே தள்ளி, தப்பபிப்பிராயங்களேயும் பொய்யான பத்திர உணர்ச்சியையும் உள்ளே வைத்துப் பூட்டிவிடுவார்கள். சென்ற பனிக் காலத்தில், நான் அமெரிக்க மக்களுக்கு ஒரு விஷயத்தை அறிவித்தேன். அநேக அம்சங்களில், நாம் சரியாய்க் காரியம் செய்யவே யில்லை என்று சொன்னேன். யுத்தத்திலே வெற்றி மார்க்கத்தில்தான் நாம் செல்லுகிறேம்; என்றுலும், நாம் செலவு செய்யத் தேவைப்படுவதற்கு மேல், மிக அதிகமான பொருளையும் மனிதர்களையும் செலவு செய்து நஷ்டப்பட்டுக்கொண் டிருக்கிறேம் என்றும் சொன்னேன். உண்மைகளை ஆதாரமாகக் கொண்டே இவற்றை நான் சொன்னேன். இத்தகைய உண்மைகளைத் தணிக்கை செய்து தடுக்கக்கூடாது. இந்த உண்மைகளை நம்

அனைவருக்கும் தெரிவிக்க வேண்டும். ஏனென்றால், நம்முடைய குற்றங்களை நாமே உணர்ந்து, திருத்திக்கொள்ள வேண்டும். அப்படித் திருத்திக்கொள்ளாவிட்டால், நம் கூட்டாளிகளில் பாதிப் பேருடைய நட்பை, யுத்தம் முடியு முன்பே நாம் இழந்துவிடுவோம்; அதனால் சமாதானத்தையும் இழந்து விடுவோம்.

இந்த யுத்தத்திலே நாம் ஜயிக்கவேண்டும் என்றால், இதை நமது யுத்தமாக-நம் அனைவருக்கும் உரிய யுத்தமாக-நாம் செய்து கொள்ள வேண்டும் என்பது வெள்ளிடை. அப்படிச் செய்து கொள்ளுவதற்கு, இந்த யுத்தத்தைப் பற்றி எவ்வளவு அதிகமான விவரங்கள் சாத்தியமோ அவ்வளவு விவரங்களையும் தெரிந்து கொள்ள வேண்டும். ராணுவ பத்திரத்துக்குத் தேவையான தகவல்கள் மட்டுமே விலக்கா யிருக்க வேண்டும். தப்பான முறையில் நடக்கும் செய்தித் தணிக்கை, இந்தக் காரியத்தைச் சாதிக்காது.

பிரான்ஸில் மாஷினோ என்று ஒரு ராணுவத் தலைவர் இருந்தார். தீர்க்க தரிசனம் நிறைந்த ஒரு பிரெஞ்சுப் பிரஜை, ஏதோ பேச்சின் நடுவில், ஒரு யோசனையை மாஷினோவிடம் சொன்னார். "நவீன கால யுத்த நிலைமைகள் அலாதியானவை. இந்த நிலைமைகளில், விமானங்களுக்கும் டாங்கிகளுக்கும் எதிரே, பூமிக் கடியில் கட்டிய கோட்டைகள்,ஒரு வேளை பயன்படாமல் போகலாம்" என்று அந்தப் பிரஜை சொன்னார்.

"இந்த விஷயங்களை யெல்லாம் ராணுவ நிபுணருக்கு விட்டு விடுங்கள்" என்று மாஷினோ அவருக்குப் பதில் அளித்தார். இந்த யுத்தத்தில் இன்றுவரைக்கும் நடந்த வரலாற்றைப் பார்க்கும்போது, நம் ராஜீய, ராணுவ, கடற்படை நிபுணர்கள் தவறே செய்யமாட்டார்கள் என்று, நமக்கொன்றும் அப்படி உன்னதமான நம்பிக்கை ஏற்படுவதாயில்லை. ஜனநாயகத்தை ஒட்டும் மிக மகத்தான சக்தி ஒன்று உண்டு. பொதுஜன அபிப்பிராயம் என்ற சவுக்கடிதான் அந்தச் சக்தி. நாணயமான, சுதந்தரமான விவாதங்களினால் தான், அது உருவாகிறது. அந்தச் சக்திக்கு, நம் ராணுவ

நிபுணர்களையும் நம் தலைவர்களையும் எந்த நேரமும் ஆட்படுத்தி வைக்கவேண்டும்.

உதாரணமாக, ரோமலுக்கு மகத்தான ஜயம் ஏற்பட்ட காலத்தில், வட ஆப்பிரிக்காவில் நிகழ்ந்த தவறுகளை, பொது ஜனங்கள் குறை கூறினார்கள். அந்தப் பொதுஜன அபிப்பிராயந்தான், அங்கே சேனாதிபதியை மாற்றிவிட்டது. நான் எகிப்தில் இருந்த போது, இந்தப் புதிய சேனாதிபதி, ரோமலை நிறுத்திவிட்டார்; பின்னால் ஆப்பரிக்காவை விட்டே அவரைத் துரத்திவிட்டார். இந்த ஜயத்தின் பெருமை, ஓரளவு பிரிட்டிஷ் பொதுஜன அபிப்பிராயத்தையே சேரும் என்று நான் எண்ணுகிறேன்.

சர்வாதிகார ஆட்சி நடைபெறும் நாடுகளில் பொதுஜன அபிப்பிராயம் என்பது போன்ற இந்த மாதிரி சங்கதி கிடையாது என்று, ஐக்கிய அமெரிக்க மக்கள் முடிவு செய்யக்கூடும். உண்மையைச் சொன்னால், நான் சென்ற ஒவ்வொரு சர்வாதிகார ஆட்சி நாட்டிலும், பொதுமக்கள் என்ன நினைக்கிறார்கள் என்பதை அறிய, விஸ்தாரமான முறைகளைச் சர்க்கார் கோலி வைத்திருக்கிறார்கள். ஸ்டாலின்கூட, பத்திரிகைகளின் மூலம் ஜனங்களிடம் ஓட்டு எடுக்கும் ஒருவித முறையை அநுஷ்டிக்கிறார். நெப்போலியன் தமது அதிகாரத்தின் உச்ச நிலையில் இருந்தபோது, நாசமாகி எரிந்துகொண்டிருந்த மாஸ்கோ நகரத்தின் சாம்பலுக்கு நடுவே தமது வெள்ளைக் குதிரைமீது ஆரோகணித்து அமர்ந்தவண்ணம், பாரிஸ் நகர ஜனக் கும்பல்களின் கருத்து என்ன என்பது பற்றித் தூதர் மூலம் தினம் வரும் செய்தியை ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருந்தாராம்.

உலகத்தை சுற்றி நான் பார்த்த ஒவ்வொரு நாட்டிலும் யுத்தப் போக்குப் பற்றியும், சமாதானத்தைக் குறித்து மெல்ல மெல்ல எழுந்து வரும் கருத்துக்களைப் பற்றியும், ஏதாவது ஒரு வகையான பொதுஜன அபிப்பிராயம் பலமாய் வேலை செய்துகொண்டிருக்கக் கண்டேன். பாக்தாதில், ஒவ்வொரு காபி ஓட்டலிலும் நடக்கும் சம்பாஷணைகளிலே, அதை நான் கண்டேன். காபி ஓட்டல்கள், அங்கே ஏராளமா

யிருக்கின்றன. ருஷ்யாவில், பெரிய தொழிற்சாலைக் கூடங்களிலும், வேறு சகல இடங்களிலும் ருஷ்யர் புரியும் சம்பாஷணைகளி லெல்லாம், அது வெளியாயிற்று. ஸோவியத் ருஷ்யாவைப் பற்றி நாம் எண்ணிக்கொண் டிருக்கக் கூடியதற்கு மாறாக இது தோன்றலாம். என்றாலும், நாம் எவ்வளவு சுதந்தரமாகப் பேசுகிறோமோ அவ்வளவு சுதந்தரமாகவே, அநேகமாய் ருஷ்யர்களும் தங்கள் தனிப்பட்ட சம்பாஷணைகளில் பேசுகிறார்கள். சீனாவில் பத்திரிகைகள், நம்முடைய பத்திரிகைகளைப் போல் நிர்ப்பந்தமற் றிருக்கவில்லை. ஆயினும், நாம் ஆச்சரியப்படத் தக்க அளவு சுதந்தரத்தோடு, அவை பொதுஜன அபிப்பிராயத்தைப் பிரதிபலிக்கின்றன; அதற்கு வழியும் காட்டுகின்றன. பொது உடைமைக் கட்சித் தலைவனோ, தொழிற்சாலை ஊழியனோ, கல்லூரிப் பேராசிரியனோ, போர்வீரனோ இந்த எவனாயினும், சீனாவில் என்னுடன் சம்பாஷித்த எந்த மனிதனும், தன் அபிப்பிராயங்களை வெளியிடத் தயங்கவில்லை. அவர்களுடைய அநேகம் அபிப்பிராயங்கள், சர்க்காரின் சில கொள்கைகளுக்கு முரண்பாடாயு மிருக்கின்றன.

ஒவ்வொரு நாட்டிலும் போர் முனைகளுக்குப் பின்னே உள்ள மக்களின் உள்ளத்திலே கவலையும் ஐயமும் நிறைந்திருக்கக் கண்டேன். எல்லோருக்கும் பொதுவான நோக்கம் ஒன்றைக் காண, அவர்கள் வழி தேடிக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் கேட்ட கேள்விகளிலே, இது தெளிவாய்ப் புலனாயிற்று. யுத்தத்துக்குப் பின்னே அமெரிக்கா என்ன செய்யும், கிரேட் பிரிட்டன் என்ன செய்யும் என்று, அவர்கள் கேட்டார்கள். ருஷ்யா என்ன செய்யும் என்று சீன மக்கள் கேட்டார்கள். முழு உலகமுமே, வேட்கையும் பசியும் ஆசைக் கனவும் நிறைந்திருப்பதாய் எனக்குத் தோன்றியது. செய்யும் தியாகங்களுக்குப் பலனுண்டு என்று சிறிதாவது உலக மக்களுக்கு நம்பிக்கை உண்டாகுமானால், என்ன தியாகம் வேண்டுமானாலும் செய்ய அவர்கள் தயாரா யிருப்பதாகவும் தோன்றியது.

1917-ஆம் வருஷம் ஐரோப்பாவும் இதே மனோபாவத்தோடுதான் இருந்திருக்க வேண்டும். யுத்தத்தால் ரத்தம் சிந்திச் சோர்வுறும்போது, இந்த மனோபாவம் தானாகவே வந்துதான் தீரும். இந்த நிலையில் 1917-ஆம் வருஷத்தில், உலகத்துக்கு லெனின் ஓர் அடுக்குப் பதில்களைத் தந்தார். சற்றுப் பின்னால், வில்ஸன் மற்றோர் அடுக்குப் பதில்களை அளித்தார். இந்த இரண்டு அடுக்குப் பதில்களில் எவையும் யுத்தத்திலே நகமும் சதையும் போல ஒன்றவில்லை. பல சமாதான உடன்படிக்கைகளின் மூலமும், இவற்றை யுத்தத்தின் மீது, மேலெழுந்த வாருகத்தான் சுமத்தினார்கள். அதனால், இந்த இரண்டு பதில்களும் யுத்தத்திலிருந்து நமக்கு மீட்சி தரவில்லை. அதிகாரத்துக்காக, செலவு மிக்க போராட்டமாக இராதபடி, யுத்தத்தை மாற்றிவிடவுமில்லை. யுத்தம் தற்காலிகச் சண்டை நிறுத்தத்திலே முடிந்ததேயல்லாமல், நிலையான சமாதானத்திலே முடிய வில்லை.

இந்த யுத்தமும் அப்படியேதான் ஆகித்தீர வேண்டும் என்று நான் நினைக்கவில்லை. கிரேட் பிரிட்டன், சுதந்தரச் சாம்ராஜ்ய நாடுகள், அமெரிக்கா, ருஷ்யா, சீனா இப்படி எங்கெங்கோ வெகு தூரத்தில் உள்ள பல நாடுகளில் வசிக்கும் ஜனங்களின் மனத்திலும், இப்போது இந்த யுத்தம் நடக்கையிலேயே-பொதுவான நோக்கங்கள் இருந்து வருகின்றன. ஆனால், நம்முடைய அந்தப் பொது நோக்கங்களுக்குத் தெளிவான உருக் கொடுத்து, அவற்றை நாம் உண்மையாக்க வேண்டும்.

யுத்தம் நடக்கும்போதே தங்கள் நோக்கங்களை ஜனங்கள் தெளிவுபடுத்திக் கொண்டுவிட வேண்டும். உலகத்தின் பல நாட்டு மக்களிடமும் அந்த நோக்கங்களைப் பற்றிய விவாதத்தைக் கிளப்பிவிட வேண்டுமென்றே, நான் முயன்றேன். ஏனென்றால், தாங்கள் எதற்காகப் போராடுகிறார்கள், யுத்தத்துக்குப் பின்னே என்ன நிகழ வேண்டுமென்று தாங்கள் நம்பி யிருக்கிறார்கள் என்பவை பற்றி உலக மக்களுக்குள்ளே பொதுவான ஓர் ஒப்பந்தம் ஏற்படு முன்பாகவே இந்த யுத்தம் முடிவடைந்துவிடுமோ என்ற பயம், எனக்குச்

சதா காலமும் இருந்து வருகிறது. சென்ற யுத்தத்திலே நான் ஒரு சோல்ஜரா யிருந்தேன். யுத்தம் முடிந்ததும் எங்கள் பிரகாசமான கனவுக ளெல்லாம் மறைந்து போகக் கண்டேன்; எங்கள் உணர்ச்சி மிக்க சுலோகங்களெல்லாம் துரோகித்தனமானவர்களின் கேலிப் பேச்சாக முடிந்ததையும் கண்டேன். யுத்தத்துக்குப் பிற்காலம் பற்றிய பொது நோக்கங்களை, ஜனங்கள் தாங்கள் போராடும் போதே நிர்ணயித்துக் கொள்ளாததால்தான், இப்படி ஆயிற்று. மறுபடியும் இவ்விதம் நிகழ்ந்துவிடாமல் பார்த்துக்கொள்ள, நாம் சங்கல்பம் செய்து கொள்ள வேண்டும்.

ஏற்கனவே பல லட்சக்கணக்கான மக்கள், இந்த யுத்தத்திலே மாண்டுவிட்டார்கள். இது முடிவடையு முன்பாக, இன்னும் பல்லாயிரம் பேர் மாளப்போகிறார்கள். பிரிட்டிஷ்காரரர், கானடாக்காரரர், ருஷ்யர், சீனர், அமெரிக்கர், இன்னும் நம்மோடு சேர்ந்து போராடும் பிற கூட்டாளிகள் ஆகிய யாவரும் யுத்தத்திலே பொதுக்கூட்டுறவு கொண்டு உழைக்கிறோம் இந்த அனைவரும் யுத்தத்துக்குப் பின்பும் கூட்டுறவோடு உழைக்கத் தக்க சாதனங்களையும் வழிகளையும் நாம் கண்டு பிடிக்க வேண்டும். அப்படிக் கண்டுபிடிக்க வில்லையானால் இந்தக் காலத்து இந்தத் தலைமுறையின் மக்களான நாம், கடமை தவறியவ ராவோம்.

நம் தலைவர்கள், கூட்டாகவும் தனித்தனியாகவும், நம்முடைய பொது லட்சியங்கள் சிலவற்றை வெளியிட்டிருக்கிறார்கள். அப்படி அவர்கள் வெளியிட்ட வாசகங்களுக்குள்ளேயே மிக நேர்த்தியானது, சியாங்-கே-ஷேக் மேல்நாட்டுக்கு விடுத்த ஒரு செய்தியே. சென்ற நவம்பரில் நியூ யார்க் ஹெரால்டு ட்ரிப்யூன் பத்திரிகைக்கு அதை அவர் அளித்திருக்கிறார்; அவருடைய செய்தியின் கடைசிப் பகுதி இது:

"ஆசியாவின் மேல்நாட்டு ஏகாதிபத்திய ஆதிக்கத்தைக் களைந்துவிட்டு, அதற்குப் பதிலாகத் தன்னுடைய அல்லது வேறு எந்தக் கீழ்நாட்டினுடைய ஏகாதிபத்திய ஆதிக்கத்தை யாவது ஸ்தாபிப்பதோ, உலகத்தோடு சேராமல் தனித்து

நிற்பதோ, சீனாவின் ஆசை யில்லை. தனித்தனியாகக் கூட்டாளிகள் சேர்வது - அந்த அந்தப் பிரதேசத்திலுள்ள நாடுகள் மட்டும் ஒன்று சேர்ந்து கொள்வது - என்ற கருத்து, மிகவும் குறுகிய நோக்கம் கொண்டது. இதன் பயனாய், முடிவிலே இன்னும் பெரிய யுத்தங்கள்தாம் தோன்றும். இந்தக் குறுகிய கருத்தைவிட்டு, நாம் முன்னேற்ற மடையவேண்டும்; உலக ஒற்றுமையை ஏற்படுத்தும் திறமையான ஒரு ஸ்தாபனத்தை நாம் நிறுவ வேண்டும். தேசங்கள் தனித்து நிற்கும் கொள்கையும் ஏகாதிபத்திய ஆதிக்க முறையும் ஒழிந்து, உண்மையான உலகக் கூட்டுறவு முறை ஒன்று ஏற்படவேண்டும். அது ஏற்படாத வரையில், ஒன்றை ஒன்று சார்புகொண்ட சுதந்தர நாடுகள் அடங்கிய புதிய உலகம் எந்த உருவம் பெற்றாலும் சரிதான்; உங்களுக்கோ எங்களுக்கோ நிரந்தரமான பத்திரம் ஏற்படாது.''

இதனுடன், ஸ்டாலின் வெளியிட்ட யுத்த லட்சிய அறிக்கையையும் சேர்த்துக் கொள்ளுங்கள். அது 1942 நவம்பர் 6-ஆம் தேதி அவர் வெளியிட்ட அறிக்கை; அக்டோபர்ப் புரட்சியின் இருபத்தைந்தாம் ஆண்டுவிழாச் சமயத்தில் வெளிவந்த அறிக்கை. அதை நான் ஏற்கனவே எடுத்துக் காட்டியிருக்கிறேன். அபூர்வமான தெளிவும் திட்டமும் உள்ள அந்த அறிக்கை சொல்கிறது:

“நிற வேற்றுமையை ஒழிக்க வேண்டும். தேசங்களுக்குள் சமத்துவம் வேண்டும். அவற்றின் எல்லைகளைப் பாதுகாக்க வேண்டும். அடிமைப்பட்ட நாடுகளை விடுவிக்க வேண்டும். அவற்றின் சுதந்தர ஆட்சி உரிமைகளை மீட்டுக் கொடுக்க வேண்டும். தன் தன் தேச காரியங்களைத் தன் தன் விருப்பப்படியே நடத்திக்கொள்ள, ஒவ்வொரு நாட்டுக்கும் உரிமை இருக்க வேண்டும். துன்பப்பட்ட தேசங்களுக்குப் பொருளாதார உதவி புரிய வேண்டும். அவை தங்கள் செல்வ க்ஷேமத்தை அடைய ஒத்தாசை செய்ய வேண்டும். ஜனநாயக சுதந்தரங்களை மீட்க வேண்டும். ஹிட்லர் ஆட்சியை அழிக்கவேண்டும்.''

பிராங்கிளின் ரூஸ்வெல்ட், நான்கு சுதந்தரங்களைப் பிரகடனம் செய்திருக்கிறார். வின்ஸ்டன் சர்ச்சிலும் பிராங்கிளின் ரூஸ்வெல்டும் சேர்ந்து, அட்லாண்டிக் சாசன ஒப்பந்தத்தை உலகுக்கு அறிவித்திருக்கிறார்கள்.

ஸ்டாலின் அறிக்கையும் சரி, அட்லாண்டிக் சாசனமும் சரி, பொதுவான ஒரு பிழையைச் செய்திருப்பதாய் எனக்குத் தோன்றுகிறது. மேற்கு ஐரோப்பாவில் பழைய பிரிவுகளும் பழைய சிறு நாடுகளும், தன் தன் தனியான அரசியல், பொருளாதார, ராணுவ சுயேச்சாதிகாரத்தோடு மீண்டும் சிருஷ்டியாகும் என்று, அவை இரண்டுமே சோதிடம் சொல்லுகின்றன. நைந்து போன இந்த முறையினால்தான், ஐரோப்பாவின் பல லட்சக்கணக்கான மக்கள், ஹிட்லர் சொல்லும் புதிய ஏற்பாட்டிலே வசியம் ஆகிவிட்டார்கள். ஏனென்றால், ஹிட்லரின் கொடுங்கோல் ஆட்சி வந்தாலுங்கூட அதிலே பெரிய விஸ்தீர்ணமுள்ள ஒரே ராஜ்யம் சிருஷ்டியாகுமே என்ற ஒரு நம்பிக்கையாவது அவர்களுக்கு ஏற்பட்டது. அப்படிப்பட்ட ராஜ்யத்தில்தானே, நவீன காலத்துப் பொருளாதார காரியங்களை வெற்றிகரமாக நடத்த முடியும்? தனித்தனியான பல சிறு ராஜ்யங்கள் அமைந்து தேசியச் சுவர்களைப் பலமாய் எழுப்பிக் கொண்டதால், வியாபாரம் மிகக் குறுகிவிட்டது. இதன் பலனாக, யார் செல்வாக்குப் பெறுவது என்பதற்காகச் சூழ்ச்சிகள் கிளம்பின. அதன் மேல், தரித்திரமும் யுத்தமும், தடுக்க முடியாதபடி வந்துவிட்டன. இந்த அநுபவத்தால் அவர்களின் மனம் நொந்துவிட்டது.

ஐரோப்பாவின் சிறு சிறு ராஜ்யங்களை, அரசியல் சுதந்தரமுள்ளவையாக, மீண்டும் சிருஷ்டிப்பதா? ஆம், சிருஷ்டிக்கலாம். ஆனால் பொருளாதாரத்திலும் ராணுவத்திலும் சுதந்தரமுள்ளவையாக, அவற்றைச் சிருஷ்டிக்கலாமா? கூடாது, கூடாது. மேற்கு ஐரோப்பாவிலே - அதன் சொந்த நன்மையைக் கருதியும் உலகத்துக்குச் சமாதானமும் பொருளாதார க்ஷேமமும் உண்டாவதற்காகவும் - நிலையான ஒரு தன்மையை ஏற்படுத்த நாம் விரும்பினோமானால், மேலே கண்டபடி சிறு ராஜ்யங்களைச் சிருஷ்டிக்கக் கூடாது.

என்ருலும், தளபதி சியாங்-கே-ஷேக்கின் அறிக்கை, ஸ்டாலினின் பிரகடனம், அட்லாண்டிக் சாசன ஷரத்துக்கள், நான்கு சுதந்தர விளக்கம் இவை அனைத்துமே தனித் தனியேயும் பொதுவாகவும், மகத்தான ஒரு முற்போக்குக்கு அறிகுறிகளே. இவற்ருல் உலகெங்குமே உன்னதமான நம்பிக்கைகள் எழுந்திருக்கின்றன.

ஆயினும், இந்த அறிக்கைகளுக் கேற்றபடி காரியம் செய்யாவிட்டாலோ, அல்லது இந்த அறிக்கைகளுக்கு ஏற்றபடி காரியம் செய்ய முடியாமல் தனிப்பட்ட நாடுகளின் ஆதர்சங்கள் குறுக்கிட்டு விட்டாலோ, உலக மக்களுக்கு நெஞ்சை யரிக்கும் அவநம்பிக்கை ஏற்பட்டுவிடும். அதனுல் உலக சமாதானத்துக்கு வழியே இல்லாமல் போய், உலகம் அடியோடு நாசமாகி விடும்.

இந்தக் கொள்கைகளை அறிக்கை செய்த தலைவர்கள் உண்மையிலேயே இவற்றைக் கருத்தில் கொண்டிருக்கிருர்களா என்று பார்க்க, உலகெங்கும் சகல இடத்து ஜனங்களும் - வாய் விட்டுச் சொல்லத் தெரிந்தவர்களும் தெரியாதவர்களும் - கவனித்துக்கொண்டே யிருக்கிருர்கள்.

நான் என் பிரயாணத்துக்குப் புறப்படு முன்னே, அட்லாண்டிக் சாசனத்தைப் பற்றி, மிஸ்டர் வின்ஸ்டன் சர்ச்சில் இரண்டு அறிக்கைகள் விடுத்தார்: 1. "நாஜி ஆக்கிரமிப்பின் கீழ் இப்போது அவதியுறும் ஐரோப்பிய ராஜ்யங்களுக்கும் தேசங்களுக்கும், சர்வாதிகார உரிமை, சுய ஆட்சி, தேசீய வாழ்வு ஆகியவற்றைத் திருப்பிக் கொடுப்பதையே, சாசன - கர்த்தாக்கள் முக்கியமாய் மனத்தில் கொண்டார்கள்'' என்றும், 2. "இந்தியாவிலும் பர்மாவிலும் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் வேறு பாகங்களிலும் அரசியல் அமைப்புச் சம்பந்தமாக அவ்வப்போது செய்து வந்திருக்கும் பல்வேறு அறிக்கைகளைச் சாசன ஷரத்துகள் எவ்விதத்தும் பாதிக்க வில்லை'' என்றும் அவர் அறிவித்தார். "இதற்கு என்ன அர்த்தம்? மேற்கு ஐரோப்பாவுக்கு மாத்திரமே சாசனம் பிரயோகமாகும் என்றுதான் அர்த்தமா?'' என்று, நான் சென்ற ஒவ்வொரு

நாட்டின் பிரதம மந்திரியும், அந்நிய இலாக்கா மந்திரியும், எண்ணிறந்த மக்களும் என்னைக் கேட்டார்கள். "சர்ச்சிலின் கருத்து என்னவோ, எனக்குத் தெரியாது. ஐரோப்பிய நாடுகளையே முக்கியமாய் மனத்தில் கொண்டோம் என்று சர்ச்சில் சொல்வதால், மற்ற நாடுகளை அவர் விலக்கி விட்டார் என்று கருத்தில்லை. இது மாத்திரம் தெளிவு" என்று, நான் என்னவோ ஒரு விதமாய்ப் பதில் சொல்லி விட்டேன். என் பதிலைக் கேட்டவர்கள், இது சட்டவாதம் என்றும் கவைக்குதவாதது என்றும் சொல்லி, அதை ஆத்திரத்தோடு அலட்சியம் செய்து தள்ளிவிட்டார்கள். இதனால்தான், பின்னால் மிஸ்டர் சர்ச்சில் செய்த ஓர் அறிக்கையைக் கேட்டபோது, நான் பெரும் வருத்தம் அடைந்தேன். உலகத்தையே கலங்கச் செய்துவிட்டது அவர் அறிக்கை. "நமக்குச் சொந்தமானவற்றை யெல்லாம் நம் கையிலேயே வைத்திருப்பதுதான் நம் எண்ணம். பிரிட்டிஷ் சாம்ராஜ்யம் என்ற கம்பெனியைக் கலைக்கும் வேலைக்காக, நான் மன்னர்பிரானின் பிரதம மந்திரி யாகவில்லை" என்று அவர் சொன்னார். ஆனாலும், அதன் பின்பு, தற்போது அமெரிக்காவில் வசிக்கும் பல பிரிட்டிஷ்காரருடன் சம் பாஷித்தேன்; பிரிட்டிஷ் பத்திரிகைகளைத் தொடர்ந்து படித்தேன்; இங்கிலாந்திலும் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் எங்கும் உள்ள ஏராளமான ஜனங்களுடன், பிரமிக்கத் தக்க அளவு வரவர மிகுதியாய் இடை விடாமல் கடிதப் போக்குவரத்தும் செய்து வருகிறேன். இவற்றிலிருந் தெல்லாம் ஒரு விஷயம் எனக்குப் புலனாயிற்று. அதாவது, இந்த விவகாரங்களில் பிரிட்டிஷ் பொது ஜன அபிப்பிராயம், ஐக்கிய அமெரிக்க அபிப்பிராயத்துக்குங்கூட மேலாக முற்போக்குள்ளதா யிருப்பது புலனாயிற்று. நான் சந்தோஷ மடைந்தேன். பழைய ஏகாதிபத்திய ஆதிக்கம் தொலைய வேண்டும் என்பதிலும், சுதந்தரமான தேசங்களின் கூட்டுறவான பிரிட்டிஷ் சாம்ராஜ்ய தத்துவங்களை, பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் சகல மூலைகளுக்கும் அதி வேகமாய்ப் பிரயோகித்து விட வேண்டும் என்பதிலும்

பிரிட்டிஷாருக்குச் சந்தேகமே கிடையாது; நான் அறிந்த மட்டும், அவற்றில் அவர்களுக்குத் துக்கமும் கிடையாது.

நம் தலைவர்களின் அறிக்கைகளை, அவர்கள் செய்யும் காரியங்களைக் கொண்டே, மக்கள் சோதித்துப் பார்க்கிருர்கள்; அதனுல்தான், வட ஆப்பிரிக்காவில் நம் சொந்தத்தில் நாம் கடைப்பிடித்துள்ள கொள்கையும் எனக்குத் துக்கமா யிருக்கிறது. வட ஆப்பிரிக்காவுக்குள்ளே, அமெரிக்கப் படையினர் ஜயசீலர்களாகப் பிரவேசித்தார்கள். அப்போது, நம் ஜனுதிபதி செய்த பிரகடனமே துக்கத்தின் ஆரம்பமாகும். பழம் பசலியான ராஜதந்திரச் சூத்திரத்தையே, ஜனுதிபதி காரணமாய்ச் சொன்னுர். அதைக் கேட்டு யாரும் ஏமாந்த தில்லை. பெல்ஜியத்திலும், ஹாலந்திலும் ஹிட்லர் நுழைந்தபோது, அவரும் இதே சூத்திரத்தைத்தான் சொன்னுர். அவை ஏமாறவில்லை. ஜனுதிபதியின் பிரகடனம் இது: "மேற்கு ஆப்பிரிக்காவிலிருந்து அமெரிக்காவுக்குக் கடல் குறுகலா யிருக்கிறது. ஆப்பிரிக்காவில் ஜெர்மனியும் இதாலியும் படையெடுத்து வெற்றி பெற்றுல், அது அந்தக் குறுகிய கடல் மார்க்கமாக அமெரிக்காவுக்கு, நேரடியான அபாயம் விளைக்கும். அப்படி அவை ஆப்பிரிக்காவில் படையெடுக்கு முன்பு நாம் முந்திக் கொள்வதற்காக ஓர் அமெரிக்கப் படை, ஆப்பிரிக்காவின் பிரெஞ்சுக் காலனிகளில், மத்தியதரைக் கடல், அட்லாண்டிக் சமுத்திரம் இவற்றின் கரைகளில் இன்று போய் இறங்குகிறது."

அதன் பிறகு, நாம் டார்லானிடம் செய்த வியாபாரங்கள் நிகழ்ந்தன; சகல சுதந்தர மக்களும் எந்தக் கருத்துக்களையெல்லாம், வெறுத்தொதுக்கக் கற்ருர்களோ அந்தக் கருத்துக்கள் அனைத்துமே உருவெடுத்தது போன்றவர் டார்லான். அவருடன் நாம் செய்த வியாபாரங்கள், தற்காலிகமான ராணுவ அவசியத்தை முன்னிட்டவை என்று காரணம் சொன்னேம். இந்தச் சமாதானத்தைக் கண்டிப்பது கஷ்டமாயிற்று. கண்டித்தால், நேர்த்தியான ஒரு ராணுவத் தலைவனுக்குத் துரோகம் செய்தது போல் தோன்றி யிருக்கும்.

ஏனென்றால், டார்லான் அப்போதுதான், பிரிட்டிஷ் கடற் படையோடு கூட்டுச் சேர்ந்து, அற்புதமான யுத்த தந்திர மொன்றைச் சாதித்து முடித்திருந்தார். இருந்தாலும், இந்தச் சமாதானம் பலருக்குத் திருப்தி யளிக்க வில்லை. ராணுவ வீரனால் நடத்தப் பட்ட வியாபாரமாக, இதை அவர்கள் நம்ப வில்லை. மீண்டும், கோணலான வழிகளில், ராஜ தந்திரச் சூழ்ச்சியே நடந்திருப்பதாக, அவர்கள் எண்ணினார்கள். உலகத்துக்கு நாம் பிரகடனம் செய்த கொள்கைகளை யெல்லாம், இதனால் விற்றுவிட்டோம் என்று அவர்கள் கருதினார்கள்.

சிறிது காலத்துக் கெல்லாம் பிரிட்டனை நியமனம் செய்தது, அவர்களின் சந்தேகங்களை யெல்லாம் ஊர்ஜிதம் செய்து விட்டது. இவற்றால் மனம் சங்கடப் பட்டுள்ள நம்மைப் போன்றோர், இன்று வெளிக்குத் தோன்றுவதைவிட மேலான நற்பலன் ஏதாவது வெளிப் படக்கூடும் என்றே நம்பிக்கொண் டிருக்கிறோம். அப்படி ஒரு நற்பலன் வெளிப் பட்டால்கூட என்ன? அமெரிக்காவின் மீதுள்ள நல்லெண் ணக் களஞ்சியம் மட்டும் மகத்தானதா யிராவிட்டால், அந்தக் களஞ்சியம் இந்த நிகழ்ச்சியால் இப்போதே வற்றிப் போயிருக்கும். ஏனென்றால், ருஷ்ய மக்களும், பிரிட்டிஷ் மக்களும், ஐயிக்கப் பெற்ற ஐரோப்பிய நாடுகளின் மக்களும், இந்த நிகழ்ச்சியால் தங்களுக்குத் துரோகம் நடந்துவிட்டதாக எண்ணி, ஒன்றுமே புரியாமல் திகைத்துப் போயிருக்கிறார்கள். கண் காணாத தூரத்திலுள்ள சீனாவில் கூட, ஜனங்களின் நன்னம்பிக்கைக்கு இது மற்றுமோர் அடியாகிவிட்டது. ஏற்கனவே 'இந்தோ-சீனாவைப் பிரெஞ்சுச் சாம்ராஜ்யத்துக் குத் திருப்பிக் கொடுத்து விடுவோம்' என்று நம்பிக்கையாக நாம் வாக்களித்ததால் சீன மக்கள் திடுக்கிட்டுப் போயிருந் தார்கள். நம் நாட்டுக்குள்ளேயே பலர், நாம் இந்த யுத்தத் தைத் தற்காப்பாகத்தான் நடத்திக்கொண் டிருக்கிறோம் என்று அந்தரங்க சுத்தியாகவே நினைத்துக்கொண் டிருந் தார்கள். அவர்கள் மனத்திலெல்லாம், ஒரு பழைய உணர்ச் சியை, இது மீண்டும் கிளப்பி விட்டிருக்கிறது. அதாவது, இந்த

யுத்தம் முடிந்தவுடனே, நாம் நம் நாட்டு எல்லைகளுக்குள்ளே திரும்பி வந்து ஒதுங்கி யிருக்க வேண்டும் என்ற உணர்ச்சி தான்.

தலைவர்கள் வெளியிட்ட பிரகடனங்களையே உரை கல்லாய்க் கொண்டுதான், அவர்களின் சொற்களையும் செயல் களையும் உலகத்தார் கவனித்து வருகிறார்கள். அவர்கள் அவ் விதம் கவனிப்பது, வின்ஸ்டன் சர்ச்சில், பிராங்கிளின் ரூஸ்வெல்ட் ஆகிய இரு தலைவர்களின் சொற்களையும் செயல் களையும் மாத்திரம் அல்ல. கிழக்கு ஐரோப்பாவில், ருஷ்யா வின் நோக்கங்கள் யாவை என்று, ஸ்டாலின் அறிவிக்க வில்லை. உலகத்தாருக்கு இதுவும் கவலைதான் தந்திருக்கிறது. தலைவர்களின் பிரகடனங்களில் சொல்லியுள்ள நோக்கங்கள் மீது, இதனாலும் அவ நம்பிக்கையே ஏற்பட்டிருக்கிறது.

நாம் சண்டையிடும்போதே, திட்டங்களும் போட வேண்டும்; அந்தத் திட்டங்களை உண்மையாக்கவும் வேண் டும்; இப்படிச் செய்யாவிட்டால், தலைவர்களின் பிரகடனங் களும், உலக மகா ஜனங்களின் அபிப்பிராயமும் எவ்வளவு தெளிவா யிருந்தாலும் சரிதான்; ஒரு பயனும் விளையாது.

ஐக்கிய தேசங்களின் ஒப்பந்தத்தை வெளியிட்டார்களே அன்று, தென்னாப்பிரிக்காவிலும், மீதி ஆப்பிரிக்காவிலும், ருஷ்யாவிலும், சீனாவிலும், பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்திலும், ஐக்கிய அமெரிக்காவிலும், ஐயிக்கப்பெற்ற ஐரோப்பிய நாடுகளிலும் - ஒரு வேளை ஜெர்மனியிலும் இதாலியிலுங்கூட இருக்கலாம் - உள்ள பல கோடிக்கணக்கான மக்கள், ஒரு காட்சியைக் கற்பனை செய்துகொண்டார்கள்; மனித குலத்தைச் சுதந்தரம் பெறச் செய்ய ஒன்றுகூடி உழைப் பதற்காக, தங்கள் தங்கள் தேசத்துப் பிரதிநிதிகளும் அந்த ஒப்பந்தத்திலே கையெழுத்திட்டுச் சேர்ந்துகொள்வது போன்ற காட்சியைத்தான் அவர்கள் கற்பனை செய்து கொண்டார்கள். யுத்தம் நடக்கும்போதே, இந்தத் தேசங்கள் அனைத்தின் பிரதிநிதிகளும் ஒரே பொதுவான கவுன்சிலில் உட்கார்ந்து, யுத்த தந்திரம், பொருளாதாரப் போர், வருங் காலத் திட்டம் ஆகியவற்றைப் பற்றி ஆலோசிப்பார்கள்

என்றும் அவர்கள் நினைத்தார்கள். ஏனென்றால், இவ்வாறு செய்தால்தான், யுத்தம் சீக்கிரமாக முடியும் என்று அவர்கள் அறிவார்கள். இன்று தினம் தேசங்கள் சேர்ந்து உழைக்கும் உழைப்புத்தான், வருங்காலத்திலே அவை ஒற்றுமையாய் வாழ்வதற்குத் தக்க பாதுகாப்பாகும் என்பதையும் அவர்கள் அறிவார்கள்.

ஒப்பந்தத்திலே கையெழுத்திட்டு, ஒரு வருஷத்துக்கு மேலே ஆகிவிட்டது. இன்று தினம், ஐக்கிய தேசங்கள் என்ற சொற்றொடர் ஒரு மகத்தான சந்தேகமாகும்; ஒரு கூட்டுறவு உடன்படிக்கையாகும். ஆனால், நம்பிக்கை கொண்ட கோடிக் கணக்கான மக்கள், ஏமாற்றமடையா திருக்க வேண்டுமானால், நாம் கனவுகாணும் உலகம் ஸ்தாபிதமாக வேண்டுமானால், ஒரு காரியத்தை நாம் செய்தாக வேண்டும். அதாவது ஐக்கிய தேசங்கள் பொதுவான ஒரே கவுன்சிலில் கூடியாக வேண்டும். நாளைக் கல்ல, இன்றே கூடவேண்டும். யுத்தத்தில் ஜயிப்பதற்காக மாத்திர மல்ல, மனித குலத்தின் வருங்கால க்ஷேமத்துக் காகவுமே அப்படிக் கூடவேண்டும்.

நாம் சண்டையிட்டுக்கொண் டிருக்கும்போதே, நாம் சேர்ந்து உழைக்கக்கூடிய ஒரு நிர்வாக அமைப்பை நிறுவ வேண்டும்; அது, சண்டை நின்ற பிறகும் உயிரோ டிருந்து வரக்கூடியதாய் இருக்க வேண்டும். தேசீய அல்லது சர்வ தேசீய சர்க்காரின் கருவிகள் வெற்றிகரமாய் அமைவது, வளர்ச்சியின் பலனேயாகும். அந்தக் கருவிகளை ஒரே நாளில் படைத்துவிட முடியாது. எந்த யுத்தமும் முடிந்தவுடனே, தேசீய உணர்ச்சிகள் திரும்பவும் கிளம்பும்; சுயநலம் தாண்டவமாடும்; ஒழுக்கக் குலைவு உண்டாகும்; பொருளா தாரச் சிதைவு ஏற்படும். இவை இயல்பு. யுத்தத்துக்குப் பின்னே இந்த நிலைமைகள் தோன்றிய காலத்தில், மேலே கண்ட கருவிகளைப் படைப்பது முடியாத காரியமாகும். ஒருவரை ஒருவர் ஒட்டிக்கொள்ளச் செய்யும் பொது அபாயம் இருந்துவரும் இப்போதே, அந்தக் கருவிகளைப் படைத்து விட வேண்டும். நிர்வகிக்கவும், அமைதியாய் வேலை

செய்யவும் ஏற்றவையாக, அவற்றை ஆக்கவேண்டும்; பொதுப் பிரச்னைகளுக்குப் பரிகாரம் காண்பதற்காக, நாள்தோறும் செய்யும் முயற்சியினுல், அவை மெருகு பெற்று வளரும்படி செய்ய வேண்டும்.

பொருளாதாரப் போர் நேராமல் தடுக்கவும், பல தேசங்களுக்கு மிடையே சமாதானம் நிலவும்படி செய்யவும் ஏற்ற ஒரு கருவியை, யுத்தம் முடிந்தபின்பு படைத்து விடுவோம் என்று சிலர் சொல்லக்கூடும். சத்துருவைத் தோற்கடிக்க வேண்டும் என்ற ஐக்கிய முயற்சியும் பொது நோக்கமும் உள்ள இந்தக் காலத்திலேயே அவை படைக்காமல், பின்னுல் செய்வோம் என்பது வீண்பேச்சு. நாம் ஒன்றுசேர்ந்து போரிடும் இந்த வேளையிலேயே, ஒற்றுமையாய் உழைக்கவும், ஒருவரை ஒருவர் மதிக்கவும், ஒருவருக்கொருவர் உதவி புரிந்துகொள்ளவும் கற்க வேண்டும். அப்படிச் செய்யாவிட்டால், யுத்தத்துக்குப் பின்னே சர்வ தேச வியாபாரத்தாலும் கைத்தொழில் வளர்ச்சியாலும் சகல மக்களுக்கும் வேலை கிடைக்கச் செய்வோம் என்பது வெறும் கனவாகும். சீனுவோடும் தூரத்துக் கீழ்த் திசை நாடுகளோடும் பிரமாதமான வியாபார உறவுகளை நாம் வளர்த்துக்கொள்ளப் போகிருேம் என்று நம் தலைவர்கள் சிலர் சோதிடம் சொல்லுகிருர்களே; இன்று நாம் சீனுவோடு ஒரு கூட்டு ராணுவ தந்திரத்தை உருவாக்கிக் கொள்ளாவிட்டால், அந்தச் சோதிடம் பலிக்குமா? பிரமிக்கத் தக்க சக்திகள் ருஷ்யாவிலே மறைந்து கிடக்கின்றன. அந்த ருஷ்யாவை, வருங்கால உலகப் பொருளாதாரக் கூட்டுறவு மண்டலத்துக்குள்ளே கொண்டுவந்து விடலாம் என்று நாம் நம்புகிருேம்; ருஷ்யாவின் ராணுவ தந்திரிகளோடும் ராஜீயத் தலைவர்களோடும் ஒரு பொதுக் கவுன்சிலில் அமர்ந்து வேலை செய்ய நாம் கற்காவிட்டால், இந்த நம்பிக்கை பலிக்குமா?

இன்று நமது தேவை என்னவென்ருல், ஐக்கிய தேசங்களின் கவுன்சில் ஒன்றை அமைப்பதே யாகும். அது எல்லாருக்கும் பொதுவானதாய் இருக்க வேண்டும்; அதில்

சகலருமே ஒன்று சேர்ந்து, திட்டங்கள் வகுக்க வேண்டும். தங்களுக்குப் புத்திசாலித்தனமாய்த் தோன்றும் முறையில், சிலர் மற்றவர்களுக்கு வழி காட்டலாம்; உதவி புரியலாம். ஆனால், அந்தக் கவுன்ஸில் இந்தச் சிலருக்கு மாத்திரமே உரியதாய் இருக்கக்கூடாது. மகோன்னதமான ராணுவ தந்திரக் கவுன்ஸில் ஒன்று நமக்கு வேண்டும். சண்டையின் கஷ்டத்தைத் தாங்கிக்கொண்டிருக்கும் சகல நாடுகளும் அதில் பிரதிநிதித்துவம் பெற்றிருக்க வேண்டும். சீனர் களிடமிருந்துங்கூட நாம் ஏதாவது கற்றுக்கொள்ளக்கூடும். அவர்கள் வெகு அற்பமான சாதனங்களை வைத்துக்கொண்டு இவ்வளவு அருமையாய், இவ்வளவு காலமாய்ச் சண்டை யிட்டு வந்திருக்கிறார்களே! ருஷ்யாவிட மிருந்தும் நாம் ஏதாவது கற்றுக்கொள்ளக்கூடும். அவர்கள் சமீபத்தில்தானே யுத்தக் கலையைப் பற்றி ஏதோ கொஞ்சம் கற்றிருப்பதாய்த் தோன்றுகிறது!

சர்வ ஜனங்களும் சேர்ந்து சம்பூர்ண யுத்தத்துக்காக, ஐக்கிய தேசங்களின் பொருளாதார பலத்தை யெல்லாம் ஒன்று கூட்டும் பொதுக் கவுன்ஸில் ஒன்றும் நமக்கு வேண்டும். அது, வருங்காலத்துப் பொருளாதாரக் கூட்டுற வைச் சாத்திய மாக்கக்கூடிய வழிகளை யெல்லாம், ஐக்கிய மாய் ஆராய்ச்சி புரியவும் வேண்டும்.

இவற்றை யெல்லாம் விட மிக முக்கியமாக, நாம் ஐக்கிய தேசங்கள் என்ற முறையிலே, இப்போதே சில கொள்கைகளை உருவாக்கிக் கொள்ளவேண்டும். ஜயித்த நாடுகளை விடுவிக்க நாம் அடி அடியாய் முன்னேறுகையில், நம் செயல்களை அந்தக் கொள்கைகள்தாம் கண்காணிக்க வேண்டும். நம் வீரர்கள் ஜயசீலர்களாய் முன்னேறி வரும் ஒவ்வோர் அடியிலும் எதிர்ப்படக் கூடிய எண்ணிறந்த பிரச்னைகளைச் சமாளிப்பதற்கும், கூட்டுக் கவுன்ஸில் ஒன்றை நாம் ஸ்தாபிக்க வேண்டும். இல்லையானால், நாம் ஒவ்வொரு தடவையும் வெவ்வேறு விதமாய்ச் சமயத்துக்குத் தக்கபடி யெல்லாம் தாளம் போடவேண்டி யிருக்கும். அதனால், வருங் காலத்திலே நிறம், மதம், அரசியல் முதலிய

வேற்றுமைகளால் அதிப்ருதிகள் உண்டாவதற்கு, நாம் விதை தெளிப்பவர் ஆகிவிடுவோம். அந்த அதிருப்திகள், நாம் விடுவிக்க விரும்பும் மக்களிடம் மாத்திரம் அல்ல; ஐக்கிய தேசங்களுக்குள்ளேயும் ஏற்பட்டு விடும். பல்லாயிரம் வருஷ காலமாக, நல்லெண்ண முள்ள உத்தமர்களின் நம்பிக்கைகளை நாசம் செய்து வந்திருப்பவை இந்த அதிருப்திகளே.

---

## 12. இது ஒரு விடுதலைப் போர்

உலகம் எங்குமே இந்த யுத்தம் நடந்துகொண்டிருப்பதை, நான் பார்த்தேன். ஸ்டாலினின் வார்த்தைகளில் சொன்னால், இது ஒரு விடுதலைப் போராகும். நாஜிகளின் அல்லது ஜப்பானியரின் சேனைகளிடமிருந்து சில நாடுகளை விடுவிக்கவும், அந்தச் சேனைகள் பயமுறுத்திக் கொண்டிருக்கும் அபாயத்தி லிருந்து மற்ற நாடுகளை விடுவிக்கவுமே இந்த யுத்தம் நடக்கிறது. இந்த விஷயம் வரையில், நம் அனைவருக்கும் ஒற்றுமையான அபிப்பிராயம் இருக்கிறது. விடுதலை என்றால், இதற்கு மேலும் அர்த்தமுண்டு என்பதில் நமக்குள் ஒற்றுமையான அபிப்பிராயம் இருக்கிறதா? அந்த அந்த ஜனங்களுக்குச் சக்தி உண்டானவுடனே, தங்களைத் தாங்களே ஆட்சி புரிந்து கொள்ளச் சகல ஜனங்களுக்கும் சுதந்தரம் அளிக்க வேண்டும்; நிலைத்து நிற்கக் கூடிய சகல சுயஆட்சிக்கும் ஆதாரமா யிருப்பது பொருளாதார சுதந்தரமே யாதலால், அந்தப் பொருளாதார சுதந்தரத்தையும் சகல ஜனங்களுக்கும் அளிக்க வேண்டும்-விடுதலை வேலையிலே இதுவும் அடங்கும். இந்த விஷயத்தை, இப்போது ஒற்றுமையாய்ச் சண்டையிடும் முப்பத்தொரு கூட்டு நாடுகளும் ஒப்புக்கொள்ளுகின்றனவா?

சுதந்தரத்தின் இந்த இரண்டு அம்சங்களுந்தாம், இந்த யுத்தத்திலே நம் நல்லெண்ணத்தைச் சோதிக்கும் உரைகல்லாகும் என்று நான் நம்புகிறேன். நாம் எதற்காகப்

போராடுகிறோமோ அந்தச் சுதந்தரத்தைப் பற்றி நாம் கொண்டிருக்கும் கருத்திலே, இந்த இரண்டு அம்சங்களையும் சேர்த்துக் கொண்டாக வேண்டும் என்று நான் நம்புகிறேன். இல்லாவிட்டால், சமாதானத்தில் நாம் வெற்றி பெற முடியாது; யுத்தத்தில் வெற்றி பெற முடியுமா என்பதையுமே நான் சந்தேகிக்கிறேன்.

**1947**-ஆம் வருஷம் அக்டோபர் மாதம் 7-ஆம் தேதி சுங்கிங்கில் சீனப் பத்திரிகைகளுக்கும் அயல்நாட்டுப் பத்திரிகைகளுக்கும் நான் ஓர் அறிக்கை வெளியிட்டேன். நான் உலகத்தைச் சுற்றிப் பிரயாணம் செய்ததிலிருந்து எனக்கு ஏற்பட்ட முடிவுகளில் சிலவற்றைக் குறிப்பிட, அந்த அறிக்கையில் நான் முயன்றிருக்கிறேன். நான் சொன்னதில் ஒரு பகுதி இது :

"நான் பதின்மூன்று நாடுகளினூடே பிரயாணம் செய்திருக்கிறேன். முடியரசுகள், ஸோவியத்துகள், குடியரசுகள், மண்டேட் பிரதேசங்கள், காலனிகள், சார்பு நாடுகள் ஆகியவற்றையெல்லாம் நான் பார்த்திருக்கிறேன். மனம் குழம்பச் செய்யும் பற்பல விதமான வாழ்க்கை முறைகளையும், ஆட்சி முறைகளையும், ஆளப்படும் முறைகளையும் நான் கண்டிருக்கிறேன். நான் பிரயாணம் செய்த சகல நாடுகளுக்கும் பொதுவாக - நான் அந்த நாடுகளிலே சந்தித்துப் பேசிய சகல சாமான்ய மக்களுக்கும் பொதுவாக-அநேக விஷயங்கள் இருப்பதை நான் கண்டு கொண்டேன்.

"ஐக்கிய தேசங்களே யுத்தத்தில் வெல்ல வேண்டும் என்று அனைவரும் விரும்புகிறார்கள்."

"யுத்தம் முடிந்ததும் சுதந்தரமாகவும் சுயேச்சையாகவும் வாழச் சந்தர்ப்பம் வேண்டும் என்று அவர்கள் அனைவரும் விரும்புகிறார்கள்."

யுத்தம் முடிந்த பின்பு பிறர் சுதந்தரமாய் வாழ்வதை ஆதரிக்க, தலைமையான ஜனநாயக நாடுகள் சம்மதிக்குமா, அவற்றை நம்பியிருக்கலாமா என்பதில், அவர்கள் அனைவருக்குமே, வெவ்வேறு அளவில், சந்தேகம் இருந்து வருகிறது.

நமது கட்சியில் சேர்ந்து வேலை செய்ய அவர்களுக்கு இருந்து வரும் உற்சாகத்தை, இந்தச் சந்தேகமே கொன்று வருகிறது.

சாமான்ய மக்களின் உண்மையான ஒத்துழைப்பு இல்லாமல், யுத்தத்தை வெல்வது மகா கஷ்டம்; சமாதானத்தில் வெற்றி பெறுவதோ, அநேகமாய் அசாத்தியம். வேலை செய்யும் படைகள் மட்டுமே நடத்தி விடக் கூடிய, எளிய, தொழில் ரீதியான பிரச்னை யல்ல இந்த யுத்தம். மனித உள்ளங்களையுமே ஆட்டி வைக்கும் யுத்தம் இது. உலகத்து ஜனத் தொகையில் ஏறக்குறைய முக்கால் பங்கினரான தென் அமெரிக்கர், ஆப்பிரிக்கர், கிழக்கு ஐரோப்பியர், ஆசியாக்காரர் ஆகிய மக்களின் அநுதாபத்தை யெல்லாம் நமது பக்கத்தில் இழுப்பது மாத்திர மல்ல; தீவிரமாய்ச் சண்டைக்குக் கிளம்பும் உணர்ச்சியையும் அவர்களிடம் நாம் கிளப்பிவிட வேண்டும். இதை நாம் ஏற்கனவே செய்ய வில்லை; இன்றும் செய்யவில்லை. நாம் செய்தாக வேண்டும்.

இந்த மாதிரி யுத்தத்திலே போரிடவும் வெல்லவும் மனிதர்களுக்கு ஆயுதம் மட்டும் போதாது; மேலும் சில விஷயங்கள் தேவையாயிருக்கின்றன. வருங்காலத்தைப் பற்றிய உற்சாகம் அவர்களுக்குத் தேவையாயிருக்கிறது; தாங்கள் எந்தக் கொடிகளின் கீழே போரிடுகிறார்களோ அந்தக் கொடிகள், பிரகாசமான, பரிசுத்தமான வர்ணங்களோடு ஜொலிக்கின்றன என்ற திட நம்பிக்கையும் அவர்களுக்குத் தேவையாயிருக்கிறது. உண்மையைச் சொல்லப் போனால், வெற்றி கிடைத்த பின்பு எந்த மாதிரி உலகம் வேண்டுமென்று நாம் விரும்புகிறோம் என்பதை, ஒரு தேசம் என்ற முறையில், நாம் நிச்சயம் செய்துகொள்ள வில்லை.

முக்கியமாய், இங்கே ஆசியாவில் மேல் நாட்டு ஏகாதிபத்திய ஆதிக்கத்தைவிட ஜப்பானிய ஆட்சி இன்னும் மோசமாயிருக்கும் என்ற ஒரே காரணத்தையல்லாமல் வேறு எந்தக் காரணத்துக்காகவும் அவர்களை நாம் சண்டையில் நம்மோடு சேர்ந்து கொள்ளும்படி கேட்டுக் கொள்ளவில்லை என்றே, சாமான்ய மக்கள் கருதுகிறார்கள். ஆசியா ஒரு பெரிய கண்டம். இந்தக் கண்டத்திலே மேல் நாட்டு ஜனநாய

கங்கள் நெடுங்காலமாய் ஆட்சி புரிந்திருக்கின்றன; அந்த வரலாறு, நல்லதும் கெட்டதும் கலந்ததாகவே யிருக்கிறது ஆனால், இங்கே ஜனங்கள்-அவர்கள் பல கோடிக்கணக்கானவர் என்பதை ஞாபகம் வையுங்கள்-தாங்கள் இனி அந்நிய ஆட்சிக்கு உட்பட்டிருப்ப தில்லை என்று திடசங்கல்பம் செய்துகொண் டிருக்கிறார்கள். சுதந்தரம், சம சந்தர்ப்பம் என்ற வார்த்தைகள், ஆசிய மக்களுக்கு நவீனமான தொரு மந்திர சக்தி வாய்ந்திருக்கின்றன. இந்த வார்த்தைகளை நம்மிட மிருந்து திருடி, தங்கள் காரியங்களுக்குத் துஷ்பிரயோசனம் செய்துகொள்ள, ஜப்பானியருக்கு — நவீன காலத்திலேயே மகா குரூரமான ஏகாதிபத்திய வெறியர்களுக்கு— நாம் இடங்கொடுத்து விட்டோம்.

ஆசியாவிலுள்ள பெரும்பாலான மக்கள், ஒரு காலத்திலும் ஜனநாயகத்தை அறிந்தவர்கள் அல்ல. நமது ரகமான ஜனநாயகத்தை அவர்கள் விரும்பலாம்; அல்லது விரும்பாமலும் போகலாம். ஜனநாயகத்தை, அடுத்த செவ்வாய்க்கிழமையே, ஒரு வெள்ளித் தட்டில் வைத்து வாங்கிக்கொள்ள அவர்கள் எல்லாரும் தயாராய் இல்லை என்பது உண்மையே ஆயினும், தாங்களே பொறுக்கி யெடுத்துக்கொண்ட தங்கள் சொந்த அரசாங்கங்களின் கீழே தங்கள்சொந்த லட்சியத்தை உருவாக்கிக்கொள்ள, அவர்கள் அனைவரும் திட சங்கல்பம் செய்துகொண்டிருக்கிறார்கள்.

என்னுடன் சம்பாஷித்த மனிதர்களில் சிந்தனை மிக்கவர்களிடம் அட்லாண்டிக் சாசனம் என்ற பெயரைச் சொன்னால்கூட, அவர்கள் கலவரமடைந்தார்கள். அந்தச் சாசனத்திலே கையெழுத்திட்ட அனைவரும், அது பசிபிக்குக்கும் பிரயோகமாகும் என்று ஒப்புக்கொள்ளுகிறார்களா என்று அவர்கள் கேட்கிறார்கள். இந்தக் கேள்விக்கு நாம் பதில் சொல்லியாக வேண்டும்; நமது நிலை என்ன என்பதைத் தெளிவாய் எளிமையாய் அறிக்கை செய்துவிட வேண்டும். நம் கூட்டாளிகளான இந்தக் கோடிக் கணக்கான மக்களுடைய வாழ்க்கையிலே கணிசமாய் அர்த்தம் கொடுக்கக்கூடிய திட்டங்களின் மூலம், அந்த அறிக்கையைச் செயலுக்குக் கொண்டுவர வேண்

டும். நம் அனைவருக்கும் பொதுவான இந்த வேலையில் நாம் ஈடுபட்டு, வேர்வை சொட்ட உழைக்கத் தொடங்க வேண்டும்.

அந்த அறிக்கையிலிருந்து விளையக்கூடிய சில திட்டங்கள், அநேகம் அமெரிக்கருக்கு ஏற்கனவே தெளிவாய்த் தெரியும் என்று நான் திடமாய் நம்புகிறேன்.

சில தேசங்கள் பிற தேசங்கள் மீது ஆட்சிபுரியும் ஏகாதிபத்திய முறை, இந்த யுத்தத்திலே முடிவடைந்துவிட வேண்டும் என்று நாம் நம்புகிறோம். உதாரணமாக, சீனத்து மண்ணிலே ஒரே ஓர் அடியைக்கூட, அதிலே வாழும் மக்களைத் தவிர வேறு யாரும் இன்றிருந்து ஆளக்கூடாது; ஆளவும் முடியாது. இதை நாம் இப்போதே சொல்லிவிட வேண்டும்; 'யுத்தத்துக்கு அப்புறம்' என்பது வீண் பேச்சு.

ஐக்கிய தேசங்களின் கட்சியிலே சேர்ந்திருக்கும் காலனிகள் எல்லாம் விடுதலை பெற்ற சுதந்திர ராஜ்யங்களாய் மாறும்படி உதவி செய்யத்தக்க ஏதாவது ஒரு முறையைக் கண்டுபிடிப்பது, உலகத்தின் கடமை என்று நாம் நம்புகிறோம். அந்தக் காலனிகளின் மக்கள் தாங்களே உழைத்து, தங்கள் சொந்தமாய்த் தேர்ந்தெடுத்த அரசாங்கங்களுக்குப் பயிற்சி யளிப்பதற்கு, திட்டமான கால அட்டவணைகளை நாம் தயாரித்துவிட வேண்டும். அவர்கள் மீண்டும் கலோனியல் அந்தஸ்துக்குத் திரும்ப மாட்டார்கள் என்பதற்கு, இரும்புக் கவசம் போட்டது போல் பாதுகாப்பான உத்திரவாதங்கள் அளித்து அவற்றைச் சகல ஐக்கிய தேசங்களும் கூட்டாக நடத்தி வைக்க வேண்டும்.

யுத்தத்திலே வெற்றிபெறும் வரையில் இந்த விஷயங்களை யெல்லாம் அமுக்கி வைக்க வேண்டும் என்று சிலர் சொல்லுகிறார்கள். உண்மை இதற்கு நேர்மாறாயிருக்கிறது. முற்போக்கான பரிகாரங்களைக் கண்டுபிடிக்க இப்போதே நாம் அந்தரங்க சுத்தியாய் முயற்சி புரிவோமானால், அதன் மூலம் நம் கட்சிக்குப் பலமே ஏற்படும். சமூக மாறுதல்களின் எதிரிகள் எப்போதுமே இப்படித்தான் தற்கால நெருக்கடி ஒன்றைக் காரணமாய்க் கூறி, தாமதம் செய்யச் சொல்லு

கிறார்கள். இதை ஞாபகத்தில் வையுங்கள். யுத்தத்துக்குப் பின்னே செய்வோமென்றால், அந்த மாறுதல்கள் காலங் கடந்து போகும்; அற்பமாயுமிருக்கும்.

பல தேசங்களுக்கு மிடையே வியாபாரத்தையும் வியாபாரப் பாதைகளையும் நாம் அபிவிருத்தி செய்ய வேண்டும். அவை, இங்கே அமெரிக்காவில் நாம் பெற்றிருந்ததுபோல், ஒரே விதமான சொத்துச் சுதந்தர உரிமைகளைச் சகல ஜனங்களுக்கும் அளிக்கக்கூடிய அளவு பலமுள்ளவையாக இருக்க வேண்டும்.

ஐக்கிய அமெரிக்காவில், நாம் நம்முடைய தனி நபர் சுதந்தரத்தையும் பொருளாதாரச் சுயேச்சையையும் தற்காலிகமாக விட்டுக் கொடுக்க வேண்டும் என்று கேட்கிறார்கள். அச்சு நாடுகளை அடியோடு நசுக்குவதற்காகத்தான் இப்படி விட்டுக் கொடுக்கும்படி கேட்கிறார்கள். யுத்தத்துக்குப் பிறகு இந்த உரிமைகளை நாம் மீட்டுக் கொள்ள வேண்டும். அமெரிக்காவின் ஐதிகமான உயர்தர வாழ்க்கை அந்தஸ்துச் சகல மக்களுக்கும் கிடைக்கும் படியாக அதை நாம் மீட்டுக்கொள்ளும் வழி எது என்றால், உலகமெங்கும் சகல மக்களும் சுதந்தரமாயிருக்கும்படி செய்வதே.

இந்த அறிக்கையைப் பற்றி ஏராளமான அபிப்பிராயங்கள் வெளிவந்தன. அவற்றில் சில கோபமா யிருந்தன. ஆனால், பெரும்பாலானவையும் எனக்கு மகிழ்ச்சியே அளித்தன. ஏனென்றால், பொதுஜன அபிப்பிராயத்தின் ஆழ்ந்த போக்கைப் பற்றி நான் கொண்டுள்ள கருத்தை, அவை ஊர்ஜிதம் செய்தன. பொதுஜன அபிப்பிராயம், அமைதியாகவே வேலை செய்கிறது; ஆனால், வெகு வலிமையோடு வேலை செய்கிறது. இந்தப் பிரச்னைகளில் பொது ஜன அபிப்பிராயம் ஏற்கனவே, நம்முடைய பல தலைவர்களின் மனோபாவத்தை விட மிகவும் முன்னேறி யிருக்கிறது. நாம் மிகவும் உறுதியாகக் கொண்டுள்ள நம்பிக்கைகளை உலகறியப் பகிங்கரமாய் ஒப்புக்கொள்ளுமாறு, நம்மை அந்தப் பொதுஜன அபிப்பிராயம் வெகு சீக்கிரத்திலே நிர்ப்பந்திக்கத்தான் போகிறது.

யுத்த நோக்கங்களை எவ்வளவு குறைவாக வரம்பிட முடியுமோ அவ்வளவு குறைவாக வரம்பிட வேண்டுமென்றே, நம் அனைவருக்கும் ஓர் ஆசை பெரிதும் உண்டாகும். நாம் உபயோகித்த பெரிய வார்த்தைகளெல்லாம், சமாதான மேஜையின் முன்பு சிறுத்துவிடும் என்று நம்பி, நாம் கேலி செய்யலாம். சகல ஜனங்களின் உண்மையான சுதந்தரத்தையும் பாதுகாப்பதானுல், நமக்குச் சிரமமும் நஷ்டமும் தரும் சில சமரசங்களைச் செய்துகொள்ள வேண்டியிருக்குமே; அவற்றையெல்லாம் செய்துகொள்ளாமல் தப்பித்துக் கொள்ளலாம் என்று நாம் மனப்பால் குடிக்கலாம்.

ஆப்பிரிக்காவிலிருந்து அலாஸ்கா வரையில் நான் சந்தித்துப் பேசிய அநேக ஆண்களும் பெண்களும் என்னை ஒரு கேள்வி கேட்டார்கள்: 'இந்தியாவின் சங்கதி என்ன?' என்றே அவர்கள் கேட்டார்கள். இந்தக் கேள்வி, அநேகமாய் ஆசிய நாடெங்குமே, நம் நோக்கத்தைப் பரீட்சிக்கும் ஓர் அறிகுறியா யிருக்கிறது. இந்தச் சிக்கலான பிரச்னையை ஆராய, எனக்கு உத்தேசமில்லை. ஆனுல், கீழ்நாட்டிலே இதனுல் ஏற்பட்டிருக்கும் முக்கியமான ஒரு மனுேபாவத்தைப்பற்றி மட்டும், நான் குறிப்பிடத்தான் வேண்டும். கெய்ரோவுக்கு அப்பால் நான் சென்ற இடமெல்லாம், என்னை இந்தக் கேள்வியைக் கேட்டார்கள். சீனுவிலேயே மகா ஞானியான ஒரு மனிதர் என்னிடம் இப்படிச் சொன்னுர்: "இந்தியாவின் சுதந்தர ஆதர்சத்தை, வருங் காலத்தில் என்ருே ஒரு நாளைக்கு ஒத்திப் போடுவதால், கீழ்நாட்டுப் பொது ஜனங்களின் மதிப்பில் தாழ்வது பிரிட்டன் அல்ல, ஐக்கிய அமெரிக்காதான்."

இந்த ஞானி, இந்தியாவில் பிரிட்டிஷ் ஏகாதிபத்திய ஆதிக்கம் நடப்பது குறித்துச் சண்டை யிடவில்லை. "உங்களுக்கு இஷ்டமானுல், காருண்ய ஆட்சியாகவே அதை வைத்துக் கொள்ளுங்கள்" என்று அவர் கூறினுர். ஆனுல், அவருக்கு அதிலே நம்பிக்கை யில்லை. என்ருலும், அதைப்பற்றி அவர் பேசவே யில்லை. நாம் இந்தியப் பிரச்னையில் சாதிக்கும் மௌனத்தினுல், ஏற்கனவே கீழ் நாட்டில் நமக்கேற்

பட்டிருந்த நல்லெண்ணக் களஞ்சியம், பெரிதும் கரைந்து போய்விட்டது என்றே எனக்கு அவர் கூறினர். நம்மை நம்ப லாம் என்று ஆசை கொண்டிருந்த கீழ்நாட்டு மக்களெல் லாம், இப்போது சந்தேகிக்க ஆரம்பித்துவிட்டார்கள். யுத்தம் முடிந்தபின்பு, இந்திய ரல்லாத கீழ்நாட்டின் கோடிக் கணக்கான பிற மக்களைப் பற்றியெல்லாம், நமது அபிப்பிரா யம் என்னவா யிருக்கும்? இதை அவர்கள், இந்தியாவைப் பற்றி நாம் காட்டும் மனோபாவத்திலிருந்து நிச்சயம் செய்து கொள்ள முடியவில்லை. நாம் நமது பேச்சிலே தெளிவில்லா மல், நிமிஷத்துக்கு நிமிஷம் மாறிக்கொண்டே யிருக்கிறோம். இதிலிருந்து நாம் உண்மையிலேயே சுதந்தரத்துக்குப் பாடு படுகிறோமா, சுதந்தரம் என்றால் நாம் என்னதான் நினைத்துக் கொண்டிருக்கிறோம் என்பதை, அவர்களால் சொல்ல முடிய வில்லை.

சீனாவில், தங்கள் வீடு வாசலிலிருந்து ஆயிரம் மைல் களுக்கப்பால் வந்து சரண் புகுந்திருக்கும் மாணவர்கள், என்னை ஒரு கேள்வி கேட்டார்கள். யுத்தத்துக்குப் பின்பு, மீண்டும் ஷாங்காய் நகரை நாமே எடுத்துக்கொள்ள முயல் வோமா என்று கேட்டார்கள். பீரட்டில் லெபானியரும் சில கேள்விகள் கேட்டார்கள். யுத்தம் முடிந்த பின்பு, பிரிட்டிஷ் படைகளும் பிரெஞ்சுப் படைகளும், ஸீரியா, லெபனான் இரண்டையும் காலி செய்து செல்லுமா? தங்கள் சொந்த நாட்டைத் தாங்களே ஆளும்படி லெபானியரை விடுவார் களா? அமெரிக்காவைச் சேர்ந்த புரூக்ளின் மாகாணத்தில், உலகத்திலுள்ள தங்கள் இனத்தாரிலேயே மூன்றில் ஒரு பகுதி யினரான லெபானியர் இருக்கிறார்களே அவர்கள், இந்த விஷ யத்தில் பிரிட்டிஷாரையும் பிரெஞ்சுக்காரரையும் வற்புறுத்து வார்களா? இவையே லெபானியரின் கேள்விகள்.

ஆப்பிரிக்காவிலும் சரி, மத்தியக் கிழக்கிலும் சரி, அரா பிய நாடுகள் அனைத்திலும் சரி, சீனாவிலும் சரி, தூரக் கிழக்கி லும் சரி, சுதந்தரம் என்றால், ஒழுங்காகக் கால அட்டவணை போட்டு அதன்படி, கலோனியல் ஆட்சி முறையை ஒழிப்பது

தான் என்றே அர்த்தம் செய்துகொண் டிருக்கிறார்கள். நமக்கு இஷ்டமோ இல்லையோ, உண்மை இதுதான்.

அத்தகைய ஒழுங்கான முன்னேற்றத்துக்கு உலகத்திலேயே அபூர்வமான ஓர் உதாரணம், பிரிட்டிஷ் பொது நலச் சாம்ராஜ்யந்தான். அது ஒரு மகத்தான பரீட்சை. அதன் வெற்றி, ஐக்கிய தேசங்களுக்குக் காத்திருக்கும் சுய ஆட்சிப் பிரச்னைகளைத் தீர்ப்பதற்குத் தைரிய மூட்ட வேண்டும். ஏனென்றால், உலகத்தின் பல பெரும் பகுதிகள், இன்னமும் கலோனியல் முறையிலேயே ஆளப்படுகின்றன. பொது நல சாம்ராஜ்யமா யிருந்தாலும், பிரிட்டனுக்கும் இன்னும் பல காலனிகள் இருக்கத்தான் இருக்கின்றன. அவை பழைய ஏகாதிபத்திய முறையின் சேஷங்களாகும். சொற்பச் சுய ஆட்சி பெற்றோ அல்லது சுய ஆட்சி சிறிதுமே இல்லாமலோ அவை வாழ்கின்றன. ஆயினும், பிரிட்டனிலும் சாம்ராஜ்யம் எங்கும் உள்ள பல லட்சக்கணக்கான ஆங்கிலேயர்கள், தன்னலமற்று, மகா சாமர்த்தியத்தோடு, அந்த ஏகாதிபத்திய சேஷங்களைக் குறைக்கவும், கலோனியல் ஆட்சி முறையை ஒழித்து அதனிடத்தே பொது நல ஆட்சி முறையைப் பரப்பவும் உழைத்துக்கொண்டுதான் இருக்கிறார்கள்.

கலோனியல் ஆட்சி புரிபவர்கள் பிரிட்டிஷ்காரர் மட்டுமல்ல: ஆப்பிரிக்காவிலும், இந்தோ சீனாவிலும், தென்னாப்பிரிக்காவிலும், உலகமெங்குமுள்ள பல தீவுகளிலும் பிரெஞ்சுக்காரர் இன்னமும் கலோனியல் ஏகாதிபத்திய உரிமை கொண்டாடுகிறார்கள். கிழக்கிந்தியத் தீவுகளில் பெரும் பகுதிகளையும் மேற்கே பல பிரதேசங்களையும் ஆட்சி புரிவோர் தாங்களே என்று, டச்சுக்காரர் இன்னமும் தங்களை மதித்துக் கொண்டிருக்கிறார்கள். போர்த்துக்கீசியரும், பெல்ஜியர்களும், வேறு பல நாடுகளின் மக்களும், காலனிகள் வைத்துக்கொண்டிருக்கிறார்கள். மேற்கிந்தியத் தீவுகளில் நாம் பொறுப்பேற்றுக் கொண்டிருக்கும் சகல மக்களுக்கும் பரிபூர்ண சுதந்தரம் அளிப்பதாக, நாமும் இன்னும் வாக்களிக்க வில்லை. இது தவிர, உள்நாட்டு ஆட்சியிலும் சில ஏகாதிபத்திய முறைகளை நாம் அநுஷ்டித்துக்கொண் டிருக்கிறோம்.

ஆனால், கடைசியாக, உலகம் விழித்துக்கொண்டு விட்டது. ஒரு தேச மக்கள் மற்றொரு தேச மக்களை ஆளுவது சுய ஆட்சி அல்ல என்றும், இதைக் காப்பாற்றுவதற்காக நாம் சண்டையிட வேண்டியதில்லையென்றும், உலகம் அறிந்துகொண்டு விட்டது.

தலைக்கு மேலே பல கடுமையான பிரச்னைகள் காத்திருக்கின்றன. வெவ்வேறு மாண்டேட் பிரதேசங்களிலும், வெவ்வேறு காலனிகளிலும், பிரச்னைகள் வெவ்வேறு விதமாயிருக்கும். நாளைக்கே சுதந்தரம் அடையவும், அந்தச் சுதந்தரத்தைப் பாதுகாத்துக்கொள்ளவும், சகல நாடுகளின் மக்களும் தயாராயில்லைதான். ஆனால், அதை நோக்கி உழைப்பதற்கு ஏதாவது ஒரு கெடுக் குறிப்பிட வேண்டுமென்றும், அந்தக் கெடுவை மீற மாட்டோம் என்ற உறுதி வேண்டுமென்றுமே, இன்று அவர்கள் அனைவரும் விரும்புகிறார்கள். தங்களுடைய வருங்காலப் பிரச்னைகளை நாம் தீர்த்துவைக்க வேண்டுமென்று அவர்கள் கேட்கவில்லை. அவர்கள் அவ்வளவு மூடர்களல்ல; கோழைகளுமல்ல. பொருளாதாரத்திலும் அரசியலிலும் ஒத்துழைப்புப் பெற்று, தங்கள் சொந்தப் பிரச்னைகளைத் தாங்களே தீர்த்துக்கொள்ள ஒரு சந்தர்ப்பம் வேண்டுமென்றே அவர்கள் கேட்கிறார்கள். ஏனென்றால் உலக மக்கள் சுதந்தரமடைய எண்ணுவது, தங்கள் அரசியல் திருப்திக்காக மட்டுமல்ல; தங்கள் பொருளாதார முன்னேற்றத்துக் காகவுந்தான்.

---

# 13. நமது உள்நாட்டு ஏகாதிபத்திய முறைகள்

உலக ஏகாதிபத்திய ஆதிக்கங்களைப் பற்றிக் குறிப்பிடும்போது, அமெரிக்காவின் உள்நாட்டு ஏகாதிபத்திய ஆதிக்கங்களையும் ஒன்றாய்க் குறிப்பிட்டேன். இந்த யுத்தம் நமக்குப் பரந்த புதிய எல்லைகளைச் சிருஷ்டித்துத் தந்திருக்கிறது - மனத்திலும் சரி, மண்ணிலும் சரி, பரந்த புதிய

எல்லைகள். உள்நாட்டு வியாபாரங்களில் மட்டுமே பெரிதும் ஈடுபட்டிருந்த மக்கள் நாம். இப்போது, கடல்களுக் கப்பால்தான், நாம் முதன்மையான சிரத்தை கொண் டிருக்கிறோம். ருஷ்யா, பர்மா, டுனீசியா, சீனு ஆகிய நாடு களில் உள்ள நகரங்களைப் பற்றித்தான், நம்முடைய சமாசாரப் பத்திரிகைகள், முதல் கவனம் செலுத்துகின்றன. நம் வீடுகளிலே ஆவலோடு நாம் கையில் வாங்கும் கடிதங்கள், ஆஸ்திரேலியாவிலும், நியூகினியிலும், குடால் கனுலிலும், அயர்லாந்திலும், வட ஆப்பிரிக்காவிலும் உள்ள நம் வாலிபர்கள் எழுதிய தபால்களே யாகும். அவர் களுடைய நலன்களோடு, நம்முடைய நலன்கள் ஒட்டிக் கொண்டிருக்கின்றன. அவர்கள் உலக மெங்கும் சண்டை யிட்டுவிட்டுத் திரும்பி வரும்போது; குறுகிய தேசீயம் கொண்ட அமெரிக்கர்களாக இருக்கமாட்டார்கள்; நாம் அப்படி இருப்பதையும் அவர்கள் காணமாட்டார்கள். இவற்றுக் கெல்லாம் அர்த்தம் என்ன? முந்திய உலக யுத்தத்தின்போதே நாம் வளர ஆரம்பித்துவிட்டோம். என்றாலும், உள்நாட்டு விஷயங்களிலேயே கவலை செலுத்தும் ஒரு வாலிப தேசமாக இருந்த நாம், சர்வ தேச விஷயங் களில் சிரத்தையும் விசாலமான உலகப் பொதுநோக்கும் கொண்ட முதிர்ந்த நாடாக, இப்போதுதான் முற்றும் மாறி வருகிறோம் என்றே அர்த்தமாகும்.

ஆளும் நாடு எவ்வளவுதான் பெருந்தன்மையா யிருந் தாலும் சரிதான்; அயல் நாட்டின்மீது ஆதிக்கம் செலுத்தும் ஏகாதிபத்திய முறைக்கும் உண்மையான உலகப் பொது நோக்கத்துக்கும் பொருத்தம் கிடையாது. உள்நாட்டுக் குள்ளேயே எத்தகைய ஏகாதிபத்திய ஆதிக்கமாவது ஏற்பட்டால், இதுவும் அதே மாதிரிதான் உலகப் பொது நோக்கத்துக்குப் பொருந்தாது. சுதந்தரம் என்பது பகுக்க முடியாத வார்த்தை. அதை நாம் அநுபவிக்க வேண்டு மானுல், அதற்காக நாம் போராட வேண்டுமானுல், அதைச் சகலமானவருக்கும்-அவர்கள் ஏழையோ பணக்காரரோ, நம்மோடு ஒற்றுமை யுடையவர்களோ மாறுபட்டவர்களோ,

எந்தத் தேசத்தவரோ அவர்களின் தோலின் நிறம் எதுவோ-இந்த எல்லோருக்கும் அதை வழங்க நாம் தயாரா யிருக்க வேண்டும். அமெரிக்காவில் வசிக்கும் சர்வ ஜனங்களும் சுதந்தரமா யிருக்கும்படி, நாம் தீர்மானிக்க வேண்டும். அப்படித் தீர்மானிக்கு முன்பாக, இந்தியாவின் விடுதலைக்கு, ஒழுங்கான கால அட்டவணை ஒன்றைப் பிரிட்டன் தயாரிக்க வேண்டு மென்று, சுத்தமான மனச்சாட்சியோடு நாம் எதிர்பார்க்க முடியாது.

இந்த யுத்தத்திலே, சீனாவின் நாற்பது கோடி மக்களோடு நாம் கூட்டாளிகளாய்ச் சேர்ந்திருக்கிறோம்; இந்தியாவின் முப்பது கோடி மக்களை நம் நண்பர்களாய் மதித்திருக்கிறோம். பிலிப்பினோக்கள், ஜாவா, கிழக்கிந்தியத் தீவுகள், தென்னாப்பிரிக்கா ஆகிய நாடுகளின் சுதேசிகளும் நமக்குத் துணையாய்ச் சண்டையிட்டுக்கொண் டிருக்கிறார்கள். இவர்கள் எல்லாரும் சேர்ந்தால், உலக ஜனத் தொகையில் பாதிப் பேர் ஆவார்கள். இவர்களுள் எவருடனும் அமெரிக்கருக்கு ஜாதீய உறவு எதுவும் கிடையாது. ஆனால், மனிதர்களை ஒன்று சேர்த்துப் பிணைப்பவை, ஜாதீய அல்லது நிற உறவு அல்ல; பரஸ்பரம் நம்பும் கருத்துக்களும் ஒரே விதமான நோக்கங்களுமே யாகும்—இந்த உண்மையை நாம் இந்த யுத்தத்திலே கற்று வருகிறோம்.

'ஒரு தேச மக்களைப் பரீட்சிக்கும் உரைகல், அவர்களுடைய நிற மல்ல; அவர்களது குறிக்கோளே யாகும்' என்ற படிப்பினையை நாம் பெற்று வருகிறோம். தாங்கள் ஆரியர்கள் என்று ஓர் உன்னதச் சுவரை ஹிட்லர் எழுப்பி யிருந்தார். அந்த உன்னதச் சுவரிலேகூட, ஒரு பிளவு ஏற்பட்டு விட்டது. ஜப்பானியர் என்ற 'கௌரவ ஆரியர்கள்' இருக்கிறார்களே அவர்களோடு ஹிட்லர் பொது நோக்கம் கொண்டதால்தான், இந்தப் பிளவு நேர்ந்தது. நமக்குங்கூட இயற்கையான கூட்டாளிகள் உண்டு. தங்களுக்கும் சரி, பிறருக்கும் சரி, சுதந்தரம் என்பது பிறப்புரிமையாகும் என்று எந்த மக்களெல்லாம் நினைக்கிறார்களோ-அவர்கள் எந்த ஜாதியா யிருந்தாலும் சரி, நிறமா யிருந்தாலும் சரி-

அந்த மக்கள் சகலமானவரோடும், நம் தேச மக்கள், இன்றும் இனி என்றுமே சேர்ந்துகொள்ள வேண்டும். உலகத்தை முடிவில்லாத யுத்தத்திலே சிக்க வைக்கும் ஏகாதிபத்திய முறையை, நாம் அந்த மக்கள் சகலமானவரோடும் சேர்ந்தவர்களாய் இன்றும் இனி என்றுமே நிராகரித்துத் தள்ளவேண்டும்.

இந்தப் போராட்டத்திலே நண்பர்களையும் எதிரிகளையும் நிர்ணயிப்பது ஜாதியோ நிறமோ அல்ல என்பதை, மீண்டுமொரு முறை நான் அழுத்தமாய்ச் சொல்லுகிறேன். கீழ் நாட்டிலே, வெள்ளிடையான ஓர் உதாரணம் நமக்கு இருக்கிறது. தன்னை விடப் பலவீனமான நாடுகளை வலிந்து மிருகத்தனமாகத் தாக்கி உலகத்தையெல்லாம் அடிமைப் படுத்தி, தானே ஆளவேண்டும் என்ற ஏகாதிபத்திய வெறி கொண்டிருப்பதால்தான், ஜப்பான் நமது சத்ருவா யிருக்கிறது. தான் உலகத்தை ஜயிப்பதற்கு போட்டிருக்கும் திட்டத்தை நிறைவேற்றிக் கொள்வதற்காக, தனது ஒவ்வொரு படையெடுப்பிலும், நம்பிக்கைத் துரோகமாய், அகாரணமாய் அது தாக்கியதாலேயே ஜப்பான் நமது சத்ருவா யிருக்கிறது.

சீனு உலகத்தை ஜயிக்கும் கனவு எதுவும் கண்டு கொண் டிராததாலும் சுதந்தரத்தைப் பெரிதாய் மதிப்பதாலுமே, அது நம் நண்பனு யிருக்கிறது. ஆக்கிரமிப்பையும் அடிமைப் படுத்தும் முயற்சியையும், பல தேசங்களுக்குள்ளே முதல் முதலாக எதிர்த்தது சீனுவே யாதலால்தான், அது நம் நண்பனு யிருக்கிறது.

இங்கே இரண்டு கீழ்நாட்டு மக்கள் இருக்கிறார்கள்: ஒருவர் நம் சத்ரு; ஒருவர் நம் நண்பர். இன்று நாம் எந்த விஷயத்துக்காகப் போராடுகிறோமோ அதற்கும் ஜாதி நிறங்களுக்கும் சம்பந்தம் ஏது மில்லை. நாம் எந்தப் பக்கத்திலே சேர்ந்து சண்டை யிடுவது என்பதை, ஜாதியும் நிறமும் நிர்ணயிக்க வில்லை. இந்த யுத்தத்திலிருந்து, வெள்ளை ஜாதியினர் பல விஷயங்களைக் கற்று வருகிறார்கள். அவர்கள் கற்கத் தேவைப்பட்ட விஷயங்களும் இவைதாம்

நமது ஜாதீய ஆத்ம திருப்தியை, நம் சத்துருவான ஜப்பான்கூட ஆட்டமெடுக்கச் செய்துவிட்டது. சென்ற காலத்திலே வெள்ளைக்காரர் முன்னேறியதாலும் மேலோங்கியிருந்ததாலும் அவர்களே சண்டையில் வல்லவர்கள் என்பதில்லை என்ற உண்மையை, ஜப்பான் நமது முகத்திலடித்து உணர்த்தி விட்டது. ஒன்றரை வருஷத்துக்கு முன் வரையில், "ஜப்பானா நமக்கு எதிரியாய் வரப்போகிறது!" என்று நாம் எல்லாரும் கேலி செய்து பழித்துக்கொண்டிருந்தோம். இன்றோ நாம் ஒரு பயங்கரமான எதிரியைச் சந்தித்துக்கொண் டிருக்கிறோம் என்றும், அவனை எதிர்க்க நமது முழுப் பலத்தையும் பிரயோகித் தாகவேண்டும் என்றும் ஒப்புக்கொள்கிறோம்.

அதே மாதிரியே, நமது கூட்டாளியான சீனாவும், நமக்குப் புதிய-ஆரோக்கியமான-ஒரு பணிவைப் போதித்திருக்கிறது. ஏனென்றால், அது நவீன யுத்தக் கருவிகள் எவையுமில்லாதிருந்தும், தன்னந்தனியாய், ஐந்து வருஷ காலத்துக்கு மேலாக, அதே பயங்கர சத்துருவை எதிர்த்து வந்திருப்பதை நாம் கண்டிருக்கிறோம். இன்று அந்தப் போராட்டத்தில் நமது முழுப் பங்கையும் ஏற்றுக்கொள்ள, இன்னமும் நாம் தயார்தான் செய்துகொண்டிருக்கிறோம்; சீன மக்கள்தாம் இன்னமும் அந்தச் சத்துருவை எதிர்த்துக் கொண்டிருக்கிறார்கள். வெள்ளை ஜாதியாரின் தார்மிகப் பெருமை மாறி வருகிறது; கீழ்நாட்டு மக்களிடம் நாம் கொண்டுள்ள மனோபாவத்தில் மட்டும் அல்ல, இங்கே உள்நாட்டிலுமே மாறி வருகிறது.

வெளி உலகத்தின் மீது ஏதும் ஏகாதிபத்தியச் சூழ்ச்சி புரியும் காரியத்தை, வெகு காலத்துக்கு முன்பே ஐக்கிய அமெரிக்கா விட்டுவிட்டது. ஆனால், நம் நாட்டின் சொந்த எல்லைகளுக்குள்ளேயே, ஜாதீய ஏகாதிபத்தியம் என்று சொல்லத் தக்க ஒரு முறையை நாம் அநுஷ்டித்து வருகிறோம். நீக்ரோக்களிடம் இந் நாட்டு வெள்ளைக்காரப் பிரஜைகளுக்கு இருந்துவரும் மனோபாவம், ஓர் அந்நிய ஏகாதிபத்தியத்துக்குள்ள சில அவலட்சணங்களைப் படைத்

திருக்கிறது என்பதில் சந்தேகமேயில்லை. ஜாதியிலே நாம் உயர்ந்தவர்கள் என்ற அகம்பாவமும், திக்கற்ற ஜனங்களை நாம் சுரண்டலாம் என்ற வன்னெஞ்சமும் நமக்கு இருக்கின்றன. கருணை காட்டுவதும் உண்மைதான். ஆனால், ஏகாதிபத்திய முறையின் நோக்கங்களும் சில சமயம் இப்படித்தான் இருக்கின்றன. 'வெள்ளைக்காரனின் சுமை' என்று சில மனிதர்கள்-நல்லெண்ணமுள்ள மனிதர்களே தாம்-ஏதோ சொல்லுகிறார்களே அந்தத் தார்மிகப் பெருமையையே பலமாய்க் கொண்டுதான், நமது ஜாதீய ஏகாதிபத்தியமும் நடைபெறுகிறது.

ஆனால், அந்தத் தார்மிகப் பெருமை மாறி வருகிறது. உள் நாட்டிலே ஏகாதிபத்தியச் சக்திகளையும் கருத்துக்களையும் எந்த உருவிலாவது வைத்துக்கொண்டபடியே, வெளி நாட்டிலே அவற்றை நாம் போராடி ஒழிக்க முடியாது. யோசிக்கும் திறனுள்ள அமெரிக்கர்களுக்கு இந்த விஷயம் இன்று வர வரத் தெளிவாய்ப் புலனாகி வருகிறது. இந்த யுத்தம் நமது சிந்தனையிலே இந்த மாறுதலை உண்டாக்கி யிருக்கிறது.

அமெரிக்காவில் வெள்ளையர் அல்லாத பிற நிறத்தினருக்கு, யுத்த நடவடிக்கையாகவே, விடுதலை கிடைத்தது. இது ராணுவ அவசியத்தை முன்னிட்டே நிகழ்ந்த ஒரு காரியம். ஜீவகாருண்யச் சீர்திருத்தம், சமுதாய வாழ்வில் ஞானம் ஆகியவற்றின் மூலமாகவும், மெல்ல மெல்ல அந்த விடுதலை கிடைத்திருக்க முடியும்; ஆனால், நாசகரமான உள் நாட்டுப் போர் ஒன்று நேரிட்டதால்தான், இந்த மனிதர்களின் சுதந்தரப் பிரச்னை நெருக்கடியான ஒரு நிலையை அடைந்தது; அடிமையின் விலங்குகள் ஒரே மணி நேரத்தில் உடைத்தெறியப் பெற்றன. மனிதர்களுக் கிடையிலே நெடுங்காலமா யிருந்த தடைகளும் தப்பெண்ணங்களும் இப்போது நிகழும் இந்த யுத்தத்தின் நிர்ப்பந்தத்தினால் சிதறி வருவதை, இன்று நாம் கண்டு வருகிறோம். நமது ஜனநாயகத்துக்கு அபாயமாக, வெளியிலுள்ள சில சக்திகள் பயமுறுத்திக்கொண் டிருக்கின்றன; அந்தச் சக்திகளிடமிருந்து நமது ஜனநாயகத்தைத் தற்

காக்க, நாம் வாதங்கள் புரிகிறோம்; அந்த வாதங்களே, உள் நாட்டிலே நாம் புரியும் பல தவறுகளைப் பளிச்சென்று வெளிக் காட்டுகின்றன.

நாம் எதற்காகப் போராடுகிறோம் என்பது பற்றி நாம் செய்துள்ள பிரகடனங்களே, நம் சொந்த அநீதிகள் தமக்குத் தாமே விளங்கும்படி செய்துவிட்டன. சர்வதேசங்களுக்குமே சுதந்தரமும் சந்தர்ப்பமும் அளிக்க வேண்டும் என்று நாம் பேசும்போது, நம் சொந்தச் சமூகத்திலே உள்ள முரண்பாடுகள் நம்மைக் கேலி செய்வதுபோல் தெளிவாய் நிற்கின்றன; அவற்றை இனியும் நாம் அலட்சியம் செய்ய முடியாது. நாம் சுதந்தரத்தைப் பற்றிப் பேசுவோமானால்,நம்மைப் போலவே பிறருக்கும் அந்தச் சுதந்தரம் இருக்க வேண்டும் என்றே நாம் எண்ணவேண்டும்; நம் நாட்டு எல்லைக்குள்ளே உள்ள ஒவ்வொருவருக்கும் - இதேபோல அதற்கு வெளியே உள்ள ஒவ்வொருவருக்குமே-அந்தச் சுதந்தரம் இருக்கவேண்டும் என்று நாம் எண்ண வேண்டும். யுத்த காலத்திலே, இது மிகவும் முக்கியம்.

ஜாதீயச் சிறுபான்மை வகுப்புகளுக்கும் சமயச் சிறுபான்மை வகுப்புகளுக்கும்-அரசியல் சிறுபான்மை வகுப்புகளுக்குங் கூடத்தாம்-யுத்த காலத்திலே இரண்டு விஷயங்களால் அபாயம் நேரிடுகின்றன; ஒன்று,பெரும்பான்மையோரைப் போலவே, அனைவருடைய வாழ்க்கை அந்தஸ்தும் இருக்கவேண்டும் என்று எல்லாருமே வற்புறுத்துவார்கள்; இரண்டு, புராதனமாக இருந்து வந்த ஜாதீய, சமய அவநம்பிக்கைகள், உணர்ச்சிப் பெருக்கினால், மீண்டும் புத்துயிர் பெற்று விடுகின்றன. இப்படி நேரும்போது, யுத்தத்துக்குக் காரணமே-அதனால் ஏற்படும் அவந்தரைகளுக்கும் அசௌகரியங்களுக்கு மெல்லாமே காரணம்-அந்தச் சிறுபான்மை வகுப்பார்கள்தாம் என்று பழியும் சுமத்துவார்கள். அவர்கள் விசேஷ லாபம் எதையாவது அடைகிறார்களா என்று, மற்றவர் வெகு கூர்மையாய்க் கவனிப்பார்கள்.

அசாதாரணமான எது நிகழ்ந்தாலும் அவநம்பிக்கை உண்டாகிறது;புதுமையான எதுவும் எதிரியின் சூழ்ச்சி என்று

முடிபோட்டு விடுவார்கள். இதுதான் யுத்த கால மனத்தத்துவம். இதை நாம் அனைவரும் கண்டிருக்கிறோம்.கண்மூடித்தனமான தேசபக்தி வெறி பிடித்தவர்கள், எந்தச் சமூகத்திலுமே தோன்றக் கூடும். 1912-ஆம் வருஷ யுத்தத்திலே, ஒரு வாலிபன் நீண்ட சாட்டையைக் கையில் வைத்திருந்தானும்; அவன் சட்டையில் வழக்கத்துக்கு அதிகமான பித்தான்கள் இருந்தனவாம். இதற்காக, அவனை எதிரியின் உளவாளி என்று சந்தேகித்துக் கைது செய்துவிட்டார்கள்! பொது விவகாரங்களிலே ஏதாவது கோளாறு ஏற்பட்டால், ஜனங்கள் எவனையாவது பழிவாங்க விரும்புகிறார்கள். அதுவும், சிறுபான்மை வகுப்புகளுக்குள்ளேயே முதலில் அவனைத் தேடுகிறார்கள். இது புராதன வழக்கமாய் இருந்து வருகிறது.

இதெல்லாம் இந்த நவீன காலத்திலும் நடக்குமா என்று நாம் கேலிசெய்யத் தோன்றும். ஆனால், இந்தக் காலத்திலும் இதற்குச் சில உதாரணங்கள் இருந்தே வருகின்றன. அறிவுப் பிரகாசம் நிறைந்தவை என்று ஒரு காலத்திலே நாம் எண்ணியிருந்த நாடுகளில், மத வெறியும் ஹிம்சையும் மலிந்திருப்பதைக் காண்கிறோம்; அதற்கும் மேலாக, நம் நாட்டிலேயே, யூத விரோத உணர்ச்சிகள், திருட்டுத்தனமாய், வஞ்சகமாய், மெல்ல மெல்ல நுழைந்து வருவதையும், நாம் காண்கிறோம். சகியாமையையும் கொடுமையையும் எதிர்த்தே இன்று நாம் போராடி வருகிறோம் என்பதையும், நாம் தோற்றால் அந்தத் துர்க்குணங்கள்தாம் நம்மிடம் ஏராளமாய் ஏற்பட்டுவிடும் என்பதையும், நம் மனத்திலே இடைவிடாமல் பதிய வைத்திருக்க வேண்டும். வெளி நாட்டிலே உள்ள எதிரியோடு நாம் போர் தொடுத்திருக்கும் காலத்திலேயே நமது உள்நாட்டுக்குள்ளே அந்தத் துர்க்குணங்களை நாம் வளர்த்து வருவோமானால், யுத்தம் புரிவதற்கு அவசியமான நம் கைக்குத்தான் அளவிட முடியாத பலவீனம் ஏற்படும்.

ஒரு ஜாதி, ஒரு சமயம், ஒரு நாகரிக பரம்பரையைக் கொண்டு மட்டுமே, நம் தேசம் அமையவில்லை. வெவ்வேறு மதங்கள், வெவ்வேறு வேதாந்தங்கள், வெவ்வேறு சரித்திர ஐதிகங்களைப் படைத்த சுமார் முப்பது வகை மக்களைக்

கொண்டு, நம் தேசம் அமைந்திருக்கிறது. சுதந்தரப் பிரகடனத்தில் கூறியபடி நிறுவப்பெற்றுத் தங்களுக்கும் தங்கள் சந்ததிகளுக்கும் உத்தரவாத மளிக்கும் அரசியல் சட்டத்துக் குட்பட்ட நாம் ஜனநாயக ஸ்தாபனங்களிலே, தங்களுக் கிருந்துவரும் நம்பிக்கையால்தான், அந்த முப்பது வகை மக்களும் ஐக்கியப்பட்டிருக்கிறார்கள்.

நமது ஐக்கிய ராஜ்யத்தின் அஸ்திவாரக் கல், சுதந்தரமே. ஒவ்வொரு மனிதனும் தன் இஷ்டப்படி வணங்கவும், தன் இஷ்டப்படி உழைக்கவும், தன் இஷ்டப்படி வாழ்ந்து, தன் குழந்தை குட்டிகளைத் தன் இஷ்டப்படி வளர்க்கவும் உள்ள சுதந்தரம் சர்வ ஜனங்களுக்கும் இருக்கவேண்டுமென்றால், சில அடிப்படையான பாதுகாப்புகளின் மூலம் அதைக் காப்பாற்ற வேண்டும்; அந்தச் சுதந்தரம் எவ்வளவு முடியுமோ அவ்வளவு அதிகமாய்ப் பரவி நிற்கவும், பிறர் உரிமைகளை ஆக்கிரமிக்க உதவும் விசேஷச் சலுகைகளை எவரும் பெற முடியாதபடியும், அதைக் காப்பாற்றத் தக்க பாதுகாப்புகள் வேண்டும். இங்கே அமெரிக்காவிலே நம் அதிகார வர்க்கம் குறும்புத்தனங்கள் செய்வதுண்டு; சட்ட சபைகள் சில சமயம் வரம்புமீறிச் செல்வதுண்டு; அபூர்வமாய் ஒரொரு சமயம், ஜனக்கூட்டம் தலைகால் புரியாமல் கிளம்பி அக்கிரமம் புரிவதுமுண்டு. இத்தனையும் இருந்தாலும், இது வரையில் சரித்திரத்திலே கண்டிராத அளவு மிக அதிகமான சுதந்தரத்தை, இங்கே நாம் பெற்றிருக்கிறோம். ஒன்றரை நூற்றாண்டுக்கு மேலாக ஏற்பட்ட அநுபவங்களின் பயனாகவும் சமயோசித மாறுதல்களின் மூலமாகவும் இந்தச் சுதந்தரம் நமக்கு ஏற்பட்டிருக்கிறது.

ஒரு தேசம் என்ற முறையில் நமக்கு இவ்வளவு வெற்றி கிடைத்த காரணம், நாம் மகத்தான நகரங்களைச் சிருஷ்டித்து விட்டதல்ல; பிரம்மாண்டமான தொழிற்சாலைகளைப் படைத்துவிட்டதல்ல; விசாலமான பிரதேசங்களைச் சீர் திருத்திப் பயிர் செய்ததல்ல. இந்த அடிப்படையான சுதந்தரத்தைப் பாதுகாத்து வளர்த்து வந்ததும், பலவகைப்பட்ட நம் வேற்றுமைகளையும் சகித்துக்கொண்டு அவற்றை

உபயோகித்துக்கொள்ளக் கற்றுவிட்டதுமே, நமது வெற்றிக்குக் காரணம். நம் செல்வ அபிவிருத்தி முழுவதற்கும் ஆதாரமா யிருந்து வருவதும் அந்தச் சுதந்தரமே.

பிற நாடுகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது, நமது தேசம் ஒரு புதிய தேசமே யாகும். ஐம்பது வருஷங்களுக்கு முன்புகூட நம் சுரங்கங்களில் பாதிக்கு மேலும்,கைத்தொழில் ஆலேகளில் மூன்றிலொரு பங்குக்கு மேலும் புதிதாய்க் குடியேறிவர்களே நிர்வகித்து வந்தார்கள். விவசாயமே முக்கியமாய் நடக்கும் நம் ராஜ்யங்கள் சிலவற்றில், பயிர்த் தொழில் செய்யும் மக்களில் பாதிக்கு மேற்பட்டவர்கள் அயல் நாடுகளில் பிறந்தோரேயாவார்கள். தேசம் உருவாகி வந்த காலத்தில் அதாவது 1820-முதல் 1890-ஆம் வருஷம் வரையில், ஒரு கோடியே ஐம்பது லட்சம் புதிய ஜனங்கள் நம் கடற்கரைகளில் வந்து இறங்கி யிருக்கிறார்கள். இதையும் விட அதிகமான மக்கள்; சென்ற யுத்தத்துக்கு முந்திய இருபத்து நாலு வருஷங்களில் மீண்டும் வந்து சேர்ந்திருக்கிறார்கள். வேறு வார்த்தைகளில் சொன்னல்,சென்ற இருநூறு வருஷங்களாக, இங்கே புதிய புதிய மக்கள் வந்து குடியேறிக் கொண்டே யிருந்திருக்கிறார்கள். புதிய ரத்தம், புதிய அநுபவம், புதிய கருத்து இவற்றோடு வந்து, நம்க்கு அவர்கள் புத்துயிர் கொடுத்துக்கொண்டே யிருந்திருக்கிறார்கள். சிறுபான்மை வகுப்புக்கள் பல சேர்ந்த பிரம்மாண்டமான ஒரு கூட்டமே, இங்கே நமது தேசமாய் நிர்மாணமாகி யிருக்கிறது. இவ்வாறு புதிதாய் வந்தவர்கள் ஓயாமல் ஒருவரை ஒருவர் எதிர்த்துப் போரிட்டுத் தொல்லேப்பட்டுக்கொண்டிருக்கவில்லே. அதற்குக் காரணம், நமது அரசாங்க முறையே. ஏற்கனவே சம்பாதித்த பலன்களேப் பத்திரப்படுத்துவதிலும் சமபங்காளிகளாகவே அந்தப் புதிய மக்கள் உழைத்தார்கள். இதனல்தான், மிக்க உறுதியான ஒரு தேசத்தை நாம் நிர்மாணித் திருக்கிறேம்.நாம் தொழிற்சாலேகளே அமைத்ததாலோ, நூதன விஷயங்களே நாம் கண்டுபிடித்ததாலோ, செயற்கையான வேறெந்த அபிவிருத்தியினலோ, நாம் நமது நாகரிக உச்சத்தை அடைந்ததாக, எனக்குத் தோன்றவில்லே. வெவ்

வேறு நம்பிக்கைகளைக் கொண்ட, வெவ்வேறு ஜாதியினரான நம் மக்கள், இங்கே ஐக்கிய அமெரிக்காவில், ஒருவர் பக்கத்தில் ஒருவர், பரஸ்பர நேச பாவத்தோடும் மரியாதையோடும் உதவி புரிந்துகொண்டும் வாழும் திறமை பெற்றிருப்பதாலேயே, நாம் இதை அடைந்திருக்கிறோம்.

நமது இந்த அமெரிக்க முறைக்கு எதிரிடையான ஒன்றைப் பார்க்க வேண்டுமானால், ஹிட்லரின் சர்வாதிகார ராணுவ ஆட்சியையும், ஜப்பானின் எதேச்சாதிகார ஆட்சியையும் வாடிவரும் பாஸிஸ இத்தாலியின் சர்வாதிகாரத்தையும் நோக்கினால் போதும். ஜாதீய, சமயக் குரோதங்களை வேஷமாய்ப் போர்த்துக்கொண்டு, சமாதானமே தனது ஆசை யென்று வாயால் சொல்லிக்கொண்டு, ஒரு தேச மக்களை, முதலிலே சிறுபான்மை வகுப்பை ஹிம்சிக்கவும் பின்பு ஒரு யுத்தத்திலே புகவும் மயக்கி இழுத்துவிட்ட ஒரு சர்வாதிகாரியின் வரலாறே, ஜெர்மனியின் சென்ற பத்து வருஷக் கதையா யிருக்கிறது. அந்த ஜாதீய, சமயக் குரோதங்களால்தாம் ஜெர்மன் தேசம் முழுவதையும் ராணுவ முஸ்தீப்புச் செய்து உரமூட்டச் சாத்தியமாயிற்று. ஆனால், உண்மையிலே சமூக அமைப்பின் அடிப்படை அதனால் பலவீனப் பட்டுவிட்டது. ஆதலால், யுத்தத்தின் போக்குத் திரும்பும்போது ஜெர்மனி திடீரென்று அடியோடு வீழ்ச்சியடைப் போகிறது.

இளைத்தவரை வலுத்தவர் பாதுகாப்பது கருணையாகும்; நீதியாகும்; தர்மமாகும். ஆனால், இந்த எந்தக் காரணங்களை முன்னிட்டும் சிறுபான்மை வகுப்புக்களின் உரிமைகளை மிக்க கவலையோடு நாம் பாதுகாக்க வேண்டும் என்று நான் நினைக்க வில்லை. அவற்றை அப்படிப் பாதுகாப்பதுதான் புத்திசாலித்தனம் என்றே எப்போதும் நான் எண்ணி வருகிறேன். ஏனென்றால், சிறுபான்மை வகுப்புக்கள், ஜனநாயகத்தின் சிறந்த மூலதனங்கள்; அந்த மூலதனங்களை வைத்திருக்க, எந்தச் சர்வாதிகார அரசாங்கத்தாலும் இயலாது. சர்வாதிகாரிகள் அவசியத்தை முன்னிட்டு, சிறுபான்மை வகுப்புகளைக் கண்டு அஞ்சி, அவற்றை அடக்கி

விடுகிறார்கள். ஆனால், ஜனநாயக ஆட்சியில் சகிப்புத் தன்மை நிலவுவதால், அதிலே சிறுபான்மை வகுப்பினர் புதிய புதிய கருத்துக்களின் இடைவிடா ஊற்றா யிருந்து வருகிறார்கள்; புதிய கருத்துக்கும் புதிய செயலுக்கும் தூண்டு கோலா யிருக்கிறார்கள்; புதிய ஜீவனூட்டும் மூலாதாரமா யிருக்கிறார்கள்.

சிறுபான்மை வகுப்புக்களின் எண்ணங்களையும் பேச்சையும் அடக்குவதால், சமூகமே உறைந்து தேக்கங் கொண்டுவிடும்; முன்னேற்றமும் தடைப்படும். சிறுபான்மை வகுப்புக்கள் இருப்பதனால், பெரும்பான்மை வகுப்புக்களுக்கே ஒரு தூண்டுதல் ஏற்படும். மாறுபட்ட அபிப்பிராயங்களைக் கொண்டுதான், மனிதனுடைய மனம் தன்னைத்தானே சோதனை செய்துகொள்ளுகிறது.

நாம் யாரைப் பகைக்கிறோமோ அவர்களுடைய சுதந்தரங்களைப் பறித்தோமானால், நாம் யாரை நேசிக்கிறோமோ அவர்களுடைய சுதந்தர நஷ்டத்துக்கும் வழி திறந்தவர்களாகி விடுவோம். இந்த உண்மையை, வேறெப் போதையும்விட இப்போதுதான், நம் மனத்திலே முதன்மையாய் வைத்திருக்க வேண்டும்.

அமெரிக்காவில் நாம் ஐக்கியமாய் வாழும் வழி, மிக்க வலுவாகவே யிருக்கிறது; ஆயினும், மிக்க லலிதமாயும் இருக்கிறது. அது அநேகம் நூலிழைகளைக் கொண்டு பின்னிய சவுக்கமா யிருக்கிறது. சுதந்தர ஆர்வம் படைத்த எண்ணற்ற ஸ்திரீகளும் புருஷர்களும், அநேகம் நூற்றாண்டுகளுக்கு மேலாக, பொறுமையோடும், தியாகங்கள் புரிந்தும் நெய்த சவுக்கம் அது; ஏழையையும் செல்வனையும், கறுப்பனையும் வெள்ளையனையும், யூதனையும் பிறனையும், அயல் நாட்டிலோ உள் நாட்டிலோ எங்கே பிறந்தவனையும் பாதுகாக்கும் போர்வையாக, அது உதவுகிறது.

அதை நாம் கிழித்தெறியா திருப்போமாக. ஏனென்றால், அது அழிந்து போய்விட்டால், அந்தப் பாதுகாப்பின் இன்பக் கதகதப்பை மீண்டும் மனிதன் எங்கே எப்போது பெறுவானோ, அதை யாரும் அறியார்.

# 14. ஒரே உலகம்

கொஞ்ச காலத்துக்கு முன்புதான் - கால் நூற்றுண்டு கூட ஆகவில்லை - ஏகாதிபத்திய வெறி பிடித்த ஜெர்மனியின் தலைமையில் திக்விஜயம் செய்து ஆக்கிரமிக்கப் புறப்பட்ட படைகளை, நேசதேசங்கள் பிரமாதமாய் ஜயித்து வெற்றி கண்டன.

ஆனால், அந்த யுத்தத்துக்குப் பின்னே ஏற்பட்டிருக்க வேண்டிய சமாதானம் பலிக்காமல் போய்விட்டது. அதற்கு அஸ்திவாரமா யிருக்கத் தக்க கூட்டு நோக்கங்களை ஜனங்கள் மனத்திலே வகுத்துக் கொள்ளாததுதான், அது பலிக்காமல் போன காரணம். சர்வதேசச் சங்கமும் பரிபூர்ண மலர்ச்சி யோடுதான் சிருஷ்டியாயிற்று. ஆயினும், பொது எதிரியைத் தோற்கடிக்கும் எண்ணம் ஒன்றைத் தவிர, வேறு பொது நோக்கம் எதையும் வகுத்துக் கொள்ளாத ஸ்திரீகளும் புருஷர்களும், அந்தச் சங்கத்தின் அமைப்பு விவரங்களைப் பற்றி, மனம் போனபடி யெல்லாம் தர்க்கம் செய்வதில் இறங்கிவிட்டார்கள். அடிப்படையிலே அது ஆங்கிலேயர், பிரஞ்சுக்காரர், அமெரிக்கர் இந்த மூவரும் மட்டும் சேர்ந்து செய்த பரிகாரமாக முடிந்தது. அவர்களோ, புதிய விசித்திரமான பெயர்களைச் சூட்டி, பழைய ஏகாதிபத்திய காலனிகளை அப்படியே வைத்துக்கொண் டிருந்து விட்டார்கள். ஆகவே, அந்தச் சங்கம் நலிந்து போயிற்று. அது தூரத்துக் கீழ்நாடுகளின் அவசரத் தேவைகளைப் போதிய அளவு கவனிக்க வில்லை. உலகத்தின் பொருளா தாரப் பிரச்னைகளுக்குச் சரியான பரிகாரம் காண முயல வில்லை. பொருளாதாரத்தில் சர்வதேசத் தத்துவத்தைக் கடைப்பிடியாமல், அரசியலில் சர்வதேசத் தத்துவத்தைக் கடைப்பிடிப்பது, மணல் வீடு கட்டுவது போல்தான் ஆகும். ஏனென்றால், தன்னந்தனியாக, எந்தத் தேசமும் பரிபூர்ண வளர்ச்சி அடைய முடியாது.

நமது தோல்விக்கு, அமெரிக்கச் சரித்திரத்தில் மற்ருெரு தடையம் கிடைக்கும் என்று நான் எண்ணுகிறேன். இன்று நடப்பதை யெல்லாம் பார்க்கும்போது, ஒரு விஷயம் புலனுகிறது. அதாவது, நமது அயல் நாட்டுக் கொள்கையில் எவ்விதத் தொடர்ச்சியும் இல்லாததுதான், நம்முடைய பெருங் குறைகளிலே ஒன்று. மிகக் குறைந்த அளவான சென்ற நாற்பது வருஷ காலத்துக்குள்ளேகூட, நம் நாட்டு முக்கிய அரசியல் கட்சிகள் இரண்டில் எதுவும், சர்வதேசக் கூட்டுறவுத் திட்டம் ஒன்றை நிலையாய்த் தொடர்பாய்க் கைக்கொண்டு நடந்ததாகச் சொல்ல முடியாது. ஒவ்வொரு கட்சியும் ஒவ்வொரு காலம் உலகப் பொதுநோக்கை—அதுவும், சில சமயம் ஏகாதிபத்திய ரீதியிலேதான்—கடைப் பிடித்திருக்கிறது; ஒவ்வொரு காலம் கண்டிப்பாய் ஒதுங்கி நிற்கும் தத்துவத்தையும் கடைப்பிடித் திருக்கிறது. அரசாங்க அதிகாரத்தில் இல்லாத கட்சியார், அதிகாரத்தில் உள்ள கட்சியாரின் திட்டத்தை—அது எதுவா யிருந்தாலும் சரி தான்-காங்கிரசுக்குள்ளே எதிர்ப்பதுதான், நமது அரசியல் சம்பிரதாயமா யிருந்து வருகிறது.

இரு கட்சிகளிலு முள்ள அநேகம் பேர் பல வருஷங் களாக ஒரு விஷயத்தை ஒப்புக்கொண் டிருக்கிருர்கள். அதாவது, உலகத்திலே சமாதானமும் செல்வ க்ஷேமமும் சுதந்தரமுமே கூடத்தான் நீடித்திருக்க வேண்டுமானுல், பொருளாதாரத்திலே ஒரு நிலைப்பும் கூட்டுறவு முயற்சியும் உண்டாக்கத் தக்க மார்க்கம் ஒன்றை, உலக நாடுகள் கண்டுபிடித்தாக வேண்டும்.

முதல் உலக யுத்தத்தின் இறுதியிலே, ஜனுதிபதி உட்ரோ வில்ஸனின் தலைமையில், இந்த ஆதர்சங்களை ஒட்டி ஒரு திட்டம் தயாராயிற்று. ராணுவ ஆக்கிரமிப்பிலிருந்து சகல தேசங்களையும் காப்பாற்றவும், ஜாதீயச் சிறுபான்மை வகுப்புகளைப் பாதுகாக்கவும், நாச அலங்கோல யுத்தம் மீண்டும் வருமோ என்ற பயமில்லாது வாழ வருங்காலச் சந்ததியாருக்கு ஒரு நம்பிக்கை அளிக்கவும் கூடியவாறு, சர்வதேசக் கூட்டுறவு முறை ஒன்றை மேலே குறித்த

திட்டத்திலே வகுத்தார்கள். அந்தத் திட்டத்தின் உள் விவரங்களைப்பற்றி நாம் என்ன நினைத்தாலும் சரிதான்; அது உலக சமாதானத்துக்காக, திட்டமாய், ஊர்ஜிதமாய்ச் செய்யப்பெற்ற ஒரு முயற்சியாகும் என்பது மட்டும் நிச்சயம். அந்த முயற்சிக்கு, ஐக்கிய அமெரிக்கா தன் ஆதரவையும் செல்வாக்கையும் அளித்து, அதிலே தானும் தீவிரமாய்ப் பங்கெடுத்துக்கொண் டிருந்தால். அது ஒரு வேளை வெற்றி பெற்றிருக்கலாம். ஆனால், எவ்வளவு தூரம் வெற்றி பெற்றிருக்கும் என்பதை நாம் திட்டமாய்ச் சொல்ல முடியாது.

ஒன்று மாத்திரம் நமக்குத் தெரியும்: நாம் நேர் எதிரான வழியைக் கடைப்பிடித்தோம்; அது முற்றும் வியர்த்த மானதையும் கண்டோம். உலக விவகாரங்களிலிருந்து கழுராய் ஒதுங்கி யிருக்கும் ஒரு புதிய சகாப்தத்திலே நாம் பிரவேசித்துவிட்டோம். டெமொக்ராட்டிக் (ஜனநாயகக்) கட்சியிலும் சரி, ரிபப்ளிக்கன் (குடியரசுக்) கட்சியிலும் சரி, நம்முடைய பொதுஜனத் தலைவர்களில் பலர், நாடு முழு வதும் சுற்றினார்கள். "சென்ற யுத்தத்திலே நம்மை ஏமாற்றிச் சிக்க வைத்துவிட்டார்கள். நம் லட்சியங்களுக்கெல்லாம் துரோகம் நடந்துவிட்டது. உலக விவகாரங்கள் மீண்டும் ஒரு யுத்தத்திலேதான் கொண்டுபோய் விடப்போகின்றன. அந்த உலக விவகாரங்களிலே நாம் போய்ச் சிக்கிக்கொள்ள லாகாது" என்றெல்லாம் அவர்கள் பிரசாரம் செய்தார்கள். "இயற்கை யமைப்பினால் ஏற்பட்ட தடைகள் நமக்கிருப்பது நமது பாதுகாப்பாகும். நமது எல்லையைத் தாண்டி, பழைய உலகத்தின் (ஐரோப்பாவின்) சிக்கலும் விரசமும் நிறைந்த விவகாரங்களில் நாம் தலையிட்டுக் கவலைப்படத் தேவை யில்லை" என்று அவர்கள் வாதித்தார்கள்.

மிதமிஞ்சிய சுங்கத் தீர்வைகள் என்ற தடைச் சுவர்களை எழுப்பி, உலக வியாபாரத்தி லிருந்து நம்மை ஒதுக்கி வைத்துக்கொண்டோம்; ஐரோப்பாக் கண்டத்தின் விவகாரங் களைக் கைகழுவி விட்டோம்; ஜெர்மனியின் அதிக்கிரமங் களைச் சும்மா பார்த்துக்கொண்டு, ஐரோப்பா எக்கேடு கெட்

டால் நமக்கென்ன என்று அலட்சியம் செய்தோம். எல்லா வற்றுக்கும் பின்னே பிரான்ஸ் நொண்டி நொண்டி நடந்து வர, ஐரோப்பிய ஜனநாயகங்கள் லண்டனில் பொருளாதார மகாநாடு ஒன்று கூட்டின. பொருளாதார மந்தம் அவற்றின் ஜீவனைக் குடித்திருந்தது; அயல் நாட்டுப் பரிவர்த்தனை, ஒரு நிலையற்று அவை பூர்ணமாய்ப் புத்துயிர் பெறுவதற்குப் பெருந் தடையா யிருந்தது. இதிலிருந்து மீள்வதற்காகவே, அவை மேலே கண்ட மகாநாட்டைக் கூட்டின. நாம் அந்த மகாநாட்டை உருப்படவொட்டாமல் அடித்துவிட்டோம். அப்படிச் செய்ததால், உலகத் தலைமை வகிக்க நமக்குக் கிடைத்த அற்புத வாய்ப்பைத் துறந்துவிட்டோம். உலக ஜனநாயக நாடுகளை நாம் பலப்படுத்திப் புத்துயிர் பெறச் செய்திருந்தால், அவற்றைத் தாக்கி ஆக்கிரமிப்பதற்காக அப்போது தான் தயார் செய்யத் தொடங்கிய சில படைகளி லிருந்து அவற்றை அரண் செய்து வைத்திருந்தோ மானால், நமக்கு உலகத் தலைமை கிடைத்திருக்கும்.

இதற்கெல்லாம் எந்த ஓர் அரசியல் கட்சியும் முழுப் பொறுப்பாளி அல்ல. ஏனென்றால், பிரதம கட்சிகள் இரண் டில் எதுவும் ஒரே நிலையாய், உறுதியாய், உலகப் பொது நோக்கையோ ஒதுங்கிநிற்கும் கொள்கையையோ அமெரிக் கப் பொது மக்களின் முன்பு தாங்கி நிற்க வில்லை. 1920-ஆம் ஆண்டில் சர்வதேசச் சங்கத்தை அழித்தது குடியரசுக் கட்சி யின் தலைமைதான் என்று நாம் சொல்வோ மானால், 1933-ஆம் ஆண்டில் லண்டன் பொருளாதார மகாநாட்டை முறித்தது ஜனநாயகக் கட்சியின் தலைமையே என்பதையும் நாம் சொல்லித்தான் ஆகவேண்டும்.

நான் சர்வதேசச் சங்கத்தில் நம்பிக்கையுள்ளவனாகவே யிருந்தேன். என்றாலும், இத்தனை நாள் கழித்து, நான் அதன் திட்டங்களை ஆதரிக்கவோ கண்டிக்கவோ போவதில்லை. இங்கே ஐக்கிய அமெரிக்காவில் அதன் தோல்விக்குக் காரண மாய் நிகழ்ந்த சில நடவடிக்கைகளை மட்டும் குறிப்பிட விரும்புகிறேன். ஏனென்றால், இந்த நாட்டிலே எத்தகைய தலைமையை ஒதுக்க வேண்டும் என்பதற்கும், அந்தப்

போராட்டம் மிகச் சிறந்ததோர் உதாரணமாகும். உலகத்திலே சுதந்தரமும் நீதியும் சமாதானமும் நிலைக்க வேண்டுமென்பதில் நம்பிக்கையுள்ள ஒரு தேசத்தார் என்ற முறையில் நம் பொறுப்புக்களை நாம் நிறைவேற்ற வேண்டுமானுல், எத்தகைய தலைமையை விலக்க வேண்டுமென்று நாம் அறிய வேண்டும்.

வர்சேல்ஸில் சமாதானத் திட்டங்களையும், சர்வ தேசச் சங்க ஒப்பந்தத்தையும் பற்றி, ஜனாதிபதி வில்ஸன் பேரம் பேசினுர். அப்படிச் செய்கையில், அவர் குடியரசுக் கட்சியாரைக் கலந்துகொள்ள வில்லை; அவர்கள் அதில் பங்கெடுத்துக் கொள்ளவுமில்லை. ஜனாதிபதி வில்ஸன், அந்தப் பிரச்னையை ஜனநாயகக் கட்சியின் ஏகபோகப் பொருள் ஆக்கிக் கொண்டார். இதனுல், ராஜதந்திர ரீதியாக, குடியரசுக் கட்சியினர் பலர்-சர்வதேச மனேபாவம் கொண்டவர்கள் கூடத்தான்-எதிர்க் கட்சி பேசும்படி, அவர் செய்துவிட்டார். ஜனாதிபதி வில்ஸன் ஊருக்குத் திரும்பி வந்ததும், வர்சேல்ஸ் உடன்படிக்கையும் சர்வ தேசச் சங்க ஒப்பந்தமும், செனட் சபையின் அங்கீகாரத்துக்கு வைக்கப்பெற்றன. அப்போது, அமெரிக்கச் சரித்திரத்திலேயே மிகப் பரபரப்பான ஒரு போராட்டம் நிகழ்ந்தது. உலகத் தலைமையை ஐக்கிய அமெரிக்கா உதறித் தள்ளும்படி செய்த சம்பவம், அந்தப் போராட்டமே. அதன் சிறு விவரங்களை யெல்லாம் இங்கே நான் விவரித்துக்கொண் டிருக்க முடியாது. என்ருலும் அந்தப் போராட்டச் சித்திரத்தின் பெரும்படியான அம்சங்களை மட்டும் நாம் நினைவில் வைத்துக் கொள்வது அவசியம்.

முதலாவதாக, செனட் சபையிலே, ‘சாவுப் பட்டாளம்’ என்றும் ‘எதற்கும் கட்டுப் படாதவர்கள்’ என்றும் ‘செத்தாலும் விடாதவர்கள்’ என்றும் பெயர் வாங்கிய ஒரு கோஷ்டியார் இருந்தார்கள். இந்தக் கோஷ்டியார் எந்தக் கட்சியிலும் சேராதவர்கள். இந்தக் கோஷ்டிக்கு, ஜனநாயகக் கட்சியின் பிரபல பிரசங்கியான ஜேம்ஸ் ஏ. ரீட் என்பவரும் தலைமை தாங்கினுர்; குடியரசுக் கட்சிப் பிரபலஸ்தரான போரா என்பவரும் தலைமை தாங்கினுர். மறு கோடியிலே கொஞ்சமும்

விட்டுக் கொடாத ஜனாதிபதி வில்ஸன் இருந்தார். உடன் படிக்கையின் ஒரு புள்ளியைக்கூட மாற்றாமல் அப்படியே ஒப்புக்கொள்ள வேண்டுமென்று, அவர் பிடிவாதம் பிடித் தார். இந்த இரு கோடிக்கும் இடையிலே, பற்பல போக்கும் அபிப்பிராயங்களும் கொண்ட குடியரசுக் கட்சியாரும் பலர் இருந்தார்கள்; ஜனநாயகக் கட்சியாரும் பலர் இருந்தார்கள். அவர்களெல்லாம் ஏதோ பாதுகாப்புகள் வேண்டுமென்று சொன்னார்கள்.

அப்போது செனட்டில் குடியரசுத் தலைவரா யிருந்த ஹென்ரி காபட் லாட்ஜ் என்ற மனிதரே, சர்வ தேசச் சங்கம் தோல்வியுற்றதற்குக் காரணமானவர் என்று இப்போது நாம் சொல்லிக்கொண் டிருக்கிறோம். பாதுகாப்பு ஷரத்துக் களோடு சர்வதேசச் சங்கத்தை நாம் உண்மையிலேயே அங்கீ கரிக்க வேண்டு மென்று அவர் விரும்பினாரா அல்லது சர்வ தேசச் சங்கத்தைக் கொல்லுவதற்காகவே பாதுகாப்பு ஷரத் துக்களை அவர் சொன்னாரா என்பதை இன்று நாம் அறி யோம்; என்றுமே அறியப் போவதில்லை. இந்த விஷயத்தைப் பற்றி அவருடைய ஆப்த நண்பர்களும் குடும்பத்தாருங்கூட ஒருவருக்கொருவர் மாறுபட்ட அபிப்பிராயங்களைத் தெரிவித் திருக்கிறார்கள்.

ஆனால், ஒன்று மட்டும் நாம் அறிவோம். 1920-ஆம் வருஷம் மகத்தான இரண்டு ராஜீய மகாநாடுகள் நடை பெற்றன. உடன்படிக்கைப் பிரச்னை, செனட் சபையை விட்டு அந்த மகாநாடுகளுக்குச் சென்றது. ஜனாதிபதி ஊருக்குக் கொண்டு வந்த உடன்படிக்கையை, அந்த இரண்டு மகாநாடுகளுமே முழுவதும் ஆதரிக்கவு மில்லை; முழுவதும் எதிர்க்கவு மில்லை. ஜனநாயகக் கட்சி மகாநாடு பாதுகாப்பு ஷரத்துக்களை எதிர்க்க வில்லை. குடியரசுக் கட்சி மகாநாடோ, சர்வதேசச் சங்கத்தைப் பலமாய் ஆதரிப்போருக்குக் கூட, தன் கட்சியில் இடமிருக்கும்படியான ராஜீத் தீர்மானத்தை நிறைவேற்றியது. சர்வதேசச் சங்கத்தை எதிர்த்த பிரதி நிதிகளுக்கும் அதிலே பத்திரமாய் இடம் வைக்கப்பெற் றிருந்தது.

இரண்டு மகாநாடுகளுமே ஈரொட்டாய் முடிவு செய்தன. பிற நாடுகளோடு ஐக்கிய அமெரிக்கா கூட்டுறவு கொள்ள வேண்டுமென்ற விஷயத்தில், சரித்திர ரீதியாய் நிலைத்த ஒரு கொள்கை அந்தக் கட்சிகளுக்கு இல்லை. குடியரசுக் கட்சி அபேட்சகரான வாரன் ஹார்டிங் என்பவரின் மனப்போக்கினால், இந்தக் குழப்பம் இருமடங்காய் வலுத்தது. அவர் இனிய வசீகர புருஷர்; ஆனால், உறுதியான கொள்கைகள் இல்லாதவர். ஜனநாயகக் கட்சியின் அபேட்சகரான காகஸ் என்பவரின் நிலைமை, வில்ஸன் உடன்படிக்கையை ஆதரிப்பதாகவே இருந்தது; அதில் சந்தேகமில்லை. ஆயினும், பாதுகாப்பு ஷரத்துக்களுக்கு ஜனநாயகக் கட்சி இடம் வைத்தேயிருந்தது; அதன் தலைவர்களில் பலர், உடன்படிக்கைக்குப் பலத்த எதிர்ப்பாயுமிருந்தார்கள். ஆனால், ஹார்டிங் நிலைமை என்ன ? சங்கத்தைத் தொலைக்கவே அவர் மீசையை முறுக்குகிறாரா அல்லது தேர்தலுக்குப் பின் சிறிது மாற்றிய உருவில் அதை ஆதரிக்க எண்ணுகிறாரா என்பது யாருக்கும் நிச்சயமாய்த் தெரியவில்லை. சங்க விஷயத்தை ஜனநாயகக் கட்சியார் ஒரு ராஜீயப் பிரச்னையாகச் செய்துவிட்டதால், தாம் அதைக் கொஞ்சம் எதிர்த்தே யாகவேண்டும் என்று அவர் எண்ணினார் என்பது மட்டும் தெளிவாய்த் தெரிகிறது. தனிப்பட்ட சம்பாஷணைகளில் ஒவ்வொருவரிடமும் அவரவருக்கு உவப்பான பதிலையே அவர் சொல்லியிருக்கிறார். தேர்தல் முடிவு தெரிந்த பின்புதான், 'செத்த சங்கம்' என்று சங்கத்தைப் பற்றிப் பட்டவர்த்தனமாய் அவர் பேசினார்.

இதில் விசித்திரம் என்னவென்றால், அடிப்படையில் வேறு பல பிரச்னைகள் மீதே தேர்தல் முடிவு சார்ந்திருந்தது. உலகத்தோடு அமெரிக்கா கூட்டுறவு கொள்ளவேண்டும் என்பது ஒரு மகத்தான விஷயம். உள்நாட்டுச் சில்லறைப் பிரச்னைகளே தலை தூக்கியிருந்த ஒரு தேர்தலிலே, அந்த மகத்தான விஷயத்தைப் பரீட்சித்து விட்டார்கள். இந்தக் குற்றத்துக்கு இரு கட்சியார்களுமே பொறுப்பாளியாவார்கள். ஜனநாயகக் கட்சியும் அதன் தலைவர்களும், சங்க விஷயத்தைத் தங்களுக்கே ஏகபோகமாக்கிக் கொண்டது

முட்டாள்தனம்; அதேபோல, குடியரசுக் கட்சியார் தாங்கள் சங்கத்துக்கு எதிர்ப்பில் இருக்கும்படி தங்களை மற்றவர்கள் தந்திரமாய்த் தள்ளிவிட இடங் கொடுத்துக் கொண்டதும் முட்டாள்தனந்தான். உலக விவகாரங்களில் அமெரிக்கா தனக்குரிய சரியான ஸ்தானத்தை அடையுமா என்பதை நிர்ணயிக்கத் தக்க காலம், மீண்டும் சமீபித்துக்கொண் டிருக்கிறது. மீண்டும் அந்தப் பிரச்னையை வெறும் கட்சித் தந்திரங்களினால் நாம் முடிவு செய்யா திருப்போமாக.

சர்வதேசக் கூட்டுறவுத் திட்டம் ஒன்றை, தெரிந்து, வேண்டுமென்றே, அமெரிக்க மக்கள் ஒரு நாளும் தள்ளி யிருக்க மாட்டார்கள். இந்த நம்பிக்கை எனக்கு ஏற்பட்டு விட்டது. ஒரு வேளை வர்சேல்ஸ் ஒப்பந்தத்தில் சில மாறுதல்களை அவர்கள் விரும்பி யிருக்கலாம். அடியோடு அந்நிய நாட்டார்களை விட்டு ஒதுங்கி யிருக்க வேண்டு மென்று அவர்கள் விரும்பியிருக்க மாட்டார்கள். ஓட்டுப் பிடிப்பதிலும் கட்சிபலம் தேடுவதிலுமே கருத்துக் கொண்ட கொள்கையற்ற தலைவர்கள், அமெரிக்கருக்குத் துரோகம் செய்துவிட்டார்கள்.

சென்ற யுத்தத்துக்குப் பின்பு உலக விவகாரங்களி லிருந்து அமெரிக்கா ஒதுங்கிக் கொண்டதே, இந்த யுத்தத் துக்கும் சென்ற இருபது வருஷப் பொருளாதார அலங்கோலங் களுக்கும் ஒரு காரணம் ஆகும் என்றால்—அது காரணம் என்றே தெளிவாய்த் தோன்றுகிறது—இந்த யுத்தத்துக்குப் பின்பும் அப்படியே உலகப் பிரச்னைகளி லிருந்தும் பொறுப்புக்களி லிருந்தும் நாம் விலகிக்கொள்வது பேரா பத்தாய்த்தான் முடியும். பூகோள ரீதியாய் ஒதுங்கி நிற்கிறோம் என்பதுகூட இனிப் பலிக்காது.

சென்ற யுத்த முடிவிலே ஒரே ஓர் ஆகாய விமானம் கூட, அட்லாண்டிக் சமுத்திரத்தைத் தாண்டிப் பறக்க வில்லை. இன்றோ அந்தச் சமுத்திரத்துக்கு மேலே ஜன்னல் பின்னலாகப் பல விமானங்கள் கால அட்டவணைப்படி பறந்து கொண்டே இருக்கின்றன; பஸிபிக்கிலோ அந்த ஜன்னல் பின்னல், பின்னும் விரிவா யிருக்கிறது. ஐரோப்

பாவும் ஆசியாவும், இன்று நம் கதவடியிலே வந்து நிற்கின்றன.

இந்த யுத்தத்துக்குப் பின்னே, பின்வரும் மூன்றில் ஒரு வழியை அமெரிக்கா கடைப்பிடித்தாக வேண்டும். ஒரு வழி, குறுகிய தேசீயம்; இதைக் கடைப்பிடித்தால், இறுதியிலே நம் சொந்தச் சுதந்தரமும் பறிபோய்த்தான் தீரும். அடுத்த வழி; சர்வ தேசீய ஏகாதிபத்திய முறை; இதனால், வேறு சில நாடுகளின் சுதந்தரம் பறிபோகும். மூன்றாவது வழி, சர்வ ஜாதிகளுக்கும் சர்வ தேசங்களுக்கும் சம சந்தர்ப்பம் அளிக்கும் உலகத்தைச் சிருஷ்டிப்பது. கடைசி வழியையே, அமெரிக்க மக்கள், அமோகமான பெரும்பான்மையால் தேர்ந்து கொள்ளுவார்கள் என்று, நான் நிச்சயமாய் நம்புகிறேன். இந்தத் தீர்மானத்தை வெற்றிகரமாய் நிறைவேற்ற வேண்டுமென்றால் நாம் யுத்தத்தை ஜயிப்பது மாத்திரமல்ல, சமாதானத்தையும் ஜயிக்கவேண்டும்; இப்போதே அந்த வேலையை ஆரம்பித்துவிடவும் வேண்டும்.

இந்தச் சமாதானத்தை ஜயிப்பதற்கு, மூன்று விஷயங்கள் அவசியம் என்று எனக்குத் தோன்றுகிறது; முதலாவதாக, முழு உலகத்தையுமே அஸ்திவாரமாய்க் கொண்டு, இப்போதே சமாதானத் திட்டத்தைக் கோல வேண்டும்; இரண்டாவதாக, உலகத்தில் சமாதானம் நிலைப்பதற்காக, அரசியலிலும் சரி பொருளாதாரத்திலும் சரி, நாடுகளும் சரி மனிதர்களும் சரி, உலகம் முழுவதுமே சுதந்தரம் பெறச் செய்ய வேண்டும்; மூன்றாவதாக, உலகம் சுதந்தர மடைந்து சமாதானம் பெறும் காரியத்தில், அமெரிக்கா தீவிரமாய் ஆக்க முறையில் பங்கெடுத்துக் கொள்ள வேண்டும்.

முழு உலகத்தையுமே அஸ்திவாரமாய்க் கொண்டு சமாதானத் திட்டத்தைக் கோல வேண்டும் என்று சொல்லுகையில், உண்மையிலே இந்த மண்ணுலகை நினைத்துக்கொண்டுதான் சொல்லுகிறேன். ஆகாயத்தி லிருந்து அதைப் பார்க்கும்போது, கண்டங்களும் சமுத்திரங் களுமெல்லாம், ஒரு முழுமையின் பாகங்களாகவே தோன்று

கின்றன; இப்படித்தான் எனக்குத் தோன்றின. இங்கிலாந்தும் அமெரிக்காவும் அந்த முழுமையின் பகுதிகளே. அவ்வாறேதான், ருஷ்யாவும் சீனவும், எகிப்தும் ஸிரியாவும் துருக்கியும், ஈராக்கும் ஈரானும், அதன் பாகங்கள். எனவே முழு உலகத்தின் சகல பகுதிகளிலுமே பத்திரமான அஸ்திவாரங்களின் மீது சமாதானத்தை ஸ்தாபிக்காவிட்டால், அதன் எந்த ஒரு பகுதியிலும் சமாதானம் நிலைக்க முடியாது. இந்த முடிவு தவிர்க்க முடியாதது.

உலகத்தின் எல்லாப் பகுதிகளிலும் சமாதானத்தை நிலைநாட்டுவது, நம் தலைவர்களின் அட்லாண்டிக் சாஸனம் போன்ற வெறும் பிரகடனங்களால் மட்டும் சாத்தியமில்லை. சமாதானத்தை ஸ்தாபிப்பது, முக்கியமாய் உலக மக்களெல்லாம் அதை அங்கீகரிப்பதையே பொறுத்திருக்கிறது. ஏனென்றால், சென்ற யுத்தத்துக்குப் பின்பு சர்வதேச ஒற்றுமை ஏற்படத் தவறியது, நமக்கு ஏதாவது படிப்பினை போதித் திருக்குமானல், அது இதுதான். சண்டை நடந்து கொண்டே யிருக்கும்போது, பொதுவான கொள்கைகளையும் சுலோகங்களையும் நம் தலைவர்கள் மேற்போக்காய் ஒப்புக் கொள்வார்களானலுங் கூட, சமாதான மேஜை முன்பு அவர்கள் வரும்போது, ஏற்கனவே தாங்கள் விடுத்த அறிக்கைகளுக்கே, தங்கள் சொந்தமாய்ப் புதிய வியாக்கியானங்களை எல்லாம் செய்துவிடுவார்கள். ஆகவே, இன்றே, இந்த யுத்தம் நடந்துகொண் டிருக்கும்போதே, ஐக்கிய அமெரிக்க மக்களும், ருஷ்ய மக்களும், சீன மக்களும் சகல இதர ஐக்கிய நாடுகளின் மக்களும், தங்கள் நோக்கங்களிலே அடிப்படையான ஒற்றுமைகொள்ள வேண்டும். இல்லையானல், அட்லாண்டிக் சாசனம் போன்ற நேர்த்தியான உன்னத லட்சிய வாசகங்களெல்லாம், பின்னல் நம்மைக் கேலி செய்பவை யாகவே முடியும். வில்ஸனின் பதினன்கு ஷரத்துக்கள், அப்படித்தான் முடிந்தன. நான்கு சுதந்தரங்களை உலகில் நிலை பெறச்செய்யும் காரியத்தை, கண நேர அதிகாரம் வகிப்பவர்கள் சாதித்துவிட முடியாது. உலக மக்களெல்லாம் சேர்ந்து அவற்றுக்கு உருக்கொடுத்தால்தான், அவை உண்மை யாகும்.

உலகமெல்லாம் சுதந்தரம் அடைந்தால்தான் சமாதானம் நிலவும் என்று நான் சொல்லும்போது, உலகத்தில் ஏற்பட்டிருக்கும் ஒரு மகத்தான இயக்கத்தையே குறிப்பிடுகிறேன். அதை எந்த மனிதனுலும்—ஹிட்லராலுங் கூட—நிறுத்த முடியாது. உலகெங்குமுள்ள ஸ்திரீகளும் புருஷர்களும், பொருளிலும் அறிவிலும் உணர்ச்சியிலும் முன்னேறி வருகிருர்கள். கிழக்கு ஐரோப்பாவிலும் ஆசியாவிலும் அநேக நூற்ருண்டுகளாய் அறியாமையில் மூழ்கி அயர்ந்து அடங்கிக் கிடந்த கோடிக் கணக்கான மக்கள், அறிவொளி பெற்றுவிட்டார்கள். பழைய அச்சங்களெல்லாம் இனி அவர்களைப் பயமுறுத்த முடியாது. மேல் நாடுகள் லாப மடைவதற்காக, கீழ் நாடுகள் அடிமைகளா யிருக்க, இனி அவர்கள் இசைய மாட்டார்கள். உலக முழுவதுமுள்ள மனிதர்களின் செல்வ க்ஷேமம் எல்லாம் ஒருவரை யொருவர் சார்ந்திருப்பதிலேதான் அமைந்திருக்கிறது என்று அவர்கள் அறியத் தொடங்கிவிட்டார்கள். தங்கள் சமூகத்திலும் சரி, பல சமூகங்களின் தொகுப்புக்களிலும் சரி, இனி ஏகாதிபத்திய ஆதிக்கத்துக்கு இடமில்லை என்று அவர்கள் திட உறுதி கொண்டுவிட்டார்கள்; நாமும் அந்தத் திட உறுதி கொண்டுதான் ஆகவேண்டும். பெரியதொரு குன்றைச் சூழ மண் குடிசைகள் கட்டிக் கொண்டு வாழ்வதிலே யிருந்த வசீகரமெல்லாம் போய் விட்டது.

நமது மேற்கத்தி உலகமும் நமது கற்பனை உயர்வு மெல்லாம், இன்று சோதனைக்கு ஆட்பட்டிருக்கின்றன. நம் ஜம்பமும் ஆர்ப்பாட்டப் பேச்சும் ஆசியாவைச் சற்றும் உற்சாகப்படுத்த வில்லை. மத்தியக் கிழக்கு நாடுகளின் மக்கள், தங்கள் சொந்தப் பலத்தை இப்போது அறிந்துகொண்டுவிட்டார்கள். உலகத்தின் வருங்காலத்தைப் பற்றிய அநேக முடிவுகள், தங்கள் கையிலேயே இருக்கின்றன என்று அவர்கள் உணர ஆரம்பித்துவிட்டார்கள். அந்த முடிவுகள், ஒவ்வொரு நாட்டு மக்களுக்கும், அந்நிய ஆதிக்கத்தி லிருந்து விடுதலை-பொருளாதாரத்திலும் சமூக வாழ்விலும் ஆத்ம வளர்ச்சி

யிலும் விடுதலை—அளிப்பவையா யிருக்க வேண்டுமென்று அவர்கள் நிச்சயித் திருக்கிறார்கள்.

அரசியல் சுதந்தரம் எவ்வளவு முக்கியமோ அவ்வளவு, பொருளாதாரச் சுதந்தரமும் முக்கியமே. பிற மக்கள் உற்பத்தி செய்யும் பொருள்கள் தங்களுக்குக் கிடைக்க வசதி யிருப்பது மட்டு மல்லாமல், தங்கள் பண்டங்கள் உலகெங்கு முள்ள பிற நாட்டு மக்களிடம் போய்ச் சேரும் வாய்ப்பும், ஒவ்வொரு நாட்டு மக்களுக்கும் தேவை. பண்டங்களின் போக்குவரத்தை அநாவசியமாய்த் தடங்கல் செய்யும் வியாபாரத் தடைகளை எல்லாம் தகர்த்தெறியத் தொடங்கக் கூடிய ஏதாவது ஒரு வழியை நாம் கண்டுபிடிக்கா விட்டால், உலகத்தில் சமாதானம் இராது. உண்மையான வளர்ச்சி இராது; பொருளாதார நிலைப்பு இராது. யுத்தம் முடிந்ததும், திடீரென்று அடியோடு சுங்கத் தீர்வைகளை யெல்லாம் ரத்துச் செய்தாலும், ஆபத்துத்தான் விளையும் என்பது உண்மை. ஆனால், நாம் எந்தச் சுதந்தரங்களுக்காகப் போராடுகிறோமோ அந்தச் சுதந்தரங்களில் ஒன்று வியாபாரச் சுதந்தரமாகும் என்பதும் அதேபோல் உண்மையே. நமது வாழ்க்கைத் தரம், பிற உலகத்தாரின் வாழ்க்கைத் தரத்தை விட உயர்ந்ததா யிருக்கிறது. எனவே, மேலே கண்ட நிலை ஏற்படுவது பற்றி, அநேக மனிதர்கள்—முக்கியமாய் அமெரிக்காவில் உள்ள பலர்—உண்மையிலேயே பீதி அடைந்திருப்பதை நான் அறிவேன். ஏனென்றால், இந்த நிலை ஏற்பட்டால், நமது வாழ்க்கைத் தரம் விழுந்துபோகும் என்று அவர்கள் கருதுகிறார்கள்; ஆனால், அது உண்மை அல்ல.

ஐக்கிய அமெரிக்காவின் அற்புதமான பொருளாதார முன்னேற்றத்துக்கு, அநேகம் காரணங்கள் சொல்லலாம். நம் தேசிய வசதிகள், நம் ஜனநாயக ஸ்தாபனங்கள், நம் சுதந்தரம், நம் மக்களின் குணச் சிறப்பு இந்த எல்லாமே, அதற்கு உதவி யிருக்கின்றன என்பதில் ஐயமில்லை. ஆனால், இவை எல்லாவற்றுக்கும் மேலாக, ஒரு காரணந்தான் மிகப் பெரியதாய் எனக்குத் தோன்றுகிறது; அதாவது, பண்டங்களையோ கருத்துக்களையோ ஒருவருக்கொருவர் பரிமாறிக் கொள்

வதற்கு எவ்விதத் தடைகளு மில்லாதபடி உலகத்திலேயே சிருஷ்டியாகி யிருக்கும் மிகப் பெரிய பிரதேசம், நமது அமெரிக்காதான். இந்த நாற்பாக்கியமே, நமது பொருளாதார முன்னேற்றத்துக்கு மிகப் பெரிய காரணம்.

தவிர்க்க முடியாத ஒரு விஷயத்தைப் பற்றிச் சிலர் அஞ்சுகிறார்கள். அவர்களுக்கு நான் ஒன்று குறிப்பிட விரும்புகிறேன்; இந்த யுத்த முடிவிலே மனத்தால் நினைக்கவே முடியாத அளவு நம் தேசீயக் கடன் தொகை அதிகரித் திருக்கப் போகிறது; கைத்தொழில், போக்குவரத்துச் சாதனம் இவற்றின் வளர்ச்சியால், உலகம் சிறுத்துவிடப் போகிறது. அப்போது, உலகெங்குமே சர்வ சுதந்தரமாய்ப் பண்டங்களின் போக்குவரத்து நடைபெறு விட்டால், அமெரிக்கரின் இப்போதைய வாழ்க்கைத் தரத்தைக்கூடக் காப்பாற்றிக் கொள்ள முடியாது. இன்னொன்றும் அசைக்க முடியாத உண்மை; உலகத்தின் எந்த மூலையிலே வாழும் எந்த ஒரு மனிதனின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தினாலும், அதனால் உலகத்தின் சகல இடங்களிலுமுள்ள சகல மனிதர்களின் வாழ்க்கைத் தரமும் ஏதோ சிறிதளவு உயர்ந்தே தீரும்.

கடைசியாக, நம்பிக்கை கொண்டு உலக விவகாரங்களிலே அமெரிக்கா தலையிடுவது அவசியம் என்று நான் சொல்லுகிறேன். இப்படி நான் சொல்லுகையில், கீழ்நாட்டு மக்கள் நமக்கு விடுத்துள்ள அழைப்பையே அமெரிக்கருக்குத் தெரிவிக்கிறேன். இந்த உன்னத முயற்சியிலே, ஐக்கிய அமெரிக்காவும் பிற ஐக்கிய தேசங்களும் தங்கள் கூட்டாளிகளாயிருக்க வேண்டு மென்றே அவர்கள் விரும்புகிறார்கள். மேல்நாட்டுப் பொருளாதார அநீதிகளி லிருந்தும் கீழ் நாட்டு ராஜீய அக்கிரமங்களிலிருந்தும் விடுதலை பெற்ற சுதந்தர தேசங்களின் புதிய சமூகம் ஒன்றைப் படைக்கும் காரியத்திலே தங்களோடு நாமும் கூட்டுச் சேரவேண்டும் என்றே அவர்கள் விரும்புகிறார்கள். ஆனால், அந்தப் புதிய சமூகக் கூட்டுறவிலே, தயங்கியோ, தகுதியற்றோ, அஞ்சியோ நிற்கும் பங்காளிகளாக நாம் இருக்கக் கூடாதென்றும் அவர்கள் விரும்புகிறார்கள். உலகத்தின் எந்தப் பகுதியிலே நிகழும்

அநீதியையும் கண்டித்துத் திருத்துவதற்காக மனம் விட்டுப் பேசத்தயங்காத பங்காளிகளேயே அவர்கள் விரும்புகிறார்கள்.

இந்த யுத்தத்திலே நம் வசதிகளையும் பொருளையு மெல்லாம் நாம் கொட்ட நினைத்திருக்கிறோம் என்பதை, நம் கீழ்நாட்டுக் கூட்டாளிகள் அறிவார்கள். ஆனால் உலகத்திலே சுதந்தரத்தையும் நீதியையும் வளர்க்க நமக்குள்ள அளவற்ற சக்தியை, நாம் இப்போதே—யுத்தத்துக்குப் பின்பு அல்ல—உபயோகிக்கவேண்டும் என்று அவர்கள் எதிர்பார்க்கிறார்கள். யுத்தத்தில் சேர்ந்து போராடாத வேறு நாடுகளின் மக்களுங்கூட, நம்மை ஆவலோடு கவனித்துக்கொண் டிருக்கிறார்கள். உலகெங்குமுள்ள சகல ஸ்திரீகளும் புருஷர்களும் விடுதலையும் சுதந்தரமும் பெற்று, ஜீவன் மிகுந்து, வளர்ச்சியடையக்கூடிய-ஒரு புதுச் சமுதாயத்தைச் சிருஷ்டிக்கும் காரியத்தில் உதவி புரியக்கூடிய—ஒரு சந்தர்ப்பம் நமக்குக் கிடைத்திருக்கிறது. உலக சரித்திரத்திலேயே இதற்கு முன் ஒரு பொழுதும் இல்லாதபடி நம்மை அறைகூவி அழைக்கும் ஒரு சந்தர்ப்பம் இது. இதை நாம் ஏற்றுக்கொள்ளுகிறோமோ இல்லையா என்பதைத்தான், அவர்கள் மிக்க ஆவலோடு கவனித்துக்கொண் டிருக்கிறார்கள்.

---